# கானல்



க. டானியல்

200/=

# காணல்

சண்முகம்
பாலசுந்தரம்
கண்டுக்குளி

## கே. டானியல்

தோழமை
ஒரு முன்னோடி நூல் வெளியீட்டகம்
20, ப. கோதண்டபாணித் தெரு,
கும்பகோணம்–612 001

தோழமை: 4

விலை ரூ. [illegible]

□ முதல்பதிப்பு: நவம்பர், 1986 □ பக்கங்கள்: 44 + 376 □ விலை: ரூ 30. 00 □ முகப்போவியம்: மகேந்திரன் □ வெளியீடு: தோழமை, 20, ப. கோதண்டபாணித் தெரு, கும்பகோணம்- 612 001 □ அச்சு: டிகினிட்டி பிரிண்டர்ஸ், சென்னை–5 □ அட்டை அச்சு: தங்கம் பிரிண்டர்ஸ், சென்னை–5.

அன்புடன்
திரு தயாளன்
[illegible]
87/04/25

எந்த மக்களுக்காக தோழர் டானியல்
தன் இலக்கிய, இயக்கப் பணிகளை
அர்ப்பணித்துக் கொண்டாரோ...

எந்த மக்கள் மத்தியில்
அவரது பிரிவு நிகழ வாய்ப்பற்றுப் போனதோ...

அந்த
ஈழத்துப் பஞ்சம மக்களுக்காக!

## கே. டானியல்

தோற்றம்: 15-4-27 (யாழ்ப்பாணம்)

மறைவு: 23- 3- 86 (தஞ்சை)

சிறைவாசம்: 11 மாதங்கள்

பரிசுகள்: சாகித்ய மண்டலப் பரிசுகள் இருமுறை

வகித்த பொறுப்புகள் :

அமைப்பாளர். தீண்டாமை ஒழிப்பு வெகு ஜன இயக்கம், தலைவர், மக்கள் கலை இலக்கியப் பெருமன்றம்.

# படைப்புகள்

### இதுவரையில்...

- டானியல் கதைகள்
- உலகங்கள் வெல்லப்படுகின்றன
- பஞ்சமர்
- போராளிகள் காத்திருக்கின்றனர்
- கோவிந்தன்
- இலங்கையிலிருந்து ஓர் இலக்கியக்குரல்
- பூமரங்கள்
- அடிமைகள்
- நெடுந்தூரம்
- மையக்குறி
- முருங்கையிலைக் கஞ்சி
- கானல்

### இனி வருவன...

- பஞ்சகோணங்கள்
- தண்ணீர்

### இறுதிக் குறு நாவல்

- சா நிழல்

## பதிப்புரை

அந்தப் பெய்த்தேரை நம்பித்தான் அவர்கள் போனார்கள்.

ஏதோ இங்கிருந்தவரை பிறவியினால் அவர்கள் மீது சுமத்தப்பட்ட நுகத்தடிகளாம் இன இழிவுகள் அங்கு போன பின்னாலே மாயமாய் மறைந்து விடும் என மனமார நம்பித்தான் அவர்கள் அந்த மாயமானைப் பின்பற்றி அப்படிப் போனார்கள்.

அப்படித்தான்—

அன்று தொட்டு இன்று வரை பாபாசாஹேப் அம்பேத்காரும் அவரது அடியொற்றிப் பகுத்தறிவுச் சமதர்ம இயக்கம் வரையும் கூண்டோடு கைலாயம் போவது போல் கூட்டம் கூட்டமாய் புத்தமதம் புகுந்தார்கள்.

மீனாட்சிபுரங்கள் ரெஹமத் நகராக, இஸ்லாமாய் ஆனார்கள்.. 'ஜீஸஸ் அல்மைட்டி'யின் தேவ அடைக்கலத்தில் இளைப்பாரப் போனார்கள்.

உலககுரு எங்கள் மானமிகு மதுரைச் சந்நிதானம் கூடத் தன்பங்குக்குத் 'தாய்மத மறுமாற்றம்' பரபரப்பாய் அருளிச் செய்தது.

இத்தனைக்கும் பின்னாலே தான்—

புத்தமதம் புகுந்தவர்கள் போதி நீழலும் போதாமல்

நியோ—புத்திஸ்ட்' ஆனார்கள்.

சேசு சபை புகுந்தவர்கள் நுகத்தடிகளை மாற்றிச் சிலுவை களைச் சுமந்தார்கள்.

ஹிந்து அறநிலையங்களில் ஹரிஜனங்களோடு சரிசமமாக நவீன நாயன்மார்களும் ஆழ்வாராதிகளும் சமபந்தி போஜனம் செய்தன. அவர்களுக்குச் சவால் விட்டு அடுத்த பாய்ச்சலாய் முஸ்லீம் ஜமாத்துகளில் ரத்தசம்பந்தமாய் சம்பந்தி போஜனமே நடத்திக் காட்டினர். என்றாலும் இஸ்லாமாய் ஆனவர்களின் தலைகளில் குல்லாக்கள் கவிழ்ந்ததன்றி, அவர்கள் இன இழிவுகளிலிருந்து நிமிர முடியவில்லை

இதற்கிடையிலேதான்—

எங்கள் மகாத்மாக்களால் ஹரியின் ஜனங்களாய் ஆசீர் வதிக்கப்பட்ட பாவப்பட்ட துராத்மாக்கள் எங்களிடையே வெண்மணியில் விழுப்புரத்திலும்—பெல்ச்சியிலும் பிப்ரா விலும் எரியுண்டார்கள், புதையுண்டார்கள். கொலையுண் டார்கள்.

□

ஞானஸ்நானங்களுக்குப் பின்னாலும்—மார்க்கக் கல்யாணங்களுக்குப் பின்னாலும்—தீட்சை நாமங்களுக்குப் பின்னாலும் எம்மவர்களின் நாமாவளிகள் மாறியதல்லால் நடைமுறையில் இன இழிவுப் பிரச்னைகள் தீர்ந்த பாடில்லை. சமய மாற்றங்களுக்குப் பின்னாலும் சாதி வாலாடுகின்ற சங்கடங்கள் தொடர்கதைதான் இன்றளவும் யதார்த்தத்தில் என்றாலும் மற்றெந்த உண்மையையும் போலவே இந்த உண்மையும் எங்கள் சட்டத்தின் கண் களுக்குத் ஏறுக்கு மாறாகவே என்றும் தெரிகிறது.

1-10-85 இல் நீதிபதி பகவதி தலைமையிலான உச்ச நீதிமன்ற டிவிஷன் பெஞ்ச் ஒன்று 1950 ஆம் ஆண்டின் ஜனாதிபதி உத்தரவைச் சரியெனத் தீர்ப்பளித்தது.

அதன்படி எந்த ஒரு தாழ்த்தப்பட்ட சாதியினனும் மத மாறு யில் அவனது சாதியை (அதாவது சாதி ரீதியிலான சலுகை களை) இழக்கிறான்.

சென்னையில் சூசை என்கிற சக்கிலியர், இதர சக்கிலியர் களுக்கு வழங்கப்படும் பங்க்—கடை தனக்கும் வழங்கப்பட வேண்டுமென வழக்குத் தொடுக்கிறார். தனக்கு பங்க்— மறுக்கப்படுவதென்பது அரசியல் சட்டத்தின் 14-15-22வது விதிகளுக்கு (மத அடிப்படையில் வேறுபடுத்துதல்) முர ணானதென்பது அவரது வாதம்.

''கிறிஸ்துவ மதத்திற்கு வந்த பின்பும் சாதி இழிவுகள் நீங்கவில்லை என்பதை சூசை நிரூபிக்க வேண்டும்!''— இது தீர்ப்பின் நிபந்தனை. இதனை சூசை எப்படி நிரூபிப் பார்? எந்த மேற்றிராணியார் இப்படி ஒரு சர்ட்டிபிகேட் தரத் தயாராக இருக்கிறார்?

ஆனால்....

பாளையங்கோட்டை ஆயமுக்குளம் கோவிலிலும், திருச்சி யிலும் தாழ்த்தப்பட்டவர்களைத் தனியே அமரச் செய்தது சில ஆண்டுகளுக்கு முன்பு பத்திரிகைகளில் வெளிவர வில்லையா?

கும்பகோணத்தில் பாதிரியார் பயிற்சிக்குத் தாழ்த்தப் பட்டவர்கள் ஒதுக்கப்படுவதைக் கண்டித்து சில ஆண்டு களுக்கு முன்னால் இளைஞர்கள் ஊர்வலம் போக வில்லையா?

திருச்சியில் 'கல்லறையில்கூட தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இதரர்களுக்கும் இடையே சுவரெழுப்பப்பட்ட வரலாறு அண்மையில் கூட 'தராசி'ல் வெளியாகவில்லையா?

ஆக இந்த மண்ணில் அவன் வந்துதித்த முதல்நாளில் அவனது கொப்பூழ்க்கொடி அறுபடுவது முதலாக அவன் இந்த மண்ணோடு புதையுண்டோ அவன் உடல் சிதை

யுண்டோ போகும் அளவும் எமது தாழ்த்தபபட்ட தோழன் மதமாறினாலுங்கூட பிறவி நுகத்தடிகளை சிலுவை சுமந்தே போகிறான்.

இப்படி மதமாற்றத்தால் தம் பிறவி இழிவுகள் அகலாக் கொடுமை ஒருபுறம்—அதன் பின்னாலும் அவர்கள் இழந்து போகாத சாதியின் பெயரால் இருந்த சலுகை களும் பறிபோகும் பரிதாபம் மறுபுறமுமாக எமது தாழ்த்தப் பட்ட மக்கள் தவிப்பதுதான் இன்றைய சமூக யதார்த்தம். இஸ்லாத்தின் பர்தாவுக்குள் குமுறும் இதயங்களின் அவ லங்கள் எமது இன்குலாப்பின் 'சமுதாயப் பார்வை'கள் மூலம் பட்டவர்த்தனமாகின்றன.

இந்துமத மாற்றங்களின் ஏமாற்றங்களைத்தான் எங்கள் ஆதிதிராவிடர்களுக்குப் 'புதிய கூண்டு'கள் ஆனதென்

றார் புதுமைப்பித்தன்.
ஈழத்தின் பஞ்சமர்களுக்கு அது 'கானல்'ானதை இங்கே சித்தரிக்கிறார் டானியல்.

டானியல் அவர்களின் பஞ்சமர் நாவல் வரிசையில் பஞ்சமர், கோவிந்தன், அடிமைகள் இவற்றை தொடர்ந்து இது நாலாவது நாவல். ஐந்தாவது பஞ்சகோணங்கள் அடுத்து வெளிவரும். 'தண்ணீர்' நாவலும் இறுதிக் குறு நாவலான 'சா நிழ'லும் அப்புறமாய் வெளிவரும்.

□

இதுவரை காலமும் தமிழில் 'தலித்' இலக்கியமெனும் எமது தாழ்த்தப்பட்ட மக்களின் 'கருப்பிலக்கிய'த்திற்குக் கட்டியங் கூறி நிற்பவை டானியலின் புனைகதைகள் தான், அதிலும் குறிப்பாக அவரது 'பஞ்சமர் வரிசை நாவல்கள்'' இவை சாராம்சத்தில் கருப்பிலக்கியங்களாய் வேரூன்றி நின்றாலும் தம் பரிமாணங்களின் புடை பெயர்ச் சியினால் சிவப்பிலக்கியங்களாகவும் விசும்பளாவுகின்றன. இங்கேதான் இருக்கிறது எங்கட டானியலின் தனித் துவம்.

விமர்சனங்களை முகங்கோணாமல் ஏற்றுக் கொள்ளும் பரிபக்குவம்—அவற்றின் நியாய உணர்வினை அங்கீகரித்திடும் அதே தருணத்தில் தன் பக்கமுள்ள தார்மீக நியாயங்களை விட்டுக் கொடுக்காமல் வலியுறுத்தும் அழுத்தந்திருத்தம்—மேதாவித்தனமாகத் தன்மீது வீசப்படும் தத்துவக் கொக்கிகளை எல்லாம் எங்கேயோ நாம் சந்தித்த குக் கிராமத்துப் பாட்டனின் பாணியில் தனக்கேயுரிய குட்டிக் கதைகள் மூலம் அனாயாசமாய்த் தட்டி விட்டுவிடும் லாவகம் இவை எல்லாம் அவரிடம் கதைக்கையில் எமக்கு அனுபவம் ஆனவை. அவரது நாவல்களில் மிகவும் நாசூக்காக அடக்கி வாசித்து அவர் பாலியிலைக் கையாளும் கலை நுட்பத்தை ''ஆஹா அது கவிதை ஸார்!'' என நயம் பாராட்டுவார் 'பசித்தமானுடம்' கண்ட எங்கள் கரிச்சான் குஞ்சு.

ஏலவே அடிமைகள் பதிப்புரையில் நான் சுட்டிக் காட்டியது போல அன்று சுந்தரராமசாமி அவர்களாலும் இன்று எம். வி. வெங்கட்ராம் அவர்களாலும் கூட டானியலின் நாவல்களை மட்டும் அறிந்த அளவில் அவரை அரசியல் வாதியாக அடையாளங்காண முடியவில்லை என்பதுதான் தோழர் டானியலின் கலை மேதைக்குச் சரியான சான்றாதாரங்கள்.

இறுதி முத்தாய்ப்பாக அவரது எழுத்தில் நான் அவதானித்த இன்னோரம்சம் இதுதான். அவரது எழுத்துமுறை மீதான விமர்சனங்களுக்கெல்லாம் அவரது பாத்திரங்கள் மூலமாகவும் நாவற்போக்கின் ஊடாகவுமே கலாபூர்வமாகப் பதிலளிக்கும் அவரின் குரல் அவரது நாவல்களில் எனக்கு அருமையாகக் கேட்கிறது.

□

கண்ணுக்கும் நீரிழிவிற்கும் மருத்துவம் பார்க்கவும்—இங்குள்ள இலக்கியவாதிகளையும் தோழர்களையும் சந்தித்து அளவளாவவும்- அச்சான 'கானலை'ப் பார்க்கும் ஆசையிலு

மாக அவர் எம்மிடையே நின்றார். ஏறத்தாழ இவர் எதிர் பார்த்து வந்த இவற்றை எம்மால் இயன்ற அளவு ஈடேற்றி வந்தோம். மதுரையிலும் சென்னையிலும் கண் மருத்துவமும் ஒருவாறு முடிந்தது. நீரிழிவும் கூட ஒரு கட்டுக்குள் நின்றது.

சென்னையிலும், புதுவையிலும், குடந்தையிலுமாக எங்களாலான அளவில் இலக்கியச் சந்திப்புகளை எமக்கிடையே சிறப்புற நடாத்தி முடித்தோம், அவருக்கும் மன நிறைவாயிருந்தது.

மீண்டும் ஒருகண்ணில் அறுவை மருத்துவமும் செய்து கொண்டு தஞ்சையில் தங்க சாரதா மருத்துவ மனையில் யில் தங்கிச் சிகிச்சை எடுத்துவந்தார். 'கானல்' அச்சாவது தான் கானலாய் நீண்டு கொண்டிருந்தது அவர்க்கு. அந்த நிலையில் அவரைச் சந்தித்தேன். ஈழத்திற்கு திரும்புவது குறித்த பேச்சு வந்தபோது உடன் நின்ற இளங்கோவிடம் அவர், ''இஞ்சாரப்பா இங்காலை நின்னே போறனான். அங்கால போய்ச் சிங்களவண்ட துவக்கால சாவதிலும் பாக்க இங்கால நின்னே போறனான். எனக்கான காரியத்தை இவையள் வடிவாச் செய்வினம். நீ போவன்'' என நகைத்தார்.

அப்பொழுதுகூட, ''ஏதேது வம்பாப் போச்சு ப்ரகாஷ் பரவாயில்லை பஞ்சமரோடு விட்டார். மார்க்ஸ் விடேல்லை. அப்பரை முடிச்சே போட்டார் எண்டு எங்களுக்கல்லோ பழி வரும்'' என்றேன் நான். 'பகடியாக்கிடக்' கென்று நகைத்துக் கிடந்தோம் நாங்கள்.

இதுதான் எமக்கிடையே இறுதிச் சந்திப்பு.

□

அவரைக் கடைசியாய் ஒருமுறை கண்ணாரக் கண்டு விம்மி வெடித்து வெப்ராளம்தீர-காலமெல்லாம் எந்த மக்களின் ஆட்சி அதிகாரத்திற்காக தன் பேனாவையும் ஆன்மாவை

யும் அர்ப்பணித்தாரோ அந்த பஞ்சம மக்களுக்கும் ரத்த வாரிசுகளான அவரது பிள்ளைகளுக்கும் அவரது பூத உடலை அனுப்பிவைக்க எம்மால் ஆகவில்லை. இறுதி ஊர்வலத்தினை வீடியோவாக எடுத்துவைத்துள்ளோம் ஈழத்திற்கனுப்ப. ஆனபோதிலும் எமது தோழமையின் சார்பிலும் புரட்சிப் பண்பாட்டு இயக்கத்தின் சார்பிலும் அவரது பூதஉடலுக்குச் செங்கொடி போர்த்தி செவ்வணக்கம் செலுத்தினோம்.

மதநம்பிக்கையற்றவர்களைப் புதைக்கும் மயானத்தில்— பட்டுக்கோட்டை அழகிரியின் சமாதிக்கு முன்பாக- புரட்சிகர இயக்கத் தோழர்களும் எழுத்தாளர்களும் புடைசூழ ஒரு புரட்சியாளனுக்குரிய சகல மரியாதைகளோடும் அவரை செவ்வணக்கம் செலுத்திச் செவ்வடக்கம் செய்தோம். ஆம்! எங்களில் அவர் அடக்கமானார்.

''இன்றைய சூழலில் அவர் காரியம் ஈழத்தில் முடிந்திருந்தால்கூட ,இத்தனைச் சரியாக இறுதி மரியாதை செலுத்தி இருக்க எங்களால் முடியுமா என்பது கூடச் சந்தேகம் தான் அத்தனைச் சரியாக உங்கள் கடமையை நிறைவேற்றியிருக்கிறீர்கள்'' என்றார் இறுதி அஞ்சலிக் கூட்டத்தில் தோழர் செ. கணேசலிங்கன்.

ஒரு தோழனுக்குத் தோழனாக-மகனுக்கு மகனாக— மருத்துவனுக்கு மருத்துவனாக தோழர் டானியலுடன் உடன் நின்று பராமரித்த கவிஞர் வி. ரி. இளங்கோவன் எமது தோழமைக் குடும்பத்தார்க்கும் தோழர்கள் அனைவர்க்கும் நன்றி பாராட்டிவிட்டு, குறிப்பாக எங்கள் அருமைச்சகோதரி ஜெயாமார்க்ஸ் அவர்களின் பணிவிடைகளைப் பனிக்கப்பனிக்க நினைவு கூர்ந்தார். இறுதி முத்தாய்ப்பாக, ''எங்கடவீட்டுப் பெண்கள் கூட இந்தப் அளவுக்குச் செய்யேலாது. எங்கட அக்கா அந்த அளவுக்குச் செய்தார்கள். ராவெண்டும் பகலெண்டும் பாராமே'' என ஒரு சிறு பிள்ளையாய் விம்மி வெடிக்கிறார். நாமும்தான்...!
□

தோழர் டானியலின் இறுதி ஊர்வலத்தை முன்னின்று நடத்திய தோழர்கள் வேலுசாமி, சேகர், துரை, சம்பத் நால்வர்க்கும் நன்றி பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம்.

□

மானுடவாழ்வில் மதம் வகிக்கும் பாத்திரத்தையும், அதிலிருந்து, மாறுபட்டு சாதியம் வேர் பிடித்திருக்கும் வித்தியாசத்தையும், சாதி இழிவுகளுக்கு மதமாற்றம் தீர்வாகாதென்பதையும், சாதியத்தின் முன்பாக கிறித்தவம் பலமுறை மண்டியிட்டதையும் புதிய ஜனநாயகப் புரட்சியே சாதி ஒழிப்பின் நிபந்தனை எனவும் ஆழ்ந்து சிந்திக்கத் தூண்டும் அறியதொரு முன்னுரையினை இதற்கு வழங்கியுள்ளார் தோழர் அ. மா. இம்முன்னுரை குறித்த விவாதத்திற்குரிய கருத்துக்கள் 'தோழமை'யால் வரவேற்கப் படுகின்றன.

□

இந் நாவலை வெளிக் கொணர்வதில், இதன் அச்சாக்க முயற்சிகளுக்கு உறுதுணைபுரிந்த தோழர் சந்திரசேகரன் அவர்களுக்கும் ஓவியர்களுக்கும் இந்நூலை உருவாக்கிய 'டிகினிட்டி' உரிமையாளர் தோழர் நீலகண்டன் அவர்களுக்கும் 'தோழமை' சார்பில் எமது நன்றி!

என்றும் 'தோழமை'யுடன் தங்கள் 17.4.86

வே. மு. பொதிய வெற்பன் குடந்தை.

# முன்னுரை

மீனாட்சிபுரங்களைத் தொடர்ந்து ''சாதி இழிவுகளுக்குத் தீர்வு மதமாற்றமா?'' என்கிற கேள்வி மீண்டும் எழுந்துள்ள ஒரு கால கட்டத்தில் ''கானல்'' வெளிவருவது மிகவும் பொருத்தமே. இந்தக் கேள்விக்கான சரியான விடையை டானியல் இந்த நாவலின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார் என்றே கூற வேண்டும்.

சாதி இழிவுகளுக்கு மதமாற்றமும் ஒரு தீர்வாக முடியும் என்கிற கருத்தை டாக்டர் அம்பேத்கார் முதல் தந்தை பெரியார் வரை சாதி இழிவுகளை எதிர்த்துள்ள பலரும் ஆதரித்திருப்பது குறிப்பிடத் தக்கது. இந்தியா, இலங்கை போன்ற நாடுகளுக்கே உரித்தான சாதியையும் பார்ப்பனீய இந்து மதத்தையும் ஒன்றாக இணைத்துப் பார்ப்பதால் விளையும் கருத்து இது. ஆனால் மதமாற்றங்களால் சாதி இழிவுகளைப் போக்கிவிட முடியவில்லை என்பதே நிதர்சன மான உண்மை. எனவே சாதியையும் இந்து மதத்தையும் ஒன்றெனப் பார்ப்பது சரியா என்கிற கேள்வி எழுகின்றது. சாதி, மதம் ஆகிய இரண்டுமே ஆளும் வர்க்கத்தின் சுரண் டல் கருவிகளாகச் செயற்படுகின்றன என்கிற வகையிலும், உபரியை உறிஞ்சும் சாதனமாகச் சாதியைப் பயன்படுத்து வதற்கான தத்துவார்த்தப் பின்புலத்தை இந்து மதம் தரு கிறது என்கிற வகையிலும் சாதிக்கும் இந்து மதத்திற்கு முள்ள அடிப்படையான ஒற்றுமைகளைக் கணக்கி லெடுத்துக் கொள்ள வேண்டியது அவசியந்தான். ஆனால் சாதி, மதம் ஆகிய இரண்டின் தோற்றங்களையும் ஆராய்ந் தால் இரண்டும் வெவ்வேறான இரண்டு மூலங்களிலிருந்து எழுகின்றன என்பதை நாம் அறிய முடியும். மனிதனுக்குக்

கட்டுப்படாத அந்நியப்பட்ட ஆற்றல்களின் அகவயமான பிரதிபலிப்பாக மதம் எழுகின்றது. வேலைப் பிரிவினை, வர்க்கம் ஆகியவற்றிற்கு முன்பும், அதாவது இயற்கையோடு மனிதனுக்குள்ள உறவுகள் மட்டுமே அந்நியப்பட்டதாக இருந்த காலத்திலுங்கூட மதம் இருந்தது. ஆனால் அப்போது சாதி இருந்ததில்லை. பின்னால் உற்பத்தி உறவுகளின் அடிப்படையிலுங்கூட மனிதன் அந்நியமாகிப் போன போது இந்த அந்நியப்பட்ட உறவுகளின் அகவயமான பிரதிபலிப்பாக மதம் விளங்கியது. எனவே மதத்தின் தோற்றத்தை வெறும் சுரண்டல் உறவுகளின் அடிப்படையில் பார்க்க முடியாது.

சாதி என்பது வேலைப்பிரிவினை, வர்க்கப் பிரிவினை ஆகியவற்றின் விளைபொருள். முதலாளியத்திற்கு முற்பட்ட உற்பத்தி முறைகளில் உபரியை உறிஞ்சுவதில் மேற்கட்டுமானத்தின் முக்கியமான பங்கை நாம் அறிவோம். அந்த வகையில் உழைப்பு ஒழுங்கமைப்பிலும் (labour organisation), உபரியை உறிஞ்சுவதிலும் சாதியின் நேரடியான பங்கை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். முழுமையான நிலவுடமைச் சமுதாயத்தில் சாதியும் வர்க்கமும் ஒன்றாகவே இருக்கிறது. இந்து மதம் உள்ளிட்ட எந்த மதமும் இப்படி நேரடியான பொருளாயதச் சுரண்டற் கருவியாகச் செயற்பட்டதில்லை. மத நிறுவனங்களாகிய மாதா கோயில், மடங்கள் ஆகியவை நிலவுடமை நிறுவனங்களாக நின்று உபரியை உறிஞ்சி வந்துள்ளன என்றாலும் இவ்வகை உறவுகளின் அடிப்படையிலேயே இம் மதங்கள் எழுப்பப்பட்டதில்லை. எனவே இதயமற்ற உலகின் இதயம், ஒடுக்கப்பட்ட மக்களின் பெருமூச்சு என மதத்தைச் சொல்வது போல சாதியைச் சொல்ல முடியாது. சாதி அடிப்படையில் ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களை அடையாளம் காணும் வாய்ப்பு இருந்தது என்றாலும் அதுவே அவர்கள் அத்தகைய ஒடுக்கப்பட்ட நிலையை அடைகிற நேரடியான பொருளாயதக் காரணத்தோடும் இணைவதால் மதம்

பெறும் இடத்தைச் சாதி பெறுவதில்லை. புரட்சிக்குப் பின்பு பண்பாட்டுப் புரட்சி முழுமையடைந்து வர்க்கமற்ற சமுதாயம் உருவாகும் வரை பலவீனமாகவேனும் மத உணர்விற்கு இடமிருக்கும். ஆனால் சாதிக்கு இடமிருக்க முடியாது. இதன் பொருள் புரட்சிக்கு அடுத்த நாள் சாதி ஒழிந்துவிடும் என்பதல்ல. புரட்சிக்குப் பின்புள்ள வர்க்கப் போராட்டத்தில் சாதிக்கு எதிரானப் போராட்டம் கடுமையானதாக இருக்கும். சாதி அடிப்படையிலான உழைப்பு ஒழுங்கமைப்பு, சாதியச் சுரண்டல், திருமண உறவுகள் ஆகியவற்றின் அடிப்படைகள் முற்றாக ஒழிக்கப்படும்.

இது போலவே, கட்சியின் திட்டத்தை ஏற்றுக் கொள்ளும் ஒருவன் மத உணர்வுள்ளவனாக இருந்தாலும் கட்சியில் சேர்த்துக் கொள்ளலாம் என்கிற மாமேதை லெனினின் கூற்றும் சாதிக்குப் பொருந்தாது. சாதி உணர்வுள்ள சாதீயச் சங்கங்களில் உறுப்பினனாக உள்ள, சாதீயக் கருத்துக்களுக்குத் துணை போகிற எவனையும் பொதுவுடமைக் கட்சியில் அனுமதிக்கவே முடியாது.

சாதியின் தோற்றம் பற்றிய பிரபலமான கருத்துக்களை மூன்றாக வகைப்படுத்தலாம்.

(அ) ஆரியமே சாதியைக் கொணர்ந்தது.
(ஆ) சாதி என்பது ஒரு திராவிட நிகழ்வே.
(இ) நிலவுடமையின் மேற்கட்டுமானமாகவே சாதி தோன்றியது.

இவை மூன்றுமே சாதியின் தோற்றம் பற்றிய மலினப்படுத்தப்பட்ட (over simplified) கருத்தாக்கங்களாகவே தோன்றுகின்றன. சாதி முறையை ஆரியம் அல்லது திராவிடம் என்கிற எந்த ஒரு தனி இனம் அல்லது மொழிக் குழுவின் உருவாக்கமாகக் கொள்ள முடியாது என்பதை விஞ்ஞானபூர்வமாக வரலாற்றை அணுகும் எவரும் ஏற்றுக் கொள்வர். அதே போல இன்றுள்ள வடிவத்திலில்லா விட்டாலும் நிலவுடமைக்கு முன்னுள்ள வர்க்க சமுதாயங்களிலும் உபரியை உறிஞ்சும் வடிவமாகச் சாதி செயற்பட்டு

வந்தமையை இந்திய வரலாற்றை நுணுகி ஆராய்ந்தோர் உணர்வர். கூட்டுடைமையின் (communal property) அடிப்படையிலான ஆசிய உற்பத்தி முறையிலிருந்து தனிச் சொத்தின் (private property) அடிப்படையிலான நிலவுடமை உற்பத்தி முறை பரிணமித்த போது ஆரிய-திராவிட இனங்களின் உடல் வண்ண வேறுபாடுகளினடியாக எழுந்த வருண அடிப்படையிலான சுரண்டல், சாதி அடிப்படையிலான சுரண்டலாக மாறியது என்பார் தீபங்கர் குப்தா (From Varna to Jati, Journal of contemporary Asia, vol. 10-No 3, 1980). வருண வேறுபாட்டினடிப் படையாக ஆசிய உடமை முறையையும், சாதி வேறுபாட்டினப்படையாக நிலவுடமை முறையையும் கருதும் குப்தாவின் கருத்துக்களை அப்படியே நாம் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் வருணத்திற்கும் சாதிக்குமுள்ள தொடர்பையும், வெவ்வேறு உற்பத்தி முறைகளிலும் சாதியின் வெவ்வேறு வடிவங்களையும் விளங்கிக் கொள்ள முடிகிறது.

சுருங்கச் சொன்னால் பல்வேறு உற்பத்தி முறைகளிலும், பல்வேறு உற்பத்தி உறவுகளிலும் உபரியை உறிஞ்சும் கருவியாக வெவ்வேறு வடிவங்களைச் சாதி எடுத்து வந்துள்ளது. நிலப்பிரபுத்துவத்தில் இறுகிய வடிவமெடுக்கும் சாதியின் பங்கு முக்கியமானது,

இந்தியச் சாதி முறை பற்றி விரிவான ஆய்வுகளைப் பேராசான் மார்க்ஸ் செய்யாவிட்டாலும், வேலைப் பிரிவினை சாதியாகப் பரிணமித்ததைப் பற்றிய குறிப்புக்களைத் தந்துள்ளார். ஆனால் தீண்டாமை பற்றி இத்தகைய ஆதாரமான குறிப்புக்கள் எதையும் அவர் தராதது நமது துரதிர்ஷ்டமே. எனவே முதலாளியத்திற்கு முற்பட்ட உற்பத்தி முறைகளைப் பற்றிய அவரின் குறிப்புக்களிலிருந்து தீண்டாமையின் தோற்றத்திற்கான பொருளியலடிப்படையைக் கோட்பாட்டளவில் நாம் தருவித்துக் கொள்ள வேண்டியதாகிறது.

முதலாளியத்திற்கு முற்பட்ட உற்பத்தி முறைகளனைத்திலும் பரிவர்த்தனை மதிப்பின் உற்பத்தியைக் காட்டிலும் பயன்மதிப்பின் உற்பத்தியே முக்கியத்துவம் பெறுகின்றது. உழைப்புச் சக்தி ஒரு பண்டமாவதில்லை. மூலதனத்திற்கும் உழைப்புச் சக்திக்குமிடையே உறவு ஏற்படுகிற முதலாளிய உற்பத்தி முறை தோன்றுவதற்கு முன் நிபந்தனையாக உழைப்பவன் தனக்கு உரிமையுள்ளதாக—அதாவது உடமை எனக்கருதும் கீழ்க்கண்ட மூன்றுவகையான உறவுகள் கரைந்து (அழிந்து) போகவேண்டும் என்பார் மார்க்ஸ். இந்த மூன்றுவகை உறவுகளில் ஏதேனும் ஒன்றோஅல்லது ஒன்றுக்கு மேற்பட்டவையோ ஒரு உற்பத்தி முறையிலடங்கியிருக்கலாம். அவை :

(1) உழைக்கும் மனிதன் நிலத்தைத் தன் சொந்த அங்கமாக தனது விருப்பின் ஆட்சிப் புலமாக, உற்பத்தியின் இயல்பான நிபந்தனையாக உணரும் உறவுகள். இத்தகைய உடமை உணர்வை உழைக்கும் மனிதன் தனது சமூகத்தின் (community) ஓர் உறுப்பினன் என்கிற தகுதியின் அடிப்படையிலேயே பெறுகிறான். உடமை என்பது இங்கு சமுதாயக் கூட்டுடமையாகிறது. சொத்து என்பது சமுதாய உறுப்பினன் என்கிற தகுதியால் நிர்ணயிக்கப்படுகிறது. சமுதாயமாக இருப்பதென்பது உற்பத்தியின் முன் நிபந்தனையாக விளங்கும் இவ்வமைப்புக்கள் காலப் போக்கில் பல்வேறு வகையான தட்ப வெப்ப, புவியியல் ரீதியான பௌதிகக் காரணங்களாலும், குறிப்பிட்ட இனத்திற்கே உரித்தான அகவயக் காரணங்களினாலும் தனது பழைய வடிவத்தில் மாற்றங்கள் அடைகின்றன. அவ்வாறு மாற்றமடைந்த மூன்று வகையான இனக்குழுச் சமுதாய வடிவங்களை மார்க்ஸ் சுட்டிக் காட்டுவார் அவை:

(அ) ஆசிய அடிப்படை வடிவம் : இதில் சமுதாய உறுப்பினன் சமுதாயச் சொத்தை வெறுமனே உடமை

யாகக் கைக்கொண்டிருப்பவரே (possess)யாகும். பாரம்பரியமாகக் கைக் கொண்டிருக்கும் உரிமை மட்டுமே அவனுடையது. இந்தக் குறிப்பிட்ட சமுதாயத்தின்அல்லது இது போன்று அருகருகேயுள்ள இணைவான சில சமுதாயங்களின் ஒன்றிணைக்கும் மையமே (integrating entity— அரசன் அல்லது ஒரு தெய்வீகத்தன்மை அல்லது இரண்டும்) சமுதாயச் சொத்தின் உண்மையான உடமையாளனாகும். இந்த எதேச்சதிகாரத் தலைமையே உபரியுழைப்பை உரிமையாக்கிக் கொள்வதுமாகும். இந்தக் கைக்கொள்ளும் உரிமைகூட தனி மனிதனுக்குச் சமுதாய உறுப்பினன் என்கிற அடிப்படையிலேயே கிடைக்கிறது. அதாவது சமுதாயமே இந்த வடிவத்தின் சாரமாகும். தனிமனிதன் ஒரு விபத்தேயாகும். ஒன்றிணைக்கும் மையமே சமுதாயத்தின் வழியாகத் தனக்கு இந்தக் கைக்கொள்ளும் உரிமையை அளித்தாகத் தனிமனிதன் உணர்கிறான். கைத் தொழிலும் விவசாயமும் எள்ளளவும் முரணேயில்லாமல் இணைந்து சுயதேவைப் பூர்த்தியடைந்த சமுதாயமாக இது விளங்குகிறது. கைவினைத் தொழில் சுதந்திரமாகத் தனித்து நகரங்களை மையமாகக்கொண்டு வளர்ச்சியடைவதில்லை. நகரங்கள் என்பன இவ்வகைச் சமுதாயத்தின் அவசியமான விளைவுகளாக உருவாவதில்லை. சமுதாயத்திற்குள் தொழிலடிப்படையிலான பிரிவுகளும் ஏற்றத்தாழ்வுகளும் இறுக்கமாகநிலவும்.

(ஆ) **பண்டைய ரோமானிய, கிரேக்க வகைச் சமுதாயம்:** இங்கும் சமுதாயம் ஒரு முன் நிபந்தனையே என்றாலும் இங்கு தனிமனிதர் என்போர் வெறும் உடனிணைப்பு (adjunct) அல்ல. நகரங்களே இவ்வகைச் சமுதாயங்களின் ஆதாரமையங்களாகும். தனிச் சொத்துடமையும் சமுதாய சொத்துடமையும் தனித்தனியே நிலவும். முதல் வகையைப் போல உற்பத்தி

யின் ஆதாரமானபாசனம் போன்றவை இங்கு முக்கிய பிரச்சினையாக இருப்பதில்லை. எனவே முதல் வகையில் பாசனம் என்பது ஒருங்கிணைப்பு மையத்தின் பணியாக இருப்பதுபோல இங்கிருப்பதில்லை. பிற சமுதாயங்களுடனான போரே இங்கு முக்கிய பிரச்சினையாகும். சமுதாயம் உறுப்பினர்கள் சமமான தனிச் சொத்துடமை யாளர்களாக விளங்குகின்றனர்.

(இ) செர்மானிய வடிவம்: இதில் ஒரு பகுதி நிலம் சமுதாயச் சொத்தாகவும், பிற தனிச் சொத்தாக உறுப்பினர்களிடையே பிரித்தும் கொடுக்கப்பட்டிருக்கும். தலைவனே சமுதாயத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துவதால் அவனே சமுதாயச் சொத்தின் உடமையாளனாகும். சமுதாயம் நகரத்தில் செறிந்திருப்பதில்லை. சமுதாயம் என்பது அதிக தூரங்களால் பிரிக்கப்பட்டுள்ள பல குடும்பங்களின் இணைவாகும். இதன் உறுப்பினர்கள் குறிப்பிட்ட இடைவெளிகளில் கூடுகிற தன்மையின் அடிப்படையிலேயே இதனை ஒரு சமுதாயம் என்கிறோம். தனிச் சொத்து என்பது சமுதாயத்தின் வழியாகப் பெறப்பட்டதல்ல. இரண்டாவது வடிவத்தைப் போலவே இங்கும் தனிச் சொத்துடமையாளனே உழைப்பாளியுமாகும்.

இம் மூன்று வடிவங்களையும் மார்க்ஸ் நுணுக்கமாக வேறுபடுத்திக் காட்டும் அனைத்துக் காரணிகளையும் இங்கு நான் குறிப்பிடவில்லை. ஆசிய முறையின் தனிச் சொத்தின்மையும், கைத்தொழிலும் விவசாயமும் இணைந்திருக்கும் தன்மையும், ஒருங்கிணைக்கும் எதேச்சதிகார ஒருமையே அனைத்திற்கும் உரிமையாளனாக விளங்கும் நிலையும் இறுக்கமான சுயதேவைப் பூர்த்தியுள்ள மாற்றமற்ற தன்மையும் கவனிக்கத் தக்கன. இம் மூன்று வடிவங்களிலும் சமுதாயம் என்பது வெவ்வேறு அளவில் ஒரு முன் நிபந்தனையாக விளங்குவதும் உடமையாளர்கள் அல்லது

கைக்கொள்பவர்களே உழைப்பாளிகளாக இருப்பதும் குறிப்பிடத்தக்கன.

(2) கைவினைக் கருவிகளின் உடமையாளன் என்கிற உணர்வைக் கைவினைஞர்களுக்குத் தருகிற உறவுகள்:

முதல்வகை உறவுகளில் சமுதாயம் என்பது ஓர் முன் நிபந்தனையாக இருப்பது போல இங்கு கைத்தொழில் உற்பத்தி (handicraft production) என்பது முன் நிபந்தனையாகிறது. நிறைவேற்றப்படும் பணி என்பது பகுதியாகவேனும் கைத்தொழிற் கலைத்திறமையின் அடிப்படையிலேயே நடைபெறுகிறது. கைத்தொழிற் திறமை இல்லாதோருக்கு இந்தக் கருவிகள் எந்தப் பயன்பாட்டிற்கும் உதவாது என்கிற வகையில் திறமையினடிப்படையிலேயே உற்பத்திக் கருவிகளுக்கும் சொந்தம் என்கிற நிலை வினைஞனுக்கு ஏற்படுகிறது. தொழில் கிட்டத்தட்ட பாரம்பரியமாகக் கையளிக்கப்படுகிறது.

இவ்வகை உறவுகளுக்கும் முதல் வகையில் ஆசிய வடிவ உறவுகளுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. ஆசிய வடிவத்தில் கைவினைத் தொழிலும் நகர வளர்ச்சியும் நிலச் சொத்துடமையின் ஓர் விபத்தாகத் தோன்றி அதன் ஆளுகையின் கீழ் நடைபெறுவதைப் போலல்லாது இங்கு சுதந்திரமான இருப்பைப் பெற்றிருக்கின்றன. எனவே கருவிகளுக்கு உடமையாளன் என்கிற உணர்வு இருந்தாலும் ஆசியச் சமுதாயங்களைப் பொறுத்த மட்டில் அது சுதந்திரமான உடமை உணர்வாக இராது எனலாம்.

(3) உழைப்புச் சக்தியின் நடமாடும் அலகாக (unit) விலங்கும் உழைக்கும் மனிதனே உற்பத்தியின் புறவயமான நிபந்தனைகளில் (objective condition of production) ஒன்றாகத் தோன்றும் உறவு முறைகள். எனவே முதலாளிய உறவுகளைப் போலில்லாமல் உழைப்பு

சக்தியாக அன்றி உழைக்கும் மனிதனாகவே அடிமை, பண்ணையடிமை வடிவத்தில் அவன் ஆளும் வர்க்கத்தால் கைப்பற்றப்படுகிறான் எனவே இங்கு உழைக்கும் மனிதன் அதாவது அடிமை/ பண்ணையடிமை நிலத்தையோ கருவியையோ உடைமையாகக் கருதுவதில்லை. அடிமை பண்ணையடிமை உழைப்பு என்பதே உற்பத்தியின் நிபந்தனைகளில் ஒன்றாகி போனதன் விளைவாக நிலமும் கருவியும் சொந்தமில்லை என்கிற போது தனது உழைப்பே அவனுக்குச் சொந்தமாவதில்லை. (ஆனால் முதலாளிய உற்பத்தி முறையில் தொழிலாளி தனது உழைப்புச் சக்தியைச் சொந்தமாக உணர்கின்றான்.) எனினுங்கூட அடிமை/ பண்ணையடிமை என்பவன் உயிர் வாழும் அடிப்படைக் குறைந்த பட்ச நிபந்தனைகளைத் conditions of subsistence) தனக்குச் சொந்தமாகக் கருதுகிறான் (இத்தகைய சொந்த உணர்வு முதலாளிய உற்பத்தி முறையில் தொழிலாளர்க்கு ஏற்படுவதில்லை.) அதாவது அடிமை/ பண்ணையடிமைக்கு உயிர்வாழும் உத்தரவாதம், குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகளின் உத்தரவாதம் கிடைக்கிறது,

இந்த மூன்றாம் வகை உறவில் அடிமை/ பண்ணையடிமை உழைப்பு என்பது உற்பத்தியின் நிபந்தனைகளில் ஒன்றாகிப் போனதன் விளைவாக நிலத்தைச் சொந்தமாக உணரும் உடமையாளன் உழைப்பதில்லை. அதாவது மூன்றாவது வகை உறவு முதல் உறவின் பிரதான அம்சத்தைக் கொண்டிருப்பதில்லை. அதாவது சொத்துரிமைக்குச் சமுதாய உறுப்பினன் என்கிற தகுதி முன் நிபந்தனையாகிற நிலை போய்விடுகிறது. ஆனால் இதுவும் ஐரோப்பாவில் தோன்றிய Classical பண்ணையடிமை முறைகள் பொருந்துகிற அளவிற்கு சமுதாய உறுப்பினன் என்கிற தகுதி முக்கியப்படுத்தப்படும் ஆசிய நிலவுடமை முறைக்கு முழுமையாகப் பொருந்தாது. இதனைச் சற்று விரிவாகக் காண்பது நல்லது.

போர் அல்லது சிவில் இணைப்பு முதலியவற்றின் விளைவாக ஒரு சமுதாயம் அதே போன்ற அருகிலுள்ள இன்னொரு சமுதாயத்தைத் தன் கைப்படுத்தும்போது அடிமை/பண்ணையடிமை முறை தோன்றுகிறது. இனக்குழுச் சமுதாயத்தில் சொத்துடமையின் அடிப்படை நிபந்தனை இனக்குழுவின் உறுப்பினராக இருப்பதாகும். எனவே, ஒரு இனக்குழுவானது இன்னொன்றால் தன்கைப்படுத்தப் படும்போது இந்த உறுப்பினர் என்கிற தகுதி அழிந்து விடுவதால் அது, வெற்றி கொள்ளப்பட்ட இனக்குழுவின் மறு உற்பத்தியின் நிபந்தனைகளிலொன்றாகிப் போவது தவிர்க்க முடியாததாகும். தனிச் சொத்துடமையும் சமமான உடமையாளர்கள் என்கிற உணர்வும் நிலவுகிற ரோமானிய, செர்மானிய வடிவங்களில் இப்படி வெற்றி கொள்ளப்பட்டவர்கள் தனிச் சொத்துடமையாளர்களின் நேரடியான அடிமை/ பண்ணையடிமைகளாக மாறினர் ஆனால் போரினால் அல்லது விவசாய முறையின் விரிவாக்கத்தால் முதல் வகை உறவு அதன் மூல வடிவில் கோலோச்சுகிற ஆசிய வடிவிலான இனக்குழு மற்றும் மேல்நில மக்கள் (tribal and upland people) அடிமையாக்கப்பட்ட போது அவர்கள் சமுதாயப் பொது அடிமைகளாகவே (Communal Slavery) கருதப்பட்டனர். எனவே இங்கு சமுதாயம் என்பது முன் நிபந்தனை என்கிற நிலை தொடர்ந்தது. அடிமைப்படுத்தப்பட்டவர்கள் சமுதாயமாகவே அடிமைப்படுத்தப்பட்டதால் மேல்வார உரிமை பெற்று உபரியை உறிஞ்சுபவர்கள் யாரான போதும் அடிமைப்படுத்தப்பட்ட சமுதாயத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகள் அப்படியே இருந்தன. அதாவது இங்கு உழைக்கும் மக்களிடையேயும் படிநிலைகள் இருந்தன. சமுதாயப் பொது அடிமைகளில் கீழ் மட்டத்திலிருந்தவர்கள் கொடுமையாகச் சுரண்டப்பட்டனர். 'இழிவான' தொழில்கள் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர். விவசாயத்திலும் சேற்றில் இறங்கி வேலை செய்வது போன்ற தூய்மையற்ற வேலைகள் இவர்களுக்கு உரித்தாயின. எனினும் இன்னுங்கூட

இவர்களுக்கு உயிர் வாழ்வதற்கான குறைந்தபட்ச நிபந்தனைகளின் சொந்தக்காரர்கள் என்கிற உணர்வுகள் கரைவதில்லை.

மார்க்ஸ் குறிப்பிடும் ஆசிய உற்பத்தி முறை இந்தியாவிற்கு முழுமையாகப் பொருந்துமா என்கிற விவாதத்திற்குள் இங்கு நாம் இறங்க வேண்டாம். ஒன்று உறுதி. ஆசிய நிலவுடமைமுறை மார்க்ஸ் குறிப்பிடும் ஆசிய உற்பத்தி முறையின் சகல பண்புகளையும் பெற்றிரா விட்டாலும் ஐரோப்பிய நிலபிரபுத்துவ உற்பத்தி முறையிலிருந்து பெருமளவில் வேறுபடுகிறது என்பதை மட்டிலும் இங்கு நினைவில் நிறுத்திக் கொள்வோம்.

இப்போது இன்னொரு கேள்வி எழுகிறது. ரோமானிய செர்மானிய முறைகளில் ஆசிய முறையைப் போலல்லாமல் திறமையினடிப்படையிலான கருவிகளில் உடமையாளன் என்கிற உணர்வைத் தரும் கைத்தொழில் உற்பத்தியாளர்கள் ஓரளவு சுதந்திரமாக நிலவுவார்கள் என்றோமே, அவர்களும் இவ்வாறு அடிமை/ பண்ணையடிமையாக மாறுகிற வாய்ப்புண்டா என்பதே அது. நிலத்தின் நீட்சியாக மனிதன் விளங்கும்போது நிலம் அடிமையாகையில் மனிதனும் அடிமையாகிறான். ஆனால் கருவியின் நீட்சியாக வினைஞன் இருப்பதில்லை. மாறாக வினைஞனின் திறமையின் நீட்சியாகவே கருவி இருப்பதால் இப்படி இவன் அடிமையாவதில்லை. மார்க்ஸ் கூறுகிறார்:

> திறமையும் அதன் விளைவான உழைப்புக் கருவியின் உரிமையும்—இது உற்பத்தி நிபந்தனைகளுக்குச் சொந்தம் என்பதற்குச் சமமாகிறது—உள்ள இரண்டாவது உறவுகளைப் பொறுத்தமட்டில் அடிமை/ பண்ணையடிமைத் தனங்கள் விலக்கப்படுவது வெளிப்படை. எனினும் இது சாதிமுறை வடிவிலான எதிர்மறை வளர்ச்சிக்கு இட்டுச் செல்லலாம். (Pre-Capitalistic

Economic Formations, 1857–'59 அழுத்தம் என்னுடையது).

இரண்டாவது வகை உறவுகளின் அடிப்படையிலான திறமையின் விளைவான வேலைப் பிரிவினை, பாரம்பரியமாகக் கைத்தொழில்கள் கையளிக்கப்படுதல் ஆகியவை சாதி முறையின் தோற்றுவாயாக இருக்கலாம் என்கிற பேராசானின் கருத்து முக்கியமானது. ஆனால் இங்கொன்றை நாம் சிந்திக்க வேண்டியது அவசியமாகிறது. கைத்தொழில் உற்பத்தி முறை என்பது விவசாயம் சாராத சுதந்திரமான உற்பத்தி வடிவமாக விளங்கும். இரண்டாவது வகை உறவுகள் என்பன ஆசிய வடிவத்தில் முழுமையாகச் சாத்தியமில்லை என்பதே அது. அப்படியானால் இந்த இரண்டாவது வடிவம் சாதி முறைக்கு இட்டுச் செல்லும் என மார்க்ஸ் குறிப்பிடுவது எதை மனத்திற் கொண்டு? இந்தியா போன்ற நாடுகளில் உருவான சாதி முறையைக் காட்டிலும் பிற இடங்களில் உருவான சாதியொத்த வடிவங்களை மனத்தில் கொண்டே மார்க்ஸ் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் என்பதே சாத்தியமான பதிலாகிறது.

அப்படியானால் இந்தியச் சாதிமுறை அதன் முக்கிய வெளிப்பாடாகிய தீண்டாமை ஆகியவற்றின் தோற்றத்தை எப்படி விளக்குவது?

வேலைப் பிரிவினை, பாரம்பரியமாகக் கைத்தொழில்கள் கையளிக்கப்படுவது ஆகியவை சாதியாகப் பரிணமிக்கின்றன என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால் இந்தியாவில் சுதந்திரமான கைத்தொழில் உற்பத்தியின் கீழ் இது நடைபெறவில்லை. மாறாகிக் கைவினை உற்பத்தி முற்றிலும் சமுதாயப் பொது விவசாய முறைக்குக் கட்டுப்பட்ட ஆசிய நிலவுடமை உறவின் கீழேயே சாதிகள் உருவாயின. அதாவது இறுக்கமான தொழில் பிரிவினை

களும், சக உறுப்பினர் என்போர் சமமான உடமையாளர் கள் என்கிற உணர்வுமற்ற ஒரு சமுதாயம் அடிமைப்படுத் தப்படும்போது இங்கு அடிமை முறை சற்று வேறுவித மாக உருவெடுத்தது. இதன் விளைவாகவே கைவினைத் தொழில்களில் மட்டுமல்லாமல் தொழில் திறமையினடிப் படையில் இல்லாத இதர தொழில்களிலும் சாதிகள் உரு வாயின. குலக் குழுக்களெல்லாம் சாதிகளாயின. நிலவுட மையாளர்கள் இயல்பாகவே ஆதிக்க சாதிகளாயினர். சூத்திர வருணத்தைச் சேர்ந்த வேளாளர்கள் தமிழகத் திலும், ஈழத்திலும் பார்ப்பனருக்கு அடுத்த படிநிலையை அடைந்தது இப்படித்தான். கைத் தொழில் திறமை தேவைப்படாத—எனவே கருவிகள் சொந்தமில்லாத—சவம் காவுதல், துணி வெளுத்தல், மயிர் மழித்தல், இறந்த கால்நடைகளை அப்புறப்படுத்துதல் போன்ற தொழில் முறைச் சாதிகள் உருவாயின. நிலத்தில் உரிமையுமில் லாது, திறமையின் அடிப்படையில் கருவிகளும் சொந்த மில்லாது, தூய்மையற்ற ''இழிவான'' தொழில்களைச் செய்த இவர்கள் தொண்டூழியச் சாதிகள் ஆயினர். ஆசியச் சமுதாயத்தின் கீழ்நிலையிலிருந்த இவர்கள் தீண்டாமைக் கொடுமைக்கு இலக்காயினர். அதற்கான தத்துவார்த்தப் பின்புலத்தை வருணாசிரம, பார்ப்பனீய, இந்து மதம் தந் தது.

சுய தேவைப் பூர்த்தி யடைந்த, கைத்தொழிலும் விவசாய மும் ஒன்றிணைந்த ஆசியச் சமுதாயங்களில் மறு உற் பத்திக்கான நிபந்தனைகள் யாவும் சமுதாயத்திற்குள் ளேயே நிறைந்திருந்தன. வேலைப் பிரிவினை என்பன சமுதாயங்களுக்கிடையே நிகழாமல் சமுதாயத்திற்குள் ளேயே நிகழ்ந்தன. சமுதாயத்திற்குள் உள்ள வேலைப் பிரிவினையில் ஒவ்வொருவரின் இடமும் மறு உற்பத்தியில் உறுதி செய்யப்பட்டன. அவை சாதி முறை மேலும் மேலும் இறுக்கமடையவே உதவின.

தொண்டுழியத்தைத் தன் ஆதிக்கத்திற்குள் வைத்திருக்கும் நிலவுடமை ஆதிக்கம் என்பது அடிப்படையில் பொருளா தாரச் சுரண்டலே என்பதை மார்க்ஸ் வேறொன்றைப் பற்றிச் சொல்லும் போது அழகாகக் குறிப்பிடுவார்.

> ஆதிக்க உறவுகள் என்பன இங்கு உண்மையில் கைப் பற்றும் உறவுகளேயாகும் (Relations of appropriation). கைப்பற்றுதல் (சுரண்டல்) என்பது இத்தகைய உறவுகளை மிருகங்கள், மண்... போன்றவற்றின் மீது நிறுவமுடியாது. மிருகங்கள் கூடத்தான் தொண்டூழியம் புரிகின்றன என்றாலும் இது சாத்தியமில்லை. ஆதிக்க உறவு என்பது மற்றவரின் விருப்புறுதியை (will)க் கைப்பற்றிக் கொள்வதென்பதை முன் அனுமானிக்கிறது. (விருப்பின் ஆட்சிப் புலமாகிய நிலமே பறிபோகும்போது விருப்பை இழப்பது தவிர்க்க இயலாததாகிறது-முன்னுரையாளர்). ஆனால் விருப்புறுதி இல்லாத ஜீவன்கள் அதாவது மிருகம் போன்றவை தொண்டூழியம் புரியலாம். ஆனால் இத்தகைய ஊழியம் அவற்றின் சொந்தக்காரர்களை பிரபுக்களாக மாற்றுவதில்லை. எனினும் ஆதிக்க அடிமை உறவுகள் என்பன உற்பத்திச் சாதனங்களைக் கைப் பற்றிக் கொள்ளும் சூத்திரத்திற்குள் அடங்கு கிறது என்பதை ஒருவர் உணர முடியும் (அதே கட்டுரை).

எனவே ஆதிக்க உறவுகள், தொண்டுழிய உறவுகள் அதாவது சாதிய உறவுகள் என்பன அடிப்படையில் சுரண்டல் உறவுகளே என்பதில் ஐயமில்லை.

இன்னொன்று இங்கு மீண்டும் நினைவு கூரத் தக்கது முதலாளியத்திற்கு முற்பட்ட இம் மூன்று வகை உறவுகளிலுமே நிலம், கருவி, குறைந்தபட்ச உயிர்வாழ்வுத் தேவை ஆகிய ஏதாவதொன்றை உரிமையாக உணர்வதால் உற்பத்தியில் தனது புறவயமான இன்றியமையாமையை

உணர்கிறான். முதலாளியச் சமுதாயத்திலேயே தொழிலாளி தனது புறவயமான இருப்பின் ஆதாரத்தை இழந்து முற்றிலும் அகவயமாகிறான். தொண்டூழியம் செய்யும் பஞ்சம் அடிமை நிலமும் கருவியும் சொந்தமாக இல்லாமலுங்கூட குறைந்த பட்ச வாழ்வு நிபந்தனையைச் சொந்தமாக உணர்வதன் மூலம் தனது புறவய இன்றியமையாமையை உணர்கிறான். இந்த உத்தரவாதத்தைப் பெறுவதனாலேயே அவன் தன் விருப்புறுதியை இழந்து தொண்டூழியம் செய்யும் அடிமையாகவும் ஆகிறான். இதற்கேற்ற அடிமை மனப்பான்மையை அன்றைய மேற்கட்டுமானம் தனது சகல அம்சங்கள் மூலமாகவும் அவனில் விதைக்கிறது.

ஆனால் அரைநிலவுடமை (காலனிய- அரைநிலவுடமை அல்லது அரைக்காலனிய—அரைநிலவுடமை) உறவில் நிலமை மாறுகிறது. காலனிய உறவுகள், தரகு முதலாளிய வளர்ச்சி ஆகியவற்றின் விளைவாக சுய தேவைப் பூர்த்தி அடிப்படையிலான கிராம சமுதாயம் சிதைகிறது. உழைப்புச் சக்தி விற்பனைப் பொருளாகிறது. சந்தைக்கான உற்பத்தி, பரிமாற்ற மதிப்பு ஆகியவை முக்கியத்துவம் பெறுகின்றன. எனினும் இது முதலாளிய வளர்ச்சியாக இல்லாமல் ஏகாதிபத்தியக் கட்டுப்பாட்டிற்குள் இயங்கும் அரை நிலவுடமை உற்பத்தி முறை தக்க வைக்கப்படுகிறது சாதி புதிய வடிவம் எடுக்கச் சுரண்டல் சாதனம் என்கிற பணியைத் தொடர்கிறது. போலித் தேர்தல் முறை, மத வெறி அமைப்புக்கள் போன்றவை சாதிய உணர்வுகளைத் தக்க வைக்கும் சாதனங்களாக ஆளும் வர்க்கத்திற்கு விளங்குகின்றன.

சுய தேவைப் பூர்த்தி சிதைதல், பரிமாற்ற மதிப்பு முக்கியத்துவம் பெறுதல், உழைப்புச் சக்தி விற்பனைப் பொருளாதல் ஆகியவற்றின் விளைவாக நிலமும் கருவியும் சொந்தமில்லாத பஞ்சம மக்கள் குறைந்த பட்ச தேவையின்

உத்தரவாதத்தை இழக்கிறார்கள். அதாவது தாங்கள் உயிர் வாழ்க்கையின் குறைந்தபட்ச நிபந்தனையின் சொந்தக்காரர்கள் என்கிற பிரக்ஞையை இழக்கிறார்கள். அதே சமயத்தில் ஆளுகை கொள்ளும் நிலப்பிரபுத்துவத்தால் தொண்டூழியம் செய்யவும் நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். முதலாளிய வளர்ச்சி இல்லாததால் பஞ்சம அடிமைகள் கிராமங்களை விட்டு வெளியேறி சுதந்திரமாக உழைப்புச் சக்தியை விற்பனை செய்யும் தொழிலாளிகளாகவும் மாற முடிவதில்லை. இங்கேதான் முரண்பாடுகள் உருவாகின்றன.

முதலாளியச் சமுதாயத்தில் முற்போக்கான வர்க்கம் சோசலிச உணர்வுகளுக்கு ஆட்படுவது போல அரை நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் முற்போக்கான வர்க்கங்கள் சனநாயக உணர்வுகட்கு ஆட்படுவது எதிர்பார்க்கக் கூடியதே. பஞ்சம மக்கள் மத்தியில் இது ஆலய நுழைவு, தொண்டூழிய எதிர்ப்பு, தேநீர்க் கடைகளில் சம உரிமை கோருதல் போன்ற சனநாயக உணர்வுகளுடன் கூடிய சனநாயக உரிமைகளுக்கான போராட்டங்களாகக் கொப்புளிக்கின்றன. ஏகாதிபத்தியங்களும் அவற்றின் அடிவருடிகளாகிய தரகு முதலாளிகளும் அ[illegible]கார வர்க்கமும் தாங்கள் நீட்டி முழக்கும் சனநாயக உரிமைக் குரலை இந்தச் சனநாயகப் போராட்டங்களுக்கு இணைவாக ஒலிக்க முற்படுவதில்லை. மாறாக நிலப்பிரபுத்துவத்துடன் இணைந்து பஞ்சம மக்களின் சனநாயகக் கோரிக்கைக் குரலின் கழுத்தை நெரிக்கவே முற்படுகின்றன.

நிலப்பிரபுத்துவ காலத்திலுங் கூட தாழ்ந்த சாதி மக்கள் உயர்ந்த சாதியினருக் கெதிராக ஆங்காங்கு அவ்வப் போது போராடியுள்ளார். ஆனால் அவை கொடுமையான பொருளாதாரச் சுரண்டலுக்கெதிரான சில அடிப்படை மனிதாய உரிமைகளுக்கான தன்னெழுச்சியாகத் தோன்றிய கலகங்களாகவே இருந்தன. ஆனால் ஒரு அரை நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையில் இதனைச் சனநாயக

உணர்வுடன் கூடிய சனநாயகப் போராட்டமாகவே காண முடியும். எனவே சனநாயகப் புரட்சியை நோக்கிப் செயற் பாடுகளின் ஒரங்கமாகவே சாதி இழிவு எதிர்ப்பு, தீண்டாமை எதிர்ப்பு, தொண்டூழிய எதிர்ப்பு இவற்றை முன்னிலைப் படுத்தும் இலக்கியப் பணி ஆகியவற்றை நாம் காண முடியும். உறுதியான புதிய சனநாயகப் புரட்சிக்கான திட்டமுடைய பாட்டாளி வர்க்கக் கட்சி ஒன்றின் வழி காட்டலில் இவை நிறைவேற்றப் படவேண்டும் என்பதே முக்கியம்.

சாதி இழிவுகள் முழுமையாக ஒழிக்கப்படுவதற்கு- உழுப வனுக்கு நிலம் வழங்கப்படும், தேசியத் தொழில் வளர்ச்சி யின் மூலம் தொழில் வாய்ப்புக்கள் பெருகித் தொண்டூழி யம் ஒழிக்கப்படும்—புதிய சனநாயகப் புரட்சின் ஒருமுன் அவசியம் என்பதும் இதிலிருந்து பெறப்படுகிறது. வெறும் தீண்டாமை எதிர்ப்பு, இட ஒதுக்கீட்டுப் போராட்டம் மூல மாகவே தீண்டாமை, சாதி இழிவுகள் ஆகியவற்றை ஒழித்து விடுவதென்பதும், இவற்றை ஒழித்த பின்பே புரட்சியைச் சாதிக்க முடியும் என்பதும் முழுத் தவறு என்பதும் இதிலிருந்து பெறப்படுகின்றது. சாராம்சத்தில் இத்தகைய வாதம் நிலப் பிரபுத்துவத்துக்குச் சாதமாகவே அமையும் என்பதும் விளங்குகிறது. சாதி இழிவுகளுக் கெதிரான போராட்டங்களின் முக்கியத்துவம் பற்றிச் சரியாகவே வாதிடும் **கெயில் ஓம் வேத்** போன்றோர் இந்தியச் சமுதாயத்தை ஒரு முதலாளியச் சமுதாயமாக வகைப்படுத்துவதன் விளைவாக முற்றிலும் குழம்பித் தெளிவற்றுத் திசை தடுமாறுகிற நிலைமையையும் (பார்க்க FORT வெளியீடுகள்) நாம் கவனிக்க வேண்டும்.

மொத்தத்தில் சாதி ஒழிப்பு என்பது புரட்சியின் நிபந்தனை அல்ல; ஆனால் புதிய சனநாயகப் புரட்சியே சாதி ஒழிப் பின் நிபந்தனை ஆகும். புதிய சனநாயகப் புரட்சியை நோக்கிய நடவடிக்கைகளின் ஓரங்கமே சாதி எதிர்ப்புப் போராட்டமுமாகும். முன்னதைச் சாதி ஒழிப்பு இயக்கங் கள் பார்க்கத் தவறியதும் பின்னதைப் பொதுஉடமை

இயக்கங்கள் பார்க்கத் தவறியதும் இங்கு மனங் கொள்ளத் தக்கன.

இந்த அடிப்படைகளைப் புரிந்து கொள்ளாததன் விளைவே சாதி இழிவுகளை மதமாற்றம் மூலம் போக்கிவிடலாம் என்கிற மாயையாகும்.

காலனிய விரிவாக்கத்தின் ஓரங்கமாக இங்கு வந்த கிறிஸ்தவமும் தொடக்க காலத்தில் சாதி இழிவுகளுக் கெதிராக மதமாற்றத்தை முன்னின்று நடத்திய பாதிரிகள் அனைவரும் வெறும் காலனிய விரிவாக்க நோக்கத் தோடும், தீண்டாமையைப் பயன்படுத்தி கிறிஸ்தவத்தை வளர்க்கும் தந்திர எண்ணத்தோடும் மட்டுமே செயல்பட் டனர் என்று கூறிவிட முடியாது. தொடக்க கால கிறிஸ் தவ (முதல்நூற்றாண்டு) மதத்தை, தொடக்க கால தொழி லாளர் இயக்கங்களுடன் ஒப்பிட்டு பின்னர் அதுவே ஆளும் வர்க்கத்தின் கொடிய சுரண்டற் கருவியாகவும் மாறியதைப் பேராசான் ஏங்கல்ஸ் விளக்குவார் (Early Phase of Christianity). இந்தத் தொடக்க கால மனிதாபி மானம் கிறிஸ்தவம், வைணவம் போன்ற மதங்களில் இழை யாக நின்று ஊடாடி வருவதை முற்றிலுமாக மறுத்துவிட முடியாது. இதன் விளைவாகவே கிறிஸ்தவமதம் என்பது மதத்திற்கே உரித்தான ஆளும் வர்க்கச் சார்புடன் கூடிய கொடிய சுரண்டல் கருவியாக விளங்கினாலும் அதிலுள்ள சில தனிப்பட்ட மனிதாபிமானிகளாக உள்ள பாதிரிகளின் நடவடிக்கைகள் தேசிய விடுதலைப் போர் (ஈழம்) ஏகாதிபத்திய எதிர்ப்புப் போர் (லத்தீன் அமெரிக்கா) போன்ற புரட்சிகரச் சூழல்களில் புரட்சியாளர்களுக்குச் சாதகமாக இருப்பதையும் நாம் காண முடிகிறது. முதலாளியச் சமூகத்தின் தோற்ற காலத்தில் மேலைநாடு களிலிருந்து மதம் பரப்ப வந்த பாதிரிகள் சிலரின் முதலா ளிய சனநாயக உணர்வுகள், மனித நேயம் ஆகியவற்றை முற்றாகப் புறக்கணித்துவிட முடியாது.

பிரேசில் நாட்டு கவர்னரின் மகனாகப் பிறந்திருந்தும் சுக போகமான வாழ்க்கையைத் துறந்து இந்தியா வந்து

கொடிய துறவு வாழ்க்கையை ஏற்று மறவர் சீமையில் மத மாற்றத்தில் ஈடுபட்டுக் கிழவன் சேதுபதியால் சித்திரவதை செய்யப்பட்டு மரண தண்டனைக் குள்ளாகிய அருளானந் தையர் எனப்படும் ஜான்டி பிரிட்டோ (1647-1693) சாமி யாரின் வரலாற்றைப் (கிழவன் சேதுபதி, மீ. மனோகரன்) படிக்கும் போது அதை வெறும் காலனிய விரிவாக்கப் பணி யாக மட்டும் ஒதுக்கிவிட முடியாது.

ஞானமுத்துச் சாமியார் அப்படி ஒரு மனிதாபிமானியாகவே இந்த நாவலில் படைக்கப்பட்டுள்ளார். எளிய சாதியினரின் துன்ப துயரங்களில் பங்கெடுப்பவராகவும், தன்னளவில் சாதி வேறுபாடு காட்டாதவராகவும் எளிய சாதியினருடன் கூடிக் குலாவுவதால் ஏற்பட்ட ஆதிக்க சாதியினரின் வன் முறையை ஏற்றுக் கொள்ளும் மனத் திடம் உடையவராக வும் காட்டப்படுகிறார்.

ஆனால் உயர் சாதியினரும் மதத்தில் ஊடுருவி ஆதிக்கம் செலுத்தத் தொடங்கும் போது பாதிரியார் உயர் சாதியின ருக்கு ஆதரவாகவே போக நேர்கிறது. அதாவது உற்பத்தி முறையைப் புரட்சிகரமாக மாற்றி அமைக்காது வேறுபாடு களைக் களைந்துவிடும் முயற்சியில் கிறிஸ்தவம் சாதீயத் திடம் தோற்றுப் போகிறது. அவ்வாறில்லாமல் ஞானமுத் துச் சாமியார் உயர் சாதியினரையும், தாழ்ந்த சாதியினரை யும் தனித்தனியே அமர்ந்து திருப்பலி பூசையில் பங்கு கொள்ள அனுமதிக்க மறுத்திருந்தால் என்ன நேர்ந்திருக் கும்?

போப்பையருக்கு நேர்ந்ததுதான் நேர்ந்திருக்கும். தஞ் சாவூரில் சமயப்பணி புரிந்த தமிழறிஞராகிய ஜி. யு. போப் (1820-1901) ஞானமுத்துச் சாமியார் எதிர் கொண்ட அதே பிரச்சினையை எதிர் கொள்ள வேண்டியதாயிற்று. இவ ரால் மதம் மாற்றப்பட்ட உயர்சாதியினர் தாழ்ந்த சாதியி னருடன் ஒன்றாக இருந்து தீர்த்தம் பருக மறுத்த போது போப்பையர் ஞானமுத்தரைப் போலல்லாமல் அதனை எதிர்த்துப் போராடினார். விளைவு? ஒரு ராத்திரியில்

போப்பையர் மனைவி மக்களையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டு இருபத்து மூன்று நாட்கள் பயணம் செய்து யாருக்கும் தெரியாமல் உதகை மண்டலத்துக்கு ஓட வேண்டியதாயிற்று. திருவையாறு நீதி மன்றத்தில் வழக்கு நடைபெற்றதாகவும், திருநெல்வேலி வேளாளராக இருந்து மதம் மாறிய இசையறிஞர் வேதநாயக சாஸ்திரி "போப்பையர் உபத்திரா உபத்திரவம்" என்றொரு நூல் எழுதியதாகவும் தெரிகிறது. (இந்தத் தகவலைத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகப் பேரா. செ. இராசு அவர்கள் கூறினார்).

இப்படி நிறைய எடுத்துக்காட்டுகள் கூறலாம். மேற்றிராணியார் ஒருவர் சாதி ரீதியாகப் பிரிந்து மாதா கோவிலில் அமரக் கூடாது என உத்திரவிட்டதை எதிர்த்து நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்ட வரலாறு உண்டு. (O. Malley, India's Social Heritage). சிரியன் சர்ச் சாதி அடிப்படையிலேயே ஒருங்கமைக்கப் பட்டிருந்தது எனவும் அறிகிறோம் (அதே நூல்). பார்ப்பனராக இருந்து மதம் மாறிப் பாதிரிகளாக ஆனவர்கள் பறையர்கள் வீட்டுக்குப் போய் செத்துக் கொண்டிருப்பவர்களுக்கு 'அவஸ்தை' கொடுக்க மறுக்கக் கூடாது எனப் போப்பாண்டவர் உத்தரவு போட்ட வரலாறும் உண்டு (அதே நூல்). பாதிரிகளுக்குள்ளும் சாதி வேறுபாடுகள் இருந்தன. குதிரைகள் மீதும் பல்லக்கிலும் பவனி வந்த பார்ப்பனப் பாதிரியைப் பார்த்து கந்தையுடுத்தி, வெறுங்காலுடன் நடந்து சென்ற பறைய சாதிப் பாதிரி தன் மூச்சுக் காற்று படாமல் வாய் மூடி ஒதுங்கி நின்று சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கிய வரலாறுகளும் உண்டு (Rev. W. Sickland & T. W. M, Marshall, Catholic Missions of South India to 1865).

ஆம்! ஒவ்வொரு முறையும் கிறிஸ்தவம் சாதியத்திற்குத் தலை வணங்கியே போனது. மதுரை மேற்றிராணியார், "சாதி வேறுபாடுகள் என்பன கேலிக்குரிய வகையிலும் எள்ளளவும் நியாயத்திற்கு அப்பாற்பட்ட வகையிலும் இங்கு மாதா கோவிலுக்குள் நுழைந்துள்ளது. ஆனால் இந்த நீண்ட காலப் பழக்கத்தை நாம் திடீரென்று ஒழிக்க

முயல்வதென்பது இந்த நாட்டில் ஒரு புரட்சியைத் தூண்டும். நமது மதத்திற்கு நல்லது செய்வதற்குப் பதிலாகத் தீங்கு விளைவிக்கும். காலமும் நேரமும் கைகூடி வரும் வரை நாம் இதைப் பொறுத்துப் போவதே புத்திசாலித் தனம்'' என்கிற கருத்துப்பட 1862இல் எழுதினார் (அதே நூல்)

இந்திய கிறிஸ்தவ மதங்களில் இன்றளவும் வெளிப்படும் சாதி வெறி, காலமும் நேரமும் இன்னும் கைகூடி வரவில்லை என்று அவர்கள் இன்னும் கருதுவதையே காட்டுகிறது. சாதி அடிப்படையில் மதத் தொழுகை மட்டுமின்றி, இடுகாட்டிலும்கூட சாதி வேறுபாடுகள் காப்பாற்றப்படுகின்றன. மூன்றாண்டுகளுக்கு முன்பு திருச்சியில் ஒரு புகழ் பெற்ற கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்ற ஒரு ஆசிரியர் போராட்டம் பற்றிய பேட்டிக் கட்டுரை ஒன்றை எழுதுவதற்காக அந்தக் கல்லூரி முதல்வராகிய ஒரு பாதிரியை நான் சந்தித்த போது இன்னொரு பாதிரியை அவரது சாதியைச் சுட்டிக் காட்டி இழிவாகப் பேசியது என் நினைவிற்கு வருகிறது.

ஆம்! ஒவ்வொரு முறையும் கிறிஸ்தவம் சாதியிடம் தோற்றுத்தான் போனது. தொடக்க கால கிறிஸ்தவப் பாதிரிகளின் சனநாயக உணர்வும் மனிதாபிமானமும் இல்லாத இன்றைய சாதி வெறிபிடித்த கிறிஸ்தவத்திடமும் அதன் கட்டுப்பாட்டிற்குள் இயங்கும் தன்னார்வக் குழுக்களிடமும் தஞ்சம் புகுவதில் எள்ளளவும் பொருளில்லை. சாதி இழிவுகளுக்குத் தீர்வாக மதமாற்றத்தைச் சிபாரிசு செய்வோர் தாகத்திற்குக் கானலைச் சுட்டிக் காட்டுபவர்களே ஆவர்.

தோழர் டானியலின் ''பஞ்சமர்'' பிரக்ஞைபூர்வமாகச் சனநாயக உணர்வுகளுடன் பஞ்சம சாதியைச் சேர்ந்தவர்கள் இயக்க அடிப்படையில் ஒரு திட்டத்துடன் திரண்டெழுந்து சாதி இழிவுகளுக்கெதிராகப் போராடத் தொடங்கிய வரலாற்றைச் சித்திரிக்கும் நவீனமாகத் திகழ்கிறதென்றால் பஞ்சமருக்குப் பின்பு வெளிவந்துள்ள ''கோவிந்

தன்'' ''அடிமைகள்,'' இப்போது வெளிவருகிற ''கானல்'' ஆகியவை வரலாற்று ரீதியாக அரை நில வுடமை முறையில் சனநாயக உணர்வுகளுடன் சாதி இழிவு எதிர்ப்புக்கள் தன்னெழுச்சியாகத் தொடங்கி வளர்ந்த வரலாற்றைச் சித்திரிக்கின்றன. அந்த வகையில் ''கானல்'' இன்றைய மதமாற்ற விவாதச் சூழலில் அதன் அரசியல் முக்கியத்துவத்திலும் கலை நிறைவிலும் தனித் தன்மையுடையதாகத் திகழ்கின்றது.

இந்த நாவலின் முன்னுரையில் தோழர் டானியல் தன் உடல் நிலையை மனதிற் கொண்டு ''இது எனது உடல் வல்லமைக்கு மேற்பட்ட அறுவடை'' என்கிறார். சாதியம் ஓர் சமகாலப் பிரச்சினை என்கிற வகையிலும், புதிய சன நாயகப் புரட்சியின் ஓரங்கமாக சாதி எதிர்ப்பு இலக்கியத் தின் தேவை என்கிற வகையிலும், போகப் போகத் தோழரின் எழுத்துக்களில் அவரது அனுபவ முதிர்ச்சி மகத் தான கலைத் திறனுடன் வெளிப்படுகிறது என்கிற வகை யிலும் தோழரின் உடல் வல்லமைக்கு மேற்பட்ட அறு வடைகள் மேலும் பெருக வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்.

இந்த நாவலின் இறுதியில் 'படகினி'யிடம் கிறிஸ்தவம் தோற்றுப் போவதை உணரும்போது ஞானமுத்துச்சாமி இளையவனுக்குப் பாவசங்கீர்த்தனமும் கொடுக்காமல், அவதாரமும் இடாமல் நிலைத்துப் போகிறார்; கண்கலங்கு கிறார். முன்னுரை எழுதுகிற ஆய்வு நோக்கத்துடன் படித்துக் கொண்டிருக்கும் போதுகூட இந்தக் காட்சியில் ஞானமுத்துச்சாமியுடன் சேர்ந்து நாமும் கண் கலங்குகி றோம். ஆனால் ஞானமுத்துச்சாமி கண்ணீர் விடுவதோடு நிறுத்திக் கொண்டு எழுந்து உத்தரீயம் சூசாக்க அறை வீட்டுக்குள் நுழைகிறார். நாம் அத்தோடு நிறுத்திக் கொள்ளப் போவதுமில்லை; அறை வீட்டுக்குள் ஒடுங்கப் போவதுமில்லை.

ஜனவரி 18, 1985 அ. மார்க்ஸ்
தஞ்சாவூர்–9

## கானலுக்குள்ளே

'கானல்' என்ற இந்த நாவலை நான் எழுதி முடித்த நாள் 1983, 9ம் மாதம் 23ம் திகதியாகும்.

ஏற்கனவே வெளியான எனது 'பஞ்சமர்' நாவலின் இரு பாகங்களும் கொண்ட பதிப்புக்காக 1981ம் ஆண்டு 5ம் மாதமளவில் தஞ்சாவூரில் தங்கி இருந்தேன். அங்கு என்னோடு தொடர்பு கொண்டிருந்த இலக்கிய நண்பர்களும் அரசியல் நண்பர்களும் மிக அதிகம். அப்போது நான் நோய்வாய்ப்பட்டிருந்தமையால் நாளாந்தம் என்னைக் கவனிக்க டாக்டர் மாணவராக இருந்த அனந்தராஜன் என்பவரை எனது நண்பர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். அதன்படி அனந்தராஜன் காலை, மாலை தவறாமல் வந்து போவார். நான் அங்கு தங்கியிருந்த மூன்று மாத காலங்களில் ஒரு பொழுதுதன்னும் அவர் வரவு தவறியதில்லை. இடை இடையே அவரோடு உதவியாக வேதியபுரம் கவிஞர் விஜ்வ நாதனும் வந்து போவதுண்டு.

ஒருநாள் தமிழகத்திலுள்ள முற்போக்கான சிறிய சஞ்சிகைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது "சார், நீங்க 'சிகரம்' இதழுக்கு ஒரு சிறுகதை எழுதித் தாருங்களேன்" என்று அவ்விருவரும் கேட்டனர். அவர்களின் விருப்பத்திற்கு இணங்க ஒரு சிறுகதையினை எழுதி அவர்களிடம் கொடுத்தேன். அவர்களே அதைச் சிகரத்திற்கு அனுப்பிவைத்தனர். அந்த மாதத்திலேயே சிகரம் நின்று விட்டதாக பின்பு அறிந்தேன். அந்தக் கால கட்டத்தில்தான் முன்னமேயே எனது இலக்கிய நண்பர்களான பிரகாஜ், சக்கரவர்த்தி, மோகன், புதுக்கோட்டை கிருஷ்ணமூர்த்தி, டொறத்தி கிருஷ்ணமூர்த்தி ஆகி

யோருடன் புதிய நண்பர்களான மார்க்சு, பொதிய வெற்பன், அறிவுருவோன், அரங்கநாதன், முத்து, வேலு சாமி, மூர்த்தி, மணியரசன், வைகறை வாணன், ரமணி, குமாரசாமி, ரங்கசாமி ஆகியோர்கள் உட்பட இன்னும் பல புதிய நண்பர்களும் தமிழகத்தில் எனக்குக் கிடைத்தனர். அந்த சூழ்நிலையில் சிகரத்திற்கென எழுதப்பட்ட சிறு கதைதான் மனதிலே கிடந்து வளர்ச்சி அடைந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பின் ''கானல்'' என்ற நாவலாக பரிணமித்திருக்கிறது. நான் எனது 'பஞ்சமர்' நாவலின் முன்னுரையில் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அடுத்து வந்த எனது ''கோவிந்தனை'' பஞ்சமர் வரிசைக் கிரமத்தில் ஏற்றுக்கொண்ட வாசகர்கள் அதே வரிசையில் இந்தக் கானலையும் வைத்து மதிப்பீடு செய்வார்கள் என நான் திடமாக நம்புகிறேன்.

எனது இலக்கியக் கோட்பாடுபற்றி நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. சுருங்கச் சொல்லின் வழமை போல ''வர்க்க பேதமற்ற ஒரு சமூகத்தை அடைவதற்கான மனித இனத்தின் யுத்தத்தில் எடுத்தாளப்படும் ஆயுதங்களில் ஒன்றாக கலை இலக்கியங்களும் இருக்க வேண்டும்'' என்பதற்குள்ளேயே அது அடங்கும்.

இதுகாலவரை வெளிவந்த எனது நாவல்களின் மூலம் வாசகர்களுக்கு முன்னால் கொண்டுவரப்பட்ட கிராமங்களில் ஒன்றாகவே நான் பிறந்த சின்னஞ் சிறிய கிராமமும் உள்ளடங்கி நின்றது. இந்த நாவலிலோ களமாக அமைந்திருப்பது நான் பிறந்து வாழ்ந்த கிராமமும், அதை அண்மித்த பகுதிகளுமேயாகும். இதில் நடமாடும் கதாமாந்தர்கள் சகலருமே என் கண்முன்னே வாழ்ந்தவர்கள். இதில் சிலர் இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். இந்த நாவலுக்குள்ளே அடங்கியுள்ள சம்பவங்களோ அத்தனையும் உண்மையானவை.

மொழி, பழக்கவழக்கம் உட்பட பலவிதஙகளிலும் இரு வேறுபட்ட பிரிவுகளை ஒரே மையக் கருத்துள் படிப்பதென்பது வாசகர்களுக்குச் சற்றுக் கடினமானதுதான்.

ஆயினும் என்ன செய்யலாம்: இந்த நாவலுக்கு நான் எடுத்துக் கொண்ட கருப்பொருள் அப்படி!

பரம்பரை பரம்பரையாக சைவ மதத்தையே தழுவி வந்த ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிவினர், இடைக்காலத்தில் கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றியதன் மூலம் தங்கள் அவல வாழ்வை விடுவிக்க எத்தனித்தனர். இந்த எத்தனிப்பினால் ஏற்பட்ட பலாபலன்களைச் சித்தரிப்பதுதான் இந்த நாவல். அதனால் சைவ மதச் சம்பிரதாயங்களுக்கு உட்பட்ட வாழ்க்கை முறைகளையும், பேச்சு வழக்குகளையும் அதேவேளை கிறிஸ்தவ மத சம்பிரதாயங்களுக்கு உட்பட்ட வாழ்க்கை முறைகளையும், பேச்சு வழக்குகளையும் ஒரே நூலில் இடம் பெறச் செய்வது அவசியமாகியது. வாசகர்களுக்கான பிரச்சனைகளை மனதில் கொண்டு ஓரளவு இலகுபடுத்துவதற்காக இரண்டு பாகங்களாகவே நாவலைப் பூர்த்தி செய்திருக்கிறேன்.

கிறிஸ்தவ மத சார்புடையவர்களின் பேச்சுக்கள்ப் வார்த்தை அமைப்புக்கள், ஓசை அமைப்புக்குட்பட்தி அர்த்தங்கள், ஆகியவை அவர்களின் செபங்களின் பிரதி பலிப்பாகப் பிறந்தவைகளே! முதலில் அவைகளைற் புரிந்துகொள்வது கிறிஸ்தவ வாடையே படாத கிராமப்புற வாசகர்களுக்குக் கடினமாக இருப்பினும் போகப் போக அவையே அவையானவையாகவும் ஆகிவிடும். தமிழகத்து வாசகர்களுக்கு இது அவ்வளவு கடினமாகவே இருக்கமாட்டாது. ஏனெனில் ஏற்கனவே கிறிஸ்தவ மத வார்த்தைப் பிரயோகங்கள் உள்ளதும், கடல் பிரதேசங்களைக் களமாகக் கொண்டதுமான பல நாவல்கள் தமிழகத்தில் பிறந்திருக்கின்றன. இலங்கையில் தமிழில் இப்படிப்பட்ட நாவல்கள் மிகச் சிலவே வெளிவந்துள்ளன. ஏற்கனவே முற்று முழுதாக கடல்புற மக்களின் வாழ்க்கையை அவர்களின் பேச்சு வழக்கிலேயே என்னால் எழுதப்பட்ட ''போராளிகள் காத்திருக்கின்றனர்'' என்ற நாவல் வெளிவந்தபோது பல பகுதிகளில் உள்ள கடல்

பிரதேச மக்கள் தங்கள் வாழ்க்கையை தாங்களே படிப்பது போன்ற உணர்வு பெற்று பல பாராட்டுக் கட்டங்களை வைத்து என்னை உற்சாகப்படுத்தியது பத்து வருடத்திற்கு முற்பட்டதாயினும், அதனால் ஏற்பட்ட தன்நம்பிக்கையோடு மறுபடியும் கிறிஸ்தவ நாகரீகத்திற்கு இந்த நாவலின் பாதிப் பகுதியை உட்படுத்தியிருக்கிறேன். ஆயினும் வாசகர்களுக்குச் சிக்கல் தருவதை மேலும் தவிர்க்கும் நோக்கோடு முன் கூட்டியே இந்த நாவலில் இருந்தே இரு சிறு உதராணங்களைச் சுட்டிக் காட்டுவது அவசியமாகிறது.

'இளையவன்' என்று இதிலே ஒரு பாத்திரம் வருகிறது. அந்தப் பாத்திரம் கிறிஸ்தவனாக மாறியவுடன் அவன் பெயர் முடியப்புவாக மாறுகிறது. நாவலின் பாதி வரை இளையவனாக வந்த அந்தப் பாத்திரம் முடியப்புவாக மாறியவுடன் அவனை முடியப்புவாக வாசகர்களின் மனதிலே இருக்க வைப்பது இலேசான காரியமாக எனக்குத் தெரியவில்லை. அதனால் பல சந்தர்ப்பங்களில் ஆசிரியனாக நின்று நாவலை நகர்த்தும்போது இளையவனை 'இளையவன்' என்று சொல்ல வேண்டியதும், கிறிஸ்தவ பாத்திரங்கள் அவனைச் சந்திக்கும்போது முடிந்தவரை அவனைத் 'தம்பி' என்றே சொல்ல வைக்க வேண்டியதும், பிற பாத்திரங்கள் அவனைச் சந்திக்கும் போது 'இளையவன்' என்றே பேச வைப்பதுவும், குருவானவர் அவனுடன் பேசும் சந்தர்ப்பங்களில் பொதுவில் அவனைப் 'பிள்ளாய்!' என்று அழைக்க வைத்திருப்பதும் இதேபோல கத்தோலிக்கப் பாதிரியாரை சுவாமி என்றும், குருவானவர் என்றும் ஆண்டவரே என்றும், தேவரீர் என்றும் அழைப்பது வெவ்வேறு இடங்களுக்கேற்ற மரபாகிவிட்டது. அதனால் மேற்படி சொற்பிரயோகங்களைக் கையாண்டிருப்பதுமாகும்.

இந்த நாவல் பிறப்பதற்கு முன் 'அடிமைகள்' என்ற நாவலை எழுதி முடித்தேன். அந்நாவலை தமிழகத்தைச் சேர்ந்த ''தோழமை'' வெளியீட்டாளர்களே வெளியிட்டனர்.

அந்த நாவல் முடியும் தறுவாயில் இருந்தபோதே அந்த நாவலுக்கான முன்னுரையினையும் எழுத வேண்டிய தாயிற்று. காரணம், அவ்வேளை நான் சுகயீனமான நிலையிலேயே இருந்தமையால் என்னில் எனக்கே நம்பிக்கை அற்று இருந்தமைதான். அதன் பின்பு அதை யும் பூர்த்தி செய்து எனது உடலுக்கு எந்தவித விக்கினமும் இல்லாத நிலையில் இந்த நாவலையும் எழுதி முடித்துவிட் டேன். 'இது எனது உடல் வல்லமைக்கு மேற்பட்ட அறு வடை' என்றே நம்புகிறேன்.

நாவல் என்பது ஒரு கதை என்றும் அதற்குத் தலை மகன், தலைமகள் இருக்கவேண்டுமென்றும், அந்தத் தலைவன் தலைவியைச் சுற்றிச் சுழன்றே சம்பவங்களும், ஏனைய பாத்திரங்களும் வரவேண்டுமென்றும், தொடக்கம் உச்சம், முடிவு என்ற விதத்தில் உருவம் அமைக்க வேண்டு மென்றும் இலக்கணம் கூறப்பட்டு வந்தது. நாளடைவில் இதுவே மரபாகிவிட்டது. இந்த மரபினை ஏற்று கொள்ளாதவன் நான். எனது முன்னைய நாவல்களில் இந்த மரபு குறிப்பிட்ட அளவு மீறப்பட்டுள்ளது. இந்த நாவலிலோ அது முற்று முழுதாக மீறப்பட்டுள்ளது.

ஒரு சமூக அமைப்பின் கட்டுக் கோப்புகளில் இருந்து விடுபட்டு வேறோர் சமூக அமைப்பை நோக்கி செல்லும் மக்களிடையேயும், முந்திய சமூக அமைப்பின் நிலை கொண்டு அதையே தங்களது சுகவாழ்வுக்கு நிரந்தரமாக்க முற்படுபவர்களிடையேயும் உள்ள முரண்பாடுகளையும் கருவூலமாகக் கொள்ளப் பட்ட ஒரு சிருட்டிப்பை, ஒரு 'தலைவன், தலைவி என்ற வரம்புக்குள் அடக்கி விடு வதும், தொடக்கம், உச்சம், முடிவு என்ற உருவத்தினால் போர்த்துவிடுவதும் இயல்புக்குப் புறம்பானதாகும். இந்த சிருட்டிக்குள் நடக்கும் முரண்பாட்டு யுத்தத்தில் தனி ஒரு வர் முதன்மைப்படுத்தப்படாமல் இருவேறு அமைப்புகளை யும் விரும்பும் பிரதிநிதிகள் சகலருமே முதன்மைப்படுத்தப் படுகின்றனர்.

இதன் அடிப்படையில் இந்த நாவலில் ஒரு தலைவன் தலைவியையோ, குறிப்பிட்ட ஒரு உருவத்தையோ நீங்கள் பார்க்கமாட்டீர்கள். இந்த நாவலில் நான் உலாவ விட்ட சமூக அமைப்புப் பிரதிநிதிகளே என்னால் கற்பிக்கப்பட்ட கருப்பொருளை முதன்மைப்படுத்தும் விதத்தில், தாங்க ளாகவே ஒரு உருவத்தினை அமைக்கச் சுதந்திரமாகவே விட்டுவிட்டேன். இதே கருத்துக்களைச் சொல்லிக் கொண்டு மக்களால் இலகுவில் புரிந்து கொள்ள முடியாத பல நாவல்களை பல நாவல் ஆசிரியர்கள் பிறப்பித்துள்ள னர். இந்தச் சித்து விளையாட்டினை நான் செய்யவில்லை எந்த மயக்க நிலைக்கும் வாசகனைக் கொண்டு போவது எனது நோக்கமல்ல. 'கானல்' என்ற இந்த நாவல் எனது இலக்கிய நோக்குக்கு அமைய சாதாரண வாசகனா லும் கருப்பொருளையும் ஏனையவற்றையும் மகிழ்வோடு புரிந்து அனுபவிக்கக்கூடிய விதத்திலேயே பிறப்பிக்கப் ட்டுள்ளது என்பதனை நான் இங்கு துணிந்து கூறுவேன்.

இந்த நாவலில் வரும் பாத்திரங்கள் ஒவ்வொன்றுமே எடுத்துக் கொள்ளப்பட்ட கருவூலத்திற்கு தேவையான வற்றையே செய்துவிட்டு இடை இடையே நின்று போய் விடுகின்றன. கதையை நகர்த்திச் செல்லும் நோக்குடன் அவைகள் கொண்டுவரப்பட்டவையல்ல. இயல்பான நடை முறைகளை வெளிக்கொண்டு வருவதற்கே அவைகள் வருகின்றன; போகின்றன.

'நெஞ்சுக் சுப்பன்' என்ற ஒரு பாத்திரம் வருகிறது. சுப்பன் சின்ன வயதாக இருக்கும்போது அவன் கிராமத் தில் மிகப் பிரசித்தி பெற்றவரான ''குமாரசாமிப் புலவர்'' என்பவர். அப்பிரசித்தி பெறுவதற்கு முன் திண்ணைப் பாடசாலை ஒன்றை நடத்தினார். அந்தக் காலத்தில் தாழ்ந்த சாதிக்காரர்கள் படிக்கக்கூடாது என்பது விதி. திண்ணைப் பாடசாலை நடக்கும் இடத்துத் தாழ்வாரத்தில் இருந்து சட்டம்பியாரால் சொல்லிக் கொடுக்கப்படும் மகா பாரதப் பாடத்தைக் கிரகித்துக் கொள்கிறான் சுப்பன். சட்டம்பியாரினால் திண்ணைப் பள்ளியில் இருந்து படித்

தவர்கள் மாறிப்போக வயதான காலம் வரை மகாபாரதக் கதைகளில் இருந்தே உதாரணங்களைக் காட்டி மற்றவர் களை உற்சாகப்படுத்துகிறான் சுப்பன். இந்த சமூகப் போராட்டத்தில் அவனின் பங்கு அவ்வளவுதான். இது கானலில் அவனின் பங்கு.

பாதிரியார் ஒருவர் வருகிறார். போலியான துறவி யல்ல. ''மனித இனத்தை பாவங்களில் இருந்து மீட்டெடுத்து மோட்ச இராச்சியத்தில் சேர்த்து விடுவது அவ்வளவு கடினமான வேலையல்ல'' என்ற தன்னம்பிக் கையோடு செயல்படுபவர். இறுதியில் வயிற்றிலே பசி என்ற நெருப்பைக் கட்டிக் கொண்டிருக்கும் மனிதனிடம் அவர் தோற்றுப் போகிறார். அவர் தோற்றுப்போவது வரை கண்டவைகள் எல்லாம் வெறும் 'கானல்' தான் கானலில் அவரின் பங்களிப்பு இது.

'பூக்கண்டர்' என்ற ஒருவர் வருகிறார். உயர் சாதி யைச் சேர்ந்த வறுமைப்பட்ட ஒரு வயதான விவசாயியா கவே அவர் வருகிறார். அவரிடம் சாதி உணர்வைவிட வர்க்க உணர்வு மேலோங்கி நிற்கிறது. அப்போதைக்கப் போது வருகிறார்; பொதுவான மனித நீதிகளை மனம் திறந்து சொல்கிறார்; போய்விடுகிறார். கானலுக்கு அவர் பங்கு அப்படி.

'வெள்ளச்சி அம்மாள்' என்ற உயர்ஜாதி கலப்புப் பெண் ஒருத்தி வருகிறாள். சாதிவெறி தலைக்கேறிய கண வனுக்கு உபதேசம் செய்கிறாள்; பின் கணவனால் அடித்துக் கொல்லப்படுகிறாள். கானலுக்கு அவள் பங்கு அது.

'தம்பாப்பாப்பிள்ளையர்' என்ற ஒருவர் வருகிறார். ஆடாத ஆட்டமெல்லாம் ஆடுகிறார். உலகெலாம் தன்னு டையது என்று இறுமாப்படைகிறார். கடைசியில் புத்தி சொன்ன தம் மனைவியைக் கொன்றுவிட்டு சிறைக்குப் போகிறார். கானலுக்கு அவர் பகுதி அவ்வளவுதான்!

இப்படி இதில் வரும் ஒவ்வொருவருமே தங்கள் தங்கள் வர்க்க நலன்களுக்கேற்ப பங்கெடுக்கின்றனர். 'கானல்' பிறந்து விட்டது.

பழைய வடிவத்துக்குள்ளே புதிய கருத்துக்களை அடக்குதல், புதிய வடிவத்துக்குள்ளே பழையதுகளை அடக்குதல், வடிவத்திற்காகவே கருப்பொருளை வலிந்து அமைத்தல், கருப்பொருளுக்காகவே வடிவத்தை அமைத்தல் இப்படி இலக்கியப் பிறப்புகள் பலவகைப்படும். இவைகளில் இயல்புக்கு மீறாத வடிவமும், அந்த வடிவத்துக்குள்ளே தேவைப்பட்ட கருப்பொருளும் இடம் பிடித்துவிடுமெனில் அதுவே சிறப்பான இலக்கியப் பிறப்பாகும். இதற்கு மாறாக புதிய வடிவங்களை மட்டும் மனதில் உருவகித்துக் கொண்டு அந்த வடிவத்துக்குள்ளே தேவையற்றதும் பரிணாம வளர்ச்சியை மறுப்பதுமான இருப்பியல் வாதத்தை நிலை கொள்ள வைக்க வார்த்தை ஜால மகுடி வித்தைகாட்டி, வாசகனைத் தலை சுழல வைக்கும் புதிய வடிவவாதிகளிடமிருந்து நான் வேறுபட்டு நிற்கிறேன். நான் புதிய வடிவம் என்று ஆக்கிக் கொண்டதெல்லாம் சமூக வாழ்க்கையின் இயல்பான நடைமுறைகளையே!

சமீபத்தில் தன்மீது ஒரு குற்றச் சாட்டுச் சுமத்தப்பட்டிருகிறது, சமகாலப் பிரச்சனைகளைத் தட்டிக் கழிக்கிறேன் என்று.

இந்தக் குற்றச் சாட்டுகளைக் கூறுபவர்கள் 'சமகாலம் என்பதற்கு என்ன இலக்கணம் வகுத்துக் கொண்டிருக்கிறார்களோ தெரியவில்லை! இன்றுவரை நடைமுறையில் இருக்கும் பிரச்சனைகளை இவர்கள் இறந்தகாலப் பிரச்சனைகள் என்று சொல்கிறார்களா? என்னுடைய நாவல்களிலெல்லாம் இற்றைக்கு முற்பட்ட ஒவ்வொருகாலகட்ட நிகழ்வுகளையும், அன்றன்று இருந்ததாகக் கூறப்படும் மனிதர் களையும்தான் கொண்டு வந்திருக்கிறேன்.

சம்பவங்கள் நடந்ததாகச் சிருட்டிக்கப்படும் காலம் நீண்டதா, குறுகியதானதா என்பதல்லக் கேள்வி. அந்தச்

சம்பவங்களுக்கு வித்தான அமைப்பு முறை இன்னும் இருக்கிறதா? இல்லையா?என்பதில்தான் அது தங்கியிருக்கிறது.

இந்தக் கானலிலே வரும் ஞானமுத்துக் குருவானவரே என்னுடைய அறிவறிந்த கால எல்லைக்குட்பட்டவர்ர் பெயர் மட்டுமே 'ஞானப்பிரகாசர்' என்பதற்குப் பதில் ஞானமுத்தராக இருக்கிறது. 'சுப்பர்' அதேபோல அல்லாமல் சுப்பராகவே வருகிறார். இவர்கள் இருவருடனும் நான் பேசியிருக்கிறேன்; நெருங்கிப் பழகியிருக்கிறேன். கிர்க்கித்திருக்கிறேன் இதைக் கொண்டு "எனது வயதுக்குட்பட்டவைகளையே சமகாலம் என்று நான் கருதுகிறன்" என்றுகூட நான் தர்க்கம் செய்யலாம். ஆனால் அதுவல்லப் பிரச்சினை. இந்தக் கால இடைவெளிக்குள் சுற்றியிருந்த ஒடுக்கு முறைகள் காலாவதியாகி விட்டனவா? என்பதுதான்.

இந்தப் பாதிரியார் நான் நாவலில் காட்டிய அத்தனை அம்சங்களையும் உடையவர். அவருடைய காலகட்டத்தின் பங்களிப்பு அந்தக் கால கட்டத்தோடு ஒப்பிட்டு முதன்பமைப்படுத்தப்பட வேண்டியதே! சற்றேனும் அவரை களங்கப்படுத்தக் கூடாது என்பதற்காக தனிமனிதனான இவரின் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் அன்றிலிருந்து அன்றுவரை பொதுமைப் படுத்தப்பட்டிருக்கும் "பசி, பட்டினி, பஞ்சம்"என்பவைகளை அவரால் தனித்து இன்று வென்றுவிட முடியும்; அல்லது முடிந்தது" என்று எழுதி வைப்பது வெறும் போலியானதாகவே அமையும். நின்றுவரை அந்தப் பசி, பட்டினி, பஞ்சம் ஆகியவை தீரவில்லை. இவை சமகாலப் பிரச்சினைகளே! சாதி அமைப்பு முறையும் அதற்கு உட்பட்டதே!

இதே போன்றுதான் கதாபாத்திர மாந்தர்களும் சற்றுச் சற்று மாறுபட்ட பெயர்களுடன் வந்து போகின்றனர். நான் முன்பு குறிப்பிட்டதுபோல இன்னும் சிலர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எந்த விதத்தில் பார்த்தாலும் கூட இதுவும், இதற்கு முன்பு என்னால் எழுதப்

பட்ட நான்கு நூல்களும் சமகாலப் பிரச்சனைகளையே சொல்லி நிற்பவைகளேயாகும்.

முடிவில் எனது இலக்கிய நோக்கில் இருந்து சற்றும் விலகாத இந்தக் 'கானல்' என்ற நாவலை அச்சேற்ற முன்வந்த "தோழமை" பதிப்பகத்தாருக்கும், இதைப் பதிப்பிக்க சகல விதத்திலும் ஒத்தாசை புரியும்—புரிந்த நண்பர்களுக்கும், எனது நண்பர்களுக்கும் எனது நன்றிகளைச் சொல்லிக் கொள்கிறேன்.

கே. டானியல்

76/2, கோவில் வீதி, 22-09-1983.

யாழ்ப்பாணம்,

இலங்கை.

# பாகம்

# ஒன்று

"என்ன தம்பியவை இப்பிடிச் சொல்லாமல் கொள்ளாமல் மூண்டு பேரும் வந்திருக்கிறியள்...? இருங்கோ, இப்படி ஒட்டிலை இருங்கோ, சரியான வெய்யில் கொளுத்துது களைச்சுப் போய் வாறியள்.''

என்று முகமன் கூறிக்கொண்டே, நன்னியன் அந்த சிறிய குடிசைக்குள் தலை முகட்டில் முட்டாத அளவுக்குக் குனிந்து, அன்று காலைதான் முள் முருக்கமிலைச்சாறு கலந்து சாணி மெழுக்குச் செய்து விட்டிருந்த சிறு திண்ணையை கைத்துண்டினால் துடைத்துவிட்டான்.

''அதிலை ஊத்தை ஒண்டும் இல்லையண்ணை போதும் விடணை நாங்கள் இருக்கிறம்'' என்று வந்தவர்களில் மூத்தவனான ஒருவன் கூறவே மூவரும் ஒட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டனர்.

''எடி மோனை, எடிபொடிச்சி! கோத்தை உள்ளுக்கு இல்லையேடி, எப்பன் தண்ணி வையுங்கோடி, கோத்தையை இஞ்சாலை ஒருக்கா வரக்காட்டுங்கோடி வந்திருக்கிறவை ஆரெண்டு பாக்கெட்டுக்கு! அவளுக்கும் ஏலாதடா தம்பியவை; நாலாம் நாள் செக்கலுக்கை தொட்டில்லை மாட்டுக்குப் புல்லு போடப் போனவள், மாடு முட்டி விழுத்திப் போட்டுது. ரெண்டு நாளா நாரிக்கை புடிக்குதெண்டு கிடந்தவள் ஒட்டகப்புலத்தாண்ரை எண்ணை ஒண்டு செல்லப்பாப் பரியாரி வாங்கி விக்கிறவர் பேரப்பொடியனை விட்டு காப்பணத்துக்கு வாங்கி உரஞ்சி விட்டனான். கொஞ்சம் சுகமாக் கிடக்கெண்டு சொல்லிப் போட்டுக் கிடந்தவள்... பாவி உறங்கி விட்டாள் போலை கிடக்கு''

என்று நீட்டி முடக்கிக் கொண்டே நன்னியன் கூறி முடிப்பதற்கிடையில் செல்லி அடிக் குடிலுக்குள் இருந்து வெளியே வந்துவிட்டாள்.

''ஆரது? கண்ணும் மங்கிப் போச்சடா பொடியள்; மூண்டு பேர் இருக்கிறியள்; ஆக்களை மட்டுக்கட்ட முடியேல்லை!''

கண்களுக்கு மேல் கரத்தை வைத்துக் கொண்டே செல்லி வந்தவர்களை அனுமானிக்க முயன்றாள். உடம்பின் கீழ்ப்பகுதியை நிறையச் சுற்றி முன்தானைத் தலைப்பை கழுத்தில் கட்டப்பட்டிருந்த உருண்டைக் கயிற்றில் மாட்டி முடிச்சுப் போட்டுக் கொண்டே உடம்பை நிமிர்த்தவும் அவள் தலை முகட்டைத் தொடவும், மட்டு மட்டாக இருந்தது.

''அது நாங்கள் தானனை அக்கா! நன்னி அண்ணை யோடை கதைக்க வந்தனாங்கள்.''

''நாங்களெண்டு...?''

''திண்ணவேலிக்கு அங்காலை வேதக் கோயிலடியார்! நான் உங்கடை புல்லுக்காறச் சுப்பன்ரை இளையமோன், மற்றது கறுத்தாற்றை வைரவன்; இப்ப சிமியோன் எண்டு தான் வேதப் பேர். மற்றப் பொடியனை உங்களுக்குச் சொன்னாலும் விளங்காது. குழவங்காதுப் பொடியன்.''

புல்லுக்காறச் சுப்பன்ரை மோன் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டவன் மற்றவர்களைச் சுருக்கமாக அறிமுகப்படுத்திக் கொண்டான். செல்லி இதற்கிடையில் தரையில் அமர்ந்து கொண்டாள்.

''எட, நானும் இப்பான் மட்டுப் புடிச்சன். எங்கடை சுப்பன்ரை மோன்! எங்கடை துடக்குருத்துப் பொடியன்!

ஏன் மற்றவனும் என்ன துலையே... கறுத்தான் என்ரை மனிசிக்குக் கிட்டடிச் சொந்தக்காறனெல்லே! சரி, சரி என்ன இஞ்சாலைப் பக்கம்?''

நன்னியன் எடுத்த எடுப்பிலேயே வந்த காரியத்தை அறியக் கேள்வியைக் கேட்டுவிட்டான்.

''எட மோனை, சுப்பனும் குடும்பத்தோடை வேதத்திலை சேந்து போட்டானெண்டு கேள்விப்பட்டம்; உன்ரை வேதப் பேர் என்னடா மோனை?'' செல்லி குறுக்கிட்டுக் கேட்டாள்.

''என்ரை பேர் ராயப்பு எண்டுதான் சுவாமி ஞானஸ்னானக் கொப்பியிலை பதிஞ்சிருக்கிறார். அவர் கூப்பிடேக்கை ''ராயப்பு'' எண்டுதான் கூப்பிடுகிறவர். ஊரிலை ராயப்பு எண்டால் லேசிலை தெரியாது. 'சங்கிலித்தாம்' எண்டாத்தான் தெரியும்.''

''உதென்ன... சங்கிலித்தாமோ! உந்தப் பேர் ஆரடா மோனை வெச்சது; கொப்பனோ... நல்ல பேர் வைச்சிட்டான்!''

அக்கையின் அந்தப் பேச்சுக்கு அவன் சற்று விரிவாக பதில் சொல்ல வேண்டியதாயிற்று.

''கோயில் கட்டின மூட்டத்திலை சாமியவையின்ரை முறைப்படி, மூப்பன்; சங்கிலித்தாம்; உபதேசி எண்டு மூண்டு பேருக்கு பேர் வைக்க வேணுமாம். ஊரவை எல்லாம் சேந்து என்னைச் 'சங்கிலித்தாம்' எண்டு சொல்லிப் போட்டினம். இவன் சிமியோன்ரை தேப்பனை மூப்பன் எண்டு சொல்லிப் போட்டினம். உபதேசி எண்டு சாமியோடை உதவிக்கு நிக்கிற சந்தியாம்பிள்ளைக்கு வைச்சிட்டினம்.''

சங்கிலித்தாம் ராயப்பன் இந்த விருத்தாந்தத்தை சொல்லி முடிப்பதற்கிடையில் மூன்று செருக்கின சிரட்டையில் கோப்பித் தண்ணியும் மூன்று சிறிய பனங்கட்டிக் குட்டான்களும் வந்து சேர்ந்தன. ஒரு சிறிய பெண் குறுக்குக் கட்டியவள், அதைக் கொண்டு வந்து வைத்தாள். அவள் நன்னியனுக்குப் பேத்தியாக இருக்க வேண்டுமென்ற யோசினையோடு,

''இது ஆரண்ணை...பேத்தியே?'' என்று சங்கிலித்தாம் கேட்டு விட்டான்.

''என்னடா மோனை அந்தாளைப் பகிடிபண்ணிறாய் போலை கிடக்கு? அவள் என்ரை கடைக்குட்டி!'' என்றாள் செல்லி. சங்கிலித்தாமுக்கு வாய் அடைத்துப் போயிற்று. போயும் போயும் அந்தக் குறுக்குக் கட்டுச் சின்னப் பெண்ணுக்கு வயசு பதினைந்துக்கு மேல் இருக்காது!

அந்த வெட்டை வெளியில் ஒரு மரந்தடி அற்ற கலட்டிப் பூமிக்குள் கொளுத்திய வெய்யில் அனல் காற்றாகி வீசியது. இடைஇடையே இலேசான சுழல் காற்று வீசி ஆங்காங்கே கற்களின் இடுக்குகளில் ஒளிந்திருந்த செம்புழுதிகளை அள்ளித் தெளித்துக் கொண்டே இருந்தது.

கண்ணுக் கெட்டியதாக—அங்கொன்றும் இங்கொன்றுமாக நான்கைந்து குடில்கள் தெரிந்தன. கானல் வெய்யிலில் அவைகள் வெந்து கொண்டிருந்தன. அவைகளுக் கப்பால் பச்சை நிறமான தோட்டப் பரப்புகள் இலேசாகத் தெரிந்தன.

''நன்னியண்ணை, இப்ப நாங்கள் வந்தது ஒரு வேதக் கோயில் இங்கினேக்கை கட்டிறதுக்கு உங்களோடை யோசிப்பம் எண்டு. என்ன செய்வம்?''

வந்த காரியத்தை மிகவும் இதமாகவே சங்கிலித்தாம் ராயப்பன் போட்டு விட்டான்.

''என்னடா மோனை வேதக் கோயில் கட்டிறதுக்கோ? உங்கடை ஊருக்கை பத்து வருஷத்துக்கு முந்தி வேதக் கோயில் கட்டி நீங்கள் பட்டபாட்டை அதுக்கிடையிலை மறந்திட்டியள் என்ன? நயினாரவை உங்களையெல்லாம் வளவுக்கிளாலை குடியெழுப்பினவை! வீடுகளுக்கு நெருப்பு வச்சவை; தோட்டம் துரவுக்கை இறங்க விட மாட்டனெண்டவை? இப்பதான் ஒரு மாதிரிக் கிடக்கு. அந்த நேரத்திலை கொஞ்ச நஞ்சமே நடந்தது? சும்மா உந்தக் கதையை விட்டிட்டு வேறை ஏதும் இருந்தாக் கதையடாமோனை; எங்களை இரை குடுக்காதை!'' நன்னியன் ஒரே மூச்சில் பேசி முடித்து விட்டான்.

சற்று வேளை யாரும் பேசவில்லை.

செல்லி வெற்றிலை உரலை எடுத்து அதற்குள் வெற்றிலை பாக்கைப் போட்டு துவைத்துக் கொண்டிருந்தாள். குடிலின் உட்புறம் அடுப்பு எரிந்து கொண்டிருந்தது. அந்தக் குறுக்குக் கட்டுக்காறச் சிறு பெண்ணும் சற்று வயசான வேறொரு வயிறு பெருத்த கூறுக்குக் கட்டுக் காரியும் அடுப்போடும் புகையோடும் மல்லாடிக் கொண்டிருந்தது நன்றாகத் தெரிந்தது.

''எட பொடியள்! இந்தச் சின்னக் கலட்டிக்கை எண்ணிப் பார்த்தாலும் ஒரு பதினைஞ்சு குடி மட்டிலும் தான் இருக்கிறம். எல்லாரும் அவங்கடை காணிக்கைதான் இருக்கிறம்! வயித்துப் பிச்சைக்கும் அவிங்களிட்டைதான் கை நீட்டிறம்! எங்கடை செத்த வீடு, கலியாண வீடுகளுக்கும் அவங்கள்தான் செலவழிக்கிறாங்கள்! எங்கடை பிள்ளை குட்டியளும் அவங்கடை வீடுகளிலைதான் குடிமை செய்து சீவிக்குதுகள்! ஏன் உவள் இளையவள் புத்தி தெரிஞ்ச நாளையிலை இருந்து நயினார் வீட்டிலைதான் திண்டு படுத்தவள்; தொட்டாட்டு வேலை செய்தவள்; ஒரு பிழை நடந்ததிலையெல்லோ...''

செல்லியை பேசி முடிக்க நன்னியன் விடவில்லை. ''உதுகளை ஏனெணை இப்ப?'' என்றவன் மிகுதிக் கதையையும் சொல்ல விடாமல் தடுத்து விட்டான்.

சங்கிலித்தாமுக்கு ஏதோ விளங்கி விட்டது. அதை அறிய அவன் தெண்டிக்கவில்லை. கதையை தானாகவே மாற்றி விட்டான். அது அவனுக்குச் சந்தர்ப்பமாகவும் இருந்தது.

''உதுகள் எல்லாத்துக்குமாகத்தான் கோயில் கட்டினால் சாமியார் உதவி செய்வார் எண்டிறம்; அவைதான் இந்த உலகத்திலை கன இடங்களை ஆளுகினம். எங்கடை ஊரையும் அவை நினைச்சா என்னவும் செய்யலாம்; பிள்ளையளையும் படிப்பீக்கலாம்; பள்ளிக்குடம் ஏதும் கட்டலாம் இப்ப பாக்கேல்லையே எங்கடை ஊருக்கை பள்ளிக்குடம் கட்டிப் போட்டினம்! அதுதான்... எல்லாத்தையும் யோசிச்சுப் பாருங்கோ. வாற நாயிற்றுக்கிழமை குருவானவர் கோயிலுக்கு வருவார். அவற்றை வில்லுவண்டிலிலை இஞ்சாலும் ஒருக்காக் கூட்டிக் கொண்டு வாறம். அப்ப...நாங்கள் போட்டு வாறம் அண்ணை!'' என்று கூறிக் கொண்டே சங்கிலித்தாம் எழுந்திருந்தான்.

"என்ன நன்னியன் வேதக் கோயில் கட்டப் போறி ளயாம், நேற்று ஆரோ வந்திட்டுப் போனவங்களாம்?" என்று கேட்டுக் கொண்டே நன்னியன் கொத்திக் கொண் டிருந்த தோட்ட வரம்பால் நடந்து வந்து கொண்டி ருந்தார் தம்பாப்பிள்ளையர்.

''ஆராக்கும் உந்தக் கதை சொன்னதாக்கும், அப்பிடி ஒண்டும் இல்லையாக்கும்!'' என்று நன்னியன் சற்று விக்கித் தக்கிக் கொண்டே பதில் சொல்லிவிட்டு வெய்யிலுக்காகக் கட்டியிருந்த தலைத் துண்டை கழற்றிக் கையில் வைத்து சற்றுப் பின் வாங்கினான். மண்வெட்டி அவன் கையில் இருந்து கொத்தி இழுத்த மண்ணுடன் சரிந்து கொண்டது.

''இல்லையடா நன்னியன் எங்கடை கடவுள் வேறை; அவங்கடை கடவுள் வேறை எண்டு நினைச்சுப் போடா தையுங்கோடா! எல்லாக் கடவுளும் ஒரு இடத்துக்குத்தான் ஆக்களைக் கொண்டு போறவை. எண்டாலும் எங்கடை கடவுளுகள் தமிழ்க் கடவுளுகள்! எங்களை எங்கடை கடவு ளுக்குத்தான் நல்லாத் தெரியும். இஞ்சை நன்னியன் நான் சொல்லிப் போட்டன் ஏதெண்டாலும் இடக்கு முடக்கா நடந்தியளெண்டா எங்கடை பொடியள் பேந்து என்ரை சொல்லைக்கூடக் கேக்காங்கள்!'' இதற்கு மேல் தம்பாப் பிள்ளையர் ஒன்றும் பேசவில்லை; நெடு வரம்பில் நடந்து கொண்டிருந்தார். பொழுது உச்சியை நோக்கி நகர்ந்தது.

தம்பாப்பிள்ளையர் போன திக்கையே பார்த்துக் கொண்டு நாரிக்குக் கை கொடுத்து உளைவெடுத்தான் நன்னியன்.

சற்றுத் தூரம் போன தம்பாப்பிள்ளையர் மறுபடியும் அவனை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

''என்ன சொல்லுறதுக்கு அறுவான் வாறானோ....'' என்று மனதிற்குள் கூறிக்கொண்டே நன்னியன் சிலையாக நின்றான்.

''எட நன்னியன் வேறையுமொண்டு கேக்க வந்த னான்ரா மறந்து போனன்; வயதும் போக ஞாபக மறதியு மெல்லே வருகுது! ஏன்ரா நன்னியன் உன்ரை இளைய வளை அவள் தங்கச்சி வீட்டிலை இருந்து கூட்டிக்கொண்டு வந்திட்டியாம்? அவள் ஒம்பது பத்து வருஷமா எல்லேடா அவளை பாத்து மேச்சவள். அவள் வீட்டிலை இல்லையாம்; கோயிலுக்குப் போன நேரம் அவக்கெண்டு ஒண்டும் சொல் லாமை கூட்டிக் கொண்டு வந்திட்டியாம்; ...ஏனடா அப் பிடிச் செய்தனீ? ஏதெண்டாலும் சரி பிழை நடந்திருந்தா தங்கச்சியட்டை சொல்லிப்போட்டெல்லே கூட்டியந்திருக்க வேணும்! சரி அது வேண்டாம்; என்னட்டையெண்டாலும் ஒரு சொல்லுக் கேட்டியே? உனக்கும் இப்ப கண்கடை தெரியாமல் வந்திட்டுது என்ன...? அவளைக் கூட்டிக் கொண்டு போய் விட்டிட்டு வந்திடு கண்டியோ!''

நன்னியனின் பதிலுக்காகக் காத்திராமல் கட்டளை பிறப்பித்து விட்டு தம்பாப்பிள்ளையர் திரும்பி நடந்து கொண்டிருந்தார்.

நன்னியன் சற்றுப் பேசாமல் நின்றான்.

''நயினார் ஒரு வியளமாக்கும்!'' என்றான்.

தம்பாப்பிள்ளையர் அப்படியே நின்றபடி திரும்பி னார்.

''நயினாற்ரை சின்ன நாச்சியாருக்கு இப்பிடி நடந் திருந்தால்... நயினார் என்ன செய்யுமாக்கும்?'' நன்னியன் சற்று நிதானமாகவே கேட்டான்.

''என்னடா நீ நெத்திக்கு நேரை கதைக்கிறாய் என்ன? என்ரை மோளுக்கு இப்பிடி நடந்தா என்ன செய் வன் எண்டு நீர் கேக்கறீர் என்ன? உமக்கும் இப்பிடிக் கேக்கத் துணிவு வந்திட்டுதோ! டேய்! அந்த இந்தக் கதை கதைக்க வேண்டாம்; பொழுது படுகிறதுக்கிடையிலை சின்னிப்பெட்டையை நீ கூட்டிக் கொண்டுபோய்விட்டிட்டு வந்திட வேணும். அவளுக்கு ஒரு கலியாணம் கிலியாணம் செய்யிற நேரம் வரேக்கை அவளைக் கூட்டிக் கொண்டு வாறதை விட்டிட்டு நீ நினைச்ச நேரம் கூட்டியரா ஏலு மோடா?... மடையா! மடைக்கதை ஒண்டும் கதையாதை சொல்லிறதைச் செய்! இல்லாட்டி என்ன நடக்கும் தெரி யுமே?'' தம்பாபிள்ளையரின் இந்தக் கட்டளையோடு நன்னியன் பணிந்து போயிருக்க வேண்டும்; அது அவனால் முடியவில்லை.

''ரெண்டு வளர்ந்த சின்ன நயினாரவை வீட்டிலை இருக்கினமாக்கும்; அவர் இளைய சின்ன நயினார்......''

நன்னியன் வார்த்தையை முடிக்கவில்லை.

''டேய் நன்னியன் என்னடா நளக் கதை கதைக் கிறாய். அவன் வயது வந்த பொடியன்! என்ரை பெட்டைக்கு அவனைச் சாணைக்கூறை போட்டு வைச்சி ருக்கிறன் எண்டு தெரிஞ்சும் நீ கதைக்கிறாய் என்னடா?... எட நன்னியன் அவனைப் பரிசு கெடுக்கிற கதை ஏதெண்டாலும் வெளியிலை வந்தா உன்ரை கழுத்தை அறுத்துப் போடுவன் கண்டியோ....''

''அதுதானாக்கும் ஏன் கரைச்சலை எண்டு சின்னிப் பெட்டையைக் கூட்டிக்கொண்டு வந்தனான்.''

''நீ கூட்டிக் கொண்டு வந்ததாலை ஊரிலை என்னடா கதை வரும் தெரியுமே? இப்ப என்னடா நடந்து போச்சு? கிழட்டு வயசிலை நீ பெத்த கடைக் குட்டியை அவன்

கடிச்சுத் திண்டே போட்டான்? இஞ்சை உனக்கொண்டு சொல்லிறன் கேள் நன்னியன்! அவள் சின்னிக்கு ஒரு மாப்பிளை பார்; சோறு குடுத்து விடலாம்; நானும் பார்க்கிறன்; எங்கையெண்டாலும் தாரம் இழந்தவளையாகிலும்பாப்பம்; அதுவரைக்கும் மூச்சுக் காட்டாமல் இரு!''

தம்பாப்பிள்ளையர் நன்னியனைக் கண்டிப்பதுபோலக் கண்டித்துவிட்டு பரிவு காட்டும் தோறணையில் சகலதையும் தீர்மானமாகக் கூறிவிட்டார்.

நன்னியன் உடலும் உள்ளமும் கொதிக்க தலை குனிந்தபடி நின்றான்.

தம்பாப்பிள்ளையர் போய்விட்டார். அவர் போன திக்கையே பார்க்க அவனுக்கு வெறுப்பாக இருந்தது.

தம்பாப்பிள்ளையருக்கு நன்னியனை விட ஐந்து வயதேனும் குறைவாகத்தான் இருக்கும். ஆனாலும் நன்னியனை அவர் இப்படிப் பேசிவிட்டுப் போனார்.

சரியான சாயக் காரனால் சாயமிடப்பட்டு, தகுதியான காத்திரமான கட்டாடியின் நட்டுக்கு நடுவே துயில் போன்ற வெளுப்புடன், கரையோரம் சாயம் பளிச்சிடகரைக் கம்பிக் கோடிடப்பட்ட எழுத்து வேட்டியை மடித்துக் கட்டி, பரமாஸ் சால்வையை தோளில் அள்ளிப் போட்டு, முன்பிறை விட்டு வெட்டப்பட்ட பின் மயிரை அள்ளி அழகாக முடிப்பிட்டு இராச கோலத்தில் தம்பாப்பிள்ளையர் போகும் தொலுக்கினை நன்னியன் பார்க்கவில்லை.

நன்னியன் வீட்டுக்கு வரும்போது மதியம் திரும்பி விட்டது.

இப்படி நேரம் கழித்து அவன் வந்ததில்லை. எப்படியும் மையப் பொழுதுக்குள் அவன் வந்துவிடுவான். ஏனெனில் அதிகாலை அவன் கொத்துக்குப் போகும்போது செல்வி வெறும் பழங்கஞ்சியை மட்டும் குடிக்கக் கொடுத்து அனுப்புவாள். பத்து மணிக்கு மேல் அதன் வல்லமை தீர்ந்துவிடும். அப்புறம் வயிறு 'கார்; கார்' என்று வறுகும். தாக்குப் பிடித்துக் கொண்டு மதியம் வரைதான் அவனால் கொத்த முடியும்; அப்புறம் ஓடோடி வந்து விடுவான்.

அந்த மதிய நேரத்தை தோட்டக்கரைக் காளி கோவில் சேமக்கலம்தான் அறிவிக்கும். பெருங்குடும்பி ஐயர் மத்தியான பூசைக்கென வைக்கும் அறிவிப்பு ஓசைதான் அது அந்த ஓசையைக் கேட்டுக் கேட்டுப் பழகிப் போன காகக் கூட்டங்கள் கோவிலின் முன் பக்கத்தில் கூடிக் கரையும். ஐயரால் தரப்படும் புக்கை வழக்கமானது! அது நன்னியனுக்கும் அவன் வாலிப காலத்திலிருந்தே பழக்கப்பட்டு வந்தது.

காளிகோவில் பெருங் குடும்பி ஐயரின் சேமக்கல ஒலி கேட்டுவிட்டால் அவன் எப்பிடியும் குடிலுக்கு வந்துவிடுவான்.

இன்று வழக்கத்திற்கு மாறாக சேமக்கல ஓசை ஒலித்து, காகக் கூட்டங்கள் கூடி புக்கை உண்டு களித்து, கோவிலின் முன்பக்க மருத மரத்தில் இளைப்பாறிக் கலைந்துவிட்ட பிறகும் அவனுக்குக் குடிலுக்குப் போக வேண்டுமென்ற நினைப்பு வரவில்லை. மதியம் திரும்பி விட்ட பின்புதான் குடிலுக்கு வந்திருக்கிறான்.

அவன் குடிலுக்கு வருவதற்கு முன்னதாகவே அவனின் இளைய மகன் இளையவன் தம்பாப்பிள்ளையரின் கொத்தி மூலைப் புகையிலைக் கண்டு சாறுதலினால் வந்து தாய் செல்லியால் கொடுக்கப்பட்ட தினைக் கஞ்சியை பலா விலைக் கோலலினால் அள்ளிக் குடிக்கத் தொடங்கி விட்டான்.

முசுட்டை இலை போடப்பட்ட அந்தத் தினைக்கஞ்சி குடிப்பதற்கு சுவையாக இதமாக இருந்தது.

''எங்கையனை ஆத்தை அப்புவை இன்னும் காணேல்லை?'' — என்று தாயைக் கேட்டான். அவன் கேட்டு வாய் மூடும் முன் மண்வெட்டி போடப்படும் ஓசை கல்லு முடக்கில் தட்டுப்பட்டுக் கேட்டது. தகப்பனைக் கண்டதும் சற்று ஒதுங்கி இருந்தான் இளையவன்.

''வாயைக் கொப்பளிச்சுப் போட்டுக் கஞ்சியைக் குடியன். ஆறினா தினை அரிசி புக்கையாப் போயிடும்.'' என்றாள் செல்லி.

நன்னியன் எதுவும் பேசாமலேயே குடத்தடிக்குப் போனான். பொச்சு மட்டை அணைப்பில் இருந்த மண் குடத்தை சரித்துப் பிடித்துக் கொண்டே இருந்து விட்டான். நன்னியன் குடத்தடியில் வெகு நேரம் இருந்ததைக் கவனித்த செல்லி,

''இஞ்சை, என்ன கல்லுப்பிள்ளையால் போலை இருக்கிறாய்... கஞ்சி ஆறப் போகுது...'' என்று குரல் வைத்தாள்.

நன்னியன் வாயைக் கொப்பளித்துக் கொண்டே எழுந்து குடிலுக்குள் வந்தான். அவன் முகம் மாறி இருந்தது. செல்லி அவனுக்கு கஞ்சி ஊற்றிக் கொடுக்க பலாவிலைத் தொன்னையை கோலியதும் செல்லி அகப்பையை சட்டிக்குள் புதைத்ததும் அவன் கவனத்தில் பட்டது.

நீண்ட முப்பது ஆண்டு காலம் அவள் அவனுடன் வாழ்ந்தவள். அவனின் அசைவு, சுழிவு, மூச்சுப் பேச்சு, பார்வை செயல்பாடுகளில் இருக்கும் துல்லியமான மாற்றங்களை அவள் நன்கு படித்து வைத்திருப்பவள்.

அவள் அவனை அவதானித்தபடியே இருந்தாள்.

இளையவன் கஞ்சி குடித்து முடிந்ததும் கிழக்குப் புறத் தாழ்வாரத்தில் கிடந்த கந்தல் பாயில் போய்ப் படுத்துக் கொண்டான்.

மதியம் திரும்பிவிட்டால் அந்தப் பக்கமாகத்தான் குடிசை நிழல் வரும். அந்த நிழலில் அவன் படுத்துக் கொள்வது வாடிக்கை.

''என்னப்பா உன்ரை போக்கைப் பாத்தா எனக்கு ஒண்டுமா விளங்கேல்லை. தோட்டத்துக்கை ஏதும் வில்லங்கமோ? கமக்காறன் ஏதேனும் பேசிப் போட்டார் போலை கிடக்கு.''

செல்லி குரலைத் தாழ்த்திக் கொண்டே கேட்டாள். தாழ்வாரத்தில் படுத்திருக்கும் இளையவனுக்கு இது கேட்கக் கூடாது.

''சின்னி எங்கை போட்டாள்?'' பதிலுக்கு நன்னியன் இப்படி ஒரு கேள்வியைக் கேட்டான்.

''அவள் கஞ்சியை இறக்கிப் போட்டுத் தமையன் வீட்டையும் போட்டு குளிச்சிட்டு வாறனென்டு போனவள்; அங்கை நயினாத்தி வீட்டிலை மாசத்துக்கு ஒருக்காத் தானாம் கல்லுத் தொட்டியிக்கை தண்ணி அள்ளி வாப்பினமாம் குளிக்க! மாட்டுக்கு தண்ணி விடுகிற கல்லுத் தொட்டியிலை குளிச்சவள் நல்ல தண்ணியிலை குளிக்க ஆசையாய் இருக்கெண்டு சொல்லிப் போட்டுப் போனவள்.''

செல்லி பேசி முடித்துவிட்டாள்.

நன்னியன் மௌனமாகவே கஞ்சியைக் குடித்துக் கொண்டிருந்தான்.

''பாணிப்பினாட்டு இருக்கு எப்பன் தரட்டே?''

செல்லி கேட்டாள்.

''வேண்டாம்!'' என்று அவன் சொல்லவில்லை; பதிலாக தலையை மட்டுமே ஆட்டினான். அவன் கஞ்சி யைக் குடித்து முடித்துவிட்டான்.

நான் எப்பன் சரியிறன் களையாக் கிடக்கு; செக்க லுக்கை ஒருக்கா எழுப்பிவிடு; சின்னியைக் கொண்டுபோய் நயினாத்தி வீட்டிலை விட்டிட்டுவர.''

நன்னியனின் இந்தப் பேச்சு செல்லியைத் திடுக்குற வைத்தது.

''என்னப்பா உன்ரை கதை?''

அவள் மொட்டையாகவே கேட்டாள். நன்னியன் எதுவும் பேசவில்லை. குடிலுக்குள் ஒரு பக்கமாக நீட்டி நிமிர்ந்து படுத்துவிட்டான்.

''நீ சொல்லிற கதை எனக்கு ஒண்டுமாய் விளங் கேல்லை; நான் உதுக்குச் சம்மதியன்; அவளை இனி ஓரிடமும் விடுகிறேல்லை; எங்கடை வறுமை எங்களோடை; பஞ்சம் போனாலும் பஞ்சத்திலை பட்ட வடுப் போகா தெண்டு என்ரை ஆத்தை நெடுகலும் சொல்லுவா; இனி நயினாத்தியிட்டை அவளை விடுகிறதெண்டா என்ரை சவத்திலை முளிச்சுக் கொண்டுதான் போக வேணும்!''

செல்லி சற்று ஆவேசமாகவே பேசினாள். கிழக்குப் புறத் தாழ்வாரத்தில் கிடந்த இளையவனுக்கு தாயின் சத்தம் தெளிவாகவே கேட்டது. அவனுக்கு ஒன்றும் விளங்

கவில்லை. தங்கை சின்னியைப் பற்றித்தான் தாய் பேசுகிறாள் என்பது மட்டும் விளங்கியது.

முந்தா நாள் தங்கை சின்னியை அப்பு ஏன் நயினாத்தி வீட்டை இருந்து கூட்டி வந்தார் என்பதற்குப் பதில், ''அவள் ரெண்டு நாளைக்கு வீட்டிலை நிக்க ஆசைப்பட்டு வந்தவள்'' என்று தாய் கூறியது மட்டும்தான் அவனுக்குத் தெரியும். இப்போது அவனுக்கு வேறு விதமாக ஒரு தொனிதான் கேட்டது. கண்களை மூடிக்கொண்டு காதுகளை விழிப்பாக்கிக் கொண்டான்.

''எடி மெல்லமாக் கதையடி; அங்காலை அவன் படுத்திருக்கிறான்; இவளுக்கு என்ன கதையை எப்பிடிக் கதைக்கிறதெண்டு இன்னும் தெரியேல்லை; நேற்றைக்கு இவள் அந்த வேதக்காறப் பொடியளுக்கு முன்னாலை உள்ளதைச் சொல்லப் பார்த்தாள்; நல்ல காலம் நான் கதையைத் திருப்பியிராட்டி பரிசு கெட்டிருக்கும்! எங்கடை குமர்ப்பிள்ளையின்ரை விஷயம் ''கொய்'' எண்டு போயிருக்கும்.''

நன்னியன் குரலைத் தாழ்த்தித்தான் பேசினான்; ஆனாலும் அது இளையவனுக்குக் கேட்டது.

செல்லி பேசாமல் இருந்தாள்.

''அவர் தம்பாப்பிள்ளைக் கமக்காரன் தோட்டத்துக்கை வந்து வெருட்டிப் போட்டுப் போறார். 'அவளை தங்கச்சியார் வீட்டை அனுப்பாட்டி நடக்கிறது வேறை எண்டு' பேசினவர்.''

''அவர் பேசிப் போட்டுப் போனா உனக்கு வாய் எங்கை போட்டுது? சின்ன நயினார் மாற்றை சேட்டைக்கு எங்கடை குமர்ப்பிள்ளையளே ஆக்கள்எண்டு உன்னாலை கேக்கலாமல் போச்சே? நானெண்டாக் கேட்டிருப்பன். அவற்றை சாய வேட்டி உரிஞ்சு விழக் கேட்டிருப்பன். அவ

நயினாத்தி நாச்சியாரின்ரை கொய்யகம் உரிஞ்சு விழக் கேக்காட்டிப்போனா என்ரை ஆத்தை என்னை வம்பிலை தான் பெத்திருக்க வேணும். நான் கந்தன்ரை மோள்தான் எண்டதைக் காட்டாட்டி என்ரை பேர் செல்லியில்லை!''

மட மடவெனப் பேசிவிட்டு செல்லி குடிலை விட்டு வெளியே போனாள்.

அந்த வெய்யில் வேளையிலும் விளக்குமாற்றுக் கட்டையை எடுத்து கல்லும் கவடுமான அந்த முற்றத்தைப் பெருக்கத் தொடங்கிவிட்டாள் செல்லி.

ஏதாவது சுமை மனதை அடைத்துக் கொண்டால் அந்த விளக்குமாற்றுக் கட்டையின் மூலம்தான் அவள் அதைத் தணித்துக் கொள்வாள்.

அவள் வழமை அப்படி!

இளையவன் மனதிற்குள் குமைந்து கொண்டான். அவனுக்கு விஷயம் ஓரளவுக்கு விளங்கிவிட்டது. அவன் என்ன சின்னப் பையனா? சின்னிக்கு மூன்று வயது மூத்த வன். அவனுக்குப் பிறகு பிள்ளை இல்லை என்றிருக்கும் போது மூன்று வருடத்திற்குப் பிறகுதான் சின்னியை செல்லி பெற்றெடுத்தாள்.

சின்னியைப் பெற்றபோது செல்லி வெக்கப்பட்டாள்.

கிழட்டு வயதிலும் பிள்ளை பெறுகிறாள்'' என்று மற்ற வர்கள் நையாண்டி பண்ணக்கூடுமென்று!

இளையவனுக்கு வியர்த்துக் கொட்டியது; எழுந்து குடுமியைக் குலைத்துக் கட்டி மீண்டும் முடிப்புப் போட்டுக் கொண்டு எழுந்து வெளியே போனான்.

''அவன் எங்கே போகிறான்?''

செல்லிக்கு அவன் போக்குப் பிடிக்கவில்லை.

''சில வேளை தான் பேசியது அவன் காதுக்குக் கேட்டு உடனடியாகவே நயினாத்தி வீட்டை சண்டைக்குக் கிண்டைக்குப் போகிறானே?'' என்று அவள் எண்ணி னாள். அந்த எண்ணத்தை சரி பிழை காண்பதற்கிடையில் அவன் வெளிதாண்டி அப்பால் போய்க் கொண்டிருப்பதும், சின்னி குளித்து விட்டு ஈரச் சேலையைப் பிழிந்து கையில் பிடித்துக் கொண்டு அவனுக்கு எதிரே வருவதும் அவளுக்கு நன்றாகத் தெரிந்தது.

அவளால் அசைய முடியவில்லை. அண்ணனும், தங்கையும் ஏதாவது பேசுகிறார்களா? என்பதைக் கண் களால் மட்டும் அவதானித்தாள்.

வெளிப் பரப்பின் எல்லையோடு சாய்ந்திருந்த வேப்ப மர நிழலில் இளையவன் அவளை ஏதேதோ கேட்பது போலவும், அவள்தலை கவிழ்ந்து விம்மி, விம்மி ஏதோ சொல்லுவது போலவும் செல்லியின் ஊகத்தில் பதிந்தது.

சின்னியும் இளையவனும் ஒன்றாகவே திரும்பி வந்தனர். சின்னி கூனிக் குறுகி அனுங்கிச் சினுங்கிக் கொண்டே வந்தாள்.

வந்தது வருவதற்கு இடையில், ''ஆத்தை, சின்னியை இனி நயினாத்தி வீட்டை விடப்படாது. சொல்லிப் போட்டன்.'' என்று ஆவேசமாகக் கூறினான் இளையவன்.

பொய்யுறக்கத்திலிருந்த நன்னியனுக்கு இந்த வார்த்தை கேட்டது.

செல்லி ஒன்றுமே பேசவில்லை.

சின்னி சினுங்கிக் கொண்டே கையில் ஏந்தி வந்த ஈரச் சேலையை மலைக் கல்லுகளின் முடக்குகளில் விரித்து காய விட்டாள். சினுக்கம் நிற்காமலேயே குடிலுக்குள் புகுந்து கொண்டாள்.

''சின்னவள் கஞ்சி ஊத்தி வைச்சிருக்கிறான் மோனை; எடுத்துக் குடி. கொப்பர் எழும்பட்டுக்கு; எல்லாம் கதைப்பம்.''

செல்லியின் இந்தப் பேச்சு காதில் விழுந்தும் சின்னி அசையவில்லை.

''எடி, சின்னவள் தோஞ்சுபோட்டு வெறு வயித்தோடை இராதையடி; கஞ்சியைக் குடிமோனை.'' சின்னி மீண்டும் அசையவே இல்லை. ஆனால் அழுகையைப் பலமாக்கிக் கொண்டாள்.

''என்னடியப்பா எப்பன் நித்திரை கொள்ள விடமாட்டியள் போலை கிடக்கு. ஏனடி இவள் சின்னிப்

பட்டை அழுகிறாள்?'' என்று கேட்டுக் கொண்டே நன்னி யன் எழுந்திருந்தான். சற்று வேளை யாரும் பேசவில்லை. சின்னியின் அழுகை ஓசை சற்றுக் குறைந்திருந்தது.

''அப்பு சின்னியை பிறகும் நயினாத்தி வீட்டிலை கொண்டுபோய் விடப்போறியாம்; அவளை இனி அங்கை விட்டால் என்னை வீட்டிலை காணமாட்டியள்!''

இளையவன் தயக்கமின்றிப் பேசினான். நன்னியன் எதுவும் பேசவில்லை.

''அவளும் மாட்டனெண்டு கழுத்தை முறிக்கிறாள், உவனும் அன்ன பரதேசம் போறனெங்கிறான்......''

செல்லி பேச்சை முடிக்காமலேயே இடையில் நிறுத்திக் கொண்டாள்.

சின்னிக்கு நயினாத்தி வீட்டிலை என்ன நடந்தது ஏது நடந்தது என்று யாரும் மனந்திறந்து பேசவில்லை. ஒரு தகப்பன் – தாய், அண்ணன், தங்கை சேர்ந்து பேசக் கூடிய விஷயமா அது?

பொழுது சரிந்து கொண்டிருந்தது. நன்னியன் எதுவும் பேசாமல் எழுந்து வெளியே போய்விட்டான். அவன் எங்கே போகிறான் என்பது பற்றிக்கேட்கும் துணிவு செல்லிக்குக் கூட வரவில்லை.

பொழுது கருகிவிட்டது. பெறாமகன் மூத்தவனின் மனைவி — செல்லியின் மருமகள் பொன்னி அவசர அவசர மாக வந்து சேர்ந்தாள்.

''மூத்தவன் சீவலாலை வந்திட்டானே பெட்டை?'' என்று செல்லி கேட்டாள்.

''இல்லை மாமி, செக்கலுக்கு முந்தி செல்லம்மா கமக் காறிச்சி வீட்டை சீவலை முடிச்சுப் போட்டு, வீட்டை

வந்து என்னட்டை சேதி சொல்லிப்போட்டு, தம்பாப்பிள்ளையற்ரை பனங்காணிக்கை போட்டுது. முந்த நாள் கமக்காறிச்சி வீட்டிலை இருந்த அவ இல்லாத நேரத்தில் அம்மான் சின்னியைக் கூட்டிக் கொண்டு வந்திட்டாராம்; கமக்காறிச்சி என்ரை ஆளுக்குச் சொல்லிப் பேசினாவாம்; அதுதான் ஏனேன்டு கேக்கச் சொல்லி என்னை அனுப்பிப் போட்டு வழுப்பனை சீவப் போகுது. ஏனேணை மாமி அம்மான் அப்பிடிச் செய்தவர்? எப்பிடி எண்டாலும் எட்டுப் பத்து வரிசம் அவையோடை இருந்தவளை இப்பிடிச் சொல்லாமல் கொள்ளாமல் கூட்டியந்தா அவ பேசுவா தானை!''

மருமகள் பொன்னி இப்படிக் கேட்டுவிட்டதை செல்லி மனதிற்குள் வாங்கிக் கொண்டு பேசாமல் இருந்தாள்.

தான் இருக்கும் போது மச்சாளுடன் தாய் இந்த விஷயத்தை மனம் திறந்து பேசக் கூசுகிறாள் என்பது இளையவனுக்கு விளங்கிவிட்டது.

இளையவன் மெதுவாக எழுந்து சென்றான்.

சின்னி மூலையோடு முடங்கிக் கிடந்தாள். மத்தியானம் தோய்ந்துவிட்டு மாலைவரை வெறு வயிற்றுடன் இருந்து செக்கல் போல்தான் தினைக்கஞ்சி குடித்தவளுக்கு உடனடியாகவே அசதி வந்திருக்க வேண்டும்!

எதற்கும் எச்சரிக்கையாக செல்லி முற்றத்திற்கு வந்து உட்கார்ந்து கொண்டாள். கையில் எடுத்து வந்த வெற்றிலைப்பெட்டியையும் உரலையும் வைத்து வெற்றிலை துவைக்கத் தொடங்கி விட்டாள்.

மருமகள் பொன்னி அவளுக்குப் பக்கமாக வந்து வயிற்றைத் தள்ளிக் கொண்டு உட்கார்ந்து கொண்டாள். ஏதோ ஒரு இரகசியத்தை மாமிக்காரி தனக்குச் சொல்லப் போகிறாள் என்ற ஊகிப்பில் ஓசை சிறிதளவும் வெளிவரா

மல் செல்லி மெதுவாகப் பேசியபோது பொன்னியும் மெது வாகவே பேசிக் கொண்டிருந்தாள். அந்தக் கலட்டிப் பூமியில்ஆங்காங்கே தெரிந்த குடிசைகளில் அடுப்புளரியும் ஒளிச் சிதறல்கள் சிணுங்கிச் சிணுங்கி தெரிந்து கொண்டிருந்தன.

காற்று செம்மன் துகள்களை அள்ளி எறிந்து கொண்டிருந்தது. காற்று வளத்திற்கு முகத்தைத் திருப்பிக் கொண்டே மாமியும் மருமகளும் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தனர்.

கண்ணுக்கெட்டிய தூரத்தில் நகர்ந்து வரும் நீண்ட ஒளி நிரை கண்களுக்கு தெரிய சட, சட என்ற ஓசை மேல் எழாமல் மெதுவாகக் கேட்டது.

அப்போதுதான் வடக்கே இருந்து தெற்கே றயில் போகிறது. சுக்குச் சுக்கென்ற அதன் துரித தாள பேரோசையை காற்று அள்ளிச் சென்று விட்டது. அதனால் அது ஊமைக்கோலத்தில் நகர்ந்து கொண்டிருந்தது போலிருந்தது.

அந்தக் குடிசை வெளிக்கப்பால் இதன் ஒளி நிரை தெரிந்தால் சரியாக மணி ஏழரையாகத்தன் இருக்கும். ஒன்றிரண்டு தடவை அது நெருப்புக் கட்டித் துகள்களை அகன்ற வாய்க்கூடாக வாந்தி எடுத்துக் கொண்டு சென்றது. அளவுக்கு அதிகமாக அக்கினிக் கட்டிகளை உண்டு விட்டதனால் அதன் உடம்பு அதைச் சீரணித்துக் கொள்ள முடியாமல் வெளியே தள்ளுகிறது.

மாலை வெள்ளி சரிந்து போய்க் கொண்டிருந்தது.

இன்னும் மாமி, மருமகள் பேச்சு வார்த்தைகள் முடியவில்லை. இதற்கு மேல்தான் செல்லி உலையை வைத்து இராப் போசனம் சமைக்க வேண்டும். நன்னியன் சந்தையில் ஏதாவது மீன் வாங்கி வருவான்.

சற்றுத் தொலைவில் செருமல் சத்தம் கேட்டது. நன்னியன் வருகிறான் என்பதற்கு இந்தச் செருமல் அறிகுறி.

அவன்தான் வந்தான்!

அவன் கையில் திருக்கை மீன் ஒன்று தொங்கியது. அதன் மூக்கில் கோர்த்திருந்த மூக்கணாம் கயிற்றைப் பிடித்து தூக்கி வருகிறான்.

''ஆரடியப்பா உதிலை இருக்கிறது?'' நன்னியன் கேட்டான்.

''அது நான்தான் அம்மான்'' என்று பொன்னி பதில் சொன்னாள்.

''இஞ்சரப்பா, இந்தத் திருக்கையை வெட்டி பொட்டையிட்டையும் ரெண்டு கீலத்தைக் குடுத்துவிடு. வயித்துப் பிள்ளைக்காறிக்கு நல்லது'' என்று நன்னியன் கட்டளை இட்டான்.

செல்வி எழுந்து விட்டாள்.

அருவாளையும், சிணுங்கல் விளக்கையும், சட்டியையும், முற்றத்திற்கு தூக்கி வந்தாள்.

பொன்னியே திருக்கையைக் கீலம் இட்டு சட்டிக்குள் போட்டுவிட்டு முதுகுப் புறக் கீலமாக மூன்றை எடுத்து பக்கத்தே கிடந்த தென்னம் பன்னாடையில் சுற்றி எடுத்துக் கொண்டாள்.

''நெய்யிலையும் ஒரு துண்டை வெட்டி எடுபிள்ளை: அப்பான் கறி எப்பன் வாசமாய் இருக்கும்'' என்ற மாமியாரின் கட்டளைப்படி ஒரு துண்டு நெய்யையும் வெட்டி எடுத்து பன்னாடைக்குள் போட்டுவிட்டு குடத்தைச் சரித்து கை அலம்பி எழுந்திருந்தாள் பொன்னி.

''நான் போறன் மாமி; காலமைக்கு வாறன்.'' என்று மட்டும் கூறிவிட்டு அவள் இருளோடு இருளாக மறைந்து

விட்டாள். எப்போதும் அவளுக்கு நீலநிறச் சேலைதான் பிடிக்கும். அதனால் அவள் விரைவில் இருட்டோடு சங்கமமாகிவிட்டாள்.

செல்லி அதிலேயே வைத்து திருக்கை மீனைத் துண்டுகளாக்கிக் கொண்டு குடிலுக்குள் போனாள்.

சின்னி எழும்பி விட்டாள்.

அடுப்பு எரிந்தது.

உலை ஏறியது இறங்கியது.

திருக்கைச் சட்டி அடுப்பில் கொதித்தது. சின்னி கறிக்காக பொரிமாவை முற்றத்தில் வைத்து இடித்து, கறிக்கிட்டு, இறக்கி விட்டாள். கொதித்து நுரைந்த சட்டிக்குள் பொரி மாவைப் போட்டுத் துளாவி புளியையும் கரைத்து விட்டபோது வந்ததே ஒரு வாசனை! அந்த வாசனையோடு ஒரு சட்டி சோறு தின்றுவிடலாம்!

''எங்கையடிப்பா இளையவனைக் காணேல்லை?'' நன்லியன் கேட்டான்.

''உதாலை செக்கலுக்கை போனவன், மாமன் வீட்டுப் பக்கம் போயிருப்பான்!'' என்று செல்லி பதில் சொன்னாள்.

',உவன் என்ன இன்னும் சின்னப் பொடியனே? குமர்ப் பிள்ளையள் இருக்கிற வீட்டை போறது சரியில்லை எண்டு எத்தினை கோசு சொல்லிப் போட்டன்!''

நன்னியன் இந்தப் பேச்சுக்கு செல்லி பதில் பேசவில்லை.

சமையல் முடிந்து விட்டது.

''இஞ்சை கேளன்!'' என்று அவனை அழைத்தாள் செல்லி.

நன்னியன் எழுந்து வந்தான். திருகுவலைப் பிடியை அவன் பக்கம் அவள் அரக்கி விட்டாள்.

குண்டான் சட்டி சோற்றால் நிரம்பி இருந்தது. திருக்கைத் துண்டுகள் அதன் மேல் குந்தி இருந்தன.

''ஏனடியாத்தை நிறையப் போட்டனீ?'' என்று கேட்டுவிட்டு சாப்பிடத் தொடங்கி விட்டான் நன்னியன்.

''தம்பாப்பிள்ளை கமக்காரன் என்ரை கழுத்தை வெட்டினாலும் சின்னியை நான் இனி கமக்காறிச்சி வீட்டை விடமாட்டன்'' என்று குரல் தழுதழுக்க நன்னியன் தன்பாட்டிலேயே பேசினான். அவன் கண்ணில் இருந்து வழிந்த நீர்க்குண்டுகள் சோற்றுச் சட்டிக்கு மேல் விழுந்தன.

அவன் விம்மினான்!

செல்லி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் இமைகள் நீண்ட நேரம் திறந்தபடியே நிலைத்து நின்றன.

வெளியே இளையவன் வரும் ஓசை கேட்டது. அவன் சுவடு தட்டி விட்டால் குடிலின் தெற்குக் கோடிப் பக்கம் கட்டியிருக்கும் மறையன் ஆடு கத்திவிடும்.

அது குரல் காட்டியது.

''இளையவன்!''

தாய் செல்லி அழைத்தாள்.

''ஓமணை ஆத்தை!'' என்று தனது வரவையும் வெளிப்படுத்தினான் அவன்.

தகப்பன் சாப்பிட்டு முடியும்வரை இளையவன் திண்ணையிலேயே குந்திக் கொண்டான்.

''எடி சின்னி, மற்றப் பேணி விளக்கைக் கொளுத்தி கொண்ணன்ரை சோத்தை அதிலை குடன் பிள்ளை'' என்றாள் செல்லி.

''பொறு தங்கச்சி அப்பு திண்டு முடியட்டுக்கும் தின்பம்!'' என்று கூறிவிட்டு இளையவன் குந்துக்கப்புடன் சாய்ந்து கொண்டான். இடையே ஒருவரினது குரலும் கேட்கவில்லை.

காற்று கை விளக்கை ஒரு தடவை அணைத்து விட்டுச் சென்றது. மூச்சு விடாமல் செல்லி அடுப்பை ஊதிப் பற்ற வைத்து விளக்கை ஏற்றி அதை ஒதுக்காக வைத்தாள்.

நன்னியன் சாப்பாடு முடிந்து எழுந்து வெளியே வந்தான்.

செல்லி இளையவனுக்கு உணவைப் பரிமாறினாள். சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது, ''அப்பு என்னவாம் ஆத்தை!'' என்று தாயை இரகசியமாகக் கேட்டான் இளையவன்.

''அவளை இனி அங்கை விடுகிறேல்லை எண்டு சொல்லிப் போட்டுப் போகுது.'' என்ற மனம் நிறைந்த பதிலை சற்று ஓசை வரவே சொன்னாள் செல்லி.

இளையவனுக்கு மனது நிறைந்து போய்விட்டது. அவன் மிக நிதானமாகச் சின்னியைப் பார்த்தான். சின்னிக்குப் புன்சிரிப்பு வந்தது அந்த மென் வெளிச்சத்தில் அவனுக்கு நன்றாகத் தெரிந்தது.

அவளின் புன்சிரிப்பு மலர்ந்தபோது அவளின் பல் வரிசை பளிச்சிட்டது. இளையவனும் சாப்பிட்டு முடிந்து விட்டது. அவன் வழமைப்படி குடிலுக்குள் படுக்கைக்குப் போய் விட்டான்.

திருக்கைக் கறிச் சட்டிக்குள் சோற்றைப் போட்டுப் பிரட்டி, ஈரப்பசைச் சளசளப்புக்காக பகல் மிஞ்சி இருந்த தினைக் கஞ்சியையும் விட்டு, ஈரப்பசை மிஞ்சி ஒழுக, ஒழுக சின்னியின் கைகளில் அள்ளி வைத்துக் கொண்டே தானும் தன் இடக்கரத்தில் அள்ளி வைத்து தின்று முடித்தாள் செல்லி.

ஒருநாள் வாழ்க்கை முடிந்து விட்டது.

கைவிளக்கு அணைக்கப்பட்டது.

அந்தக் குடிலே உறங்கி விட்டது.

இடையே ஒரு தடவை இளையவன் எழுந்து கிழுவங் குழைக் கட்டைப் பிரித்து மறையன் மறிக்குப் போட்டு விட்டு படுக்கைக்குப் போனான்.

''ஆத்தை, எணை ஆத்தை!'' முற்றத்தில் குரல் ஒன்று கேட்டது.

யார் குரல் என்பதை இளையவன் அனுமானித்துக் கொண்டான்.

அது அவனின் அண்ணனின் குரல்.

''என்னண்ணை இது சாமத்திலை?'' என்று கேட்டுக் கொண்டே இளையவன் எழுந்தான்.

''இஞ்சர் மூத்தவன் வந்து நிக்கிறான் போலை கிடக்கு; ஏன் இந்த நேரத்திலை வந்தவன் ஒழும்பி என்னெண்டு கேள்'' என்று செல்லியை அருட்டினான் நன்னியன்.

செல்லி எழுந்து விட்டாள்.

''ஏன் மோனை சாமத்திலை வந்தனீ? வீட்டிலை பெட்டைக்கு ஏதும் சுகமில்லையே? வயித்துக்கை ஏதும்

செய்யுதோ மோனை? பொட்டை பொழுதுபடேக்கை இஞ்சை வந்திட்டுத்தானே போனவள்...'' என்று சொல்லிக் கொண்டே தணல் கருகாத அடுப்பு நெருப்பில் ஊதி கை விளக்கைக் கொழுத்தினாள் செல்லி.

''இல்லையணை ஆத்தை; நான் சும்மா வந்தனான்'' என்று சொல்லிக் கொண்டே ஒட்டுக் கப்போடு மூத்தவன் இருந்தான். அவன் குடுமி இறுக்கமாக முடியப்பட்டிருந்தது.

சற்று வேளை பேச்சில்லை,

அவனாகவே பேச்சைத் தொடங்க அவனால் முடியவில்லை-

''என்னடா மூத்தவன் பேச வந்தனீ; பேசாமல் இருக்கிறாய்?'' நன்னியனே கேட்டான்.

''ஒண்டுமில்லையணை அப்பு! இண்டைக்கு பின்னேரம் செல்லம்மா நயினாத்தி சின்னியை சொல்லாமல்கொள்ளாமல் கூட்டியந்திட்டாய் எண்டு துள்ளினவ...''

அவன் பேச்சை முடிக்கவில்லை.

''இப்ப அவளைக் கொண்டுபோய் விடச் சொல்லி சாமத்திலை நீ வந்திருக்கிறாய் என்ன?''

நன்னியன் சற்றுப் பலமாகவே கேட்டான்.

''அதுக்கில்லையணை, பொன்னி இப்ப வந்து சொன்னாப் போலைதான் எனக்கு விளங்கினது. இனித் தங்கச்சியை அங்கை விடப்படாது. அதுதான் சொல்ல வந்தனான்!''

மூத்தவன் தன் முடிவை படக்கெனச் சொல்லி முடித்தான்.

''அது விடுகிறேல்லை எண்டு கொப்பர் சொல்லிப் போட்டார். நீ பேசாமல் இரு!'' செல்லி முத்தாய்ப்பு வைத்து விட்டாள்.

பின்பு மௌனமே நீண்ட நேரம் நிலவியது. மூத்தவன் எழுந்து முற்றம்வரை வந்து நின்று, ''நாங்கள் அவை யின்ரை சிறைக்குட்டியள் எண்டதுக்காக மானத்தை விட்டுச் சீவிக்கிறதே? பாளைக் கத்தியாலை அவங்களை வெட்டி எறிஞ்சு போட்டு நான் தூக்குக் கயித்துக்குத்தான் போவன்!'' என்று சற்று அடக்கமாகவே கூறி முடித்து சென்று விட்டான். செல்லிக்கு விடியும் வரை நித்திரை வர வில்லை. அடிக்கடி எழுவதும் விளக்கைக் கொளுத்துவதும் சுங்கானைப் பற்ற வைப்பதுமாகவே இருந்தாள். இராக் காலங்களில் மனதிற்குள் ஏதாவது குடைந்து கொண்டி ருந்தால் இப்படி அடிக்கடி சுங்கான் பற்ற வைப்பது பழக்கம்.

வழமை போல விடிவெள்ளி முளைத்த வேளை எழுந்திருந்த நன்னியன் செல்லியைத் தட்டி எழுப்பி பழங்கஞ்சி கரைப்பித்துக் குடித்துவிட்டு மண்வெட்டியுடன் தோட்டத்திற்குப் போய்விட்டான். நேரத்தை என்னதான் சரியாக கணக்கிட்டாலும் சில வேளைகளில் கணக்குத் தவறி விடுகிறது.

இன்னும் நான்கு நாட்களுக்குள் புகையிலை நாற்றுகளை ஊன்றிவிட வேண்டும்; அதற்கிடையில் கொத்திச் சாறிக்கிடந்த அந்தத் தோட்டக் காணிக்குள் பாத்திகளைக் கட்டியாகி விடவேண்டும். கடந்த நாலு நாட்களாக நன்னியன் மூவாயிரம் கன்றுகளுக்கான பாத்திகளை தன்னந்தனியனாகக் கட்டி முடித்து விட்டான். இன்னும் இருப்பது இரண்டாயிரம் கன்றுகளுக்கான பாத்திகள். இந்த இரண்டாயிரம் கன்றுகளுக்கான பாத்திகளை தொடர்ச்சியாகக் கட்டினால் இன்னும் இரண்டு நாட்களுக்கிடையில் கட்டி முடித்து விடலாம்.

குழை தாழ்ப்பு, கொத்து, சாறல், பரவல், வரம்பு வாய்க்கால், இறைப்பு, தண்ணி பாய்ச்சல் ஆகியவைகளை பலரைச் சேர்த்துத் தம்பாப்பிள்ளையர் செய்வித்து வந்தார். ஆனால் இந்த பாத்தி கட்டும் வேலையை நன்னியன் மட்டும் தான் தன்னந்தனியனாக செய்ய வேண்டும். அப்படிச்செய்வித்தால்தான் அந்தப் பூமி பொன்னாகக் கொட்டும் என்பது வழமையாகிவிட்டது.

கடந்த இருபது ஆண்டு காலத்தில் மூன்று தடவைகள் நன்னியனுக்கு பதிலாக மாரியனும் வேறொருத்தனும் கூட்டுச் சேர்ந்து பாத்தி கட்டிவிட்டனர்.

அந்த மூன்று தடவைகளும் புகையிலை சீவல் எடுக்கும் பருவத்தில் அழுக்கணவன் பிடித்து ஒரு வார காலத்திற்குள் சேதமடைந்துவிட்டது. முதலீட்டில் மூன்றில் ஒரு பாகமும் தேறவில்லை. அந்தக் கோசில் நன்னியன் காலில் மண்வெட்டி பாறாக வெட்டியதால் கட்டுவைத்தியன் அதிகாரம் வீட்டில் படுக்கையில் கிடந்தான்.

இரண்டாவது தடவை நன்னியன் முதலாம் தாரம் பிள்ளைப் பேறு வீட்டிற்குள் இறந்து போனதால் துடக்குடன் தோட்டத்திற்குள் இறங்க முடியாமல் இருந்தது. அந்தத் தடவையும் தம்பாப்பிள்ளையருக்கு சித்திரைக் குழப்பப் பெருமழை வந்து அவரின் பள்ளக் காணியை பத்து நாட்களுக்கு மேல் தண்ணீரில் தெம்ப வைத்துவிட்டதனால் கன்றுகள் அரை வயதிலேயே அவி யல்கண்டு அழிந்து போயிற்று. அவ்வேளை முதலீட்டில் ஒரு சதக் காசு கூட தேறவில்லை.

மூன்றாவது தடவை நான்கு வருடங்களுக்கு முன், நன்னியனின் மூத்தவன் மரம் சறுக்கி ஒட்டகப்புலம் முறிவு தெறிவு வைத்தியல் வீட்டில் நன்னியன் மகனோடு இருந் தமையால் பாத்தி கட்ட தோட்டத்தில் இறங்க முடியாமல் போய்விட்டது. அந்த முறை தம்பாப்பிள்ளையரின் தோட் டத்திற்கு மட்டும் மண் நோய் கண்டு கன்றுகள் பட்டைத் தண்ணீர் வார்ப்புடனேயே கருகிப்போய்விட்டன. புதிதாக நாற்று மேடையில் நாற்றுப் போட்டு எடுத்து நடலாம் என்றால் சோளகம் பிறந்துவிட்டது. தொடக்கத்திலேயே நாசம்!

இந்த மூன்று தடவைகளின் அனுபவத்தைக் கொண்டு தம்பாப்பிள்ளை கமக்காரன் கண்டு கொண்ட பாடம் நன்னி

யனே தன்னம் தனியனாக ஐயாயிரம் கன்று பாத்திகளைக் கட்டிவிடவேண்டும் என்பதுதான்.

நன்னியன் நேற்றையக் குறையில் இருந்து பாத்தி கட்டத் தொடங்கி விட்டான். வழமையாக தம்பாப் பிள்ளை கமக்காரன் தோட்டத்திற்கு வரும் நேரம் கழிந்து விட்டது.

இன்னும் கமக்காரன் வரவில்லை.

நன்னியனின் மூளை பல விதங்களில் வேலை செய்தது.

''தங்கச்சியார் வீட்டை போய் சின்னி வந்திட்டாளோ என்று பாத்திட்டு வரப்போட்டார் போலை கிடக்கு'' என்று வாய்விட்டுச் சொல்லிக் கொண்டான்.

''எக்கனம் தங்கச்சியார் வீட்டை போட்டு வந்து 'அத்தறி பாஞ்சூர்' எண்டு நன்னியனிலைதான் ஏறிப் பாயப் போறார்; பாயட்டுக்கும்; நானும் விடுகிறேல்லை; என்ன புடிச்சுத் திண்டு போடுவாரோ... மிஞ்சிப்போனா தோட்டத்திற்கு வராதை எண்டு மறிப்பார்; மறிக்கட்டுக் கன்'' இப்படி மறுபடியும் அவன் வாய் புறுபுறுத்துக் கொண்டது.

அவன் எதிர் பார்க்கவில்லை.

பின் பக்கத்திலிருந்து ''என்ன நன்னியன்! பெரிய கமக்காரன்ரை வேலையை முடிக்கிறன் எண்டுதான் நாண்டு கொண்டு நிக்கிறாய் போலை கிடக்கு'' கேட்ட குரல் பூக்கண்டர் நயினாருடையது.

நன்னியன் இந்தக் குரல் கேட்டுத் திடுக்கிட்டு விட்டான்!

''நயினார் என்ன கதைக்கிறதாக்கும்; ஒண்டுமாய் விளங்கேல்லை.'' என்று மண்வெட்டி வறுகிய மண்ணை அப்படியே விட்டுவிட்டுக் கேட்டான்.

''இல்லையடா நன்னியன்; நானும் வெள்ளாப் போடை தோட்டத்துக்கை வந்து சாற முந்தி நீ வந்திட்டாய்... அதுதான் பெரிய கமக்காரன்ரை வேலையை முடிக்கிறன் எண்டு நிக்கிறியோ எண்டு கேட்டனான்; அதுக்கேன் நீ ஒரு மாதிரி வெருளுறாய்? நீ வெருளுறதைப் பாத்தா... உன்ரை நெஞ்சுக்குள்ளை ஏதோ கிடக்குமாப் போலை கிடக்கு!''

பூக்கண்டர் நயினார் ஒருவிதமாகப் பேசினார். அவரின் பேச்சின் விதம் நன்னியன் மனதை ஏதோ செய்தது. தலைத் துண்டைத் தளர்த்திக் கொண்டே ''இல்லையாக்கும்... அப்பிடி ஒண்டும் இல்லையாக்கும்...'' என்று நன்னியன் இழுத்தான்.

''எட, எனக்கு ஒழிக்கேலாதடா; நான் எல்லாரையும் பழமும் திண்டு கொட்டையும் போட்டனான். உன்ரை முகத்தைப் பாத்திட்டு நீ நினைக்கிறதைச் சொல்லுவன்; சும்மா மறைக்காமல் சொல்லடா நன்னியன்; பெரிய கமக்காரன் வீட்டுச் சங்கதியை எப்பிடி சின்னக் கமக்காரனிட்டை சொல்லிறது எண்டு யோசிக்கிறாய் போலை கிடக்கு... எட, நன்னியன்! நீ செல்லம்மா நாச்சியார் வீட்டிலை இருந்து உன்ரை கடைக்குட்டியை ஏனடா அவசரப்பட்டு கூட்டிக் கொண்டு வந்தனீ? அதுவும் அவ வீட்டிலை இல்லாத நேரம்? எட்டுப் பத்து வருஷமாய் நிண்டவளை திடீரெண்டு கூட்டிக் கொண்டு வாறதுக்கு ஏதும் காரணம் இருக்கவேணுமே?''

பூக்கண்டர் கேட்டு விட்டு படக்கென பேச்சை நிறுத்திக் கொண்டார். நன்னியனுக்கு எதுவும் பேசவரவில்லை. மண்வெட்டிப் பிடியைப் பிடித்தபிடி அவன் அப்படியே நின்றான்.

''எட தம்பாப்பிள்ளையற்றை பக்கத்து வேலிக்கை இருக்கிற எனக்கெல்லே நீயும் நாச்சியாரும் சேந்து காது குத்தப் பார்க்கிறியள்?''

பூக்கண்டரே மீண்டும் பேசினார்.

''எட, நன்னியன்; அவள் குழந்தைப் பெட்டை; நீ அவள் புத்தி அறிஞ்ச உடனை அவளைக் கூட்டிக் கொண்டு போயிருக்க வேணும்; சரி, விட்டிட்டாய்; நெருப்பும் பஞ்சும் ஒரு இடத்தை இருந்தா ஒரு நாளைக்குப் பத்தி எரியத் தானே வேணும். என்ரை மனிசி சொன்னவள் நீ அவளைக் கூட்டிக் கொண்டு போன அண்டு அவ வளந்த பொடிய னையும் வீட்டிலை விட்டிட்டு கோயிலுக்குப் போட்டா வாம். அவள் இளைய மகன் அவன்தான் பட்டணத்துக்கை பள்ளிக்குப் போறவன்; அவள் பிஞ்சுப்பொட்டையை கோடி யெல்லாம் கலைச்சுக் கொண்டு திரிஞ்சவனாம்; என்ரை மனிசிக்கு கண்ணாலே கண்டவள் ஒருத்தி சொன்னவளாம். அவன் மூத்த மகன் தெரியாதது போலை கிணத்தடியிலை இருந்து பாத்துக் கொண்டு இருந்தவனாம்!''

பூக்கண்டர் பேச்சை நிறுத்தி விட்டார்.

நன்னியன் தலைத் துண்டால் முகத்தைத் துடைத்துக் கொண்டு விம்மினான்.

''எட நன்னியன், தம்பாப்பிள்ளையன் வாறான் போலை கிடக்கு; தலைக் கறுப்புத் தெரியுது; ஏதோ புத்தி யாய் நடந்துகொள்; எனக்கும் ஆத்திரமாத்தான் கிடக்கு; நானும் பொம்புளைப் புள்ளையளை வச்சிருக்கிறன்'' என்று கூறிக்கொண்டே பூக்கண்டர் குறுக்கு வரம்பால் திரும்பி அவசரமாக நடந்து கொண்டிருந்தார். அவர் சாறு வதற்காகக் கட்டிய கொடுக்கு கொடுக்காகவே இருந்தது; குடும்மியில் மண் படர்ந்திருந்தது.

நன்னியன் மறுபடியும் பாத்தி கட்டத் தொடங்கிவிட் டான்.

தம்பாப்பிள்ளையர் விரைவாக வந்து சேர்ந்து விட்டார்.

''டேய் நன்னியன், ஆற்றா உதிலை வந்திட்டுப் போறது? அவன் பினாட்டுத் தின்னி பூக்கண்டன் போலை கிடக்கு! என்னாடா உன்னோடை அவனுக்குக் கதை?'' என்று அவர் அதட்டினார்.

''ஒண்டுமில்லையாக்கும், கிணறுகளிலை தண்ணியும் வத்திக்கொண்டு வருகுதாம், இந்தக் கோசுக்கு ஐயாயிரம் கண்டுக்கு ஏன் கட்டின நீங்கள்? எண்டு கேட்டுப் போட்டுப் போறாராக்கும்''.

நன்னியன் பொருத்தமாகப் பதில் சொன்னான்.

''நான் ஐயாயிரம் கண்டு நடுவன்; பத்தாயிரம் நடுவன்; தண்ணி இல்லாட்டி மூத்திரம் பெய்வன்; இவன் என்ன பினாட்டுத் திண்ணி கேக்கிறது? அவன் என்னட்டையெல்லோ உதைக் கேட்டிருக்க வேணும்; என்ரை சிறையை உவன் என்ன கேக்கிறது?''

பேசி முடித்தபோது உரோசத்தால் அவர் குரல் கேரியது.

நன்னியன் பேசாது நின்றான்.

''நாளையோடை பாத்தியள் முடிஞ்சு போகுமே நன்னியன்?'' அவர் தன் குரலை இதமாக்கிக் கொண்டே கேட்டார்.

''இண்டைக்கு இரண்டு நேரமும் செய்தா...நாளைக்கு செக்கலுக்கை முடிஞ்சு போகும். காத்து எழும்பிற குணமாக் கிடக்கு. பறுவத்திலண்டைக்கு நாத்து ஊண்டலாமாக்கும்.

நன்னியனும் இதமாகவே சொல்லீ முடித்தான்.

அவள் கோவிய முத்திப் பெட்டையிட்டைச் சொல்லிப் போட்டு வாறன்; நன்னியனுக்குப் பால் கோப்பியும், குரக்கன் றொட்டியும் கொண்டு வந்து குடுக்கச் சொல்லி. இப்ப கொண்டு வருவாள். மத்தியானம் அவளிட்டை சோறு குடுத்தனுப்பி விடுகிறன். பொழுது படுமட்டும் நிண்டு பாத்தியளைக் கோலிப்போடு; எனக்குத் தலைமைக்காறன் வீட்டிலை அவசரமாய் ஒரு அலுவல் இருக்கு......; அது சரியடாப்பா அவள் தங்கச்சி வந்திட்டுப் போறாள். சின்னியை நீ இன்னும் கொண்டு வந்து விடேல்லை எண்டு; அங்கை ரெண்டு மூண்டு நாளா மாட்டடியெல்லாம் சாணியும், குப்பையும் குவிஞ்சு கிடக்கெண்டு சொல்லிப் போட்டுப் போறாள். நன்னியன் பாத்தி கட்டிற வேலையிலை மினக்கெடுகிறான் போலை கிடக்கு; ராவைக்கி கொண்டு வந்துவிடச் சொல்லி விடுகிறன் எண்டு சொல்லிப் போட்டு வாறன்; தோட்டத்துக்காலை போய் சின்னியைக் கொண்டு போய் விட்டிட்டு வா!''

நன்னியனின் பதில் என்ன? என்பதைப் பற்றி அவருக்குக் கவலையில்லை. அவர் பெரு வரம்பால் நடந்து தலைமைக்காரன் வீட்டுப் பக்கமாக மறைந்து விட்டார்.

தம்பாப்பிள்ளையர் சொல்லியது போல அவர் மேற்குப் புறத்தால் மறைய கிழக்குப் புற வரம்பால் நடந்து வந்தாள் முத்திப் பெட்டை.

''நன்னி, கமக்காறிச்சி குரக்கன் றொட்டியும், பால் கோப்பியும் தந்து விட்டிருக்கிறா; மம்பெட்டியை விட்டிட்டு இப்படி வா.'' என்று சொல்லிக் கொண்டே வரம்பில் உட்கார்ந்து விட்டாள்.

நன்னியன் வரம்புப் பக்கம் வந்து சேர்ந்தான். வாழைத் தடலில் சுற்றியிருந்த குரக்கன் மா றொட்டிகளை அவள் பிரித்து வரம்பில் வைத்தாள். றொட்டியைத்

தொட்டுக் கொள்வதற்கு பச்சை மிளகாய்ப் பச்சடியும் ஒரு மெல்லிய தடல் துண்டில் சுற்றி வைக்கப்பட்டிருந்தது.

நன்னியன் பெருவரம்புக்குட்பட்ட பாத்தி வரம்பில் இருந்து கொள்ள முத்திப் பெட்டை நன்னியன் பக்கமாக தடல்களை இழுத்து விட்டாள்.

கொடுப்பில் அடைந்து கிடந்த வெற்றிலைச் சக்கையை உதறித் துப்பியபோது குறிப்பறிந்து வெள்ளிச் செம்புக்குள் இருந்த பால் கோப்பியை, கூடவே எடுத்து வந்த தேங் காய்ச் சிரட்டையை துடைத்து விட்டு அதில் சிறிதளவு ஊற்றிக் கொடுத்தாள்.

அதைப் பெற்றுக் கொண்ட நன்னியன் அதனாலேயே வெற்றிலை வாயைக் கொப்பளித்து விட்டு, றொட்டி யைக் கடிக்கத் தொடங்கி விட்டான். பச்சை மிளகாய்ப் பச்சடியும் இதமாக இருந்தது.

''என்ன நன்னி, அயலுக்கை பெரும் கதையாக் கிடக்கு! நீ செல்லம்மாக் கமக்காறிச்சி வீட்டிலை இருந்த உன்ரை மோளைச் சொல்லாமல் கொள்ளாமல் கூட்டிக் கொண்டு போட்டியாம்; நேற்றைக்குக் காலமை கமக் காறிச்சி வந்து அண்ணன்காறனோடை துள்ளிப் போட்டுப் போனவ; என்ரை புரிசன் இருந்திருந்தா நன்னியன் இப்பிடிச் செய்வானே? எண்டு அழுது போட்டுப் போனவ. நீ அப்பிடிச் செய்திருக்கப்பிடாது. எட்டுப் பத்து வருசம் அன்னம் தண்ணி குடுத்து சீலை துணி குடுத்து அவளின்ரை சாமத்திய வீட்டை உங்களுக்கு இடஞ்சல் இல்லாமலே பாத்து முடிச்சுவிட... நீ இப்படிச் செய்தது சரியே?''

முத்திப்பெட்டை பேசி முடித்துவிட்டு நன்னியனின் வாயையே பாத்துக் கொண்டிருந்தாள்.

''பிள்ளை, என்ரை பிள்ளை புத்தி அறிஞ்சு மூண்டு வருசமாப் போச்சு. இவ்வளவு நாளும் அவளை வீட்டை கூட்டியர வேணுமெண்டு என்ரை பொடியள் எத்தினை கோசு சொன்னவங்கள்; நன்னியன் செய்நன்றி மறந்தவன் இல்லைப் பிள்ளை. ஏதோ தற்செயலா பொழுது படேக்கை கமக்காறிச்சியிட்டை நாலு பணம் காசு கேப்பம் எண்டு போனன். என்ரை பிள்ளை குளறிச் சத்தம் கேட்டுது. கோடிக்கை விட்டு சின்ன நயினார் அவள் குளறக் குளற பிடிச்சு...''

நன்னியன் மேலே பேச முடியாமல் விக்கினான்.

முத்திப்பெட்டைக்கும் அழுகை வந்து விட்டது.

சற்று வேளை மௌனம்!

குறுக்குக் கட்டு முந்தானைச் சேலையால் முகத்தைத் துடைத்துக்கொண்டு, செம்பில் இருந்த கோப்பியைச் சிரட்டையில் நிறைய ஊற்றி மண் கட்டிகளை அணைவாக வைத்துவிட்டு, முத்திப்பெட்டை எழுந்து போய்விட்டாள்.

பொழுது உச்சிக்கு வந்தபோது முத்திப்பெட்டை நன்னியனுக்கு உணவு கொண்டு வந்தாள்.

சிறு தஞ்சுப் பெட்டி ஒன்றில் சோறு. சோற்றில் கறி ஊற்றப்பட்டு குழைவான நிலையில் சோறு இருந்தது. அதை மூடி காய்ந்து போன நிலையில் தட்டுவம் ஒன்றும் இருந்தது.

இந்தக் காய்ந்த தட்டுவம் அவனுக்கானது. கமக்காரன் வீட்டுக்கு அவன் இடை இடையே போகும்போது அதில் தான் அவனுக்கு உணவு கிடைத்திருக்கிறது. அந்தத் தட்டுவத்தை கவனமாக பாதுகாத்து, இன்று அவனுக்கென அனுப்பியிருக்கிறாள் கமக்காறிச்சி.

சிறுகுடம் போன்ற மண் முட்டியில் நிறைய நீரும் அவள் கொண்டு வந்திருந்தாள். இப்போது அவள் நன்னியனிடம் எதுவும் பேசவில்லை.

கையை அலம்பிவிட்டுத் தயாரான அவனுக்கு குஞ்சுப் பெட்டிச் சோற்றை தட்டுவத்தில் சரித்துக் கொட்டினாள் முத்திப்பெட்டை.

பூசனிக்காய்க் கறியும், மரவள்ளிக் கிழங்குக் கறியும் சோற்றுக்குள் தாராளமாக இருந்தது. நன்னியன் மௌன மாகவே சாப்பிடத் தொடங்கிவிட்டான். காலை முத்திப் பெட்டை வந்தபோது கமக்காறிச்சி நேற்று வந்துவிட்டு போனதாக மட்டும்தான் சொன்னாள். இன்று காலை வந்ததாக அவள் சொல்லவில்லை. ஆனால் கமக்காரனோ தங்கை இன்றுதான் வந்து குளறிவிட்டுச் சென்றதாகவும் கூறினார். இதன் உண்மையை அறிய நன்னியன் விரும்பினான்.

''கமக்காறிச்சி நேத்து வந்திட்டுப் போனதெண்டு சொன்னியே முத்திப்பிள்ளை; இண்டைக்குக் கமக்காறிச்சி வந்ததாகச் சிலமன்?...''

நன்னியன் மெதுவாகக் கேட்டான்.

''வெள்ளணத் தொடங்கி நான் அங்கைதான் நிண்டனான் நன்னி; கமக்காறிச்சி வந்ததாக அசுமாத்தம் தெரியேல்லை; சிலவேளை காலம்பெற நான் இஞ்சை வந்தாப் போலை வந்திட்டுப் போனாவோ தெரியேல்லை; ஏன் நன்னியன் கேட்டனீ?''

முத்திப்பெட்டையின் கடைசிக் கேள்விக்கு நன்னியன் பதில் சொல்ல வேண்டியதாயிற்று. அவன் மனம் திறந்து காலை பேசிய பேச்சுக்குப்பின் அவளிடம் எதையும் மறைக்க அவன் விரும்பவில்லை.

''காலமை கமக்காறன் நீ வாறதுக்கு ஒரு அடிக்கு முந்தி வந்து தங்கச்சியார் காலமை வந்து, சின்னியை இன்னும் வரக்காட்டேல்லை எண்டு குறைபட்டுக் கொண்டு போனா எண்டு சொன்னவர். அதுதான் கேட்டனான்.'' என்று அவன் சொல்லிவிட்டான்.

''நன்னியன்! கமக்காறன் உனக்கு விட்டிருக்கிறார் விடுகை! பொய்யை மெய்யைச் சொல்லி உள்வீட்டு விசயத்தை மறைச்சு, உன்னை வளைச்சு சின்னிப்பெட்டையை அங்கை சேத்துவிடப் பாக்கிறார். நீ என்னைக் கேக்கிறதைப் பாத்தா, மோளை அனுப்பப் போறாய் போலை கிடக்கு?''

இப்படி அவள் மீண்டும் ஒரு கேள்வியுடன் முடித்தாள். நன்னியனின் ரோசத்தை அவள் தட்டிவிட முற்பட்டாள். அவள் நினைத்தது சித்தித்து விட்டது.

''நாங்கள் அண்டாடம் காட்சியன்தான் பிள்ளை எண்டாலும் மானத்தை வித்துப் போட்டுச் சீவிக்கிறதை விட, நஞ்சு வேரைப் பிடுங்கித் திண்டு போட்டுச் செத்துப் போகலாம். எங்களைக் கவட்டுக்கை வைச்சுக் கஞ்சி வடிக்கலாம் எண்டு கமக்காறரவை நினைச்சினமெண்டா நெடுக உது நடவாது!''

நன்னியன் சற்று ஆக்கிரோசத்துடன் பேசினான். முத்திப் பெட்டைக்கு இவனின் பேச்சு நெஞ்சை நிறைத்தது. தனது மூன்று பெட்டைக் குஞ்சுகளையும் மிகக் கவனமாக கட்டிக் காத்து வருபவள் அவள். மூத்தவளுக்கு இப்போது வயது இருபதுக்கு மேலாகிறது; இன்னமும் அவளைப் பற்றி ஒரு கிஞ்சல் கதையும் வராமல் பாது காத்து விட்டாள். இரண்டாவது பெட்டைக் குஞ்சு பக்கு வப்பட்டு மூன்று வருடங்களாகிறது. கடைக்குட்டிக்கோ இன்றோ நாளையோ புத்தி அறியும் பருவம். எல்லாவற் றுக்கும் மூத்ததாக ஒருவன் பிறந்திருந்தான். அவனுக்கு இருபது வயது நடக்கும்போது சுடலைப் பிட்டிக்குள் இருக்கும் பூவரச மரத்தில் தூக்குப் போட்டுக் கொண் டான். அவன் ஏன் தூங்கிச் செத்தான் என்பது ஊருக்கு இன்னமும் தெரியாது. ஆனால்...முத்திக்கு...? ''செல்லை யனாகிய மகன் தன்னைத் தேடி நயினார் வீட்டுக்கு வருவது...செவ்வந்தி நாச்சியாருடன் சிரித்துச் சிரித்துப் பேசியது......பின்பு அவன் செத்துப் போனான்!''

நன்னியன் சாப்பிட்டு முடியும் வரை இருந்து மார்புக் கொசுவத்தினுள் சொருகி வைத்திருந்த கொட்டப் பெட்டி அடுக்கைப் பிரித்து நன்னியனுக்கும் ஒரு வாய் வெற்றிலை கொடுத்து, குஞ்சு பெட்டியையும், தண்ணி முட்டியையும் எடுத்துக் கொண்டு போகப் புறப்பட்டு விட்டாள் முத்திப் பெட்டை.

''நன்னி உவங்கள் ஒரு இரணியப் பிறப்புகள்; கவனம்!'' என இலேசாக எச்சரித்து விட்டுப் போனாள்.

எப்படியும் இன்று குறிப்பிட்ட அளவு பாத்திகளைக் கட்டி முடித்துவிட வேண்டும்.

பொழுதின் வெளுப்பு கண்களுக்குத் தெரியாதவரை நின்று வேலைகளைக் கவனித்துவிட்டுப் புறப்பட்டு விட்டான் நன்னியன்.

அவன் தன் குடிசையை அண்மித்தபோது ஆளை ஆள் தெரியாத இருட்டு.

''என்னப்பா, இவ்வளவு நேரமும் என்ன செய்தனீ? கமக்காறனுக்கு வெட்டிப் புடுங்கின நீயோ...? மத்தியான மும் தீனில்லாமல் கிடந்திட்டு வர, உன்ர தலையிலை அப்பிடி எழுதிக்கிடக்கே...?'' என்று செல்லி சினத்துடன் கேட்டாள்.

''மனிசன் பட்டுவாற பாட்டிலை இவள் ஒருபக்கம்...'' என்று மண்வெட்டியைப் போட்டுவிட்டு நன்னியன் கிணற்றை நோக்கி நடந்தான்.

அந்த செம்பாட்டுக் கலட்டு வெளியில் வடகரை பக்கத்தில், பத்துப் பதினைந்து குடிகளுக்குப் பதில் ஒரே ஒரு நிலக் கிணறுதான். அங்கே இப்போது குளிப்பதற்காக கூட்டம் கூடியிருக்கும் என்பது செல்லிக்கு நன்றாகத் தெரியும். அவன் வருவதற்கிடையில் உலையில் போட்ட அரிசி அவிந்து கஞ்சி வடித்து அவனின் வயிற்றுக் கொதி யைத் தீர்த்து விடலாம் என்பது செல்லியின் எண்ணம்.

''பிள்ளை, விறு விறுவெண்டு அரிசியைப் போட்டு, மள மளவெண்டு எரியடி.'' என்று சின்னிக்குக் கட்டளை போட்டு விட்டு, அப்போதுதான் ஆலடிச் சந்தையில் வாங்கி வந்த பூஞ்சைக் கன்னிக் கருவாட்டினை வெட்டி அதன் செதில்களை விறாண்டிக் கொண்டிருந்தாள் செல்லி.

''அப்பு இன்னமும் வரேல்லையோணை...'' என்று கேட்டுக் கொண்டே இளையவன் வந்தான். அவள் ஒரு கையில் கொடுவாக் கத்தியும் மறுகையில் குழைக்கட்டும் இருந்தது.

''இப்பான் ஒரு அடிக்கு முந்தி வந்து கிணத்தடிக்குப் போறான் பாவி.'' என்று செல்லி தனது மன ஏக்கத்தைப் பெரு மூச்சோடு காட்டிக் கொண்டாள்.

மறையன் மறி கத்தியது.

குழைக் கட்டைக் கொண்டு இளையவன் கோடிப் பக்கம் போனான். சின்னி அடுப்பில் ஏற்றி வைத்த உலை சீக்கிரம் கொதித்துவிட வேண்டும் என்ற ஆதங்கத்தில் அடுப்போடும் நெருப்போடும் போராடிக் கொண்டிருந்தாள்.

''தம்பாப்பிள்ளை கமக்காறன் என்ன சொன்னவரா மணை?'' குடில் கோடிக்குள் இருந்து இளையவனின் கேள்விக் குரல் கேட்டது.

''அவன் பாவி வாற பசி வெக்கையிலை உதைக் கேக்கிறதே? வரட்டுக்கன் கேப்பம்!'' செல்லி பதில் சொன்னாள்.

''பூக்கண்டர் இப்ப உதிலை என்னோடை கதைச்சிட்டுப் போனவர். கொப்பர் வந்தோண்ணை தன்னை ஒருக்கா வந்து சந்திக்கச் சொன்னவர். காளிகோவிலடியிலை இண்டைக்கு திருவிழாக் காறருக்குக் காளாஞ்சி குடுக்கிறதாம்; எங்கடை ஆக்களின்ரை காளாஞ்சியும் வேண்ட வேணுமாம். கெதியிலை வரச் சொல்லிப் போட்டுப் போறார். அப்பு எப்ப குளிச்சிட்டு வருகுதோ தெரியேல்லை. நான் போய் சொல்லிப் போட்டு வரட்டேயணை?''

இளையவனின் இந்தப் பேச்சு நேற்றுப் பண்டாரப் பொடியன் வந்து சொல்லிப் போட்டுப் போனதை நினைவு படுத்தியது அவளுக்கு.

''எட, நானும் தீர மறந்து போனன்! நேற்றுப் பண்டாரப் பொடியனும் வெளித்துண்டுக் காணிக்கை நிண்டு குரல் வைச்சிட்டுப் போனவன். நான் மறந்து போனன்!'' செல்லி தன் மறதியை நொந்து கொண்டாள்.

''என்னத்தையடி ஆத்தை மறந்தனீ?'' என்று கேட்டுக் கொண்டே நன்னியன் வந்து விட்டான்.

''ஏனப்பா, நீ குளிக்கேல்லையே...?'' என்று செல்லி கேட்டு சமாளித்தாள்.

''அங்கை ஒரு பெருவாரி சனமாக் கிடக்கு, மேலை மாத்திரம் கழுவிப் போட்டுவாறன்.'' என்று நன்னியன் பதில் சொன்னான்.

''இண்டைக்குக் கோயில் திருவிழாக் காறருக்கு காளாஞ்சி குடுக்கிறதாம்; பூக்கண்டர் இளையவனைக் கண்டு சொல்லிப் போட்டுப் போறாராம். நேற்று செக்க லுக்கைப் பண்டாரப் பொடியனும் வந்து சொல்லி போட்டுப் போனவன். நான் உனக்குச் சொல்ல மறந்து போனன்!''

மெதுவாக செல்லி சொல்லி வைத்துவிட்டாள்.

''எடி, அறுவாளே! இப்பதானே சொல்லிறாய்? தோயாமல் கொள்ளாமல் காளாஞ்சி வாங்கப் போகலா மோடீ?'' என்று நன்னியன் செல்லியைக் கடிந்துவிட்டு மீண்டும் கிணற்றடியை நோக்கி நடந்தான்.

''சுணங்குமெண்டால் உதிலை மூத்தவன் வீட்டை போய் உப்புத் தண்யெண்டாலும் தோஞ்சிட்டு வாவன!'' செல்லி மூத்தவன் வீட்டு உவர் நீர்க் கிணற்றை ஞாபகப் படுத்தினாள்.

அவசர அவசரமாக, ஓட்டமும் நடையுமாக மூத்தவன் வீட்டுப் பக்கம் போன நன்னியன் சிறிது நேரத்தில் திரும்பி விட்டான்.

காளிகோவில் பக்கமாக சேமக்கல ஓசை மெதுவாகக் கேட்டது. அங்கே காளாஞ்சி கொடுப்பதற்கான பூசை தொடங்கப் போகிறது. அதற்கான முன் அறிவிப்புத்தான் இந்த சேமக்கல ஓசை!

தோய்ந்த தலையை சரியாக உணர்த்தாமல் அவசர அவசரமாக அள்ளி முடிந்து கொண்டு தோய்த்து உள் கொடியில் காய்ந்து கொண்டிருந்த செம்பாட்டுக் கறை ஏறிய வேட்டியை இறுக்கிக் கொண்டு, தாழ்வாரத்தில் தொங்கிய சங்குக் கோழைக்குள் இருந்து திருநீற்றை அள்ளி நெற்றியை நிறைத்து மிகுதியை உச்சம் தலையில் இட்டு, அதன் மிகுதியை வாயில் போட்டுக் கொண்டே நன்னியன் கோவிலுக்குப் புறப்பட்டுவிட்டான்.

செல்லி இப்போது அவனுடன் ஒன்றும் பேசக்கூடாது. அவனுக்கு எரிச்சல் வந்து விட்டால் கையில் அகப்பட்ட தால் அவளை தாக்கி விடுவான்.

நன்னியன் கோயிலடிப் பக்கம் போனபோது காளாஞ்சி கொடுப்பதற்கு தயார் நிலையில் இருந்தார்கள். கோவிலுக்கு முன்னால் மூன்று தீப்பந்தங்கள் எரிந்து கொண்டிருந்தன.

சாமிக் கூடத்திலிருந்து தெர்ப்பை, சந்தணம், குங்குமம், திருநீறு, பிரசாதம் ஆகிய அடுக்கப்பட்ட ஏழு வெற்றிலைச் சுருள்களை எடுத்துக் கொண்டு பெருங் குடும்பி ஐயர் வெளியே வந்தார்.

''காளாஞ்சிக்காறர் எல்லாம் சரியோ?'' என்று ஐயர் கேட்ட போது, தம்பாப்பிள்ளையர் ஒரு முறை எல்லோரையும் சுற்றிப்பார்த்து விட்டு கை விரல்களை மடக்கி கணக்கெடுத்துக் கொண்டார்.

''கட்டாடி பகுதி வந்திட்டுது!'

பரியாரி பகுதி வந்திட்டுது!

மூப்பன் பகுதி வந்திட்டுது!

பள்ள பகுதி வந்திட்டுது!

தச்ச பகுதியும் வந்திட்டுது!

எங்கடை பகுதியும் சரி!...

நளவ பகுதிக்கை இருந்துதான் நன்னியனைக் காணேல்லை!''

என்று தம்பாப்பிள்ளையர் முணு முணுத்துக் கொண்டார். சற்று இருளுக்குள் நின்ற நன்னியன்.

''நான் இஞ்சை நிக்கிறனாக்கும்'' என்று சொல்லிக் கொண்டே சற்று வெளிச்சம்பட வந்து நின்றான் நன்னியன். தலையிலிருந்து வடிந்த நீரினால் அவன் வேட்டி நனைந்திருந்தது.

''எட, நன்னியனும் வந்திட்டான்! அப்ப சரி! ஐயா காளாஞ்சியைக் குடுங்கோ.'' என்றார் தம்பாப்பிள்ளையர்.

''முதல் கொடியேற்ற திருவிழாக் காளாஞ்சிக்காறர்!'' ஐயர் குரல் வைத்தார். தம்பாப்பிள்ளையர் முன்வந்து மிடுக்குடன் களாஞ்சியைப் பெற்று கொள்ள மடி முடிச்சினுள் தயாராக வைத்திருந்த தெர்ப்பையை எடுத்து அவரின் சின்னி விரலில் செருவிட்டார் ஐயர்.

''ரெண்டாம் திருவிழாக் காளாஞ்சிக்கறர்'' ஐயர் அழைத்தார்.

''கட்டாடி கதிராமு வா. வா! காளாஞ்சியை வேண்டு... காளாஞ்சியை வேண்டிறாய் போனமுறையைப் போல கோசு போகாமல் திருவிழாவைச்சிச் செய்ய வேணும் கண்டியோ!'' என்று தம்பாப்பிள்ளையர் கூற ஐயரே காளாஞ்ச்சி சுருளை கதிராமுவிடம் கொடுத்தார்.

''மூண்டாம் திருவிழாக் காளாஞ்சிக்காறர்...!''

''ஆர்? ஆரது... விசுவன் ஆச்சாரியே! நீ மற்றவை யின்ரை திருவிழாவுக்கு விட்டுக் குடுக்காய் எண்டு எனக்குத் தெரியும்; போனமுறையிலும் பார்க்க சீராய் இருக்க வேணும் என்று தம்பாப்பிள்ளையர் கூற ஐயரே விசுவன் ஆச்சாரிக்கும் காளாஞ்சிச் சுருளைக் கொடுத்துவிட்டார்.

''ஆர் நாலாம் திருவிழாக் காளாஞ்சி?'' ஐயரின் குரல்!

''பரியாரி கணவதியன்! கொப்பர் செத்தாப்பிறகு முதன் முதலாக் காளாஞ்சி வாங்கிறாய்; ஏதோ கொப் பற்றை பேரைக் காப்பாத்திப்போடு'' என்று தம்பாப்பிள் ளையர் முகமன் கூற, கணவதியன் காளாஞ்சிச் சுருளுக்குக் கையை நீட்ட, ஐயருக்குப் பதிலாக பண்டாரிப் பெடியன் கணவதியன் கையில் காளாஞ்சிச் சுருளை உயர்த்திப் போட்டான்.

''ஐஞ்சாம் திருவிழாக் காளாஞ்சி!''

தம்பன் முன்னே வந்தான்.

''எட, தம்பனே? முறைக்கு முறை பள்ளற்றை திரு விழா எண்டால் நாலு பக்கத்திலும் இருந்து சமை அள்ளுப் பட்டு வாறது. உனக்கு நான் கணக்கச் சொல்லத் தேவை யில்லை...'' தம்பாப்பிள்ளையர் சொல்லி முடிக்க, பண் டாரிப் பெடியன் காளாஞ்சிக் சுருளை தம்பன் கையில் உயர்த்திப் போட்டான்.

''ஆறாம் திருவிழாக் காளாஞ்சி!''

மூப்பன் மாதன் பக்கவாட்டுக்கு வந்து விட்டான்.

''இஞ்சாலை வாடா...... உன்ரை ஆக்கள் கொஞ்சக் குடி எண்டாலும் உங்கடை திருவிழா மற்றவைக்குக் குறை வாய் இருக்கிறேனில்லை. சொல்லிப்போட்டன்; திருவிழா உச்சமாய் இருக்கவேணும். காசைப்பற்றி யோசிக்கப் படாது. கடன்கிடன் வேணுமெண்டாத் தாறன். காளி ஆச்சி அள்ளித்தரும்!'' தம்பாப்பிள்ளையர் பேச்சு முடிவ தற்கிடையில், பண்டாரிப் பொடியன் காளாஞ்சிச் சுருளை மாதன்கையில் போட்டுவிட்டான்.

''ஆர் கடைசித் திருவிழா காளாஞ்சி...?'' ஐயர் அழைத்தார்.

நன்னியன் தயங்கித் தயங்கி முன் வந்தான்.

''இந்தா நன்னியன், நான் சொல்லிப் போட்டன். உன்ரை காளாஞ்சிக்குப் பிழையில்லாமல் திருவிழா செய்து முடிக்க வேணும்! விடிஞ்சு வேள்வி துவங்கும் மட்டும் நளப் பொடியளின்ரை திருவிழா முடியிறேல்லை எண்டு யாழ்ப் பாண சிலோன் முழுக்க கதை; உனக்குக் கணக்கச் சொல்லன்; கண்டியோ!'' தம்பாப்பிள்ளையர் பேசிமுடித்து விட்டார்.

நன்னியன் கையில் பண்டாரிப் பெடியனால் காளாஞ்சி சுருள் போடப்பட்டது.

காளாஞ்சி முடிந்து விட்டது.

ஒவ்வொருவராகக் கலையத் தொடங்கினர். திரு விழாத் தொடங்குவதற்கு இன்னும் பதினைந்து நாட்களே பாக்கி இருந்தன. அதற்குள் பணத்தைச் சேர்த்துவிட வேண்டும் என்று பேசிக் கொண்டே எல்லோரும் கலைந்தனர்.

நன்னியன் தோட்ட வரம்பில் இறங்கிய போது பூக்கண்டர் ''நன்னியன்!'' என்றார்.

நன்னியன் திடுக்கிட்டுக் கொண்டே ''நயினார் கோவிலடிக்கு வா ற னெ ண் டு இளையவனிட்டைச் சொன்னதாம், கோயிலடியிலை காணேல்லையாக்கும்!'' என்றான் வினயமாக.

''நான் கோயிலடிலைதான் நி ண் ட னா ன்; நீ காணேல்லை. தம்பாப்பிள்ளையர் உங்களையெல்லாம் கட்டி அவிட்டதைப் பாத்துக் கொண்டுதான் நிண்ட னான்...... அது கிடக்கட்டும், பெட்டையின்ரை விஷயம் ஏதும் கதைச்சவரோ?'' என்றும் பூக்கண்டர் கடைசியில் கேட்டார்.

காலையில் தம்பாப்பிள்ளையருடன் கதைத்த கதை யினையும், முத்திப்பெட்டையுடன் நடந்த சம்பாஷனை யையும் சொல்லிக் கொண்டே சென்றான் நன்னியன்.

அவன் வீ ட் டு க் கு ச் சமீபம் வந்து, ''பிறகு சந்திக்கிறேன்'' என்று பூக்கண்டர் கூறிவிட்டு பிரிந்து விட்டார்.

நன்னியனைக் கண்டதும் ஒன்றுமே பேசாமல் செல்லீ அவனுக்கு உணவு கொடுக்க ஆயித்தமானாள்.

குடத்தடிக்குச் சென்று வாயை அலம்பிவிட்டு வந்த வன், ''என்ன கறியடியப்பா காச்சினனீ?'' என்று கேட் டான்.

''சந்தேக்கை இண்டைக்கு மீன்கீன் ஏதும் வரேல்லை யப்பா; கருவாட்டுக் குழம்பு வச்சனான்...''

அவள் சொல்லி முடிக்கவில்லை; நன்னியன் கறிச் சட்டியைத் தூக்கிப் படாரென நிலத்தில் அடித்தான்; சோற்றுப் பானையை உதைத்தான்; ''நான் காளியாச்சி யிட்டைப் போய் காளாஞ்சி வாங்கிக் கொண்டு வாறன். காளாஞ்சி வேண்டின இந்தக் கையாலை கருவாட்டை தொடச் சொல்லிறாள் அறுந்தவள்!'' என்று கத்தினான்.

நன்றாக விடிவதற்கிடையில் செல்லி கண் திறந்தாள். நன்னியன் படுக்கையில் இல்லை. வெளியே வந்து தாழ்வாரத்தைப் பார்த்தாள். மண் வெட்டியும் இல்லை.

நேற்றுக் காலை பழஞ்சகசியுடன் வேலைக்குப் போனவன், இரவு வந்து உடனடியாகவே தோய்ந்து விட்டு, காளாஞ்சி வாங்குவதற்காகப் போய் திரும்பி வந்து கருவாட்டுக் கறி காய்ச்சிவிட்டதற்காக சட்டி பானையை உடைத்துவிட்டு, சுருண்டு படுத்தவன், இருட்டோடு எழுந்து மறுபடியும் தோட்டத்திற்குப் போய் விட்டானே! என்பதை எண்ணிய போது செல்லிக்கு அழுகை வந்தது.

இளையவனைப் பார்த்தாள். அவன் அப்போதுதான் சுருண்டு எழும்பி தோட்டக்கரைப் பக்கம் போய் தோட்டக் கரை சிறு வடலிக் கும்பலுக்குள் மறைந்துவிட்டான்.

செல்லி சின்னிப்பெட்டையை எழுப்பினாள். கோடிக்குள் கவிழ்த்திருக்கும் ஆரதச் சட்டி பானையை எடுத்து, உலையை மூட்டி நேற்றைய புழுங்கல் அரிசிக் குறுணியை போட்டு, சிறிதளவு தேங்காய் பாலையும் பிழிந்துவிட்டு பாற் கஞ்சி காய்ச்சும்படி பணித்தாள்.

சின்னிப்பெட்டை அடுப்படிக்குள் போய் விட்டாள். அவளுக்கு இன்னும் நித்திரை சோம்பல் முறியவில்லை.

வெளியே போன செல்லி நன்றாகப் பொழுது விடிந்து வெய்யில் காணுவதற்கிடையில் வந்துவிட்டாள். அவள் கையில் பிரண்டைத் தண்டுகள் புத்தம்புதிய துளிர்களுடன் கிடந்தன. அவசர அவசரமாக அவள் தளிர்களை ஒடித்து தளிர்த் தண்டுகளை மடக்கி முறித்து, நான்கு வெங்காயப் பல்லுகளையும் உள்ளிப் பூடுகளையும், பத்து பச்சை மிள

காயகளையும் சேர்த்துக்கொண்டு அம்மிக் கல்லடிக்குப் போனாள்.

செல்லி பிரண்டைப் பச்சடி அரைக்கிறாள். அம்மியில் குளவி உருளும் ஓசை அவசர அவசரமாக கேட்டது.

''எடி, சின்னப்பெட்டை எப்பன் உப்புக்கல்லுக் கொண் டாடி மறந்து போனன்.''

செல்லி அம்மியில் குளவி உருளும் ஓசையோடு சேர்ந் தாற்போலக் குரல் கொடுத்தாள். சற்றுவேளைக்குள் பிரண்டைப் பச்சடி தயாராகிவிட்டது.

''ஆத்தை கஞ்சி கரைஞ்சு போச்சனை; இறக்கட்டே?'! சின்னி கேட்டாள்.

கஞ்சி இறக்கப்பட்டது.

''இஞ்சை கொண்ணனும் வாறான்; பச்சடியோடை கஞ்சியை குடு. அவனும் குடிச்சுட்டு தோட்டத்துக்குப் போகட்டுக்கு; நான் இதைக் கொப்பருக்குக்கு குடுத்திட்டு வாறன்; ராத்திரி கருவாட்டுக்கறி எண்ட கோவத்திலை வெறு வயித்தோடை போட்டான் பாவி!'' என்று கூறிக் கொண்டு, கஞ்சி முட்டி, பச்சடிச் சிரட்டை சகிதம் செல்லி புறப்பட்டு விட்டாள்.

கஞ்சி முட்டி கொதித்தது.

பக்கத்தே அளவெடுத்து வெட்டினது போல கங்கு மட்டைத் துண்டொன்று கிடந்தது; அதை எடுத்து முட்டி யின் அடிப்பாகத்திற்கு வைத்துப் பிடித்தபடி செல்லி போய் விட்டாள்.

செல்லி தொலைவில் வரும்போதே நன்னியன் கண்டு விட்டான். இப்போது செல்லிமேல் அவனுக்கு இரக்கம் வந்தது.

''நேற்றைக்கு மத்தியானம் எண்டாலும் முத்திப் பெட்டை கொண்டந்த சோத்தைத் திண்டன். அவள் பாவி நேத்து முழுக்கப் பட்டினி! ராத்திரியும் பட்டினி! எண்டாலும் நான் அப்பிடிச் செய்திருக்கப்பிடாது. நான் காளாஞ்சி வாங்கக் கோயிலுக்குப் போக வேணுமென்பதை மறந்திராவிட்டால் அவள் கருவாடு காச்சியிருக்க மாட்டாள்! விடியக்கு முன்னம் ஏதோ கொண்டோடி வாறாள். பாவம் பெண் பிறவி!'' நன்னியன் தன் மனதிற்குள்ளேயே பேசிக் கொண்டான்.

செல்லி வந்துவிட்டாள்.

''உண்ணாணையப்பா நான் காளாஞ்சி விசயத்தைத் துண்டா மறந்து போனன்...'' செல்லியால் மேலே பேச முடியவில்லை. நன்னியன் வரம்புக்கு வந்துவிட்டான். செல்லி சிரட்டைக்குள் கஞ்சியை ஊற்றினாள். அது இன்னும் கொதித்துக்கொண்டுதான் இருந்தது.

பச்சைப்பசேலென்ற பச்சடியைக் கிள்ளி அவனின் உள்ளங்கையில் வைத்தாள்.

அது ஜில்லெனக் குளிர்ந்தது.

அவன் கஞ்சி குடிக்கும் தோரணையை அவள் பார்த்துக்கொண்டே, அவனின் தோள்பட்டையில் படிந்திருந்த செம்பாட்டுப் புழுதியைத் துடைத்து விட்டுக் கொண்டே, அவனிடமிருந்து பார்வையைத் திருப்பி, அங்குமிங்கும் பார்த்தாள். அவனின் தோள் மூட்டின் புழுதியைத் துடைத்து விட்டதில் அவளுக்கு வெட்கம்! யாராவது பார்த்துவிட்டால்... ''இந்தக் கிழடு சென்றும் ...'' என்று நினைத்து விடுவார்களே என்ற பயம்!

''கமக்காறன் வந்தவரே?'' செல்லி கேட்டாள்.

''அவர் வர நேரங்கிடக்கு!'' நன்னியன் பதில் சொன்னான்.

''கமக்காறன் கின்னியின்ரை அவாலைக் கேட்டலு அவளுக்கு நேற்றைக்குத் தொடக்கம் தொடமாட்டாமல் வந்திட்டுது எண்டு சொல்லு! அஞ்சுக்குத் தோய வாத்துப் போட்டு விடலாமெண்டு சொல்லு... ஏன் கமக்காறறவை யோடை வீண் கரைச்சலை!'' செல்லி ஒரு ஆலோசனை யைச் சொன்னாள்.

நன்னியன் பேசவில்லை.

''ஐஞ்சாறுநாள் போனாப்பிறகு கொண்டு போய் விடச் சொல்லுறாய் போலை கிடக்கு?'' நன்னியன் சற்று யோசித்துவிட்டு கேட்டான்.

''பிறகு வேறை விதமாய்ச் சொல்லிப் பார்க்கலாம்... அவளுக்குச் சம்மந்தம் ஒண்டு பேசி வருகுது; கிட்டடியிலை சோறு குடுப்பீக்கப் போறம் எண்டு சொல்லிப் பார்க் கலாம்.''

ஓமடியப்பா... நல்ல புத்திதான் சொல்லித்தாறாய்... மாப்பிளை எங்கையடா? எண்டு கமக்காறன் கேப்பார்; நிலாவரைக் கேணீக்கை எண்டு சொல்லட்டே நான்? சும்மா பொய்யளை ஏன் சொல்லுவான்? நான் அவளை விடமாட்டன் எண்டு வெட்டொன்று துண்டு ரெண்டாச் சொல்லப்போறன்.''

நன்னியன் இதற்குமேல் பேசவில்லை; செல்லியும் பேசவில்லை.

''இண்டையோடை பாத்தி கட்டல் முடியுது. பறு வத்துக்கு நாத்தும் ஊண்டிப் போட்டு... திண்ட வீட்டுக்கு ரெண்டகம் செய்யாமல் தண்ணி வாய்க்காலையும் கோலி விட்டிட்டு உவற்றை வேலையை நான் விடப்போறன். உவரிட்டை வேலை செய்யிறதாலைதானை நன்னியனை உவர் கட்டி அவுக்கப் பாக்கிறார்...''

செல்லிக்கு நன்னியன் சொல்வது சரியாகவே பட்டிருக்க வேண்டும். அவள் தொடர்ந்து பேசவில்லை.

நன்னியன் கஞ்சி குடித்து முடித்ததும் ஏதனங்களைப் பொறுக்கியபடி அவள் திரும்பினாள்.

''மத்தியானம் ஏதும் கொண்டு வரட்டோ இல்லாட்டி நீ வாறியோ?'' செல்லி கேட்டாள்.

''நேத்தையைப் போல முத்திப் பெட்டை சோறு கொண்டந்தாலும் கொண்டருவாள்.'' என்று நன்னியன் பதில் சொன்னான்.

நேற்று மத்தியானம் கமக்காறன் வீட்டுச் சோறு வந்ததை செல்லியிடம் சொல்லாமல் இருந்தது அவளின் மன அவசத்தை மேலும் உயர்த்த வேண்டுமென்றுதான்! அவளின் இன்றைய வரையிலான குடும்ப வாழ்க்கையில் தான் பட்டினி கிடந்ததாகக் காட்டிக் கொண்டு அவள் மனதைக் கசக்கிப் பிழிந்து இன்பங் கண்ட அந்த வாலிபச் சேட்டைகள் இப்போதும் நினைவுக்கு வந்தன.

ஆனாலும் அவனாகவே இப்பொழுது முத்திப்பெட்டை சோறு கொண்டு வந்ததைச் சொல்லிவிட்டான்.

''ஓ... ஓ... நேத்தைக்கு கமக்காறன்ரையை இறுக்கிப் போட்டுத் தான் தம்பி பட்டினி எண்டு எனக்குக் கெப்பர் காட்டினவர்'' என்று கூறி மனதிற்குள் சிரித்தபடியே செல்லி போய்விட்டாள்.

நன்னியன் மீண்டும் பாத்தி கட்டத் தொடங்கி விட்டான்.

தொலைவில் காலை றெயில் கூவும் ஓசை கேட்டது. அது புக்குப் புக்கென்று புகை கக்கிக்கொண்டு கொக்குவில்

ஸ்ரேசனில் இருந்து கிளம்பி மெது மெதுவாகவே தோட்ட வெளிக்கூடாக செல்வது இலேசாகத் தெரிந்தது.

நேற்று முதல்நாள் கொழும்பில் இருந்து புறப்பட்ட அந்தப் பாரிய ஜீவன் நீண்ட பெட்டிகளை இழுக்க முடியாமல், நீண்டதூரம் ஓடிவந்த களைப்பில் முக்கித் தக்கி தயங்கித் தயங்கிச் செல்வது போல இருந்தது.

சற்றுவேளை அது அசைந்து, அசைந்து செல்லுவதையே பார்த்துக் கொண்டு நாரியை நிமிர்த்தினான் நன்னியன்.

பட்டுப்போன்ற மெல்லிய வெய்யில் அவன் உடம்பைப் போர்த்தியது. சுருக்கம் விழுந்த அவனின் தசைப்பகுதிகள் பளபளப்பாக இருந்தன. நன்னியனுக்குப் போய்க் கொண்டிருந்த வாலிபப் பருவம் போன வழியிலேயே திரும்பிக் கொண்டிருந்தது போன்ற பிரமை.

''என்னடா நன்னியன்! முந்திப் பிந்தி றயிலைக் காணாதமாதிரிப் பாத்துக் கொண்டு நிக்கிறாய்?'' என்று கேட்டுக் கொண்டே தம்பாப்பிள்ளையர் வந்தார். அதற்கு என்ன பதில் சொல்லுவதென்றே நன்னியனுக்குத் தெரியவில்லை.

''நான் சொன்னா நீ நம்பமாட்டாயடா நன்னியன். எனக்கும் இப்ப வயது அறுபது தாண்டியிட்டுது. இண்டையவரை நான் உந்தப் பரிசுகெட்டறயிலிலை ஏறேல்லை. ஏனெண்டு நீ கேப்பாய்? நீ எங்கடை நளவன், என்னை றயிலுக்கை கண்டோண்ணை உனக்குத் தெரியும். நீ மற்றப் பக்க வாங்கிலை எண்டாலும் போய் இருப்பாய், என்ன ஆக்கள் எண்டு தெரியாமல் எத்தனைபேர் ஏறுவாங்கள்; இறங்குவாங்கள். எல்லோருக்கும் நான் தாவடி தம்பாப்பிள்ளை எண்டு தெரியுமே? எப்பனும் மட்டு மரியாதை இல்லாமல் இடிச்சுக் கொண்டு இருப்பாங்கள். ஏட, இவன்

மூப்பன்ரை ஆக்கள்கூட உதிலை ஏறி வாறாங்களாம் எண்டு கேள்வி! கனக்க வேண்டாம்; மூப்பன்ரை ஆக்கள் உன்னோடை சரிக்கிருந்தா உனக்குப் பத்தாத இடமெல் லாம் பத்தாதே சொல்லு பாப்பம்? இப்ப வசுவுக்கைஏறிறம் எண்டு வைச்சுக் கொள். வசு விடுகிறவனுக்கு வாங்கிலை ருக்கிறவங்கள் ஆர்? இருக்காதவங்கள் ஆர்? எண்டிறது நல்லாத் தெரியும்! நம்பிப் போய் வரலாம்! அதுவும் தாவ டித் தம்பாப்பிள்ளையை தெரியாத வசுக்காறங்கள் இருக்கி றாங்களே! நான்மேலை இருந்தா எந்த வெள்ளாள னெண் டாலும் கொஞ்சம் அரக்கித்தான் இருப்பாங்கள். அது தான்ரா நன்னியன் றெயில்வந்து இருவத்தைஞ்சு வருசங்க ளுக்கு மேலை இருக்கும். ஒரு நாளெண்டாலும் உந்தச் சனியனிலை ஏறியிருக்க மாட்டன். உனக்கெங்கை உதெல் லாம் தெரியப் போகுது?...''

''நீ ஒருக்கா உந்த றயில் றோட்டாலை நடந்து போய்ப்பார். றயில் றோட்டுக் கரையிலை நிக்கிற பயிர் பட்டையள் நல்லா வந்திருக்கோ எண்டு? உதுகளுக்காகத் தான்ரா நன்னியன் அந்த நேரத்திலை உதை நிப்பாட்ட நானும், கோச்சு வண்டிக் கொம்பனி நடத்தின ஆசைப் பிள்ளையரும், சொல்லப்பட்ட ஆக்கள் சிலபேரும் படாத பாடு பட்டம்! ஜோச்சுராசா யாழ்ப்பாணக் கோட்டைக்கு வரேக்கை பெட்டிசமும் எழுதிக் கொண்டே குடுத்தம். அவனும் ஓமெண்டு தலையாட்டிப் போட்டு றெயிலை நிப் பாட்டாமல் விட்டுட்டுப் போட்டான்...''

தம்பாப்பிள்ளையர் ஒரே மூச்சிலேயே றயிலின் விருத் தாந்தங்களைச் சொல்லி முடித்துவிட்டார்.

''இதெல்லாம் கமக்காரன் எனக்கேன் சொல்ல வேணும்?'' என்று நன்னியன் மனதிற்குள்ளேயே கேட்டுக் கொண்டு பேசாமல் நின்றான்.

தம்பாப்பிள்ளைக் கமக்காரனுக்கு இது ஒரு வித வியாதி? ஏதாவது ஒரு பழைய கதையைப் பற்றிச் பேச வந்துவிட்டால், அந்தக் குறிப்பிட்ட காரியத்தை அக்கு வேறு ஆணிவேறாகப் பிரித்து அத்தோடு தனக்கு இருந்த தொடர்பை எல்லாம் மிகைப்படுத்தி அணு அணுவாகப் பிய்த்து வைத்துவிடுவார். யாருடன் பேசுகிறேன்? ஏன் பேசுகிறேன்? என்பதைப் பற்றியெல்லாம் அவருக்குப் பகிர்ந்து பார்க்கத் தெரிவதில்லை. தனது பேச்சை விரும்பிக் கேட்கிறார்களோ, இல்லையோ என்பதைப் பற்றியும் அவர் கவலைப் படுவதில்லை. குறிப்பிடப்பட்ட சம்பவத்தில் அவர் தனது வெற்றிகளை மட்டும்தான் பேசுவார். என்றும் சொல்லிவிட முடியாது! கதையோடு கதையாக தோல்விகளையும், பின் வாங்கல்களையும் சொல்லி விடுவார். அப்படிச் சொல்லிவிட்டேன் என்பதற்காக அவர் பின்பு வெட்கப்படுவதும் இல்லை.

தென்புறம் காக்கைத்தீவு கடற்கரையில் இருந்த அவருடைய ஆதனம் தொடங்கி கரையாம்பிட்டி சவுக்காலைவரை வந்து, இடை இடையே ஊடுவிட்டு பள்ளக் காட்டுச் சந்திவரை உள்ளதென்னம் தோட்டம் வரை எட்டி முடிகிறது.

கிழக்கே குளப்பிட்டிச் சந்தியில் இருந்து, இடையே உள்ள நளவ கடவை உட்பட சிறு தோட்டக் காளி கோவிலடி வரை வந்து பனங்காணியில் முடிவுறும்.

வடக்கே கொத்தி மூலைசந்திப்பு உட்பட காளிகோவிலைத் தவிர்ந்த பரம்ப கடவையையும் நீக்கி மூங்கில்வளவு தம்பு உடையார் வீடு வரை வந்து முடியும்.

ஊட்டு நிலங்கள் வரை எல்லாமே தம்பாப்பிள்ளையருக்கும் தங்கை செல்லம்மாக் கமக்காறிச்சிக்கும் உள்ள ஆதனங்கள்.

இத்தனை சொத்துகளுக்கும் வாரிசுகளாக தங்கை செல்லம்மாவிடம் இரண்டு இலந்தைப் புழுப் போன்ற

ஆண்புழுக்கள். இவருக்கு ஒரேஒரு செவ்வந்திப்பூ போன்ற பெட்டைப் புழு! அவ்வளவுதான்.

தங்கை செல்லம்மாவின் கணவன் எப்போதோ இறந்து போய்விட்டான். தம்பாப்பிள்ளையரின் மனைவியோ அவரைப் போல இன்னும் உருக்குலையாத கிழட்டுக் குமர்!

தம்பாப்பிள்ளைக் கமக்காரரின் முக்கிய குலத்தோடு அவரின் சொத்துச் சுதந்திரச் சுருக்கம் இது.

கொத்தி மூலைத் தோட்டக் கரையோடு உள்ள காளி கோவிலின் ஏக எஜமான் இவர்தான். இவரின் அப்பன் வளவோடு வைத்திருந்த காளிதான். இப்போது அவரின் தலைமையில் மற்றும் ஆறு உபயகாரச் சாதியினருக்கும் பேரளவுக்கான காளியாக இருந்தது. அந்தக் காளியின் திருவிழாவுக்கான காளாஞ்சிக்காறர்களில் நன்னியனும் ஒருவன்.

''நன்னியன் நீயும் றயிலைப் பாத்துக் கொண்டு திண்டாப்போலை நானும் பழங்கதையளை உன்னோடை கதைச்சுப் போட்டன். அது சரி ராத்திரி காளாஞ்சியைக் கையை நீட்டி வாங்கிப் போட்டாய். எக்கணம் காசு கனக்கச் சேர்க்க வேணும். எப்ப காசு சேர்க்க வெளிக்கிடப் போறாய்?'' என்ற கேள்வியுடன் மீண்டும் தொடர்ந்தார்.

''சனிக்கிழமை நாளுக்குத் துவங்குவமெண்டு பாக்கிறனாக்கும்'' என்று மட்டும் நன்னியன் சொன்னான். அவருடன் இனி மட்டுக்கு மட்டாய்த்தான் கதைப்பது என அவன் முடிவெடுத்திருந்தான்.

''நன்னியன் மோளைக் கொண்டு போய் விட்டிட்டு வந்திட்டியோ?'' என்று திடீரென கமக்காறன் கேட்டார்.

நன்னியனுக்கு உடனடியாக பதில் சொல்ல நா எழ வில்லை.

''அதாக்கும்... அதாக்கும்... சின்னிக்குச் சூதகம் வந்திட்டுது எண்டு இப்பான் மனிசி வந்து சொல்லிப் போட்டுப் போறாள். அதுதான் நாலைஞ்சு நாள் செண்டு தோயவாத்துப் போட்டு விடுகிறனாக்கும்.''

நன்னியன் எப்படியோ பேசி முடித்து விட்டான். நெஞ்சு படக்படக் என இடித்துக் கொண்டது.

சற்று வேளை பேச்சில்லை.

''நன்னியன் உனக்குச் சொன்னா என்னடா? எனக்கு இப்ப ரெண்டு மூண்டு நாளா நெஞ்சு இடிச்சுக் கொண்டு தான்ரா இருந்தது. ஏதும் அப்பிடி இப்பிடி நடந்திடு மென்று ஏங்கிப் போனன். வீட்டிலை மனிசியும் ஆனவா யிலை சாப்பிடமாட்டனெண்டிட்டாள். தச்சேலா அப்பிடி ஏதும் நடந்திட்டா... மருமோனா வாற பொடியன்ரை மதிப்பு குறைஞ்சு போகும் எண்டு அவளுக்கு ஏக்கம் வந் திட்டுது. நல்ல காலம் நீ சின்னிப் பெட்டைக்குத் தீட்டு வந்திட்டு தெண்டு சொன்னாப் போலைதான் எனக்கு நெஞ்சுக்கை தண்ணி வந்திது...''

நன்னியனுக்கு இதைக் கேட்டதும் நெஞ்சு பத்தி எரிந்தது- அவன் பற்களை நறநறவெனக் கடித்துக் கொண்டான். அந்த ஓசை கமக்காரனுக்குக் கேட்டதோ இல்லையோ அவர் நடந்து கொண்டிருந்தார்.

''நன்னியன் முத்திப்பெட்டை ஏதும் தீன் கொண்டு வருவாள். மத்தியானம் வீட்டை ஓடாமல் பாத்தியைக் கட்டி முடிச்சுப் போடு'' கமக்காரனின் குரல் மட்டும் நன்னியனுக்குக் கேட்டது.

■றுவத்திலன்று பஞ்சாங்கப்படி அதிகாலை ஐந்து முப்பதுக்கு முதல் நாற்றை ஊன்ற வேண்டும். இரகு நாதையர் பஞ்சாங்கம் சொன்னால் சொன்னதுதான். அதிலிருந்து ஒரு வீசமும் பிசகாமல் தம்பாப்பிள்ளை கமக் காரன் நடந்து கொள்வார்.

வீட்டில் சுவரில் மாட்டப்பட்டிருந்த றோமன் கடிகாரம் ஐந்து தடவை அடித்ததும் அவர் எழுந்து கொண்டார்.

நன்னியன் சரியாக அந்த நேரத்திற்கு வந்துவிட வேண்டுமென்று திட்டம். சரியாக ஐந்தேகால மணிக்கு வீட்டில் இருந்து புறப்பட்டால் கொத்தி மூலைத் தோட் டத்தை வந்து அடைய நேரம் ஐந்து இருபத்தைந்து ஆகும். இது இத்தனை கால நடைமுறை தந்த அனுபவ முடிவு. அது சரியாகத்தான் இருக்கும்.

வெளிப்புற மரக் கேற்றடிக்கு நன்னியன் வந்து விட்டான்.

''நான் நன்னியன் வந்திருக்கிறனாக்கும் கமக் காரன்.''

அவனின் குரல் கேட்ட பின்புதான் தம்பாப் பிள்ளை யருக்கு மனது ஆறுதல் பட்டது. எங்கே நன்னியன் நாளுக்கு நாற்று நட வராமல் விட்டு விடுவானோ என்ற ஏக்கம் போய் விட்டது.

அவரின் மதிப்புக்குரிய நகுலன் நாய் குலைத்து ஓங்காரம் இட்டுக் கொண்டே படலையடிக்கு வந்தது.

''உஞ்சு...! உஞ்சு.....!!'' என்று நன்னியன் கேற் றுக்கு வெளியே நின்று விரலைச் சுண்டியபோது, நகுல

னுக்கு வந்திருப்பது நன்னியன்தான் என்பது தெளிவாகப் புரிந்து விட்டது. அதனால் அது வாலைத் தாழ்த்தி ஆட்டி அசைத்து அனுங்கிச் சினுங்கிக் கொண்டே மரக்கேற்று இடைவெளியால் பாதித் தலை வரை வெளியே நீட்டி, அவன் நீட்டிய கரத்தை நக்கத் தொடங்கி விட்டது.

',நன்னியன் வாடா. நீ நேரத்துக்கு வந்திடுவியோ என்று ஐமிச்சப்பட்டுக் கொண்டிருந்தன். வந்திட்டாய் வா!'' என்று கூறிக் கொண்டே வந்த கமக்காரன் இரு மரக்கதவுகளையும் இணைத்திருந்த சங்கிலியின் ஆமைப் பூட்டைத் திறப்பதில் சிறிது நேரத்தைக் கடத்தி விட்டார்.

ஆமைப் பூட்டென்றால் அதைத்தான் சொல்ல வேண் டும்! ஒரு தரவளிக்குள ஆமையளவில் அது இருந்தது. சமீபத்தில்தான் கொல்ல எல்லிப் போலையனிடமிருந்து செய்வித்துப் போட்டிருந்தார். பென்னம் பெரிய அதன் சாவி இன்னும் சரியாகப் படிந்து வராததால் பூட்டுத் திறக்க சிறிது நேரம் பிடித்தது.

''நன்னியன், கொல்லர் மாதனையாற்றை பூட்டை இவங்கடை பூட்டுத் தாண்டாது. எல்லிப் போலையனும் அவ்வளவு பிழையில்லை; அவனும் மாதனையின்ரை அடி தான் எண்டதாலை பூட்டும் அந்தக் குணத்தைக் காட்டுது'' என்று கூறி வாய் மூட முன் கிளிக் எனக் கட்டியம் கூறிக் கொண்டு பூட்டு ஆவென வாயைப் பிளந்தது.

நன்னியன் உள்ளேவர ஆமைப் பூட்டையும், சங்கிலி யையும் ஒற்றைக் கதவின் சட்டத்தில் மாட்டி பூட்டைக் கொழுவி அமத்தினார். பூட்டின் வில்லு சடக்கெனக் கொழுவிக் கொண்டது.

''பூட்டையிக்கை அவ்வளவு வில்லங்கம் இல்லை; திறக்கேக்கைதான் கொஞ்சம் பஞ்சிப்படுகுது.'' என்று

கூறிக் கொண்டே முன்னே கமக்காரன் கிணற்றடி வரை நடக்க நன்னியனும் பின்னால் நடந்தான். நன்னியனுக் குப் பின்னால் நகுலன் நடந்தது.

கிணற்றடி கல்தொட்டி தப்புத் தண்ணீரில் நாற்றுப் பிடிகள் வாளைத் தடலினால் சிறுகக் கட்டப்பட்டு போடப் பட்டிருந்தது.

புத்தம் புதிய நெடுந்தீவு நாற்கடகம் ஒன்றில் நாற்று களைப் பக்குவமாக அடுக்கினான் நன்னியன்.

பறுவத்து நாள் வெளிச்சம் பகல் போல இருந்தது.

கமக்காரிச்சியும் எழுந்துவிட்டாள். ''எடி, முத்தி! எடியே!'' என்ற அவளின் அதட்டலுடன் அவளும் எழுந்து விட்டாள். இரவு வெகுநேரம் வரை மாடுகளுக்கு ஓலை கிழித்ததினாலும், விடிய நாற்று நடப் புறப்படுபவர் களுக்கு ஏதாவது நீராகாரம் தயாரிக்க வேண்டும் என்பதற் காகவும் முத்தியை அம்மாள் அங்கேயே தாழ்வாரத்தில் படுக்க வைத்திருந்தாள்.

நாற்றுக் கட்டுகள் அடுக்கி முடியவும் முத்தி அரைச் சட்டி நிறைய கோப்பி கொண்டு வரவும் சரியாக இருந்தது. நன்னியனின் வழக்கமான சிரட்டையை தட்டிச் சுத்தப் படுத்தி நன்னியனுக்கு முன்னால் வைக்க, கமக்காரன் கமக்காரிச்சியிடம் கோப்பி வாங்கிக் குடிக்க உள்ளே போய்விட்டார்.

''என்ன நன்னி, உன்ரை சின்னப் பெட்டையின்ரை விசயம் என்னவாப்போச்சு?'' என முத்திப் பெட்டை காதுக்குள் கேட்டாள்.

இந்த வேளையில் அவள் இதைக் கேட்பாள் என அவன் எதிர்பார்க்கவில்லை.

''பொய்யை, மெய்யை சொல்லி ஒரு மாதிரிச் சமாளிச்சுப் போட்டன்'' என முத்திக்குப் பதில் சொன்னான்.

''நீ என்ன சொன்னனீ எண்டு எனக்குத் தெரியும். அவளுக்குத் தலை முழுக்கு வந்து பத்துப் பதினைஞ்சு நாள்தானாம் இருக்கும். அதுக்கிடையிலை பேந்தும் எப்பிடி வந்ததெண்டு கமக்காரிச்சி பெரிய கமக்கார னோடை துள்ளிப் பாஞ்சவ. நீ அவைக்கு புலுடா விடு கிறாய் எண்டு அவைக்கு விளங்கிப் போச்சு. ஏதோ புத்தியா நடந்து கொள். நான் வாறன்.'' என்று கூறி வெற்றுச் சருவச் சட்டியையும், சிரட்டையையும் எடுத்துக் கொண்டு முத்தி போய் விட்டாள்.

நாள் நாற்றுக்குப் புறப்படுவதற்கு முன் கமக்காரன் கடிகாரத்தைப் பார்த்தார்.

தாவடிப் பகுதியிலேயே தம்பாப் பிள்ளையிடம்தான் சுவர்க் கடிகாரம் இருக்கிறது. அது அலாரம் அடித்தால் வெகு தூரத்திற்குக் கேட்கும்.

அந்தக் கடிகாரம் அவருக்கு ஒரு பறங்கி நண்பனிட மிருந்து அன்பளிப்பாகக் கிடைத்தது. அந்தப் பறங்கிக் காரன் அவருக்கு நண்பனாகக் கிடைத்த கதை பெருங் கதை. அந்தக் கதையை அவர் அடிக்கடி நினைப்ப துண்டு. இன்று அதை நினைத்து இன்பமடைய அவருக்கு நேரமில்லை. இப்போது நேரம் ஐந்து பத்தாகி விட்டது.

அவசர அவசரமாக அவர் புறப்பட்டு விட்டார்.

சாய வேட்டி!

பரமாஸ் சால்வை!

குங்குமப் பொட்டு!

அந்த அதிகாலை வேளையிலும் நல்லெண்ணை தட வப்பட்ட பிறை வெட்டுக் குடுமி! வெள்ளிப் பூண் பிரம்பு!

ஓசை வைக்கும் செருப்பு!

''இஞ்சேரும் அங்கை இன்னும் மூண்டு பெண்டுகள் நாத்து நட வருவாளவை! அவளவைக்கும் சேத்து ஏதும் தின்ன அடுக்குப் பண்ணினநீரே?'' என்ற அவரின் கேள்விக்கு,

''வெங்காயம் மிளகாய் வெட்டிப் போட்டு பழங்கஞ்சியும் பினாட்டுத் தட்டும் முத்திப் பெட்டையிட்டை வரக் காட்டி விடுகிறன்'' என வெள்ளச் சிக்கமக்காரி பதில் சொன்னாள்.

கமக்காரன் புறப்பட்டு விட்டார்.

நாற்றுக் கடகத்துடன் நன்னியன் பின்னால் நடந்தான்.

படலைக் கேற்றுவரை நகுலனும் வழியனுப்ப வந்து பின் நின்று விட்டது.

கேற்றுக்கப்பால் வந்து பல தடவைகள் எஜமானிடம் பிரம்படிபட்ட அனுபவத்தால் நகுலன் நின்று விட்டான்.

கமக்காரனின் காலடிக் கணக்கு சரியாகத்தான் இருக்கும். அதேபோல நன்னியனின் வான்வெளிக் கணக்கெடுப்பும் சரியாகத்தான் இருக்கும்.

கிழக்குப் பக்க வடக்கு மூலை! முதல் பாத்தி சிறு வரம்பு மூலையில் நாற்று புதைக்க வேண்டும். பட்டைத் தண்ணியை செழிக்க ஊற்றி, அந்த மென் வெளிச்சத்திலும் செழித்த புகையிலைக் கன்றுகளைத் தெரிந்தெடுத்த நன்னியன் மேற்கு வானைப் பார்த்து, வெள்ளிக் கணக்கை சரி கண்டு, ''நேரம் சரி கமக்காரன். நன்னியன் நாத்தை ஊண்டப் போறனாக்கும்!'' என்றான்.

''உனக்கும் நேரக் கணக்கு விளங்குது! நேரம் சரி ஊண்டு!'' கமக்காரன் விடை கொடுத்து விட்டார்.

பூமியைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டு நன்னியன் முதல் நாற்றை ஊன்றிவிட்டான்.

கமக்காரன் போட்ட செருப்பைக் கழற்றாமலே பெரு வரம்பில் நின்றார்.

நிலம் வெளுத்து வந்தது!

பெண்களின் பேச்சோசை கேட்டது!

கமக்காரன் சொன்ன கூலிப் பெண்கள் வருகிறார்கள்.

பள் கந்தனின் பெண்டில் பாறி!

நன்னியனின் மச்சாள்- காறி கைம்பெண் பூதி!

நன்னியன் பெண்டில் செல்லி!

''என்னடி செல்லி, நன்னியன் வந்தது போலை வேளையோடை இவளவையைக் கூட்டியராமல் இப்பான் வாறாய் என்ன? அங்கைபார் அவளவையின்ரை கொய்யகம் துள்ளிற துள்ளலை!'' கமக்காரன் கோபமாகவும், கொஞ்சலாகவும், செல்லமாகவும், கிண்டலாகவும் மற்றும் ஒரு மாதிரியாகவும் பஞ்சாமிர்தப் பேச்சுப் பேசிவிட்டார்?

இதில் அவருக்குப் பெருமையாக இருந்தது.

முதல்நாள் இரவிரவாக நன்னியனால் நனைத்து வைக்கப்பட்ட பாத்திகள் நடுகைக்கு இதமாக இருந்தது.

நடுகை தொடங்கி விட்டது.

''அப்ப, நன்னியன் நான் இஞ்சாலை ஒருக்காப் போட்டு வாறன்; கொண்டு வந்த நாத்து இரண்டாயிரமும் அடிக்கொண்டு போதுமென்டு நினைக்கிறன்; அம்மா தீன் வரக்காட்டுவா; இஞ்சை குறுநாட்டுக் கொய்யகக்காறி யளும் நிக்கிறாளவை; உனக்கும் நேரம் போறது தெரியாது...'' என்று கூறிக்கொண்டே சாய வேட்டியை ஒற்றைக் கையால் தூக்கிப் பிடித்தபடி வெள்ளிப் பூண் பிரம்பை உல்லாசமாக விசுக்கிக் கொண்டு கமக்காரன் மறைந்து விட்டார்.

''பாத்தியளே கிழட்டு மாப்பிளையின்ரை பகிடியளை? அவற்றை பல்லை உடைக்க ஆளில்லை...'' எனக் கந்தன் பெண்டில் பாறி பேசினாள். இது நன்னியனின் காதுவரை கேட்டது. அவனின் ஆக்ரோஷத்தை ஒரு கணம் தான் அதனால் தட்டி எழுப்ப முடிந்தது.

நான்கு நாட்கள் ஆயிற்று தம்பாப்பிள்ளைக் கமக் காரனின் தோட்ட வேலை ஒழுங்காக முடிந்துவிட்டது.

நாற்றுக் கன்றுகளுக்கு குழை கொப்புக் குத்தி, வெய்யில் மறைவிட்டு முடிந்துவிட்டது. இனி நன்னியனின் முக்கிய கவனிப்புத் தேவை இல்லை. நாளுக்கு இரண்டு பெண்களைக் கொண்டே பட்டைத் தண்ணீர் வார்த்து விடலாம்.

தோட்டத்து நான்கு பெரும் பாத்திகளுக்கிடையே இதற்காகத்தான் தம்பாப்பிள்ளையின் அப்பன் கேணி ஒன்றை வெட்டி, மாரி மழைக்கு அது தூர்ந்து போய் விடாமல் பக்கத்திற்கு முருகைக்கல் அடுக்கி, பனங் கிழங்குத் தோலையும் சுண்ணாம்பையும், சர்க்கரையையும் பிசைந்து சந்தடைத்துக் கட்டி விட்டிருந்தார். இன்று வரை அது அசைவின்றியே இருக்கிறது. வருடாவருடம் கோடைகாலத்திற்கு கன்று நடும் காலத்திற்கு முன் ஊற்றுக்கண் அடைத்துவிடாமல், சேறு அள்ளி சுத்தம் செய்யப்பட்டிருக்கும். இம்முறை பத்து நாட்களுக்கு முன்னே நன்னியனைக் கொண்டே அதைக் கலக்கி இறைத்து வைத்திருந்தார்.

கேணிக்குள் நடை நடையாக இறங்கி, இரு இரு பட்டைகளாக நிரப்பி நாற்றுகளை நனைத்துவிடுவது பெண்களுக்கு அவ்வளவு கஷ்டம் அல்ல.

நாற்று ஊன்றலுக்கு வந்த பாறியிடமும் பூதியிடமும் சொல்லிவைக்க வேண்டும்; அதற்கு முன்னம் நன்னிய னிடம் சின்னிப்பெட்டையைப் பற்றிக் கேட்டுவிடவும் அவர் எண்ணினார். ஆயினும் யோசிக்க யோசிக்க சின்னியை

இனி தங்கையின் வீட்டில் விடுவதும் பிழையாகவே பட்டது.

''தந்திரமான பூனை எண்டால் தயிர் இருக்க சட்டியை நக்கும். இவங்கள் செலிப் பிடிச்சவங்கள்...''

இப்படி எண்ணிக் கொண்டே ''இனி நன்னியனை இந்த விசயத்தில் இறுக்கிப் பிடிக்கக் கூடாது'' என்றும் எண்ணினார். 'நன்னியனையும் பகைக்கக் கூடாது, ஒரு மாதிரி கொண்டிழுக்க வேண்டும்' என்ற முடிவுக்கு அவர் வந்து விட்டார். ஆயினும் தங்கைக்கு ஒரு குடிமைப் பெண்ணை பிடித்துக் கொடுத்து விட வேண்டும் என்றும் முடிவாக இருந்தது.

ஒரு ஞாயிற்றுக் கிழமை மதியப் பொழுதுக்கு சற்று முன்பாக வில்லு வண்டி ஒன்று கலட்டி வெளி எல்லைப் புறத்தில் வந்து நிற்க, அதிலிருந்து பாதிரியார் ஒருவரும், அவரைத் தொடர்ந்து வேறு இருவரும் இறங்கினர்.

அப்போதுதான் தோட்டத்திலிருந்து வந்து சற்றுச் சரிந்து உறங்கிக் கொண்டிருந்த நன்னியனை செல்லி தட்டி எழுப்பினாள்.

நன்னியன் நிமிர்ந்து பார்த்தான். குடிலை நோக்கி வருவது, நீள அங்கி இடையே ஊதா நிறப்பட்டியும், பட்டியில் செருகிவிடப்பட்ட பெரிய சிலுவையும் கொண்ட தாடிக்கார பாதிரியாரும், சங்கிலித்தாம் ராயப்பனும் மூப்பற்றை மோன் சிமியோனும்தான். குடிலுக்கு முன்பாக அவர்கள் வந்து விட்டனர்.

நன்னியனும் செல்லியும் ஒரே நேரத்தில் எழுந்து நின்றனர். வந்தவர்களை வரவேற்கவோ உபசாரம் செய்யவோ அவர்களுக்கு நா எழவில்லை.

''உவர்தான் குருவானவர், நாங்கள் சொன்ன நன்னி அண்ணர். அவ இவற்றை பெண்சாதி செல்லி'' என சங்கி

லித்தாம் ராயப்பன் இவர்களைப் பாதிரியாருக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

நன்னியன் கைகளைத் தாழப் பிடித்து பாதிரியாரை இரண்டு மூன்று தடவை கும்பிட்டான்.

கிறீஸ்தவர்கள் குருவானவரைக் கண்டதும் ''ஸ்தோத் திரம்சுவாமி'' அல்லது ''ஸ்சோஸ்திரம் ஆண்டவரே'' என ஒற்றை முட்டுக்கால் ஊன்றி வணங்குவதும், சுவாமியார் வலக்கரம் தூக்கி ''ஆசீர்வாதம் பிள்ளாய்!'' என கரங் களால் சிலுவை அடையாளம் அசைப்பதும் தான் சம்பிர தாயபூர்வமானது. இதெல்லாம் நன்னியனுக்கோ செல்லிக் கோ தெரியாது. ஆயினும் பாதிரியார் ''ஆசீர்வாதம் பிள் ளாய்!'' என அவர்களை ஆசீர்வதிக்கத் தவறவில்லை. செல்லி பக்கத்தே கிடந்த வெள்ளைத் துண்டொன்றை எடுத்து அன்றைய புது மெழுக்குத் திண்ணையை துடைத்து விட்டு அடுப்படிக்குச் சென்று சின்னஞ்சிறிய வாங்குப் பலகை ஒன்றை எடுத்து அதில் வைத்தாள்.

பரவாயில்லைப் பிள்ளாய்; இது போதும் பிள்ளாய்!'' என்று கூறி விட்டுப் பாதிரியார் அதில் இருந்து கொண் டார்.

ராயப்பனும் சிமியோனும் பக்கத்தே கிடந்த பாயை இழுத்துவிட்டுக் கொண்டு, ''அண்ணர் இரு அண்ணர். அக்கை இரு அக்கை.'' என இராயப்பன் கூறிக் கொள்ள எல்லோரும் இருந்து கொண்டனர்.

சற்று வேளை அமைதி.

எல்லோரும் பாதிரியாரின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

''பிள்ளாய் நன்னி! இப்ப நாங்கள் வந்தது எதுக்கென் றால், நீங்கள் எல்லோரும் சர்வ வல்லமையுடைய கர்த் தரின் திருக்குமாரன் யேசுவின் சபையில் சேரவேணும்; உங்களுக்கெல்லாம் பெரிய கஷ்டங்கள் இருக்கெண்டு மூப்

பரும், சங்கிலித்தாமும் நீண்ட நாட்களாகச் சொல்லி வந்த வர்கள். உங்களின் கஷ்டங்களையெல்லாம் யேசுநாதரிடம் முறையிட்டால் எல்லாம் விரைவாக நீங்கும். நீங்கள் யேசுவுக்கு மட்டும் அடிமைகளே ஒழிய மற்றவர்களுக்கும், அஞ்ஞானிகளுக்கும் அடிமைகளல்ல!''

பாதிரியார் பேசி முடித்தபின், குடிலை ஒரு முறை கண்களால் சுழற்றிப் பார்த்தார். அப்போதுதான் நான்கைந்து கங்கு மட்டைகளைக் கைகளால் அள்ளிப் பிடித்துக் கொண்டு சின்னிப்பெட்டை வந்தாள். குடில் வாயிலுக்கு முன் வந்தவள் உள்ளே இருந்தவர்களைப் பார்த்து கங்கு மட்டைகளை அப்படியே போட்டுவிட்டு நிலைகுத்தி நின்றாள். உச்சி வெய்யில் அவளைச் சுட்டது.

''இஞ்சாலை வா பிள்ளை! குருவானவர் வந்திருக்கிறார். அவருக்கு வணக்கம் சொல்லு'' என இராயப்பன் அவளை கைகாட்டி அழைத்தான்.

சின்னி அடக்கமாக உள்ளே வந்து நெஞ்சுக்கு நேரே கைகளை வைத்து குருவானவரைக் கும்பிடவும், குருவானவர் அவளை ஆசீர்வதிக்கவும் அவள் தாயாரின் முதுகோடு ஒட்டிக் கொண்டு உட்காரும்போது அவளின் வலக்கால் பக்கத்தே இருந்த சிமியோனில் படவும் ஒட்டுமொத்தமாக நேரம் சரியாக இருந்தது. அவன் மீது கால் பட்டுவிட்டதற்காக சின்னி கவலைப்பட்டாள்; வெட்கப் பட்டாள்; பயப்பட்டாள். இதை யாரும் கவனிக்கவில்லை. சிமியோனும் இதைப் பெரிது படுத்தவில்லை.

''நன்னி இண்டைக்கு சவேரியார் கோவில் நோவினை தொடங்குது. ஏழு நாளைக்கு நடக்கும்; நீயும் பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு சும்மா ஒருக்கா நோவினைக்கு வாரும் பிள்ளாய்; உம்மை நான் யேசு சபையிலை சேரச் சொல்லித் தெண்டிக்கேல்லை. சும்மா வந்து பாரும் பிள்ளாய். பிறகு நீங்களா யோசித்துச் செய்யலாம். அப்ப

போவமே சங்கிலித்தாம்?'' என்று கூறிக்கொண்டே பாதிரியார் எழுந்துவிட்டார்.

எல்லோரும் எழுந்தனர்.

நன்னியனும் செல்லியும் மீண்டும் கை கூப்பினர். ''ஆசீர்வாதம் பிள்ளாய்! உங்களுக்கு என்றும் கர்த்தரின் கருணை இருக்கும்'' என்று கூறிக் கொண்டே பாதிரியார் வெளியே வந்து வில்லு வண்டியை நோக்கி நடந்தார்.

ராயப்பனும், சிமியோனும் அவரைத் தொடர, மூவரையும் பின் தொடர்ந்து நன்னியன் சென்றான்.

வண்டி புறப்படும் வரை அங்கேயே நின்று, அது மறைந்தவுடன் நன்னியனும் குடிலுக்குத் திரும்பினான்.

''நல்ல குணமான சுவாமி'' என்றாள் செல்லி.

நன்னியன் ஒன்றும் பேசவில்லை.

நன்றாக விடிந்து விட்டது.

பொழுது மேலே வந்து விட்டது.

நன்னியன் இன்னும் விழிக்கவில்லை.

இரவு வந்து படுக்கும்போது ஒன்றுபாதிக்கு மேலாகி விட்டது. இன்று நாற்றுக்கு தண்ணி வார்ப்பும் இல்லை.

''எடே, நன்னியன்! எடே...!''

தம்பாப்பிள்ளை, நயினாரின் குரல் கலட்டித்துண்டு எல்லைக்கப்பால் கேட்டது.

''இஞ்சர், கமக்காரன்...'' என்று அங்கலாய்த்துக் கொண்டே செல்லி அவனைத் தட்டி எழுப்பினாள்.

அவசர அவசரமாக எழுந்து கமக்காரனை நோக்கி ஓடினான் நன்னியன்.

''என்னவாக்கும்... இண்டைக்குப் பட்டைத் தண்ணி முறை இல்லையாக்கும்...'' என அவன் வாய் தழும்பி னான்.

''எட, நன்னியன்! நான் கேக்கிறதுக்கு ஒழுங்காப் பதில் சொல்லிப்போடு! நேத்து இஞ்சை ரெண்டு சிலுப்பா வெட்டுக்காறங்களும், தாடிச்சாமியும் வந்திட்டு போனவங் களாம்; ஏனடா வந்தவங்கள்?''

கமக்காரனின் இந்தக் கேள்விக்கு அவனால் உடனடி யாகப் பதில் சொல்ல முடியவில்லை.

''சும்மா இதாலை வந்தாப்போலை வந்தவை யாக்கும். நம்மாணை வேறை ஒண்டும் இல்லையாக்கும்''

மிகச்சிரமத்துடன் நன்னியனிடமிருந்து இந்த வார்த்தைகள் பிரசவித்தன.

''எட நன்னியன்; என்னட்டைப் புலுமாஸ் விடப் பாக்கிறாய் என்னடா? ராத்திரி நீயும் பொண்டிலும் உன்ரை குமரியையும் கூட்டிக் கொண்டு எங்கையடா போட்டு வந்தநீங்கள்? என்ரை தங்கச்சி வீட்டை உன்ரை குமரியை விடுகிறதுக்கு தீட்டுத் துடக்கெண்டு கணக்கு விட்டுப் போட்டு அவளையும் கூட்டிக்கொண்டு போய் வேதக் கோயிலடியிலை ஆள் பார்க்கவேயடா விட்டனீ?''

அவர் பேசி முடிக்கவில்லை.

''கமக்காரன்; கதைக்கிற கதையை எல்லிப் போலை யோசிச்சுக் கதைக்க வேணும். குமரப் பிள்ளையின்ரை கதையை கண்டபடி கதைக்கிறது சரியில்லை...!''

அவனும் பேசி முடிக்கவில்லை.

''குமரப்பிள்ளையோடா? உன்ரை மோளோ! என்ரை மருமோனுக்கு முந்தானை விரிச்சு அவள் இளந்தாரியைப் பழுதாக்கிப் போட்டு வந்தவள் குமரப்பிள்ளையோடா...?''

கமக்காரனின் பேச்சு முடியவும், நன்னியன் அவர் மேல் பாயவும் நேரம் சரியாக இருந்தது.

நன்னியன் தனது வலிய கரங்களால் கமக்காரனின் பிறை வெட்டுக் குடுமியைச் சுற்றிப் பிடித்துத் திருகினான். அவரை அடித்துவிட அவனுக்குக் கை வரவில்லை. அவனிடம் குடுமியைக் கொடுத்துவிட்டு அதை விடுவிப்ப தற்கு தனது வெள்ளிப் பூண் பிரம்பை வலமும் இடமும் விசுக்கினார் தம்பாப்பிள்ளையர்.

செல்லி ஓடி வந்தாள்.

அங்குமிங்குமாகப் பலர் ஓடி வந்தனர்.

இயனக் கூட்டோடு மேற்கே சேர்வைக்குப் போக வந்த மூத்தவன் பாளைக் கத்தியை இயனக் கூட்டால் இழுத்தபடி ஓடி வந்தான். பலர் அவனைப் பாய்ந்து பிடித்துக் கொண்டனர்.

அவனுக்கோ, அவர்களுக்கோ நடந்தது என்னவென்று புரியவில்லை. ஆனாலும் மூத்தவனுக்கு ஒரு ஊகம்; சின்னப் பெட்டையை நயினாத்தி வீட்டை அனுப்பாத காரணம்தான் இந்த மோதல் என்பது.

''எடே, என்னை விடுங்கோடா; தம்பாப்பிள்ளையின்ரை கழுத்தை வெட்டிப் போட்டு, என்ரை தங்கச்சியைத் தொட்டவன்ரை குடலையும் எடுத்துக் கொண்டு வாறன். விடுங்கோடா...என்னை விடுங்கோடா...!''

மூத்தவன் கத்தித் திமிறினான்.

பலருடைய பிடியில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ள அவனால் முடியவில்லை. சின்னிப் பெட்டையும் அப்போதுதான் குடிலுக்குள் இருந்து கண்விழித்து ஓடி வந்தாள்.

கமக்காரன் திமிறினார்! சிலர் நன்னியனை மடக்கிப் பிடித்து குடும்பிப் பிடியை விடுவித்தனர்.

பரமாஸ் சால்வை நிலத்தில் இழுபட, சாய எழுத்து வேட்டி அலங்கோலமாக கலைந்து தொங்க, வெள்ளிப் பூண் பிரம்பையும் செருப்பையும் எடுக்காமலே கமக்காரன் கெந்தலும், பாய்ச்சலுமாக ஓடிக் கொண்டிருந்தார்.

அவரின் செருப்புகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறிக் கிடந்தன. வெள்ளிப் பூண் பிரம்பு சதுரக் கள்ளிக்குமேல் கிடந்தது. தம்பாப்பிள்ளையர் ஓடி மறைந்து விட்டார்.

கூடியிருந்தவர்கள் இன்னும் கலையவில்லை.

பெண்கள், குழந்தைகள், கிழடுகள்!

மூத்தவனையும் அவன் வயதை ஒத்த நாலைந்து பேரையும் தவிர விடலைப் பருவமாக அங்கு யாரும் இல்லை.

சற்று வேளைக்குள் இளையவனும் பத்துக்கு மேற் பட்ட அவனை ஒத்த பெடியன்களும் அவ்விடத்துக்கு வந்து சேர்ந்தனர்.

வயதானவர்களின் முகங்களில் கமக்காரன், நன்னியன் மோதல் பீதியை கிளப்பிவிட்டிருந்தது.

மிகுதிப் பேர்களுக்கு ஆத்திர உணர்வுகள் பீறிட்டுக் கொண்டு நின்றன.

''இண்டைக்கு நன்னி அண்ணர் வீட்டுக்கு வந்தது நாளைக்கு எல்லார் வீட்டுக்கும் வரும்.''

''இண்டைக்கு நன்னி அண்ணற்றை மகளுக்கு வந்தது, நாளைக்கு எங்கடை தங்கச்சியாருக்கும் வரும்; எல்லாத்தையும் கூட்டிக் கணக்குப் பார்த்தால் எங்கடை பத்துப் பெட்டையளுக்கு மேலை நயினார் வீடுகளிலை இருக்குதுகள்; எல்லாப் பெட்டையளையும் போய் இண் டைக்கே கூட்டியர வேணும்!''

''அப்பிடியெண்டால் நயினார் வீடு வழிய நிக்கிற பொடியளை என்ன செய்யிறது?''

''அவங்களையும் கூட்டியரத்தான் வேணும்.''

''எட, தம்பியவை சும்மா எடுத்தாப்போலை எல்லாத் தையும் தூக்கி எறியேலாதடா பொடியள்! நாங்கள் இருக் கிற காணி பூமி எல்லாம் அவையின்ரை; சீவிற மரம்தடி

எல்லாம் அவையின்ரை; தோட்டம் துரவு எல்லாம் அவை யின்ரை; அவையின்ரை மண்ணைத் திண்டுதான் நாங்கள் பிழைக்கிறம். இந்தக் கலட்டியைச் சுத்திவர அவங்கள் தான் இருக்கிறாங்கள். விதானை, உடையார் எல்லாம் அவங்கள்தான். செய்யிறதை கொஞ்சம் யோசிச்சுச் செய்ய வேணும் பொடியள்!''

''எங்கடை பெட்டைக் குஞ்சுகள் இவங்களுக்குப் போடு தடியளோ கேக்கிறன்? ...சீ... நீங்களும் ஆம்பிளை யளே? பொண்டுகளாச் சேந்து தூரமைச் சீலையாளை உவங்களை ஆலாத்தி எடுக்க வேணும்; நீங்கள் வாருங் கோடி!''

பலதரப்பட்ட சம்பாஷைனகள் முடிய நேரம் போய்க் கொண்டிருந்தது.

நன்னியன்தான் எல்லாவற்றையும் முடிவாக்க வேண் டும். அவன்தான் அந்தச் சின்னக் கலட்டிப் பகுதிக்கே தலைச்சன்! அவனைவிட வயதில் கூடியவர்கள் அங்கு இருந்தாலும் அவன்தான் எல்லோராலும் உத்தியோகப் பற்றில்லாமலே தலைச்சன் ஆக்கப்பட்டவன்.

''தம்பாப்பிள்ளையன் சும்மா இருப்பான் எண்டு நான் நினைக்கேல்லை. அவன் ஆக்களை அடுக்குப் பண்ணி இரவைக்கு ஏதேனும் செய்யப் பாப்பான். எல்லாருக்கும் முந்தி நான் என்ரை தலையைக் குடுக்கிறன். ஒருத்தரும் அவசரப்படப்படாது. இண்டைக்கு ஒருத்தரும் கலட்டியை விட்டு வெளியிலை போகாதையுங்கோ; பொடி பெட்டை யளை மறிக்கிற அலுவலை நாளைக்கு அல்லது நாளை யிண்டைக்குப் பாப்பம்; யோசிச்சுச் செய்வம்!''

நன்னியனின் இந்தப் பேச்சுக்குப் பிறகு கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாகக் கலையத் தொடங்கி விட்டது.

''எடே மூத்தவன் நீ ஏன்ரா அதுக்கிடையிலை பாளைக் கத்தியை எடுத்தனீ? நான் அவன்ரை குடும்பியிலை சிக்க ராய்ப் பிடிச்சுக் கொண்டன்; என்ரை பிடியிலை இருந்து அவன் தப்பேலுமே! கண்டதுக்கெல்லாம் கத்தியை எடுக் கிறதே? மடையா! மடையா!!'' மூத்தவனை நன்னியன் கடிந்துக் கொண்டான்.

''பின்னை என்னணையப்பு. அவன் வீடு தேடி வந்து தங்கச்சியை இப்பிடிக் கேட்டாப் பிறகும் அவனைச் சும்மா விடுகிறதோ? இவங்கள் என்னை அங்காலை இஞ்சாலை அசையவிட மாட்டன் எண்டிட்டாங்கள். இனி ஏனணை அப்பு இந்த உயிரை வைச்சிருப்பான்?''

மூத்தவன் பின்பும் ஆத்திரமாகவே பேசினான்.

''எணை அப்பு! நான் இப்ப சொல்லிப் போட்டன். அவன் இனி எங்களோடை சேட்டை கீட்டை விடுவானா இருந்தா வாய்க்கால் இழுக்கிற வழுக்கன் மம்பட்டியாலை அவன்ரை பிடிரி அறுப்பன். அவனைக் கொண்டுபோட்டுத் தான் பேந்து ஆத்னிதயின்ரை கையாலை சோறு தின்பன்!'' என்று கூறிக் கொண்டே இளையவன் குடிலை நோக்கிச் சென்று விட்டான்.

எல்லாவற்றையும் ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டி ருந்த சின்னிப் பெட்டை கல்லாகச் சமைந்து விட்டாள்! செல்லி எதுவும் பேச முடியாமல் அப்படியே குத்துக்காலில் இருந்து விட்டாள்.

வெய்யில் ஏறிக்கொண்டிருந்தது. கலட்டுக்குள் இருந்து சின்னஞ் சிறிசுகள் கூட வெளியே போகவில்லை.

சின்னக் கலட்டி நிசப்தமாக இருந்தது.

வெய்யில் இன்று வழமையைவிட அதிகமாக எரித்தது.

பொழுது சரிந்து கொண்டது.

நன்னியன் வீட்டுக்கு நேராக கலட்டி விளிம்புவரை வந்த ஒருவன் அதிலேயே நின்று ''நன்னியன்; நன்னி யன்!'' என்று குரல் வைத்தான்.

விழிப்பாகவே இருந்த நன்னியன் எழுந்து அவனை நோக்கி நடந்தான்.

வந்தவன் தலைமைக்காரன் வீட்டு எடுபிடி மடைப் பள்ளி நயினார் சண்முகம்!

நன்னியன் அடையாளம் கண்டு கொண்டான்.

''நன்னியன்! ஐயா உன்னைக் கையோடை கூட்டி யரட்டாம். வா; வா; வெளிக்கிடு'' சண்முகம் அவசரப் படுத்தினான்.

சண்முகம் நயினார், நான் எப்பன் பொறுத்துவாறன்; நீங்கள் போங்கோ!

மடைப்பள்ளி வெள்ளாளருக்கு கீழ்ப்பட்டவர்கள் அவர் களின் பெயர் சொல்லாமலே நயினார் போடுவதில்லை. கீழ்ப்பட்டவர்கள் நிதானமாக நின்று கொள்வர்; பெய ரையே முதலில் சொல்வர்.

''ஐயா கையோடை கூட்டியரட்டாம் எண்ணிறன்!'' என்று மீண்டும் அவசரப்படுத்தினான்.

''நன்னியன் என்ன கையை விட்டுட்டு வந்திடுவான் எண்டே கையோடை விதானையார் கூட்டியரச் சொன்ன வர்? கையோடைதான் வரப்போறன். சண்முகம் நயினார் நிண்டுகொள்ளும் வாறன்!'' என்று பகிடியாகக் கூறிக் கொண்டே நன்னியன் குடிலை நோக்கிப் போனான்.

''என்னவாமப்பா விதானையார் ஆள் விட்டிருக் கிறார்; போகப் போறியே?'' என்று செல்லி கேட்டாள்.

''தலைமைக்காரன் ஆள் அனுப்பி இருக்கப் போகாமல் இருக்கேலுமே? அவர் என்ன சுட்டே கடிக்கப் போறார்? போய்ப்பாப்பம்!'' என்றான் நன்னியன்.

''அப்பு... நானும் வரட்டே?'' குடில் தாழ்வாரத்தில் படுத்திருந்த இளையவன் கேட்டான்.

''வேண்டாம் மோனை; நான் போட்டு வாறன்'' என்று கூறிக்கொண்டே நன்னியன் புறப்பட்டு விட்டான்.

சண்முகம் நயினாரும் நன்னியனும் கலட்டியைத் தாண்டி, தோட்ட வரம்பில் நடந்து, காளிக்கோயில் வீதி யில் போய்க் கொண்டிருந்தபோது,

''சண்முகம் நயினார் விதானையார் ஏனாம் வரச் சொன்னவர்?'' நன்னியன் கேட்டான்.

''நன்னியன் நானும் உன்னைப்போலை பிச்சைக் காரன்தான் ராப்பா, பிள்ளை குட்டியளைப் பெத்துப் போட்டம். நேற்று பூக்கண்டர் என்னோடை கதைச்சவர்; பொறியிலைமாட்டுப்பட்டது மாதிரி நாங்கள்மாட்டுப்பட்டுப் போனம்! தம்பாப்பிள்ளையர் காலமை வேத்துக் களைக்க விதானையாரிட்டை வந்திட்டுப் போனவர். ரெண்டுபேரும் சேந்து ஏதோ கதைச்சவை! எனக்கு விளங்கேல்லை. ஊருக்கை கதைச்சவை; நீ அவற்றை குடும்பியைப் புடிச்சு விழுத்திப் போட்டியாம்!

மிகுதிக் கதையை அவன் சொல்லி முடிக்கத் தேவை யில்லை. நன்னியனுக்கு எல்லாம் விளங்கிவிட்டது.

''சரி; சரி; விதானையார் என்ன புடுங்கப் போறார் எண்டதையும் பாத்திடுவம்'' என அவன் அடிமனது திடப்படுத்திக் கொண்டது.

நன்னியன் சண்முகம் நயினாரோடு போன சிறிது நேரத்தில் மூத்தவன் வந்தான்.

''ஆத்தை, அப்புவை சண்முகம் நயினார் கூட்டிக் கொண்டு போறாரா மெணை; ஏனெணை?'' என்று கேட்டான்.

விதானையார் வரச் சொல்லி சண்முகத்தாரை அனுப்பினவர்; அதுதான் கொப்பர் போகுது! எக்கணம் விதானை என்ன செய்யப் போறனோ...? இந்த மனிசனும் நான் சொல்லச் சொல்லப் போகுதிடா!'' என்று கூறி விட்டு அவள் பரிதாபமாக மூத்தவனின் முகத்தைப் பார்த்தாள்.

மூத்தவன் ஒன்றும் பேசவில்லை. என்ன செய்வதென்றே அவனுக்குத் தெரியவில்லை.

''விதானை வரச் சொல்லேக்கை போகத்தான் வேணுமணை. நீ உவன் சின்னவனைக்கூட போக்காட்டேல்லை.'' என ஆத்தை மீது குறைபட்டுக் கொண்டான்.

''இஞ்சைபார் உன்ரை கதையை! அவன் நானும் வாறனணை அப்பு எண்டு கேட்டவன்; அந்தாள் வேண்டாம் எண்டுட்டுப் போகேக்கை நான் என்ன செய்யிறது?'' செல்லி மீண்டும் தன் மன உளைச்சலைச் சொல்லிக் கொண்டாள்.

மூத்தவன் செல்லி பெற்ற மகன் அல்ல. நன்னியனின் மூத்த தாரத்து மகன். செல்லி கல்லாக் கட்டுவனில் இருந்து நன்னியனுக்கு இரண்டாம்தாரமாக வந்தபோது மூத்த

வனுக்குப் பத்து வயதுதான் இருக்கும். அந்தநாளில் இருந்து இன்றுவரை மூத்தவனுக்கும் அவள் ஆத்தைதான். அவளுக்கும் அவன் மூத்தவன்தான். அவனுக்கு தான் இன்னொருத்தியின் மகன் என்ற எண்ணம் வருவதில்லை. செல்லிக்கும் அவன் வேறொருத்தியின் மகன் என்ற எண்ணம் செத்துப் போய் நீண்ட காலம்.?...

''இளையவன் வா, அப்புவைப் போய் பாத்துக் கொண்டு வருவம்'' என்று அவன் தம்பியைக் கேட்டான்.

''அப்பு வரவேணாம் எண்டு சொல்லிப் போட்டுப் போகேக்கை போறது சரியோண்ணை?'' என்று இளைய வன் பதிலுக்குக் கேட்டான்.

''உன்னைத்தானே அப்பு வரவேண்டாம் எண்டவர், என்னை வர வேண்டாம் எண்டு சொல்லேல்லை; நான் போட்டு வாறன்!'' என்று கூறிக்கொண்டே மூத்தவன் தோட்டப் பக்கம் நடந்து போனான்.

அவனின் எக்கத்துக்குள் பாளைக்கத்தியின் பிடி தெரிந்தது.

''உன்ரை கோத்தையாணை ஆத்திரப்பட்டு ஏதும் செய்து போடாதையடா'' என்று செல்லி குரல் கொடுத் தாள்.

இளையவனுக்கு இதற்கு மேல் தந்தையின் தடைச் சட்டம் மனதிற்குள் நிற்கவில்லை.

கலட்டியைத் தாண்டி அண்ணனும் தம்பியும் பெரு வரம்பால் நெஞ்சை நிமிர்த்தி நடந்து போவதைப் பார்க்க செல்லிக்குப் பெருமையாக இருந்தது. சின்னிப் பெட்டை வழமைப்படி ஏங்கிப்போய் நின்றாள்.

காளி கோவில் தாண்டி, விதானையாரின் ஒழுங்கைக் குள் காலடி எடுத்து வைத்தபோது மூத்தவன் சொன்னான்.

''தம்பி டேய், வரேக்கை ஆத்தையும் சத்தியம் பண்ணிப் போட்டா; விதானை வீட்டிலை ஏதும் நடந்தாலும் அப்புவைத் தொந்தறவு ஒண்டும் இல்லாமல் கொண்டந்திட வேணும்; கண்டியோ கவனம்!'' என்றான் மூத்தவன்.

இளையவன் ஒன்றும் பேசவில்லை.

சற்று வேளைக்குப் பின் இளையவன் கேட்டான். ''அண்ணை இடுப்புக்கை கிடக்கிற பாளைக் கத்தியை என்னட்டைத் தாவண்ணை; நான் வைச்சிருக்கிறன்'' எனத் திடீரெனக் கேட்டான்.

அண்ணனின் சுபாவம் அவனுக்குத் தெரியும். படக்கென்று கோபம் வந்துவிட்டால் அவன் முன்பின் பார்க்காமலேயே எதையும் செய்யக் கூடியவன்.

'தம்பி ஆத்திரத்தில் எதையும் செய்யவிடக் கூடாது; அவனை வில்லங்கத்துக்குள்ளை மாட்டப்பிடாது; ஏதும் செய்யிறதா இருந்தா அதை நான்தான் செய்ய வேணும்' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டு, ''அது என்னட்டைக் கிடக்கட்டுக்கு; உனக்கேன்?'' என்று கூறிவிட்டு அவன் நடந்தான்.

விதானையார் வீடு வந்துவிட்டது.

ஒழுங்கையின் சங்கடப் படலையைத் திறந்து கொண்டு தென்னங்கன்றுகளுக்கூடாக அவர் வீட்டுக்குக் சற்றுத் தூரம் போகவேண்டும்.

சங்கடப் படலை இடுக்குக்கூடாக இருவர் கண்களும் உள்ளே நோக்கின. ஒன்றும் தெரியவில்லை; சிலமன் எதுவும் இல்லை!

படலையைத் திறந்து கொண்டு உள்ளே சென்றனர். உள்ளே சற்றுத் தூரம் போனபோது, விதானையாரின்

நாய் சிங்கம் போல் பாய்ந்து வரவில்லை; நடை பாதையில் அது படுத்துக் கிடந்தது.

இப்படி நாளாந்தம் விதானையார் வீட்டுக்கு வருபவர் களைப் பார்த்துப் பார்த்து அதற்கு அலுப்பு வந்து, வீரமும் போய்விட்டது.

உள்ளே ஆரவாரம் கேட்டது.

''நயினார்; நயினார்! அடியாதையுங்கோ! என்ரை பெட்டையை கமக்காரன் கண்டமாதிரிப் பேசிப்போட்டார். அதுதான் நயினார்...! அவற்றை குடும்பியிலை பிடிச்ச னான்; கை உயத்தேல்லை...''

நன்னியனின் அழுகை கலந்த பேச்சுக்குரல் கேட்டது. மூத்தவன் குரல் வந்தபக்கம் ஓடினான். இளையவன் அவனுக்குப் பின்னால் ஓடினான்.

முற்றத்தில் நிரைக்கு நின்ற மாங்கன்றுகளில் ஒன்றை நன்னியன் இறுக்கமாகக் கட்டிப் பிடித்துக் கொள்ள விதா னையார் நீண்ட துவரந்தடியால் நன்னியனை விளாசிக் கொண்டிருந்தார்.

நன்னியன் ஒவ்வொரு அடிக்கும் நெளிந்து, நெளிந்து முதல் சொன்னதையே திரும்ப திரும்ப ஒப்புவித்துக் கொண்டிருந்தான்.

இந்த பரிதாபத்தைப் பார்த்துக் கொண்டே மடைப் பள்ளி சண்முகம் நின்று கொண்டிருந்தான்.

வழமையாக இப்படிப்பட்ட காரியங்களை சண்முகமே விதானையாரின் சிண்ணாகச் செய்வான். இன்றோ சிண்ணை விட்டுவிட்டு தன் கைப்படவே இதைச் செய்கி றார். தம்பாப்பிள்ளை மேல் அவர்கொண்ட மதிப்பு அப்படி செய்ய வைத்துவிட்டது.

இருபக்கமும் விரிந்து கிடந்த திண்ணைக்கு நடுவே பள்ளமாக இருந்த நடை சாலின் முடிவில் இருந்த தாக்க மான ஒற்றைக் கதவை நீக்கி விதானையாரின் மனைவி யானவளும் அவரின் இளைய மகளும் தலையை நீட்டிக் கொண்டு நின்றனர்.

மூத்தவனும் இளையவனும் பாய்ந்தோடி வந்துவிட் டனர்.

சண்முகம் திடுக்கிட்டு விட்டான்.

சின்னம்மாளும், பெரியம்மாளும் திடுக்கிட்டுவிட்டனர்.

''டேய் விதானை!'' மூத்தவன் கத்தினான்.

இந்தச் சத்தம் விதானையாரை திடுக்கிட வைத்தது! அடிக்க ஓங்கிய கம்பு அப்படியே நின்றது!

''டேய் சண்முகம்! இவங்கள் ஏன்ரா வந்தவங்கள்? அடிச்சுக் கலையடா உவங்களை!'' திரும்பியபடியே விதானையார் கட்டளை இட்டார்.

நன்னியன் மரத்தைக் கட்டிப்பிடித்தபடி அப்படியே நின்றான்.

சண்முகம் தயங்கித் தயங்கி வந்தான்.

மூத்தவன் இடுப்பில் இருந்த பாளைக் கத்தியை இழுத் தான்!

''கிட்ட வந்தால் குடல் எடுத்துப் போடுவன்'' என்று பலமாகக் கத்தினான்'

சண்முகம் இடையில் நின்றுவிட்டான்.

''அப்பு வாணை!'' என்றான் இளையவன்.

நன்னியன் தன் கைகளை விடுவிக்காமலேயே இன்னமும் நின்றான்.

''டேய் நளவா! மக்களைச் சண்டித் தனத்துக்கு வரச் சொல்லிப் போட்டோடா வந்தனீ?'' இப்படிக் கேட்டுக் கொண்டே விதானையார் அவன் மீது துவரம் தடியை வீசினார்.

கண்மூடித் திறக்கும் வேலைதான்!

மூத்தவனின் சூரிப்பாளைக் கத்தி விதானையாரின் வலப்பக்கப் பளுவில் பாய்ந்துவிட்டது! கதவுக்குள் நின்ற விதானையாரின் மனைவி மக்களின் கூக்குரல்கள் கேட்டன

சண்முகத்துக்கோ கைகால் செயல்படவில்லை.

மூத்தவன் சூரிக் கத்தியை இழுத்தபோது சீறிய இரத்தம் அவன் உடம்பில் அடித்தது!

நன்னியனின் கைக் கோர்வை இன்னும் விடுபடவில்லை.

இளையவன் நன்னியனின் கைக் கோர்வையை விடுவித்தான்.

இளையவனுக்கு ஒரு வித அதிர்ச்சியும் வரவில்லை.

ஓட்டமும் நடையுமாக மூவரும் சங்கடப் படலைக்கு வரும்போதும் விதானையாரின் விசுவாசமான நாய் சுருண்டது சுருண்டபடியேதான் கிடந்தது.

ஒரு அருட்சி......

ஒரு குரைப்பு......

ஊஹூம்!......

வீதானையார் வீட்டில் கூக்குரல் ஊரைக் கலக்கியது!

அவர் ஸ்தலத்திலேயே இறந்துவிட்டார்!

அவர் உடம்பு வலப்புறத் திண்ணையில் வளர்த்தப் பட்டிருந்தது.

சிறிது வேளைக்குள் ஜனக்கூட்டம் நிறைந்து விட்டது.

நன்னியனை அடித்த துவரம்தடி இரத்தம் தோய்ந்த நிலையில் தாழ்வாரத்து வேலியோரம் கிடந்தது.

தம்பாப்பிள்ளையர் வந்து சேர சற்று நேரமாகி விட்டது.

சேதி தெரிந்தபோது அவர் வீட்டில் தான் இருந்தார். ஆனாலும் அவர் உடனடியாக வரவில்லை. ஒரு மணி நேரம் கழித்துத்தான் அவர் அங்கு வந்து சேர்ந்தார்.

விதானையார் அம்மாள் அவரைக்கண்டதும் குளறிக் அழுதாள்!

''ஐயோ! நீ என்ரை தெய்வத்தைச் சாக்கொண்டு போட்டியே...!'' அவள் ஒப்பாரி வைத்தாள்.

நின்றவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

நன்னியனின் மூத்தவன் குத்தினதாகத்தான் சண்முகம் சொல்லியிருந்தான். தம்பாப்பிள்ளைதான் கொன்றது என்று அம்மாள் குளறுகிறாள் 'தம்பாப்பிள்ளையர் மூத்தவனை ஏவிவிட்டு கொலை செய்வித்திருக்கிறார்' என்பது தான் பலரின் அபிப்பிராயம்.

எல்லோரும் தம்பாபபிள்ளையரை ஒரு மாதிரியாகப் பார்த்தனர்.

''என்ன சண்முகம் நீ ஒரு மாதிரிச் சொல்கிறாய்? அம்மா ஒரு மாதிரிச் சொல்லுறா...?''

சண்முகத்தை சற்று அப்பால் அழைத்துச் சென்று நடுத்தர வயதான ஒருவன் கேட்டான்.

இரண்டு நாட்களாக தம்பாப்பிள்ளையர் வந்து நன்னியனிட்டைச் சொல்லி சின்னிப் பெட்டையை விடச் செய்ய வேணும் என்று விதானையாரைக் கேட்டதாகவும் காலை தலைவிரி கோலமாக வந்து நன்னியன், தலைமயிரிலை பிடிச்சு அடித்ததாகவும் அவர் கூறி அழுததையும், சண்முகம் பயப்பீதியினால் தட்டுத் தடுமாறிச் சொல்லி முடித்தான்.

இப்போது எல்லோருக்கும் விஷயம் புரிந்துவிட்டது.

''நளவற்றை வீடுகளை இப்ப சாம்பலாக்க வேணும்'' என்று கூட்டத்தில் ஒருவன் இரைந்தான்.

''அது செய்யதானேயடா வேணும். பொறன் ஆற்றை ஆற்றை வீட்டைக் கொழுத்திறது எண்டு யோசிச்சுப் போட்டுச் செய்வம்'' இப்படி இன்னொரு குரல்.

''மலையான மலையைச் சரிச்சுப் போட்டாங்கள்! உடனை செய்யாட்டி மற்ற ஊரவங்கள் மதிப்பாங்களே? ஆற்றை ஆற்றையைக் கொழுத்திறதோ...? நல்ல கேள்விடோ இது! சின்னக் கலட்டியிக்கை கிடக்கிற அவ்வளவத்தையும் கொழுத்த வேணும்... முதல்லை அவங்கள் மூண்டு பேரையும் வெளியிலை போகவிடாமல் வெட்டி எறிய வேணும்.''

இந்தக் குரலுக்குப் பின் ஒரு கூட்டம் கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு சங்கடப் படலைக்கு அப்பால் போய்க் கொண்டிருந்தது.

''தம்பாப்பிள்ளையண்ணை உங்கடை துவக்குக்கு எல்லா அடுக்கணியங்களும் கிடக்கோ...?'' என்று ஒருத்தன் கேட்டதுதான் தாமதம் மயிலு தம்பாப்பிள்ளையருக்கு முன்னால் சென்று விட்டான்.

விரைவில் வீட்டுக்கு வந்து சேர்ந்த தம்பாப்பிள்ளையர் வீட்டுக்குள் போய் எண்ணெய் போட்டு வழு வழுப்பாக இருந்த துவக்கை எடுத்துவந்து, வந்த மயிலனிடம் கொடுத்துவிட்டு ஒரு சிறிய பையில் இருந்து மருந்துப் பேணி சன்னம், கெற்பு ஆகியவகைகளைக் கொடுத்தார்.

வந்த மயிலன் வேட்டைக்காரன் என்பது தம்பாப்பிள்ளையருக்குத் தெரியும்.

ஊரில் தம்பாப்பிள்ளையரிடம் தான் துவக்கு இருக்கிறது.

இந்தத் துவக்குடன் தம்பாப்பிள்ளையருடன் போய் முயல் வேட்டை ஆடியிருக்கிறான். அவருக்காக ஒன்றிரண்டு நர வேட்டைகளும் ஆடியிருக்கிறான்.

துவக்கை வாங்கியவன் அதன் வயிற்றோடு செருகப் பட்டிருந்த சக்கை வாங்கித் தடியை எடுத்து துணியைச் சுற்றி உட் குழாயை துப்பரவு செய்து பின் கென் பவுடர் மருந்தை ஒரு களஞ்சு அளவில் உள்ளங்கையில் கொட்டி குழலுக்குள் போட்டு, சோங்கை இரண்டு தடவைகள் தட்டி துவக்குக் கெற்புக் கட்டைக்கு அது வந்து விட்டதா? என சாவலை மேலெழுப்பிப் பார்த்து திருப்தி கண்டு, ஏற்கனவே பஞ்சாடி வைக்கப்பட்டிருந்த தும்பை சிறு திரணையாக்கி குழலில் போட்டு தடியால் பத்துத் தடவைக்கு மேல் இடித்து இறுக்கி, அதற்குமேல் நாலாம் நம்பர் சன்னங்களை கால் சிறங்கை அளவு அள்ளிப் போட்டு இது நரபலி வேட்டையானதால் அதற்கு மேலும் எஸ். ரீக் குண்டுகள் இரண்டைப் போட்டு மீண்டும் சக்கை

இறுக்கி சாவலை மேலே உயர்த்திப் பார்த்துத் திருப்தி கண்டு கொண்டு, கெற்புக் கட்டை முனையை மெதுவாக விரலால் நசித்து மட்டப்படுத்திவிட்டு சாவலை மெதுவாக பக்குவமாக இழக்கி வைத்து, கள்ளனை மெதுவாக தொட்டுப் பார்த்துக் கொண்டான் கெற்புகளை எடுத்து சோங்கின் கள்ள அறைக்குள் வைத்து மூடிவிட்டு மருந்து டப்பியையும் சன்னப் பேணியையும் பொச்சுச் சக்கைகளை யும் வாங்கி மடிக்குள் செருகிக் கொண்டு அவன் புறப் பட்டுவிட்டான்.

''தம்பி மயிலு கவனமடா; இலக்குக் கட்டையை எப்பன் உயத்திப் பிடிச்சு இலக்கணைக்க வேணும் கண்டியோ; சன்னம் கீழ்க் குழலுக்கடிக்குது;''

தம்பாப்பிள்ளையரின் குரல் கேட்டதோ கேட்க வில்லையோ மயிலு போய்விட்டான்.

சின்னக் கலட்டிப் பக்கமாக கூக்குரல் பிரலாபங்கள் கேட்டுக் கொண்டிருந்தன.

அங்குமிங்குமாக புகை மூட்டங்கள் கிளம்பின.

கலட்டியைத் தாண்டி தோட்ட வெளிப்பக்கம் குழந்தை குஞ்சுகள் கிழடு கட்டைகள் ஓடின.

தோட்ட வெளியின் மறுபக்கத்தில் தம்பாப்பிள்ளையர் இந்தக் காட்சியை பார்த்துக் கொண்டிருந்தாலும் அவர் செவிப்புலன்கள் ஏதோ ஒரு சத்தத்தைக் கேட்பதற்காக கூர்மையாக இருந்தன.

இருந்தாற்போல ஒரு வெடிச் சத்தம் கேட்டது!

அவர் முகம் மலர்ந்தது!

சண்டிக் கட்டை உயர்த்தி துடையில் ஒரு தடவை தட்டிக் கொண்டார். அவர் மனது அளவில்லாத மகிழ்ச்சி அடையும்போது இப்படித்தான் செய்து கொள்வார்.

மறுபடியும் துவக்குக்கு மருந்து போட்டு இடித்து சக்கை கெற்பு வைக்க எவ்வளவு நேரம் ஆகும் என்பது அவருக்குத் தெரியும் அதிலும் மயிலன் இதில் மிக சுறு சுறுப்பானவன் என்பதுவும் அவருக்குத் தெரியும் அந்த நேரத்னிதக் கழித்து மீண்டும் செவிப்புலன்களைக் கூர்மையாக்கிக் கொண்டார்.

பின்பு வெடிச்சத்தம் ஒன்றும் கேட்கவில்லை.

''நன்னியனை விழுத்தினானோ; இல்லை மற்றவங் கள் ரெண்டு பேரிலை ஒருத்தனை விழுத்தினானோ... ஒண்டுமாத் தெரியேல்லை!'' அவர் மனது அங்கலாய்த்துக் கொண்டது.

பொழுது முற்றாகக் கருகி இருள் வந்தது.

சின்னக் கலட்டிப் பக்கத்தில் அங்குமிங்குமாக வெளிச் சங்கள் தெரிந்தன. அந்த இடத்திற்கு நேரில் சென்று பார்த்துவிட வேண்டுமென்றுதான் அவருக்கு விருப்பம்; ஆனாலும் கோழைத்தனம் மேலோங்கி நின்றதினால் அவர் பின்வாங்கிக் கொண்டார்.

மயிலன் இருளோடு வந்தான்!

என்ன மயிலு ஒண்டுக்கு மேலை விழுத்தேல் லையே? பேந்து ஒரு வெடியையும் காணேல்லை!'' என்று மெதுவாகக் கேட்டார்.

மருந்துச் சிமிழ் தடுபொறியிலை எங்கையோ விழுந்து போச்சு! மயிலன் தயங்கியபடி சொன்னான்.

''மடப்பயலே!'' என்று மட்டும்தான் அவர் கத்தி னார்.

''ஆரடா விழுந்தவன்?'' என்று தொடர்ந்து கேட் டார்.

மயிலன் ஒன்டும் பேசவில்லை.

''என்னடா பேசாமல் நிக்கிறாய்? பண்டார வெடி வைச்சுப் போட்டாய் போலை கிடக்கு...?''

''பண்டார வெடியோ...? இந்த மயிலனோ...? அவங்கள் ஒருத்தனும் ஆப்பிடேல்லை! செல்லி அலவாங்குக் கம்பியோடை ஓடியந்தாள்; விழுத்திப் போட்டன்; அவள் தப்பாள்!''

தம்பாப்பிள்ளையர் ஒன்றும் பேசவில்லை. அவருக்கு மனதிற்குள் கொதிப்பு!

நன்னியனை விழுத்தி இருக்க வேணும். இல்லாட்டா ரெண்டு குத்தியன்களிலை ஒருத்தனை விழுத்தியிருக்க வேணும்...அவர் மனதுக்கு விருப்பமானது நடக்கவில்லை.

விழுந்தது செல்லி!

அவர் ஆத்திரப்பட்டார்!

என்றாலும் அவர் மனதை அலட்டிக் கொள்ள வில்லை.

''செல்லியையாவது விழுத்திப் போட்டானே'' என்ற திருப்தி.

மயிலன் பின்னே செல்ல அவர் வீட்டுக்கு வந்து விட்டார்.

வீட்டில் மகள் மட்டும் இருந்தாள். மனைவிதான் சா வீட்டிற்குப் போய் விட்டாளே!

தகப்பனும், மயிலனும் துவக்கோடு வந்தபோதும் அவள் திடுக்கிட்டுப் போகவில்லை. சின்னக் கலட்டியைச்

சுட்டெரிக்க ஊர் திரண்டதுவும் அவளுக்குத் தெரியும். சற்றுமுன் மயிலன் வந்து துவக்கை எடுத்துப் போனதும் அவளுக்குத் தெரியும். அவள் எதுவித மாற்றமும் இல்லாமலே நடமாடினாள். அவள் சுபாவம் அப்படி. மூத்தியின் மகன் செல்லையன் சுடலைப் பிட்டிக்குள் செத்ததிலிருந்து அவள் அப்பிடித்தான்.

''மோட்டுப் பயலே! மருந்துப் போணியை இந்த நேரத்திலை துலைச்சுப் போட்டாய்! தச்செயலா ராவைக்குத் துவக்குத் தேவைப்பட்டா என்னடா செய்யிறது? நாளைக்குப் பட்டணம் போய் மருந்துக்காரக் காக்கா விட்டை மருந்துவாங்கி வாறவரையிலை ஒண்டும் செய்யேலாமல் போச்சு!'' இப்படி மனதிற்குள் குமைந்து கொண்டே மயிலனை அவர் அவசர அவசரமாக அனுப்பி வைத்து விட்டார்.

சின்னக் கலட்டிப் பக்கம் இன்னமும் கூக்குரல் கேட்டுக் கொண்டுதான் இருந்தது.

தம்பாப்பிள்ளையர் நேராக விதானையார் விட்டுக்குப் போனார். அங்கே நிறையப் பெண்கள்தான் கூடியிருந்து விதானையாரைச் சுற்றி, சுற்றிக் குரல் வைத்துக் கொண்டிருந்தனர்.

சண்முகம் சுறுசுறுப்பாக ஓடியாடி அலுவல் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு ஒத்தாசையாக நாலைந்து இளவட்டங்கள் ஓடியாடித் திரிந்தனர்.

தம்பாப்பிள்ளையர் இரகசியமாக சண்முகத்தை வீட்டின் பின்புறம் அழைத்துச் சென்றார்.

''சண்முகம்! விதானையார் போட்டார். இனி விதானையாரை முடிச்சவங்களை முடிக்கிறதுதான்

எங்கடை வேலை. உங்கை போனவங்களிட்டை அவங்கள் ஆப்பிட்டு இருப்பாங்கள், நாளைக்கிப் போலிசு வரும்; மணியகாரன் வருவார்; டாக்குத்தன் வருவான்; நன்னியனுண்ரை மூத்தவனும் இளையவனும் சேந்து ஐயாவை சிக்காராக் கட்டிப் பிடிக்க நன்னியன் ஐயாவின்ரை விலாவிலை குத்தினதை நீ முத்தத்திலை நிண்டு கண்டதாகச் சொல்லிப் போடு!''

தம்பாப் பிள்ளையரின் இந்தப் பேச்சுக்கெல்லாம் சண்முகம் வாய் திறக்கவில்லை.

பெண்கள் கூட்டத்தில் பெரும் குரல்! யாரோ உறவினர்களின் வருகையை அவர்களின் திடீர் ஒப்பாரி கட்டியம் கூறியது.

விதானையார் மனைவியின் கூக்குரல் மேலோங்கிக் கேட்கிறது.

சின்னக் கலட்டி முற்றாக எரிக்கப்பட்டுவிட்டது. கலட்டிக்குள் இருந்த பத்துக் குடில்கள் அதற்குப் புற நீக்கலாக அடுத்தடுத்திருந்த ஐந்து குடிசைகள் மொத்தம் பதினைந்து!

அந்தக் குடில்களுக்குள் இருந்த ஜீவன்கள் பெரிய கலட்டிக்குச் சென்று விட்டனர் பெரிய கலட்டி தூரமில்லை இடையே உள்ள பனை வடலிகளைத் தாண்டி பத்துக் கவடுகள் கழிந்தால் பெரிய கலட்டி வந்துவிடும்.

சாம்பலாகிக் கிடந்த குடிசைகளில் நான்கைந்தில் கருகிச் சுருண்டு போன மாடுகளும், ஆடுகளும் குட்டிகளும் கிடந்தன. மற்றப்படி பரிபூரண சாம்பல்!

செல்லியின் கட்டை பெரிய கலட்டிக்குக் கொண்டு செல்லப்பட்டுவிட்டது. அவள் எடுத்துச் செல்லப்பட்டபோது அவளுக்கு உயிர் இருந்தது. பெரிய கலட்டிக்குக் கொண்டு செல்லப்பட்டதும் அவள் உயிர் பிரிந்துவிட்டது.

அவளின் கழுத்துப் பகுதியை துப்பாக்கிச் சன்னங்கள் துளைத்திருந்தன. பெரிய கலட்டித் தம்பனின் வீட்டுக்கு முன்னால் இரவிரவாகப் போடப்பட்ட கிடுகுப் பந்தலுக்கு நடுவே செல்லியின் சடலம் கிடக்கிறது. சின்னிப்பெட்டை தலைமாட்டிலிருந்து கதறிக் கதறி அழுது சுருண்டு போய்க் கிடந்தாள்.

அதிகாலையோடு மணியகாரன் வீட்டுக்கு தகவல் கொண்டு போன தம்பன் இன்னும் வரவில்லை வழமையாக இப்படிப்பட்ட காரியங்களை விதானை

மாருக்குத் தான் சொல்ல வேண்டும் விதானையார்தான் பிணமாகக் கிடக்கிறாரே!

பொழுது மதியத்திற்கு வரும்வரை தம்பனோ அல்லது வேறு தகவல்களோ கிடைக்கவில்லை.

மணியகாரன். பொலிசு. டாக்குத்தர்மார் விதானை வீட்டில் தகவல் கொடுக்க முடியாமல் தம்பன் மணியகாரன் வீட்டில் தவம் கிடந்தான்.

விதானையார் வீட்டில் எந்தவித ஆரவாரமும் இன்றி உடம்பில் எந்த விதமான கீறல் கிழிப்புகள் இன்றி விசாரணைகள் நடந்து முடிந்துவிட்டன!

நன்னியனும் மக்கள் இருவரும் வந்து மயிலுவுடன் கதைத்துக் கொண்டு நின்ற விதானையாரை மூத்தவனும் இளையவனும் பிடிக்க நன்னியன் விலாவில் குத்திய தாக சண்முகத்தின் சாட்சி.

தான் விதானையாருடன் பேசிக் கொண்டிருக்கும் போது மூத்தவனும், இளையவனும் விதானையாரைக் கட்டிப் பிடிக்க நன்னியன் கத்தியால் குத்தியதாக மயிலு வின் சாட்சி.

தான் உள்ளே இருக்கும்போது ஐயோ என்ற கணவ னின் குரல் கேட்டது; வெளியே ஓடிவந்து பார்த்தபோது நன்னியனும் மக்களும் ஓடியதையும் நன்னியனின் கையிஃ கத்தி இருந்ததாகவும் விதானையாரின் மனைவி சாட்சி.

விசாரணைகள் முடிந்துவிட்டன.

தம்பாப்பிள்ளையர் நின்று எல்லாவற்றையும் நெறிப் படுத்தினார்.

எல்லோரும் வெளியேறிவிட்டனர். மணியகாரன் வீட்டுக்குப் போகும் போது பொழுது கருகிவிட்டது.

முறைப்படி தம்பன் தகவல் கொடுத்துவிட்டான்.

''நான் அறிவிக்க வேண்டியவங்களுக்கெல்லாம் அறிவிக்கிறன். நான் வருமட்டும் சவத்திலை ஆரும் தொடப்பிடாது!'' என்று கூறிவிட்டு மணியகாரன் கிணற்றடிப் பக்கம் போய்விட்டார்.

பொழுது கருகியது; இருட்டியது. விடிந்தது! மணியகாரனே வேறு யாருமோ வரவில்லை.

செல்லியின் கட்டை அப்படியேதான் கிடந்தது.

செல்லியின் உயிர் பிரிந்தது முந்தநாள் இதே நேரம் தான்.

இப்போது சரியாக இரு நாட்கள்! அதிகாரிகள் யாரும் வரவில்லை. இரவு வந்தது.

செல்லியின் கட்டையைச் சுற்றிப் பலர் காவல் இருந்தனர்.

நன்னியனோ, இளையவனோ, மூத்தவனோ யாரும் பக்கத்தில் இல்லை. மூத்தவன் பெண்டில் பொன்னி வயிற்றைத் தள்ளி பிடித்துக் கொண்டு அங்குமிங்குமாகத் திரிந்தாள். சின்னி அழுவதும் புலம்புவதும் மயங்குவதுமாக இருந்தாள். இரண்டு நாட்களும் அவள் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட வாயில் விடவில்லை.

தம்பன் நன்னியனுக்கு உறவு முறையானவனல்ல.

'பள்ளன்'.

நன்னியனின் பிரிய நண்பன்.

எந்த வகையிலும் நன்னியனுக்கு ஒட்டானவன். அவன் தனது பொறுப்பிலேயே இந்த இழவுச் செலவுகளை ஏற்றுக் கொண்டான்.

சின்னக் கலட்டியிலுள்ள நன்னியனின் ஆட்களும் பெரிய கலட்டியில் உள்ள தம்பனின் உறவினர்களும் பணம் சேர்த்துக் கொடுப்பதற்காக தலைக்கு ஒன்றோ

இரண்டோ என்று தீர்மானத்திற்கு வர சர்ச்சை செய்து கொண்டிருந்தனர், அப்போது.

''இஞ்சர், பொடியள்! நீங்கள் செய்யிறது நல்ல காரியம்தான் இப்பிடிக் காரியங்களிலைதான் எங்கடை ஒற்றுமையைக் காட்ட வேணும். இப்ப நான் செலவழிக் கிறன். என்னாலை ஏலாக் கைக்கு நீங்கள் செய்யுங்கோ; அது மட்டும் உதை நிப்பாட்டுங்கோ!'' என்று தம்பன் பேசினான்.

''ஓ! இனிக் கோடு கச்சேரி எண்டு கனக்கக் கிடக்கு; அதுகளுக்கு ரெண்டு பகுதியும் சேந்துதான் சிலவழிக்க வேணும்!'' என்று ஒரு சூடு குடு கிழவன் சொன்னபோது எல்லோரும் அதை ஆமோதித்தனர்.

நன்னியனையும், மூத்தவனையும், இளையவனையும் தின்னவேலி சங்கிலித்தாம் இராயப்புவின் பகுதிக்கு அனுப்பி வைத்து விட்டதாகவும் அவர்கள் அங்கே பக்குவ மாக இருப்பதாகவும் தங்களுக்குள்ளேயே எல்லோரும் இரகசியமாக பேசிக் கொண்டனர்,

பறுவம் வந்து மூன்றாவது நாள்!

நிலவு காலித்து விட்டது!

பொழுது படுவதற்கிடையில் விதானையாரின் பிரேதம் தாவடி பெரும் சுடலைக்குப் போய் கொள்ளி வைக்கப் பட்டு, இதுவரை சாம்பலாகி காடு மாத்தும் முடிந்திருக்கும்!

செல்லியின் கட்டை மட்டும் அப்படியே கிடக்கிறது.

மறுநாளுக்கு மறுநாளும் வந்துவிட்டது. பொழுது உயர்ந்து வந்த போது வில்லு வண்டி ஒன்று தம்பன் வீட்டுப் பக்கமாக வந்து நின்றது.

கறுப்பான நீண்ட அங்கியுடன் பாதிரியார் ஞான முத்தர் இறங்கினார். அவரைத் தொடர்ந்து, சங்கிலீத் தாம் இராயப்பன், சிமியோன், உபதேசியார் சந்தியாம் பிள்ளை ஆகியோர் இறங்கினர்.

நேராக செல்லி கிடத்தப்பட்ட இடத்திற்கு வந்தனர். செத்த வீட்டில் இருந்தவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை.

சின்னிப் பெட்டை விக்கினாள்.

''ஐயோ! கோயிலுக்கு வந்ததுக்காக ஆத்தையைக் கொண்டு போட்டாங்களே! சுவாமி நயினார்!'' என்று குரல் வைத்தாள். பாதிரியாரின் காலடியில் விழுந்தாள்.

எல்லாப் பெண்களும் குரல் வைத்தனர். குரல்கள் ஓயும்வரை ஞானமுத்தர் அப்படியே நின்றார். ஓய்ந்ததும் விம்மிக் கொண்டிருந்த சின்னிப் பெட்டையின் உச்சியை வருடித் தடவி விட்டுக் கொண்டே,

''பிள்ளாய்; சர்வ வல்லமையுள்ள கர்த்தர் செல்லியை அழைத்துக் கொண்டார். பிறந்தவர்கள் யாவரும் ஒரு நாள் இறக்கத்தான் வேண்டும். பிள்ளாய்; உன்னுடைய தாயாருக்கும் ஆண்டவர் நித்திய இளைப்பாற்றியைக் கொடுப்பார். மகளே! அழாதே!'' என்று அவளை ஆசுவாசப்படுத்திவிட்டு அவள் பக்கத்திலேயே முழம் தாழிட்டு செல்லியின் முகத்தைப் பார்த்துக் கொண்டே சுவாமியார் மௌனத்தில் இருந்தார்.

சங்கிலித்தாமும், சிமியோனும், சந்தியாம்பிள்ளை உபதேசியாரும் முழந்தாள் படி இட்டுக் கொண்டனர்.

''சர்வ வல்லமையுள்ள தேவனே! இவருடைய ஆத்மாவுக்கு நித்திய இளைப்பாற்றியை கட்டளை இட்டருளும் பரலோகத்தில் இவளது ஆத்மா சாந்தி யடைவதாக!''

பாதிரியார் மிகவும் கீழ்க் குரலில் சொல்லி முடிக்க,

''பிதாவுடையவும், அதனுடையவும் இஸ்பீரித்து சாந்துவினுடையவும் நாமத்திலே ஆமேன் யேசு!'' என்று வலக்கரத்தால் நெற்றியிலும், நெஞ்சிலும் இரு தோள் மூட்டுகளிலும் தொட்டுக் கொண்டே மற்றைய மூவரும் சொல்லி முடித்தார்கள்.

சாவீடெங்கும் பூரண அமைதி!

ஞானமுத்துப் பாதிரியார் மீண்டும் சின்னியின் தலையில் தடவி அவள் நெற்றியை நிமிர்த்தி கண்ணீரால் நனைந்திருந்த அவள் இமைகளைத் துடைத்து, அவள் நெற்றியில் சிலுவை அடையாளம் இட்டுவிட்டு,

''மகளே! தைரியமாக இரு. எல்லாவற்றுக்கும் மேலான கர்த்தர் உனக்கு நல்ல பாதையைக் காட்டுவார்'' என்று கூறிவிட்டு எழுந்திருந்தார்; புறப்பட்டுவிட்டார்.

உபதேசியார், சிமியோன், இராயப்பன் ஆகியோரும், தம்பனும் வேறு சிலரும் அவர்களுக்குப் பின்னால் வந்தனர்.

''சுவாமி, அந்தச் சீவன் போய் இரண்டு நாளாச்சு; பதம் கெடுகுது; இன்னமும் மணியகாரனும், மற்றவையும் வரவில்லை; தான் வாறமட்டும் சவத்திலை தொடப்படாது எண்டு மணியகாரன் எனக்குச் சொல்லிப் போட்டார்; விதானையாற்றை சவத்தை நேற்றைக்கே பாத்து சுட்டுப் போட்டினம்.'' தம்பன் சுவாமியாருக்குப் பக்கமாக வந்து மெதுவாகச் சொன்னான்.

''அது எனக்கு முன்னமே தெரியும் பிள்ளாய்! காலம் பெற அதற்கேற்ற வேலைகள் செய்து போட்டன். இப்ப வருவினம்; பயப்பிடாதையுங் கோ; கண்டதைக் கண்டபடி சொல்லவேணும்; பொய்ச்சாட்சி சொல்லப்படாது; அது பாவம்!''

இதற்குமேல் பாதிரியார் பேசவில்லை. வண்டியில் ஏறிக் கொண்டார்.

கல்லுக் கலட்டி தாண்டும் வரை மற்றவர்கள் நடந்து சென்று வண்டியில் ஏறிக் கொண்டனர்.

பாதிரியாரின் வண்டில் ஒரு கட்டை தூரம் போயிருக் காது. இதற்கிடையில் இரு பொலீசாரும், மணியகாரனும மரண விசாரணைக்காரனும் வந்து சேர்ந்துவிட்டனர்.

''எட தம்பன், மாடு தின்னி வேதக்காறச் சாமியைக் கொண்டு எங்களைப் பயப்படுத்தத் துவங்கிட்டியள் என்ன?'' என்று கேட்டுக் கொண்டே வந்தார் மணிய காரன்.

''இல்லையாக்கும்; அவர் தன்ரைபாட்டிலை ஆக்கும்...!'' இப்படித் தம்பன் இழுத்தான்.

''எட, எல்லாம் எனக்குத் தெரியுமடா; நீங்கள் குசு விட்டாலும் எனக்குத் தெரியும்; அதெல்லாம் நான் ஆறுதலாப் பாக்கிறன்; இப்ப இந்தக் காரியத்தைப் பாப்பம்!'' என்று கூறிக் கொண்டே மணியகாரன் அங்கு மிங்கும் பார்த்தார். இருப்பதற்கு ஏதாவது ஆசனங்கள் இருக்கும் என்றுதான் அவர் பார்க்கிறார். சற்றுப் பக்கமாக இவர்களுக்காக முன்பே கட்டில் ஒன்று கொணர்ந்து வைக்கப்ட்டிருந்தது. நால்வரும் கட்டிலடிக்குச் சென்று விட்டனர்.

''ஆர் சாட்சி? என்ன நடந்தது? கண்டாக்கள் ஆரும் இருந்தா இஞ்சாலை வந்து ஐயாவிட்டைச் சொல்லலாம்!''

மணியகாரன் குரல் வைத்தார்.

ஒரு இடை வயதுப் பெண் முன் வந்தாள்.

''நான் நயினார் பொழுது படேக்கை அந்தப் பக்கமாகப் போனனான்; போகேக்கை சின்னக் கலட்டிப் பக்கம் குளறிக் கேட்டுது; ஓடிப் போனன்; கலட்டிக்கை வீடுகள் எரிஞ்சு கொண்டிருந்தது நயினார்; ஒரு பதினைஞ்சு இருபது பேர் மட்டிலை வேறை ஊர் ஆம்பிளையள் நிண்டவை! அப்ப செல்லி அக்கை கையிலை ஒரு அலவாங்கோடை ஒருத்தனை அடிக்க ஓடினவ. அவன் ஆரெண்டு எனக்குத் தெரியாது. அவன்ரை கையிலை கறுத்த வடலி மட்டை மாதிரி ஒண்டு இருந்தது. அக்கை நிண்ட பக்கம் அதை அவன் நீட்டினது நான் கண்டனான்; மளாரெண்டு எறி வெடிச் சத்தம் கேட்டது; அக்கை சரிஞ்சு விழுந்தா; பிறகு நிண்டவை கிண்டவை அக்கையைத் தூக்கிக் கொண்டு

வரேக்கை துடிச்சவ; வடலீக்கிஞ்சாலை வந்தாப் பிறகு மூச்சும் இல்லை...'' அவள் சொல்லி முடித்து விட்டாள்.

பொலீஸ் ஒருவன் அதைத் திருப்பி திருப்பிக் கேட்டு, கேட்டு குறிப்புப் புத்தகத்தில் குறித்துக் கொண்டான்.

''வேறை ஆரும் கண்டவை இருந்தா வாருங் கோடா.'' மணியகாரன் கூப்பிட்டார்.

தம்பன் முன்னே வந்தான்.

''தம்பன் பொய்ச் சாட்சி சொல்லப்படாது; பிறகு மறியலுக்குத் தான் போவாய்; கண்டியோ!'' மணியகாரன் எச்சரித்தார்.

''நான் ஏனாக்கும் காணாததைச் சொல்லப் போறன்; வடலிக்கங்காலை சின்னக் கலட்டியிக்கை ஏதோ சத்தம் கேக்குதெண்டு என்னைப் பெண்டில் நித்திரையாலை எழுப்பிவிட்டவள். ஓடிப் போனன் ;கலட்டி வீடுகள் எல்லாம் எரிஞ்சு கொண்டிருந்தது. நன்னி அண்ணையின்ரை பொஞ்சாதியை நலைஞ்சுபேர் தூக்கிக் கொண்டு வந்தினம். என்ரை வீட்டு முத்தத்திலை கிடத்திப் போட்டுப் பாத்தா அவ செத்துப் போனா!இப்பிடி ஏதும் நடந்தா விதானை யிட்டை சொல்லிறதுதான் வழக்கம்: விதானையாரும் செத்துப் போனார். எண்டு சொல்லிச்சினம்; நன்னியன், பொடியளும் விதானையாரைக் குத்திப் போட்டு ஓடுறாங் கள் எண்டு சொன்னவை; அதுதான் நான் மணியகாரன் நயினார் வீட்டை வந்தன்; நயினாரும் அங்கை இல்லை; பிறகு விடிய எழும்பி நயினார் வீட்டை வந்தன்.''

தம்பன் சொல்லி முடித்துவிட்டான்.

''அப்ப நீ சுட்டவனைக் காணேல்லை என்ன?'' மணி யகாரன் ஒரு கேள்வியை மட்டும் கேட்டார்.

''கண்டாச் சொல்லாமல் விடுவனே நயினார்!''

இதற்குமேல் அவனின் சாட்சி மணியகாரனுக்குப் போதும்!

இதற்குமேல் வேறு விசாரணை தேவையில்லை.

செல்லியின் பிணம் கணிக்கை மரச் சுடுகாட்டில் புதைக்கப்பட்டு விட்டது.

சுடுகாட்டில் இடுகாடும் சேர்ந்து இருப்பது ஊருக்கெல்லாம் பொதுவானது.

கீழ்ப்பட்ட ஜாதிக்கானதுதான் இந்த இடுகாட்டு ஏற்பாடு.

உயர்ந்த ஜாதியில் மிகப் பச்சைக் குழந்தைகள் இறந்துவிட்டாலும் இடுகாட்டுக்குள் புதைப்பது வழக்கம்தான் அதற்குப் பிரத்தியேகமாக இடுகாட்டு நிலம் இருக்கிறது.

செல்லியின் பிணம் புதைக்கப்பட்டுவிட்ட பின்பு அன்று இரவு, ஊருக்குப் பொதுவாக தம்பன் வீட்டில் கூடி இரு சாதியினரும் கஞ்சி தண்ணீர் பரிமாறிக் கொண்டனர்.

செல்லியின் சாவீட்டிலிருந்துதான் இந்த வழக்கம் தொடங்கியது.

''எட மோனை தம்பன்! வழக்குக் கணக்கு எண்டு கன காரியம் இருக்கெண்டு கதைச்சியள். உந்த வழக்குக் கணக்கு முடியிற மட்டும் என்ரை வானால் கிடக்காதடாப்பா. இந்தா என்ரை பங்கை இப்ப தாறன்'' என்று கூறிக்கொண்டே குடு, குடு எல்லிப்போலைக் கிழவன் தனது வல்லுவத்தை இழுத்து சல்லிக் காசுகளை கையில் கொட்டி தம்பனிடம் நீட்டினார்.

மனது விம்மிப்போக தம்பன் இரண்டு கைகளாலும் அந்த சல்லிக் காசுகளைப் பெற்றுக் கொண்டான். ஒரு சிறிது வேளை கூடியிருந்தவர்கள் எல்லோரும் உணர்ச்சிக்குக் கட்டுப்பட்டுப் போயினர்.

சின்னிக்கு மூத்தவன் பெண்சாதியும், இரண்டு குழந்தைகளும் உறவினர் என்று இல்லை. இப்போது எல்லிப்

போலைக் கிழவன் உட்பட எல்லோருமே உறவினர் ஆகி விட்டனர்.

கலட்டிக்குள் எரிந்து முடிந்த குடில்களைப் புதுப்பிக்கும் பணியில் மற்றவர்கள் இறங்கிவிட்டனர்.

குடில்கள் கட்டப்பட்டுக் கொண்டிருந்தபோது ஊரில் உள்ள நான்கைந்து நயினார்மார்கள் வந்து நின்றனர். அவர்கள் எல்லோருக்கும் பங்கானதுதான் அந்தக் கலட்டி.

''ஒருத்தனும் கொட்டில் போடக்குடாது; எங்களுக்குக் காணி வேணும்; கையோடை வேறை இடம் பாருங் கோடா!'' என்று வந்தவர்களில் ஒருவன் கூறினான்.

எல்லோரும் அப்படி, அப்படியே நின்றனர்.

''நாங்கள் இந்த நேரத்திலை வேறை எங்கை போறதாக்கும்!'' என்று கிழவன் கேட்டான்.

''எங்கையெண்டாலும் போயிட வேணும். இஞ்சை இந்த சின்னக் கலட்டிக்கை ஒருத்தனும் இருக்கப்படாது; போயிட வேணும்; கொட்டில் கிட்டில் போட்டியளோ கொலைதான் விழும்!''

நயினார் கூட்டத்தில் ஒருவன் முடிவாகக் கூறிவிட்டான். இதற்கு மேல் அங்கு ஒருவரும் நிற்கவில்லை; போய்விட்டனர்.

குடிசை போடும் அடுக்குகளை அப்படி அப்படியே விட்டுவிட்டு, எல்லோரும் தம்பன் வீட்டுக்குப் போனார்கள்.

தம்பனால் தனித்து என்னதான் செய்ய முடியும்? அவன் இருக்கும் சிறு துண்டுக் காணிதான் அவனுக்குச் சொந்தமானது. அதற்குள் எத்தனை குடிசைகளைப் போட்டுக் கொள்வது? அவன் வீட்டுக்குப் பின் பக்கத்தில் பூக்கண்டருக்கு ஒரு சிறு துண்டுக் காணியும், சிங்கப்பூரில் இருக்கும் மைத்துனருக்கு ஒரு பெரும் துண்டுக் காணியும் இருக்கிறது.

பூக்கண்டர் ஒருவிதமான தனிப்போக்கான குணமுடையவர் என்பது தம்பனுக்குத் தெரியும். தம்பனோடுதான் அவர் மிக நெருங்கிய ஒட்டு. தம்பன் வீட்டில்தான் அவருக்கு கள்ளு வாடிக்கை.

''சரி, சரி எல்லாரும் எப்பன் இண்டைக்கு மட்டும் பொறுங்கோ. ஒரு நாலைஞ்சு பேர் என்ரை வீட்டுக்குப் பின் பக்கத்திலை கொட்டில்களைப் போடுங்கோ; மிச்ச ஆக்களுக்கு நான் ஒரு வழி பண்ணிறன்'' என்று சொல்லி விட்டு தம்பன் பூக்கண்டர் வீட்டுப் பக்கம் போய் விட்டான்.

நல்லவேளை அப்போதுதான் பூக்கண்டரும் தோட்டத்தால் வந்திருந்தார்.

''என்ன தம்பன்? என்ன வியளம்?'' என்று கேட்டுக் கொண்டே தம்பனை நோக்கிப் படலைக்கு வந்துவிட்டார்.

நெளிவு, சுழிவு ஒன்றும் இல்லாமல் தம்பன் விஷயத்துக்கு வந்து விட்டான்.

பூக்கண்டர் அதிக நேரம் யோசிக்கவில்லை. அவர் சுபாவம் அப்படித்தான்.

''தம்பன் என்ரை துண்டுக்கை கொட்டில்களைப் போடச் சொல்லு. போதாட்டி மச்சான்ரை துண்டுக்கையும் போடச் சொல்லு; சாட்டுக்கு நான் அவருக்கு அறிவிக்கிறன். அவர் என்ரை சொல்லைத் தட்ட மாட்டார்.

பூக்கண்டரின் இந்தச் சொல்லு தம்பனின் கண்களைக் கலக்கிவிட்டது.

பூக்கண்டர் தம்பனின் தோளைத் தட்டி, ''இந்த நேரத்திலை இதைச் செய்யாட்டி நான் மனிசனே? எனக்கென்ன பெரிய காணி பூமி தோட்டம் துரவு இருக்கோ? நானும் உங்களைப் போலைத்தான்! இந்த வீட்டையும் அந்தக் காணித்துண்டையும் விட மாறிக்கட்ட ஒண்டுமில்லாதவன். நானும் இந்த மம்பட்டியை நம்பித்தான்

பிள்ளை குட்டியளோடை சீவிக்கிறன்.'' என்று கூறி விட்டு பூக்கண்டர் திரும்பிப் போய்விட்டார்.

''அப்ப சம்பி நான் போட்டுவாறன்'' என நாத் தழுதழுக்கக் கூறிவிட்டுத் தம்பனும் திரும்பி நடந்தான்.

ஊருக்குள் ஒரு வழக்கம்! பள்ளர் மட்டும் வேளாரை 'கமக்காரன்' அல்லது 'தம்பி' என்று கூப்பிடலாம். நளவருக்கு அவர்களை 'தம்பி' என்று அழைக்கும் உரிமை இல்லை. எந்த வயதானவரையும் சின்னஞ் சிறுவரும் 'தம்பி' என்றும் 'கமக்காரன்' என்றும் பள்ளர் கூப் பிடலாம்.

தம்பன் வீட்டுக்கு வரும்வரை கொட்டில் போடும் வேலை தம்பன் வீட்டுப் பின் துண்டில் நடந்து கொண்டிருந்தது.

''பூக்கண்டுத் தம்பி ஓமெண்டிட்டார்; அவற்றைத் துண்டுக்கையும், அவற்றை சிங்கப்பூர் மச்சான்ரை துண்டுக்கையும் கலந்து பகிந்து போடுங்கோ!'' என்றான் தம்பன்.

எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது. குடிலுக்குள் இருந்த கிழவி ஒருத்தி, ''அவனெல்லோ மனிசன்! அவனை நயினார் எண்டு கூப்பிட்டாலும் தகும். தூ...!' இந்த நாயள்'' என்று காறி உமிழ்ந்தாள்.

பொழுது கருகுவதற்கிடையில் பெரிய கலட்டிக்குள் சின்னக் கலட்டியார் அனைவருக்கும் கொட்டில்கள் போடப்பட்டு விட்டன.

மூத்தவன் பெண்டில் பொன்னிக்கும் பிள்ளைகளுக்கும் சின்னிப் பெட்டைக்கும் கிடைத்த குடில் தம்பனின் வீட்டின் பின்பக்கத்திலேயே அமைந்து இருந்தது. தம்பனும் அதையே விரும்பினான்.

நிலவு காலித்தபோது பூக்கண்டர் வந்தார். வள வெல்லாம் குடில்கள் குந்தி இருப்பதைக் கண்டு ஆச்சரியப் பட்டுப் போனார்.

நீண்ட நேரம் அவர் அங்கு நிற்கவில்லை.

தம்பனிடம் மட்டும் தனியே இரகசியமாகப் பேசினார்; போய்விட்டார்.

''என்னிலையும் குதிரை விடப் பாப்பாங்கள்;பாப்பம்;' என்று மட்டும் அவர் வாய்விட்டு சொல்லிப் போய்விட்டார்.

இரவு எல்லோருக்கும் தம்பனின் செலவிலேயே சாப்பாடு நடந்தது. பூசனிக்காய்க் கறியும், சோறும் புளிச் சாத்துத் தண்ணீரும்.

இரவு கழிந்துவிட்டது.

விடிவெள்ளி முளைத்தது.

தம்பன் எழுந்து வெளியே போய்விட்டான்.

இரவு பூக்கண்டர் இரகசியமாக ஏதோ சொல்லி இருக்க வேண்டும்!

நிலம் வெளிப்பதற்கிடையில் தம்பன் தின்னவேலிக்கப் பால் உள்ள வேதக் கோயிலடிக்கு வந்துவிட்டான். சங்கிலித்தாம், இராயப்பன் வீட்டுக்கு அவன் முன்பு வந்திருக்கவில்லை.

இராயப்பனின் வீட்டை அவன் விசாரித்தபோது யாருமே சொல்லாமல் மழுப்பிவிட்டனர். தம்பனுக்கு இராயப்பன் அறிமுகம் இல்லை.

தற்செயலாக சிமியோன் கண்களில் பட்டான்; சிமி யோனை தம்பனுக்குத் தெரியும்; தம்பனின் பெறாமகன் முறையான சுந்தரத்தோடு சிமியோனுக்கு தொடர்பு இருந்தது. இரண்டொரு தடவை சுந்தரத்தைத் தேடி இவன் வீட்டுக்குச் சிமியோன் வந்திருக்கிறான். செல்லி யின் மரண வீட்டுக்குப் பாதிரியாருடன் அவனும், இராயப்பனும் வந்த அந்தச் சற்று நேரப் பழக்கமும் இருந்தது.

தம்பனை அவன் மரியாதையுடன் வரவேற்று, விஷயத்தை விசாரித்து விட்டு சங்கிலித்தாம் இராயப்பன் வீட்டுக்கு அவனை அழைத்துச் சென்றான்.

அங்கே நன்னியனை தம்பன் கண்டான். தம்பனைக் கண்டதும் நன்னியன் விம்மத் தொடங்கினான். இராயப் பனுக்குத் தம்பனை சிமியோன் பல விதத்தில் அறிமுகம் செய்து வைத்தான்.

இராயப்பன் பல விஷயங்களைத் தம்பனிடம் விசாரித்தான்

தம்பன் குடில்கள் அமைக்கத் தொடங்கியதிலிருந்து பூக்கண்டரின் ஆமோதிப்புக் கிடைத்தது மட்டும் சுருக்க மாகக் கூறி முடித்தான்.

மூத்தவனையும், இளையவனையும் விசாரித்தான். இளையவன் தன்னோடு இருப்பதாகவும், மூத்தவன் வேறொரார் இடத்தில் இருப்பதாகவும் சிமியோன் சொன்னான்.

சின்னிப்பெட்டை எப்போதுமே அழுது கொண்டிருப் பதாக தம்பன் சொன்னபோது நன்னியன் கண்களைத் துடைத்துக் கொண்டான். இதைக் கேட்ட சிமியோனுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. அவன் அதைச் சமாளித்துக் கொண்டான். இதை இராயப்பன் கடைக் கண்ணால் கவனித்தான்.

தொடர்ந்து நடக்க வேண்டியதைப் பற்றி தம்பன் பேச்சைத் திருப்பினான்.

ஊரில் இருப்பவர்கள் நளவன், பள்ளன் என்ற வித்தி யாசமின்றி பணம் சேகரித்துத் தர ஆயத்தமாக இருக் கிறார்கள் என்றும் ,முடிந்தால் மற்ற பறையர், வண்ணார், அம்பட்டரிடமும் இரகசியமாகச் சேர்க்கலாம் என்றும் வழக் கைப் பிழைவிடாமல் நடத்தலாம் என்றும் தம்பன் அபிப்பிராயம் சொன்னான்.

''கமக்காறரவை பொலிசுக்காறரைக் கொண்டு இவங்களைப் பிடிச்சு அடிச்சுக் கொல்லத் தெண்டிப்பினம்!'' என்றான் தம்பன்.

''தம்பண்ணை! நீர் பயப்பிடாதையும்; சுவாமி சொல்லிப் போட்டார்; இவங்கடை கையிலை ஆப்பிடாமல் பொலிசுப் பெரியவனிட்டை, இல்லாட்டி சுப்பிரியம் கோட்டு இராசாவிட்டை கொண்டு போய் ஒப்படைச்சு, வழக்கை நடத்தலாமெண்டு,'' இராயப்பன் சொன்னான்.

''அது லேசான காரியம் எண்டு நான் நினைக் கேல்லை! பொலிசுக்காறன் அவங்கடை ஆள்; மணிய காறன், உடையார், கோட்டிலை வழக்குப் பேசுறவங்கள் எல்லாம் அவங்கடை ஆக்கள்! பாத்தியளே குத்தினது மூத்தவன்! அவங்கள் எல்லாரும் மூத்தவனும், இளைய வனும் கட்டிப்பிடிக்க நன்னியன்ணை குத்தினது எண்டு சோடிச்சு வைச்சிருக்கிறாங்கள்; மூண்டு பேரையும் தூக் குக்கு அனுப்ப! எனக்கொரு யோசினை; 'அவங்கள் வரவு மில்லை; பிடிக்கவும் இல்லை என்னை மரத்தைக் கட்டிப் பிடிக்கச் சொல்லிப் போட்டு இடிச்சார் விதானை; நான் ஆத்திரத்திலை குத்தினனான்' எண்டு நன்னியண்ணை ஒத்துக்கொண்டால் மூத்தவனுக்கும் இளையவனுக்கும் ஒண்டும் வராது;கை பிளைபாட்டுக்குற்றம் எண்டு நன்னி யண்ணைக்கு ஏதெண்டாலும் மறியலைக் கிறியலைத் தீரும்! பூக்கண்டரும் இப்பிடித்தான் சொல்லிவிட்டவர்.''

தம்பன் பூக்கண்டரின் அபிப்பிராயத்தை தனது அபிப் பிராயமாகச் சொல்லி முடித்துவிட்டான்.

''சரி, சரி! சுவாமியாரோடையும் யோசிப்பம்! அவர் பொய் சொல்லச் சம்மதியார்; எல்லாத்துக்கும் நான் நாளைக்கு அல்லது நாளையிண்டைக்கு அங்காலை வாறன்; அந்தக் குமர்ப் பெட்டை வீனாய் அழுது சாகப் போகுது; ஒருக்கா நான் வந்து ஆறுதல் சொல்லலாம் எண்டால் நேரமில்லாமல் கிடக்கு. தமபி சிமியோன்!

தம்பண்ணையோடை நீ ஒருக்காப் போட்டு வாவன்! எப்பன் அதுகளுக்கும் ஆறுதலாய் இருக்கும்!''

இராயப்பன் சொல்வதற்கு முன்னமே சிமியோன் சம்மதித்துவிட்டான். சிமியோன் உடுப்பு மாற்றிக் கொள்ள வீட்டுக்குப் போக எழுந்தான். ''எட தம்பி, தம்பண்ணையையும் கூட்டிக் கொண்டு போய் இளையவனையும் காட்டிப் போட்டுவா!'' என்று இராயப்பன் கூறவே தம்பனும் எழுந்து சென்றான்.

தம்பனும் சிமியோனும் வீட்டுக்குப் போனபோது சிமியோனின் தாய் கொடுத்த கோப்பியை இளையவன் குடித்துக் கொண்டிருந்தான்.

தம்பனைக் கண்டதும் கோப்பிப் பேணியை வைத்துவிட்டு அவன் அழுதான்.

''சீ, நீ ஒரு இளந்தாரியே? இப்பிடிப் பயந்து அழுகிறதோ? மடப்பொடியா!'' என்று தம்பர் அவன் தோளைத் தடவி விட்டார்.

''நான் பயப்பிடேல்லைத் தம்பண்ணை. அவனை நானெல்லோ குத்தியிருக்க வேணும். அண்ணை குத்திக் கித்திப் போடுவார்; அவர் பிள்ளை குட்டிக்காரன்; நான் குத்துவம் எண்டு எத்தினை தரம் கத்தியைக் கேட்டன்; அவர் தரமாட்டன் எண்டிட்டார். இப்ப அப்பு—தான் குத்தினது எண்டு சொல்லிப் போட்டாங்கள்; மூண்டு பேரையும் தூக்குக்கு அனுப்பப் பாக்கிறாங்கள்; ஆத்தையும் போட்டா; எக்கணம் தங்கச்சி தெருவிலை நிக்கப் போகுது...அதுதான் தம்பண்ணை அழுகிறன்!'' இளையவன் பேச்சை முடிக்காமல் மீண்டும் எதை எதையோ பேசினான்.

சிமியோன் கண் கலங்கினான்.

சற்று வேளைதான்.

பின்பு தம்பனும், சிமியோனும் புறப்பட்டு விட்டனர்.

''தம்பி நான் போட்டுப் பிறகு வாறன். ஒண்டுக்கும் பயப்பிடாதை. சின்னியும், கொண்ணன் பெண்டிலும் என்ரை வீட்டோடைதான் இருக்கினம். எல்லாம் நான் பாத்துக் கொள்ளுவன்; நீ யோசியாதை. கொப்பரிட்டை யும் சொல்லியிருக்கிறன். எல்லாம் யோசிச்சுச் செய்வம்.''

போகப் புறப்பட்டுக் கொண்டே தம்பன் இப்படிக் கூறி னான்.

இளையவன் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

''சின்னியைத்தான் பாக்கப் போறன்'' என்று இளை யவனிடம் சிமியோன் சொல்லத் துணியவில்லை. ஏன்தான் அவன் அதை மறைத்தானோ...?

தம்பனும் சிமியோனும் வந்து சேர்ந்த போது பொழுது உச்சிக்கு வந்து விட்டது.

மூத்தவன் பெண்டில், பிள்ளைகளையும் இழுத்துக் கொண்டு தம்பனிடம் ஓடிவந்தாள்.

''என்ன தம்பண்ணை, அந்தாளையும், அம்மானையும் இளையவனையும் கண்டதே அண்ணை?'' என அங்கலாய்த்தபடி கேட்டாள்.

அப்போதுதான் அவள் கூட வந்த சிமியோனையும் கண்டாள். அவனை அவள் செத்த வீட்டில் மட்டுந்தான் கண்டிருக்கிறாள் என்பதல்ல. முதல் முதல் மாமன் வீட்டிலும் கண்டிருக்கிறாள். ஆயினும் அவனை வைத்துக் கொண்டு இப்படிக் கேட்டிருக்கக் கூடாது என அவள் எண்ணினாள். அதற்கு மேல் அவள் ஒன்றும் கேட்கவில்லை.

அதைக் குறிப்பறிந்து கொண்ட தம்பன், ''அது நம்மடை பொடியன்தான் பெட்டை; கொம்மானும்உன்ரை மனிசனும், உன்ரை சுகத்தைக் கேட்டு வர அனுப்பினவை. வேதக் கோயிலடி மூப்பன்ரை மோன் சிமியோன் எண்டு சொல்லிறது. எங்கை சின்னிப் பெட்டை? சிலமனைக் காணேல்லை?'' என்று கேட்டான் தம்பன்.

''பூக்கண்டு நயினாரிட்டையிருந்து ரெண்டு மூண்டு கட்டை மரவள்ளிக் கிழங்கு வந்தது. இரகசியமாக முத்தி மனிசி கொண்டு வந்து தந்திட்டுப் போறா. அதைத்தான் சின்னி அவிச்சுக் கொண்டிருக்குது'' என்று கூறிக் கொண்டே ''சின்னி, சின்னி மச்சசாள்!'' என குரல் வைத்தாள் பொன்னி.

சின்னிப் பெட்டை வந்தாள். வந்தவளின் கண்கள் முதலில் சந்தித்தது சிமியோனின் கண்களைத்தான். அவள் அவனை அடையாளம் கண்டு கொண்டாள்.

அன்று சங்கிலித்தாமும் அவனும் வீட்டிற்கு வந்திருந்ததும் தன் கால்கள் அவன் இடுப்பில் தற்செயலாகப் பட்டதும் அவள் நினைவுக்குப் படக்கென வந்தது. அவள் தலை குனிந்து கொண்டாள்.

''அம்மான் ஆள் அனுப்பியிருக்கு, மச்சாள் உன்னைப் பாத்துக் கொண்டு வரச் சொல்லி அதுதான் தம்பி வந்திருக்கு!'' என்று மச்சாள்காரி அறிமுகப்படுத்தி விட்டாள்.

சிமியோனின் கண்கள் இரகசியமாக அவளையே அளந்தன. சின்னி நீண்ட நேரமாக அசைவற்று நின்றாள். பலர் அங்கு கூடிவிட்டனர்.

எல்லோரும் நன்னியனையும், இளையவனையும், மூத்தவனையும் விசாரித்தனரே தவிர விதானை வீட்டுப் புதினங்களைச் சொல்லவில்லை.

இன்னும் கமக்காரர் தோட்டங்களுக்குக் கொத்தவோ சாறவோ பாத்திகட்டவோ இறைப்புக்கோ போகவில்லை. யாரும் கூடிப் பேசி முடிவு செய்யாமலேயே தங்கள் தங்கள் பாட்டுக்கு நின்று விட்டனர்.

தம்பாப்பிள்ளையர்தான் முதல் முதல் ஊருக்குள் நாற்று ஊன்றியிருந்ததினால் அவரின் நாற்றுகள் பட்டை தண்ணி நனைவு காணாமல் வாடிச் செத்துக் கொண்டிருந்தன.

சின்னக் கலட்டியை விட்டுவிட்டு பள்ள பகுதியாகிய பெரிய கலட்டிக்குள் ஆட்கள் பிடிக்க அவர் படாதபாடு பட்டுவிட்டார்; முடியவில்லை. மந்திப் புலப் பக்கத்திலிருந்தும் ஆள் பிடிக்கப் பார்த்தார்; அதுவும் முடியவில்லை.

சுதுமலையில் புளாச் செல்லப்பனுடன் இதற்கு முன்னமே அவருக்குக் கூட்டு இருந்தது. புளாச் செல்லப்

பனின் தங்கை சிங்கியுடன் முன்பு தொடர்பு இருந்ததால் இன்னும் இவரும் அவனும் ஒட்டு.

''என்னத்தையெண்டாலும் கேளுங்கோ; உதைமட்டும் நயினார் கேட்டுக் குறை நினைக்கப்படாது; நான் உதிலை தலைப்போட்டா எங்கடை பொடியள் என்னை அடிச்சுக் கொண்டு போடுவாங்கள்'' என்று சொல்லி செல்லப்பனும் கைவிரித்து விட்டான்.

தம்பாப்பிள்ளைக் கமக்காரனின் ஆயிரக் கணக்கான நாற்றுகள் முற்றாக அழிந்து விட்டன.

''இண்டைக்குக் காலம்பெற பூக்கண்டர் வீட்டை ஐஞ்சாறு பேர் போய் சின்னக்கலட்டி—யாருக்கு குடில் போட இடம் குடுத்ததுக்காக அவரை வெருட்டினவை யாம்; அவர் ஒண்டுக்கும் அசைய மாட்டன் எண்டிட்டா ராம்; எண்டு கதையாக் கிடக்கு'' என்றாள் தம்பனின் பெண்டில் பாறி.

இது பெரிய புதினமாக சிமியோனுக்குப் படவில்லை.

சின்னிப்பெட்டை சிமியோனுக்கு பனங்கட்டியுடன் கோப்பித் தண்ணி கொண்டுவந்து கொடுத்தாள்.

இளம் பெண் ஒருத்தி பனம் வடலிக்கூடாக ஓடி வந்தாள்.

''என்னடி ஆத்துப் பறந்து ஓடியாறாய்'' எனத் தம்பன் கேட்டான்.

சின்னக் கலட்டிப் பக்கத்திலிருந்து கார் ஒண்டு வருவ தாக அவள் சொன்னாள்.

பெரிய கலட்டி பரபரத்தது.

தம்பனும் சிமியோனும் அமைதியாக குந்தியிருந்தனர்.

''கார் வந்தா வரட்டுக்கு; நீங்கள் பேசாமல்இருங்கோ; ஒருத்தரும் ஓடக்கூடாது'' என்று சிமியோன் கூறினான். எல்லோரும் அப்படியே நின்றனர்.

சற்று வேளைக்குள் பனை வெளிக்கூடாக வந்த கார். தம்பனின் வீட்டுக்குச் சமீபமாக வந்து நின்றது.

இரண்டு பொலீசார்.

தம்பாப்பிள்ளையர்.

மயிலு! மொத்தமாக நால்வர் இறங்கினர். தம்பாப் பிள்ளையர் முன்னே வந்தார்.

''தம்பன் நாங்கள் வாறம்; நீ இருந்த இடத்திலேயே இருக்கிறாய் என்ன? எழும்பி வாடா! தம்பாப்பிள்ளையர் அதிகாரத் தொனியில் பேசினார்.

தம்பன் மெதுவாக எழுந்தான்.

''என்னவாக்கும் தம்பி?''

''உவன் ஆற்றா உந்த சிலுப்பாத் தலையன்?''

''அது தின்னவேலீக்கை இருக்கிற எங்கடை பொடியனாக்கும் தம்பி. செத்த வீட்டுக்கு வந்தாப்போலை நிக்கிறான்.''

''தம்பா, எனக்குக் காது குத்தாதை! அங்கை அவன்ரை கழுத்திலை நாடாவும், குருசும் தொங்குது; தின்ன–வேலீக்கை பள்ளர் ஒருத்தரும் வேதத்திலை இல்லை; எனக்குத் தெரியாதெண்டு நிக்கிறாய்...! அது கிடக்கட்டுக்கு; நன்னியனையும் மக்களையும் எங்கையடா ஒழிச்சு வைச்சிருக்கிறியள்? உண்மையைச் சொல்லிப் போடு...''

''தம்பி நயினாரானை எனக்குத் தெரியாது.''

சிமியோன் இருந்த இடத்திலிருந்து நகரவில்லை.

''எனக்குத் தெரியும்டா தம்பா; நீ இண்டைக்கு விடியமுன்னம் எழும்பிப்போய் மத்தியானம் இந்தச் சிலுப்பாக்காறனோடை வந்திருக்கிறாய்... எனக்குத் தெரியும்; நீ அவங்களைத்தான் பாக்கப் போட்டு வந்திருக்கிறாய்! டேய் சிலுப்பாக்காறன்! உங்கடை

ஊருக்கை தானேயடா அவங்களை ஒழிச்சு வைச்சிருக் கிறியள்?''

சிமியோன் பேசாமலேயே இருந்தான்.

''டேய் கேக்கிற கேள்விக்கு மறுமொழி சொல்லாமல் இருந்த இடத்திலேயே இருக்கிறீர் என்ன?'' என்று கூறிக்கொண்டே மயிலு சிமியோனை நோக்கி வந்தான்.

''மயிலு, என்ரை வீட்டிலை இருக்கிறவனோடை வீணாய் கொழுவினாய் எண்டா....''

தம்பனின் எச்சரிக்கையோடு மயிலு நின்றுவிட்டான். வந்த பொலீசார் இருவரும் நடுவே வந்தனர். இரு வருக்கும் தமிழின் விபரம் புரியவில்லை. ஒருவன் யாகுவன்; மற்றவன் பறங்கி.

ஏதோ நடக்கக்கூடாதது நடக்கப் போவதாக ஊகித்துக்கொண்ட கார்க்காரன் காரின் ஸ்ராட்டிங் கம்பியை எடுத்து காரை ஸ்ராட் செய்ய முயன்று கொண்டிருந்தான்.

கார் தங்களை விட்டுவிட்டுப் போகப் போவதாக அனுமானித்துக் கொண்டு நிலமையை சமாளித்தபடி நால்வரும் பாய்ந்து வந்து காரில் ஏறிக் கொண்டனர்.

பனைவெளியை ஊடறுத்து கலட்டி வாய்க்காலில் பிரிந்து கார் பறந்து விட்டது.

மயிலனின் பேச்சினால் சிமியோன் அவமானப்பட்டு விட்டதாக தம்பன் எண்ணினான்.

''தம்பி, தெரியாதே தம்பி; இந்த ஊர் ஒரு மாதிரி... உங்கடை ஊர் மாதிரி இல்லை'' என்று சமாளித்தான்.

''உதிலை எனக்கென்னண்ணை வெக்கம்! உங்களுக்கு வாறதுதான் எனக்கும்; என்னிலை தொட்டா னெண்டால் பேந்து தெரியும் அவனுக்கு; உன்னைக்

கொல்ல வாற பசுவையும் கொல்லச் சொல்லி யேசு சொல்லியிருக்கிறார்.''

''அப்ப, மூத்தவன் விதானையைக் கொண்டது சரி யெண்டு சொல்லுறீரோ தம்பி?''

''ஓம், மெத்தச் சரி!'' சிமியோனின் மொட்டையான பதிலுக்குப் பின் பேச்சுகள் அதிகம் இல்லை.

தம்பன் பெண்டில் பாறி மத்தியான உணவு தயாரித்துவிட்டாள். அவித்த மரவள்ளிக் கிழங்கும்' இறால் கருவாட்டுச் சம்பலும் இருவருக்கும் பரிமாறினாள்.

அந்தப் பெரிய கலட்டிக்குள் வீடும், விறாந்தையும் அடுக்களையும் என்று இருப்பது தம்பனின் ஒரே வீட்டில் தான்.

அடுக்களைக்குள் தம்பனின் குஞ்சு குருமன்கள் கிழங்குக்கு எனக்கு உனக்கு என அடிபட்டுக் கொண்டு இருந்தனர்.

மூத்தவன் பெண்டில் தான் அரைத்த தூதுவளைச் சம்பலையும் ஒரு சிரட்டையில் கொண்டு வந்து வைத்தாள்

மலர்போன்று அவிந்து விரிந்திருந்த கிழங்கையும், இறால்கருவாட்டுச் சம்பலையும், தூதுவளைச் சம்பலையும் இருவரும் மிக ரசித்து ருசித்துச் சாப்பிட்டார்கள்.

இறால் கருவாட்டுமிளகாய்ச் சம்பலை அதிகமாக உண்டுவிட்ட சிமியோன் ஆ...ஊ... என்று உறைப்புத் தாங்காது வாயைப் பொச்சரித்தான். இதைக் கவனித்த சின்னிப்பெட்டை முட்டியில் தண்ணீர் கொண்டு வந்து அவன் முன்னே வைத்தாள்.

அவளை ஒருமுறை நிமிர்ந்து பார்த்துவிட வேண்டும் போல அவனுக்குப் பட்டது; பார்த்தும் விட்டான். உறைப்பு எப்படி நின்றது என்று அவனுக்கே தெரியவில்லை.

சின்னி உள்ளே போய்விட்டாள்.

''தம்பிக்குப் போதும் போதாதைக் கேட்டுக்குடுங்கோ; களையாக் கிடக்கு; நான் எப்பன் சரியப்போறன்'' என்று கூறிக்கொண்டே தம்பன் பக்கத்தே கிடந்த பாயை இழுத்துப் போட்டுக் கொண்டு தன் கட்டையை அதில் சாய்த்துக் கொண்டான்.

சிமியோன் கிழங்குகளைத் தின்று முடித்ததும் சின்னி ஒரு பாய்த்துண்டையும் தலைக்கு அணை கொடுப்பதற்கு ஒரு சிறிய பனம் வளைத் துண்டையும் கொண்டுவந்து சிமியோனுக்குப் பக்கத்தில் வைத்துவிட்டுச் சென்றாள்.

சிமியோன் அலுப்புடன் சரிந்து கொண்டான்.

உடனடியாகவே அவனுக்கு தூக்கமும் வந்து விட்டது.

மூன்றாவது நாள் காலை ஞானமுத்தர் பாதிரியாரின் வில்லு வண்டில் பொலீஸ் தலைவர் பங்களா வாசலில் வந்து நின்றது.

பாதிரியாருடன் நன்னியன், மூத்தவன், இளையவன் ஆகியோரும் இறங்கினர்.

ஞானமுத்தரைக் கண்டதும் பொலீஸ் அதிபர் அவரை இரு கைகள் கூப்பி உள் விறாந்தை வரை கொண்டு சென்றார்.

மூவரையும் வெளி வாங்கில் இருக்க வைத்துவிட்டு ஞானமுத்து சுவாமிகள் உள்ளே நீண்ட நேரம் அதிபருடன் ஆங்கிலத்தில் கதைத்துக் கொண்டிருந்தார்.

அந்தப் பொலீஸ் அதிபர் ஒரு பறங்கியர். நடு வயதுக் கப்பால் ஒன்றோ இரண்டோ அதிகம் இருக்கும்.

சற்று வேளைக்குப் பின் இருவரும் வெளியே வந்தனர்.

மூவரும் வாங்கிலை விட்டு எழுந்து நின்றனர். அதிகாரி மூவரையும் மேலிருந்து கீழ்வரை பார்த்தார்.

''நன்னி, பயப்பிடாதெயுங்கோ; நான் எல்லாம் சொல்லியிருக்கிறன். கர்த்தர் நீதியின் பக்கம் நிற்பார்; நீங்கள் குற்றம் செய்யாவிட்டால் அவர் உங்களைக் காப்பாற்றுவார்'' என்று கூறிக் கொண்டு, அதிகாரியுடன் கைகுலுக்கியபடி வண்டியில் ஏறிக் கொண்டார்.

நன்னியனும், இளையவனும், மூத்தவனும் வண்டி போகும் திக்கையே பார்த்துக் கொண்டு நின்றனர்.

நன்னியனையும், மக்களையும் பொலீஸ் பிடித்து விட்டது என்ற கதை ஊரெல்லாம் கிசு கிசுத்தது. ஆனால்

பொலீஸ் பிடித்தது என்பதை தம்பாப்பிள்ளையர் நம்ப வில்லை. பின்பு அன்று மாலைக்கிடையிலேயே மூவரையும் ஞானமுத்து சுவாமிகள் பொலீஸ் அதிபரிடம் ஒப்படைத்து விட்டார் என்பதை ஐயமின்றி அறிந்து கொண்டார்.

அவர் நினைத்தபடி ஒன்றும் நடக்கவில்லை. அவரால் தயார் செய்யப்பட்ட பொலீசாருக்கு தம்பாப்பிள்ளையரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய வாய்ப்புக் கிடைக்கவில்லை.

மேலதிகாரியே நேராக இருந்து அவர்கள் வாக்கு மூலங்களைப் பதிவு செய்து கொண்டார். யாரிடமும் அவர் அந்தப் பொறுப்பை விடவில்லை.

அன்று சாயந்தரமே அவர்கள் நீதிபதியின் உப்பு மாலடிப் பங்களாவுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கி ருந்து மறியல் வீட்டுக்கு அனுப்பப்பட்டுவிட்டனர்.

தம்பாப்பிள்ளையருக்கும் அவரது சகாக்களுக்கும் மனதிற்குள் ஒரே புகைச்சல்!

அந்த ஞானமுத்து சுவாமியை அடித்துக் கொல்ல வேண்டும் போல் ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வந்தது. இந்த ஆத்திரத்தை யார்மேலாவது, எப்படியாவது அவர் தீர்த்தாக வேண்டும்.

இரவு ஏழு மணியளவில் கையரள் மயிலுவை ஏவி ஊருக்குள் பத்துப் பேர்கள் வரை திரட்டிக் கொண்டு அவர் பூக்கண்டர் வீட்டு முற்றம்வரை போய் விட்டார்.

''நானெல்லேயப்பா அண்டைக்குச் சொல்லிப்போட் டன்; அவங்களை இருத்திறதும் இருத்தாமல் விடுகிறதும் என்ரை விருப்பமெண்டு; பிறகேன் வீணாய் கரைச்சலுக்கு வாறியள்?''

பூக்கண்டர் எடுத்த எடுப்பிலேயே தூக்கி எறிந்து கதைத்து விட்டார்.

''இஞ்சார் பூக்கண்டு! வீணாய் ஊரோடை பகைக் காதை; நேத்தைக்கு விதானையைக் குத்தினவங்கள்

நாளைக்கு உன்னையும் குத்துவாங்கள்; உன்ரை பொட்டையையும் கேப்பாங்கள்; நாங்கள் குடுத்த இடமெல்லே தோட்டம் துரவுக்கும் வரமாட்டாங்களாம்! பூக்கண்டு! ஏன் கன கதை...? எல்லாரையும் உன்ரைவளவுக்கை இருந்தும், உன்ரை சிங்காப்பூர் மச்சான்ரை வளவுக்கை இருந்தும் குடி எழுப்பிப் போட வேணும்; நாங்கள் சொல்லிப் போட்டம்; உடனே நீ இதைச் செய்ய வேணும்!'' தம்பாப் பிள்ளையர் முச்சைப் பிடித்துக் கொண்டு பேசி முடித்து விட்டார்.

அப்போதுதான் தோட்டத்திற்குத் தண்ணீர் கட்டு விட்டு பூக்கண்டரின் மக்கள் இருவரும் வந்து சேர்ந்தனர். அவர்களுடன் பூக்கண்டரின் தம்பி திருவாய் சின்னையரும் வந்தான்.

சத்தம் கேட்டு பூக்கண்டரின் மருமக்களும் அங்கு கூடி விட்டனர். இவர்களைக் கண்டதும் பூக்கண்டருக்குத் தெம்பு பிறந்துவிட்டது. திருவாய் சின்னையன் ஊருக்குள் ஒரு சிறு சண்டியன்.

''இஞ்சேரும், தம்பாப்பிள்ளை! ஆக்களைக் கூட்டிக் கொண்டு வந்து என்னைச் சாடையா வெருட்டிப்பாக்கிறீர் என்ன? நான் சொல்லிப்போட்டன். அவங்கள் ஒருத்தரும் உங்கடை முதுகிலை இருக்கேல்லை; நீங்கள் சொல்லி இந்தப் பூக்கண்டன் செய்வான் எண்டு எண்ணாதையுங்கோ! அவள் ஒரு குமரியை உம்மடை மருமக்கள் ரெண்டு பேரும் மாறி, மாறிக் கலைச்சுப் பிடிச்சு செய்யாத வேலை செய்ததை மறைச்சுப் போட்டு, திரும்பியும் அந்த சின்னப் பெட்டையை மருமக்களுக்கு இரை குடுக்கிறதுக்கு விதானையையும் பலி குடுத்துப் போட்டு, பாவம், அவள் செல்லி...! அந்தப் பெண்ணாப் பிறந்தவளையும் சுட்டுக் கொண்டு போட்டு... இப்ப நீரும் ஒரு யோக்கியன் எண்டு என்னட்டை வாறீர்! இஞ்சை வீண் கதை கதைச்சு வில்லங்

கப்படாமல் மரியாதையாய் உம்மடை வால்பிடியளையும் இழுத்துக் கொண்டு போயிடும்!''

பூக்கண்டர் மிகச் சூடாகப் பேசி முடித்துவிட்டார். பூக்கண்டர் இப்படி பேசுவார் என்று யாரும் எதிர்பார்க்க வில்லை.

''இஞ்சை, பூக்கண்டு கவனமாய்க் கதை'' என்றான் மயிலு.

''ஆர் ம யி லு வே ா ... தம்பாப்பிள்ளையற்றை வாலோ...? சுடுகிறதுக்கு ஆள் கிடையாமல் பொம்புளையைச் சுட்டுக் கொண்ட வீரனோ...!''

பூக்கண்டர் வாய் மூட வில்லை.

மயிலு பூக்கண்டருக்கு முன்னே பாய்ந்தான்!

பூக்கண்டரின் தம்பி திருவாய் சின்னையன் திடீரென கழுத்தில் ஓங்கி ஒரு குத்துவிட்டான்.

அது எங்கோ உயிர்ப்பமூவைத் தாங்கி இருக்க வேண்டும். மயிலு கழுத்தை மடக்கிக் கொண்டு சரிந்தான்.

''போங்கோடா, பரதேசி நாயளே!'' என்று குரல் வைத்துக் கொண்டே பூக்கண்டரின் மருமக்கள் மூவர் முன்னே பாய பூக்கண்டரின் இளையவன் மண்வெட்டியை ஓங்கிக் கொண்டு முன்னே பாய, கூட்டம் காற்று வேகத்தில் ஓடி மறைந்துவிட்டது.

அந்தக் கூட்டத்தோடு கூட்டமாக சரிந்து கிடந்த மயிலுவும் எழுந்து ஓடிவிட்டான்.

பூக்கண்டரின் மனைவி சீதேவியும், மகளும் ஏங்கிப் போய் நின்றனர்.

பக்கத்திலே வீடு இருந்தும் தம்பாப்பிள்ளையர் வீடு போகவில்லை; சகாக்களுடன் வேறெங்கோ போய்விட்டார்' வீட்டுக்கு அவர் திரும்பிவர நடுச்சாமம் ஆகிவிட்டது.

''என்னவும் இவ்வளவு நேரமும் செய்த நீர்? நான் பயந்து, பயந்து ஏங்கிக் கொண்டிருக்கிறன்; நித்திரையும் வருகுது இல்லை'' என்று தம்பாப்பிள்ளையின் மனைவி வெள்ளைச்சி அம்மாள் கேட்டாள்.

''எல்லாம் அலுவலாத்தான் போட்டு வாறன்!'' என்று அவர் ஒரே சொற்தொடரில் முடித்து விட்டார்.

''ஏன் வீண் கரைச்சலுக்குள்ளை போறீர்?'' சும்மா வீம்புக்கு வேட்டையாடப் போய்......''

வெள்ளைச்சி அம்மாள் வார்த்தைகளை முடிக்க வில்லை.

''ஓமோம், நீர் சரியான வெள்ளாளனுக்கும் வெள்ளாளச்சிக்கும் பிறந்திருந்தாவெல்லோ உமக்கு ரோசம் தெரியும்...''

சொல்லக் கூடாத வார்த்தை தான்.

சொல்லி விட்டார்!

வெள்ளைச்சி அழுதாள்!

அந்த அழுகைக்கு அவரால் தாக்குப் பிடிக்க முடிய வில்லை. பேசாமல் தன்னையே அடக்கிக் கொண்டார்.

அவர் கடிகாரம் இப்போது இரண்டு தடவைகள் அடித்து ஓய்ந்தது!

அந்தக் கடிகாரத்தைத் தூக்கி அடிக்க வேண்டும் போல மனம் அவதிப்பட்டது என்றாலும் அதை அடக்கிக் கொண்டார்.

வெள்ளைச்சி அம்மாள் அறைக்குள் இருந்து அழுது கொண்டிருந்தாள்.

இரவெல்லாம் தம்பாப்பிள்ளையரின் கண் இமைகள் ஒன்றோடு ஒன்று மூடவில்லை. சகாக்களுடன் பேசிய விஷயத்தை ஒப்பேற்றும் மட்டும் நித்திரைவராத காரணம் ஒரு பக்கம், மனைவியை இப்படிப் பேசிவிட்டேன் என்ற துன்பம் ஒரு பக்கம்!

மறியல் வீட்டு சேவுகன் சுவாம்பிள்ளை வேலைக்குப் போகும் முன் அவனைச் சந்தித்து விட்டால் ஓரளவுக்கு அவருக்கு நிம்மதி வந்துவிடும்.

பின் நிலவு உச்சிக்கு வரும்போது எழுந்தவர். மண் ஒழுங்கைகள் பனைவெளிகள் ஆகியவைகளைத் தாண்டி, பிடாரி அம்மன் கோயிலடிப் பக்கமாக கசவார வடலிக்குள் குடி இருக்கும் சுவாம்பிள்ளை வீட்டடிக்கு வர நிலம் தெளிந்து விட்டது.

அப்போதுதான் நாள் பூசை காண்பதற்கு எழுந்திருந்த சுவாம்பிள்ளையின் மனைவி ஞானம்மா வெளியே வந்தாள். தம்பாப்பிள்ளையர் முற்றத்தில் நின்றார்.

ஞானம்மா புற்றுக்கால் புறப்பட்ட எலி மறுபடியும் தலையை இழுத்துக் கொள்வது போல உள்ளே போய் சிறிது நேரத்தில், நித்திரைச் சோம்பலை முறித்தபடி கோடன் துணியால் உடலை மூடியபடி சுவாம்பிள்ளை வெளியே வந்தார்.

''சுவாம்பிள்ளை உன்னட்டைத்தான் ஒரு அலுவலாய் வந்தனான்; வேலைக்குப் போக நேரம் கிடக்கே?'' என்று கதையைத் தொடங்கினார் தம்பாப்பிள்ளை.

தம்பாப்பிள்ளையரை சுவாம்பிள்ளைக்கு நன்றாகத் தெரியும். ஆனால் நட்பு என்ற வரையில் எதுவுமில்லை.

''என்ன சங்கதி வாரும்...இஞ்சாலை வாரும்.'' என்று கூறிக் கொண்டே விறாந்தையை மூடியிருந்த சாக்கைச் சுருட்டிக் கட்டி அதில் உட்காரும்படி சுவாம்பிள்ளை கூறினார்.

''அப்பிடிப் பெரிய காரியம் ஒண்டுமில்லை. சுவாம் பிள்ளை நீ நினைச்சா அது சின்ன விஷயம்...'' தம்பாப் பிள்ளையர் வார்த்தைகளை முடிக்காமல் இழுத்தார்.

''என்னாலை ஏலுமெண்டா கட்டாயம் செய்வன். உமக்கில்லாத உதவியே?'' என்று சுவாம்பிள்ளை கூறியது சற்று மனத்தெம்பைக் கொடுத்தது.

''இஞ்சேர் சுவாம்பிள்ளை; நேத்தைக்கு நன்னியன் எண்ட நளவன் ஒருத்தனையும் அவன்ரை மோன்மார் ரெண்டுபேரையும் மறியல் வீட்டுக்குக் கொண்டு வந்திட்டாங்கள். அதுதான்...''

',ஓமோம்; அவங்களைக் கொண்டரேக்கை நான் நிண்டனான். நான்தான் செல்லுக்கை கொண்டு போயும் அடைச்சனான். மூண்டு பேரையும் ஒண்டுக்கைதான் விட்டுக்கிடக்கு; அவங்களுக்கு ஏதும் வெத்திலை பொயிலை குடுக்க வோணுமோ? எங்கடை ஜெயில் பெரியவன் ஒரு மாதிரியான ஆள்தான்; நான் உமக்காக ஒரு மாதிரிச் சரிக்கட்டிக் குடுத்து விடுகிறன். இப்பகொண்டே வந்தனீர்? என்ற கேள்வி ஒன்றுடன் சுவாம்பிள்ளை நிறுத்திக் கொண்டான்.

தம்பாப்பிள்ளையருக்கு வந்த காரியத்தைச் சொல்ல முடியவில்லை. ஆனாலும் சொல்லித்தான் ஆக வேண்டும்.

மடிக்குள் இருந்த மடிசஞ்சை இழுத்து அதற்குள் இருந்து ரெண்டு பவுன் பெறுமதியான காசுகளை எடுத்து எண்ணி அவன் முன் வைத்தார்.

''தம்பி அவங்கள் மூண்டு பேரும் கெட்ட நளவங்கள், தாவடி விதானையாரை வெட்டிக் கொண்டு போட்டாங்கள்! நீர் கரையாம் ஆள் எண்டாலும் எங்களுக்குள்ளை

வித்தியாசம் இல்லை! வெள்ளாள விதானையை வெட்டி வைங்கள்; நாளைக்குக் கூசாமல் உங்கடை ஆக்களுக்கும் வெட்டுவாங்கள்!...அதுதான் மறியல் வீட்டுக்கை வைச்சு அவங்களுக்குச் சரியான பாடம் படிப்பிக்க வேணும். என்ன சொல்லுறீர்? நீர் நினைச்சாச் செய்யலாம். சாட்சி நல்ல சாட்சி இருக்கு; அவங்கள் மூண்டு பேரும் தூக்குக்குப் போறது தப்பாது. எண்டாலும் தூக்குக்குப் போறதுக் கிடையிலை மறியல் வீட்டுக்கை வைச்சு அடிக்கிற அடியிலை அரைவாசி வாணாள் போக வேணும். இந்தா இப்ப இதை வைச்சுக் கொள்ளும்; பேந்தும் நான் கவனிப்பன்!'' தம்பாப்பிள்ளையர் சொல்ல வேண்டியதெல்லாவற்றையுமே சொல்லி முடிந்து விட்டார்.

சுவாம்பிள்ளைக்கு உடனே பேச நா எழவில்லை.

அந்த இரண்டு பவுன் பெறுமதியான காசுகளை அவருக்கு முன்னால் நகர்த்தி விட்டுக் கொண்டே, ''இந்த வேலையை என்ரை குருவானவர் எனக்கு எடுத்துத் தரேக்கை, 'சுவாம்பிள்ளை நீ கைக்கூலி வாங்கப்படாது, கைக்கூலி பெற்றுக் கொண்டு மனச்சாட்சிக்கு விரோதமாக எதையும் செய்தால் கர்த்தர் உன்னை மன்னிக்க மாட்டார்' எண்டு சொன்னவர். இதுவரை நான் அவற்றை வாக்கை மீறேல்லை. பாவ புண்ணியம் பார்த்து மறியல் காரங்களுக்கு ஏதாவது உதவிசெய்து இருக்கிறேனே தவிர வேறை ஒண்டும் செய்யேல்லை. ஆண்டவரறிய இதை நீர் என்னட்டைக் கேக்காதையும்; நான் செய்யவும் மாட்டன். அவங்கள் குற்றம் செய்தால் முதலாவது கடவுள் இருக்கிறார் இரண்டாவது கோடிருக்கு! இதுக்கு நான் ஒண்டும் செய்ய ஏலாது. குறை நினைக்க வேண்டாம்!'' சுவாம்பிள்ளை திட்டவட்டமாக ஒரே தொனியில் சொல்லி முடித்து விட்டான்.

தம்பாப்பிள்ளையரின் வாய் அடைத்து விட்டது.

சுவாம்பிள்ளை பேசாமலே நின்றான்.

சற்று வேளைக்குள் தம்பாப்பிள்ளை சொல்லாமல் கொள்ளாமலேயே புறப்பட்டு விட்டார். சுவாம்பிள்ளையும் ஒன்றும் பேசாமல் படலை வரை வந்தான்.

அப்போதுதான் கஸ்ப்பாறு என்பவன் சுவாம்பிள்ளை யைத் தேடி வந்து கொண்டிருந்தான்.

''ஆரது...! தம்பாப்பிள்ளையைத் தம்பி போலை கிடக்கு...? என்ன சங்கதியும் விடியக்கு முன்னம்?'' என்று கஸ்ப்பாறு கேட்டான்.

''இல்லைக் கஸ்ப்பாறு சுவாம்பிள்ளையிட்டை ஒரு அலுவலாய் வந்தனான். சுவாம்பிள்ளை தட்டிப் போட் டுது'' என்று தம்பாப்பிள்ளையர் பெருமூச்சுவிட்டார்.

''ஏன் சுவாம்பிள்ளை? இவர் நமக்கு மிச்சம் தேவையா னவர். உனக்குத் தெரியாது; எங்கடை காக்கைத் தீவுத் துறையடித் தென்னங்காணியெல்லாம் இவற்றைதான். எங்கடை பொடியள் மரக்கோலுகளிலை பெல்லி கட்டி இள நீர் பிடுங்கிக் குடிக்கிறவங்கள். இவர் தச்செயலாக் கண் டாக்கூடக் காணாத மாதிரிப் போறவர்; ஏன் சுவாம் பிள்ளை அவற்றை உதவியை செய்து குடன்!';

சுவாம்பிள்ளைக்குச் சங்கடமாகிவிட்டது.

தம்பாப்பிள்ளையர் சுவாம்பிள்ளையின் பதிலுக்காகக் காத்திருந்தார்.

''அது வேறை விஷயம் கஸ்பாறண்ணை; நான் பேந்து சொல்லுறன்!'' என்று சொன்னான் சுவாம் பிள்ளை.

கஸ்ப்பாறு துணைக்குச் சொல்லியும் தம்பாப்பிள்ளை யரின் விஷயம் ஒப்பேறவில்லை.

அவர் போய்க் கொண்டிருந்தார்.

''என்ன சுவாம்பிள்ளை தம்பாப்பிள்ளையர் என்ன கேட்டவர்?'' கஸ்ப்பாறு சுவாம்பிள்ளையை வினா வினான்.

''ஆரோ தாவடி விதானையை வெட்டிக் சாக் கொண்டு போட்டு தேப்பனும், மக்களுமாய் மூண்டுபேர்-நளவராம்—மறியலுக்கு வந்திருக்கிறாங்களாம். அதுக் குள்ளை வைச்சு அவங்களை அடிச்சுக் கொல்லட்டாம்! காசும் தந்தவர்; நான் வாங்கேல்லை.''

கஸ்ப்பாறுவுக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது.

''எட, தம்பி, சுவாம்பிள்ளை, இதை அவன் நிக் கேக்கை சொல்லி இருந்தா நாலு கிழியக் கிழியக் கேட்டிருப்பன். நளப் பொடியளையும் எங்களையும் கொழுவி விடப் பாக்கிறான். அவர் விதானையை எனக்குத் தெரியும்; ஒரு கெட்டவன். இவங்களோடை ஏதும் கதைக்கக்கூடாததைக் கதைச்சு, செய்யக் கூடாததைச் செய்திருப்பான். இவங்கள் பின்னை வெட்டி யிருப்பாங்கள். உண்ணாணை நான் முந்தியே நினைச் சனான். உவன் ஆருட்டையும் வெட்டு வேண்டித்தான் சாவானெண்டு அப்பிடியே நடந்திட்டுது!''

பேசி முடித்ததும் கஸ்ப்பாறு தான் வந்த விஷயத்தைக் கதைப்பதற்கு சுவாம்பிள்ளையை அழைத்துக் கொண்டு உள்ளே போனான்.

அடைக்கல மாதா கோவில் பூசைக்கான ஆய்த்த மணி ஓசை கணீரெனக் கேட்டது.

சுவாம்பிள்ளையின் மனைவி ஞானம்மா அவசர அவசரமாக செப மாலையையும் கையில் பிடித்தபடி வீட்டை விட்டுப் போய்க் கொண்டிருந்தாள்.

தம்பாப்பிள்ளையர் காளி கோவிலடியை அஸ்மித்து வந்தபோது மயிலு குறுக்கே வந்தான்.

''போன காரியம் காயோ பழமோ தம்பாப்பிள்ளை அண்ணை?''

''அந்தக் காகம் தின்னிக் கரையான் செய்ய ஏலாது எண்டு சொல்லிப் போட்டான்! கரையாரப் பிள்ளையளும் இப்ப வெள்ளாளனுக்கு மடங்குகிறாங்கள் இல்லை. அந்த நாளையிலையெண்டா......''

''என்ன; மாட்டனெண்டு சொல்லிப் போட்டானோ...! கரையாரச் சுவாம்பிள்ளையனோ?... கையிலை முதல்லை காசை வைக்காமல் விட்டிட்டியள் போலை கிடக்கு!''

''முதல்லை காசைத்தான் அவனுக்கு முன்னாலை வைச்சனான். இஞ்சை பார் திருப்பி எடுத்துக் கொண்டு வாறன். அவன் தொடக் கூட இல்லை. மாட்டன் எண்டு வெட்டொண்டு துண்டு ரெண்டா சொல்லிப் போட்டான்! சரி, கரையாரப்பிள்ளை நினைச்சார் தன்னாலைதான் மறியல் வீடு நடக்குதெண்டு. நான் நடத்திக் காட்டுறன்!'' இருவரும் நடந்தபடி காளி கோவிலடிக்கு வந்து விட்டனர். மடப்பள்ளிக்குள் இருந்து பெரும் குடும்பி ஐயர் வந்தார். அவர் தம்பாப்பிள்ளையரின் வரவுக்காகத்தான் காத்திருக்க வேண்டும்.

''என்ன ஐயா! ஏதோ கதைக்க வந்தனீர் போலை கிடக்கு. என்ன சங்கதி?'' என்று தம்பாப்பிள்ளையர் தொடங்கினார்.

''ஒண்டுமில்லை! வாற வெள்ளிக்கிழமைக்கு இன்னும் நாலைஞ்சு நாள்தான் கிடக்கு. கொடியேத்தத்துக்கு

இன்னும் ஒரு அடுக்கும் எடுக்கேல்லை. அதுதான்... என்ன மாதிரி செய்வமெண்டு...'' ஐயர் தொடர்ந்து பேசாமல் நிறுத்தினார்.

''ஐயா, நான் கொடியேத்தக் காளாஞ்சிக்காறன். நான் சரி. நன்னியன் மறியல் வீட்டுக்கை. நளவற்றை திருவிழா நடக்காது! பள் தம்பனும் என்ன சொல்லுறான் எண்டு தெரியேல்லை...''

தம்பாப்பிள்ளையர் வார்த்தைகளை முடிப்பதிற் கிடையில்,

''மூப்பன் சின்னானும் என்னை நேத்துக் கண்டவன்! தங்களுக்கு திருவிழா செய்யப் பயமாக்கிடக்காம். நன்னியன்ரை ஆக்களும், தம்பன்ரை ஆக்களும், திருவிழாவை குழப்புவாங்களாம்! இனி பரியாரி பகுதியும், கட்டாடி பகுதியும் என்ன சொல்லுறாங்களோ தெரியேல்லை!'' என்றார்!'' ஐயர் அவசரத்துடன்.

தம்பாப்பிள்ளையர் தலையை தாழ்த்திக் கொண்டு சிந்தித்தார். பிரதான விஷயங்கள் ஏதாவது சிந்தனைக்கு வந்தால் அவர் தலை இப்படித்தான் கவிழும்.

''மயிலு நான் வீட்டை நிப்பன். நீ ஒருக்கா மூப்பன் சின்னானிட்டையும், கட்டாடி கதிராமுட்டையும், பரியாரி கணவதியிட்டையும் போய் சாடைமாடையாய் விஷயங்களை அறிஞ்சு கொண்டு வா! பேந்து யோசிச்சுச் செய்வம்.''

''அவங்கள் மாட்டனெண்டா விட்டிடப் போறியள் போலை கிடக்கு?'' மயிலு கேட்டான்

''அதெல்லாம் பாத்துச் செய்வம்; நீ போட்டோடியா! ஐயா பொழுதுபடேக்கை வீட்டை வந்திட்டுப் போங்கோ; யோசிப்பம்.''

ஐயர் தலையசைக்க, மயிலு காரைக் காட்டுப் பாதையில் பிரிந்து செல்ல, தம்பாப்பிள்ளையர் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்து விட்டார்.

வெள்ளைச்சி அம்மாள் இன்னும் படுக்கையோடுதான் கிடந்தாள். மகள் செவ்வந்தி நாச்சியார் முற்றத்தில் கட்டப்பட்ட ஓலை வட ஊஞ்சல் மட்டையில் உல்லாசமாக மெதுவாக ஆடிக் கொண்டிருந்தாள்.

அவளுக்கு வயது இருபதுக்கு மேல்.

அவள் இன்னும் சின்னக் குழந்தை.

பூனைக் கண்களும், செந்நிறத்தோலும், சற்று மங்கலான புழுதி நிறச் சடையுமாக அவள் இருந்தாள்.

உலகத்தைப்பற்றி அவளுக்குத் தெரிந்ததெல்லாம் மிகச் சொற்பம்தான்.

தாய் வெள்ளைச்சி தந்தையுடன் இரவு நடந்த உரையாடலின் பின்பு இப்படியே சாப்பிடாமல் கொள்ளாமல் அடம்பிடித்தபடி படுத்திருப்பதைப் பற்றியெல்லாம் அவளுக்கு அக்கறை இல்லை. வீட்டுக் கரையோரம் உரலோடும், உலக்கையோடும் போராடிக் கொண்டிருந்தாள் கோவிச்சி முத்தி!

''முத்தி! அம்மா இன்னும் எழும்பேல்லையோ?'' தம்பாப்பிள்ளையர் முத்தியைக் கேட்டார்.

''இல்லை நயினார்; அவ காலமையிலை இருந்து வாய்கூட நனைக்கேல்லை.''

முத்தியின் இந்தப் பேச்சுக்குப் பிறகு தம்பாப்பிள்ளையர் ஒன்றும் பேசவில்லை. நேராகக் கிணற்றடிக்குப் போய் விட்டுத் திரும்பினார்.

முத்தி செவ்வந்திக்குக் கிட்ட வந்து ''பிள்ளை, ஐயாவுக்கு தோசையை எடுத்துக் குடு பிள்ளை,'' என்றாள் மெதுவாக. செவ்வந்தி நாச்சியார் ஊஞ்சலை விட்டு இறங்கி குசினிக்குள் போனாள்.

தம்பாப்பிள்ளையரும் குசினிக்குள் புகுந்து கொண்டார்.

வெளியே நகுலன் நாய் குரைக்கும் ஓசை கேட்டது.

''முத்தி; ஆரடி பார்!'' குசினிக்குள் இருந்தபடி தம்பாப்பிள்ளையர் கட்டளை இட்டார்.

''அது, கட்டாடியார்!''

''ஆர், கதிராமன் கட்டாடியோ?''

''கதிராமன்ரை மோன் சின்னக் கட்டாடி''

''அவனை நிக்கச் சொல்லு; வாறன்!'' என்று கூறி விட்டு அவர் தோசையை மென்று கொண்டிருந்தார். நல்லபசி!

கொண்டு வந்த சீலைப் பொட்டளியை திண்ணையில் போட்டுவிட்டு, கதிராமனின் மகன் வீட்டுக் கப்போடு ஒதுங்கி நின்றான்.

சற்று வேளைக்குப்பின் தம்பாப்பிள்ளையர் வெளியே வந்தார்.

''எட, குட்டிக் கட்டாடியே? கொப்பன் எங்கையடா?''

''அப்புவுக்கு ஒரு செத்த வீடு; வெள்ளை கட்டப் போட்டுதாக்கும்! அதுதான் நான் வந்தனான். இதைக் குடுத்துப் போட்டு ஊத்தையள் இருந்தா எடுத்துக் கொண்டு, துடக்குச் சீலையையும் எடுத்துக் கொண்டு வரச் சொன்னவர்.

''டேய்; கொப்பரிட்டைச் சொல்லி விடடா; வெள்ளிக் கிழமை கொடியேத்தமாம்; என்னை இண்டைக்கொருக்கா வந்து சந்திக்கச்சொல்லி.''

''எட பொடி! நயினாத்திக்குச் சுகமில்லை; ஊத்தை யளை நாளைக்கு வந்து கொண்டு போ; இப்ப கோடிக்கை

துடக்குச் சீலையள் கிடக்கு, எடுத்துக் கொண்டு போ, வெளுத்ததுகளை அம்மா பிறகு எண்ணி எடுப்பா!''

தொடர்ந்து முத்தியும் கட்டாடிப் பொடியனுக்கு உத்தரவு போட்டாள்.

''துடக்குச் சீலை கொண்டு போறதுக்கு ஏதானும் வேட்டித் துண்டு தரவாக்கும்.'' என்று சின்னக் கட்டாடி கேட்கவே முத்தி முற்றத்துக் கொடியில் தொங்கிய பெரிய சவுக்கம் ஒன்றை இழுத்துப் போட்டாள்.

''எடி முத்தி, பொட்டையை வெளியிலை வர வேண்டாம் எண்டு சொல்லடி; கட்டாடி துடக்குச் சீலை கொண்டரப் போறான்!''

விறாந்தையில் கிடந்த வெள்ளைச்சி அம்மாள் எச்சரித்தாள்.

முத்திக்கு சிரிப்புத்தான் வந்தது.

''செவ்வந்திப் பெட்டை இப்பவும் தவ்வல் குழந்தை எண்டுதான் பெரிய நயினாத்தியின்ரை எண்ணமாக்கும். கட்டாடிப் பொடியன் எடுக்கிற துடக்குச் சீலை வேறை ஆற்றையோ எண்ட ஒரு விசர் நினைப்பு!''

இப்படியெல்லாம் முத்தி எண்ணிப் பார்க்க அவளுக்கு மீண்டும் சிரிப்பு பிய்த்துக் கொண்டு வந்தது. ஆனாலும் அவள் அதை அடக்கிக் கொண்டாள்.

கட்டாடிப் பொடியன் துடக்குச் சீலையுடன் போய் விட்டான்.

செவ்வந்தி நாச்சியார் குசினிக்குள் இருந்து வெளியே வரவில்லை.

கொப்பனிட்டை நான் சொன்னதைச் சொல்லி விடடா குட்டிக் கட்டாடி!''

மீண்டும் தம்பாப்பிள்ளையர் குசினிக்குள் இருந்த படியே ஞாபகமூட்டி விட்டார்.

பொழுது கருகிவிட்டபோது......

நாய் குரைத்தது; உடனேயே அது அனுங்கிக் கொண்டு அடங்கி விட்டது. வழமையாக அங்கு வந்து போபவர்கள் வந்தால் அது இப்படித்தான்.

சாய்மனைக் கட்டிலில் கிடந்து ஊர் நிலைமைகளை மனதிற்குள் எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்த தம்பாப் பிள்ளையருக்கு வருவது மயிலுதான் என்பது புரிந்து விட்டது.

மயிலு அலுத்துக் கொண்டே வந்து சேர்ந்தான். வந்தவன் தோள்ச் சால்வையை எடுத்து தம்பாப்பிள்ளையர் படுத்திருந்த சாய்மனைக் கதிரைக்குப் பக்கத்தில் உள்ள கட்டிலைத் தட்டி கொண்டே உட்கார்ந்து விட்டான்.

''என்ன, மயிலு...போன காரியங்கள் எப்பிடி? ஒண்டும் சரி வரேல்லைப்போலை கிடக்கு. உன்ரை முகத் திலை வெளிப்பைக் காணேல்லை...'' என்று தம்பாப் பிள்ளையர் குறிப்பறிந்து கொண்டே கதையைத் தொடங் கினார்.

''ஒண்டும் சரிவராது போலைதான் கிடக்கு; ஆசாரி பகுதியைவிட மற்றப் பகுதியள் பயப்பிடுறாங்கள். இந்த முறை திருவிழாவை விட்டா என்ன? எண்டு கேக்கிறாங்கள் விதானையார் செத்ததை சாட்டுறாங்கள். அது எங்கடை முகத்துக்காகச் சொல்லுறாங்கள்! உவன் மூப்பன் பகுதி கும்பிடு கள்ளர் கும்பிட்டுக் கும்பிட்டே நகுக்கி விட்டிட்டாங் கள். ஒண்டும் சரிவராது போலைதான் கிடக்கு.''

மயிலுவின் பேச்சுக்கு தம்பாப்பிள்ளையர் ஒன்றுமே சொல்லவில்லை.

மயிலுவே தொடர்ந்து சொன்னான்.

''கட்டாடி கதிராமனிட்டையும் போனனான். அவன் எங்கையோ புளியடிப் பக்கம் செத்த வீட்டுக்குப் போட்டா னாம். மகன் இஞ்சை வந்தவனாம். நீங்களும் சொல்லி அனுப்பினதெண்டு சொன்னவன். கட்டாடியின்ரை தம்பி யாரைக் கண்டு கதைச்சனான். அவன்ரை கதையைப் பாத்தா கட்டாடி பகுதியும் சரிவராது போலை கிடக்கு...''

இதற்கும் தம்பாப்பிள்ளையர் ஒன்றுமே பேசவில்லை. அவர் கூரையையே வெறித்துப் பார்த்துக் கொண்டு கிடந்தார்.

''அம்பட்டக் கணவதி பகுதியையும் கண்டனான். தன்ரை ஆக்கள் சம்மதியாங்கள் எண்டு தட்டிவிட்டிட் டான்!''

மயிலுவுக்கு இதற்கு மேல் பேச ஒன்றுமே இல்லை.

சிமிலி விளக்கு விறாந்தைக் கம்பியில் தொங்கிச் சிணுங்கிக் கொண்டிருந்தது. செவ்வந்தி நாச்சியார் வந்து அதைத் தூண்டிவிட்டுப் போனாள்.

மயிலுவின் கண்கள் அவள் உடலை ஒரு முறை சுற்றிச் சுழன்று இரை எடுத்து ஓய்ந்து கொண்டது.

மௌனம் வீட்டை ஆட்கொண்டிருந்தது.

மறுபடியும் வெளியே நகுலன் நாய் ஆர்ப்பாட்டமாகக் குரைத்தது! இப்போது அதன் குரைப்பு ஓயவில்லை. ஆரோ புது மனிதன் வருகையை அது கட்டியம் கூறியது.

''மயிலு, படலேக்கை பார்! பிராமணியை வரச் சொன்னனான்; வாறான் போலை கிடக்கு!''

தம்பாப்பிள்ளையர் கிடந்த கிடையிலேயே அசை யாமல் கூறினார்.

மயிலு எழுந்து படலையடிக்குப் போனான். தம்பாப் பிள்ளையின் ஞான சிருஷ்டியின்படி வருவது பெருங் குடும்பி ஐயர்தான்.

ஐயரைக் கூட்டிக் கொண்டு மயிலு விறாந்தையில் ஏறினான்.

''ஐயா, உதிலை இரும்'' என்று மட்டும் கூறி ஐயரை தம்பாப்பிள்ளையர் வரவேற்றார். அவர் ஐயருக்குக்கூட எழுந்திருக்கவில்லை.

ஐயர் எந்தவித சலனமும் இன்றி கட்டிலின் ஒரு பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார். மயிலு மறு கரையில் அமர்ந்தான். ஐயருக்கும் மயிலுவுக்கும் உள்ள மரியாதைத் தூரம் அந்தக் கட்டிலின் நீளம்தான்!

''ஐயா; ஏதாவது புதினம் அறிஞ்சியளோ?''

''ஒண்டும் கேள்விப்பட்டேல்லை; இந்தமுறை திரு விழா நடக்காதெண்டுதான் பொதுவிலை எல்லாற்றை கதையும்.''

''என்ன, திருவிழா நடக்காதாமோ? ஐயா! வெள்ளிக் கிழமை கொடியேத்தம் நடக்கும். ஒருத்தனும் வேண்டாம். என்ரை கணக்கிலை நடக்கும். எட்டாம் நாள் வேள்வியும் நடக்கும். இவ்வளவையும் நான் நடத்திக் காட்டிறன். நடத்திக் காட்டாட்டா என்ரை ஆச்சி என்னை கைக்குள வனுக்குதான் பெத்திருக்க வேணும்! ஓம்; சொல்லிப் போட்டன்!''

தம்பாப்பிள்ளையர் பேசி முடித்த அந்தக் கடைசிக் கனமான வார்த்தை!

''கைக்குளவனுக்குத்தான்...'' என்ற அந்த தாக்க மான வார்த்தை!

வெள்ளைச்சி அம்மாளை மணமுடித்துக் கொண்ட நாளிலிருந்து மனதோடு ஒட்டிப் போய்க் கிடந்து முதலில் ஒரு தடவை வெளியாகி, இப்போது இரண்டாவது தடவை யாகவும் வெளியாகி, வெள்ளைச்சி அம்மாளுடன் முகம் கொடுத்துப் பேசமுடியாமல் வீட்டுக்குள்ளேயே அவளை

தண்ணி வெண்ணிர் இல்லாமல் சுருண்டு கிடக்க வைத்தி ருக்கும் அதே வார்த்தை! அந்த வார்த்தை உள்ளே வெள் ளைச்சி அம்மாள் காதுவரை கேட்டுவிட்டதோ என்று அவர் சற்றுப் பின்புதான் யோசிக்கத் தொடங்கினார்.

அவரின் உள் மனது நடுங்கியது.

ஆனாலும் அவர் சமாளித்துக் கொண்டார்.

அவரின் இந்தச் சங்கட நிலையை ஐயரோ மயிலுவோ புரிந்து கொள்ளவில்லை.

வெள்ளைச்சி அம்மாளின் பிறப்புப் பற்றிய ஒரு வதந்தி மயிலுவுக்குத் தெரியும்.

பெருங்குடும்பி ஐயர் நெடுங்காலமாக காளிகோவில் பூசகராக இருந்தாலும் இப்படிப்பட்ட சம்பவங்களை மன தோடு ஒட்டி வைத்திருப்பது பாவ காரியம் என எண்ணு பவர். ஆதலினால் இந்த வார்த்தைகளை அவர் நினைத்துப் பார்க்கவில்லை.

''திருவிழாக்களை ஒரு மாதிரி மட்டுக்கு மட்டாக, கோயில் மேளம், சிறு சாத்துப்படி, பந்த வெளிச்சங் களோடை ஒப்பேத்திப் போடலாம்தான். வேள்விக்கு கிடாய் வெட்டிறதுக்கு கிடாயளுக்கு எங்கை போறது, வெட்டுக்காறகாய்ச் செல்லனும் வருவான் எண்டு நான் நம்பேல்லை!'' மயிலு இப்படியொரு புதுக்கருத்தைத் தூக்கிப் போட்டான்.

இதற்குப் பதில் சொல்ல தம்பாப்பிள்ளையருக்குச் சிரமமாக இருந்தது.

''ஏன்ரா மயிலு! பிடாரி கோயிலடி கோவிய நண்டன் சின்னத்தம்பிக்கு இனுவிலுக்கை இருக்கிற கிடாய் வளப்புக்காறங்களோடை நல்ல ஒட்டு; சாவலடி, சாவலடி எண்டு இனுவிலாரோடை சாகிறவன்; அங்கை அவனுக்கு ஒன்றிரண்டு வைப்பும் இருக்கெண்டு கேள்வி! அவள் ஒருத்தியை எனக்கு நல்லாத் தெரியும். அவளின்ரை

மக்கள் கிடாய் வளக்கிறவங்கள். எச்சாட்டி வயிரவர் கோயிலிலை அவங்கடை கிடாய்தான் வரிசா வரிசம் தலைக் கிடாயா வாறது. நான் சொன்னதெண்டு நண்டன் சின்னத்தம்பியனையும் கூட்டிக் கொண்டு நாளைக் கொருக்கா அந்தப் பக்கம் போட்டு வாறியே?''

எப்போதும் மயிலுவுக்கு கட்டளை பிறப்பிக்கும் தம்பாப்பிள்ளையர் இன்றுதான் முதன் முறையாக படியிறங்கி 'போட்டு வாறியே?' என்று அவனை சம்மதம் கேட்கிறார். மயிலுவும் பெருமையுடன் சம்மதம் தெரிவித்து விட்டான்.

''அப்ப, நான் கொடியேத்த அடுக்குகளை செய்யட்டோ?'' ஐயர் கேட்டார்.

''ஓ, ஐயா; நீங்கள் போய் அந்த அடுக்குகளைக் கவனியுங்கோ; வேள்விக்குக் கட்டாயம் கிடாய் வெட்டு நடக்கும்!'' என்று தம்பாப்பிள்ளையர் உறுதி கூறவே ஐயர் எழுந்து புறப்பட்டுவிட்டார். மயிலுவும் புறப்பட்டு விட்டான்.

''மயிலு நாய் கவனம்; ஐயாவை வெளியிலை கூட்டிக் கொண்டுபோய் விட்டிட்டு வா!''

மயிலு ஐயரை படலைக்கு விட்டு, விட்டுத் திரும்பி வந்தான்.

''மயிலு ஐயன் பயப்பிடுகிறான் போலை கிடக்கு! என்னதான் நடந்தாலும் திருவிழாக்களை நடத்தி வேள்வியையும் முடிச்சுப் போடவேணும். இதுகளை முடிச்சுப்போட்டு நளம், பள்ளுகளின்ரை காரியத்தைப் பிறகு பாப்பம்! காசைப் பற்றிப் பாராதை. ஆண்டவனை எண்டு அள்ளித் தந்திருக்கிறார். இஞ்சை, மயிலு அதுக் கிடையிலை இந்தக் காகம் தின்னிக் கரையாங்களுக்கும் பாடம் படிப்பிக்கவேணும். அங்கை காக்கை தீவிலை

இவங்கள் றால் கொட்டித் தெரியிற தரவையும், சந்தை வைக்கிற துண்டும் என்ரை கண்டியோ! நாளைக்கு நண்டன் சின்னத் தம்பீன்ரை அவலை முடிச்சுப் போட்டு நாளையிண்டைக்குப் புதன் கிழமை மவிடி யப்புறம் பத்துப் பதினைஞ்சுபேரைச் சேத்துக் கொண்டு போய் 'தரவேக்கை இறங்கப்படாது; சந்தைத் துண்டுக்கை கால் வைக்கப்படாது' எண்டு நிப்பாட்டிப் போட்டு வந்திட வேணும் கண்டியோ!'' என்று கூறிக் கொண்டே இருக் கையை விட்டு எழுந்துபோய் வெள்ளி நாணயக் குற்றிகள் சிலவற்றை கையில் வைத்து எண்ணிவிட்டு மயிலுவின் கைகளில் புதைத்துவிட்டார்.

''அப்ப, நான் வாறன்; நாளைக்குப் பொழுதுபடத் தான் இனுவிலாலை வருவன்...'' என்று கூறிக்கொண்டே மயிலு போய்விட்டான்.

நகுலன் நாயும் அனுங்கி சினுங்கி மயிலுவை வழி யனுப்பி வைத்தது.

விறாந்தையிலிருந்து முற்றத்திற்கு இறங்கி கோடி வரை சென்று சிறுநீர் கழித்துவிட்டு தம்பாப்பிள்ளையர் விறாந்தைக்கு ஏறியபோது வீட்டிற்குள் அடக்கமாக அழுகுரல் கேட்டது.

வெள்ளைச்சி அம்மாள் அழுகை இன்னும் நிற்க வில்லை.

''நான் கைக்குளவனுக்குப் பிறந்தவளெண்டு தெரிஞ்சு கொண்டு சீதணத்துக்கு ஆசைப்பட்டு கலியாணம் செய்துபோட்டு இப்ப ஏன் அந்த இந்தக் கதையளை? ஆறு குளம் இல்லை எண்டு நினைக்காதையுங்கோ! எக்கணம் செத்துக் காட்டுவன்!''

வீட்டிற்குள் இருந்து கொண்டே வெள்ளைச்சி அம்மாள் குரல் வைத்தாள்.

செவ்வந்தி நாச்சியாருக்கு ஒன்றும் விளங்கவில்லை.

நேற்றையில் இருந்து அம்மா சாப்பிடாதது; தாயும் தகப்பனும் முகம் ஒட்டிக் கதையாதது; இவைகளைப் பற்றி எதுவுமே அவளுக்கு விளங்கியதாகத் தெரியவில்லை. இப்போதும் அவளுக்கு விளங்கவில்லை.

நேற்றையில் இருந்து அம்மா சாப்பிடாதது; தாயும் தகப்பனும் முகம் ஒட்டிக் கதையாதது; இவைகளைப் பற்றி எதுவுமே அவளுக்கு விளங்கியதாகத் தெரியவில்லை இப்போதும் அவளுக்கு விளங்கவில்லை.

அவள் இன்னும் குழந்தைதான்.

செவ்வந்திப் பூவின் நடுவில் இருக்கும் மஞ்சள் நிறத்தின் மினுமினுப்பு!

புழுதி நிறமான பெருத்த, அள்ளிமுடியப்பட்ட கூந்தல்!

கபில நிறமான கண்கள்!

வள வளப்பான மகரந்தச் சொண்டு!

எடுப்பான நெஞ்சுக் கும்பிகள்!

சுருக்கம் விழுந்த கழுத்து!

மார்பை இறுக்கி முடியப்பட்ட சட்டை; அரை மட்டத்திற்குக் கீழாக வயிற்று நெறி தெரியக்கூடியதாக வரிந்து கட்டப்பட்ட பாவாடை.

இத்தனையும் சேர்ந்து அவளை வயது வந்த முழுப் பெண்ணாகக் காட்டிக் கொண்டிருக்கிறதே தவிர, மனதால் அவளுக்கு வளர்ச்சி அதிகம் இல்லை! அதிலும் செல்லையன் செத்துப் போனபின்பு அந்தநிலை மேலும் அதிகரித்திருக்கிறது!

இன்று மனவளர்ச்சி பதினைந்து வயதுக்கு உட்பட்டே இருந்தது.

வியாழக்கிழமை அதிகாலையோடு என்று சொல்வதைவிட புதன் நடுச்சாமத்தோடு மயிலுவோடு பத்துப் பேர் வரையில் காக்கைந்தீவுக் கடற்கரையை முற்றுகை இட்டுவிட்டனர் என்பதுதான் பொருத்தம்.

எட்டுப் பத்துச் சீமைச் சாராயப் புட்டிகள் உடைக்கப் பட்டு பரிமாறப்பட்டு காக்கைத்தீவுக் கடற்கரை படாதபாடு பட்டது.

தலைச் சோளகம் கிளம்புவதற்கு இன்னும் இரண்டொரு வாரங்கள்தான் இருந்தன. மெதுவாக ஈராட்டிச் சோளகம் தெற்குப் பக்கமிருந்து அருண்டு வந்தது.

கடற்கரைத் தென்னோலையின் மெதுவான சலசலப்பும், கடல் அலைகளின் மெதுவான சலசலப்பும் இனம் பிரித்துக் காணமுடியாத அளவுக்கு ஒன்றிப் போன ஓசையை கிளப்பிக் கொண்டிருந்தன.

கடல் பெருமூச்சு இடைவிட்டு இடைவிட்டு எழுந்து கொண்டிருந்தது.

ஐந்தோ பத்தோ நாட்களுக்குப் பின்னால் வரப் போகும் பெரு மழைக்கு கிளம்பப் போகும். சோளகத்திற்குக் கட்டியம் கூறுவது போல மேற்குப் புறத்து அடிவானச் சரிவுக்குள் மின்னல் கோடுகள் துள்ளித் துள்ளி எழுந்து சித்து விளையாட்டுக் காட்டின. அந்த ஒளிக் கீறுகளின் பின்னணியில் மேற்கே கடற்கரை ஓரம் ஒட்டிப்போய் இருந்த இரட்டைப் பனைகளின் விரிசலைகள் இமை வெட்டுகள் போல தெரிந்து, தெரிந்து மறைந்து கொண்டிருந்தன.

அதற்குக் கீழாக கடற்பரப்பில் எட்டுப் பத்து வெளிச்சங்கள் நிரைக்குத் தெரிந்தன. விடியப்புற கடலின் வடு ஒட்டத்தோடு சிறு மீன்களைப் பிடிப்பதற்காக ஒவ்வொரு

சூழ் பந்தத்திற்கும் இருவர் மூவராகக் கரப்புக் குத்துகின்றனர்.

கிழக்குப் புறம் வெளுத்து வந்தது.

காக்கைக் கூட்டங்கள் கரைந்தன.

இறால் பிடிப்பவர்களின் வரவுக்காக அவை ஆரவாரம் செய்கின்றன.

முதாலவது பிளாத் தோணி ஒன்று கரை தட்டி விட்டது.

இருவர் இரண்டு பறிகளை ஆளுக்கு ஒன்றாக எடுத்து வந்து கரைக்குச் சற்றுத் தூரமான புல்தரையில் பறிகளை வைத்து சற்று இளைப்பாறிக் கொண்டனர்.

மயிலுவும், மயிலுவின் ஆட்களும் அவர்களைச் சூழ்ந்து கொண்டனர்.

இவர்களைக் கண்டதும் அவர்கள் வெலவெலத்துப் போயினர்.

இப்படி, இந்த வெள்ளாப்பில் எப்போதும் யாரும் பிறத்தியார் அங்கு வந்ததில்லை; சூழ்ந்ததுமிலலை!

''நரவைக்கை இறங்கவும் பிடாது; றால் கொட்டித் தெரியவும்பிடாது!''

இப்படி ஒரு குரல்!

இருவரும் திடுக்கிட்டு விட்டனர்.

அவர்களின் இத்தனை வருடகால அனுபவத்தில் இப்படி யாரும் தடுத்ததில்லை.

''ஏன் தம்பியவை; நாங்கள் இவ்வளவு காலமும் இந்த இடத்திலை தானே றால் தெரிஞ்சுவாறன்.'' இருவரில் ஒருவன் கூறினான்.

''அது எங்களுக்குத் தெரியாது. இண்டையில் இருந்து இதுக்கை கால் வைக்கப்படாது.''

இது மயிலுவின் குரல்!

குரலோடு சேர்ந்தாற்போல் சாராய வாடையும் வீசியது.

இந்தப் பேச்சுக்கள் நடந்து கொண்டிருந்தபோது இன்னோர் தோணி தரை தட்டியது. அதற்குள் இருந்தும் இருவர் கச்சைக் கட்டுடன் பறிகளைக் கொண்டு தரவைக்கு வந்துவிட்டனர்.

''என்ன, ஆக்கள் பைப்பலாக் கிடக்கு?'' என வந்தவர்களில் ஒருவன் கேட்டான். இருவரும் கூட்டத்தை விலத்திக் கொண்டு தரவைக்குள் நுழைந்தனர்.

''ஆற்றா அது? இவங்களைத் தரவைக்குள்ளை இறங்கப்படாதெண்டு மறிச்சிருக்கிறம்; எப்பனும் மைன் பண்ணாமல் போறியள்... போகப்படாது!''

மீண்டும் மயிலனே இந்த உத்தரவைப் பிறப்பித்தான்.

போனவர்கள் அப்படியே நின்று விட்டனர்.

''ஏன், போகப்படாது?''

''எட, இஞ்சைபார் கரையாரப் பிள்ளையின்ரை கேள்வியை! உமக்கு சொல்லத்தான் வேணுமோ?...''

இது கூட்டத்தில் இன்னும் ஒரு குரல்!

''கதைக்கிறதை எப்பன் மரியாதையாக் கதைக்க வேணும். கரையான் கிரையான் எண்டு கதைச்சால் நடக்கிறது வேறை!'' அவன் இளைஞனாக இருக்க வேண்டும்; மிடுக்காகக் கதைத்தான்.

''இஞ்சை பார்; கரையான் நயினாற்ரை கதையை! நயினார், இது தம்பாப்பிள்ளைக் கமக்காரன்ரை காணி. கரையான் நயினாரவையைப் போகவிடப்படாது எண்டு கமக்காரன்ரை உத்தரவு.''

மயிலு இப்படிப் பொடி வைத்துப் பேசினான்.

இப்போது பல தோணிகள் அங்கு தரைதட்டிவிட்டன''

ஆரவாரம் கேட்டு எல்லோரும் சோடி சோடியாக வந்து சேர்ந்து விட்டனர்.

அவர்களின் எண்ணிக்கை முப்பதுக்கும் மேல்!

வந்தவர்களில் ஒருவனாக கஸ்பாறுவும் இருந்தான்.

கஸ்பாறு வந்ததும் எல்லோரும் அவனுக்கு வழிவிட்டு நின்றனர்.

அவனுக்கு அவர்கள் அப்படி ஒரு மதிப்புக் கொடுத்து வருபவர்கள்.

ஊருக்குள் அவன் மதிப்பானவன்.

அடைக்கல மாதா கோவிலின் அங்கீகரிக்கப்பட்ட மூப்பராக இருக்கும் சட்டம்பி அப்பாவுக்கு அவன் பிரிய மான ஒருவன். அதனால் அவன் அந்தஸ்து உயர்ந்து இருந்தது.

ஊருக்குள் நடக்கும் நல்லதோ கெட்டதோ எல்லா வற்றிற்கும் அவனின் பேச்சுத்தான் முடிவானதாக இருக்கும்.

ஈயன் சுவாமியார், அவன் வயதில் இளையவனாக இருந்தாலும் அவனோடு யோசிக்காமல் எதையும் செய்தது கிடையாது. கோவில் சங்கிலித்தாம் மூப்பர், உபதேசியார் எல்லோரையும் விட அவன் மதிப்புத்தான் உயர்ந்திருந்தது.

''ஏன் தம்பியவை எங்கடை அப்பு ஆச்சி காலத்தி லிருந்து இஞ்சைதான் நாங்கள் றால் கொட்டி தெரிஞ்சு வாறம். இந்த மூலைத் துண்டிலை வைச்சுத்தான் யாவாரமும் செய்து வாறம்!''

கஸ்பாறு மிகுந்த பணிவாக இதைச் சொன்னான்.

''இஞ்சை கஸ்பாறு! எங்களுக்கு அதைப்பற்றி ஒண்டும் தெரியாது! இந்த இடத்திலை இதுகள் செய்யக் கூடாது எண்டு நிப்பாட்டாச் சொல்லி தம்பாப்பிள்ளையர் எங்களை அனுப்பியிருக்கிறார். ஏதேனும் கதைக்கிற தெண்டா அவரோடை வந்து கதையுங்கோ! இந்தத் தரவைக்கு எல்லாம் அவரிட்டை உறுதி ஓலை கிடக்காம். சொல்லச் சொன்னவர்.''

இப்போது மயிலுவும் சற்று அடக்கமாகவே பேசினான். அவன் அப்படித்தான் இப்போது பேச வேண்டியதாயிற்று.

ஒன்று வெறி முறிந்து கொண்டிருந்தது. மற்றது மறுபக்கத்தில் எண்ணிக்கை கூடிவிட்டது. சிலர் வலைகளின் தாய்த் தடிகளையும் கழற்றிக் கையில் வைத்திருந்தனர்.

''ஓ, இப்ப விளங்கிறது தம்பி; தம்பாப்பிள்ளையர் ஏன் இப்பிடிச் செய்யிறார் எண்டு. நேத்துக் காலமை எங்கடை மறியல் வீட்டுச் சேவகன் சுவாம்பிள்ளையிட்டை வந்து மறியல் வீட்டுக்கை ஆருக்கோ அடிப்பீக்கக் கேட்டவர். சுவாம்பிள்ளை மாட்டன் எண்டு சொல்லிப் போட்டான்! அதுதான்... அவன் கரையான் எண்டிறதுக்காக எல்லாக் கரையாரையும் பழிவாங்கிறார்!''

கஸ்பாறு பேசி முடிக்கும் முன்,

''கஸ்பாறண்ணை ஏன் கன கதையை? நாங்கள் ஏன் அவரிட்டைப் போவான்? ஓலை உறுதியைக் கொண்டு அவர் எங்களிட்டை வரட்டன். நாங்களும் பாப்பம்!'' என்று ஒருவன் சொன்னான்.

அவன் பேச்சை அங்கீகரிப்பதுபோல கஸ்பாறு பேசாமல் நின்றான்.

நன்றாக விடிந்து விட்டது.

வியாபாரம் தொடங்கும் நேரமும் வந்துவிட்டது.

அங்குமிங்குமாக றால்களைக் கொட்டி சாதாளைக் குவியல்களுக்குள் இருந்த றால்களைத் தெரிவு செய்யத் தொடங்கிவிட்டனர்.

சிறு தாளங்காய்களை அகற்றி பேத்தை மீன்களை எடுத்தெறிந்து, சிறு தேறை மீன்களையும், கூனிறால், பாட்டு றால், தாளம் றால், குருட்டு றால்களையும் தெரிவு செய்து எடுக்க முன்பே வியாபார அமளி துவங்கிவிட்டது.

கண்களைப் பூந்திக் கொண்டு ஒரு புறமாக நிற்பவர் களை கொள்முதல் செய்ய வந்த வியாபாரிகள் அதிசய மாகப் பார்த்தனர். ஏதோ பேசிக்கொண்டனர்.

மயிலுவுக்கு அவன் சகாக்களுக்கும் வெட்கம் வந்திருக்க வேண்டும்.

அவர்கள் கிழக்குப்புற இரண்டுகண் மதவடியால் தூக்கு மரக் காட்டுச் சுடலைக்கும் நடுவே உள்ள பெரு வரம்பால் நடந்து கொண்டிருந்தனர்.

அவர்கள் காலி செய்த வெற்றுச் சாராயப் போத்தல்கள் தென்னஞ்சோலை ஓரம் அனாதைகளாகக் கிடந்தன,

ஊரைச் சுற்றி மணி கிலுக்கப்பட்டது! இரண்டு இளவட்டங்கள் இந்த மணியை ஊரெங்கும் கிலுக்கி,

''இண்டைக்கு ஒருத்தரும் கடல்லை போகப்படாது! பின்னேரம் நாலு மணிக்கு ஊரவர்கள் எல்லோரும் கோவில் அறை வீட்டடியில் கூடட்டுக்காம். இது கட்டளைச் சுவாமியின் உத்தரவு.''

என்று கூவிக் கொண்டே வந்தனர்.

ஏறக்குறைய மூன்று மணிக்கு கோயில் பெரு மணி அடித்தது! அது கூட்டத்திற்கான முதலாம் அறிவிப்பு என்பதால் அடிப்பு முடிவில் தனியாகவும் ஒரு தடவை அடித்தது

அறை வீட்டு மணிக்கூட்டில் நான்கு மணிக்குப் பத்து நிமிடம் இருக்கும் போது இரண்டாவது தடவையும் கோவில் பெருமணி அடித்து இறுதியில் இரு தனித்தனி ஓசையுடன் ஓய்ந்தது.

இப்போது இது இரண்டாவது அறிவித்தல்; இந்த அறிவித்தலை அடுத்து சரியாக நான்கு மணிக்கு எல்லோரும் அறை வீட்டின்முன் கூடிவிட்டனர்.

ஈயன்ஸ் சுவாமியாருடைய அதிகாரத்தில் நேரம் என்றால் நேரம்தான். அதில் எந்தவித சலுகையும் எவருக்கும் இருப்பதில்லை.

பெண்கள் அறிவிப்பின்படி அழைக்கப்படவில்லை. ஆனாலும் பெண்கள் சிலர் கூட்டத்தில் இருந்தனர். சரியாக நான்கு மணிக்கு ஈயன்ஸ் சுவாமி அறை வீட்டு முன் விறாந்தைக்கு வந்துவிட்டார். எல்லோரும் ஒரே தடவையில் அரை முழந்தாளிட்டு, ஒரே தொனியில் ''ஸ்தோத்திரம் ஆண்டவரே!'' என்று குரல் எழுப்பினர்.

தனது நீண்ட வெள்ளை லோவின் பக்கப் பைகளில் இருந்து கைகள் இரண்டையும் எடுத்து ஒரு கரத்தால் வெள்ளையாக அடர்ந்திருந்த தாடியைத் தடவி விட்டுக் கொண்டே, மறுகையால் சிலுவை அடையாள அசைவு காட்டி, தனது கடமையை முடித்துக் கொண்டார் சுவாமி.

எல்லோரும் முழந்தாள் படி கலைத்து நிலத்தில் உட்கார்ந்து சுவாமியின் வாய் அசைவுக்காகவே காத்திருந் தனர்.

''நான் இப்போது உங்கள் எல்லோரையும் வரச் செய்தது என்னத்துக் கெண்டால்... உங்கள் காக்கைத் தீவுத் துறைமுகத்துக்கு ஒரு கஸ்டம் வந்திருக்கு; அதனால்தான் பிள்ளைகளே, அந்த விஷயங்களை கஸ்பாறு உங்களுக்குச் சொல்லுவார்.''

சுவாமியார் பேசி முடித்துவிட்டார்.

அவர் பேசி முடித்துக் கொண்டிருக்கும்போதே சங்கிலித்தாம் அப்பாலை கதிரை ஒன்றை எடுத்து வந்து வைத்திருந்தான். சுவாமியார் அதில் உட்கார்ந்து கொண் டார்.

கஸ்பாறு காலை, கடற்கரையில் நடந்த சம்பவத்தை சொல்லத் தொடங்கி, சிறிது வேளைக்குள் முடித்துக் கொண்டான்.

''இப்போ பிள்ளைகளே, கஸ்பாறு சொன்னதை நீங்கள் கேட்டீர்கள். அப்ப, இனி என்ன செய்யலாம் எண்டதைப் பற்றி உங்கடை யோசனைகளைச் சொல் லுங்கோ!''

சுவாமியின் அந்தச் சொல்லுக்காகவே பலர் காத்திருந் தது போல் பட்டது.

ஒரேவேளையில் பலர் எழுந்தனர்.

''ஒருத்தர் ஒருத்தராகச் சொல்லுங்கோ!''

சுவாமியார் மீண்டும் தலையிட்டு நிரைப்படுத்தினார்.

சங்கிலித்தாம் அப்பாலை எழுந்தான்.

''நான் இப்போது சொல்லப்போவது என்னவென்றால், நாங்கள் பரம்பரை பரம்பரையாக ஆண்டு வந்த இடம்; அதை நாங்கள் விட ஏலாது.'' என்றார்.

''அப்பிடியெண்டால்... என்ன செய்ய வேணும் எண்டு சொல்லுங்கோ சங்கிலித்தாம்?'' என்று ஒரு குரல் கூட்டத்திலிருந்து கேட்டது.

சங்கிலித்தாம் பதில் சொல்ல முடியாமல் தயங்கி நின்றார்.

அப்போது மத்தேசு எழுந்து நின்றான்.

''நாங்கள் செய்தது போலை செய்து கொண்டு தான் இருப்பம். அவர் கோட்டிலை வழக்குப் போடட்டுக்கு. கோட்டிலை வழக்காடி வெல்லுவம்!'' மத்தேசு சொன்னான்.

''ஏன் கோடுகீடெண்டு போவான்; ஒருக்காத் தம்பாப் பிள்ளையரோடை பேசிப் பாப்பம்; அதுக்குப் பிறகு செய்யிறதைச் செய்வம்!''

வெலிச்சோறு என்பவன் இருந்த இடத்திலேயே அபிப்பிராயத்தைச் சொன்னான்.

''அவங்களோடை என்ன பேசிறது? காலமை அவங்கள் எங்களைக் கரையான் கிரையான் எண்டும் பேசிப் போட்டாங்கள்! இனி அவங்களோடை என்ன பேச்சு?'' இப்படி ஒருவன் சொன்னான்.

''தொம்மை சொல்லிறது பிழையான கதை! எங்களோடை பேசினவங்களோடையா நாங்கள் பேசப் போறம்? தம்பாப்பிள்ளையரோடைதானே பேசப் போறம்; ஒருக்காப் பேசிப் பாப்பம். அதிலே என்ன நட்டம் வரப்போகுது?''

தெய்வம் தனது பென்னம் பெரிய உடலை அசைக்க முடியாமல் சக்கப் பணிய இருந்த அபிப்பிராயத்தைக் கூறினான். சற்றுவேளை அமைதி நிலவியது.

''பிள்ளையவளே! தம்பாப்பிள்ளை எண்டவர் எங்கடை மார்க்ககாறனில்லை. பிற மார்க்ககாறன். அஞ்ஞானி! எண்டாலும் இண்டைக்கு காலமைவரை அவர் இப்பிடிச் செய்யேல்லை. இப்ப இப்பிடிச் செய்யிறதுக்கு ஒரு ஞாயம் இருக்க வேணும். அதைக் கண்டு பிடிச்சாத்தான் இதை நாங்கள் வென்றெடுக்கலாம்.''

சுவாமியார் இப்போது பிரச்சனையை வேறு திசைக்குத் திருப்பி விட்டார்.

எல்லோரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

சொல்லி வைத்தாற்போல் அந்தவேளை சுவாம் பிள்ளை அவசர அவசரமாக அங்கு வந்து சேர்ந்தான்.

''இப்பான் வாறன் வேலையாலை; அவசர அவசர மாக ஓடியாறன்.'' என்று தன்பாட்டில்பேசிக் கொண்டே சுவாம்பிள்ளை வந்தான்.

''நல்ல நேரத்திலை வந்திட்டாய் சுவாம்பிள்ளை! காலமை வேலைக்குப் போகேக்கை கேள்விப் பட்டுக் கொண்டுதான் போனாய் எண்டு அறிஞ்சனான். தம்பாப் பிள்ளை ஏதோ காரணத்தோடைதான் இப்பிடிச் செய் திருக்க வேணுமெண்டு சுவாமி சொல்லுறார். உனக்குத் தான் அது தெரியும். எல்லாருக்கும் முன்னாலை சொல்லு! எல்லாரும் அறியட்டுக்கு! என்றான் கஸ்பாறு.

சுவாம்பிள்ளை சொல்லத் தொடங்கிவிட்டான்.

''தம்பாப்பிள்ளையர் மறியல் வீட்டுக்கை இருக்கிற வங்களுக்கு அடிப்பீக்கச் சொல்லி வந்ததிலிருந்து, தான் மறுத்துப் பேசியது வரை'' சொல்லி முடித்து விட்டான்.

சுவாம்பிள்ளையரின் வாய்முறைப்பாடு கூட்டத்தை விரைவில் முடிக்க உதவியாக இருந்தது.

''அப்ப, என்ன செய்ய வேணும் எண்டதை சுவாமி யார்தான் சொல்ல வேணும்!''

இதுவரை வாய் திறக்காமலிருந்த தீயோ சொன்னான்.

''பிள்ளையளே! சுவாம்பிள்ளை அவற்றை சொல்லுக்கு மறுப்புச் சொன்னதிலிருந்துதான் இது துவங்கி இருக்கு. அவற்றை விருப்பப்படி சுவாம்பிள்ளை செய்தாத்தான் அவர் சம்மதிப்பார். ஆனதினாலை இனி அவரிட்டைப் பேசப் போயும் பலன் வராது. எல்லோரும் ஒற்றுமையா நிண்டு தொழிலைச் செய்தது போலை செய்ய வேணும். அவர் கோட்டுக்குப் போகட்டுக்கு. நிலம் அவற்றையா இருந்தாலும் எங்களுக்கு ஆட்சி உரிமை இருக்கெண்டு வழக்காடுவம்.''

சுவாமியாரின் பேச்சுக்குப் பின் எல்லோரும் அவர் முடிவுக்கு வந்தனர்.

''பிள்ளைகளே! கர்த்தரின் தீர்ப்பு ஏழைகள் பக்கமாகவேஇருக்கக் கடவது!''

சுவாமியாரின் முடிவுரையைத் தொடர்ந்து சங்கிலித்தாம் திருத்தாதி மணியை அடித்துக் கொண்டிருந்தார்.

அதிகாலை காக்கைதீவுக் கடற்கரையில் நடந்த வாக்குவாதத்தை மயிலு கூட்டிக் குறைத்துச் சொன்ன போது தம்பாப்பிள்ளையருக்கு பாதி ஆத்திரமும், பாதிப் பயமும் ஏற்பட்டது.

தனது காணியில் கரையார் ஆதிக்கம் செய்வதால் வந்த ஆத்திரத்தை யெல்லாம் "ஒரே வேளையில் எல்லாப் பக்கத்தாலும் ரதிர்ப்புகளைத் தேடிக் கொண்டேனே" என்ற எண்ணம் விழுங்கிக் கொண்டிருந்தது.

மயிலுவை மேலும் ஏதாவது விசாரிக்க வேண்டுமென்று அவருக்குப் படவில்லை. அப்படி விசாரித்து தனது மனக் கெலிப்பை அவனுக்குக் காட்டி விடவும் அவர் விரும்ப வில்லை.

"மயிலு! நீ போட்டு எல்லாத்துக்கும் பொழுது படேக்கை வா!" என்று மட்டும் கூறினார். மயிலு அவர் பேசி முடிக்கும் முன்பே புறப்பட்டு விட்டான்.

வாக்குவாதம் செய்தவர்களை ஒன்றும் செய்யாமல் விட்டு விட்டு வந்ததற்காக அவரிடம் ஏச்சு வாங்காமல் தப்பித்துக் கொள்ள இது சந்தர்ப்பமாகி விட்டது அவனுக்கு!

மயிலு கழன்று விட்டான்!

தம்பாப்பிள்ளையர் சாய்மனை நாற்காலியில் சாய்ந்து கொண்டார்.

சற்றுவேளை கண்களை இறுக மூடிவிட்டு பின் திறந்து கொண்டார்.

சுவர்க் கடிகாரம் அவசர அவசரமாகப் பத்துத் தடவை கள் அடித்து ஓய்ந்தது.

இன்று காலைதான் செவ்வந்தி நாச்சியார் அதற்கு நிறைய வயின் கொடுத்து வைத்திருந்தாள். அதனால்தான் அது அவசர அவசரமாக அடித்தது.

நெற்றிக்கு நேராக அது தொங்கிக் கொண்டு நிமிடங்களைத் தள்ளிக் கொண்டும் அடித்த ஒவ்வொரு அடியும் அவரது மண்டையில் அடிப்பது போல இருந்தது.

நிமிடத்திற்கு அறுபது அடிகள்! தம்பாப்பிள்ளையரின் மண்டையிலும் அறுபது அடிகள்!

தனது வாழ்க்கையில் கடந்த பத்துநாட்களைப் போன்ற சோதனையான, பொல்லாத நாட்களை அவர் இதுவரை சந்தித்தது இல்லை.

நன்னியனின் சின்னிப் பெட்டை சகோதரி வீட்டிலிருந்து போய்விட்ட அந்த நாளில் இருந்து இந்தப் பத்து நாட்களில் அடுக்கடுக்காக அவருக்குத் தோல்விகளே வந்து போயின.

நன்னியன் சின்னிப் பெட்டையை திருப்பி அனுப்ப மறுத்தது; அவன் இரும்புப் பிடிக்குள் தன் பிறைவெட்டு குடும்பியைக் கொடுத்தது; நாற்றுகளுக்குப் பட்டைத் தண்ணீர் ஊற்ற ஆள் பிடிக்க முடியாமல் அவைகள் கருகிச் செத்துப் போனது; தன் பக்கத்து நின்ற விதானையார் சாகடிக்கப்பட்டது; நன்னியனைச் சுட்டு வீழ்த்த ஆளை அனுப்ப அவன் நன்னியன் பெண்டிலைச் சுட்டு வீழ்த்தியது;

காளிகோயில் திருவிழாவுக்கு நளம், பள், பறை வண்ணான், அம்பட்டன் ஆகிய எளிய சாதியினர் பங்கெடுக்க மறுத்தது;

வேள்விக்கு ஒரு கிடாய் தன்னும் வெட்ட எவனும் முன் வராதது;

தனது சொல்லை மீறி பூக்கண்டர் நளவருக்குக் குடியிருக்கக் காணி கொடுத்தது;

நன்னியனையும் அவனின் மக்களையும் பொலீசில் பிடித்து அடித்து முறிப்பது என்ற திட்டம் ஞானமுத்து சுவாமியாரால் குழம்பியது;

மறியல் வீட்டுச் சேவுகன் சுவாம்பிள்ளைக்குக் கொடுத்த கைக்கூலியையும் தொடாமல் மறியல்வீட்டுக்கை இருக்கிற நன்னியனையும் மக்களையும் அடித்துக்கொல்ல மறுத்தது;

கடைசியாக இன்று கடற்கரையில் சுவாம்பிள்ளையின் ஆட்கள் மயிலு கூட்டத்தோடு மோதப் பார்த்தது;

இவையெல்லாம் அவருக்குப் பயங்கரத் தோல்வி களாக நம்பர் அட்டையை எழுப்பிப் பிடித்துக் கொண்டு அவர் கண்களுக்குள் வந்தன.

போதாக் குறைக்கு வெள்ளைச்சி அம்மாள் இரண்டு நாட்களாக உண்ணா விரதம் இருந்து தன்னோடு முகம் கொடுக்காமல் பிடிவாதம் செய்வது!

நேர்ந்துவிட்ட இத்தனை தோல்விகளையும் விட தனது மனைவி வேண்டுமென்றே தன்னைப் பழி வாங்கு வதை அவர் மனது ஜீரணிக்க மறுத்தது.

இப்போது அவருக்கு வாலிபக் காலங்கள் நினைவுக்கு வந்தது.

ஏறக்குறைய பதினைந்து பதினாறாவது வயதில் இருந்து அந்த நினைவு நகர்கிறது;

நகர்ந்து.........நகர்ந்து......

வெள்ளைச்சி அம்மாளைக் கொண்டு கிளம்பியதி லிருந்து, அப்பால் நகர முடியாமல்......அந்த நினைவு முன்னோக்கிச் சென்று...சென்று...திருப்புகிறது.

அந்தப் பதினாறு வயதுத் தொடக்கமான காலங் களில்...

கொக்குவில் குமாரசாமிப் புலவர் திண்ணைப் பள்ளி நடாத்திக் கொண்டிருந்த காலமது.

ஏடும் எழுத்தாணியும் போய் சிலேற்றும் பென்சிலும் அறிமுகமான காலம்.

குமாரசாமிப் புலவர். புலவர் என்று ஆகாத காலம்: வெறும் குமாரசாமிச் சட்டம்பியாராய் இருந்த காலம்.

பதினைந்து பிள்ளைகளை அவர் தனது திண்ணைப் பள்ளியில் சேர்த்துக் கொண்டார். அவர்களில் மயில் வாகனக் கமக்காறன் மகனாகிய தம்பாப்பிள்ளையரும் மகளான செல்லம்மா நாச்சியாரும் உட்பட்டிருந்தார்கள்.

செல்லம்மா நாச்சியார் புத்தியறியவில்லை.

செல்லம்மா நாச்சியாருக்கு இணையாக குமாரசாமிச் சட்டம்பியாரின் அண்ணனின் மகளும் இருந்ததினால்தான் மயில்வாகனக் கமக்காறன் அவளையும் திண்ணைப் பள்ளிக்கு அனுப்பச் சம்மதித்தார்.

சட்டம்பியார் அண்ணன் மகள் பராசக்திக்கும், செல்லம்மா நாச்சியாரின் வயதுதான் இருக்கும். ஆனால் செல்லம்மா நாச்சியாரின் உடல் வளர்ச்சியோடு ஒப்பிடும் போது பராசக்தி பெரிய மனுசி!

தம்பாப்பிள்ளையருக்குப் படிப்பென்பது சுத்த சூன்யம்! ஆனாலும் அவர் திண்ணைப் பள்ளிக்கு வந்தார்; படித்தார்.

தம்பாப்பிள்ளையர் சிலேற்றை முகத்துக்கு நேராக உயர்த்திப் பிடித்துக் கொண்டே எழுதுவார்.

சட்டம்பியார் ஏதாவது எழுதச் சொல்லிவிட்டு சொல்லிக் கொண்டே போவார். முடிவில் எல்லோருடைய சிலேற்றுகளையும் வாங்கிச் சரி பிழை பார்க்கும்போது தம்பாப்பிள்ளையரின் சிலேற்றில் மேலுக்கு இரண்டு வரி எழுத்துகள் இருக்கும். இடையே ஏதாவது இரண்டு வெருளிப் படங்களும், அதற்குக் கீழாக, அந்தப் படத்தின் கீழ் வகுப்பில் இருக்கும் இருவரின் பெயர்களும் எழுதப்பட்டிருக்கும்.

சட்டம்பியார் பச்சைப் பூவரசம் தடியால் தம்பாப் பிள்ளையரின் முதுகில் நான்கு வைப்பார். அதை ஆடாமல், அசையாமல், நெளியாமல், சிணுங்காமல் வாங்கிக் கொண்டே தம்பாப்பிள்ளையர் நிற்பார்.

தம்பாப்பிள்ளையரைத் திருத்த சட்டம்பியார் எவ்வளவோ முயன்று பார்த்துவிட்டார். முடியவில்லை. அதே வேளை அவரைத் திண்ணைப் பள்ளியில் இருந்து நீக்கி விடவும் முடியவில்லை. மயில்வாகனக் கமக்காறன் சட்டம்பியார் மீது சீறிப் பாய்ந்து விடுவார்.

அப்போது......

ஒருநாள்......

அந்த ஒரு நாள்தான், இப்போது தம்பாப்பிள்ளையரின் நினைவு அணியில் முன் வரிசையில் நிற்கிறது.

குமாரசாமிச் சட்டம்பியார் இந்த வகுப்பைத் தொடங்கிய காலத்திலிருந்து பக்கத்து வீட்டுச் சுப்பன் என்பவன் வகுப்பு நடப்பதைப் பார்த்துக் கொண்டு புறம்போக்காக நிற்பான். அவனைச் சின்ன வயதில் இருந்தே ''நெஞ்சுச் சுப்பன்'' என்றே எல்லோரும் அழைப்பார்கள். அவன் இந்த வகுப்பில் படிப்பதற்கு விரும்புகிறான் என்பது சட்டம்பியாருக்குத் தெரியும். ஆனாலும் அவனை திண்ணைப் பள்ளியில் சேர்க்கக்கூடாது. ஊரின் சட்ட திட்டங்கள் அப்படி! அவன் தீண்டாச் சாதி!

சமீபத்தில்தான் ''மகா பாரதம்'' என்ற பாடத்தை தொடங்கி இருந்தார். இந்தப் பாடத் தொடக்கத்திலிருந்து சுப்பன் தாழ்வாரத்திலிருந்தே அதைக் கேட்டு வந்திருக்கிறான். அந்தப் பாடம் தொடங்கி பத்து நாட்களுக்கு மேல் ஆகிவிட்டன. இன்னும் பத்துநாட்கள் ஆகலாம் முடிவதற்கு! ஒரு நாள்...! ...அந்த ஒரு நாளைத் தொட்டுக் கொண்டுதான் நினைவு சுழலத் தொடங்குகிறது...

இன்று துச்சாதனன் துகில் உரி படலம். முடிவில் அதற்கான செய்யுள் ஒன்றைச் சொல்லி சந்தர்ப்பம் கூறி விளக்கி

எழுதும்படி மாணவர்களுக்குக் கூறிவிட்டு சட்டம்பியார் பேசாமல் இருந்தார்.

முடிவில் தம்பாம்பிள்ளையரின் சிலேற்றில்...
இரண்டு பெருத்த தனங்கள்!
அதற்கு நடுவே மெல்லிய கோடு!
இடைச் சுருக்கம்!
அதன்கீழ் பெருந் தொடைகள்!

பெரும் தொடைகளின் தொடக்கத்தில் பெண்சிலால் கீறிக் கீறி மழுப்பி விடப்பட்ட மங்கலான நிறம்... இப்படி வலம் இடமாக இரண்டு படங்கள்.

சட்டம்பியார் எல்லோரினதும் சிலேற்றுகளை வாங்கிப் பார்த்து வருகிறார்.

தம்பாம்பிள்ளையரின் சிலேற்று வருகிறது. அவர் திடுக்குற்றுப் போகிறார்.

இரண்டு படங்களின் கீழ் இருவருடைய பெயர்கள்.

ஒன்று பாஞ்சாளி!

மற்றது பராசக்தி!

முன்னே இருந்த குந்து முனையில் தம்பாப்பிள்ளை யரின் சிலேற்றை அடித்து நொருக்குகிறார் சட்டம்பியார்.

ஃ ஃ ஃ

படிப்பு முடிந்து விட்டது.

இதற்கு மேல்.......

காடுவாசாரியாக ஊரைச் சுற்றித் திரிந்த காலங் களில்...

வயது பதினெட்டு வரையில்...

இனுவில் கந்தசாமி கோவில் திருவிழா!

ஆறாம் திருவிழா என்றால் ஊர் உலகத்திற்கே பிரசித்தமான திருவிழா.

நண்பர்களான கறுவல் வைத்திலிங்கம், கொட்டடிக் கறுத்தார் மகன் துரைராசா, குளப்பிட்டிக் கணேசன், தட்டாதெரு பொன்னுச்சாமி, வண்ணார்பண்ணை நமசிவாயம் ஆகிய நண்பர்கள் புடைசூழ தம்பாப்பிள்ளையரும் திருவிழாப் பார்க்கப் போகிறார்.

போகும்போது பெரிய மேளக் கச்சேரி முடிந்து சின்ன மேளம் தொடங்குவதற்கு தயாராக இருந்தது.

தம்பாப்பிள்ளையர் நண்பர்கள் புடைசூழ வந்து சேருகிறார். தூரம் அதிகம் இல்லாமல் இருந்தும், கறுத்தாரின் குதிரை வண்டியில் அங்கு வந்து இறங்குகிறார்கள்.

கோயில் முன் வெளியில் ஒரு மேடை!

அந்த மேடையில் அலங்காரம்! இன்னும் அவர் கண்களுக்குள் நிற்கிறது.

சின்ன மேளக்காரி மேடைக்கு வருவதற்குமுன் பக்க வாத்தியக்காரர்கள் வந்து சேருகின்றனர்.

டோலக்கு;
மிருதங்க மயில்வாகனம்;
ஆர்மோனியச் சோமசுந்தரம்;
மோர்ச்சிங்குச் சங்கரப்பிள்ளை;
கெஞ்சிராக் கணேசன்;
பிற்பாட்டு வேலையா;
எல்லோரும் நிரைக்கு வந்து சேர்ந்து விட்டனர்.

தேவடியாள் கெங்கம்மா இந்தியாவில் இருந்து வந்து முதல் முதலாக ஆடப் போகிறாள். சன இரைச்சல்! மடைப் பள்ளிப்பக்கம்தான் எல்லோர் கண்களும்! தம்பாப்பிள்ளையர் கண்கள் மட்டும் வேறோர் இடத்தில்!

அந்த இடம் இன்னும் கண்களுக்குள் நிற்கிறது.

கோவில் தென்புறத்துத் தூணுடன் சாய்ந்தபடி இருந்த அந்த மாம்பழச் சிவப்பி இன்னும் மனதுக்குள்ளே... அந்த முதல் சந்திப்பு....

தேவடியாள் கெங்கம்மா வருகிறாள்! மேனியெல்லாம் நெருப்புவந்திப் பொட்டுகள்; பின்னால் தொங்கு தாவணி!

சிவப்புச் சரிகைச் சேலையுடன் தங்கநிற ஒட்டியாணம் அரையை இறுக்க... இடை கொடிபோல் ஆட......

தம்பாப்பிள்ளையரின் கண்கள் ஒன்றோ இரண்டோ தடவைகள்தான் அதைப் பார்த்தன. படம் பிடித்தன.

தேவடியாள் பாதங்களின் சதங்கை ஓசை இப்போதும் காதுப் புலன்களுக்கு எட்டுகிறது. ஆனாலும் கணவேளைக் குப்பின் அவர் கண்களுக்குள் அந்தப் பெரும் தூணோடு சாய்ந்திருக்கும் மாம்பழச் சிவப்பிதான் நிற்கிறாள்.

பின்பு......

நண்பர்களை விட்டுவிட்டு தம்பாப்பிள்ளையர் அந்தத் தூண் பக்கம் போகிறார்.

கெங்கம்மாவாவது... அவள் ஆடிய ஆட்டமாவது. எதுவுமே அவர் நினைவில் இல்லை.

அப்புறம்......

''உது பொண்டுகள் இருக்கிற இடம்; உதிலை ஒருத் தரும் நிக்கக்கூடாது.'' இப்படி ஒரு குரல்.

''நான் தாவடித் தம்பாப்பிள்ளை! ஆளைத் தெரியா மல் கதையாதை!''

''தம்பாப்பிள்ளை எண்டாக் கொம்போடா...' இந்தக் குரலோடு சேர்ந்தாற்போல தம்பாப்பிள்ளையரின் தலைமயிரைச் சுற்றிப்பிடித்து வெளியே இழுத்தெறிகிறான் ஒருவன்.

பின்பு......

''டேய் எங்கடை தம்பாப்பிள்ளையருக்கு அடிக்கிறாங் களடா; இறங்குங்கோடா களரியிலை!''

இது கறுத்தார் துரைராசாவின் குரல்.

இதற்கு மேல்...

இணுவில் கந்தசாமி கோயிலடி ஒரே அல்லோலகல்லோலம்!

யுத்தத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு... குதிரை வண்டியில் தாவி ஏறி... தம்பாப்பிள்ளையரின் நண்பர்களுக்காவது தோல்வியாவது? எத்தனை களரி கண்ட காய்கள்!

கட்டியங் கூறாமலே வந்து சேர்ந்த ஆண்டுப் பறவைகள் விடைபெறாமலே பறந்தோடிவிட்டன!

ஃ ஃ ஃ

தந்தையான மயில்வாகனக் கமக்காறன் செத்துப் போய்விட்ட காட்சி அவர் மனதில் இல்லை. அப்போது அவர் வீட்டிலும் இல்லை.

ஒரு நாள் தந்தையார் ஏசியதில் இருந்து தம்பாப்பிள்ளையரும் எங்கோ போய்விட்டார்.

'மரணச் சேதியை காற்றுவாக்கில் அறிந்த பத்து நாட்களுக்குப் பினபு தான் வருகிறார்.

தந்தையாருக்குக் கொள்ளிக்குடம் உடைத்தவன் யாரோ ஒரு உழத்துக்காரன்.

அந்த உரிமையோடு அவன் அந்தியேட்டிக் கிரிகையையும் கீரிமலையில் முடித்துவிட்டான். மரபு அப்படி.

கொள்ளி வைப்பவன் அந்தியேட்டிக்கும் உரித்தானவன்.

இதை மாற்றி நடத்த குருக்கள் மறுத்துவிட்டார்.

அதனால் என்ன?

அவர் மனது அதைப்பற்றி அலட்டிக் கொள்ளவில்லை.

அந்தியேட்டியைத் தொடர்ந்து அதிகாரங்கள்தான் அவர் கைக்கு வருகிறதே!

குடிப்பழக்கமும் அவரோடு சேருகிறது. அதுவும் மனதைவிட்டு நீங்க முடியாத அனுபவம்.

அதுவும் இரகசியக் குடியென்றால்...

அதிலும் ஒரு சுகம்!

இதற்காகவே சுதுமலைச் செல்லப்பனுடன் இவருக்குத் தொடர்பு. செல்லப்பனை இப்போது நினைக்கும்போது மனது இனிக்கிறது.

ஒரு பனையான ஆண்பனைக் கள்ளின் அந்த இனிமையை விடவும் செல்லப்பன் இனித்தான்.

இராக்காலங்களில்....

வாடிக்கைக்காரர்கள் போய்விட்ட பின்பு....

சிலவேளை ஒண்டுபாதியிலும் கூட....

இன்று குடியை விட்டு விட்டாலும். அந்தக் கள் இப்போதும் இனிக்கிறது.

ஆனால் செல்லப்பனின் தங்கை விதவை சிங்கியே இன்னும் இனிப்பானவள்!

பலவருடங்கள் ஆகிவிட்டாலும் இப்போதும் அவள் தொடர்பு இனித்துக் கொண்டே இருக்கிறது.

வெள்ளைச்சி அம்மாள் சிவப்பான வெள்ளைக்காறிச்சி போன்று இவருக்கு இனித்தாலும் அதைவிட கன்னங்கரிய வளான, குறுக்குக் கட்டுக் கொய்யகக் காரியான, அள்ளு கொண்டைக்காரி சிங்கி எத்தனை இனிப்பு!

அவள் வாயிலும், வயிற்றிலுமாக இருந்தபோது, ''சிங்கி, நான் உன்னை வெட்ட வெளிச்சமாய் வைப் பாட்டியாய் வைச்சிருப்பன். நீ என் சாகிறன், விழுகிறன் எண்டு கத்திறாய்? இந்தா, இந்த மருந்து உருண்டையைப் பனங்கட்டியிலை போட்டு விழுங்கு; எல்லாம் சரிவரும்.'' என்று கூறவும் அவள் அதை தின்றுவிட்டு மறுநாளே மறு உலகம் போனதும் அவரால் தாங்கிக்கொள்ள முடி

யாதுதான். ஆனால் அவள் நினைவுக்கு வந்துவிட்டால் அவள் சாவு நினைவுக்கு வருவதில்லை.

அவளின் அணைப்பின் சுகம்தான் நெஞ்சுக்குள் முட்டிக்கொண்டு நிற்கிறது.

அப்பளுக்கற்ற அந்தக் கறுப்பு நிறம்!

அழகான அள்ளுகொண்டை!

இறுக்கான குறுக்குக் கட்டு!

கிண்கிணி நாதக் குரல்!

எல்லாமே... இனிப்பானதுதான்!

மனது அவளின் நினைவில் இருந்து இடம் பெயர மறுக்கிறது. பிடிவாதமாக மறுக்கிறது!

''சிங்கி... சிங்கி...'' அவர் வாய் முணு முணுக்கிறது!

அப்புறம்...

அப்புறம்......

ஃ ஃ ஃ

சரியாகப் பொழுதுகு உச்சிக்கு வந்துவிட்ட வேளை!

வெய்யில் நெருப்பாகத் தகிக்கிறது.

கறுத்தார் மகன் துரைராசா வீட்டு விறாந்தை.

துரைராசா இவருடன் புதிதாகச் சேர்ந்து சில மாதங்களாயினும் அதற்கிடையே நகமும் சதையுமாக ஒட்டிவிட்ட நண்பன்.

ராசசூரியர், தம்பாப்பிள்ளையர், துரைராசா மூவரும் அந்த வட்ட மேசையைச் சுற்றி இருக்கின்றனர்.

முன்னே மாட்டீன் பிராந்திப் போத்தல் ஒன்று திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. அப்போதுதான் பிராந்திப் போத்தல் யாழ்ப்பாணத்துக்கு அறிமுகமாகி இருந்தது.

அப்போது......

றிச்சோக்கார சின்னவன் அங்கு வருகிறான்.

''என்ன சின்னவன்?'' என நடுவிலார் துரைராசா அவனைக் கேட்கிறார்.

''ஐயாவிட்டைத்தான் ஒரு விஷயமாய் வந்தனான். ஒருக்கா இப்பிடி...''

துரைராசர் எழுந்து வெளியே போகிறார். ''ஆருக்கோ சினேகிதனுக்கு ஒரு வேலைக்காரி வேணுமெண்டு நெடுகச் சொன்னனீங்கள்; அதுதான் ஒருத்தியைக் கொண்டு வந்திருக்கிறன்,'' என்று கூறிக் கொண்டே, சின்னவன் வீட்டுக்கு வெளியே கல்லு வீதிக்கு வந்து விடுகிறான்.

வெளியே அவன் றிச்சோ நிற்கிறது.

அதிலே ஒருத்தி இருக்கிறாள்.

துரைராசா கணத்தில் கண்களால் அவளை அளந்து விடுகிறார்.

தீவிரமாக யோசித்தார்.

''சின்னவன், இண்டைக்கு நாள் சரியில்லை. அட்டமி நவமி. அங்கை கொண்டுபோய்விட ஏலாது. நாளைக்குக் காலமைதான் விடலாம்!'' ஐயா சொன்னார்.

''அப்ப ஐயா, வீட்டை நிக்கட்டுக்கன். நாளைக்குக் கொண்டு போய் விடலாம்தானே ஐயா!'' சின்னவன் பதில் சொன்னான்.

''எட சின்னவன், அம்மா ஒரு சந்தேகமான மனிசி! ஏதெண்டாலும் நினைக்கும். இண்டைக்குப்பாட்டுக்கு வேறை இடத்திலை விடலாம் எண்டுதான் யோசிக்கிறன்.'

துரைராசா சிந்தித்தார்.

''அப்பிடி எண்டா ஐயா! என்ரை சினேகிதன் குருசுமுத்தன்ரை சலூனுக்குப் பின்னாலை இருக்கிற அறையிலை விடுவம். காலமை பார்த்துச் செய்வம்...''

''அதுதான்ரா சின்னவன் சரி. குருசுமுத்தனுக்குச் சொல்லிப்போட்டு அங்கை நிக்கவிடு! நான் கொஞ்சம்

பொறுத்து அங்கை வாறன். போ! நில்லாதை. அம்மா கண்டாலும்...''

துரைராசர் சொல்லி முடித்துவிட்டு உள்ளே போகுமுன் பார்வையை நிச்சோவைச் சுற்றி வீசிவிட்டே போகிறார்.

''என்னகாணும், நிச்சோக்காரச் சின்னவனோடை கனக்கக் கதைச்சுப் போட்டு வாறாய்; என்ன சங்கதி?'' தம்பாப்பிள்ளையர் கேட்டார்.

''அப்பிடி ஒண்டுமில்லைக்காணும். ஒரு சின்ன விஷயம்!''

துரைராசர் விஷயத்தை நசுக்குகிறார்.

''சாச்சா நான் நம்பமாட்டன். விஷயத்தை ஒளியாமல் சொல்லு... நாங்கள் பங்கு கேக்க மாட்டம்'' தம்பாப்பிள்ளையர் நக்கல் பண்ணினார்.

துரைராசாவால் உடனே சொல்ல முடியவில்லை. ''சொல்வோமா? விடுவோமா?''

இந்தக் காரியங்களில் பங்கு பிணை இருப்பது வழக்கமாயினும் அவருக்கு மனது விரும்பவில்லை. ஆனால் சொல்லிவிடத்தான் வேண்டும்! இப்படி எத்தனையோ விடயங்களில் அவர்கள் பங்குதாரராக இருந்திருக்கிறார்கள்.

''உங்கை முகத்திலை தெரியுதே; ஏதோ மொடுவாய் ஆப்பிட்டுப் போச்செண்டு!'' ராசசூரியரும் முகக் குறிச் சாத்திரம் பார்த்துவிட்டார்.

''ஒரு சரக்கு வந்திருக்காம் காணும்; அதுதான் சின்னவன் சொல்லிப் போட்டுப் போறான்.''

துரைராசர் உள்ளதைச் சொல்லிவிட்டார் கீழ்க் குரலில்.

''அப்பிடியெண்டா முதல் நான்தான் மச்சான்!'' தம்பாப்பிள்ளையர் அங்கலாய்த்துக் கொண்டார்.

''இஞ்சைபார் இவன்ரை ஆவலாதியை! எல்லாம் பாத்துப்போட்டு பேந்து யோசிப்பம். எங்களுக்குள்ளை என்ன வித்தியாசம்!'' துரைராசா முடிவு செய்து விட்டார்.

''எடை, நடுவில்! எப்பிடியெண்டாலும் நான்தான் முன்னுக்கு!'' என்று தனது பங்குக்கான முதன்மையை தம்பாப்பிள்ளையர் விடவில்லை.

நடுவில் துரைராசா என்பதுதான் துரைராசரின் இணைப்புப் பெயர். தம்பாப்பிள்ளையரும் எப்போதும் 'நடுவில்' என்றே அவரை செல்லமாக அழைத்துக் கொள் வார். மூவரும் புறப்படுகின்றனர்.

''என்ரா, தம்பியவை! கோழிக்கறி இறக்கியாச்சு; சோத்தைத் திண்டிட்டுப் போங்கோவன்!'' இது குசினிக் குள் இருந்து நடுவில் துரைராசரின் தாயாரின் குரல்!

''வேண்டாமம்மா, போட்டு கொஞ்சம் பொறுத்து வாறம்; அடுக்குப்பண்ணு.''

விடை பெற்றுக் கொண்டு மூவரும் வெளியேறிவிட் டனர்.

அப்போதுதான் யாழ்ப்பாணத்துப் பெருந் தெருக் களுக்குத் தார் ஊற்றப்படுகிறது.

பெருந்தெருக்களின் கல்லடுக்குக் கரையால் நடந்து மூவரும் முதலாம் குறுக்கில் திரும்பிவிட்டனர்.

முதலில் வருவது குருசுமுத்தனின் சலூன்தான். முதன் முதல் யாழ்ப்பாணத்தில் சலூன் வைத்த பெருமை குருசு முத்தனுக்குத்தான்.

முன் விறாந்தை பின் விறாந்தையுள்ள ஒரு சிறு வீட்டை எடுத்து, முன் விறாந்தையையும் ஒரு அறையை யும் சலூனாக்கிக் கொண்டு பின் விறாந்தையையும், அறை யையும் பிற பாவனைக்காக வைத்துக் கொண்டிருந்தான்.

இவர்கள் மூவரும் வந்தபோது சின்னவனும் அங்கே நின்றான். குருசு முத்தனும், சின்னவனும் மூவரையும் வரவேற்றனர்.

மூவரும் உள்ளே நுளைந்தனர்.

சின்னவன் நடுவில் துரைராசரைக் கூட்டிக்கொண்டு உள்ளே போனான்.

''நானும் வாறன் மச்சான்!'' என்று கூறிக்கொண்டே தம்பாப்பிள்ளையரும் உள்ளே போய்விட்டார்.

ராசசூரியரும், குருசு முத்தனும் வெளியே நின்றார்கள்.

பின் விறாந்தையில் ஒரு குமரி!

சின்னஞ்சிறியவள்; சிவந்தவள். மறுப்படாத மாதுளம் பழம் போன்று பளபளப்பானவள். வெள்ளை நிற அகலப் பூக்கள் பதித்த அரைக்கைச் சட்டையும், கோடன் குறுக்குகள் இழுக்கப்பட நிறத்தில் அரையில் இறுகச் சிறிய கம்பாயச் சேலை சுற்றியிருந்தாள்.

தம்பாப்பிள்ளையரின் கண்கள் அகலத்திறந்து அவளை விழுங்கிக்கொண்டிருந்தன.

''பிள்ளை, மெனிக்கா! இவர்தான் நான் சொன்ன ஐயா! இவர் வீட்டைதான் நீ வேலைக்குப் போகப் போறாய். நாளைக்கு வந்து கூட்டிக் கொண்டு போவார்.''

இப்படிக் கூறிவிட்டு சின்னவன் தம்பாப்பிள்ளையரைத்தான் காட்டினான். உண்மையில் அவருக்கென்று தான் அவன் நினைத்திருக்க வேண்டும்.

தம்பாப்பிள்ளையருக்குப் பரம சந்தோஷம். தான்தான் முதலாவது நம்பர் என உறுதிப்படுத்திக் கொண்டார்.

தம்பாப்பிள்ளையர் மடியைத் திறந்து சில வெள்ளிக் குற்றிகளை எடுத்து அவளின் கையில் வைத்தார். அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

நடுவில் சில வெள்ளிக் குற்றிகளைப் பொறுக்கி சின்ன வனின் கையில் வைத்து அவளுக்கு மதிய உணவு வாங்கிக் கொடுக்கும்படி கூறினார்.

சோற்றுக்கு அலுப்பாந்தி புங்குடுதீவுக்காரன் கடைக் குத்தான் போக வேண்டும்.

சின்னவன் அலுப்பாந்திக்குப் போய்விட்டான்.

நடுவில் துரைராசருக்கு கண்ணறை பெனியன் போட்ட வயிற்றில் முழங்கையால் இடித்து வெளியே போகும்படி தம்பாப்பிள்ளையர் சைகை காட்டினார்.

போகவே மனமில்லாமல் அவர் வெளியேறினார்.

அவர் வெளியே போன சிறிது நேரத்தில்,

''ஐயோ, தொரை! இது என்ன தொரை! என்னை விடுங்கோ தொரை!'' என்ற வார்த்தைகள் மட்டும் கேட்டன.

பின் விறாந்தை அறைக்கதவு அடித்து மூடப்படும் ஓசை கேட்டது.

இப்போதும் அந்தப் பட்டப்பகல் நீங்காமலே நிற்கிறது.

நளத்தி சிங்கிதான் அவரின் முதலாவது பாவனை! ஆனாலும் அவள் தன் உடலை ஏற்கனவே இன்னும் ஒருவனோடு இணைத்து விட்டவள். இடையில் எத்த னையோ எத்தனையோ! அத்தனைக்கும் தம்பாப்பிள்ளை யர்எத்தனையாவது? என்று சரியாகச் சொல்ல முடியாது.

மனைவி வெள்ளைச்சிகூட அந்த வரிசையில் ஒன்றாக இருக்கலாம் என்று எண்ணம் வந்ததும் உண்டு.

ஆனால் மெனிக்கே....

அந்தப் பட்டப்பகல்!

அவளுக்கு நிச்சயமாக அவர்தான் புதியவராக இருக்க வேண்டும்.

''இதென்ன தொரை! என்னை விட்டிடுங்கோ தொரை! ஐயோ, தொரை!''

தம்பாப்பிள்ளையருக்கு அது சர்க்கரைக் குரல். அது இன்னும் திகட்டி விடவில்லை. அது திகட்டாது.

குருசுமுத்தனுக்கு அப்போதுதான் விஷயம் விளங் கிய்து. அவன் நடுங்கினான்.

இளைக்கக் களைக்கத் தம்பாப்பிள்ளையர் வெளியே வந்தார்.

நடுவிலும், இராசசூரியரும் சாராயப் போத்தல் ஒன்றைப் பரிமாறிக் கொண்டிருந்தனர்.

''எப்பிடி மச்சான் சரக்கு?''

நடுவில் தம்பாப்பிள்ளையரைக் கேட்டார். தம்பாப் பிள்ளையருக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

களைப்பு இன்னும் தீரவில்லை.

அவரின் சிவந்த உடலில் ஆங்காங்கே நகக் கீறல்கள்! அவைகளில் இருந்து இரத்தக் கசிவுகள்!

சின்னவன் சோத்துப் பொட்டலத்துடன் வந்து சேர்ந்தான்.

வந்ததும் வராததுமாக சாராயப் போத்தலின் கடைசிப் பங்கு அவனுக்குக் கிடைத்தது.

அவளுக்குச் சாப்பாட்டைக் கொண்டு போய் கொடுக் கும்படி நடுவில் துரைராசர் பணித்தார்.

சின்னவன் உள்ளே போனான். உள்ளே அழுகைக் குரல் கேட்டுக் கொண்டிருந்தது.

சிறிது நேரத்தில் அழுகைக் குரல் ஓய்ந்தது. கிணற்ற டியில் வாளி அடிபடும் ஒசை! அவள் உணவருந்தி சின்ன வன் தண்ணீர் அள்ளிக் கொடுப்பது போன்ற ஊகம் எல்லோருக்கும்!

சற்று நேரத்தின்பின் சின்னவன் வருகிறான். அவனது முகம் சிவந்து போய் இருக்கிறது.

''இதென்ன வேலை தம்பியவை? அவள் குழந்தைப் பெட்டை! நான் ஒரு மாதிரி அவளை சமாதானப்படுத்திப் போட்டு வாறன்.''

அவனால் இப்படித்தான் அவர்களுடன் கதைக்க முடிந்தது.

சின்னவனையும் குருசுமுத்தனையும் கூப்பிட்டு துரை ராசர் எச்சரிக்கை செய்வது போலப் பேசிவிட்டு, ''எதுக்கும் பின்னேரம் வாறம். கவனமாக நடவுங்கோ!'' என்று சொல்லி, சில வெள்ளி நாணயங்களை அள்ளி இருவர் முன்னும் போட்டுவிட்டு மூவரும் வெளியேறினர்.

மாலை வந்தது!

இருட்டி விட்டது!

மீண்டும் மூவரும் வந்தனர்.

மூவரும் மூன்று சீமைச் சாராயப் போத்தல்களுடனும் பத்துக்கு மேற்பட்ட அவித்த முட்டைகளுடனும் நடுவிலின் அம்மா சமைத்த கோழிக் கறியுடனும் வந்து சேர்ந்தனர்.

இதற்குப் பின்... கடைசியாக...

மறுபடியும் தம்பாப்பிள்ளையருக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்படுகிது.

குருசுமுத்தனும், சின்னவனும் கடைக்கு வெளியே, வீதியில்! வந்த உடனேயே சாராயப் போத்தல் ஒன்று அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டது.

மெனிக்கா பிணம்போல் செயலற்றுப்போய்...

இது அவருக்கு ருசியாக இல்லை. அறையின் இருளுக்குள் அவள் கட்டை போல் கிடந்தாள்!

''........''

இரவு தம்பாப்பிள்ளையரோ, இராசசூரியரோ வீடு களுக்குப் போகவில்லை.

சாமம் ஒண்டு பாதியில் வந்து நடுவில் வீட்டில் படுத்து விட்டனர். படுத்ததுதான் தாமதம் உறக்கமும் புட்டுக் கொண்டு வந்துவிட்டது.

அத்தனை உடல் அலுப்பு!

நன்றாக விடியவில்லை.

குருசுமுத்தனும், சின்னவனும் வந்தார்கள்.

துரைராசரை வெளியே அழைத்து ஏதோ காதோடு காது பேசிக் கொண்டார்கள்.

துரைராசரின் முகம் பேயறைந்தது போலாகிவிட்டது!

வீட்டுக்குள் போய் இரண்டு நோட்டுகளை எடுத்து வந்து சின்னவன்கையில் வைத்தார். எதை எதையோ அவர்களிடம் தலையசைத்துப் பேசினார்.

அவர்கள் போய்விட்டனர்.

ஏதோ நடக்கக்கூடாதது நடந்துவிட்டதாக தம்பாப் பிள்ளையர் குறிப்பில் ஊகித்துக் கொண்டார்.

இராசசூரியருக்கு எதுவித சிந்தனையும் இல்லை. அவர் இப்போதும் குழந்தைதான்.

சிறிது நேரத்தில் மூவரும் வெளியே சென்றுவிட்டனர்.

நான்கு நாட்களின் பின்...

ஊரெல்லாம் பரபரப்பாக இருந்தது.

அந்த ஆண்டில்தான் முதல் முதலாக ஒரு தினப் பத்திரிகை வெளி வந்திருந்தது.

அந்தப் பத்திரிகையில் இடையும் தொடருமாக பல செய்திகள் வெளிவந்து கொண்டிருந்தன.

அவைகளின் பிரதானமானவை....

''வல்லைப் பாலத்தில் இனம் தெரியாத ஒரு பெண்ணின் சடலம்! அந்தச் சடலம் சாக்கில் போட்டுக் கட்டப்பட்டு ஒரு திருகைக்கல்லில் இணைத்திருந்தது. அது சாக்கு கயிற்றை அறுத்துக் கொண்டு மிதந்தது.''

''வல்லைப் பாலத்தில் மிதந்த சடலம் பதினான்கு வயதுக்கும், பதினைந்து வயதுக்கும் இடைப்பட்ட இளம் பெண்ணின் சடலம்! என்றும் அவள் உடுத்தியிருந்த உடைகளைக் கொண்டு அவள் ஒரு சிங்களப் பெண்ணாக இருக்க வேண்டுமென்றும் ஊகிக்கப்படுகிறது. பெண்ணைத் தெரிந்தவர்கள் அடையாளம் காட்டுவதற்கு வசதியாக ஸ்தலத்திலேயே தகுந்த பாதுகாப்புடன் சடலம் வைக்கப்பட்டிருக்கிறது. இதோ அந்தப் பெண் பிணமாகக் கிடக்கும் காட்சி!''

இந்தச் செய்தியின் கீழ் ஒரு பெண்ணின் உப்பிப்போன படமும் அச்சடிக்கப்பட்டிருந்தது.

பாலத்தில் கிடந்த பெண்ணின் சடலத்தை அப்பெண் ணின் எஜமானிஅடையாளம் காட்டினாள்.

யாழ்ப்பாணம் வண்ணார்ப்பண்ணை ஒட்டுமடத்தைச் சேர்ந்த விசாலாட்சி அம்மாள் என்ற வயோதிபப் பெண், இறந்த அந்தப் பெண் நான்காண்டு காலமாக தன் வீட்டில் பணிப்பெண்ணாக இருந்தாள் என்றும், அவள் பெயர் மெனிக்கா என்றும், தன் கணவன் சிங்கப்பூர் போய் விட்டபின் இவள் பக்கத்து வீட்டுச் செல்லம்மா என்ற பறைச்சியின் மகனோடு பேசிப் பழகி வந்ததாகவும், தான் கண்டித்ததாகவும் முடிவில் இவளைவேறு எங்காவது வேலைக்குக் கொண்டு போய் விடும்படி, தன் பிள்ளைகளை வாடிக்கையாகப் பாடசாலைக்கு இழுத்துச் செல்லும் றிச்சோக்கார சின்னவனிடம் சொல்லி வைத் திருந்ததாகவும், ஐந்தாறு நாட்களுக்கு முன் சின்னவர் யாரோ ஒருவர் வீட்டில் ஒழுங்கு செய்திருப்பதாகக் கூறி அழைத்துச் சென்றதாகவும், அவள் போகும்போது

போட்டிருந்த சட்டையும் சேலையும் இதுதான் என்றும் கூறி அவளின் இடது கையில் தாமரைப்பூ பச்சை குத்தப் பட்டிருக்கிறது என்றும் அடையாளம் காட்டினாள். இந்தப் பெண்ணைப் பற்றிய விபரம் சிங்கப்பூரில் இருக்கும் தன் கணவனுக்குத்தான் தெரியும் என்று கூறினாள்.

''வல்லைப்பா பெண் மர்ம மரணம் சம்பந்தமாக சின்னவன் என்ற நிச்சோக்காறனும், சலூன் குருசுமுத் தனும் கைது,''

''அந்தப் பெண் இறந்த இடமாகக் கருதப்படும் முதலாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த குருசுமுத்தனுக்குச் சொந்தமான சலூனின் பின் பக்கத்தைச் சோதனை இட்ட தில், வெறும் மண் தரையில் இரத்தக் கறையும், அந்தப் பெண் வேலை செய்த வீட்டில் இருந்து எடுத்துப்போன இரண்டு சோடி உடுப்புகளும், வெள்ளி நாணயங்கள் பத்தும், உடைத்துத் தின்னப்பட்ட மாதுளங் கோதுகளும் ஒரு பிராந்திப் போத்தலும் இருந்தன.''

''வல்லைப் பாலத்தின் கீழ் பிணமாகக் கிடந்த சிங்களப் பெண் மெனிக்கேயின் மரணம் சம்பந்தமாக வைத்திய பரிசோதனை அறிக்கை பின்வருமாறு:

அவள் பல தடவை கற்பழிக்கப்பட்டிருப்பதாகவும், இறுதியில் அவளுக்கு ஒரு வகை வலிப்புக் கண்டு மயங்கி பின்பும் கற்பழிக்கப்பட்டு இறந்திருக்க வேண்டும் என்று வைத்திய அறிக்கை கூறியது.''

''கொலை செய்யப்பட்டதாகக் கருதப்படும் சம்பவம் தொடர்பாக மூன்று பெரும் புள்ளிகள் மீது சந்தேகம்! முருகேசு என்ற கார்ச் சாரதியும் கைது! பிரேதத்தை எடுத்துச் செல்வதற்குப் பயன்படுத்தப்பட்ட கார் கைப்பற் றப்பட்டது!''

''சாரதி முருகேசுவின் வாக்குமூலம் இப்பிடி...

'நான் தாழ்ந்த சாதிக்காரரை காரில் ஏற்றிச் செல் வதில்லை. அன்று சின்னவனும், குருசுமுத்தனும் வந்து,

ஒரு நூறு ரூபா நோட்டை முதலில் என்னிடம் தந்து, இரவு ஒரு இடத்திற்கு அவசரமாகப் போகவேண்டும் என்று கேட்டனர். இரவு நேரமாதலால் இவர்களை ஏற்றிப்போக நான் சம்மதித்தேன். இரவு பத்து மணிக்கு மேல் காரைப் பிடித்துக் கொண்டு நேராக குருசுமுத்தனின் கடைக்குக் கொண்டு சென்று, வெளியே விட்டு ஒரு சாக்கை எடுத்து வந்து டிக்கிக்குள் போட்டுவிட்டு நேராகச் சின்னவனின் வீட்டுக்குப் போய் ஒரு திருகைக் கல்லையும் தூக்கி வைத்துக் கொண்டு புறப்பட்டார்கள்.

எனக்கு ஏதோ ஒருவித சந்தேகம் ஏற்பட்டது! இடையே காரை நிறுத்திவிட்டு விசாரித்தேன். குருசுமுத்தன் எனக்கு ஒரு சிரட்டையில் சாராயம் வார்த்துத் தந்தான்.

காரை நிலாவரைக் கேணியடிக்கு விடும்படி சின்னவன் கூறினான். அதன் படி காரை நிலாவரைக்குச் செலுத்தினேன். அங்கே பக்கத்தில் பிள்ளையார் கோவில் திருவிழா நடந்து கொண்டிருந்ததால் ஜனங்கள் நடமாட்டம் அதிகமாக இருந்தது.

பின் நேராக வல்லைக்கு விடும்படி கேட்டனர். வல்லைப் பாலத்தில் கார் நின்றபோது இருவரும் இறங்கித் திருகைக் கல்லில் கயிற்றை இறுக்கி சாக்கு மூட்டையைப் பாலத்தின் கீழ் தள்ளிவிட்டனர்''

இப்படியாக சாரதியின் வாக்குமூலம் அமைந்திருந்தது.

''மெனிக்காவின் கொலை சம்பந்தமாகத் தேடப்பட்டு வந்த பிரபலஸ்தர்கள் மூவரும் நீதிபதியின் முன் சரண்! அவர்களுக்கெதிராகச் சாட்சிகள் இல்லை எனப் பொலீசார் சொன்னதினால், மூவரும் உடனே விடுதலை!''

''மெனிக்காவின் வழக்கு சுப்பிரீம் கோட்டுக்குப் பாரம். அடுத்து வரும் பருவகால ஆடிக்கோட்டில் வழக்கு விசாரிக்கப்படும். ஒப்புதல் வாக்கு மூலம் அளித்ததால்

கார்ச்சாரதி அரசதரப்பு சாட்சியாக மாற்றப்பட்டு பிணை யில் விடுதலை! மற்றைய இருவரான சின்னவன், குருசு முத்தன் ஆகியோர் மேல் கொலைக் குற்றச்சாட்டு!''

''புதிய சாட்சியாகிய கொலை நடந்த இடத்து பின் வீட்டுக்காரியாகிய சின்னமுத்து என்ற பெண்ணின் வாக்கு மூலம்!''

''சம்பவம் நடந்த அன்று மத்தியானம் நான் எனது வீட்டுக்குப் பின் பக்கமாகப் போனேன். எங்கள் வீட்டின் பின்பக்கம்தான் குருசுமுத்துவின் சலூன்இருக்கிறது. நான் வேலி நீக்கலால் பார்த்தபோது ஒருஇளம் பெண் கிணற்ற டியில் நின்ற மாதாளம் மரத்தில் பழங்களைப் பறித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. நான் அதைப்பற்றி அக் கறைப்படவில்லை. அன்று இரவு அந்தப் பின் வீட்டுப் பக்கம் பைம்பலாக இருந்தது எனக்கு அன்று நித்திரை வரவில்லை.''

''என்னுடைய புருஷன் சிறினிவாசகத்தாருடைய கூத்துக் கொட்டகையில் வேலை. அன்று இந்தியாவில் இருந்து வந்த கோவிந்தசாமியின் 'வள்ளித்திருமண' நாடகம். அதனால் அவர் வர நேரமாகும் என்பது எனக்குத் தெரியும். விழிப்பாய் இருந்தேன். நடுச் சாமம் போல, ''மகே அம்மே!... மகே அம்மே!...... என்று இரண்டு மூன்று தரம் கேட்டது. அதற்குப்பின் ஒரு சத் தமும் இல்லை.''

''சின்னமுத்துவின் இந்த சாட்சியையும் பதிவு செய்த நீதியரசர் சுப்பிரீம் கோட்டு இராசாவுக்குப் பாரப்படுத் தினார்.''

''பருவகால சுப்ரீம் கோட்டில் சிங்களப் பெண் மெனிக்காவின் வழக்கே முதல் விசரரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இரண்டு நாட்களில் விசாரணைகள் முடிந்துவிடும் என்பது பலரின் அபிப்பிராயம்.''

''மெனிக்காவின் வழக்கு விசாரணைகள் முடிந்தன. நாளை நீதி அரசரின் தொகுப்புரை: விசாரணை முடிவை அறிய கட்டுக்கடங்காத ஜனக்கூட்டம்!''

''மெனிக்காவின் கொலை வழக்குத் தீர்ப்பு. நீதிபதியின் தொகுப்புரையை அடுத்து ஆலோசனைக்குச் சென்ற யூரிமார்கள் எழுவரில் அறுவர் எதிரிகள் குற்றவாளிகள் என்றும், ஒருவர் சுற்றவாளிகள் என்றும், முடிவு சொன்னதை அடுத்து நீதி அரசர் மறுபடியும் அவர்களை ஆலோசனைக் கூடத்திற்கு அனுப்பவே, ஐவர் குற்றவாளிகள் என்றும், இருவர் சுற்றவாளிகள் என்று முடிவு சொன்னதைத் தொடர்ந்து, எதிரிகளைப் பார்த்து, நீங்கள் ஏதேனும் சொல்ல இருக்கிறீர்களா? என்று நீதி அரசர் கேட்டபோது, ''நாங்கள் இருவருமே இக்குற்றத்தைச் செய்யவில்லை'' எனப் பதிலளித்தனர். முடிவில் இருவருக்கும் நீதி அரசர் மரண தண்டனை வழங்கினார்.''

ஃ ஃ ஃ

தம்பாப்பிள்ளையரின் கண்களுக்கு முன்னால் இந்தப் பெரு விஷயம் முழுமையாக வரவில்லையாயினும் அந்த மெனிக்காவின் பட்டப்பகல் நினைவு நேற்று நடந்தது போலவே படுகிறது.

அந்த மாதுளம்பழ மினு மினுப்புக்காரியை இதற்கு முன்னால்....

அந்தப் பட்டப் பகல் நிகழ்ச்சி...

அந்த இரவில் அவள் பிணம் போல செயலற்றுக் கிடந்த அந்தக் காட்சி! கண்முன் வர முயற்சி செய்தாலும் அவர் அதை நீக்கிக் கொள்ள முயன்றார்.

அன்று பகல் அவள் திமிறிய திமிறல்கள்! அனுங்கிய அனுக்கங்கள்; பிராண்டிய பிராண்டல்கள்......

இவை அந்த அசைவற்ற நிலையைவிட எத்தனையோ சுவையாக இருந்தது அவருக்கு!

மயில்வாகனக் கமக்காறன் இல்லாதபோது தம்பாப் பிள்ளையரை ஒருகட்டையில் பிடித்துக் கட்டிவிட வேண்டும் என்ற எண்ணம் அவரின் தாயாரைவிட வேறு எவருக்கும் இருக்கவில்லை. எப்போதாவது ஒரு நாள் தாயையும் சகோதரி செல்லம்மா நாச்சியரையும் பார்க்க என்ற சாக்குப் போக்குடன் அவர் வருவார்; வேண்டிய பணத்தைத் தாயாரிடம் வாங்குவார்; போய்விடுவார்.

உறவு முறைக்குள் தம்பாப்பிள்ளையருக்குப் பெண் கொடுக்க எவருககும் தானாக மனது வரவில்லை.

மயில்வாகனத்தார் சம்பாதித்து வைத்து விட்டுப்போன காணிபூமி, பொருள், பண்டம், கமம்புலம், எல்லாம் இருக் கின்றன. அதற்காக மட்டும் போட்டி போட்டுக் கொண்டு ஒருவரும் முன்வரவில்லையே என்பதைப் பற்றி தம்பாப் பிள்ளையருக்கு மனது கோணிப் போகவில்லை. அவருக் குத்தான் பலவித பிராக்குகள் இருக்கின்றனவே!

ஒருநாளும் இல்லாத புதுமையாக, ஒரு நாள் அவர் தாயாரிடம் நசிந்து! நசிந்து கீழ்க்காணும் கோரிக்கையை விடுத்தார்.

''நல்லூரடி கனகசபாபதிப் பரியாரின் மகளைத் தனக்கு மணம் முடித்து வைக்க வேண்டும்'' என்ற அவரின் உருக்கமான வேண்டுகோளைக் கேட்டதும் தாய் திடுக் கிட்டு விட்டாள்!

கனகசபாபதிப் பரியாரி தூரத்து உறவுக்காரர்தான்; ஆனால் ஒரு தலைமுறை காலம் அவர் தொடர்பு துண்டிக் கப்பட்டிருந்தது. அவர் தன்பாட்டுக்குக் கைக்குளப் பகுதி யில் பெண் எடுத்துக் கொண்டதினால், சபை சந்தி, கஞ்சி தண்ணி, வாய் நனைப்புஎன்பவைகள் உட்பட சகல துடக்கு உருத்துகளும் துண்டிக்கப்பட்டிருந்தன.

கைக்குளவர் என்றால் அவர்களில் இரண்டு பகுதி யிணர் உண்டு.

எங்கோ, எந்தத் தலைமுறையிலோ யாரோ ஒருத்தி வெள்ளைத் தோலன் ஒருவனிடம் சோரம் போயிருக்க வேண்டும். அந்த வழியில் வந்தவளை கனகசபாபதி கண் போட்டுக் கட்டிக் கொண்டதினால், ''மாடு தின்னி வெள்ளைக்காறச்சி'' என்று அவரின் மனைவியையும் அவரையும் ஒரு தலைமுறைகாலம் ஒதுக்கி வைத்திருந்த போது அதே இடத்தில் தம்பாப்பிள்ளையர் இப்போது கண்ணைப் போட்டுவிட்டார்.

வெள்ளைச்சி அம்மான், வெள்ளைக்காறச்சியேதான்!

நீண்டு வளர்ந்த மயிரும், காதோலையும், தாவணி உடையும், திருநீற்றுப் பூச்சும், குங்குமப் பொட்டும் தங்க ஒட்டியாணமும், வெள்ளிப் பாதசரமும்... இல்லாவிட்டால் வெள்ளைச்சி அம்மான் வெள்ளைக்காறச்சிதான்!

இத்தியாதி கோலத்தில்தான் வெள்ளைச்சி அம்மானை தம்பாப்பிள்ளையர் முதல் முதல் கண்டார்.

தம்பாப்பிள்ளையர் உறவு முறை கொண்டாடிக் கொண்டு வீட்டுக்கு அடிக்கடி வந்து போவதைக் கனக சபாபதி அவதானித்து வந்தார். மறுபடியும் பழைய உறவு முறை ஒட்டிவர மகளை அவருக்குக் கொடுத்துவிடலாம் என சில தடவைகள் அவர் எண்ணியதுண்டு. ஆனாலும் தம்பாப்பிள்ளையரின் நடத்தை பற்றியும், அவரின் நண்பர்களைப் பற்றியும் அறிந்தபோது அவர் மனது ஒஞ்சித்து விட்டது.

இந்த ஒஞ்சிப்பை தம்பாப்பிள்ளையர் நீளவிடவில்லை. நண்பர்களின் ஒத்தாசையுடன் வெள்ளைச்சி அம்மானை வீடுபுகுந்து ஒருநாள் மாலை தன் வீட்டுக்குத் தூக்கி வந்துவிட்டார்!

அவ்வளவுதான்!

கனகசபாபதிப் பரியாரியார் மூச்சுக்கூடக் காட்டவில்லை.

தம்பாப்பிள்ளையருக்கும், அவர் சகாக்களுக்கும் ஆக, அவர் இந்த விஷயத்தில் மூச்சைப்பிடித்துக் கொண்டு இருந்துவிட்டார்.

ஒரே ஒரு மகள்!

மனைவி வழியாலும் பல மலட்டுச் சொத்துகளுக்கும், தனது இத்தனை வருட சம்பாத்தியத்துக்கு ஒரே ஒரு வாரிசு!

இரகசியமாகப் பல சட்டம் தெரிந்தவர்களுடன் ஆலோசித்துப் பார்த்தார்.

''பெண்ணுக்கு வயது இருபத்தி ஒன்றுக்கு மேற்பட்டு விட்டதனால் அவள் சம்மதித்து வராவிட்டால் ஒன்றும் செய்யமுடியாது'' என்று எல்லோரும் சொல்லி விட்டனர்.

வெள்ளைச்சி அம்மாளைத் தொட்டுத் தூக்கி வந்த நாள் அவருக்கு நினைவுக்கு வருகிறது.

அது அவ்வளவு இனிப்பாக இல்லை. சிங்கி இனித்த அளவுக்கு...

மெனிக்கா இனித்த அளவுக்கு...

நண்பர்களுடன் மற்றவர்கள் இனித்த அளவுக்கு... வெள்ளைச்சி அம்மாள் இனிப்பாக இல்லை.

நீண்ட பத்தாண்டுகள்!

குழந்தை குட்டி இல்லாத இல்லற வாழ்க்கை!

ஒருநாள்!

அன்று ஏதோ சர்ச்சை நடந்தபோது...

''நீயும் பரம்பரை வெள்ளாடிச்சிபோலைக் கதை யாதை!''

இப்படிக் கூறிவிட்டார்.

விடிந்ததும் வெள்ளைச்சி அம்மாளைக் காணவில்லை!

விடிவதற்கு முன்பே அவள் எழுந்து சென்றுவிட்டாள்.

நல்லூர் வெகுதூரத்தில் இல்லை. உடுத்தியிருந்த சேலையுடன் போர்த்தி மூடிக் கொண்டு தந்தையிடம் சென்று விட்டாள்!

போனவள் போனவள்தான்!

அவள் ரோசக்காரி!

முதல் பத்தாண்டுகள் குழந்தை குட்டிகள் இல்லாத வாழ்க்கை!

அடுத்த பத்தாண்டுகள் மனைவி இல்லாத வாழ்க்கை!

அந்தப் பத்தாண்டு காலங்களில் எத்தனை எத்தனையோ சம்பவங்கள்!

சில பயங்கரமானவை!

சில அருவருப்பானவை!

சில கிளுகிளுப்பானவை!

பிந்திய பத்தாண்டுகளின் கடைக்கூற்றில் தம்பாப் பிள்ளையரின் தாயானவள் இறந்து போனாள்.

அவரின் சகோதரி செல்லம்மா நாச்சியாரின் கலியாண வீட்டுக்குத் தொடுகிலும் வர மறுத்த வெள்ளைச்சி அம்மானை மாமியாரின் பிணத்தைக் காணுவதற்குப் பலர் கொண்டு வந்து சேர்த்துவிட்டனர்.

''பிரேதமும் வெளியிலை போக நானும் வெளியிலை வந்திடுவன்'' என்று சொல்லி விட்டு வந்த வெள்ளைச்சி அம்மாளால் திரும்பிப் போகமுடியவில்லை.

தம்பாப்பிள்ளையரின் பரிதாபம் அவள் மனதைக் குடைந்திருக்க வேண்டும். அல்லது அவள் மனதில் ஏதாவது ஒரு எண்ணம் வந்திருக்க வேண்டும்.

வந்தவள் வந்தவள்தான். திரும்பிப் போகவே இல்லை.

சொல்லி வைத்தாற்போல் ஒரு வருடம் கழித்து, செவ் வந்தி மலர் போன்ற செவ்வந்தி நாச்சியாரைப் பெற்றெடுத் தாள்!

''தலைமுழுக்கு பின் கூற்றுப்பிள்ளை'' எனப் பலரும் பேசிக் கொண்டனர்.

அன்றைக்குப்பிறகு அவள் விஷயத்தில் மிக எச்சரிக் கையாக நடந்து கொண்டார். இப்போது தவறுதலாக கைக்குளத்தி என்ற கருத்துப்பட பேசிவிட்டார்.

வந்தது தொல்லை!

இரண்டு நாட்களாக வெள்ளைச்சி அம்மாள் இவரைப் பழிவாங்குகிருள். கிடைத்த தோல்விகளும், தொல்லை களும் போதாதென்று மனைவியும் பழிவாங்குகிறாள்!

தம்பாப்பிள்ளையரின் கண்களுக்குள் தேவையானவை தரித்து, தரித்து... தேவையற்றவை அவசரமாக ஓடி... ஓடியும் போய்க் கொண்டிருந்தன!

அவர் கண்களை மூடி, மூடிப் பார்க்கிறார்.

வெளியே நகுலன் நாய் விடாப்பிடியாகக் கத்தி, பின்பு அனுங்கி ஓய்ந்தது.

யாரோ வேண்டியவர்கள் வருகிறார்கள்......

வந்தது கோவிச்சி— முத்திப் பெட்டை!

ஃ ஃ ஃ

(முடிவுற்றது முதற்பாகம்)

# பாகம்

# இரண்டு

ஓராண்டு கால இடைவெளிக்குள் ஊரில் பல மாற்றங்கள் நடந்துவிட்டன.

அரசாங்கப் பிரதிநிதி விதானையாரைக் கொன்றுவிட்டமையால், மற்ற வழக்குகள் போல அதிகம் இழுபடாமல் விதானையாரைக் கொன்ற வழக்கு கீழ்க் கோடு தாண்டி அடுத்த பருவக் கோட்டுக்கே வந்துவிட்டது.

நன்னியனுக்காகவும், மூத்தவன், இளையவனுக்காகவும் கோட்டில் வாதிட யாரும் இல்லை. அரசு தரப்பிலேயே அவர்களுக்காகவும் ஒரு நியாயதுரந்தர் நியமிக்கப்பட்டார்.

விசாரணைகள் இரண்டே நாட்களில் முடிந்துவிட்டன. சாட்சிகள் அதிகம் இல்லை. மூன்றே மூன்று பேர்கள்தான். மயிலு, கிட்டிணு, கடைசியாக விதானையாரின் மனைவி இலட்சுமிப்பிள்ளை நாச்சியார்.

குறுக்கு விசாரணைகள் கூட அதிகம் இல்லை. எதிரிகள் சார்பில் அரசு தரப்பால் நியமிக்கப்பட்ட நியாயதுரந்தர் யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற நல்லையாப்பிள்ளையாவர்.

அவர் தம்பாப்பிள்ளையரின் நெருங்கிய உறவினர் என்று சொல்வதைவிட அவரின் பிரிய நண்பரான நடுவில் துரைராசரின் ஒன்றுவிட்ட அண்ணன்.

ஏழு யூரர்களும் ஏகமனதாகவே மூவரையும் ஒருங்கே குற்றவாளிகள் என்று முடிவு கூறிவிட்டனர்.

தலையில் கறுப்பு அணியை தரித்துக்கொண்டே, "நீங்கள் ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?" என்ற நீதிபதியின் கேள்விக்கு,

"நான்தான் விதானையாரைக் குத்திக் கொன்றேன்" என்று மூத்தவன் மட்டும் பதில் கூறினான்.

நீதிபதி தீர்ப்பை எழுதிவிட்டு பேனாவை மேசையில் குத்தி அதன் கூரை முறித்துவிட்டார்.

மூவருக்கு தூக்கு

நாள்மட்டும் இன்னும் குறிப்பிடப்படவில்லை. அதை மகாதேசாதிபாததின் குறிப்பிட வேண்டும்.

ஃ ஃ ஃ

அடுத்த காளிகோயில் திருவிழாவும் நெருங்கிக் கொண்டிருந்தது.

கடந்த தடவைபோல இம் முறையும் ''தலைமைக் காரனின் மரணத்தினால் திருவிழா நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது.'' என்று சமாளித்துவிட முடியாதுதான்!

ஊர் நம்பாது.

தம்பாப்பிள்ளையரின் செல்வாக்குக்குப் பங்கம். திரு விழாக்களுக்குப் புதிய புதிய உபயகாரர்களைப் பிடிப்பதற்கு அவர் படாதபாடு பட்டுவிட்டார். அதுவும் காளிகோயில் மரபுப்படி குறிப்பிட்ட சாதிகளில் இருந்துதான் ஆட்களைப் பிடிக்க வேண்டும்; வேள்வி நடத்த வேண்டும்; கிடாய் வெட்டினால் தான் அது பூரணத்துவம் பெற்ற திருவிழா வாகும். எதுவுமே இம்முறையும் முடியாதுபோல் தான் இருந்தது.

காலபோகம், இடைப்போகம் என்ற முறையில் இரு தடவைகளும் மிளகாய்க் கன்றுச் செய்கையோ, சிறிய அள வில்தானும் கத்தரிக்கன்றுச் செய்கையோ அல்லது புகை யிலைச் செய்கையோ எதுவும் இல்லாமல் அவரது நிலம் தரிசாகி பரிதாபமாகக் கிடக்கிறது. வெளியில் இருந்தும் கூட ஒரு காகம் குருவியைத்தன்னும் பிடித்துவிட முடிந்தால் தானே!

ஃ ஃ ஃ

தகப்பனும் அண்ணன்மாரும் மறியல் வீட்டுக்குள் இருக்கும்போதே சின்னிப்பெட்டைக்குத் திருமணம் நடந்துவிட்டது.

அவள் வேதத்தில் ஞானஸ்நானம் பெற்று, ஆசீர்வாதப்பர் கோயில் மூப்பர் மகன் சிமியோனை, ஆசீர்வாதப்பர் கோயில் அடுத்தாரில் வைத்து மெய்விவாகத் திருச்சடங்கை செய்து கொண்டாள்.

இந்தத் திருச்சடங்கைச் செய்து வைத்ததில் தம்பனும், சங்கிலித்தாம் இராயப்பனும் மறைவில் இருந்து கொண்டு பூக்கண்டரும் பெரும் பங்கினை எடுத்துக் கொண்டனர். அதோடு மட்டுமல்லாது பெரிய கலட்டியில் உள்ளவர்கள் கிறிஸ்தவர்களாக மாறச் சம்மதித்துள்ளதாகவும், ஞாயிற்றுக்கிழமை தோறும் ஆசீர்வாதப்பர் கோயிலடிக்குச் சென்று ஞான உபதேசம் பெற்று வருவதாகவும், ஊரில் பகிரங்கமாகக் கதை கிளம்பியது. அத்துடன் இரண்டு நாட்களுக்கு முன் தம்பனின் வீட்டுக்குப்பின்னால் உள்ள பூக்கண்டரின் சிங்கப்பூர் மச்சானின் காணிக்குள் காட்டுக் கற்களும் பறிக்கப்பட்டிருந்தன. பெரிய கலட்டிற்குள் வேதக்கோயில் எழும்பப்போகிறதாம்! இது பென்னம் பெரிய கதை! அதிர்ச்சி ஊட்டும் தகவல்தான்,

ஊருக்குள் புதிதாக நியமிக்கப்பட்ட தலைமைக்காரரான குமாரவேலு, தம்பாப்பிள்ளையருக்கும், பூக்கண்டருக்கும் மிக நெருங்கிய துடக்குச் சொந்தக்காரராவர். ஆனால் தம்பாப்பிள்ளையர்தான் விதானையாருடன் அதிக தொடர்பை வைத்துக் கொண்டிருக்கிறார்.

ஒரு நாள் விதானையார் குமாரவேலர் பூக்கண்டர் வீட்டுக்கே வந்து விட்டார். பூக்கண்டர் வீட்டில் இல்லை.

அவர் மனைவி பிள்ளைகள் எல்லோரும் அவருக்கு ராசமரியாதை செய்தனர். விதானையார் தங்களுக்குள்ள உறவு முறைகளை விளங்க வைத்து, பூக்கண்டரை ஒன்று விட்ட தாய் வழியில் முதன் மைத்துனராகவே ஆக்கி விட்டார்.

பூக்கண்டர் தோட்டத்திலிருந்து களைத்துப் போய் வந்திருந்தார். அவரைத் தொடர்ந்து மூத்த மகனும் வந்திருந்தான்.

அன்று தோட்டத்தில் பாத்திகட்டு, வரம்புக்கட்டு, நாளைக்கு நாளுக்கு துலாத் தண்ணி பாய்ச்ச வேண்டும். அதனால் கடுமையான வேலை!

''ஆர், உதிலை வந்திருக்கிறது? விதானையார் போலை கிடக்கு...'' என்றுகேட்டுக் கொண்டே பூக்கண்டர் வந்தார்.

சிமிலி விளக்குத் திண்ணையில் எரிந்து கொண்டிருந் தது. அதற்கு நேரே முக்காலியில் இருந்த விதானையாரின் முகம் நன்றாகத் தெரிந்தது.

''ஓம், மச்சான்! சும்மா இப்பிடி வந்தாப்போலை... பொடி பொட்டையளைப் பாத்துக் கொண்டு போவமெண்டு வந்தனான். ஏன், நான் வரப்பிடாதோ?'' என்ற கேள்வி யுடன் விதானையார் பேசினார்.

பூக்கண்டருக்கு அடிமனதுள் உதைத்தது! ''ஏன் வரப் பிடாது? இருந்து கொள்ளும் வாறன்,'' என்று கூறிக் கொண்டே பூக்கண்டர் கிணற்றடிப்பக்கம் போனார்.

பூக்கண்டர் எதிலும் நிதானமானவர். மற்றவர்கள் பார்ப்பதிலும், பேசுவதிலும் இருந்தே முன் கூட்டியே பேசப் போகும் விஷயத்தை அனுமானிக்கும் ஆற்றல் படைத்தவர்.

''இவன் ஏன் வந்தவன்? வந்ததும் இல்லாமல் முறை யும் கொண்டாடுறான்! விதானை வேலை கிடைச்சும் வருசம் ஒண்டாகப் போகுது; இவ்வளவு நாளும் எட்டிப் பாக்காதவன் வீடு தேடிவந்து முறை கொண்டாடுறான்!'' என்றெல்லாம் கிணற்றடியில் மேல் கழுவும்போதே மனதிற் குள் கேட்டுக் கொண்டார்.

பூக்கண்டர் கிணற்றடியில் நின்று வந்தார்.

''எப்ப, வெள்ளனவோ விதானையார்! வந்தனீர் இண்டைக்குத் தோட்டத்துக்கை வலு வேலை. பாத்தி கட்டு முடிஞ்சு வாய்க்கால் இழுக்க வேண்டியிருந்தது. நாளைக்கு நாளுக்கு வாய்க்காலிலை துலாத் தண்ணிவிட வேணும். துலா உழக்கிறவங்களிட்டையும் போக வேணும். ம்...வந்த விஷயத்தைச் சொல்லும். இஞ்சரப்பா! விதானையாருக்கு ஏதும் தண்ணி வெண்ணி குடிக்கக் குடுத்தியே?'' என்று மனைவியைக் கேட்டபடி நிறுத்திக் கொண்டார்.

''ஓமோம், பெட்டையள் தண்ணி குடுத்தவளவை.'' அடுக்களைக்குள் இருந்து பூக்கண்டரின் மனைவியின் குரல் கேட்டது.

''நான் தலைமைக்காரனாய் இருந்தாலும் உனக்கு நான் மச்சான்தானே காணும். மச்சானெண்டே கூப்பிடு!'' விதானையார் மேலும் வத்தி வைத்தார்.

''சரி, சரி...நான் ஒருக்காத் துலா மிதிப்புக்காறங்களிட்டைப் போகவேணும். வந்த விஷயத்தைக் கெதியாச் சொன்னீர் எண்டா நல்லது'' என்றார் பூக்கண்டர்.

''உனக்குத் துலா மிதிக்கிறதுக்கு ஆள் பிடிக்கிறது பெரிய வேலையோ? பள்ளர் நளவர் உன்னைக் கடவுள் எண்டெல்லே மதிக்கிறாங்கள்! விரலை ஆட்டினா நூறு பேர் வராங்களே! நான் ஒரு முக்கிய அலுவலாய் வந்தனான். எப்பன் உதிலை ஆறுதலாய் இருப்பமே?''

விதானையார் பேசி முடிக்கவும், பூக்கண்டர் ஒட்டுத் திண்ணையில் கைத்துண்டைப் போட்டு விட்டு, உட்கார்ந்து அவரின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்.

சற்று வேளை ஆயிற்று.

''என்ன, ரெண்டு பேற்றையும் குரலைக் காணேல்லை!'' என்று பூக்கண்டர் மனைவி அடுக்களைக்குள் உலைப்பானையில்அரிசியைக் கிளைந்து போட்டுக் கொண்டே கேட்டாள்.

''அவர் என்னோடை என்னவோ கதைக்க வேணும் எண்டு போட்டுப் பேசாமல் இருக்கிறார்; நான் என்னடி ஆத்தை செய்யிறது?'' என்று பூக்கண்டர் அலுத்துக் கொண்டார்.

''மச்சான், எப்பிடிக் கோபதாபம் இருந்தாலும் ஊரோடை பகைச்சுக் கொண்டு வாழ ஏலாது எண்டது உனக்குத் தெரியாததல்ல!!'

விதானையார் பீடிகை போட்டார்.

''அப்பிடி என்ன ஊரோடை பகைச்சுப் போட்டன்! பாவம் அந்த சின்னக் கலட்டி நளப்பொடியளின்ரை கொட்டில்களையும் நெருப்பு வைச்சு, அவள் ஒரு பெண்ணாப் பிறந்தவளையும் சுட்டுக் கொண்டு போட்டாங்கள்; இரணியங்கள்! அந்தரிச்சு வந்தவங்களுக்குக் குடில் கட்டக் காணியைக் குடுத்தன். இது என்ன பிழையோ நீர் சொல்லும் பாப்பம்?'' பூக்கண்டர் விதானையாரைக் கேள்வி கேட்டார்.

''அது சரி காணும்...குடிலுகள் கட்ட இடம் குடுத்ததிலை பிழை ஒண்டும் இல்லை. இப்ப வேதக் கோயில் கட்டக் கல்லும் பறிச்சிருக்கிறாங்களாம்! இது சரியோ சொல்லு பாப்பம்? நாங்கள் ஊரிலை இனிக் கண்முளிக்க ஏலுமே? எங்கடை அடி, கொடி சந்ததியிலை இல்லாத வழக்கம்!''

''வேதக் கோயிலைக்கட்டி எழிய மாடு தின்னியளை ஊருக்கை கொண்டு வந்து சேர்க்கிறதோ.. சொல்லு பாப்பம்? வேதக்காறங்கள் நளவன் பள்ளனை ஏமாத்தி தங்கடை பக்கம் எடுத்துப் போட்டாங்கள் எண்டா நாளைக்கு எங்கடை சொல்லுகளைக் கேப்பாங்களோ...? எங்கடை தொண்டு துரவு செய்ய வருவாங்களோ...யோசிச்சுப் பார்?''

விதானையார் பேசி முடித்தார். பூக்கண்டர் பேசாமலே இருந்தார்.

''என்ன, பூக்கண்டு மச்சான்! அதுதான் நான் சொல்லுறன்; கோயில் கட்ட காணி பூமி குடுக்கப்பிடாதெண்டு!'' விதானையார் தொடர்ந்து பேசி நிறுத்திக் கொண்டார்.

''அது என்ரை காணியில்லை விதானையார்; மச்சான்ரை காணி! அவர்தான் குடுக்கச் சொல்லி காயிதம் போட்டிருக்கிறார்!''

பூக்கண்டர் தற்காலிகமாகச் சமாளிக்கப் பார்த்தார்.

''நீ மாட்டனெண்டா மச்சான் என்ன உன்ரை விருப்பத்துக்கு மாறாச் செய்யப் போறாரே? ஊரிலை இருக்கிறவைக்கு உது விருப்பமில்லை எண்டு மச்சானுக்கு எழுதிப் போட்டால் எல்லாஞ் சரி!'' விதானையார் வழியும் சொல்லி வைத்தார்.

பூக்கண்டருக்கு இதற்கு மேல் பொறுத்திருக்க முடியவில்லை.

''விதானையார், நான் மச்சானுக்கு எழுதித்தான் மச்சான் ஓமெண்டு முற்றுச் சொன்னவர். நான் அந்த முற்றை ஞானமுத்து சுவாமிக்குச் சொல்லிப் போட்டன். இனி நான் மாற மாட்டன். உங்கடை இந்த வில்லங்களிலை இருந்து, நளவன், பள்ளன், பறையன், வண்ணான், அம்பட்டன் இதாலை விடுபடுவாங்கள் எண்டால் அவங்கள் கோயில் கட்டட்டன். உங்களுக்கு என்ன இடைஞ்சல்? ஏன் விதானையார், இளவாலையிலை, பண்டத்தரிப்பிலை, சில்லாலையிலை, அச்சு வேலியிலை... இப்பிடிப் பல இடங்களிலை வெள்ளாளரும் வேதத்திலை சேருகினம். ஏன், உந்த உப்புமாலடியிலை, நவாலியிலை, நாவாந்துறையிலை, ஆனைக்கோட்டையிலை இருக்கிற கரையான், திமிலன், முக்கியன் எண்டு பல சாதியளும் சேந்திருக்கினம். அதுக்கென்ன இவங்கள் சேந்தா? சும்மா வேலை மினக்கெட்டு உதைக் கதைக்க வந்திட்டியள்? எனக்குத் தெரியுது விதானையார், தம்பாப்பிள்ளைக் கமக்காரன்தான் உம்மைப் பிடிச்சு அனுப்பியிருக்கிறாரெண்டு.

உவர் இளந்தாரியிலை செய்த அக்கிரமங்கள் பத்தா தெண்டு இப்பவும் செய்யப் பாக்கிறார். எனக்கு நல்லாத் தெரியும் விதானையார். செல்லியைக் கொல்லிறதுக்கு உவர்தான் துவக்குக் குடுத்து அனுப்பினதெண்டு! முந்தின விதானையும் உவராலைதான் செத்ததெண்டு எல்லாருக் கும் தெரியும்! பூக்கண்டன் தப்பிலி இல்லைக் கண்டியோ? சொன்னாச் சொன்னதுதான்! காணியை நான் மறிக்க மாட்டன்.''

பேசிக் கொண்டே பூக்கண்டர் எழுந்து முற்றத்திற்கு வந்துவிட்டார்.

இதற்கு மேல் விதானையார் அங்கு இருக்க நியாயம் இல்லை. ஆயினும் அவர் இருந்தார். கல்லாகச் சமைந்து போய் இருந்தார்.

**கோ**வில் அத்திவார வேலை முடிந்து கட்டுவேலைகள் ஆரம்பித்து விட்டன!

சந்தியாம்பிள்ளை உபதேசியார் மேற்பார்வையில் கண்டக்கல் அத்திவார வேலைக்கு மேலாக முருகைக்கல் மட்ட சுத்தம் செய்யப்பட்டு, சின்னஞ்சிறிய அந்த அத்திவாரத்தின் மேல் சுமார் ஒன்றரை முழம்வரை ஒரே நாளில் சுற்றிவர வளர்ந்து விட்டது.

மறு நாள்...

ஆசீர்வாதப்பர் கோயிலடியில் இருந்து மேசன்மார் நால்வர் வருகை தர சுண்ணாம்பு மணல் கலவையை பெரிய கலட்டியே சேர்ந்து குழைத்துக் கொடுக்க, கட்டிடம் சுற்றிவர ஆள் அளவு உயரம் உயர்ந்துவிட்டது.

மாலை இருட்டும் வரை எல்லோரும் வேலை செய்தார்கள்.

மத்தியான உணவாக எல்லோருக்கும் அளித்த மரவள்ளிக் கிழங்கும், பசளிக் கறியும், மிளகாய்ச் சம்பலும் கிடைத்தது.

இருட்டிவிட்ட நேரம் ஞானமுத்துச் சுவாமியார் வில்லு வண்டியில் வந்து சேர்ந்தார். இரண்டு நாளில் இவ்வளவு தூரம் அது வளர்ந்து விடும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை.

'அதி விரைவில்- அடுத்த மாத நடுப்பகுதிக் கிடையில் கோவில் திருப்பூசைப் பலியை நடத்திவிட வேண்டும்' என்பது அவர் ஆசை!

வேலை செய்தவர்கள் எல்லோரையும் உற்சாகப்படுத்தி விட்டு, அவர் வண்டி கிளம்பும்போது இருட்டிவிட்டது.

''சுவாமியை இந்த நேரத்திலை தனியப் போக்காட்டிறது சரியில்லை'' என்று தம்பன் அபிப்பிராயப்பட்டான். ஊர் இருந்த நிலைமையை அவதானித்துத்தான் தம்பன் இந்த அபிப்பிராயத்தைச் சொன்னான்.

ஞானமுத்து சுவாமியாருக்கு தம்பனின் அபிப்பிராயம் சரியென்று பட்டாலும், சுய தைரியம் அவரிடம் மேலோங்கி இருந்தது. எப்படியும் தான் அறை வீட்டுக்குப் போய்த் தான் தீர வேண்டும் என அவர் முடிவு செய்துவிட்டார்.

விடிந்தால் ஞாயிறு.

சுவாமியாரின் இந்த முடிவுக்கு யாரும் குறுக்கே நிற்கவில்லை.

வண்டி புறப்பட்டுவிட்டது.

வண்டிக்குள் உபதேசியார் உட்பட மூன்று இளவட்டன்களும் ஏறிக் குந்திக் கொண்டனர். வழமையாக சுவாமியாருடன் சேர்ந்தே எல்லா இடங்களுக்கும் போகும் சங்கிலித்தாம் இராயப்பனும், சிமியோனும் இன்று இல்லை.

சதுரக்கள்ளி ஒடைக்கூடாக வண்டி ஒரு மைல் தூரம் சென்றிருக்கும்.

அப்போது......

வண்டியைச் சுற்றிக் கல்லெறிகள் நாலா பக்கத்திலிருந்தும் வந்து விழுந்தன. வில்லுத் திருக்கல் வண்டி மாடுகள் வெருண்டு வெருண்டு பாய்ந்து ஓடின.

முன்னுக்கும், பின்னுக்குமாக எறிகள் தொடர்ந்து விழுந்தன.

உபதேசியாரின் முழங்காலிலும் பலமாக எறி!

சுவாமியாரைக் கல்லுகள் தாக்காமல் மற்றவர்கள் வளைத்துக்கொண்டு இருந்தனர்.

வண்டி பறந்தோடியது.

கல்லு, முடக்குகள், பள்ளங்கள் ஆகியவைகளைத் தாண்டி, பாய்ந்து ஓடியது.

எறிகள் ஓய்ந்து போயின.

''பிள்ளைகளே! பயப்படத் தேவையில்லை. இந்தக் கரடு முரடான பாதையைத்தாண்டித்தான் எமது பாதை சிறிது காலம் போகும். இவைகளை எதிர்நோக்கும் மனப் பக்குவம் உள்ளவர்கள்தான் உண்மையான, கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களாக இருக்கமுடியும்.''

சுவாமியார் வண்டில் சீரான பாதைக்கு வந்து அமைதி யானதும் இப்படிக் கூறினார். தனது கரங்களை மற்றவர் களின் தலைகள்மேல் வைத்து அவர்களை நிதானப் படுத்தினார்.

வண்டி சவேரியார் கோயில் அறை வீட்டுக்குச் சென்ற டைய நேரம் அதிகமாகவில்லை. ஆயினும் சுவாமியார் வழித் துணைக்கு வந்தவர்களை இரவு அறை வீட்டு விறாந்தையில் உறங்கிவிட்டு விடிந்ததும் போகும்படி பணித்தார்.

உபதேசியார் காலில் கல்லடிபட்ட இடத்திலிருந்து கசிந்த இரத்தத்தை, சுவாமியாரிடம் இருந்து வெள்ளைத் துணியை வாங்கி ஒற்றி எடுத்துக் கொண்டிருக்கும் போது, அறை வீட்டுக்குக் பின்பக்கம் போன பாதிரியார் கையில் சில பச்சிலைகளுடன் திரும்பிவந்து அதைப் பிழிந்து காயத்துக்குக் கட்டும்படி கூறினார்.

பச்சிலை மிகவும் கடுமையாக எரித்திருக்க வேண்டும். உபதேசியார் பற்களைக் கிட்டிக் கொண்டு அதைச் சமாளித்தார்.

''யுவானி, வந்திருக்கிற பிள்ளையருக்கு ஏதும் சாப் பாடு சரிக்கட்டிக் தடு. அவர்கள் இராவைக்கு இங்குதான் தங்கப் போகினம்!'' சுவாமியாரின் சத்தம் உள்ளே இருந்து கேட்டது.

குசினிக்குள் சமையல் அரவம் தடல்புடலாகக் கேட்டுக் கொண்டு இருந்தது.

அறை வீட்டுச் சுவர்க் கடிகாரம் பத்துத் தடவைகள் அடித்து ஓய்ந்த போது, யுவானி சாப்பாட்டுத் தட்டுகளுடன் வந்து சேர்ந்தான்.

ஒவ்வொரு தட்டிலும் உதிர்ந்துவிட்ட சோறு ஆவி பறக்க குவிநதிருந்தது.

தக்காளிப் பழச்சாம்பாரும், மரவள்ளிக் கிழங்குத் தூள் கறியும் யுவானி சோற்றுக்கு மேல் பரவலாக ஊற்றினான்.

அந்த மங்கிய சிமிலி விளக்கின் ஒளியில் அவன் அவர் களை ஒவ்வொருத்தராகப் பார்த்தான. எல்லோரும் செம் புழுதிக் கோலத்தில் இருந்தார்கள்.

உபதேசியார் குசினிக்குள் போய்விட்டார்.

தக்காளிச் சாம்பாரும், கிழங்குப் பிரட்டலும், உவிய விட்ட சோறும் வாய்க்கு மிக இதமாக இருந்தது. சாப்பாடு மட்டுமட்டு என்பதல்ல; எல்லோருக்கும் தாராளமாகவே கிடைத்தது.

யுவானி சாப்பாட்டு ஏதனங்களை எடுத்துச் சென்ற சிறிது நேரத்தில் பழம் சுருள் பாய்களை ஆளுக்கு ஒவ்வொன்றாகக் கொடுத்துச் சென்றான்.

அறை வீடு நிசப்தமாக இருந்தது.

சவேரியார் கோயில் கட்டிடம் இருளோடு இருளாகத் தெரிந்தது. அங்கே ஒளிக் கீறல்கள் எதுவுமே இல்லை.

மூவருக்கும் தூக்கம் பிடிக்கவில்லை. சிமிலி விளக்கை யும் யுவானி வந்து எடுத்துச் சென்றான்.

அறை வீட்டுக்குள் இருந்து ஒளிக் கீற்றொன்று யன்னல் நீக்கல் ஊடாக வெளியே தெரிந்தது. அவர்களில் ஒருவன் எழுந்து சென்று திருட்டுத்தனமாக நீக்கலால் உள்ளே பார்த்தான்.

ஞானமுத்து சுவாமியார் முழங்காலில் இருந்து மௌன மாக கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தார்.

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. சற்று முன் தங் களின் தலையில் கையை வைத்து தைரியப்படுத்தியவர் இப்போது கண்ணீர் விட்டு அழுகிறாரே!

அவர் நெற்றிக்கு மேலாக உயர்ந்திருந்த சிலுவையில் அறையுண்ட கோலத்தில் இருந்த யேசுவை நோக்கிக் கொண்டே அழுகிறார். அவன் மெதுவாகப் பின் வாங்கி மற்றவர்களின் காதுக்குள் ஏதோ சொல்லி அவர்களையும் அழைத்துக் கொண்டு சுவாமியார் கண்ணீர் விடும் அந்தக் காட்சியைக் காட்டினான்.

அவர்களுக்கும் ஒன்றும் புரியவில்லை.

''மெய்யான தேவகுமாரனே! தெரியாமல் செய்பவர் களின் தவறுகளை மன்னியும், துன்பப்படுகிறவர்கள் மேலே இரக்கமாயிரும்.''

மெதுவாக சுவாமியார் இப்படிக் கூறி முடித்துவிட்டு வலக்கரத்தால் நெற்றியிலும், நெஞ்சிலும், இரு தோள் மூட்டுகளிலும் தொட்டு வணக்கத்தை முடித்துக் கொண்டு, கட்டிலில் உட்கார்ந்து, சிமிலி விளக்கை அணைத்துக் கொண்டார்.

இவர்களும் படுத்துக் கொண்டனர். ஒருவித சிக்கலு மின்றி நித்திரை வந்துவிட்டது.

அதிகாலையோடு கோவிலின் திருத்தாதி மணியை உபதேசியார் அடித்த போது இவர்கள் கண் விழித்தார்கள்

யுவானி வந்தான்!

''வெளியிலை போறதெண்டா போட்டு வந்து முகத்தைக் கழுவுங்கோ தம்பியவை.'' என்று முன்னால் சற்றுத் தூரத்தில் இருந்த வடலியைக் காட்டிச் சென்றான். அவரும் வடலிப் பக்கம் போய்வர சிறிது நேரமாகிவிட்டது.

கிணற்றடியை யுவானி காட்டிவிட்டு சென்றான். தாங்கள் துலாக் கொடியைப் பிடித்துத் தண்ணீர் அள்ள லாமா? அந்நிய இடங்களில் துலா மிதித்துப் பழக்கமே தவிர துலாக்கொடி பிடித்ததில்லை. பிடிக்கவும் முடியாது.

யுவானி திரும்பவும் வருவான்; தண்ணீர் அள்ளி வார்ப் பான் என்றுதான் அவர்கள் நினைப்பு.

யுவானி வரவில்லை.

ஒருவன் ஓலைவடத் துலாக் கொடியைப் பிடித்துத் தாழ்த்தினான். அவன் கரம் நடுங்கியது.

''தம்பியவை வந்து கோப்பியைக் குடியுங்கோ! இண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை. இஞ்சைதான் இண் டையப் பூசை நடக்கும். ஆசீர்வாதப்பர் கோயில் கிறிஸ்தவர்களும் வருவார்கள். நிண்டு பூசையைக் கண்டு கொண்டு போங்கோ!'' யுவானி சொல்லிவிட்டு குசினிக்குள் போய்விட்டான்.

இவர்கள் அறை வீட்டிற்கு வரும் போது யவானி மூன்று குண்டுக்கோப்பைகளில் நிறையக் கோப்பியுடன் வந்து சேர்ந்தான். இப்படிப் பூப்போட்ட குண்டுக்கோப் பைகளை அவர்கள் பல நயினர்ா வீடுகளில் தான் கண்டிருக் கிறார்கள். அவைகளை இவர்கள் ஒருநாளாவது தொட் டும் பார்த்ததில்லை.

''குடியுங்கோ, தம்பியவை!'' என்று கூறிவிட்டு யுவானி போய்விட்டான்.

அவர்கள் உடம்பெல்லாம் புல்லரித்தது!

முதலாம் மணி ; இரண்டாம் மணி...... மூன்றும் மணி அடித்து ஓய்ந்த போது பல பக்கமாக திருப்பூசைக்கென கிறிஸ்தவர்கள் வந்து சேர்ந்தனர்.

கோவில் முகப்பில் மூவரும் நின்றனர். சற்றுத் தொலைவில் ஒரு இளங் குடும்பம் வருவது தெரிந்தது.

அவர்கள் திகைத்துப் போய்விட்டனர்! வருபவள் சின்னிப் பெட்டையும், அவள் புருஷன் சிமியோனும்.

சின்னிப் பெட்டையா இப்படி இருக்கிறாள்?

மேல் சட்டை, தாவணியுடன்...

மினு மினுப்பாக இருந்தாள்!

எவ்வளவு எடுப்பாக இருக்கிறாள்!

அவளை அந்தக் கோலத்தில் காணப் போகிறோம் என அவர்கள் கற்பனை கூடப் பண்ணவில்லை.

''என்ன திரேசி பூசை துவங்கப் போகுது; சிமியோன் உள்ளுக்குப் போங்கோ; ஆயத்தமணி அடிச்சுப் போட்டு வாறன்'' என்று கூறிக் கொண்டே உபதேசியார் மணிக் கூட்டடி மரத்தடிப் பக்கம் போய்விட்டார்.

அவள் பெயர் இப்போது திரேசி!

பழைய சின்னி அல்ல.

மூவரும் திரேசியைப் பார்த்துச் சிரித்தனர். ''அண்ணன், எப்ப வந்தனீங்கள்?'' என்று சிமியோன் கேட்டான்.

திரேசி தலை கவிழ்ந்து நின்றாள்!

பழைய அதே வெட்கம்!

அதே சொண்டுக்குள்ளான சிரிப்பு!

''நேற்றுக் கல்லடுக்கிறதுக்கு நானும் சங்கிலித்தாமும் வரவெண்டுதான் இருந்தனாங்கள். பிறகு இடையிலை சுவாமி ஒரு அலுவலாப் பிடிச்சு விட்டிட்டார். அதுதான வரேல்லை. இண்டைக்கு ஓய்வு நாள்; வரமாட்டம். நாளைக்கு இன்னும் ரெண்டு மூண்டு பேரோடை வாறம். குறைகிறை நினைக்க வேண்டாம்'' என சிமியோன் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.

ஆயத்தமணி அடிக்கப்பட்டது.

திருப்பூசைப்பலி தொடங்கப் போகிறது.

சுவாமி அடுத்தாருக்குப் போவது தெரிந்தது,

அடுத்தாரை மூடியிருந்த திரை நீக்கலுக்கூடாக அது தெரிந்தது.

சந்தியாப்பிள்ளை உபதேசியார் செபமாலையும், காரணிக்கமும் சொல்லத் தொடங்கிவிட்டார்.

வழமையாக சங்கிலித்தாமுடைய வேலையை இன்று உபதேசியார் செய்கிறார்.

சவேரியால் கோயில் சங்கிலித்தாம் ஆசீர்வாதத்திற்கு காலை இருந்தாற் போல் சுகயீனம் கண்டிருந்ததால் உபதேசியாரே அந்தப் பணியை செய்யவேண்டியதாயிற்று. திருப்பூசை முடிய எட்டுமணிக்கு மேலாகிவிட்டது.

சுவாமி அறை விட்டுக்குப் போய்விட்டார். உபதேசியாருக்குச் சொல்லி விட்டு மூவரும் புறப்பட்டனர்.

''உந்த நயினார்மாரும், வடுகுகளும் செய்யிறதைச் செய்து பாக்கட்டுக்கு; கோயில் கட்டி முடிக்காமல் விடுறேல்லை.''

''கட்டிறதுமட்டுமில்லை மச்சான்; எல்லாரையும் வேதத்திலை சேத்து விடவும் வேணும்.''

''கமக்காறப்பிள்ளையள் என்ன கடிச்சே திண்டிடுவினம்; பாப்பம்!''

போகும்போது அவர்கள் மூவரும் ஆளுக்கொரு முறை பேசிக்கொண்டனர்.

வேலனும், முருகனும், கணவதியனும் ஊருக்குள் வந்திருந்தபோது கோயிலடிக் கட்டிடத்தைச் சுற்றி பெரும் கூட்டம் நின்றது.

என்னவோ, ஏதோ என்று அங்கலாய்த்துக் கொண்டே மூவரும் ஓடிவந்தனர்.

அத்திவாரத்திற்குமேல் முதல்நாள் அடுக்கப்பட்டிருந்த கற்கள் எல்லாமே தாறுமாறாக தள்ளி வீழ்த்தப்பட்டிருந் தன.

தம்பன் எல்லோரையும் ஆசுவாசப்படுத்திக் கொண்டிருந்தான். இரவு பெரிய கலட்டி. நல்லுறக்கத்திலிருந்த போது இந்த நாசவேலை நடந்திருக்கிறது.

"எட, முருகன்! இது தம்பாப்பிள்ளையன்ரை வேலை தான்ரா; வாடா, வெளிக்கிடடா கணவதி; அவன்ரை தலையை எடுத்து வருவம்! அப்பிடிச் செய்தாத்தான்ரா நாங்கள் ஆம்பிளையள்!" என்று கூறிக் கொண்டே வேலன் தன் குடிசைக்குள் புகுந்து ஓலை வெட்டுக் கத்தியை எடுத் துக் கொண்டு வெளியே வந்தான்.

முருகனும், கணவதியனும் தங்கள் தங்கள் வீடுகளுக்கு ஓடிச் சென்றனர். தம்பன் திடுக்கிட்டு விட்டான்!

இந்த வேளை இந்த மூவரையும் எப்படிச் சமாளிப்ப தென்றே அவனுக்குத் தெரியவில்லை. எப்படியும் சமாளித் துத்தான் ஆக வேண்டும். என்ன செய்யலாம?

கணவேளைக்குள் முருகனும், வேலனும், பள பளப் பாகத் தீட்டப்பட்ட கத்தியோடு வர, கணவதியன் கைக்கள வான சிறு கம்பி ஒன்றுடன் வந்து சேர்ந்தான்,

தம்பன் திடீரென தனது அரையில் கட்டி இருந்த நலமுண்டுத் துண்டினை அவிழ்த்து குறுக்கே போட்டு,

''நீங்கள் ஆரெண்டாலும் போறதெண்டா என்ரை இந்தச் சால்வையை கடந்து போட்டுப் போங்கோ!'' என்று கத்தினான்.

தோளில் போடும் சால்வையை கடந்துவிட்டுப் போனால் அது அந்தச் சால்வைக்காரனைக் கொன்றது போலாகும்,

தம்பன் இப்படி சம்பிரதாயமான ஆணையை இட்டு விட்டான்.

சற்றுவேளை, மூச்சு விட்டால் கேட்கக்கூடிய அளவு நிசப்தம் நிலவியது.

தம்பன் ஆணையிட்டுவிட்டான். அதை மீறிப் போகும் துணிச்சல் அந்த மூவரில் யாருக்குமே வரவில்லை.

முகத்தைத் தொங்கப்போட்டு, நெற்றிக்கு முண்டு கொடுத்து, சிதறிக் கிடந்த கற்களுக்கு மேல் மூவரும் வாயடைத்துப் போய் இருந்தமை பார்ப்பவர்களுக்குப் பரி தாபமாக இருந்தது.

ஆண்கள், கிழடு கட்டைகள், பிள்ளைகுட்டிகள் எல் லோரும் அந்த சோக நிலைக்கு வயப்பட்டு நின்றனர்.

''தம்பாப்பிள்ளையற்றை தலையை வெட்டிறது கெட் டித்தனமில்லையடா தம்பியவை! எடுத்த கருமத்தை முடிக்கி றதுதான் பெரிய கெட்டித்தனம். கோயிலைக் கட்டி முடிக் கிறதுதான் நாங்கள் செய்யிற முதல் வேலையாய் இருக்க வேணும். ஒழும்புங்கோ, அவரவரே போங்கோ! நான் சுவாமியிட்டை போய் விஷயத்தைச் சொல்லிப் போட்டு வாறன்'' என்று தம்பன் கூறிப் புறப்பட்டபோது, ''ஏன்ரா தம்பியவை; முதல் ஒருக்கா தலைமைக்காறனிட்டை சொல்லிப்போட்டுப் போனா என்ன?'' என்று ஒரு கிழவன் கேட்டான்.

தம்பனுக்கு அதுவும் சரியாகவே பட்டது.

கிழக்குப் புறப் பனைவெளிக்கூடாக தோட்டத்தி லிருந்து பூக்கண்டர் மண்வெட்டியுடன் வீட்டுக்குப் போவது தெரிந்தது.

அவருக்கு ஒன்றுமே தெரியாது.

நிலவு பட்டுக் கொண்டிருந்தபோது தோட்டத்திற்குப் போனவர். புதுப்பாத்திச் சாறல் முடிந்து இப்போதுதான் வருகிறார்.

கூட்டத்தைக் கண்டுவிட்டு அவர் அங்கு வந்து சேர்ந்தார். அவருக்கு முன்னால் எல்லோரும் மௌனமாக நின்றனர்.

''தம்பி, நயினாரவை இப்பிடிச் செய்து போட்டினம். அதுதான் தலைமைக்காரனிட்டை சொல்லுவமெண்டு வெளிக்கிட்டனான்.''

தம்பன் இந்தத் தகவலை பூக்கண்டருக்குச் சொன்னான். பூக்கண்டர் சிறிது வேளை யோசித்த பின்னர் சொண்டுக்குள் சிரித்துக் கொண்டார்.

''தம்பன், நீ நினைச்சுக் கொண்டாய்; விதானை உங் கடை பக்கத்துக்கு நிண்டு அலுவல் பாப்பானெண்டு? மோட்டுத் தனமான யோசினையை விட்டுப்போட்டு வேறை ஏதும் செய்யிறதைச் செய்யுங்கோ! நான் இதிலை நிண்டு சொல்லிறன். நான் உயிரோடை இருந்தா என்ன: இல்லாட்டி என்ன; பின்னடிக்குக் கேள்விப்படுவியள்; உவன் விதானையும் சேந்துதான் உந்த வேலையை செய்தவனெண்டு! அந்தப் பொறுக்கித் தின்னியிட்டை சொல்லுறதைவிட, சுவாமியாரிட்டை முதல்போய் சொல்லுங்கோ! அந்தாள் ஏதும் அலுவல் பாக்கும்!''

பூக்கண்டர் பேசி முடித்து விட்டு வீட்டை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்.

தம்பனும் சதுரக் கள்ளிக்கூடாகப் போய்க் கொண்டிருந்தான். அவன் ஞான முத்தரிடம்தான் போகிறான்.

மதியப் பொழுதிற்குச் சற்றுப் பின்னதாக ஞானமுத்துச் சுவாமியின் வண்டி வந்தது. வண்டியிலிருந்து

சுவாமியாரும் சந்தியாம்பிள்ளை உபதேசியாரும், சிமி யோனும், தம்பனும் இறங்கினர்.

சுவாமியார் கட்டிடத்தைச் சுற்றிப் பார்த்தார்.

''பிள்ளைகளே, இனிமேல் என்ன செய்யலாம் எண்டு யோசிக்கிறியள்?'' என்று எல்லோரையும் பார்த்து ஒரு கேள்வியை போட்டார்.

''யோசிக்கிறதுக்கு இனி ஒண்டுமில்லை. சுவாமி, எத்தனை இடைஞ்சல் வந்தாலும் கோயிலை கட்டிற தெண்டுதான் முடிவெடுத்திருக்கிறம். அதுவும் போக ஒரு குஞ்சு குருமான் தவறாமல் அந்தக் கோயிலிலை சேருற தெண்டும் முடிவெடுத்திட்டம்,'' என்று கணவதியன் பதில் சொன்னான்.

''அப்பிடியென்றால் பிள்ளைகளே! நாளைக்குத் தொடக்கம் ஆசீர்வாதப்பர் கோயில் கத்தோலிக்கர்களை யும் இங்கே வேலை செய்யக் கூப்பிடுவோம். எல்லோரு மாகச் சேர்ந்து ஒரு பத்துப் பதினைஞ்சு நாளைக்கிடை யிலை கோயிலை முடிச்சுப் போடலாம். வாறமாதம் முதல் பூசைப்பலியை நடத்துவம். ஒவ்வொருநாளும் உபதேசி யார் இங்கை வந்து ராவிலை தங்குவார். உங்கள் எல்லோருக்கும் வேதம் சொல்லித் தருவார். நீங்கள் ஒன்றுக்கும் பயப்படத் தேவை இல்லை. எல்லாம் வல்ல யேசு உங்களைக் காத்து ரட்சிப்பார்!'' என்று சொல்லி முடித்து விட்டு சுவாமியார் வண்டிலடிக்குப் போனார். உபதேசியார் பின்னே சென்றார்.

''நேற்றையப்போலை மறிச்சுக் கிறிச்சு எறிவாங்கள். நாங்களும் துணைக்குப் போய் வருவம்'' என்று கூறிக் கொண்டே வேலனும், முருகனும், கணபதியும் புறப் பட்டனர்.

வண்டி கள்ளி ஒழுங்கை ஊடாகச் சென்று பெரு ஒழுங்கை தாண்டும் வரை அவர்கள் போனார்கள்.

பின்பு சுவாமியாரின் வற்புறுத்தலால் அவர்கள் திரும்பி விட்டனர்.

மறுநாட்காலை ஆசிர்வாதப்பர் கோவில் கிறிஸ்தவர் களே திரண்டு பெரிய கலட்டிக்கு வந்துவிட்டனர்.

வந்தவர்களில் சிமியோனும் அவன் மனைவியான சின்னிப் பெட்டையும் இருந்தனர். அவள் இப்போது சின்னிப் பெட்டையல்ல; அவள் பெயர் திரேசி!

நான்கைந்து தடவை சங்கிலித்தாம் இராயப்பன் அவளை திரேசி, திரேசி என்று அழைத்து எல்லோர் மன திலேயும் திரேசி என்ற பெயரைப் பதியவைக்க முற் பட்டான்.

திரேசியினுடைய நடை, உடை பாவனையைப் பார்த்து பெரிய கலட்டியே மூக்கில் விரல் வைக்கிறது! வயதான சில கிழவிகள் அவள் முகத்தைத் தடவி, நெட்டி முறித்து நாவூறு கழித்துக் கொண்டனர்.

திரேசி எல்லோரிடமும் மிகப் பணிவாக நடந்தாள். பழைய துடுக்குப் பேச்சு அவளிடம் இல்லை.

கட்டிட வேலைகள் நடந்து கொண்டிருந்தபோது எல்லோருக்கும் தலைச்சியாக ஓடி ஆடி வேண்டிய வேளை வேண்டியவைகளைச் செய்து, குழந்தை குஞ்சுகள் சகலதை யும் உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தாள்.

மத்தியானம் ஆயிற்று.

எல்லோருக்கும் மதியச் சாப்பாடாக குரக்கன் பிட்டும், இலைக்கறியும் அயிரை மீன் சாம்பாரும் இருந்தது,

இரண்டு பெண்களையும் அழைத்துக் கொண்டு திரேசி பெரியகலட்டி, சிறிய கலட்டி எல்லையோடிருக்கும் நிலா கிணற்றடிக்கு தண்ணீருக்குப் போனாள்.

அப்போதுதான் ஊரின் நயினார் வீட்டுச் சாவீட்டுக்குப் போய்விட்டு ஐந்தாறு நயினாத்திகள் பெரு வரம்பால் நிரைக்கு வந்தனர்.

வெறும் தாவணி அணிந்தவர்கள் இருவர்; மேல் சட்டை போட்டுத் தாவணி அணிந்தவர்கள் மூவர்.

''ஆரடி, அதிலை தாவணியோடை தண்ணி அள்ளிறவள்?''

''ஆரெண்டு தெரியேல்லை; மற்றவளவை பள்ளியள்! இவள் ஆரெண்டு தெரியேல்லை. பள்ளியளுக்கை தாவணிக்காறி ஆரடி?''

''ஓமெடி. விண்ணாணமாக்கிடக்கு; ஆரடி அவள்?''

''அடி, எடி... விதானையாரைக் குத்திப்போட்டு தூக்குக்கு தீந்திருக்கிற நன்னியன்ரை மோள். அதுதானடி செல்லம்மா வீட்டி குடிமையாய் இருந்து போட்டுப் போனவள்.''

''எடி, அவளே! செல்லம்மாளின்ரை இளையவனைக் கெடுத்துப் போட்டாளெண்டு கலைச்சுவிட்டாயே! அவளோடி? எடி எப்பவடி இவள் தாவணி போடத் துவங் கினவள்? இறவுக்கையுமெல்லை போட்டிருக்கிறாள்!''

''ஆரோ ஒரு வேதக்காறனை முடிச்சவளாம். அங்கை இவளவையைத் தாவணி போட விட்டிட்டாங்கள். அவள் இப்ப இஞ்சை வந்திருக்கிறாள் போலை கிடக்கு.''

''போடிறதெண்டா அவள் அங்கை போடட்டுக்கு. இஞ்சைபோடேலாது. ஒருக்காத் தம்பாப்பிள்ளை அம்மா னையும் விதானையும் கேட்டுப் பாப்பம்.''

இந்தச் சம்பாஷனைகளை திரேசி அவதானித்தாள். இலேசாக அவைகள் கேட்டன.

மூவரும் தண்ணீருடன் திரும்பிவிட்டனர்.

திரேசிக்குத் தெரிந்து விட்டது; தன்னால் இன்னொரு கலம்பகம் தொடங்கப் போகிறதென்று.

மதிய உணவு ஆயிற்று!

இரவு வந்தது.

வேலைகள் பெருமளவுக்குச் சென்று விட்டன.

முந்தநாளையைவிட இரண்டு வரிகள் உயர்ந்து விட்டன.

பனை வெளிக்குள் இரவுச் சமையல் நடந்தது.

பெரிய கலட்டிக்காரர் வீடுகளுக்குச் சாப்பிடப் போய் விட்டனர்.

வெளியே இருந்து வந்தவர்களுக்காக சமையல் நடக்கிறது.

பூக்கண்டர் வீட்டில் இருந்து அரிசி, காய்கறிகள், வந்ததாகப் பெண்கள் குசு குசுத்துக் கொண்டனர்.

சமையல் மும்முரமாக நடந்து கொண்டிருந்தபோது பூக்கண்டர் வந்தார்.

எல்லோரும் எழுந்து நின்று அவரைக் கௌரவித்தனர்.

''இருங்கோ, பொட்டையள்!'' என்று கையமர்த்தி விட்டு, பூக்கண்டர் தறித்துப் போடப்பட்டிருந்த பனை மரத் தலையாடிக் குற்றியில் உட்கார்ந்து கொண்டார்.

சமையல் அடுப்புகளில் நெருப்புகள் மு ள ா சி எரிந்தன.

''பகல் இங்கினேக்கை ஏதும் விஷேசம் நடந்ததோ தம்பன்?'' பூக்கண்டர் கேட்டார்.

''அப்பிடி ஒண்டும் நடக்கேல்லைத் தம்பி!''

''தம்பாப்பிள்ளையர் வீட்டிலை சனக்கூட்டமாக் கிடக்கு. பெண்டுகள் கனக்க நிக்கினம். விதானையும் உள்ளுக்குப்போனவன். நான் வரேக்கை கண்டு கொண்டு வாறன்... அதுதான் கேட்டனான்.''

பூக்கண்டர் பேசியது திரேசிக்கு கேட்டது. அவள் வெளியே வந்தாள்.

தன் முன் ஒரு தாவணிக்காரி நிற்பதை அப்போது தான் பூக்கண்டர் கண்டார்.

''ஆரது, உதிலை நிக்கிறது? எட, எங்கடை நன்னியன்ரை சின்னிப்பெட்டை போலை கிடக்கு! நீ வேதத்திலை கலியாணம் முடிச்சுப் போனாப் பிறகு, நான் இண்டைக்குத்தான் காணிறன். பிள்ளை மனிசனும் வந்தவனோ? அவனை எனக்குத் தெரியாது!''

பூக்கண்டர் பேசி முடிக்கும் முன், ''தம்பி சிமியோன்! இப்பிடி வா! தம்பி பாக்கப் போறாராம்.'' என்று தம்பன் கூறவே, பின்பக்கத்தில் நின்ற சிமியோன் முன்னே வந்தான்.

இருவரும் பூக்கண்டர் முன் நின்றனர்.

ஏனோ தெரியாது, பூக்கண்டர் தன்னாலேயே எழுந்தார்.

''புள்ளை, நீ நல்லாய் இருப்பாயடி!'' என்று கூறி திரேசியின் தோள் முட்டை தட்டிவிட்டு, ''பொடியன், உன்னை எனக்கு முன்பின் தெரியாது மோனை! இவள் தங்கப் பவுணான பொட்டை! இவளுக்காகத்தான் நன்னியனும் மக்களும் தூக்குக்கு நியமிக்கப்பட்டிருக்கிறாங்கள்! இவளுக்கு ஒண்டும் குறைவராமல் பாத்துக் கொள் மோனை!'' என்று கூறி அவனது தோளிலும் தட்டிவிட்டு அவர் உட்கார்ந்து கொண்டார். கூட இருந்தோர் எல்லோர் கண்களும் கலங்கின.

நன்னியனின் மூத்தவனின் மனைவி எடுக்குப் பிள்ளையுடன் முன்தானையால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

சொற்ப வேளை யாரும் பேசவில்லை.

''இவள் பொட்டையை தாவணியோடை ஆரோ வெள்ளாளச்சியள் கண்டிருக்கிறாளவை. அதுதான் தம் பாப்பிள்ளையர் வீட்டிலை சனம்! இப்ப விளங்குது தம்பன்! ஏன், மோனை உன்னை ஆரும் கண்டவளவையே?''

பூக்கண்டர் திரேசியைக் கேட்டார்.

''அப்போதை மத்தியானம் தண்ணி அள்ளப்போ கேக்கை, பெரிய வரம்பாலை ஐஞ்சாறு நயினாத்தியள் வந்தவை; என்னைக் காட்டிக் காட்டி ஏதோ பேசிக் கொண்டுபோனவை.''

திரேசி சொல்லி முடித்தாள்.

''பாத்தியே தம்பன்! நான் சொன்னது சரியாப் போச்சு. நளத்தி தாவணி போட்டிட்டாள் எண்டு நயினாத் தியளுக்குக் கோவம் வந்திட்டுது. இப்ப இதிலை பொண்டு கள் இல்லாட்டிச் சொல்லுவன். உவளவயின்ரை நளம், பள் கள்ளப் புருஷன்மார் எத்தினை எண்டு!''

''சரி, தம்பன் அது கிடக்குட்டுக்கு. எப்பன் கவனமாய் இருங்கோ, நன்னியன்ரை பெட்டை தாவணி போட்டதுக்கு ஒரு சண்டை வந்தாலும் வரும்! இந்த இரணியச்சாதி என்ன செய்யவும் பின் நிக்காது... அப்ப நான் போட்டு வாறன்,'' என்று சொல்லிக் கொண்டே பூக்கண்டர் எழுந் தார்.

''அப்ப, சின்னிப் பெட்டை; எட மோனை! நான் போட்டு வாறன்.'' என்று கூறினார்.

''இப்ப அதீன்ரை பேர் சின்னிப்பெட்டை இல்லைத் தம்பி; திரேசி!'' என்று மீண்டும் தம்பன் அவளின் பெயரை ஞாபகப்படுத்தினான்.

''எனக்குத் தெரியுமேடாப்பா...'' ஏன்ராப்பா அதிலும் ஒரு தக்கு வைச்சிருக்கிறாங்கள். திரேசம்மா! எண்டு வைக் கலாமே? திரேசி... எண்டாலும் உள்ளதுக்கு வள்ளீசாக்

கிடக்கு; அப்ப நான் போட்டு வாறன்! திரேசிப் பெட்டை'' என்று கூறிக் கொண்டே பூக்கண்டர் போய்விட்டார்.

இரவுச் சாப்பாடு முடிந்தது!

இரவு கட்டிடத்திற்குக் காவல் இருக்க வேண்டும்.

மூவர் நால்வராக பங்காக விழிப்பிருந்து அந்த இரவைக் கழிப்பதென முடிவாயிற்று. அதன்படி பங்குக் காவல் விடியும்வரை சிறப்பாக நடந்து கொண்டிருந்தது.

இன்று அதிகாலையோடு வேலை தொடங்கிவிட்டது. எல்லா வீட்டுக்காரரும் சேர்ந்து இடத்தை அடைத்துக் கொள்ளாமல் வீட்டுக்கு ஒருவர் என்ற முறையில்!

மற்றவர்கள் வயிற்றுப்பாடுகளுக்கெனப் போய்விட்டனர். ஏப்படியோ சுவாமியார் குறிப்பிட்ட நாட்களுக்குள் வேலைகளை முடித்து விடவேண்டும் என்ற பிடிவாதமான நினைப்பில் வேலை மும்முரமாக நடந்து கொண்டிருந்தது!

இன்று எப்படியும் கல்லடுக்குகளை முடித்துவிட்டு நாளைக்கே அடுத்தார் மேடை கட்டுவதற்காக அத்திவாரத்தைப் போட்டுவிட வேண்டுமென்று சங்கிலித்தாம் இராயப்பன் சொன்னான். அதை ஏற்றுக் கொண்டது போல எல்லோரும் வேலையை துரிதப்படுத்தினர்.

பொழுது உச்சிக்கு வரும் நேரம்!

சமையல் வேலை அடுப்பிலும் நெருப்பிலுமாக முளாசிக் கொண்டிருத்தது.

திரேசி குடத்தையும் எடுத்துக் கொண்டு தன்னந் தனியாக பெரு வடலிகளைத் தாண்டிப் போனாள்.

அவள் கிணற்றடியில் நிற்கும்போது நான்கைந்து நயினாத்திகள் கிணற்றடிப் பக்கம் அவசர அவசரமாக வந்து சேர்ந்தனர். திரேசி அவர்களை நன்கு அவதானிக்கும் முன் வந்தவர்கள் அவளைச் சூழ்ந்துகொண்டு அவளின் தாவணியைப் பிடித்து ஒருத்தி வெளியே இழுத்தாள்.

இன்னொருத்தி அவளின் றவுக்கைச் சட்டையை தாறுமாறாகக் கிழித்தாள்!

மற்றவள் அவளின் தாவணியை உருவி இழுத்து துவம்சம் செய்தாள்!

''நள வேசைக் குட்டிக்கு தாவணியோ?'' என்று ஒருத்தி இரைந்தாள்!

''அவளின் றவுக்கையைப் பார்...! எப்பவடி நளத்தி நீ வெள்ளாளச்சி ஆனனீ?'' என்று அவளின் நீண்ட கூந் தலைப் பற்றிப் பிடித்து இழுத்தாள் இன்னொருத்தி.

திரேசிக்கு வாய்விட்டுக் கத்த முடியவில்லை. மனது அப்படியே ஸ்தம்பித்து விட்டது!

அலக்க மலக்க அவளை கிணற்றடிச் சேற்றுக்குள் தள்ளி அழுத்திவிட்டு கணத்தில் அவர்கள் போய் விட்டனர்.

திரேசி எழுந்தாள்!

கிழிந்த சேலையைச் சுற்றிக் கட்டினாள். கிழிந்து தொங்கிய றவுக்கையுடன் வடலியைத் தாண்டி கலட்டிக் குள் காலடி எடுத்து வைத்தாள்.

அவளின் இந்தக் கோலம் எல்லோரையும் திடுக்கிட வைத்தது.

எல்லோரும் அவளைச் சூழ்ந்தனர்.

திரேசி அழவில்லை; விம்மவில்லை. பற்களை மட்டும் நற நறவெனக் கடித்துக் கொண்டாள். சிமியோன் ஓடி வந்தான்.

அவனுக்குப் பின்னால் கணவதியும் மற்றவர்களும் ஓடிவந்தனர்.

சிமியோனுக்கு கணநேரத்தில் எல்லாம் புரிந்து விட்டது. கையில் அகப்பட்ட மண்வெட்டியை தூக்கிக் கொண்டு கலட்டிக் கிணற்றடியை நோக்கி அவன் ஓடினான்.

அங்கே அவன் வெறும் சூன்யத்தை மட்டுமே கண்டான்!

அவனுக்குப் பின்னால் ஓடிய கணவதியும், மற்றவர்களுக்கும் ஏமாற்றம்தான்; கிணற்றடியில் ஒரு காகம் குருவி!... ம்.

சிமியோனின் உடல் உணர்ச்சிமேலீட்டால் நடுங்கியது. வந்தவர்கள் அவனை அணைத்து இழுத்து வந்தனர்.

ஒரு வார்த்தையேனும் ஒருவரும் பேசவில்லை. சிமியோன் அழுதான்! அவனால் பேசமுடியவில்லை. தனது மனைவியை அவமானப்படுத்திவிட்டதை அவனால் பொறுக்க முடியவில்லை.

''இப்ப, நான் திரேசிக்குத் தாவணி போட்டுக் கொண்டு நயினாத்தியளின்ரை ஒழுங்கை முழுக்க ஊர்வலம் வரப்போறன்'' சிமியோன் கத்தினான்.

''எங்கடை கையள் என்ன புளியங்காய் ஆயப்போட்டு தெண்டே சிமியோன் நினைக்கிறாய்? திரேசி வெளிக்கிடு! இறவுக்கையைப்போட்டு தாவணியை உடுத்து!'' என்றான் கணவதி!

அப்போதுதான் எங்கோ போய்விட்டுத் தம்பன் வந்தான்.

நடந்து முடிந்துவிட்ட சம்பவங்களை அறிந்துகொள்ள அவனுக்கு நீண்ட நேரம் பிடிக்கவில்லை.

''அப்பிடியெண்டால்... கோயில் கட்டி எழுப்பிற வேலையை விட்டுப் போட்டு உந்த வேலையைப் பாக்கப் போறியல் போலை கிடக்கு! எல்லாத்துக்கும் முந்திக் கோயில் வேலையை முடிக்க வேணும் எண்டு சுவாமி சொன்னதை நீங்கள் மறந்து போனியள் போலை கிடக்கு. எட, பொடியள்! இப்ப என்ன நடந்து போச்சு? அவளவை ஆத்திரத்திலை தாவணியை கிழிச்சுப் போட்டாளவை. உதுகள் ஒவ்வொண்டுக்கும் தனித்தனி பதில் சொல்ல ஏலாது!''

தம்பன் பேசி முடிக்கும் முன், சந்தியாம்பிள்ளை உபதேசியார் முகத்தில் மகிழ்ச்சி பொங்க வந்து கொண்டிருந்தார்.

இங்கே என்ன நடந்திருக்கிறது? இது உபதேசியாருக்குத் தெரியாது. இருந்த நிலைமையை அவதானிக்காமல் சொன்னார்,

''சுவாமி சொல்லி அனுப்பினவர் சுவாமிக்கு கவுணரிட்டை இருந்து மறுமொழி வந்திருக்காம். நன்னியனுக்கும், மூத்தவனுக்கும் தூக்கு விலத்தியாச்சாம். இளையவனுக்கு விடுதலையாம்.''

திரேசி கோவெனக் கதறினாள். மூத்தவன் பெண்டில் விக்கி, விக்கி, அழுதாள். கூடி நின்றவர்கள் அப்படி அப்படியே அசந்து போய் இருந்தனர்.

நிலைமை மட்டுப்பட சற்றுவேளையாயிற்று. அதற்குப் பின்புதான் திரேசியின் தாவணி கிழிக்கப்பட்ட சேதி உபதேசியாருக்கு தெரியவந்தது. ஆனாலும் அவர் அதற்காக அதிர்ச்சி அடையவில்லை.

''எல்லாருக்கும் சொல்லுறன். நாளைக்குக் காலமை உயரப்புலம் கரையாம் பகுதி அடைக்கலமாதா கோயில் பெருநாள் பூசை! எங்கடை சுவாமியும் அங்கை வருவார். திரேசிக்குத் தாவணி போட்டுக்கொண்டு உந்த ஒழுங்கையளுக்காலை ஊர்வலம் போறமாதிரி நடந்து போக வேணும்!''

உபதேசியாரின் பேச்சை எல்லோரும் ஒப்புக் கொண்டனர். ஆரவாரித்தனர்.

திரேசி அழுகையை நிறுத்திக் கொண்டாள். மூத்தவனின் மனைவியும் சிணுங்கலை விட்டுவிட்டாள்.

''உபதேசியார், நாளைக்கு கோயில் முகப்பிலை இருந்து அடுத்தார் வரைக்கும் திரேசியளவு மெழுகுதிரி கொளுத்தி முழங்காலிலை கொண்டு போக வேணும்.

தேப்'ஹுக்கும் தமையன்மாருக்கும் தூக்கு விலத்தினா இப்பிடிச் செய்விப்பேன் எண்டு நான் நேத்திக் கடன் வைச்சனான்.''என்றான் சிமியோன்.

''தம்பி சிமியோன்! அடைக்கல மாதா கோயில் ஒரு சின்னக்கோயில் அங்கை திரேசியளவு மெழுகுதிரி இருக்குமோ தெரியேல்லை. நான் ஆசனக் கோயில் பெரிய மாதா கோவிலுக்குப் போய் பெரிய மெழுகுதிரியும் வாங்கிக் கொண்டு வாறன். விடிய இதிலை இருந்து வெளிக்கிடுவம்!''

சிமியோன் சம்மதம் தெரிவித்துவிட்டான். கொட்டிலுக்குள் புகுந்து சில்லறைகளாக சிலவற்றை எடுத்துக் கொண்டு வந்து உபதேசியார் கையில் வைத்தான்.

மறுபடியும் வேலைகள் தொடங்க சிறிது நேரமாகி விட்டது.

திரேசி எல்லோருக்கும் இடைவேளைக் கோப்பி ஒன்று கொடுத்தாள்.

அவள் நெஞ்சு துள்ளியது.

அவளும் துள்ளித் துள்ளி செயற்பட்டாள். மனதிற்குள் ஏதாவது அடக்க முடியாத மகிழ்ச்சி ஏற்பட்டால் துள்ளித் துள்ளி அவள் நடப்பது வழக்கம்!

சிமியோனின் கையைப் பிடித்துக் கொண்டு கோவிலுக்கு வெளியே வரும்போதும் அவள் தான் மணப்பெண் என்பதையும் மறந்து துள்ளிக் குதித்ததை பலர் தவறுதலாக எண்ணியதும் உண்டு. இன்றும் அவள் துள்ளுகிறாள். அவள் மனது அப்படி!

சூரிய உதயத்தோடு வெள்ளை றவுக்கை. வெள்ளைத் தாவணி, வெள்ளைத் துப்பட்டி அணிந்து கொண்ட திரேசியோடு வெள்ளைவேட்டி, வெள்ளைச் சட்டை, வெள்ளை உத்தரியம் மடித்த சால்வை அணிந்து கொண்டு அவளுக்கு இணையாக சிமியோன் நிமிர்ந்து வர குறுக்குக் கட்டுக்காரிகளும், வேட்டியை முழந்தாளுக்கு மேல் உயர்த்திக் கட்டிக் கொண்டவர்களும் அரைமட்டத்திற்குக் கீழ்த் துண்டு கட்டிக் கொண்ட குஞ்சு குருமன்களும் சேர்ந்து சுமார் முப்பது பேர்கள் வரை பெரிய கலட்டியில் இருந்து புறப்பட்டு நயினார்மார் வீட்டு ஒழுங்கையால் ஊர்வலமாக வருவார்கள் என்று எந்த நயினார் நயினாத்திகளும் எதிர் பார்க்கவில்லை.

திரேசியின் கையில் அவள் அளவு உயரத்திலான மெழுகுதிரி செங்கோல் போல் உயர்ந்திருந்தது.

அதை அவளேதான் தூக்கி வரவேண்டும் என்பது உபதேசியாரின் கட்டளை,

சந்தியாப்பிள்ளை உபதேசியாரின் தலை கூட்டத்திற்கு நடுவே உயரமாகத் தெரிந்தது. கழுத்திலே கட்டப்பட்ட உத்திரீயத்தை சேட்டுக்கு மேலாகக் தூக்கி விட்டுக் கொண்டு அவர் கம்பீரமாக நடந்து வந்தார். ஒழுங்கையின் மூலை முடுக்குகளில் தலைகள் குவியல் குவியலாகத் தெரிந்தன.

ஏன் இது— இப்படி என்று யாருக்கும் தெரியாததல்ல! நேற்றுத் திரேசியின் தாவணியையும், இறவுக்கையையும் கிணற்றடியில் வைத்து கிழித்து எறிந்துவிட்டதற்கு எட்டிக் குப்போட்டியாகத்தான் பள்ளரும் நளவரும் செய்வதாக அவர்கள் எண்ணினர். அதனாலும் உடனடியாக இந்தக்

கெப்போர்த் தனத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து தடுத்து திறுத்தும் துணிவு யாருக்கும் வரவில்லை.

சிலர் தம்பாப்பிள்ளையரின் வீட்டுக்கு ஓடினர்.

''என்ரை வீட்டடி ஒழுங்கைக்குள்ளாலும் அவங்கள் போனவங்கள்!'' என்று தம்பாப்பிள்ளையர் சொன்னதிலிருந்து அவர் எதுவும் செய்யத் திரணியற்று இருந்துவிட்டார் என்பது வெளிச்சமாகிவிட்டது.

மயிலு தம்பாப்பிள்ளையரின் சன்னத் துவக்கைக் கேட்டான்.

பட்டப்பகலில் அது பாவிக்கப்பட்டால் தன்மீதுதான் வில்லங்கம் வரும் என்று அவர் எண்ணினார்.

''சன்னம் முடிஞ்சு போச்சு மயிலு'' என்று பதில் கூறிச் சமாளித்துக் கொண்டார். அந்த ஊரில் அவரிடம் மட்டும்தான் துவக்கு இருக்கிறது என்று அரசுக்கும், மற்றவர்களுக்கும் தெரியும். மயிலுக்குத் தம்பாப்பிள்ளையர் பொய் சொல்லுகிறார் என்பது நன்றாகத் தெரியும். என்றாலும் அவரோடு சண்டை போடவும் அவனால் முடியவில்லை.

எல்லோர் கரங்களும் துடித்தன. தம்பாப்பிள்ளையரின் கரங்களும்தான் துடித்தன.

இவர்களின் ஆரவாரத்திற்கிடையில் ஊர்வலம் ஒழுங்கைகளைத் தாண்டி வெகு தூரம் போய்விட்டது.

''எல்லாரும் கரையாம் பகுதிக் கோயிலுக்குத்தான் போறாங்கள் போலை கிடக்கு. உங்கை ஒருத்தனும் நிக்காங்கள். வாருங்கோடா போய் கோவில் சுவர்களைத் தள்ளி விழுத்துவம்.'' என்று ஒருவன் எல்லோருடைய ஆத்திரத்தையும் ஒரு புது வழியில் திருப்பிவிட்டான்.

பத்துப்பேர்கள் கொண்ட ஒரு கூட்டம் பெரிய கலட்டியை நோக்கிப் போய் உடனடியாகவும் திரும்பி விட்டது.

அங்கே இருபது பேர்கள் வரையில் அலவாங்கு கோடரிகளுடன் முன் எச்சரிக்கையாக இருந்தனர். கேணி யடிப் பனங்கூடலுக்குள் அவர்கள் கூடிநின்று தங்கள் தோல்விகளை தாங்களே ஜீரணிக்கமுடியாமல் தவித்த போது, பனங்கூடலுக்கு ஊடாக ஒருவன் ஓடிவந்தான்.

அவன் பொலீஸ் நிலையத்திற்குக் காய்கறி கொடுக் கும் சின்னக்குட்டியின் மருமகன் சிதம்பரம்.

''சங்கதி தெரியுமோ?''

வந்ததும் வராததுமாக அவன் கேட்டான்.

மற்றவர்கள் பதில் கூறுவதற்கு முன்பே, ''நன்னி யனுக்கும் மக்களுக்கும் தூக்கு விலத்தியாச்சாம்! இளை யவனுக்கும் விடுதலையாம். மற்றவர்களுக்குபத்து வரிச மறியலாம்,'' என்று அவசர அவசரமாகக் கூறி முடித்தான்.

''என்ன, என்ன சிதம்பரம்! உண்மையாத்தான் சொல் லுறியோ? பகிடியை விட்டிட்டுச் சொல்லடாப்பா; உனக் கார் சொன்னது?''

ஒருவன் மிக அவசரமாகக் கேட்டான்.

''நான் என்ன தெரியாமல் சொல்லுறனே? அம்மான் காலமை சொன்னவர். பொலீஸ் ஸ்ரேசனிலை அறிஞ்ச வாரம்; நானும் முதல்லை நம்பேல்லை. இப்ப காய்பிஞ்சு குடுக்க அங்கைதான் போறனெண்டவர்; வடிவா அறிஞ்சு கொண்டு வாறன் எண்டவர்.''

எல்லோர் முகங்களும் பேயறைந்தது போலாயிற்று. தம்பாப்பிள்ளையர் வீட்டை நோக்கி எல்லோரும் போயினர்.

''தம்பாப்பிள்ளைக் குஞ்சி, நன்னியனுக்கும் மக்களுக் கும் தூக்கு விலத்தியாச்சாம்; இப்ப என்ன செய்வம்?'' என்று ஒரு குரல் எழுந்தது.

தம்பாப்பிள்ளையர் திகைத்துப் போனார்! அவர் ஒன்றுமே பேசவில்லை.

''என்ன ஒண்டும் பேசிறியள் இல்லை. இப்ப என்ன செய்வம்?'' மீண்டும் அதே கேள்வி.

''அவன் மானிப்பாய் ஞானமுத்து சுவாமி பரதேசியைத் தான் வெட்ட வேணும். இவங்கடை தூக்கை விலத்திறத்துக்கு அவன்தான் அலுவல் பாப்பான் எண்டு நான் முந்திச் சொல்லேக்கை நீங்கள் நம்பேல்லை. இப்ப நம்பிறயளே? அவன்ரை தலையை அண்டைக்கு வெட்டியிருந்தா அவங்கள் தப்பியிருப்பாங்களே? அவனை முடிப்பம் முடிப்பம் எண்டு எத்தனை தரம் சொன்னன்?''

தம்பாப்பிள்ளையர் பேசிமுடிக்கவில்லை'

''ஓ! சொன்னநீங்கள்தான்; இடையிலை என்ரை மானிப்பாய் அடிகொடி சுவாமிநாதன் மாமாவிடை மோன் எனக்கு மச்சான்முறை எண்டும் சொன்ன நீங்கள் எண்டதை மறந்து போனியள் என்ன? இப்ப மச்சான் எண்டாலும் கொண்டிருக்கலாம் எண்டு விழுந்தபாட்டுக்குக் குறி சுடுகிறியள்!''

''மச்சான் முறை எண்டிறியள்! ஒருக்காகப்போய் 'வீனா நளம் பள்ளுக்காக உன்ரை சொந்தக்காறரை பகைக்க வேண்டாம்' எண்டு சொல்லச் சொல்லி நாங்களும் எத்தினை தரம் சொல்லியிருப்பம்! விட்டிட்டு இருந்து போட்டு இப்ப அவங்கடை தூக்கு விலத்தினாப் பிறகு தான் தலையிலை கையை வைக்கிறியள். அவன் மாடு தின்னி வேதத்திலை சேந்தவனிட்டை இந்தத் தம்பாப்பிள்ளையரைப் போகச் சொல்லுறியளோ எண்டு எங்களிலை பாஞ்சு விழுந்துபோட்டு இப்ப கதைக்கிறியள்?''

சற்றுக் கோபமாகவும் அழுத்தமாகவும் ஒருவன் பேசி விட்டான்.

தம்பாப்பிள்ளையருக்குப் பதில் சொல்ல முடியவில்லை.

ஞானமுத்துச் சுவாமியை அவர் மனதிற்குள் ஆயிரம் தடவைகள் கொலை செய்திருக்கிறார். இரண்டாயிரம் தடவைகள் அவர் தாடியைப் பிடித்து சுழற்றிச் சுழற்றி அடித்திருக்கிறார். மூவாயிரம் தடவைகள் அவரின் வெள்ளை லோவையும், அவரின் கறுத்த நாடாவில் செருகி இருக்கும் நீண்ட சிலுவையை இழுத்தறுத்து மடக்கி முறித்து எறிந்திருக்கிறார்.

''என்னண்ணை, பேசாமல் இருக்கிறியள்? அவங்கள் நளவருக்குத் தூக்கு விலத்திப் போட்டான்; அவள் நளத்திக்கு இறவுக்கைச் சட்டையும், தாவணியும் போடுவிச்சுப் போட்டான்; எங்கடை ஒழுங்கைக் குள்ளாலை ஊர்வலமும் நடத்திக் காட்டிப் போட்டான்; இப்ப கோயிலும் கட்டுவிக்கிறான் உன்ரை அடிகொடியான்! இஞ்சார் தம்பாப்பிள்ளை அண்ணர்; நீர் சரிவர மாட்டீர்! இனி நாங்கள் எங்கடை வேலையைச் செய்யப்போறம். அந்தத் தாடியனை முடிச்சுப் போட்டம் எண்டா எல்லாம் சரிவரும்!''

இப்படிக் கூறிக் கொண்டே மயிலு வெளியேவந்தான். மயிலுவைத் தொடர்ந்து எல்லோரும் வெளியே வந்து விட்டனர்.

தம்பாப்பிள்ளையருக்கு அவமானம் தாங்க முடியவில்லை. அவர் நிலை குத்திப் போய் விட்டார்.

வெள்ளைச்சி அம்மாள் தன்பாட்டிலேயே எதற்கும் காது கொடுக்காதவள் போல, விறாந்தையின் ஒதுக்குப் புறத்தில் இருந்து நெல்மணிகளை சீலைத் திரணையால் ஒத்தி எடுத்துக் கொண்டிருந்தாள்.

செவ்வந்தி நாச்சியார் குசினிக்குள் தானும்தன்பாடும். அவளின் வழக்கமான சுபாவம் அப்படி! உலகத்தைப் பற்றி எந்தக் கவலையும் அற்ற ஜீவன் அது!

''தன்ரை அடிகொடியைப் பற்றி நெடுக உவர் தூக்கிப் பிடிக்கிறவர். இப்ப அடிகொடியிலை சேந்த சுவாமியன் உப்பிடி உவருக்குச் செய்யத்தான் வேணும்; உவன்றை பாவணிக் கெப்பர் அப்பதான் அடங்கும்......'' இப்படி வெள்ளைச்சி அம்மாள் மனதிற்குள் பேசிக் கொண்டு கடவாய்க்குள் சிரித்தாள். தற்செயலாக அவளின் கடவாய்ச் சிரிப்பு வெடித்து விட்டது.

''என்னடியது சிரிப்பு? உமக்குச் சிரிப்பாய் இருக்கு; உன்னை எண்டைக்குக் கட்டினனோ அண்டைக்கு என்ரை அடிகொடிக்குப் பிடிச்ச நாசம் இன்னும் போகேல்லை.'' தம்பாப்பிள்ளையர் இரைந்தார்.

''ஏன், என்ன அவசரத்திலை என்னைக் கட்டின நீங்கள்? மேச்சலுக்குத் திரியேக்கை, மேஞ்சவளிலை ஒருத்தியைக் கட்டாமை என்னை ஏன் கட்டினனீங்கள்? ஒத்தைக் காலிலை நிண்டு, வீடுதேடி வந்து, என்னை தூக்கிக் கொண்டு வந்திட்டு...! ஒண்டில் நளச் சிங்கியைக் கட்டியிருக்கலாம்; இல்லாட்டி இணுவில் தேவடியாளவை யிலை ஒருத்தியைக் கட்டியிருக்கலாம்! ஏன் கனக்க வேணாம்; அவன் சிங்களத்தியை கொண்டிருக்காமல் பக்கு வமாக் கொண்டு வந்து கட்டியிருக்கலாம்...இப்ப, வெள்ளச் சியைக் கட்டினதாலைதான் எல்லாம் வந்ததெண்டு ஏன் சொல்லுவான்?...''

வெள்ளைச்சி பேசி முடிக்கவும் ;தம்பாப்பிள்ளையர் காலாலும் கையாலும் அவளை மாறி மாறி உதைக்கவும், சுளகில் இருந்த நெல்மணிகள் சிதறிக் கலையவும், நேரம் சரியாக இருந்தது! செவ்வந்தி குசினிக்குள் இருந்து ஓடி வந்தாள்!

''ஐயோ, அப்பு அம்மாவை அடிச்சுக் கொல்லு றாரே!...ஐயோ, என்ரை ஐயோ......!'' இப்படி அவள் குரல்வைத்து அழுதாள்.

இந்தக் குரல் பூக்கண்டர் வீட்டுக்கு நன்றாகக் கேட்டது.

பூக்கண்டரின் பெட்டைகள் வேலிக்குச் செல்ல முற்பட்டனர்.

''இஞ்சாலை வாருங்கோ, அடுத்த வீட்டிலை சண்டையெண்டா எட்டியும் பாக்கக் கூடாது; எண்டு எத்தினை தரம் சொல்லிறது?'' என்று பூக்கண்டர் முற்றத்தில் நின்று இரையவே, அவர்கள் திரும்பி அடுக்களைப் பக்கம் சென்று விட்டனர்.

''என்னவாக்கும், ஒரு பொய்யடி மெய்யடி இல்லையே?'' என்ற குரல் தம்பாப்பிள்ளை வீட்டில் கேட்டது.

அது கோவிச்சி முத்தியின் குரல்!

''ஐயோ என்ரை ஐயோ! அம்மா செத்துப் போனா...... அப்பு அடிச்சுக் கொண்டு போட்டார்! என்ரை ஐயோ...!''

இது செவ்வந்தியின் குரல்!

''ஏன் நாச்சியார் கத்திறாய்? அம்மாவுக்கு ஒண்டுமில்லை கத்தாதையும்!'' இது முத்தி செவ்வந்தியைத் தேற்றும் குரல்! அதற்குப்பின் அங்கிருந்து எந்த சந்தடியும் இல்லை.

பூக்கண்டர் காதை நிதானப்படுத்திக் கொண்டு கேட்டார். எந்தச் சத்தமும் இல்லை.

தம்பாப்பிள்ளையரின் நகுலன் நாய் குரைப்பதும், அவரின் கன்னி நாகு கரல் வைப்பதும் கேட்டது.

''இஞ்சேரப்பா, அறுவான் அந்த மனிசியை அடிச்சுக் கொண்டு போட்டான் போலை கிடக்கு! புங்கை பாரப்பா; நாயும் குலைக்குது; கன்னி நாகும் கத்திது; இயமன் வந்திட்டுப் போறான் போலை கிடக்கு...!''

மனைவியை இதற்கு மேல் பூக்கண்டர் பேச விடவில்லை.

''எடி, எடி; உன்ரை பாட்டிலை கிடவடி! நாய் குலைக்குதாம்; கன்னி நாகு கத்திதாம்; இயமன் வந்திட்டுப் போறானாம்; இவள் கண்டவளாம்,'' என்று புறு புறுத்தபடி வெளியே போனார் பூக்கண்டர்.

ஆள்அளவு மெழுகு திரியைப் பிடித்தபடி வெள்ளைத் தேவதையாக திரேசியும் வெள்ளை உடையுடன் சிமியோனும் இணைந்து வர, அவர்களுக்குப் பின்னால் வந்த கூட்டத்தினரைக் கண்டதும், ஏற்கனவே கோவிலடியில் கூடியிருந்தவர்களுக்கு ஆச்சரியத்தைத் தருவித்தது.

இப்படி எந்தத் தடவையும் எவரும் கோவிலுக்கு வந்ததில்லை. ஆள் அளவு மெழுகு திரியை அந்தக் கோவில் என்றும் கண்டதில்லை.

குஞ்சு, குழந்தைகள் கிழம் கட்டைகள் எல்லோருமே அந்தக் கூட்டத்தைச் சூழ்ந்து விட்டனர்.

கோவில் முகப்பில் மிகவும் உயரமான கொடிமரம் ஒன்று இரட்டை அடுக்கில் நிறுத்தப்பட்டு, அதன்உச்சியில் ஒரு கொடி பறக்க அதில் இருந்து பத்துப் பிரிவுகளாக சிறு கொடிகளின் கயிற்றுப் பிணைப்புகள் கீழ் நோக்கி வந்து, ஆங்காங்கே மரங்களில் இணைக்கப்பட்டிருந்தன.

கோவில் உட்பக்கம் வர்ணக் கடதாசிச் சர மாலைகளால் நிறைக்கப்பட்டிருந்தது. நிரையில் ஐவைந்தாகப் பிரிந்து நின்ற, மட்ட சுத்தமாக உருட்டி விடப்பட்ட பாலைத் தூண்களில் இவ்விரண்டு ஈச்சம் ஓலைகள் மாறி வைத்துக் கட்டப்பட்டிருந்தன.

ஒவ்வொரு தூண்களுக்கும் நடுவே குளோவை லாம் புத்திரிகள் மின்னிக் கொண்டிருந்தன.

கோவில் பலிபீடத்தை மூடி செந்திரை ஒன்று நீண்டு நின்றது. அதன் நடுவே பென்னம் பெரிய சிலுவை வெள்ளைத் துணியில் தைத்து இணைக்கப்படிருந்தது.

காரணிக்கம் தொடங்க இன்னும் சிறிது நேரம்தான் இருந்தது.

மூன்றாம் மணியும் அடித்தாகிவிட்டது. இன்னும் அடி படவேண்டியது ஆயத்தமணிதான்

அறைவீட்டு விறாந்தையில் தனது தாடியைத் தடவிக் கொண்டே ஞான முத்துக் குருவானவர் நின்று பார்த்துக் கொண்டிருந்தார். அந்தக் கூட்டத்திற்கு நடுவே சந்தியாம் பிள்ளை உபதேசியாரின் தலை தெரிந்தது.

குருவானவர் கூட்டத்தை நோக்கி வந்து கொண்டிருந் தார்.

இதுவரை காணாத ஆச்சரியம்! கூட்டத்தை நோக்கி குருவானவர் இதுவரை போனதில்லை. இதுவரை அந்தக் கோவில் கட்டளைக் குருவான ஈயன்ஸ் அப்படிச் செய்த தில்லை. அவரை நோக்கித்தான் கூட்டம் போனதே தவிர கூட்டத்தை நோக்கி அவர் வந்ததில்லை.

ஞான முத்துக் குருவானவர் திரேசியை நோக்கி வந்து விட்டார்.

திரேசியும், சிமியோனும் ''சோஸ்த்திரம் தேவரீர்!'' என்று வணக்கம் செலுத்தினர்.

குருவானவர் தனது வழமையான ஆசீர்வாதத்தை இட்டுவிட்டு,

''திரேசு, நீங்கள் ரெண்டுபேர்கள் மட்டும்தான் வரு வியள் எண்டு நான் நினைச்சன்; உங்கடை ஆக்களையும் கனக்கக் கூட்டி வந்திருக்கிறியள்; மிச்சம் சந்தோசம்; நல்ல மேய்ப்பரான யேசு உங்களைச் சரியான வழியில் இட்டுச் செல்வார்!'' என்று கூறி அவர்கள் எல்லோரையும் உள்ளே அழைத்துப் போகும்படி உபதேசியாருக்குக் கூறி விட்டு அறை வீட்டுக்குப் போய்விட்டார்.

ஆயத்தமணி அடிக்கப்பட்டது.

வெளியே பறைமேளம் கொட்டப்பட்டது.

காரணிக்கம் ஆரம்பித்துவிட்டது.

திரேசியை நோக்கி சகல கண்களும் சுழன்றன. அவள் தன் உயரத்தில் மெழுகுதிரியைத் தாங்கி முழம்தாளில் இருக்கிறாள்.

சிமியோன் ஆண்கள் கூட்டத்தோடு சங்கமமாகிவிட்டான்.

பிரார்த்தனை தொடங்கிவிட்டது.

இடை இடையே காரணிக்கங்கள்; அதை அடுத்து—

வேண்டுதல் மந்திரத் தொடர்...

அதற்கு அப்பால்......

அடுத்தாரின் உள்ளிருந்து சிறுமணி கிலுக்கும் ஓசை!

பறைமேளம்!

இத்தனை கலகலப்புக்கும் மத்தியில் அடுத்தார் திரை மிகவும் மெதுவாக நத்தை நகர்ச்சியில் இழுபட்டு முடிந்தது.

பூசைப் பலிபீடத்திற்கு முன்னால் வெள்ளை லோவுக்கு மேல் வையில் மேலங்கி, கழுத்து உத்தரியம், சகிதமாக ஞானமுத்துக் குருவானவர் பூசைப்பலியைத் தொடங்கி விட்டார்.

ஈயன்ஸ் குருவானவர் நீண்ட விடுமுறையில் சொந்த ஊராகிய ஜேர்மனிக்குச் சென்றுவிட்டபடியால் அந்த இடத்துக் கட்டளைக் கடன்களை ஞானமுத்துக் குருவானவரே சில வாரங்களாக நிறைவேற்றி வருகிறார்.

பாடற் பூசை!

லத்தீன் பாசையில் அவர் பாட, அதே பாஷையில் உதவுபவர்களான சிறுவர்கள் பாட, அவர்கள் பாடியதை நான்கைந்து பெண்பிள்ளைகள் பாட, பக்க வாத்தியமாக ஆர்மோனியம் இசைக்க......

நடுப்பூசை வரும் நேரம். யேசுவின் உடலாகிய அப்பமும், உதிரமாகிய வையினும், எழுந்தேற்றத்திற்கான நேரம்!

இடையே குருவானவர் பிரசங்கம் செய்ய வேண்டிய பாரிய நேரம்.

அந்த நேரம் வருவதற்குமுன் சங்கிலித்தாம் காணிக்கை வாங்குவதற்காக தட்டுடன் வந்து போய் விட்டார்!

குருவானவர் பிரசங்க மேடைக்கு வந்தார்.

''பிரியமான கிறீஸ்தவர்களே......!'' என்று தொடங்கிப் பேசிக் கொண்டே போனார். இன்று அவர் பேசுவதற்காக எடுத்துக் கொண்ட விஷயம், வேத சாட்சியங்களைப் பற்றியதும், மனம் திரும்பியவர்கள் பற்றியதுமாகும்!

கோவிலுக்குள் இருந்தவர்களையெல்லாம் சீறி, சீறி அழ வைத்துவிட்டார். அத்தனை சக்தி அந்தப் பிரசங்கத்திற்கு!

குறுக்குக் கட்டுகளுடனும் ஊத்தை உடைகளுடனும் அள்ளிச் சொருகிய கொண்டையுடனும் புழுதி படர்ந்த உடலுடனும் வந்திருந்த திரேசியின் உறவினர்களையுமே அவர் அழவைத்துவிட்டார்.

பிரசங்கம் முடிந்தது.

எழுந்தேற்றம் நடந்தது.

ஒவ்வொரு நிகழ்ச்சிகளையும் சங்கிலித்தாம் தமிழில் விபரித்துக் கொண்டிருந்தார்.

அடுத்து தேவ நற்கருணை பெறுவதன் அறிகுறியாக முதலில்ஆண்கள், பின் பெண்கள் நிரைக்கு இருந்து யேசுவின் சரீரம் என்று ஏற்படுத்தப்பட்ட அப்பத்தை நாவை நீட்டி பெற்று அப்படியே விழுங்கிவிடுதல்!

முதல்நாளோ, அல்லது அதற்கு முன்போ பாவசங்கீர்த்தனம் என்ற பாவமன்னிப்புப் பெற்றவர்கள்தான் அந்த சற்பிரசாதமாகிய தேவ நற்கருணையைப் பெற வேண்டும்.

பெரும்பான்மையினர் நிரையில் இருந்து பெற்றுக் கொள்கின்றனர்.

திரேசி போகவில்லை. அவள் கடந்தவாரம் ஆசீர்வாதப்பர் கோவிலில் நடந்த பூசைப்பலிக்கு முதல்நாள் தான் பாவமன்னிப்புப் பெற்றாள். அதற்குப் பின் அவள் கோயில் கட்டும் வேலைக்காகப் பெரிய கலட்டிக்கு வந்துவிட்டாள்.

இதற்கிடையே அவள் பாவம் செய்திருக்க வேண்டும்!

அவள் ஆண்கள் பக்கமாகத் திரும்பி சிமியோனைப் பார்த்தாள். அவனும் எழுந்திருக்கவில்லை. அவர்கள் பாவம் ஒன்றோ, பலதோ செய்திருக்க வேண்டும்! அவள் வெட்கப்பட்டாள்.

எல்லோரும் அவளைப் பார்த்தனர். தன்னை எல்லோரும் பிழையான கண்கொண்டு பார்ப்பதாகவே அவள் எண்ணினாள்.

குற்றமுள்ள நெஞ்சு! அது குறு குறுத்துக் கொண்டே இருக்கிறது.

முதல் முதலில் பாவமன்னிப்புப் பெற்றபின் குருவானவர்,

''பிள்ளாய், நடுச்சாமம் தொடக்கம் தேவ நற்கருணை வாங்குமட்டும் ஒன்றும் சாப்பிடாமலும், குடியாமலும் சுத்த உபவாசமாக இருக்க வேண்டும்'' என்று கூறியதை மனதில் வைத்துக் கொண்டு, ''அந்த சுத்த உபவாசம் எண்டால் என்னவும்?'' என்று சிமியோனை ஒரு நாள் கேட்டாள் திரேசி.

''அது உடலாலும், உள்ளத்தாலும் கெடாமல் இருத்தல்'' என்று அவளைத் தொட்டுக் காட்டிக்

கொண்டே பதில் சொல்லி வைத்தான் சிமியோன். அதனால்தான் அவள் இப்போது தேவ நற்கருணை பெறப்போகவில்லை. இந்த நான்கு நாட்களில் அதைத் தடுத்துக் கொள்ள அவளால் முடியவில்லை. அவளால் மட்டும் அல்ல; சிமியோனாலும் அப்படித்தான். அதனால் தான் அவனும் தேவ நற்கருணை பெறப் போகவில்லை.

தேவ நற்கருணை அடுத்த சங்கிலித்தாமின் சுவிஷேச வாசிப்பு!

அதை அடுத்து...

இறுதியான சற்பிரசாத ஆசீர்வாதம்!

பூசைப்பலி முடிந்தது!

இனி நடக்கப்போவது அடைக்கலமாதாவை அழகிய கூட்டில் வைத்து ஊரைச் சுற்றி வருவது.

அதற்கான ஆயத்த வேலைகள் நடந்து கொண்டிருக்கும்போது, சந்தியாம்பிள்ளை உபதேசியார் வந்து திரேசி வைத்திருந்த மெழுகுத்திரியைக் கொளுத்தி அவளைக் கொண்டே, அவள் சமீபத்தில் பாடமாக்கிய பரமண்டல பிரியதந்த மந்திரத்தை ஓதவைத்து, முழம் தாளிலேயே அடுத்தார் வரை நகர்ந்து சென்று அடுத்தாரில் மெழுகுத்திரியை ஏற்ற வைத்து விட்டார்.

அந்தக் காட்சியை நீண்டநேரமாகவே சகலரும் பார்த்துக் கொண்டிருந்தனர். இது முடிந்ததும் கூடு சுற்றுதல் ஆரம்பமாகிவிட்டது.

தனித் தேக்கு மரத்தால் திரணை துவாளிப்புகள் அமைத்து இடை இடையே கருங்காலி இடைச் செருகலும் செய்யப்பட்ட கண்களைப் பறிக்கும் கூட்டுக்குள் அடைக்கல நாயகியின் திருச்சொரூபம் பட்டு உடைகளால் போர்த்தப்பட்டு, தங்க மாலைகள் அணிவிக்கப்பட்டு, முத்துக் கிரீடம் தாங்கி, ஒற்றைக் கையை உயர்த்தி, பக்தர்களுக்கு அபயம் அளிக்கும் தோரணையில் கொலு

நிறுத்தப்பட்ட அடைக்கல நாயகியைக் கொண்டு ஊர் வலம் புறப்பட்டு விட்டது.

மிருதங்க வித்துவான் தானியலின் மிருதங்க ஓசை காதைப் பிளக்க அப்பாலையின் கருநாடக சங்கீதம் கலந்த நாட்டுமெட்டுப் பாடல்கள் வானத்தை எட்டித் தொட சுற்றுப்பிரகாரம் தொடங்கிவிட்டது.

கோவிலைச் சுற்றியுள்ள ஒழுங்கைகள் தோறும் சென்று, ஐந்து பந்தல்களில் நிறுத்தப்பட்டு, ஒவ்வொரு காரணிக்கமும் தேவாரமும் பாடப்பட்டு, இடை இடையே சந்திப்புகளில் தரித்துத் தரித்து, சிறு சிறு கச்சேரிகள் நடத்தி, திருச் சொரூபம் மறுபடியும் கோவில் முகப்புக்கு வந்துசேர மதியநேரமாகிவிட்டது.

குருவானவர் திருச்சொரூபத்தை இறக்கி, திருச் சொரூபத்தினால் கூட்டத்தை ஆசீர்வதித்து, இருப்பிடத் திற்குக் கொண்டு செல்லவும், வெளியே கஞ்சி வார்ப்புத் தொடங்கவும் சரியாக இருந்தது.

களைத்துப்போனவர்களுக்காக அந்த ஏற்பாடாக இருந்தாலும், வருடா வருடம் அந்தக் கோவிலைச் சேர்ந்த பள் குடும்பமாகிய அன்னம்மாள் குடும்பமே நீண்ட காலமாக செலவுத் தொகையை ஏற்க மற்றவர்களே நின்று கஞ்சி வார்ப்பார்கள். அதற்கு உரித்தான அன்னம்மாள் குடும்பத்திற்கு இதில் ஒரே ஒரு வேலை மட்டும்தான். கோவில் வளவில் உள்ள இரண்டோ மூன்றோ பனைகளில் ஓலை வெட்டி கஞ்சி குடிப்பதற்குப் பிளாக்கோலிக் கொடுக்கும் பொறுப்பு ஒன்றே ஒன்றுதான்.

இந்த வேலையை அன்னம்மா குடும்பம் என்றுமே இழப்பமாக எண்ணியதில்லை. ஏனெனில் ''அன்னம் மாளின் கஞ்சி'' என்ற சொல் மேலோங்கி நிற்கின்ற தல்லவா!

திரேசிக்கும், திரேசியோடு வந்தவர்களுக்கும் கஞ்சி தாராளமாகக் கிடைத்தது. மதிய உணவுக்கு அது போதும்.

திரேசியைச் சேர்ந்தவர்கள், போவதற்குப் புறப்பட்டு விட்டனர்.

''பின்னேரம் கோயில் விருந்துச்சோறு இருக்கு. சாப்பிட்டுவிட்டு இரவு நடக்கப்போகும் 'பொன்னூல் செபமாலை' என்ற நாட்டுக் கூத்தையும் பார்த்துவிட்டு மறுநாள் காலை போகலாம்'' என்ற அபிப்பிராயத்தை சந்தியாம்பிள்ளை உபதேசியார் அவர்களுக்கு ஞாபகப் படுத்தினார். இறுதியில் ஊரின் நிலைமையை உத்தேசித்து திரேசாவும், சிமியோனும் இன்னும் இரண்டொரு பெண் களும் நிற்பதென்றும் மற்றவர்கள் போய்விடுவதென்றும் முடிவாயிற்று. சின்னஞ்சிறிசுகள் சிலதும் இவர்களுடன் தங்கிவிட மற்றவர்கள் போய்விட்டனர்.

சாயந்தர விருந்துச் சோற்றுக்கான ஆயத்த வேலைகள் ஆரம்பித்துவிட்டன.

நான்கைந்து இடங்களில் கிடங்குகள் வெட்டப்பட்டு அவைகளில் பெரும் கிடாரங்கள் ஏற்றப்பட்டன.

அறை வீட்டு விறாந்தை நீளத்திற்கு பெண்கள் காய் பிஞ்சு வெட்டுவதும். தேங்காய் துருவுகிறவர்களுமாக இருந்தனர்.

ஒருபுறம் சில ஆண்கள் விறகு கொள்ளிகளை சிறு சிறு கீலங்களாக்கிக் கொடுக்க மறுபுறம் சாக்குகளில் உள்ள அரிசிகளை வாளியில் கொட்டிக் கழுவி கிடாரங்களில் போட, கிடாரங்களில் அவிந்து வந்த அரிசிகளை பச்சைப் பனை மட்டை கொண்டு கிளறிவிட, ஒதுக்குப்புறமான விறாந்தை முடுக்குப் பகுதியில் புத்தம் புதிய பாய்களை விரித்து சோறுகளைக் கொட்டி மட்டப்படுத்திவிட—

ஒதுக்கான இன்னோர் இடத்தில் நான்கைந்து கடல் ஆமைகளை அறுத்துத் துண்டமாக்க, சிலர் அரிவாளினால் அந்தப் பெரிய துண்டுகளை சிறுசிறு துண்டுகளாக்க—

இப்படியே விருந்துச் சமையல் பகுதி கலகலப்பாக இருந்தது.

இந்த நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டு மரங்களின் கீழ் அப்போதுதான் ஒரு பணம் கொடுத்து வாங்கிய பாய்களை விரித்து அதை நிறைத்துக் கொண்டு இருந்த கூட்டத்தில் ஒருத்தியாக திரேசியும் ஒருத்தனாக சிமியோனும் இருந்தனர்.

சிமியோன் திரேசிக்கு சிறு தூரத்திற்கு அப்பால் இருந்தான். சிமியோனுக்கு திரேசிக்குப் பக்கத்தே இருந்து கோவில் நிகழ்ச்சிகளை விளக்கிக் கொண்டு இருக்க வேண்டும் போல இருந்தாலும் இடையே கிழடு கட்டைகளும், குஞ்சு குமன்களும் இருந்தனர். அதனால்......?

இடையே ஒருதடவை எழுந்து சென்று ஒரு சீலைத் துண்டில் கடலை 'கச்சான்' வாங்கிவந்து எல்லோருக்கும் நடுவாகக் கொட்டினான். ஆனால் அது திரேசிக்கு முன்னால்தான் இருந்தது. திரேசி இருக்கும் இடம்தான் அவனுக்கு நடுவாகப்பட்டது.

மஞ்சள் நிறையப் பூசி அளவான வறுவலில் வெந்து மேல்தோல் பிளந்து இருந்த கொண்டைக் கடலை.

சுத்தமான வட்ட வடிவில் தோல் வெடிக்கும் பருவத்தில் வறுத்தெடுத்த இலந்தைப்பழ அளவுடைய பென்னம் பெரிய பட்டாணிக் கடலை.

அடுக்கு மல்லிகையின் பருவத்தின் விரிவுபோல மலர்ந்து, வெள்ளைவெளேரெனக் காட்டிக் கொண்டிருக்கும் சோளம் வறுவல்.

ஒரு விரல் அளவு நீலத்தில் மூன்று நான்கு விதைகளை உள்ளடக்கி சந்தண நிறப் பொலிவான 'கச்சான்'

என்ற நிலக்கடலை. எல்லாமாகச் சேர்ந்து ஒரு கும்பலாகக் கிடந்தது.

இந்தப் பெரிய கும்பலுக்கு சிமியோன் கொடுத்தது அரைப்பணம்தான்.

''எவ்வளவு காசடா தம்பி இது?'' என்று ஒரு வயதான வள் கேட்டாள்.

''அரைப் பணம்தானணை பெத்தாச்சி'' என்றான் சிமியோன்.

''சரியான மலிவுதான். எங்கடை காளிகோயில் திரு விழாவிலை இவ்வளவும் வேண்டியதாய் இருந்தா ரெண்டு பணம் எண்டாலும் வேணும்'' என்று வாய் ஊறினாள் திரேசி.

எல்லோரும் கடலையைக், கிள்ளி கிள்ளி எடுத்தனர். சிமியோனுக்கு அது எட்டவில்லை. அவன் எட்டி, எட்டிக் கை நீட்டியபோது ஒரு பிடி கடலையை அள்ளி திரேசி அவன் கைகளில் வைத்தாள். அவளை கடலைக் கையோடு சேர்த்து சிமியோன் பிடித்துக் கொண்டான்.

திரேசியின் உதடுகள் குவிந்து பல்வரிசைகள் பளிச் சிட்டன.

ஒரு கண வேளைதான்! அதற்கிடையில் அவள் கையை விடுவித்துக் கொள்ள முயன்றாள். சிமியோன் விட்டுவிட் டான். சில வினாடிப் பொழுதில் இந்தக் காதல்; ஊடல்; கலப்பு; எல்லாம் முடிந்துவிட்டது.

எப்படி நேரம் ஆயிற்றோ தெரியவில்லை. கோவில் விருந்துக்கான ஆயத்தமணி அடித்துவிட்டது.

சிமியோன் மறுபடியும் பாய்க் கடைக்குச் சென்றான். கோவில் விருந்துச் சோற்றைப் பெறும் ஏதனமாக சிறு சிறு பெட்டிகளை வாங்கி வந்தான். அவைகளை ஆளுக்கு ஒன்றாக எடுக்கக் கணகருச் சரியாக இருந்தது.

சபை நடந்துவோர் சபையை இருத்தத் தொடங்கி விட்டனர்.

மணி ஐந்தாகிவிட்டது!

அதற்கிடையில் சபை இருத்தி அதற்குப்பின் உணவு பரிமாறி, உண்டு சபை கலைய மணி ஏழுக்கு மேலாகி விடும். எட்டுமணிவரையில்தான் கோயிலுக்குத் தெற்காக உள்ள நடுக்குறிச்சி விளாத்தியடிப் பெருவெளியில் கூத்து ஆரம்பமாக இருந்தது.

விருந்து வைப்புத் தொடங்கிவிட்டது.

உவிய விடப்பட்டுள்ள சோற்றுக்குள், சகல காய் பிஞ்சுகளையும் ஒன்றாகப் போட்டு சமைத்த காய்கறியை யும், சற்று நீரோட்டமான ஆமைக் கறியையும் ஒன்றாகச் சேர்த்து திரணையாக்கி, ஒவ்வொரு ஏதனத்திற்கும் ஒவ் வொரு திரணையாக்கி, ஆட்களின் உயரம் தோற்றம் பார்த்து இரு திரணைகளாகவும் விருந்து பரிமாறப்பட் டது. கஸ்பாறு, அப்பாலை சட்டம்பியார், அப்புக்குட்டி, தெய்வம் எஸ்தாக்கி, நீக்கிலான், சுவாம்பிள்ளை, முத் தையா, வெலிச்சோர், அவேசு ஆகியோர் வியர்க்கக் களைக்க ஓடித் திரிந்து என்னதான் முயன்றபோதும் விருந்து முடிய ஏழு தாண்டிவிட்டது!

இதற்கு மேல்தான் எல்லோரும் ஒரேயடியாக உண் ணத் தொடங்கவேண்டும். இதற்காக ஒரு மணி ஒலிக்கும்.

அந்த மணியும் ஒலித்தது.

உச்சத்து நிலவு!

உணவு அருந்தி முடித்து எல்லோரும் கூத்துக் கொட் டகை வெளிக்குப் போய் விட வேண்டும்!

சிமியோனுக்கு சோற்று உருண்டை ஒன்றுதான் கிடைத்தது.

திரேசிக்கு இரண்டு கிடைத்தது. பக்கத்திலேயே சிமியோன் இருந்தது, அவளுக்கு வசதியாகிவிட்டது. அவள் தனது சோற்று உருண்டையில் ஒன்றை சிமியோனின் பெட்டிக்குள் வைத்தாள்.

சிமியோன் அதைத் தடுத்தான்.

ஆனாலும் அவள் அதை வைத்துவிட்டாள். திரேசிக்குப் போதுமோ போதாதோ என்பதுதான் சிமியோனின் கவலை.

அவள் வைத்த உருண்டையை எடுத்து அவன் அவள் பெட்டிக்குள் வைத்தான்.

அவள் அதை மறுபடியும் அவன் பெட்டிக்குள் போட்டாள்.

இறுதியில் வாய்ப்பேச்சில் எத்தவித ஓசையுமின்றி இரு எச்சில் கைகளும் தாங்களாகவே அதைப் பங்குபோட்டுக் கொண்டன.

மனங்களின் தாகங்களின் தீர்த்துக் கொள்ள அந்த இரண்டு ஜீவன்களுக்கும் தெரிந்த ஒரேஒரு வழி அதுதான்.

ஏறக்குறைய எட்டு மணிக்கெல்லாம் விளாத்தியடிப் பெருவெளி நிறைந்து விட்டது.

''பொன்னால் செபமாலை'' என்ற அந்த நாடகம் இன்றுதான் முதன் முதலாக மேடை ஏறுகிறது.

நாவாந்துறைப் பேதுருப்பிள்ளை அண்ணாவிப் புல வரைத் தருவித்து, ஓர் இடத்தில் நிலையாகப் பலநாள் இருந்து அவர் பாடல்களைப் பாட இருவர் அதை எழுதி முடித்து, நடிகர்களைத் தேடி எடுத்து, முதலில் பாடல் களைப் பாட வைத்து, பின்பு நடிக்க வைத்து, பின் மிருதங் கத்துடன் இணைந்து, இசை சரிபார்த்து, பதினைந்து தடவைக்குமேல் ஒத்திகை வைத்து, இறுதி ஒத்திகையை கூத்துச் செலவுக்கான பணக் கூத்தாக வைத்து கடலில் இறால் வலைகள் கொண்டு பொது இழுப்பு இழுத்து பலர் பல விதமான சிரமங்கள் பட்டு இன்று இந்த நாட்டுக் கூத்து நாடகம் அரங்கேறுகிறது. சுமார் ஆறு மாத கால முயற்சி!

பட்டணத்து சோடினை ஆசான் பிலிப்புவின் சீர் வரிசை, உடைவரிசை, நாட்டுக்கூத்து மிருதங்க அடிகாரன் நாவாந்துறை அந்தோனிக்குட்டியின் மிருதங்க ஒழுங்கு, கிச்சின் லையிற் சக்கரவர்த்தி என்று பெயர் எடுத்த கனகு வின் லையிற் ஏற்பாடு, இவைகள் எல்லாவற்றையும் ஒரு ஒழுங்குக்குள் கொண்டு வருவதென்றால் இலேசுப்பட்ட விஷயம் அல்ல.

நாடக வழி நடத்தல் பொறுப்பாளர் அப்பாலையும், மேடை ஒழுங்குப் பொறுப்பாளர் அதிகாரமும் அங்குமிங்கு ஓடித்திரிந்து காதோடு காது வைத்துப் பேசிக் கடமை யாற்றுகின்றனர்.

கொட்டகைக்குப் பின்புறம் உடுப்பு வகைகள் நடக்கின்றன. சனஆரவாரம் அதிகமாகிறது. கிராமத்திற்கு அப்பாலும் இருந்து வந்தவர்களின் மாட்டு வண்டிகள் பெருவெளியின் எல்லைப் புறங்களில் வரிசைக்கு விடப்பட்டிருந்தன. மேலும், மேலும் வந்து கொண்டிருக்கும் வண்டிகளை விடுவதற்கே இடம் போதாமல் இருக்கிறது.

கூத்துக்காரர்களின் உறவினப் பெண்கள் கொட்டகையின் பின்பக்கத்தை நிறைத்துக் கொண்டு தங்களுக்கு வேண்டியவர்களுக்கு வேண்டியதைக் கவனிக்க மிண்டித் தள்ளுகின்றனர்.

எட்டரை மணிக்கு மேலாகி விட்டது.

ஞானமுத்துக் குருவானவரைச் சிலர் அழைத்து வந்து கொட்டகைக்கு பின்புறத்தால் மேடைக்கு ஏற்றி விட்டனர்.

முன்பக்கத்து தெருச்சீன் இழுக்கப்படுகிறது. ஞானமுத்துக் குருவானவர் மேடைமீது வைக்கப்பட்ட அழகான பெரும் கதிரையில் இருக்கிறார். அங்குமிங்குமாக வெடிகள் முழங்குகின்றன. அவைகள் ஓய சில நிமிடங்கள் ஆகின்றன. பின் பூரண அமைதி!

குருவானவர் எழுந்தார்.

கூட்டத்தை ஒரு தடவை சுற்றி நோட்டம் விட்டார். பேசத் தொடங்கினார்.

''பிரியமான கிறீஸ்தவர்களே! இந்த ஆண்டும் பெருநாளுக்கு இந்த அடைக்கலநாயகி கோவிலுக்கு வந்து இந்தப் பெரிய வைபவங்களில் கலந்து கொள்ள தேவன் எனக்கு அளித்த சந்தர்ப்பத்திற்கு நான் எல்லாம் வல்ல தேவனுக்கு நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கிறேன்.

பிரியமான கிறீஸ்தவர்களே! இங்கே நீங்கள் ஆயிரக் கணக்கில் கூடியிருக்கிறீர்கள். இன்றைய நாள் உங்களுக்கு மிகவும் பயனுள்ள நாளாகும். இப்போது 'பொன்னூல் செபமாலை' என்ற நாட்டுமெட்டு நாடகத்தை அடைக்கல

நாயகி கோவிலைச் சேர்ந்த கிறீஸ்தவர்கள் உங்களுக்கு நடித்துக் காண்பிக்கப் போகிறார்கள்.

இதை வெறும் நாடகமாக மட்டும் நீங்கள் பார்க்கக் கூடாது. எங்கள் எல்லோருடைய கிறீஸ்துவ மார்க்கத்தின் மகிமையை எடுத்துக் காட்டுவதுடன் அஞ்ஞானிகளான பிற மதத்தவர்களை மனம் திரும்பச் செய்யும் பணியையும் இந்த நாடகத்தில் நீங்கள் காணுவீர்கள்.

பிரியமானவர்களே! எல்லோரும் நாடகம் முடியும் வரை அமைதியாக இருந்து பார்த்துச் செல்வதற்கு சர்வத் திற்கும் வல்ல தேவனுடைய கிருபை உங்கள் மீது பரவக் கடவது!''

குருவானவர் பேசி முடித்து விட்டார்.

முன் சீன் மறுபடியும் இழுத்து மறைக்கப்பட்டது.

குருவானவர் போய் விட்டார்.

பகலெல்லாம் அவருக்குப் பெரும் வேலை.

அவர் பரிபூரண ஓய்வு எடுக்க வேண்டும்! பலர் அவரை அறை வீடுவரை அழைத்துச் சென்று விட்டு வந்தனர்.

கொட்டகைக்குள் மிருதங்கம் முழங்கியது. யாரோ ஒருவரின் பொதுத் தருவேற்றுப் படிக்கப்படுகிறது.

கூத்துத் தொடங்கப் போகிறது.

முன் திரை இழுக்கப்படுகிறது.

மேடையில் சிங்காசனம் வெறுமனே கிடக்கிறது. மேடைக்கு இருபுறத்திலும் சின்னஞ்சிறியவர்களான இரு கட்டியக்காரர்கள் கையில் இரு ஊன்று கோல்களுடன் நிற்கின்றனர். சிங்காசனத்திற்குப் பின்னால் இரு பெண் உருவங்கள் சாமரையுடன் நிற்கின்றனர். கதையில் முத லாவதாக பாலராசா சிங்காசனத்திற்கு வரப் போகிறார்.

உள்ளே இருந்து அவர் படிக்கும் வரகவி நீண்டு கேக் கிறது. கொட்டகைக்கு முன்னால் ஒரு முழ உயரத்தில்

'ப' வடிவில் அமைக்கப்பட்ட கிடுகு அடைப்புக்குள் பக்கப் பாட்டுக்காரர்களும் மிருதங்க வித்துவானும் இருந்து தருவுக் குப்பின்னணி கொடுக்கின்றனர்.

பாலராசா செங்கோலுடன் சபைக்கு வந்து விட்டார் சபைக்கு வணக்கம் செலுத்தி விட்டு ''சிங்காசனக் கொலு வில் அரசாளுவேன்'' எனத் தருவின் தொடரை முடித்து விட்டு சிங்கம்போல் பாயந்து சென்று சிங்காசனத்தில் அமர்ந்து விட்டார்.

''கட்டியக்காராய் நீயும் களிரிடும் வார்த்தைகள் கேளாய்!...'' என்று ஆரம்பித்து தனது மந்திரியை உடனடி யாக அழைத்து வரும்படி ஆணையிடவே கட்டியக்காரர் களில் ஒருவன் உள்ளே சென்று விடுகிறான்.

அந்தச் சிறிது வேளைக்குள்ளேயே பாலராசாவாக வந்த தானியேல் சபையின் பாராட்டைப் பெற்று விட்டார்.

அவர் மேடைக்கு வரும்போது மேலெழுந்த அவிட்டு ஒன்று வெடித்துக் குடை பரப்பியது. தொடர்ந்து சீனத்தி லிருந்து தங்கு தடையின்றி வந்து சேர்ந்த கப்பல் வெடிகள்!

இப்போது அவரின் மந்திரி வரப் போகிறார். அவரின் வரகவி கேட்கிறது. வரகவி முடிந்து மந்திரி மேடைக்கு வந்து விடுகிறார்.

மந்திரியாக வந்தவன் அந்திரேசு! அவனுக்கு ஒரு கால் சற்றுச் சிறியது. கண்ணும் ஒருவித வாக்கு. அவன் தனது நொண்டலையும் கண்ணையும் சரி செய்வதற்கு மிகவும் சிரமப்படுகிறான் அதில் அவனுக்கு முதல் வருகையில் பூரண வெற்றி கிடைக்கிறது.

அவன் நொண்டிக் கொண்டே வந்து சேருவான் என்று வேளையோடையே சிரிப்பதற்கு எதிர்பார்த்திருந்தவர்கள் ஏமாந்து விட்டார்கள்.

அவருக்காகவும் வெடிகள்!

அதைத் தொடர்ந்து அரசனுக்கும் மந்திரிக்கும் நாட்டு நடப்புகள் பற்றிய கேள்வி பதில்கள். மந்திரிக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்ட அரசர், மனைவியை அழைத்து வரும்படி கட்டியக்காரர்களைப் பணிக்கிறான்.

உள்ளே ராணி வரும் வரகவி கேட்கிறது. பச்சை நிறத் தேவதையாக ராணி மேடைக்கு வந்து விட்டாள். ராணியாக வந்த சலமோனின் இயல்பான நடை ராணிப் பாத்திரத்தைத் தூக்கி வைத்து விட்டது.

''அரசருக்கரசே போற்றி, அருமை சேர் துரையே போற்றி!'' என்று தொடங்கி, ''என்னை அழைத்த காரணம் யாதோ பிராண நாதா?'' என்று கேட்டுக் கொண்டே சிங்காசனத்தின் பாதியில் ராணியாக வந்த சலமோன் தாவணியை வீசி சென்றமர்ந்த காட்சி எல்லோரையும் பரவசப்படுத்தி விட்டது.

அதற்குப்பின் இருவரும் இருந்து கொண்டே தங்கள் அருமை மகன் பாலசூரனை அழைத்துவர கட்டியக்காரனை ஏவுகின்றனர்.

முன் பாலசூரனாக யோசேப் துள்ளிக் கொண்டே வந்து சேர்ந்து தாய் தந்தையருக்கிடையே சிங்காசனத்தில் அமர்ந்து கொள்கிறான்.

அவன் உடல் நலம் விசாரிக்கப்படுகிறது. கர்த்தரின் நெறியிலே வாழ்க்கையை நடத்தப் பழகிக் கொள்ளும்படி அவனுக்கு உபதேசிக்கப்படுகிறது.

பலத்த ஆரவாரத்திற்கு இடையே முதலாவது காட்சி முடிந்து, தெருச்சீனை பக்குவமாக இறக்கி விட்டான் சோடனைகாரப் பிலிப்பன்.

இதுவரை திரைக்குப் பின்னால் நின்று கொப்பி பார்த்து, நடிப்பவர்களுக்கு கேட்கக் கூடியதாகவும், பார்வையாளர்களுக்குக் கேட்காதபடியும் பயிற்றிக் கொண்டிருந்த சட்டம்பியாருக்கு இதற்கிடையிலேயே களைப்புத் தட்டி விட்டது.

அது மிகக் கடினமான வேலைதான்.

நடிகர்கள் தொடர் வசனங்களை மறந்து தவிக்கும் போது சரியாக அந்த இடத்தில் இருந்தே தொடரை நினைவுபடுத்த வேண்டும்...

முதல் காட்சிக்கே நேரம் அதிகம் ஆகிவிட்டது. இன்னும் பதினைந்து காட்சிகள் நடந்தாக வேண்டும்.

அவசர அவசரமாகவே இரண்டாம் காட்சி தொடங்கி விட்டது.

இப்போது மேடைக்கு 'வலேந்திரி ராசன்' என்ற இந்து மத அரசன் வருகிறான்.

அவனுக்கான வரகவி கேட்கிறது. வணக்கத்துடன் அவன் மேடைக்கு வந்து சிங்காசனத்தில் துள்ளி ஏறி அமர்ந்து கொள்கிறான். அவனுக்கு அணியப் பட்ட மூங்கில் குழாய் போன்ற இறுக்கமான கால்சட்டை, கால் உயர்த்தி சிம்மாசனத்தில் ஏறுவதற்கு இடைஞ்சலாகவே இருந்தது. ஆனால் அவன் சமாளித்து விட்டான்.

மிகவும் கீழ்க் குரலில் வலேந்திரியன் என்ற அந்த இந்து அரசனாக ஆசீர்வாதம் பாடி வந்த தருவுக்கு மேடையின் பக்க வாட்டில் நின்று அண்ணாவித்தனம் செய்தவர்களே தாளம் போட்டு இரசித்துக் கொண்டனர்.

வழமையான வெடிகள்!

இரு அரசர்களுக்கும் மந்திரியாக அந்திரேசுவே வர வேண்டி இருந்ததினால்; தலைமுடிச் சிகரத்தில் மட்டும் சிறிது மாற்றம் செய்து, இயல்பான தாண்டலுடன் அந்திரேசு மந்திரியாக வந்து சேர்ந்துவிட்டான்.

எல்லோரும் இப்போதுதான் இயல்பான கால் சிறுத்த; கண் சரிந்த அந்திரேசுவைக் கண்டனர். கரகோஷம் செய்தனர்.

மறுபடியும் இராசாவுக்கும் மந்திரிக்கும் ஊர் விசாரணை. மந்திரி போனதும் மனைவியை அழைத்து வரும்படி வலேந்தியரின் ஆணை.

ஆணைப்படி மனைவி வருகிறாள். அவளாக வருபவன் சிறு வயதிலிருந்தே நாட்டுக் கூத்து மெட்டுகளைக் கேட்டிராத மோசேஸ். ஆனாலும் தாளம் பிசகாமல் தருச் சொல்லிக் கொண்டு அவன் அவளாக வந்து மேடையில் அன்னம்போல நடந்து வலேந்திரியரின் வலது தொடையில் ஓடிச் சென்று உட்கார்ந்து கொண்ட காட்சி மோசேசை உயர்த்திவிட்டது.

இராணிக்கும், இராசாவுக்கும் இடையே காமரசம் ததும்பும் உரையாடல்கள். இந்துசமய இராசாவல்லவா; அப்படித்தான் சித்தரிக்கப்பட்டிருக்கிறார்.

உரையாடல் சரசமாடலுக்குப்பின் தங்கள் ஒரே மகளான மனோரஞ்சிதத்தை அழைத்துவர உத்தரவு!

''எடி, எடி, மனோரஞ்சிதம் வரப்போறாளடி!'' என்று இரசிகப் பெண்களிடையே பரபரப்பு!

திரைக்குள் இருந்து சுவாம்பிள்ளையின் கீச்சிட்ட குரல் வரகவியாக வருகிறது.

பிற்பாட்டுக்காரர்களும் அக்குரலுடன் இணைந்து கீச்சிட வேண்டும்! மிகக் கஷ்டமான வேலை! ஆனாலும் செய்துவிட்டனர். மனோரஞ்சிதம் சகல இலட்சணங்களும் பொருந்திய சிவப்பு நிறத் தேவதையாக மேடைக்கு வந்து விட்டாள். அரசனும் அரசியும் சிங்காசனத்தை விட்டு இறங்கிவந்து மகளை அள்ளிச் சென்று தங்களுக்கு நடுவே இருத்திக்கொண்டனர்!

மனோரஞ்சிதமாகிய சுவாம்பிள்ளை நடந்து வந்த நடை, அது ஒரு வாலைக்குமரியின் துள்ளு நடை!

இரசிகர்களின் ஆரவாரம் ஒன்றிணைந்து வானைத் தொட்டது.

வெடி ஓசைகள் காதுகளைப் பிய்த்தன.

அவிட்டு வாணம் ஒன்று மேல்நோக்கி வெடித்து, அதற்குள் இருந்து ஒற்றைக் குடை விரிந்து வெகுதூரம் போய் மறைந்தது.

திரேசியும் சிமியோனும் இரண்டு சிறிசுகளும் கூட்டத்திற்கு நடுவே ஒரு பாயிலும், அவர்களுடன் வந்த கொய்யகக் காரிகளும், மற்றைய குழந்தைகளும் வேறு பக்கமாகவும் இடம் பிடித்து இருந்து கொண்டனர்.

திரேசி சிமியோன் கரத்தைப் பற்றியபடியே இருந்தாள். சிமியோனுக்கு அவளை நெஞ்சோடு அணைத்துக் கொண்டிருக்க வேண்டும் போல இருந்தது. ஆனாலும் அது முடியக் கூடியதல்ல. இப்போதே ஜனங்களின் பார்வையெல்லாம் இடை இடையே அவர்களை மொய்த்துக் கொள்ளும்போது......

மனோரஞ்சிதத்தை இந்து சமய நெறிமுறை தவறாமல் வாழவேண்டுமென்று தாய் தந்தையரின் உபதேசம்!

இரண்டாவது காட்சியும் முடிந்தது!

நிலவு நன்றாகச் சரிந்துவிட்டது. நேரம் பத்துக்கு மேல் இருக்கும்.

அடுத்த காட்சி நந்தவனம்!

''வண்ண மாமயில் ஆடுதே...! எங்கள் அன்பான மாளிகையில்...'' என்று பாடிக் கொண்டே இரு சேடிகளுடன் மனோரஞ்சிதம் வந்து போகிறாள்.

அதற்கு அடுத்து பாலராசன் வலேந்திரி மன்னனிடம் திறை வாங்கி வரும்படி ஆள் அனுப்புதல்; அடுத்து வலேந்திரி மன்னன் மறுத்தல். அதற்கு அடுத்து இரு அரச படைகளும் நடத்தும் போர்! அதற்குப் பின்பு போரில் வலேந்திரி மன்னனிடம் பாலராசன் தோற்றுப் போகிறான்.

அடுத்த காட்சித் தயாரிப்புக்கு அரை மணிநேரம் ஆகிவிட்டது. போரில் தோற்றுப் போன பாலராசா மன்னன்

தேவாலயத்தில் வேண்டுதல் செய்ய, சிறகு முளைத்த தேவ தூதுவன் வானத்திலிருந்து இறங்கி மந்திர வாள் ஒன்றினையும் செபமாலை ஒன்றினையும் கொடுத்து மறையும் காட்சி. இந்தத் தேவதூதனாக வெலிச்சேரின் மகனாக மாசிலாமணி என்ற சிறுவனை ஏற்பாடு செய்திருந்தனர். சுமார் ஐம்பது யார் தூரத்திலிருந்து அந்தத் தேவதூதன் அந்தரத்தில் பறந்து வருவது போல ஒரு காட்சி அமைக்கப் படுகிறது. அதுதான் இவ்வளவு தாமதம்!

சோடனைக்காரப் பிலிப்பர் மூன்று வடக்கயிறுகளை தொலைவிலிருந்து பனைமரம் ஒன்றில் கட்டி, மேசை கதிரைகள் வைத்து, 'மாசிலாமணி' என்ற அந்த அழகான சிறுவனை இறக்கைகளோடு உயரத்திற்கு ஏற்றி, அவனின் முதுகிலே கம்பிகள் மூன்றை இணைத்து ஒவ்வொரு வடத்திற்கு ஊடாகவும் செருகி எடுத்து, உரிய நேரத்தில் தேவதூதனை அதிலிருந்து கொட்டகைக்கு வந்து காட்சி கொடுக்க வைக்கவேண்டும்!

''சம்மனசு வரப்போகுது!'' என்ற பேச்சுகள் பரவலாகக் கிளம்பவே பாலராசன் கோவிலுக்குள் இருந்து வேண்டுதல் விருத்தம் படிக்கிறான். அந்த விருத்தத்தை பாலராசன் மிக உருக்கமாக— பாலராசனாக வந்த தானியேல் படித்து முடித்ததுதான் தாமதம், கம்பிகளில் சிறு ஓசையுடன் தேவதூதன் வானத்திலிருந்து வருவதுபோல மிகப் பக்குவமாக இறக்கிவிட்டார்.

அற்புதம்!

இப்படி இந்தக் காட்சி அமையுமென்று யாரும் எதிர் பார்க்கவில்லை. பாராட்டு ஓசைகள் வானைப்பிளந்தன. சோடனைக்காரப் பிலிப்பர் தான் போர்த்தியிருந்த சால்வையைத் தூக்கி நெஞ்சை நிமிர்த்திக் கொண்டார்.

பாராட்டுக்குரியவன் அவன்.

''நளப் பிலிப்பன் நல்லாத்தான் செய்திருக்கிறான்'' பின்புறப் பார்வையாளர்களில் இருந்து ஒரு குரல்.

''எப்பிடி இருந்தாலும் அவன் பறங்கித்தெரு நளவன். நல்லாத்தான் காணும் செய்வான்!'' இப்படி வேறோர் குரல்!

''நெட்டித்தனமாகச் செய்து போட்டான் எண்டு சொல்லிறதுக்கு நளவன், கிளவன் எண்ட வீண் கதை ஆர் கதைக்கிறது? ஏகலைவனெட்டை துரோனாச்சாரி பெருவிரலை வேண்டினதைப் போலை பிலிப்பன்ரை மூளைவிய வாங்க யோசனை போலை கிடக்கு.''

மிகவும் தடித்ததாக இந்தக் குரல் எழுந்தது. குரல் வந்த திசையைப் பலர் பார்த்தனர்.

பின்னே நளநெஞ்சுச் சுப்பன் நின்றான்.

பென்னம் பெரிய உருவம். குங்குமப் பொட்டு. கக்கத்துள் தடி. அவனுக்குரிய இத்தியாதி கோலத்துடன்... எல்லோர் தலைகளும் மேலாக அவன் தலை தெரிந்தது.

''ஆரடா அவன்! நாங்கள் கதைச்சா ஆரடா கேக்கிறது?'' என்று பின்னே இருந்து மீண்டும் அதே குரல்!

''நான்தான்ரா கேக்கிறன் சுப்பன்! கூத்துப் பாக்க வந்தா கூத்துப் பாத்திட்டுப் போறதுக்கு நளம், பள் எண்டு கதைக்கிறதுக்கு நீ ஆரடா?''

நெஞ்சுச் சுப்பனின் மற மறத்த குரல்!

சூழலில் இருந்தவர்களுக்கு ஏதோ ஒன்று நடக்கப் போவதான அறிகுறி தென்பட்டது. சற்று விலகிப் போக அவர்கள் எண்ணியபோது சன நெரிசல் ஏற்பட்டு விட்டது!

ஏதோ குழப்பம் என்று தொலைவில் இருந்தவர்களுக்கும் விளங்கி விட்டது. கொட்டகைக்கு அருகே இருந்து கஸ்பாறுவும், அப்பாலைக் கிழவனும் அவ்விடத்தை நோக்கி, நிலை கொண்டிருக்கும் ஜனங்களைக் கடந்து கடந்து... குறிப்பிட்ட இடத்தை வந்து சேர்ந்தனர்.

''சகோதரங்கள் கூத்தைக் குழப்பிப் போடாதையுங்கோ... சகோதரங்கள் ஒருத்தருக்கு ஒருத்தர் ஒக்கலிச்

சுப்போங்கோ... சகோதரங்கள்!'' என இரு கரங்களையும் மேல் உயர்த்திக் கும்பிட்டுக் கொண்டே கஸ்பாறு கேட்டான்.

''கஸ்பாறு நான் சண்டை கிண்டைக்கு வரேல்லை. உதுக்கை ரெண்டு மூண்டு வடுகுகள் நிண்டு சோடினைக் காறப் பிலிப்பற்ரை கெட்டித்தனத்தை பொறுக்காமல் நளவன், நளவன் எண்டு பேசுறாங்கள். நானும் நளவன் தான்! இஞ்சைபார் இதிலை நிக்கிறவங்களும் நளவர் தான். தெரியுமே இவன்கள்ளை ஒருத்தன் கூட்டத்துக்கை பாஞ்சமெண்டா பாரதப் போரிலை கடோர்க்கசன் பாஞ்ச மாதிரித்தான் இருக்கும். கூத்தைக் குழப்பக்கூடாது எண்டு தான் பொறுத்துக் கொண்டு நிக்கிறம். இல்லாட்டி இவங் களைப் பச்சடி போட்டிடுவம்!''

நெஞ்சுச்சுப்பன் கஸ்பாறுவைப் பார்த்து அடக்கமாகக் கூறினான். அவன் பேசும்வரை கூட்டத்தில் மூச்சுக் கூடக் கேட்கவில்லை.

''இனி ஒண்டுமில்லைச் சுப்பு, அவையும் கதையா யினம் விடுங்கோ சுப்பு!''

அப்பாலைக் கிழவன் மிகவும் நைஸாகவும், இதமாக வும் பேசி முடித்துவிட்டார்.

இதற்கு மேல் சுப்பன் பேசவில்லை.

யாரும் பேசவில்லை.

சலசலப்பு அடங்கிவிட்டது!

மறுபடியும் நாடகம் தொடங்கிவிட்டது.

மறுபடியும் போர்!

தேவதூதனிடமிருந்து செபமாலையையும் மந்திர வாளையும் பெற்றுக் கொண்ட பாலராசன் துணிவுடன் போர் செய்கிறான்.

இம்முறை வலேந்திரிக்குத் தோல்வி! அவனும் சகாக் களும் நாட்டை விட்டு காட்டுக்குள் ஓடித் தப்புகின்றனர்.

முன் திரை இறக்கப்பட்டு, மீண்டும் மேலே ஏற்றப் பட்டபோது காட்டுக்குச் சென்ற வலேந்திரி திருடர் அர சொன்றை அமைக்கின்றான். இந்தக் காட்சி முடியும் போது......

கொட்டகையின் முன்புற இடமிருந்து, ஒரு வெள்ளை வெளெரென்ற துணியில் நெருப்பு வத்திகளால் ஒட்டப் பட்ட சொல் தொடர் ஒன்று நகர்ந்து... நகர்ந்து வலப் பக்கத்தில் மறைகிறது.

இந்த நெருப்பு வத்தி நகர்ந்து மறைந்தபோது ''சில வருடங்களுக்குப் பின்பு...'' என்ற எழுத்தும் மறைந்தது.

கூட்டத்தில் கரகோஷம்!

கைதட்டல் ஓய்ந்த போது...

திரை மூடித் திறக்கப்படுகிறது!

பயங்கரமான காட்டு சீன் ஒன்று!

இடை இடையே குழை கொப்புகள் குற்றி நடப் பட்டிருக்கிறது! மான், மரை, பன்றி, யானை உருவங்கள் அங்குமிங்குமாக நகர்த்தப்படுகின்றன.

''வேடரே வருவீர், நல்ல வனத்து மிருகமதை சினத் தில் அரிந்து கொல்ல வேடரே வருவீர்!''

இந்தக் குரல் வானளவுக்கு உயர்ந்து முழங்க இரண் டாம் பாலசூரனாகிய சின்ன நல்லையா நாண் ஏற்றிய வில்லுடன் இரு வேடுவர்களுடனும் காட்டுக்குள் நுழைந்து விடுகிறான்.

'சபாஸ்!' குரல்கள் எங்கும் ஒலித்தன!

''வண்சிமோர்! வண்சிமோர்!'' என்று பல குரல்கள் எழுந்தன! சம்பிரதாயப்படி இந்த வேண்டுகோள் வந்து விட்டால் இதே காட்சியை குறிப்பிட்ட அந்த கதாபாத்திரம் இன்னொரு தடவை செய்து காட்டவேண்டும்! இது அங்கீகரிக்கப்பட்ட பொதுவிதி!

பாலசூரனான சின்ன நல்லையா அதற்கு மதிப்புக் கொடுத்து அதே தருவை மறுபடியும் பாடி காட்டுக்குள் வேட்டையாடப் பாய்ந்து அங்குமிங்கும் பதுங்கி, பதுங்கி வேட்டையாடிக் கொள்கிறான்.

மறுபடியும் கரகோஷம் வானைப் பிளக்கிறது. வேட்டை வேகத்தில் பாலசூரன் உதவியாளர்களைப் பிரிகிறான். வேட்டைக்கு வரும்போது தந்தையால் கொடுக்கப்பட்ட செபமாலையையும், மந்த்ரவாளையும், இழந்து காட்டில் அலைந்து திரியும் காட்சி!

ஒரு கட்டத்தில் இராட்சதன் ஒருவன் வருகிறான். இன்னோர் கட்டத்தில் செட்டி ஒருவன் வருகிறான். வேறோர் கட்டத்தில் ஆட்டிடையன் வருகிறான். முடிவில் காடுகளில் அலைந்து திரியும்போது தற்செயலாக சேடிகளுடன் வந்த காட்டரசனாகிவிட்ட வலேந்திரியினுடைய மகள் மனோரஞ்சிதத்தைச் சந்திக்கிறான்.

இது ஒரு தனிக்காட்சி!

மனோரஞ்சிதத்திற்கும் பாலசூரனுக்கும் காதல் பிறக்கிறது!

பாலசூரனாகிய சின்ன நல்லையாவும், மனோரஞ்சிதமான சுவாம்பிள்ளையும் காதல் காட்சியில் நடித்துவிட்ட அந்த நடிப்புக்கு கணத்திற்குக் கணம் ஆரவாரமே மேலோங்கியது.

இராகங்களையும், தாளங்களையும் மாற்றி, மாற்றி அவர்கள் பாடுகிறார்கள்.

ஒரு தடவை பாலசூரனின் மார்பிலே மனோரஞ்சிதம் சாய்ந்து குழைந்தபோது...

தெரிந்தோ தெரியாமாலோ திரேசி சிமியோனின் நெஞ்சிலே சாய்ந்து...

எல்லோராலும் எதிர்பார்த்த காதல் காட்சி. 'அப்பிளாஸ்' வாங்கி முடிந்தது. அடுத்த காட்சியில் மனோரஞ்சி

தம் தாய் தந்தையரிடம் காதலனை அழைத்துச் சென்று அறிமுகப்படுத்துகிறாள்.

சினங்கொண்டெழுந்த வலேந்திரிராசன் அவனைச் சிறைக்குள் தள்ளுகிறான்.

அடுத்த காட்சியில் தந்தையின் நிபந்தனைகளை சிறைக்குள் இருக்கும் பாலசூரனுக்கு விளக்குகிறாள். பாலசூரன் மறுக்கிறான். ''சைவ மதத்திற்கு வரேன்!'' என்று அறுதியிட்டுக் கூறுகிறான்.

கிழக்கு வெழுத்துக் கொண்டு வருகிறது.

இன்னும் மூன்று காட்சிகள் காட்டியாக வேண்டும்.

ஒன்று சிறைக்குள் பாலசூரனுக்கு வலேந்திரி மன்னன் கொடுக்கும் வெவ்வேறு சித்திரவதைகள்.

மற்றது மனோரஞ்சிதம் பலவித தந்திரங்கள் செய்து பாலசூரனை மீட்டுக் கொண்டு வெளியேறுதல்.

இறுதியானது, இருவரும் பாலராச மன்னனிடம் வந்து நடந்தவற்றை அவரிடம் கூறுதல், பாலசூரனுக்குப் பட்டம் சூட்டுதல்!

அதற்கு அப்பால், இறுதியில் நாடகத்தின் அண்ணா விப் புலவருக்கு கௌரவமளித்தல்!

அப்பாலைக் கிழவனும், அதிகாரமும், கஸ்பாறும் ஒரு நிமிடம் கூடிப் பேசினர்.

இரண்டு காட்சிகளை இரத்துச் செய்வதென முடிவா யிற்று. பாலசூரனின் சித்திரவதைக் காட்சி நிறுத்தப்பட் டது. மனோரஞ்சிதத்தின் சாகசச் செயல்கள் தவிர்க்கப் பட்டன.

அடுத்த சீன் இழுக்கப்பட்டபோது பாலராசன் கொலு விருக்க, பக்கத்தே மனைவி இருக்க பாலசூரனும், மனோ ரஞ்சிதமும் ஓடிச் சென்று அவர்கள் காலடிகளில் சரணடை கின்றனர்.

பொழுது காலித்து விட்டது

பாலராசன் தனது மணிமுடியைக் கழற்றிப் பால சூரனின் தலையில் அணிவிக்கிறார். மாமியார் மருமகளை அரவணைத்துக் கொள்கிறாள்.

மனோரஞ்சிதம் முறைப்படி மாமியாரின் பாதங்களைத் தொட்டு வணங்குகிறாள்.

திரை மூடப்படுகிறது!

திடீரென்று திரை மீண்டும் திறக்கிறது. தன்னந் தனியாக சட்டம்பியார் மேடையில் நிற்கிறார்; பேசத் தொடங்குகிறார்.

''சகோதரர்களே! நேரம் போதாமையால் முக்கிய மான சில காட்சிகளைக் காட்ட முடியாமல் போன தினாலும் குறிப்பாக 'பொன்னூல் செபமாலை' நாடகப் புலவரும் அண்ணாவியாருமான புலவர் பேதுருப்பிள்ளை அவர்களைக் கௌரவிப்பதற்கு நேரம் போதாமையாலும், எல்லாவற்றையும் விட பல பேர்களின் வேண்டுதலுக் கிணங்கியும் இன்று இந்த நாடகம் மங்களம் பாடப்படா மலேயே முடிகிறது. அடுத்த மாதம் ஆறாம் தேதி இது திரும்பவும் மேடையேறும்'' என்று அவர் மட்ட சுத்த மாகப் பேசி முடித்துவிட்ட போது, முன் திரை மூடிக் கொண்டது!

காலைச் சூரியனின் வெயில் கீற்றுக்கள் பரவிக் கொண்டிருந்தன.

கூடத்து முடிந்து சிற்றொழுங்கைகள் குச்சொழுங்கைகள் ஊடாகப் தாவடிப் பெரு ஒழுங்கையில் கால் வைத்த போது...

ஒழுங்கை முடக்கில்...

தம்பாப்பிள்ளையரின் படலைக்கு முன்னால் கூடி நின்ற கூட்டத்தைப் பார்த்து சிமியோன் சற்றுத் திகைத்து நின்றுவிட்டான். திரேசி பயத்தினால் சிமியோனின் இடக் கரத்தை இறுகப் பிடித்துக் கொண்டாள்.

மற்றப் பெண்களும் சிறிசுகளும் பயந்து அப்படியே தரித்துப் பின் தங்கி விட்டனர்.

ஏதோ நடக்கக் கூடாதது நடந்து விட்டதாகவே சிமியோன் எண்ணினான். தாவணிக்காரி திரேசியைக் கண்டு அத்தனை கண்களும் அவளை எரித்துவிட முயன்றன.

சிமியோன் அவள் கைகளை இறுகப்பற்றிக் கொண்டு, இடப்புற சிற்றொழுங்கையால் திரும்பி நிதானமாக நடந்து சென்றான். எது நேரிடினும் அதைச் சமாளித்து விடும் மன விருப்பு அவனுக்கு வந்துவிட்டது.

திரேசியின் உடல் நடுக்கம் இப்போது இல்லை... அவள் இப்போது தனது கால்களை எட்டிப்போட்டு அவனுக்கு இணையாக நடக்க முயற்சிக்கிறாள். மற்றைய பெண்களும் குஞ்சு குருமன்களும் விரைவாக அவர்களுக்குப் பின்னால் செல்கின்றனர்.

நின்ற கூட்டத்தின் கண்களுக்கு மறைந்து சிறிது தூரம் சென்றுவிட்டபோது திரேசி பேசினாள்!

''கமக்காரன் வீட்டடியிலை ஊருப்பட்ட சனமாய்க் கிடக்கு; ஏன் தெரியேல்லை'' என்று கேட்டாள்.

''எனக்கு என்னெண்டு தெரியும்; ரா முழுதும் நானும் உன்னோடைதானை இருந்தனான்... வீட்டை போய் அறிவம்!'' என்று பதில் கூறிக் கொண்டே சிமியோன் நடந்து கொண்டிருந்தான். விரைவில் எல்லோரும் கோவிலடிக்கு வந்துவிட்டனர்.

சிமியோனின் கண்கள் முதலில் பார்த்ததெல்லாம் கோவில் கட்டிடம் கட்டியபடியே இருக்கிறதா? என்பதைத் தான்!

எல்லாம் அப்படியே இருந்தன!

வேலைக்கு ஆட்கள் இன்னும் வரவில்லை.

இவர்களைக் கண்டதும் கூட்டம் கூடிவிட்டது.

''கமக்காறன் வீட்டடியிலை சனமாய்க் கிடக்கு; என்னத்துக்கெணை?'' திரேசி ஒருத்தியைக் கேட்டாள்.

''ஐயோ, பாவம்! வெள்ளைச்சிக் கமக்காறிச்சி கமக்காறனைப் போலை இல்லை; அது ராத்திரிச் செத்துப் போச்சாம்!''

இப்படி ஒருத்தி கமக்காறியின் மேல் அனுதாபப் பட்டுக் கொண்டே கூறினாள்!

திரேசி பேசாமல் நின்றாள்!

இது அவள் வெள்ளைச்சிக் கமக்காறிச்சிக்குச் செய்யும் அஞ்சலியாகவும் இருக்கலாம்!

''பாவம்! தங்கப் பவுணான மனிசி!''

இப்படி இன்னொருத்தியின் குரல்!

''அதோடை மட்டுமே, பாவம் அந்த செவ்வந்தி நாச்சியார் பெட்டைக்கு நேத்து மத்தியானம் போலை மூளை சரியில்லாமல் போச்சாம்! மோளுக்கு விசர் வந்திட்டு தெண்ட கவலையிலைதான் கமக்காறிச்சி செத்துப் போனவாம்!''

இப்படி இன்னொருத்தி!

சிமியோன் பேசாமலே நின்றான்.

அவனுக்கு வெள்ளைச்சிக் கமக்காறச்சி பற்றியோ, செவ்வந்தி நாச்சியாரைப் பற்றியோ எதுவும் தெரியாது. தம்பாப்பிள்ளை கமக்காரனை ஓரிரு தடவைதான் அவன் கண்டிருக்கிறான். ஆனால் அவரைப்பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறான்.

இரணைமடுக் காட்டுக்குள் சாக்கோடு தொங்கிய சேனாதிராசாவின் கொலையோடு தொடங்கி, வல்லைப் பாலத்தில் சிங்களைப் பெட்டையின் மரணத்தின் ஊடாக பஞ்சம மக்களை இரு என்ற இடத்தில் இருத்தி, எழும்பு என்ற இடத்தில் எழும்ப வைக்கும் வரையில்......

சிமியோனால் எதையும் முடிவு கட்டமுடியவில்லை.

அப்போதுதான் தம்பன் எங்கோ இருந்து அவசர அவசரமாக வந்து சேர்ந்தான்.

''என்ன, தம்பண்ணை! என்ன புதினமாம்?'' சிமி யோன் கேட்டான்.

''புதினமென்னடா தம்பி, தம்பாப்பிள்ளை நயினார் நயினாத்தியை முடிச்சுப்போட்டார் போலை கிடக்கு!'' தம்பன் புதுக் கதை ஒன்றைக் கூறினான்.

'''நானும் தம்பண்ணன் இப்ப ஒரு அடிக்கு முந்தி அப்பிடித்தான் நினைச்சன்'' என்று சிமியோன் தனது ஊகத்தை இந்த வேளையில் ஊர்ஜிதப்படுத்தினான்.

''ஓமெடா தம்பி, வெள்ளச்சி கமக்காறச்சி ஆரோடை யும் தொடுப்பாய் இருக்கும்; இவர் அறிஞ்சிட்டு இப்பிடியும் செய்திருப்பார்!'' சற்று நடுத்தரமான ஒருத்தி இப்படிச் சொன்னாள்.

''சாய், அவ அப்பிடிப்பட்ட ஆள் எண்டு நான் நினைக் கேல்லை!'' இன்னோர் குரல் வெள்ளைச்சிக் கமக்காறிச்சி பக்கமாகக் கேட்டது.

''இவ கண்டவ! கமக்காறச்சி கமக்காறனோடை கோவிச்சுக் கொண்டு பத்து வருசம் இருந்துபோட்டு, மாமியாற்றை செத்த வீட்டோடை வந்து, வந்த கையோடை அந்தப் பெட்டையைப் பெத்தவ! இப்ப என்ன அவவுக்கு கன வயசே!'' இப்படி முன்னவளே சொன்னாள்.

''என்ன அப்பிடிச் சொல்லுறாய்; ஒரு வரியம் கழிச்சுத் தானே அவபிள்ளைப் பெத்தவ. சும்மா நாக்கிலை நரம்பில்லாமல் எங்களுக்கேன் வீண்கதையளை? அந்த மனிசியும் செத்தும் தெய்வமாப் போச்சு!'' இப்படி சமரசம் செய்து திருப்திப்பட்டுக் கொண்டால் வேறொருத்தி.

''தம்பி, சிமியோன் இண்டைக்குக் கோயில் வேலை நிப்பாட்டியிருக்கெண்டு ஆக்களிட்டை சொல்லிப் போட்டு வாறன்; என்னெண்டாலும் அயலுக்கை ஒண்டு நடக்கேக்கை நாங்கள் வேலை செய்யிறது சரியில்லை. வாவன் ரெண்டு பேரும் போய் சொல்லிப் போட்டு வருவம்'' என்று தம்பன் கூறவே சிமியோனும் புறப்பட்டு விட்டான்.

பனை வடலிக்கூடலைத் தாண்டி போய்க் கொண்டிருந்தபோது, தம்பன் சிமியோனின் காதில் முணு முணுத்தான். அன்று காலை பூக்கண்டரைக் கண்டதிலிருந்து தொடங்கி, பொதுவாகச் சொல்லிக் கொண்டே போனான்.

நேற்று மத்தியானம் போலை தம்பாம்பிள்ளையர் வீட்டில் மகள் செவ்வந்தி ''ஐயோ அம்மாவை ஐயா சாக் கொல்லுறார்...'' என்று குரல் வைத்தாகவும், அதற்குப் பின் அங்கு ஒரு சத்தமும் கேட்கவில்லையென்றும் ''ஏதோ பொஞ்சாதிக்கு அடிக்கிறான்'' என்று நினைத்தபடி தான் எழும்பி ஒழுங்கையால் போனதாகவும், கோவிய முத்தி பதை பதைத்துக் கொண்டு மயிலு வீட்டடிப் பக்கம் போனதைக் கண்டதாகவும், நாலு மணி போல தான் திரும்பி வீட்டை வந்தபோது விசருக்கு வைத்தியம் செய்யும் அம்பலவாணப் பரியாரியின் சட்டைக்கார் தம்பாப்பிள்ளை வீட்டு ளாசலில் நின்றதாகவும், அப்போது தனக்கு ஐம்மிச்சம்

வந்து வேலியால் எட்டிப் பார்த்தபோது பரியாரியாரும், மயிலுவும் செவ்வந்திப் பெட்டையை அணைத்துக் கொண்டு வந்து காருக்குள் ஏற்றிச் சென்றதாகவும், அதற்குப்பின் தம்பாப்பிள்ளையர் வீட்டில் இரவு நிலவு பட்டதற்குப்பின் நாலைந்து பேர்களுடைய நடமாட்டம் தெரிந்ததாகவும் பூக்கண்டர் சொன்னதை ஒன்றும் தவறவிடாமல் சிமியோன் காதில் தம்பன் போட்டுக் கொண்டே போனான்.

சிமியோனுக்கு சகலதும் விளங்கிவிட்டது. இருவரும் தம்பாப்பிள்ளையர் வீட்டு மறு ஒழுங்கையால் திரும்பிய போது அம்பலவாணரின் காரில் இருந்து குமரவேலு விதானையும் வேறு இருவரும் இறங்கிச் செல்வது தெளிவாகத் தெரிந்தது. முகம் மட்டுப் பிடிக்க முடியாத அந்த இருவரில் ஒருவர் அப்போதுதான் ஏஜெண்டுத் துரையினால் நியமனம் பெற்ற புதிய மணியகாரனாக இருக்கவேண்டும். மற்றவன் மயிலுவுமாக இருக்க வேண்டும்.

மணியகாரனைத் தம்பன் முன்பு ஓரிரு தடவைகள் பார்த்திருக்கிறான். ஆயினும் சரியாக அடையாளம் தெரியவில்லை. தம்பனும் சிமியோனும் தங்கள் பாட்டில் அப்பால் சென்றுவிட்டனர்.

கடைசியாகத் தம்பன் ''தம்பி டேய், கமக்காறன் விதானை மணியகாறனைக் கொண்டு வந்து ஒரு மாதிரிச் சரிக்கட்டப் பாக்கிறான். பூக்கண்டர் மற்றப் பக்கத்தாலை கமக்காறிச்சியின்ரை மச்சான்காறன் பட்டணத்திலை அப்புக்காத்தாய் இருக்கிறான்; அவரிட்டை போய் இருக்கிறார். எக்கணம் பாரன் நடக்கப்போறதை!'' என்று சொல்லி முடித்துவிட்டு, கால்களைத் துரிதப்படுத்தி நடந்து கொண்டிருந்தார்.

தம்பனின் நீண்ட கால்களுடன் போட்டி போட்டு எட்டி மிதிக்க சிமியோனால் முடியவில்லை.

தம்பாப்பிள்ளையர் வீட்டுக் கடிகாரம் பதினொன்று அடித்து ஓய்ந்த போது, அம்பலவாணரின் கட்டைக்கார் விதானை, மணியகாரரர் ஆகியோரை ஏற்றிக் கொண்டு கிளம்பிவிட்டது.

வெளிப்படலைவரை வந்த மயிலு, 'இவையை விட்டிட்டு சுணங்காமல் வரட்டுக்காம்' என்று அம்பலவாண ருக்கு மட்டும் கேட்கும்படி கூறிவிட்டு நின்று விட்டான்.

முதல் மேளம் தட்டப்படும் ஓசை கேட்டது. மேளம் தட்டுபவனின் வருகைக்காகப் பெண்கள் ஒரு தடவை ஒப்பாரி வைத்து முடித்து விட்டனர்.

கூடியது அரை மணி நேரத்தில் ஒரு தட்டுப்பந்தலும் போடப்பட்டு சாத்திரப்படிக்கு கட்டாடி கதிர்காமனும் மூன்று சேலைகளைச் கட்டி விட்டான்.

பரியாரி கணவதியும் கையோடு நின்றான். நெருப்புச் சட்டி உறிகட்டுவதில் அவன் ஈடுபட்டிருந்தான். நான்கு பேர்கள் அவசர அவசரமாக கிணற்றடியில் நின்ற கமுகு ஒன்றினைத் தறித்து பாடை என்ற பெயரில் ஒரு கட்டைக் கட்டிக் கொண்டிருந்தனர்.

பட்டணத்தில் இருந்து விரைவாக பிரேதப்பெட்டி ஒன்று றிச்சோவில் தருவிக்கப்பட்டிருந்தது. கோடிப் புறத் திலும் கிணற்றடியிலும் நின்ற முதுபூவரச மரங்கள் அவசர அவசரமாகத் தறித்து வடக்கன் மாட்டு வண்டியில் ஏற்றப் படுகின்றன.

கொட்டடி நடுவில், ராசசூரியர் ஆகியோரும் அவர் களின் எடுபிடிகளும், மயிலுவும் மற்றும் பலரும் சேர்ந்து சகல காரியங்களையும் கண்காணித்துச் செய்து கொண்டி ருந்தனர்.

நடுவில், இராசசூரியர் ஆகியோரும் அவர்களின் ஆட்களும் சற்று முன்னதாகவே வந்து சேர்ந்திருந்தனர். அவர்கள் வந்த கார் வீட்டின் எல்லைக்கு முன்னால் தென்னை மர இடைவெளிக்குள் விடப்பட்டிருக்கிறது.

மணி இரண்டுக்குள் சவத்தைத் தகனம் செய்துவிட வேண்டும். அல்லது விடிபக்கச் சார்புப் பஞ்சமி! என்ற பேச்சுக்கள் தான் அங்குமிங்குமாகக் கேட்டன.

முறைக்கு இன்னும் எத்தனையோ வேலைகள் இருந்தன. ஆனாலும் அவைகளில் சில தவிர்க்கப்பட்டன.

'சவக் கிறுத்திய' ஐயர் தவிர்க்கப்பட்டார். அதனா 'கிறுத்திய' நேரம் மிச்சம்.

அரப்பெண்ணை வைத்தல், குளிப்பாட்டுதல் மிகமிக சுருக்கத்தில் முடிந்து விட்டன. கடைசியாக இருப்பது வாய்க்கரிசி போடல் ஒன்றுதான். அது முடிந்து விட்டால் தேவாரத்தைக்கூட நிறுத்திவிட்டு பாடையில் பிரதேத்தைச் செருகி தூக்கி விடலாம்! ஆனால்......அதற்கிடையில்......

ஒழுங்கைத் தொங்கலில் சற்று அகல நீளம் குறைந்த காக்கி நிற மோட்டார் ஒன்று வருகிறது!

''பொலிசுக்காறர் வாற மாதிரிக் கிடக்குதாக்கும்!'' இப்படிப் பல குரல்கள் குசுகுசுத்தன.

வந்தது பொலீஸ் வண்டிதான்! சமீபத்தில்தான் பொலீஸ் நிலையத்திற்கு அப்படி ஒரு வண்டி வந்திருக்கிறது. வண்டி வந்து செத்த வீட்டு வாயிலில் நின்றது.

பென்னம் பெரிய இராட்சதன்போல் ஒரு வெள்ளைத் தோல் அதிகாரி கையில் பிரம்புடன் இறங்கினான். அவனைத் தொடர்ந்து இறங்கியவர்களிடமும் தடித்த உருண்டையான—அடிப்பக்கம் தோல் இணைத்த பெற்றன் பொல்லுகள் இருந்தன.

வெள்ளைக்கார அதிகாரி நேராக உள்ளே வெள்ளைச்சி அம்மாளின் சடலம் கிடந்த இடத்திற்கு வர, மற்றவர்களும் பின் தொடர்ந்தனர்.

''ஆர், தம்பாப்பிள்ளை எண்டது?'' வந்த வெள்ளைக்காரன் இப்படிக் கேட்டான். ஆண்கள் பெண்கள் எல்லோரும் வழிவிலத்தி நின்றனர்.

கொள்ளிக்குடம் தூக்குவதற்காக வெள்ளைச்சி அம்மாளின் தலைமாட்டில் நின்ற தம்பாப்பிள்ளையர் ''ஏன் ஐயா, அது நான்தான்!'' என்று கொன்னை தட்டிக் கூறினார்.

''செத்துப் போன இந்த மனிசி உன்ரை பொஞ்சாதி என்ன?''

''ஓமோம் சேர்! என்ரை பொஞ்சாதி தான்!

''இந்த மனிசி எப்பிடிச் செத்துப் போனது?''

''அது ஐயா, தெங்சு இருதயம் நிண்டு செத்துப் போனது எண்டு பரியாரி அம்பலவாணர் சொன்னவர்!''

''ஆர், அம்பலவாணர்?'' இந்தக் கேள்வியை மற்றவர்களைப் பார்த்துத்தான் அவன் கேட்டான்.

''அவர் இவையின்ரை குடும்ப வைத்தியர். அவரும் விதானையார், மணியகாரர் எல்லோரும் வந்து பரிசோதித்து விசாரணை நடத்தி, செத்தவ தனது மகளுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்ற கவலையில் இருதயம் நின்று செத்துப் போனா......பிரேதத்தைச் சுடலாம்! என்று சொல்லிப் போட்டுப் போட்டினம்.'' என்று இராசசூரியர் ஆங்கிலத்தில் வந்த அதிகாரிக்கு தெளிவாக விளங்கப்படுத்தினார்.

''ஆ...அப்பிடியோ?'' என்ற விதத்தில் ஏளனமாக தலையசைத்துக் கொண்ட அதிகாரி,

''இந்தப் பெண் அடித்துக் கொல்லப்பட்டதாக எங்களுக்குத் தகவல் கிடைச்சிருக்கு. பிரேதத்தைச் சுடப்படாது.

பின்னேரம் டொக்டர் வருவார். நீதிபதி வருவார். எல்லாம் பரிசோதித்து, விசாரணை நடத்தி முடிந்த பின் தான் சுட அனுமதிக்க முடியும். எல்லோரும் கலைந்து செல்லுங்கோ'' என இராசசூரியருக்கு ஆங்கிலத்தில் கூறி அதை மற்றவர்களுக்கு விளங்கப்படுத்தும்படி கூறவே சூரியர் எல்லோருக்கும் தமிழ்ப்படுத்தினார்.

தம்பாப்பிள்ளையருக்குப் பாதி உயிர் போய் விட்டது. அவருக்குப் பக்கமாக நின்ற நடுவில், சற்று விலகிப் பின் புறம் போய் விட்டார்.

மயிலுவைக் காணவில்லை.

இராசசூரியர் மட்டும் வந்திருந்த பொலீஸ் அதிகாரிக்கும், மற்றவர்களுக்கும் உபசாரம் செய்யும் வகையில் மூன்று நான்கு கதிரைகளை எடுப்பித்து பந்தலுக்குச் சற்று அப்பால் கிணற்றடி ஓரமாக வேப்பமர நிழலில் போடுவித்து அவர்களை அழைத்துச் சென்று உட்கார வைத்தார்.

அந்த வேளை பார்த்து நடுவில் இராசசூரியருக்குக் கண்ஜாடை காட்டி அழைக்கவே அவர் நடுவிலிடம் வந்து சேர்ந்தார். அவரை அழைத்துக் கொண்டு கோடிப்புறம் சென்ற நடுவில்,

''விஷயம் பிழைச்சுப் போச்சுக் காணும், ஆரோ தம்பாப்பிள்ளையின்ரை எதிரி அறிவிச்சுப் போட்டான். ஒரு ஐந்நூறு அறுநூறு குடுத்துச் சரிக்கட்டப் பார். உன்னோடைதான் அவன் கதைப்பான் போலை கிடக்கு'' என நடுவில் மெதுவாகக் கூறினான்.

''நான் நினைக்கேல்லை. இனிச் சரிவருமெண்டு. இந்தத் தம்பாப்பிள்ளை மடையன்; முல்லை தெரிவிச்சிருந்தா பட்டணத்துக்கை வைச்சு அவங்களைச் சமாளிச்சிருக்கலாம்! சரி தெண்டிச்சுப் பாப்பம்!'' என்று கூறிவிட்டு இராசசூரியர் வேப்பமரத்தடிக்குச் சென்று விட்டார்.

''விதானை வீடு எங்கே இருக்கிறது, மணியகாரன் வீடு எங்கே இருக்கிறது? அம்பலவாணர் வீடு எங்கே இருக்-

கிறது?'' அன்ற கேள்விகளை ஆங்கிலத்தில் கேட்டுவிட்டு அவர்களின் வீடு தெரிந்த ஒரு ஆளை மற்ற இரண்டு பொலீசாரோடு சென்று காட்டும்படியும் கேட்டுக் கொண் டார் அதிகாரி.

இராசசூரியருக்கு இது சரியான சந்தர்ப்பமாகவே பட்டது. மற்ற இருவரையும் அனுப்பி விட்டால் இவருடன் தனிமையில் பேரம் பேசிப் பார்க்கலாம் என்பது அவரின் நினைப்பு! அப்போது மயிலு கண்ணில் பட்டான். மயிலுவைஅழைத்து அவர்களுடன் போகும்படி பணித்தார். மயிலு தயங்கிக் கொண்டிருக்கும்போது சூரியர் கண்களை வெட்டி சைகை மூலம் போகச் சொல்லி விட்டார். இந்தச் சைகைப்பாசை மயிலுவுக்குப் பழக்கப்பட்டது!

மயிலுவும் இரு பொலீசாரும் ஜீப் வண்டியில் போய் விட்டனர்.

அந்த அதிகாரி சமீபத்தில்தான் இங்கு மாற்றலாகி வந்தவன். இராசசூரியர் பற்றியோ, தம்பாப்பிள்ளையர் பற்றியோ எந்த வரலாறும் அவனுக்குத் தெரியாது.

யாரோ ஒருவனைப் பிடித்துக் கடைக்கு அனுப்பி ஒரு ரின் எலிபன்ற் சிகரெட்டும், தாவடிச் சந்தி ஆறுமுகத்தாரி டம் ஒரு போத்தல் சீல் சாராயமும் வாங்கி வரும்படி பணித்து, வையில் புஸ்சேட்டுப் பொக்கற்றிலிருந்து ஒரு நோட்டையும் கொடுத்தனுப்பிவிட்டு வந்து அதிகாரிக்குப் பக்கமாக ஒரு கதிரையை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்துவிட்டார் ராசசூரியர்.

அதிகாரி ஒன்றும் பேசாமலேயே பொக்கற்றிலிருந்து சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டு விறைப் பாக இருந்தான்.

இராசசூரியரே பேச வேண்டியதாயிற்று. ''தம்பாப் பிள்ளையரில் இருக்கும் கோபத்தில் யாரோ வேண்டு மென்றே உங்களுக்குப் புகார் செய்திருக்கிறார்கள்.''

''............''

''தம்பாப்பிள்ளையர் மிக அருமையான மனிதர். இந்தப் பகுதியில் மனிதர் என்றால் அவர் ஒருத்தர் தான்!''

''............''

''அந்தப் பெண்ணுக்கு இருதய வருத்தம் நீண்ட காலமாக இருந்ததாம்!''

''............''

''ஏதாவது தேவைப்பட்டால் லட்சக் கணக்கில் செலவு செய்யக் கூடியவர்.''

''............''

''எப்போதும் நல்லவர்களைத்தான் கடவுள் சோதிக்கிறார்!''

''............''

''ஒரு ஐந்நூறு ஆறுநூறு வேணுமெண்டாலும் ஒழுங்கு பண்ணி விடுகிறன். நீங்கள் ஒரு மாதிரிச் சமாளித்து விடுங்கோ!''

இராசசூரியரின் இத்தனை ஆங்கில வார்த்தைகளுக்கும் ஒன்றுமே பேசாதவர், இதற்கு மட்டும்,

''என்ன சொல்கிறீர்? எனக்கு விளங்கேல்லை!'' என்று மட்டும் பதில் கேள்வி கேட்டான். இந்தப் பதில் கேள்வி இராசசூரியரை திடுக்கிட வைக்கவில்லை. அவர் இப்படி எத்தனை பேர்களைக் கண்டவர்; மடக்கியவர்; வென்றவர்!

''வேணுமெண்டா ஆயிரம் எண்டாலும்...''

அவர் பேசி முடிக்கு முன்,

''அவசரப்படாதையும் யோசிச்சுப் பாப்பம்; பாத்துச் செய்வம்!'' இப்படி அதிகாரி பதில் கூறிவிட்டான். இராசசூரியனின் கண்களில் வெற்றியின் எக்களிப்பு!

''யோசிச்சுப் பாப்பம்; பாத்துச் செய்வம்!'' என்ற அவனின் சொல் தொடரில் வெற்றிக்கான ரேகைக் கோடுகள் தெரிந்தன.

''மன்னித்துக் கொள்ளுங்கள் வருகிறேன்.'' என்று சொல்லிவிட்டு சூரியர் நடுவிலிடம் சென்றார்.

''விஷயம் சரிவரும்போலை கிடக்கு; மற்றவர்கள் வாறதுக்கிடையிலை ஆயிரம் குடுத்தால் எல்லாம் சரி'' என்று கூறிவிட்டு சூரியர் மீண்டும் அதிகாரியின் பக்கம் வந்து சேர்ந்தார்.

நடுவில் தம்பாப்பிள்ளையரை அழைத்துக் கொண்டு வீட்டிற்குள் போனார்.

செத்தவீடு களை இழந்து கிடக்கிறது! எல்லோர் முகங்களும் பயத்தினால் களைத்துப் போய் விட்டன.

செத்துப் போன வெள்ளைச்சி அம்மாளுக்காகக் குரல் வைக்க இப்போது யாரும் இல்லை.

தம்பாப்பிள்ளையரின் நகுலன் நாய் மட்டும் வளவெங்கும் ஓடித் திரிந்து தொடர்ந்து குரல் வைத்துக் கொண்டே இருந்தது. காலையிலிருந்து அது இப்பிடி.

சின்னம் சிறிய அந்தப் பந்தலின் கீழ் வாய்க்கரிசி போட்ட குறையோடு வெள்ளைச்சி அம்மாள் கிடந்தாள்!

அவளுக்குப் பக்கத்தில் நிற்கும் துணிவுகூட யாருக்கும் வரவில்லை. வளவுக்குள் அங்குமிங்குமாகக் கூடிக் கூடி நின்று எல்லோரும் குசு குசுத்துக் கொண்டனர்.

மேளம் தட்டும் கூட்டம் அப்படியே கோடிப்புற வேலியோடு வெற்றிலைச் சப்பிச் சப்பித் துப்பிக் கொண்டிருந்து.

பரியாரியின் நெருப்புச் சட்டி, உறிக்குள் கிடந்து புகைந்து நூர்ந்து கொண்டிருந்தது.

மாத்துக் கொடுப்பதற்காகக் கட்டாடி கதிராமனால் கொண்டு வரப்பட்ட சேலைப் பொட்டணி வீட்டுத் தாழ்

வாரத்து ஒட்டுத் திண்ணைக்கப்பால் அனாதையாகக் கிடந்தது.

கட்டாடி கதிராமனும் பரியாரி கணவதியும் தண்ணி தேடிப் போயிருக்க வேண்டும்! பொழுது சரிந்து விட்டது.

தம்பாப்பிள்ளையர் தேற்றுவாரற்று கூடத்துத் திண்ணையில் சரிந்து படுத்துவிட்டார்.

நடுவில் பணத்துடன் இராசசூரியர் பக்கம் வந்து இருந்து கொண்டார்.

இராசசூரியர் நடுவிலை, அவருடைய பட்டப் பெயரையே சொல்லி, அவரின் அப்பன் கறுத்தரின் புகழைச் சொல்லி அவரை அதிகாரிக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

நடுவில் தமிழ் முறையில் கைகூப்பி வணக்கம் செலுத்திக் கொண்டார். அதிகாரி தலையை மட்டும் அசைத்து அவரின் வணக்கத்தை ஏற்றுக் கொண்டான். சிகரெட்டுக்கும் சீல் சாராயத்திற்கும் போனவனை இன்னும் காணவில்லை. பதிலுக்கு தொலைவில் பொலீஸ் வாகனம் வருவது தெரிந்தது.

வெண்ணை திரளும் வேளையில் தாளி உடைந்தது போல.....!

சற்றுத் தாமதித்திருந்தால்... நடுவில் கொண்டுவந்த நூறு ரூபா நோட்டுகள் பத்தை பக்குவமாகச் சொருகி, மடக்கி சூரியர் காரியத்தை முடித்திருப்பார்.

அது முடிகிறதோ இல்லையோ அந்த முயற்சியை அவர் செய்திருப்பார். வாகனம் வண்டித் தட்டியால் இப்போது உள்ளேயே வந்துவிட்டது.

வாகனத்திலிருந்து மயிலு, விதானையார், பொலீசார் இருவரும் இறங்கினர். வந்த பொலீசார் அதிகாரிக்குச்

சல்யூட் அடித்துவிட்டு, ''மணியகாரனும், அம்பல வாணரும் வீட்டில் இல்லை'' என்று கூறினர்.

விதானையார் குமாரவேலர் உடம்பெல்லாம் கிடு கிடுக்க நின்று கொண்டிருந்தார். அதிகாரி அவரை உட்காரச் சொன்னான். விதானையார் ஒற்றைக் குண்டி யில் உட்கார்ந்து கொண்டார்.

''விதானையார் இந்தக் கேசின்ரை டயறியை எடும்!'' என்று தமிழிலேயே அதிகாரி கேட்டான். விதானையார் டயரியை அவரிடம் கையளித்தார். அந்த விபரம் தமிழி லேயே எழுதப்பட்டிருந்தது.

வந்த பொலீஸ் ஒருவனிடம் அதைப் படித்துக் காட்டும் படி அதிகாரி பணித்தான்.

''எனது பெயர் முத்தி. நான் இந்த வீட்டில் குடிமை செய்பவள். இருபது வருடமாகச் செய்து வருபவள். நேற்றுப் பின்னேரம் போல் நான் இங்கு வந்தேன். அப் போது ஐயாவின் மகள் செவ்வந்தி வாயில் வந்தது எல் லாவற்றையும் உளறிக் கொண்டு சிரித்துக் கொண்டும் அழுது கொண்டும் நின்றதைக் கண்டேன். காலம் சென்ற அம்மா அழுது கொண்டு விறாந்தையில் இருந்ததையும் கண்டேன். அப்போது அம்பலவாணப் பரியாரியாரும், மயி லுவும் காரில் வந்தார்கள். பரியாரியார் கையைப் பிடித்துப் பார்த்துவிட்டு, நெஞ்சு மோசமாக அடிப்பதாகவும், படுக்க விடும்படியும் கூறிவிட்டு, அம்மாவின் பக்கத்திலிருந்து அழுது கொண்டிருந்த ஐயாவையும், மயிலுவையும் கூட்டிக் கொண்டு செவ்வந்தி நாச்சியையும் பலவந்தமாக இழுத்துக் கொண்டு காரில் போய்விட்டனர். நான் பொழுது படுமட்டும் அம்மாவுடன் இருந்தேன். இடை இடையே அம்மாவுக்கு விக்கல் வந்தது. சுடு தண்ணீர் வைத்து அம்மாவுக்குக் கொடுத்தேன். பொழுது பட்ட நேரம் ஐயா வந்தார். மருந்து உரைக்க முலைப்பால் வேணும் என்று கேக்க நான் எனது தங்கச்சி மகளிடம் முலைப்பால் வாங்கி

வந்தபோது ஐயா அம்மாவின் தலைமாட்டில் இருந்து அழுது கொண்டிருந்தார். செவ்வந்தி நாச்சியார் எங்கே? என்று நான் கேட்டேன். என்ரை குஞ்சுவுக்கு விசர் எண்டு அம்பலவாணப் பரியாரி துலங்கிலை போட்டு பூட்டுயிட்டார் என்று ஐயா அழுது கொண்டே மருந்தை உரைத்து அம்மாவிற்குப் பருக்கினார். பருக்க முடியவில்லை. பல்லுக் கிட்டிவிட்டது. பாக்குவெட்டிக் காம்பால் நான் அம்மாவின் கடவாயை திறக்க ஐயா மருந்தைச் சிரட்டையோடு பருக்கினார். சொற்ப வேளைக்குள் அம்மா அமைதியாக நித்திரை செய்தா. அப்போது மயிலுவும் வந்தார். இருவரும் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டே உறங்கி விட்டனர். நான் நடுச்சாமம் ஒருதரம் எழும்பி அம்மாவைப் பார்த்தேன். அம்மா நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தா. அப்போது ஐயாவும் எழும்பி வந்து வெற்றிலைச் சாற்றைப் பிழிந்து மருந்துரைந்து, அம்மாவின் வாய்க்குள் ஊற்றினார். அப்போது மருந்து தடையின்றி உள்ளே சென்றது. ''விடியிறதுக்கிடையிலை அறிவு வராட்டி பி. எஸ். டாக்குத்தருட்டைத்தான் கொண்டு போக வேணுமெண்டு'' சொல்லிவிட்டு ஐயா படுத்துவிட்டார்.

விடிந்தபின் எழுந்து அம்மாவைப் பார்த்தேன். அம்மா மரக்கட்டை போலக் கிடந்தா. நான் ஐயோ என்று குளறிய சத்தத்திற்கு ஐயாவும் எழும்பி வந்து குளறி அழுதார்...''

இதை அப்படியே வாசித்துவிட்டான் பொலீஸ். கடைசியில் அதில் ஒரு கைவிரல் அடையாளம் இருந்தது. அதன் கீழ் ''முத்தன் கைம்பெண் முத்தி'' என்றும் எழுதப்பட்டிருந்தது.

அடுத்து இருந்த சாட்சியமும் வாசிக்கப்பட்டது. அது மயிலுவினுடையது.

முத்தி சொன்னதிற்குப் பொருத்தமாக... தம்பாப்பிள்ளையர் மகள் வாய் பிசத்திக் கொண்டது, காலம் சென்றவர் அழுது கொண்டிருந்தது, தம்பாப்பிள்ளையர் தன்னை

அம்பலவாணப் பரியாரியிடம் அனுப்பியது, பரியாரி நாடி பிடித்துப் பார்த்தது, பின் செவ்வந்தியைக் காரில் பரியாரி வீட்டுக்குக் கொண்டு சென்றது, பரியாரி முலைப்பாலிலும், வெற்றிலைச் சாறிலும் உரைத்துக் கொடுக்கும்படி குளிகை கொடுத்தது, பத்து மணிபோல அவருக்கு உதவியாக இங்கேயே படுத்திருந்தது. விடிய முத்தியின் அழுகுரல் கேட்டு விழித்துப் பார்த்தபோது, வெள்ளைச்சி அம்மாள் பிணமாகக் கிடந்தது ஆகிய விபரங்கள் எழுதப்பட்டு இறுதியில் 'நா. மயிலு' என்று ஒப்பமும் இடப்பட்டிருந்தது

மூன்றாவது சாட்சியமும் படிக்கப்பட்டது.

''நான்தான் காலம் சென்றவர் வீட்டுக்குக் குடும்ப வைத்தியராக இருக்கிறேன். அவருக்கு இருதய நோய். இதற்கு முன்பும் வைத்தியம் செய்திருக்கிறேன். காலம் சென்றவரின் மகள் மனநோயால் பீடிக்கப்பட்டிருந்தாள். காலஞ்சென்றவரின் கைநாடியைப் பரிசோதித்தேன். சிலேத்தும நாடி அதிகம் அடித்தது. மகளுக்கு மனநோய் வந்து விட்டது என்ற அதிர்ச்சியில் நோய் அதிகரித்து இருந்தது. அதனால் மகளை கூட்டி வந்து துலங்கில் போட்டுவிட்டு விட்டிணு சக்கரம் குளிகையையும், மகா ஏலாதிக் குளிகையையும் தம்பாப்பிள்ளையரிடம் கொடுத்த னுப்பினேன். காலை காலம் சென்றவர் இறந்து விட்டார் என்ற சேதிதான் வந்தது'' என்ற சுருக்கமான சாட்சியத் தின் கீழ் ''ஆயுள் வேத வைத்தியக் கலாநிதியும், மன நோய் வைத்தியக் கலாநிதியுமான பொ. அம்பலவாணர்'' என்று ஆங்கிலத்தில் ஒப்பமிடப்பட்டிருந்தது.

பிற சாட்சிகள் மூன்றே மூன்றுதான்!

அவைகள் வாசித்து முடிந்ததும் முடியாததுமாக இருந்தபோது இன்னோர் கார் அங்கு வந்து நின்றது. அதிலிருந்து ஐவர் இறங்கினர். முதலில் இறங்கியவர் வெள்ளைச்சி அம்மாளின் தோற்றத்தை உடையவராக இருந்தார். அவர் காலை தம்பனால் குறிப்பிடப்பட்ட

வெள்ளைச்சி அம்மாளின் மைத்துனர் அப்புக்காத்தராக இருக்க வேண்டும்.

எல்லோரும் உள்ளே வந்துவிட்டனர். குறிப்பிட்ட அந்த மனிதர் அம்மாளின் தலை மாட்டிற்கு வந்து,

''மச்சாள்! நீ போட்டியோ?'' என்று அழுதார். அதன் பின் வந்த காரியங்கள் தொடங்கப்பட்டன. வெள்ளைச்சி அம்மாள் கட்டிலுடன் கோடிப்புறம் கொண்டு செல்லப்பட்டாள்.

சுமார் ஒரு மணி நேரம்!

அவள் உடம்பு வந்த டாக்டராலும் உதவியாளர்களாலும் கீறிக் கிழிக்கப்பட்டது. பின் டாக்டர் உட்பட எல்லோரும் ஒரு இடத்தில் கூடி இருந்தனர்.

ஒருவர் மரண விசாரணை அதிகாரி. மரண விசாரணை தொடங்கிவிட்டது. முதலில் வெள்ளைச்சி அம்மாளைக் கீறிக் கிழித்த டாக்டரின் சாட்சியம்.

''அடிகாய உள் தாக்குதலால் ஏற்பட்ட மரணம்!'' இப்படி இருந்தது அவர் சாட்சி.

நீதிபதி, விதானையாரின் டயரியில் இருந்த சாட்சிகளை விசாரிக்க வேண்டுமென்றார்.

முத்தி கொண்டு வரப்பட்டாள்.

முத்தி நடுங்கினாள்!

வாய் பிதற்றினாள்!

''ஐயோ நயினார்! இவை தங்கடை பாட்டிலை எழுதிப் போட்டு ஒப்பம் போடச் சொல்லீச்சினம். நான் விரல் அடையாளம் போட்டன்.'' என்று அவள் சாட்சி முடிந்தது.

மயிலு தேடப்பட்டான்.

அவனைக் காணவில்லை.

மயிலுவுக்கும், மணியகாரனுக்கும், அம்பலவாணருக்கும் பிடி விறாந்துக் கட்டளை பிறப்பித்துவிட்டு,

''இது கொலை!'' எனத் தீர்ப்பளித்து தம்பாப்பிள்ளையையும், குமாரவேல் விதானையாரையும் கைது செய்யும்படி போலீஸ் அதிகாரிக்கு உத்தரவிட்டு, ''காலம் சென்றவரைச் சுட்டெரிக்காமல் புதைக்கும்படி உறவினருக்கு உத்தரவு இடுகிறேன்'' என்று கூறி முடித்து எழுந்தார். மரண விசாரணை நீதிபதி.

தம்பாப்பிள்ளையரின் விசுவாசமுள்ள நகுலன் மட்டும் அவருக்குக் கையில் விலங்கிடுவதைத் தொலைவில் நின்று கண்டு விட்டு 'அவக் அவக்' கெனக் குலைத்துத் தள்ளி விசுவாசத்தைக் காட்டிக் கொண்டது.

கூடி நின்றவர்கள் மூச்சுக்கூட விடவில்லை. அவர்களைப் பொலீஸ் வாகனம் கொண்டு சென்றதை மட்டும் நின்ற நிலையிலே எல்லோரும் பார்த்துக் கொண்டனர்.

இதுவரை பூக்கண்டர் செத்த வீட்டுப் பக்கம் வரவில்லை. இப்போதுதான் அவர் எங்கோ போய் விட்டு வருவது போல வந்து கொண்டிருந்தார். வெள்ளை அம்மாளை நல்லபடியாகப் புதைக்கவே அவர் வந்திருந்தார். வெள்ளைச்சி அம்மாள் மேல் அவர் அளவுக்கு அதிகமான மதிப்பு வைத்திருந்தார்.

''இந்த இரணியனுக்கு இப்பிடி ஒரு தெய்வப் பிறவி பொஞ்சாதியாக வந்தாளே!'' என்று அவர் பல தடவை வாய் திறந்து சொல்வதுண்டு.

ஞானமுத்துக் குருவானவர் குறிப்பிட்ட காலக்கெடுவுக்கு பத்து நாட்களுக்கு முன்னதாகவே கோயில் கட்டு வேலைகள் முடிந்துவிட்டன.

கண்டிச் சிறைச்சாலையில் இருந்து நன்னியன் இளையவனும் வந்து சேர்ந்துவிட்டான். மூத்தவனின் மனைவி பொன்னிக்கும் குழந்தைகளுக்கும் அவன் வந்து சேர்ந்தது மிகவும் ஒத்தாசையாகிவிட்டது.

இளையவன் வந்தபோது திரேசி அவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டே அழுது தீர்த்துவிட்டாள்.

''மறியல் வீட்டு வாழ்க்கை ஊரில் இருந்து வாழும் வாழ்க்கையைவிட எத்தனையோ மடங்கு சிறப்பானது'' என்ற அபிப்பிராயத்தை அவன் சொன்னபோது பொன்னியும், திரேசியும் சற்று ஆறுதல் அடைந்தனர்.

கழிவு, நன்னடத்தை என்ற விதத்தில் கூட்டிக் கழித்துப் பார்த்தால் ஏழு எட்டு வருடத்திற்கிடையில் நன்னியனும் மூத்தவனும் வந்து விடுவார்கள், என்று பலரும் சொன்னதுடன் ''ஆறு மாதத்திற்கு ஒரு தடவை யாழ்ப்பபணம் சிறைச்சாலைக்கே அவர்களைக் கொண்டு வந்து உறவினர்கள் பார்க்க அனுமதிப்பார்கள்.'' என்றும் சந்தியாப்பிள்ளை உபதேசியார் உறுதியாகக் கூறியது அவர்களுக்கு மேலும் மன ஆறுதலைக் கொடுத்தது.

கோவில் முதல் பூசைப்பலிக்கான நாளும் ஐப்பசிக் கடைசியில் வைக்கப்பட்டுவிட்டது. கோயிலுக்குப் பக்கமாக சின்னஞ்சிறிய அறை வீடொன்றும் போடப்பட்டது. ஒவ்வொரு நாளும் மாலையில் சந்தியாப்பிள்ளை உபதேசியார் வந்து வேதபாடம் சொல்லிக் கொடுக்கவும், வாரம்

ஒரு தடவை ஞானமுத்துக் குருவானவர் வந்து தங்கி நிலைமைகளை அவதானித்துப் போகவும் ஏற்பாடாகி இருத்தது.

ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை வேதபாடம் ஆரம்பிப்பதாக சந்தியாப்பிள்ளை உபதேசியார் முதல் நாள் வந்து அறிவிக்கும்படி இளையவனிடம் பொறுப்பைக் கொடுத்து விட்டுப் போயிருந்தார்.

இந்த முதல் கிழமை முடியும் வரையிலாவது திரேசி கணவன் வீட்டை விட்டு பெரிய கலட்டி மச்சாள்காரியுடன் தங்கி இருப்பதாகவும் எற்பாடாகி இருந்தது.

இளையவன் பெரிய கலட்டியிலுள்ள நாற்பது வீடுகளுக்கும் சென்று அறிவித்து இருந்தான்.

ஞாயிற்றுக் கிழமை இரவு ஏழு மணி அறை வீடு நிறைந்து வெளியிலும் கூட்டம் நின்றது.

சந்தியாப்பிள்ளை உபதேசியார் வேதாகமப் பாடத்தை ஆரம்பித்து விட்டார். பிள்ளையார் சுழிபோல, அச்சேஸ்ட் சிலுவை மந்திரம்தான் வேதபாடத்தின் அகரமாகும். சந்தியாப்பிள்ளை உபதேசியார் வலக்கரத்து நான்கு விரல்களையும் மடக்கி பெரு விரலை மட்டும் நீட்டி அதன் நுணியால் நெற்றியில் சிலுவை அடையாளம் இட்டு ''அர்ச்சுஸ்ட் சிலுவை அடையாளத்தினாலே'' என்றார். மற்றவர்களும் அதையே செய்தனர். அதையே சொல்லினர்.

உபதேசியார் மூக்கின் மேலும் விரலை வைத்து ''எங்கள்!'' என்றார். மற்றவர்களும் அதையே செய்தனர். அதையே சொல்லினர்.

உபதேசியார் நாடி நுணியில் விரலை வைத்து ''சத்துருக்களிடத்திலிருந்து'' என்றார். எல்லோரும் அப்படியே செய்தனர்.

பின், கைவிரல்கள் ஐந்தையும் குவித்து நெஞ்சின் நடுவே வைத்து, ''எங்களை இரட்சித்துக் கொள்ளும் சுவாமி!'' என்றார். மற்றவர்களும் அப்படியே செய்தனர்.

உபதேசியார் கைவிரல்களைக் குவித்தவாறே முறையே நெற்றியிலும் நெஞ்சின் நடுவேயும் இடது வலது தோள் மூட்டுக்களிலும் வைத்து, ''பிதாவுடையவும், சுதனுடையவும் ஸ்பிரீத்து சாந்துவினுடையவும் நாமத்தினாலே ஆமேன் யேசு!'' என்று முடித்தார். எல்லோரும் அப்படியே செய்தனர்.

முதல் மந்திரம் தனித் தனிச் சொற்களாக முடிந்தது.

பத்துத் தடவைகளுக்கு மேல் உபதேசியார் சொல்லவும், செய்யவும், மற்றவர்கள் அதைச் செய்யவும் சற்று நேரம் எடுத்துவிட்டது. உபதேசியார் மந்திரத்தை மழுதாகச் சொன்னார்; செய்தார்.

''அர்ச்சிஸ்ட் சிலுவை அடையாளத்தினாலே எங்கள் சத்துருக்கள் இடத்தில் நின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும் சுவாமி! பிதாவுடையவும் சுதனுடையவும், இஸ்பிரீத்துச் சாந்துவினுடையதும் நாமத்தினாலே ஆமேன் யேசு!''

மற்றவர்களும் சொல்லவும் செய்யவும் தொடங்கினர், சிலர் தடுமாறினர். சிலர் இடையே நிறுத்திக் கொண்டனர். ஓரிருவர் முக்கித் தக்கி, இழுத்துப் பறித்து ஒரு மாதிரிச் சொல்லி முடித்தனர். ஒரே ஒருவன் மட்டும் தங்கு தடையின்றி சொல்லி முடித்து விட்டான்.

அவன் இளையவன்.

உபதேசியாருக்கு ஆச்சரியம்! அழுத்தம் திருத்தமாக முதல் முதலில் யாரும் இப்படிச் சொல்லி முடித்ததை அவர் அனுபவத்தில் கண்டதில்லை.

''கெட்டிக்காரன்; இளையவன் கெட்டிக்காரன்!'' என்று அவர் மெச்சினார். அவருக்கு மகிழ்ச்சி பொங்கியது.

''எனக்கு உது பழக்கம் உபதேசியார். மறியல் வீட்டுக்கை என்னோடை இருந்த வேதக்காறர் நெடுகச் சொல்லுறவை; எனக்குக் கேட்டுக் கேட்டுப் பழக்கமாப்

போச்சு!'' என்று உபதேசியாருக்கு அசடு வழியும் என்பதை யோசியாமல் சொல்லிவிட்டான்.

''அதுதானே கேட்டன்!'' என்று உபதேசியார் சமாளித்துக் கொண்டார். உபதேசியார் மறுபடியும் தொடங்கி விட்டார்.

இப்போது அவர் முழுச் செபத்தையும் இரண்டு பிரிவாக சொல்ல வைத்தார். செய்யவைத்தார். மூந்திய நிலைமையை விடப் பரவாயில்லை...!

பலர் இப்போது தேறினர்.

உபதேசியாருக்குத் திருப்தி.

வேதபாட முதல் செபம் முடிய நேரம் ஏறக்குறைய பத்துக்கு மேலாகிவிட்டது.

இனி உபதேசியார் மீசாம் ஆசனக்கோவிலுக்குப் போகமுடியாது. இங்கேயே அவர் தங்கி விடுவதாக முடிவாகிவிட்டது.

''உபதேசியாருக்குப் பசிக்கு...'' என்று ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தனர்.

''எனக்குத் தெரியும் நேரம் போனாலும் போகுமெண்டு! அதுதான் சுவாமிக்குப் பாண் குடுக்கும் சிங்கள மாமாவிட்ட சங்கிலிப்பாண் ஒண்டும் கடையிலை வாழைப் பழமும் வாங்கி வந்தனான்'' என்றார் உபதேசியார்.

''அப்ப, உபதேசியாருக்குத் தண்ணி வேணும். எட தம்பி பூக்கண்டர் வீட்டிலை போய் ஒரு துப்பரவான போத்திலிலை தண்ணி வாங்கியாந்து குடுமோனை.'' என்றான் தம்பன்.

இப்போது உபதேசியாருக்குப் புதிய சிக்கல் தொடங்கி விட்டது. சொல்லுவோமா, விடுவோமா என்று அவர் யோசிக்கும்போது ஒருவன் போத்தல் ஒன்றை எடுத்துக் கொண்டு பூக்கண்டர் வீட்டை நோக்கி ஓடினான்.

அந்த வேளை வெளியே இருந்து ''தம்பி, தம்பி'' என்ற குரல் வந்தபோது,

''ஆற்றாப்பா இந்த நேரத்திலை? என்ன சங்கதி?'' என்று கேட்டுக் கொண்டே பூக்கண்டர் வெளியே வந்தார்.

''தம்பி, எங்கடை உபதேசியாருக்கு கொஞ்சம் தண்ணி வேணும். அதுதான் வந்தனான்.'' என்றான் வந்தவன்.

''ஏன்ராப்பா உங்கடை சின்னக் கலட்டித் தண்ணீ நல்லதுதானை! ஆரோ ஆமான வெள்ளாளன் ஆட்டையோ மாட்டையோ அடிச்சுப் போட்டிட்டானோ?'' என்று கூறிக் கொண்டே போத்தலை வாங்கிக் கொண்டு கிணற்றடிக்குச் சென்று தண்ணீர் நிரப்பி வரும்போது அவருக்கு மனதிற் குள் ஏதோ தட்டியது.

''எட, பொடி! உங்கடை குடங்களுக்கைகூட தண்ணி இல்லையோடாப்பா? ஓ... உங்கடை உபதேசியும் ஈச்ச மொட்டை வெள்ளாளனெல்லே! உங்கடை கிணத்துத் தண்ணியை குடியார் போலை கிடக்கு.'' என மெதுவாக நக்கல் பண்ணினார்.

வந்தவன் ஏதோ பேச முற்பட்டான்; பேசத் தடங்கியது.

''என்னடாப்பா சொல்லுறதை எப்பன் விளங்கச் சொல்லன்!''

''உபதேசியார் சொல்லேல்லை. நாங்கள்தான் எங் கடை தண்ணியைக் குடுக்கிறது சரியில்லை எண்டு...''

வந்தவன் சொல்லி முடித்துவிட்டான். பூக்கண்டர் இதற்கு மேல் பேசவில்லை.

வந்தவன் தண்ணீருடன் திரும்பிவிட்டான்.

இரவு அறை வீட்டிலேயே தங்கி இருந்து விடிந்ததும் விடியாததுமாக எழுந்திருத்த உபதேசியார் போய்விட்டு மறுபடியும் மாலை ஆறு மணிக்கு வந்து விட்டார்.

பகல் திட்டமிட்டபடி சிமியோன் திரேசியைக் கொண்டு வந்து விட்டு விட்டுப் போய்விட்டான்.

திரேசி ஊருக்குள் சென்று சிறு பெண்பிள்ளைகளையும் குமர்ப் பெண்களையும் இரவு வேதபாடம் சொல்லிக் கொடுக்க அழைத்து வந்துவிட்டாள்!

முதல் நாள் சொல்லிக் கொடுத்த மந்திரத்தை உப தேசியார் ஒரு தடவை சொல்லிக் கொடுத்துவிட்டு எல்லோரிடமும் ஒவ்வொருத்தராக பத்துப் பேர்கள் வரை கேட்டுப் பார்த்தார். ஐந்து வரையில் தேறியது.

பாடமில்லாதவர்களைப் பார்த்து முடிந்தால் பகலிலும் வீடுகளுக்குப் போய் சொல்லிக் கொடுக்கும் வேலையைத் திரேசிக்குக் கொடுத்துவிட்டு அடுத்த வேதபாடத்திற்கு வந்துவிட்டார் உபதேசியார்.

இன்று பரமண்டல மந்திரம்!

''பரமண்டலங்களில் இருக்கும் எங்கள் பிதாவே! உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக; உம்முடைய இராட்சியம் வருக!

உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுவது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக! அன்றன்றுள்ள எங்கள் அப்பம் எங்களுக்கு இன்று தாரும். எங்கள் கடன் காரர்களுக்கு நாங்கள் பொறுக்குமாப்போல எங்கள் கடன்களை எங்களுக்குப் பொறும்! எங்களை சோதினையில் பிரவேசித்திடாதேயும். தின்மையிலே இருந்து எங்களை இரட்சித்துக் கொள்ளும் சுவாமி! ஆமேன் யேசு!''

பரமண்டல மந்திரத்தை துண்டு துண்டாகவும், தொடர்ச்சியாகவும் நடு இராத்திரி வரை உபதேசியாரும் திரேசியும் மாறி மாறி சொல்லிக் கொடுத்தனர்.

இன்றும் உபதேசியார் பாண் பெட்டி சிங்கள மாமாவின் சங்கிலிப் பாணையும், வாழைப்பழத்தையும் அத்துடன் ஒரு போத்தில் தண்ணீரையும் கொண்டு வந்திருந்தார்.

உணவு முடிந்தது.

படுக்கைக்குப் போய்விட்டார். மனதிற்குள் சயனத்திற்கு முன் செபத்தை முணு முணுத்துக் கொண்டு... முடிவதற்கிடையிலேயே தூங்கிப் போய்விட்டார்.

மறுநாளும் விடிந்தது.

வெள்ளாப்புடன் போன உபதேசியார், மாலை மறுபடியும் வந்து விட்டார். இன்று வேதபாடம் படிக்கக் கூட்டம் குறைவாக இருந்தது. முதல் நாள் பாடம் வராததால் பயத்தில் வரவு குறைந்திருக்க வேண்டும்! வழமைப்படி முதல்நாள் மந்திரம் பற்றிய சோதனை. சிலர் தேறினர். சிலர் அரைகுறையாகத் தேறினர். மிகுதிப் பொறுப்பு திரேசியிடம் ஒப்படைக்கப்பட்டது.

இன்று பிரியதத்த மந்திரம்!

''பிரியதத்தத்தினாலே பூரண மரியாயே வாழ்க!'' இப்படி ஆரம்பிக்கும் இந்த மந்திரம் பல தடவைகள், மறுபடியும் பல தடவைகள் உபதேசியராலும், திரேசியாலும் மாறி, மாறி!

இன்றும் நேரம் நடு இராத்திரியாகிவிட்டது. உபதேசியார் வழக்கம்போல சிங்கள மாமாவின் சங்கிலிப் பாணும், வாழைப்பழமும் உண்டு, போத்தலில் கொண்டு வந்த தண்ணீரையும் குடித்துவிட்டு சயனத்துக்கு முந்தி செபத்தை உச்சரித்து படுக்கையில் விழுந்துவிட்டார். விடிவதற்கு முன் போயும் விட்டார்.

மாலை வந்தது.

முதல்நாளைப் போன்ற அதே முறை. இன்றுதான் பெரும்பாவி மந்திரம்!

''நான் பெரும் பாவி, சர்வத்திற்கும் வல்ல...'' என்று ஆரம்பிக்கும் மந்திரம் பல தடவைகள் உபதேசியாரும் திரேசியும் மாறி, மாறி!

வழமை போல பாண்; வாழைப்பழம்; போத்தலில் தண்ணீர்; சயனத்திற்கு முந்திய மந்திரம்! உபதேசியாரின் தூக்கம்! அதிகாலையுடன் போய்விட்ட அவர் மாலை வருகை! வழக்கமான சோதனை முறை.

இன்று உத்தம மனஸ்தாப மந்திரம்!

''என் ஆண்டவரே! அளவில்லாத நேசத்திற்கும் பாத்திரமான தேவரீரை சட்டை பண்ணாமல்...'' என்று தொடங்கி ''என் பாவங்களைப் பொறுத்தருளும் சுவாமி! என் பாவங்களை பொறுத்துக் கொள்ளும் சுவாமி!'' என்று முடிக்கும் மந்திரம்.

குறிப்பிட்ட இத்தனை மந்திரங்களும் தெரிந்து விட்டால் கிறீஸ்துவசபையுடன் இணைய; ஞானஸ்னானம் பெற; பாவ சங்கீர்த்தனம் செய்யப் போதுமானது.

உபதேசியார் கடமை முறை ஓரளவு முடிகிறது. இனி அதைப் பயிற்சிக்குக் கொண்டு வரத்தான் திரேசி இருக்கிறாளே!

உபதேசியாரின் வழமையான பாண், பழம், தண்ணீர், மந்திர உச்சரிப்பு, படுக்கை!

விடிவதற்குள் எழுந்து விட வேண்டும். இப்போது நேரம் ஒண்டு பாதியாகிவிட்டது!

ஞாயிற்றுக் கிழமை வந்தது.

சந்தியாப்பிள்ளை உபதேசியார் ஏற்கனவே சொல்லி வைத்தது போல காலை பத்து மணிவரை ஞானமுத்துக் குருவானவரின் வில்லு வண்டித் திருக்கல் வந்து சேர்ந்தது. வண்டிக்குள் இருந்து குருவானவரும், உபதேசியாரும் சங்கிலித்தாம் இராயப்பனும் இறங்கி வந்தனர்.

முதல் நாள் மாலை சிமியோன் வந்து சேர்ந்திருந்தான். கோயில் முன்னிலையில் ஏறக்குறைய குஞ்சு குருமான் உட்பட ஐம்பது பேர்கள் வரை கூடியிருந்தனர்.

குருவானவரை நோக்கி திரேசியும் சிமியோனும் தான் முன் வரிசைக்குச் சென்றனர். இருவரும் ஒற்றை முழங்காலில் நின்று கைகளைக் கீழ் நோக்கிக் குவித்து ''ஸ்தோத்திரம் ஆண்டவரே!'' என்றனர்.

குருவானவர் ஒருகையால் தாடியைத் தடவிக் கொண்டே மறுகையால் அவர்களைச் சிலுவை அடையாளம் காட்டி,

''கர்த்தரின் கருணை உங்கள் மீது இருக்கக்கடவது'' என்று கூறி அவர்களை ஆசீர்வதித்தார். குருவானவர் நேரே அறை வீட்டுக்குப் போகாமல் கோவிலுக்குள்ளேயே வந்துவிட்டார். கழுத்தைத் திருப்பி நாலா பக்கமும் நோட்டமும் விட்டார். அவர் மனதிற்கு கோவில் திருப்தியாக இருந்தது.

சுமார் நூறு பேர்கள்வரைதான் நெருங்கி இருக்கக் கூடியதாக இருந்தது. சிறிதாகக் கோவில் இருந்தாலும் இப்போதைக்கு அது போதுமானதாக இருந்தது.

''இவ்வளவு கெதியாக நீங்கள் எல்லோரும் சேர்ந்து இதைக் கட்டி முடித்ததற்காக கர்த்தரின் பெயரால் உங்கள்

எல்லோருக்கும் நன்றி செலுத்துகிறேன்,'' என அழகு தமிழில் கூறினார்.

சமீபகாலத்திலிருந்து முடிந்தவரை திருப்பூசைப் பலியையோ, அதோடு ஒட்டிய சகலதையுமோ, நல்ல தமிழில் செய்ய வேண்டுமென்ற கருத்தை உள்ளூர் கத்தோலிக்க சபையிடம் அவர் பேசி வந்தார். அந்தப் பேச்சுத் தொடங்கிய காலத்திலிருந்து அவர் இப்படித்தான் பேசுவார். தவிர்க்கமுடியாமல் தேவையை ஒட்டி அவர் லத்தீனையோ, ஆங்கிலத்தையோ பேசுவதும். உண்டு. திருச்சபை தனது கோரிக்கையை ஏற்றுக் கொள்ளும்வரை அவர் அதன் கட்டுப்பாடுகளை மீற முடியாது.

அறைவீட்டு வாசலுக்கு எல்லோரையும் அழைத்துச் சென்று உட்கார வைத்தார். சிமியோன் அவசர அவசர மாக தம்பன் வீட்டுக்குச் சென்று சற்றுப் பழையதான ஒரு கதிரையை எடுத்து வந்து சுவரோடு வைக்க குருவானவர் அதில் அமர்ந்தார்.

''எங்கே எல்லோரும் அர்ச்சிஸ்ட் மந்திரம் சொல் லுங்கோ பார்ப்பம்;', என்று குருவானவர் கேட்டபோது எல்லோரும் தயங்கித் தயங்கி விழித்தனர். தொடக்கி விடுவதற்கு ஒருவர் வேண்டும். அப்படித்தான் இந்த வாரத்துப் பயிற்சி இருந்தது.

திரேசி தொடக்கி வைத்தாள். எல்லோரும் திரே சியைப் பின்பற்றி மந்திரத்தை உச்சரித்தனர். சிலர் ஒழுங்காகவே பின்பற்றினர். சிலர் இடை இடையே விட்டு விட்டுத் தொடர்ந்தனர். சிலர் ஓசை வெளியே வராமல் முணு முணுத்துக் கொண்டனர். கைகளால் மட்டும் வேண்டிய, வேண்டிய மாதிரிச் செய்து கொண்டனர்.

குருவானவருக்கு மகிழ்ச்சியாக இருந்தது. உபதேசியா ரின் கெட்டித் தனத்தில் அவருக்கு நம்பிக்கை இருந்தாலும் இவ்வளவு விரைவாக அவர்களை இந்த நிலைமைக்குக்

கொண்டு வர உபதேசியாராலும் தனித்து முடிந்திருக்காது என்பதும் அவருக்குத் தெரியும்.

குருவானவர் திரேசியைப் பார்த்து தனது திருப்தியை தெரிவிப்பதற்கு மிகவும் கருணையுடன் நன்றியறிதலை ஒரு பார்வையால் மட்டும் காட்டிக் கொண்டார்.

அவருக்கு மகிழ்ச்சி வந்து விட்டால் கண்களாலேயே தனது பாராட்டை கொடுப்பதுதான் வழக்கம்.

சங்கிலித்தாம் இராயப்பனை அழைத்து அவனின் காதுக்குள் ஏதோ சொன்னார் குருவானவர். இராயப்பன் வண்டிக்குச் சென்று கடுதாசியால் சுற்றப்பட்ட பொதியை யும் ஒரு தகரப்பெட்டியையும் எடுத்து வந்தான்.

குருவானவர் கடதாசிப் பொதியை அவிழ்த்து அதனுள் இருந்த சின்னஞ்சிறிய புத்தகங்களையும், யேசு வின் திருப்பாட்டு வர்ணப்படங்களையும், எடுத்து தனது கரத்தாலேயே எழுந்து சென்று ஆளுக்கு ஒவ்வொரு புத்தக மாகவும், ஒவ்வொரு படமாகவும் கொடுத்துக் கொண்டு வந்து மிகுதிப் புத்தகங்களையும், படங்களையும் திரேசி யிடம் கொடுத்து விட்டு உட்கார்ந்து கொண்டார்.

அவைகளை என்ன செய்யவேண்டும் என்பது திரேசிக் குத் தெரியும். அங்கு வராதவர்களுக்கு அதைக் கொடுக்க வேண்டும்.

புத்தகத்தை எல்லோரும் புரட்டிப் புரட்டிப் பார்த்தனர். அதன் அட்டையில் பெரிய எழுத்தில் பதிக்கப்பட்டிருந்த ''சின்னக் குறிப்பிடம்'' என்பதையே அவர்களால் வாசித் துப் புரிந்த கொள்ள முடியவில்லை. யேசுவின் திருப்பாட்டு வர்ணப் படத்தையே பார்த்து பலர் துக்கப்பட்டுக் கொள்ளு வதைக் காணமுடிந்தது. யேசு சிலுவையில் அறையப்பட்ட அந்தக் கோலம்! அவர்களை அப்படி ஆக்கிவிட்டது.

''பிள்ளைகளே! இந்தப் புத்தகத்தில் உள்ளவைகளை உங்களுக்குப் படிக்கத் தெரியாவிட்டால் திரேசிக்குப் கொஞ்சம் தெரியும்; திரேசி உங்களையும் அதைப் படிக்க

வைப்பா. நீங்கள் வைத்திருக்கும் படமானது தேவ குமாரனாகிய யேசு கிறீஸ்து நாதருடையது எங்கள் எல்லோருடைய பாவங்களுக்காகவும் அவர் இப்படிச் சித்திரவதைப்பட்டு மரித்து மூன்றாம் நாள், புதை குழிக் கல்லறையில் இருந்து உயிர் பெற்றெழுந்து மோட்ச ராச்சியத்தை அடைந்தார். அந்தப் படத்தை உங்கள் வீடுகளின் தட்டிகளிலோ குத்திலோ வைத்து காலையில் எழும்பும்போதும், மாலையில் உறங்கும்போதும் வணங்கி வாருங்கள். அவருடைய கிருபை உங்களுக்குக் கிடைக்கும்.''

குருவானவர் சொல்லி முடித்தார்.

இதன் பின்பு அவர் திரேசியை அழைத்து தகரப் பெட்டியை அவளிடம் கொடுத்து சிறுவர் சிறுமியருக்கு அதைப் பகிர்ந்து கொடுக்கும்படி கூறினார்.

திரேசி பெட்டியைத் திறந்தாள்.

உள்ளே பல நிறங்களில் தோடம்பழச் சுளை போன்ற இனிப்புகள் நிறைய இருந்தன. அவைகள் தோடம்பழம் போல் வாசனையாயிருந்தது.

திரேசி குழந்தைகளை பிரத்தியேக வரிசைகளில் நிறுத்தி தலைக்கு மூன்று நான்காக அவைகளைப் பங்கு போட்டுக் கொடுத்து முடித்தாள்.

சங்கிலித்தாம் இராயப்பனை குருவானவர் அழைத்து மறுபடியும் காதுக்குள் சொல்லவே இராயப்பன் ஏறக்குறைய இருபது வயதுக்கு மேற்பட்டவர்களாக ஆண்கள் பத்துப் பதினைந்து பேர்களை தடுத்து வைத்துக் கொண்டு மற்றவர்களைவீட்டுக்குப் போகும்படி கூறவே எல்லோரும் கலைந்து சென்று விட்டனர்.

நின்ற ஆண்களுடன் திரேசியை மட்டும் நிற்கும்படி குருவானவர் கூறினார். திரேசியும் நின்று விட்டாள்.

கோவில் நிர்வாகம் சம்பந்தமான பேச்சுகள் தொடங்கி விட்டன.

முதல் முதலில் இருபத்தொரு பேருக்கு அடுத்த ஞாயிறு ஞானஸ்ஞானம் கொடுப்பதென முடிவாயிற்று.

கோவில் முதல் பூசைப் பலியை கடைசி ஞாயிறுவைப்ப தெனவும் முடிவாயிற்று. கோவில் சங்கிலித்தாமாக யாரை வைப்பதென ஆய்வு வந்தபோது, எவ்லோரும் தம்பனின் பெயரையே கூறினர்.

தம்பன் தனக்கிருக்கும் பல வேலைகளைச் சொல்லி அதைத் தடுத்து விட முயன்றான். ஆனாலும் மற்றவர்கள் விடவில்லை. கடைசியில் தம்பனே சங்கிலித்தாம் பொறுப்பை ஏற்க வேண்டியதாயிற்று.

கோவிலுக்குப் பெயரிடும் விசயம் வந்தபோது ''ஏன் மாதா கோயில் எண்டு வைச்சா என்ன?'' என சிமியோன் சொன்னான்.

''நான் இடையிலை ஒண்டு சொல்லுறன்; ஆரும் குறை நினைக்கப்படாது. நன்னியண்ணையின்ரையும், மக்களின்ரையும் தூக்குக் கயித்தை விலத்திறதுக்கு எல்லா வேலைகளையும் எங்கடை குருவானவர்தான் செய்தவர். அதனாலை ''தூக்கு விலத்தி மாதா கோயில்!'' எண்டு வைச்சால் என்ன? எண்டுதான் நான் எல்லாரை யும் கேக்கிறன்?'' என்றான் தம்பன்.

எல்லோர் முகங்களிலும் மலர்ச்சி பொங்கியது!

''நாங்கள் சம்மதம்'' என எல்லோரும் ஒரே குரலில் கூறினர். கோவிலுக்குப் பெயர் சூட்டப்பட்டு விட்டது,

''தூக்கு விலத்தி மாதா கோவில்!''

சகல முடிவுகளையும் தனது தலையீடு இன்றி இவர்கள் எடுக்க வேண்டும் என்பதற்காகவோ வேறு எதற்காகவோ ஞானமுத்துக் குருவானவர் பேசாது இருந்து விட்டார்.

இதுவரை எத்தனையோ கோயில்களைக் கட்டி எத்தனையோ பேர்களைக் கிறீஸ்தவர்கள் ஆக்கிய பழுத்த அனுபவம் அவருக்கு.

எதை எப்போது எப்படிச் செய்ய வேண்டும் என்பது அவருக்குத் தெரியும்.

''மணி ரெண்டுக்கு மேலை வந்திட்டுது. குருவான வருக்கு சாப்பாடு...'' என்று தம்பன் மேலே பேசாது நின்றான்.

குருவானவர் தனது லோவிற்குள் கையைவிட்டு சங்கிலியால் பிணைக்கப்பட்ட சின்னஞ்சிறிய உருண்டைக் கடிகாரம் ஒன்றை எடுத்து நேரத்தைப் பார்த்தார். சரியாக மணி இரண்டுமணி இரண்டு நிமிடமாக இருந்தது.

தம்பனின் உத்தேசம் பிழைக்கவில்லை.

''சரியான ஆளைத்தான் சங்கிலித்தாம் ஆக்கியிருக்கு'' என குருவானவர் மனதிற்குள் எண்ணிக் கொண்டார்.

தம்பன் சங்கிலித்தாம் இராயப்பனை தனிமையில் அழைத்துப் போய் குருவானவர் நீண்ட நேரமாக தண்ணீர் கூட குடியாமல் இருக்கிறாரே எனக் கலந்து ஆலோசித்தான்.

''வண்டில் இப்ப வெளிக்கிட்டுதெண்டால் டக்கெண்டு தின்னவேலிக்குப் போய் சேந்திடும். அவருக்கு அங்கை சாப்பாடு இருக்கும்!'' என்றான் இராயப்பன். உடனேயே குருவானவர் புறப்படுவதற்கு ஆயத்தம் ஆனார்.

வண்டி புறப்பட்டு விட்டது!

மறுவாரம் ஞானஸ்ஞானத்திற்கு சகல ஏற்பாடுகளையும் செய்யும்படி திரேசியிடம் கூறிவிட்டு, குருவானவர் வண்டியில் ஏறினார்.

உபதேசியாரும் நின்று விட்டார்.

இன்று தொட்டு ஞானஸ்ஞான ஒழுங்குகள் செய்ய வேண்டும்.

இன்று வண்டிக்குள் சாரதியாகவும், சங்கிலித்தாம் இராயப்பன்தான் வந்தான். அதனால் அவரும் குருவான வருடன் போக வேண்டியதாயிற்று.

உபதேசியாருக்கு இப்போது பிரச்சினை தோன்றி விட்டது.

வயிறு நன்றாக விறாண்டியது. இந்தப் பசியைச் சமாளித்துக் கொள்ள முடியும் என்று அவருக்கு நம்பிக்கை இல்லை. அதனால் குருவானவரின் வண்டி போன தின்பின், திரேசியிடமும் மற்றவர்களிடமும் "நான் உப்பிடி ஒருக்காப் போட்டு வாறன்; திரேசி வேளையோடை ஆக்களை வரச் சொல்லிக் கூப்பிட்டுவை; நான் பொழுதுபடக்கு மன்னம் ஞானஸ்ஞான முறைகளைச் சொல்லித் தந்திட்டுப் போக வேணும்," என்று கூறிக் கொண்டே சதுரக் கள்ளி ஓடைக் கூடாகச் சென்று விட்டார் உபதேசியார்.

திரேசிக்கும், சிமியோனுக்கும், உபதேசியாரின் நிலைமை புரிந்து விட்டது. அதை அவர்கள் மற்றவர்களுக் குக் காட்ட முடியாது!

திரேசி சிமியோனின் காதுக்குள் இரகசியமாக ஆனால் அதே வேளை மற்றவர்களும் அறியப் பேசினாள்.

"உபதேசியார் கடையிலை சாப்பாட்டுக்குப் போறார் போலை கிடக்கு; அவரிட்டை காசுகீசு கிடக்கோ தெரி யேல்லை. காசு கிடந்தாக் கூப்பிட்டுக் குடுத்திட்டு வாருங் கோவன்."

மடிக்குள் கையை வைத்துக் கொண்டே சிமியோன் உபதேசியாரை நோக்கி ஒட்டமும் நடையுமாகப் போய்க் கொண்டிருந்தான்.

ஊரிலே ஒரு புதிய பரபரப்பு ஏற்பட்டு விட்டது. அது பல ஊருக்கும் பரவியது. பெரிய கலட்டியைச் சேர்ந்த எல்லோரும் நிரந்தரக் குடிமைகளாக நயினார் வீடுகளில் விட்டிருந்த பெட்டை பெடியளை திருப்பி அழைத்துக் கொண்டு போய் விட்டனர். அப்படிச் செய்ததற்கு சரியான நியாயங்களைக்கூட கூறாமல் அவர்கள் இப்படிச் செய்து விட்டனர்.

''நளம் பள்ளுகள் குறைகள் எல்லாம் இப்ப முந்தின மாதிரி இல்லை? எல்லாம் தங்கடை தங்கடை எண்ணத்துக்கு நடக்கத் துடங்கியிட்டாங்கள்.''

''நளத்தி பள்ளியளின்ரை கொய்யகங்களை இப்ப மருந்துக்கும் காணேலாமல் கிடக்கு; நினைச்ச மாதிரியெல்லாம் சட்டை சீலை உடுக்கத் துடங்கீட்டாளவை!''

''தம்பாப்பிள்ளை மறியலுக்கை போகாமல் இருந்தா இதெல்லாம் நடக்குமே? அந்தாளைப் போலை ஒரு ஆமானவன் ஊருக்கை இல்லாமல் போட்டான்!''

''கொஞ்சமெண்டாலும் நாங்கள் கவனிச்சிருந்தா இந்த சீத்துவக்கேடு எங்களுக்கு வந்திருக்குமே?''

''முதல்லை அத்த மானிப்பாய் சுவாமியனை ஊருக்கை வரவிட்டிருக்கப் படாது. சரி விட்டாலும் பரவாயில்லை; கோயில் கட்ட விட்டிருக்கப் படாது; சரி கோயிலைக் கட்டிப் போட்டான் எண்டு பார்த்தா கடைசியிலை வேதஞ் சொல்லிக் குடுக்கிறான்? எங்கடை பரம்பரை பரம்பரையாய் வந்த முறைதலையளையும் கெடுத்துப் போட்டான்! உந்தத் தாடிக்காறச்சாமியன் ஆரோ இரட்டைச் சாதிக்குத்தான் பிறந்திருக்க வேணும்; இல்லாட்டி இப்பிடிச் செய்வானே கேக்கிறன்?''

''உதுக்கும் ஒரு கதைதான்; உந்த ஞானமுத்துச் சுவாமியின் ஆரெண்டு தெரியுமே? எங்கடை தம்பாப் பிள்ளையற்றை ஒண்டுவிட்ட மாமன் மானிப்பாய் சாமி நாத பிள்ளையின்ரை மோனாமெல்லே!''

''சொல்லப்பட்ட வெள்ளாளன்ரை பிள்ளை இப்பிடி எளிய வேலை செய்யுதே பரதேசி!''

''நன்னியன்ரையும் மக்களின்ரையும் தூக்கு விலத்திற துக்கு அலுவல் பார்த்ததும் உவன்தான் கண்டியோ! தன்ரை மச்சான் எண்டும் பார்க்காமல் தம்பாப்பிள்ளை யரை வில்லங்கத்துக்கை மாட்டினதும் உந்தச் சாமியன் தானாம்!''

இப்படிப் பலவிதமான கதைகள் ஊரில் பேசப்பட்டன.

எந்த நளவன் பள்ளனுக்கும் கள்ளெடுக்க மரந்தடி கொடுப்பதில்லை எனவும் ஒருத்தனுக்கோ ஒருத்திக்கோ எந்த வேலையும் கொடுப்பதில்லையெனவும் தங்கள் காணிக்குள் குடியிருப்போர் எல்லோரையும் குடி எழுப்ப வேண்டுமென்றும் பலமுடிவுகளை கமக்கார நயினார்மாரில் பெரும் பகுதியினர் எடுத்துக் கொண்டனர்.

இத்தனை பிரசண்டங்களுக்கு மத்தியில் பூக்கண்ட ருக்கு எதுவுமே செய்யத் தெரியவில்லை. அவரின் மனிதா பிமான நடைமுறைக்கு இவைகள் சவாலாகவே அமைந்து விட்டன. நல்ல வேளையாகப் பூக்கண்டர் வீட்டில் எந்த அடிமைப் பெடி பெட்டையளோ இல்லை.

ஒவ்வொரு ஞாயிறும் குருவானவர் வருவார். பால சங்கீர்த்தனம் கொடுப்பார். பூசைப்பலி நடத்துவார். ஊர்ப் புதினங்களை விசாரிப்பார். உதவி ஒத்தாசை செய்வார்.

வேலைகள் இழந்து தோட்டம் துரவு செய்வதற்கு சொந்த நிலபுலன் இன்றிக் கஷ்டப்பட்டவர்களில் சிலருக்கு மட்டும் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில இடங்களில் வேலை வாங்கிக் கொடுக்க அவரால்முடிந்தது.

பாதிரியாராக வருவதற்கு முன் றெயில்வே பகுதியில் வேலை செய்தபடியால் அந்த அறிமுகங்களைப் பயன்படுத்திக் கொண்டு அந்தப் பகுதியில் இவர்களுக்குக் கூலி வேலை வாங்கிக் கொடுக்க அவரால் முடிந்தது.

படிப்பறிவைக் கொடுப்பதற்காக அறை வீட்டு விறாந்தையில் கிழமையில் மூன்று நாட்களுக்கு குறைந்த சம்பளத்தில் ஒரு வயதான சட்டம்பியாரை அமர்த்தி பாடம் சொல்லி வைத்தார். இத்தனையும் செய்து கொண்டிருந்த போதும் அந்தப் பெரிய கலட்டிப் பக்கத்தே இருந்த குடும்பங்களுக்கு மூன்று வேளையும் உணவு வரும்படி செய்து வைக்க அவரால் முடியவில்லை. இந்த நிலை அவர் மனதைப் பிழிந்து கொண்டிருந்தது.

அடிப்படையில் வாழ்க்கைக்கான சகல மூலதனங்களுக்கும் உரித்துடையவர்களைப் பகைத்துக் கொண்டு எத்தனை நாளைக்கு இருக்க முடியும்?

குருவானவர் மட்டுமல்ல பூக்கண்டரும் கூடத்தான்! அடுத்த அடுத்த கிராமங்களில் தனக்குத் தெரிந்தவர்களிடம் சொல்லி சிலருக்காவது வேலை வாங்கிக் கொடுக்க அவர் படாதபாடு பட்டுவிட்டார். ஒன்றும் நடக்கவில்லை. அவருக்கு மனதுக்குள் கவலைதான் நிறைந்து நின்றது.

தம்பனின் இப்போதைய ஞானஸ்ஞானப் பெயர் பேதுறு! என்றாலும் பூக்கண்டர் அவனைத் தம்பன் என்று தான் அழைத்து வந்தார். ஒருநாள் வாடிக்கைக் கள்ளை குடித்து விட்டு வீட்டுக்குப் போகப் புறப்பட்ட போது, ''தம்பன் உதிலை ஒரு அலுவல் உன்னோடை கதைக்க வேணும்; வாறியே ஒருக்கா?'' என்று கேட்டுக் கொண்டே எழுந்து நடந்தார்.

தம்பனாகிய பேதுறு அவருக்குப் பின்னால் நடந்தான்.

''தம்பன்! நான் சொல்லிறனெண்டு பிழையாக்கி ளையா எடுத்துப் போடாதை!'' என்று பீடிகை போட்டார் பூக்கண்டர்.

''நான் ஏன் தம்பி அப்பிடி நினைக்கப் போறன்? என்னையும் அப்பிடி நீங்கள் நினைக்கிறியளே? தம்பி செய்த நன்மைகளை மறப்பனே? அப்பிடி நன்றி கெட்ட வன் இல்லை இந்தத் தம்பன்!''

தம்பன் பூக்கண்டர் மேல் தான் வைத்திருக்கும் விசுவா சத்தை இந்தப் பேச்சின் மூலம் வெளிப்படுத்தி விட்டான்.

''தம்பன் நீயும் உன்ரை ஆக்களும் வேதத்திலை சேர்ந்தது உங்கடை இம்மிசைகளைப் போக்காட்டுறதுக் குத்தான் எண்டிறது எனக்கு நல்லா விளங்குது. வேதத் திலை சேந்தாப்பிறகு பொடி பொட்டையள் எப்பன் திருத்தி யிருக்குதுகள் எண்டதும் தெரியுது; எண்டாலும் தொழில் துறை இல்லாமல் கஷ்டப்படுகிறியள்! சின்னஞ் சிறிசுகள் வாயை வயித்தைக் கட்டிக் கொண்டு எத்தனை நாளைக்கு இருக்குங்கள்?''

''ஞானமுத்து சாமியாரும் நல்லாக் கஷ்டப்படுகிறார் தான். அந்தாள் தனியக் கஷ்டப்பட்டு எல்லாற்றை வயித் தையும் நிறைக்கேலுமோ சொல்லு பாப்பம்?'' பூக்கண்டர் கேள்விகளைக் கேட்டு நிறுத்திக் கொண்டார்.

தம்பன் சற்று வேளை ஒன்றும் பேசவில்லை. தோட் டக்கரை ஈச்சமரத்தடிப் பாதையில் இருவரும் நின்று கொண்டிருந்தனர்.

காற்று குளிர்ந்து வீசியது.

தொலைவில் றயில் இரைந்து வரும் ஓசை கேட்டது.

''தம்பி சொல்லுறதை நான் இல்லையெண்டு சொல் லேல்லை. எண்டாலும் என்ன செய்யிறது? எல்லாரும் வேதத்தை விட்டுப் போட்டு பழையபடி நயினாரவை யின்ரை சிறையளா இருக்கிறதே?'' தம்பன் பேசி முடிக்க வில்லை.

''இஞ்சர் இதுக்குத்தான் சொன்னனான்; என்னைப் பிழையாய் நினையாதை எண்டு! இந்தப் பூக்கண்டன் அப்பிடிச் சொல்லுவானே? உனக்கு யோசனை சொல்ல நான் வரேல்லைத் தம்பன்; இருக்கிற நிலபுரங்களைக் கொஞ்சமெண்டாலும் கதைச்சு ஆறுவம் எண்டுதான் வந்த னான்; அதுக்கிடையிலை நீ பேய்க்கதை கதைச்சுப் போட் டாய்!''

தம்பன் மேல் சற்றுக் கோபமாகவே பூக்கண்டர் பேசி முடித்து விட்டார்.

தம்பன் ஒன்றும் பேசவில்லை.

குளிர் காற்று சற்று வேகமாக வீசியது. வானம் மேக மூட்டமாக கிடந்தது. மழையைக் கொண்டு வரும் குளிர் காற்றுத்தான் அது!

''தம்பன் எனக்கொரு யோசினை வருகுது. கொழும் பிலை இருக்கிற நெருப்புப் பெட்டிக் கொம்பனிக்காறர் ஊருக்கை சாமானுகளைக் குடுத்து பெட்டி செய்விக்கிறாங் களாம். ஆயிரம் பெட்டி செய்து குடுத்தா நாலு பணம் கூலியாம். ஆனா ஆரும் நல்லவன் பெரியவன் சொன்னாத் தான் அவனை நம்பி சாமான் குடுப்பாங்களாம். குட்டியன் வீட்டிலை இருந்த இரையிலை குழந்தை குட்டியள் ஒட்டிக் குடுத்துதுகளாய் இருந்தா கிழமையிலை எட்டுப் பணம் எண்டாலும் வரும். உந்த யோசினையை ஒருக்கா உங்கடை சாமியிட்டை சொல்லிப் பார். அந்தாள் நினைச் சாச் செய்து போடும்.'' பூக்கண்டர் தனது ஆலோசனை யைக் கூறி முடித்தார்.

தம்பனுக்கும் புதிய பாதை ஒன்று திறந்துவிட்டது போலப்பட்டது.

''தம்பி சொல்லுறதும் நல்ல காரியம் போலை கிடக்கு. நாளைக்கு சுவாமியோடை ஒருக்காக் கதைச்சுப் பாப்பம்.'' என்றான் தம்பன்.

''அப்ப, தம்பன் நான் போட்டுவாறன். பூக்கண்டன் தான் உந்த யோசினையைச் சொன்னவன் எண்டு வெளி யிலை கதைச்சுப் போடாதை: பேந்தெக்கணம் தாவடி நயினாரவை என்னை திண்டு கைகழுவிப் போடுவாங்கள்.'' என எச்சரித்து விட்டுப் பூக்கண்டர் போய் விட்டார்.

சற்று வேளை அங்கேயே நின்றுவிட்டு தம்பனும் வீட்டுக்குப் போய்விட்டான்.

அவன் வீட்டுக்கு வந்தபோது குந்தில் இருவர் தனக் காகக் காத்திருப்பது தெரிந்தது.

சிணுங்கல் விளக்கு அவர்களுக்கு முன்னால் சிணுங்கிக் கொண்டே இருந்தது. ''ஆரது உதிலை இருக்கிறது?'' என்று கேட்டுக் கொண்டே தம்பன் வந்தான்.

''அதுநான்தான் சங்கிலித்தாம் அண்ணை!'' என ஒருவன் குரல் காட்டினான். அவன் ஆசீர்வாதப்பர் கோவில் சங்கிலித்தாம் இராயப்பனின் அண்ணன் சலமோன்; மற்றவன் அவனின் மைத்துனன் அருளப்பன்.

''எட, சலமோனே? என்ன இந்தப் பக்கத்தாலை... இந்த ரெண்டும் கெட்ட நேரத்திலை?'' என்று கேட்டு விட்டுத் தம்பன் அவர்களுக்குப் பக்கமாக அமர்ந்து கொண் டான். அடுக்களையில் அடுப்பு எரிவது தெரிந்தது.

''இஞ்சேர், பொடியளுக்குக் கோப்பியை கீப்பியை போட்டியே?'' தம்பன் மனைவியைக் கேட்ட கேள்விக்கு,

''கோப்பிதானப்பா போடிறன்!'' என்று உள்ளே இருந்தே பதில் சொன்னாள் அவள்.

''என்ன சங்கிதி சலமோன்? முக்கிய அலுவல் இல்லாட்டி நீ வராய்!''

''அப்பிடிப் புதினம் இல்லையண்ணை. இவர் அருளப்பு மச்சான்ரை பிள்ளை ஒண்டு பக்குவப்பட்டிருக்கு! அதுதான் இஞ்சினேக்கை ஒரு மாப்பிள்ளை எடுக்க, பேச் சுக்கால் வைக்க வந்தனாங்கள். அங்கையும் திரேசிப்

பெட்டையோடை கதைச்சுப் பாத்தனாங்கள். 'அண்ணை, அப்புவும் மூத்தண்ணையும் மறியலுக்கை இருக்கேக்கை சம்மதிக்கிறானோ தெரியேல்லை. எல்லாத்துக்கும் உங் களோடை கதைச்சுப் பாக்கட்டாம்... அதுதான்...''

சலமோன் ஒரு மாதிரி பேசி முடித்துவிட்டான். இப் போது தம்பன் பேசும் முறை. அவன் சற்று வேளை பேசாது இருந்தான்.

மனைவி இரண்டு குண்டுக் கோப்பைகளில் சுடச்சுட கோப்பி கொண்டு வந்து வைத்தாள்.

''ஆர் எங்கடை நன்னியற்றை இளையவனுக்கோ?'' அவள் கேட்டாள்.

''இன்னும் இளையவன் எண்டுதான் சொல்லுறாள்? நீ அதை விடாய் போலை கிடக்கு! அவன்ரை வேதப் பேர் முடியப்பு! எண்டதை சொல்லிக் கூப்பிடு எண்டு நானும் எத்தினை'தரம் சொல்லி அலுத்துப் போனன்.''

தம்பன் சொல்லி முடித்த போது...

''அவ முந்திக் கூப்பிட்ட பழக்கத்திலை கூப் பிட்டுட்டா; அதுக்கேன் சங்கிலித்தாம் அண்ணை கோவிக் கிறியள்?'' என்று ஒரு விதமாகச் சமாதானம் செய்தான் சலமோன்.

தம்பனின் மனைவி வந்தவர்களுக்கு இராச் சாப்பாட் டிற்காக நீத்துப் பெட்டியில் ஒடியல் பிட்டு அவிக்க குசினிக் குள் போய் விட்டாள்.

''நீங்கள் நல்ல காரியம் தான் கதைக்க வந்திருக்கிறி யள். என்றாலையும் உடனே மறுமொழி சொல்ல ஏலாமல் கிடக்கு! இப்ப ஏன் அவசரப்படுகிறியள்? அவன்ரை மச் சாள்காறியிட்டையும் ஒரு சொல்லுக் கேக்க வேணும். அவள் பெட்டைதான் அவனுக்குத் தாய் தேப்பன் எல்லா மாயிருக்கிறாள்...... நான் ரெண்டொரு நாளைக்குள்ளை

கதைச்சுப் போட்டு வாற ஞாயிற்றுக்கிழமை பூசை முடிஞ்சு அங்கை வாறன்.''

''ஏனடியப்பா பொடியளுக்கு ராவைக்கு ஏதும் தீன்கீன் அடுக்குப் பண்ணினனியே?...'' என்று கேட்டுக் கொண்டே கதைக்கு முற்றுப்புள்ளி இட்டான் தம்பன்.

''ஏதோ சங்கிலித்தாமண்ணை உங்களை நம்பித்தான் வந்தனாங்கள். ஒரு விதமாய் ஒப்பேத்தி விடவேணும்.'' என இதுவரை பேசாதிருந்த அருளப்பன் பேசினான்.

''என்னாலை முடிஞ்சதைச் செய்வன் தம்பி அருளப்பு!'' என பேச்சை முடித்துக் கொண்டு, ஊர்ப் புதினங்களுக்குப் பேச்சை மாற்றிக் கொண்டான் தம்பன்.

ஊருக்குள் இருக்கும் பஞ்சம் பட்டினி பற்றித் தம்பன் பேசினான். நெருப்புப் பெட்டிக் கொம்பனி பெட்டி ஒட்டும் வேலையைப் பற்றிக் கூறி குருவானவரிடம் உதவி கேட்க இருப்பதாகவும் தம்பன் சொன்னான். பூக்கண்டர் பற்றி அவன் மூச்சுக்கூட விடவில்லை.

தாங்களே குருவானவரிடம் இதுபற்றி பேசி முடி வெடுப்பதாகவும் வாக்குக் கொடுத்தனர். சலமோனும்! அருளப்பனும்.

ஒடியல்பிட்டு அவியம் வாசனை மூக்கைப் பிடுங்கியது

மாலை சாவற்காட்டுச் சந்தையில் வாங்கி வந்த, நாளையத் தேவைக்காக தீய்த்து வைத்திருந்த தேறை மீனையும் வெள்ளுறாலையும் போட்டு, ஏற்கனவே உருக்கி வைத்திருந்த திருக்கை நெய்யையும் பிரட்டி நீற்றுப்பெட்டி யில் போட்டு வேகவைத்த வாசனைதான் இப்படி மூக்கைப் பிடுங்கியது.

இளையவனாகிய முடியப்புவுடன் சங்கிலித்தாம் ஆகிய தம்பனுக்கு இரண்டு நாட்களுக்குப் பின்புதான் ஆறுதலாகப் பேச சந்தர்ப்பம் கிடைத்தது.

இளையவன் ஆலாய்ப் பறந்து திரிந்தான். அண்ணன் மனைவிக்கும் பிள்ளைகள் மூன்றுக்கும் வயிற்றுக்குக் கொடுத்துக் காப்பாற்றுவதற்கு அவன் ஆவலாய்ப் பறந்து திரிந்தான். ஒருநாளைக்கு ஒரு நேரச் சாப்பாட்டைத் தானும் திருப்தியாகக் கொடுக்க முடியவில்லை.

பட்டணத்துக்குச் சென்று கிட்டங்கியில் இருந்து மூடைகளைத் தூக்குவதில் சற்றுப் பரிச்சயம் இருந்ததால் நாளொன்றுக்கு அவனுக்கு இரண்டு இரண்டரைப் பணம் கிடைத்து வந்தது.

அலுப்பாந்திப் படகுகளில் இருந்து அல்லது ரயில் பெட்டிகளில் இருந்து மூடைகளை இறக்கி கிட்டங்கிகளுக்குக் கொண்டு சென்று அடுக்க வேண்டும்!

ஒவ்வொரு மூடையையும் தூக்கிச் செல்லும் போது தடிக்கணக்கன் தூக்குமிடத்திலிருந்து ஒரு சாண் நீள புள்ளுத்தடி துண்டுகளைக் கொடுத்துக் கொண்டே இருப்பான். மூடைகள் அடுக்கும் இடத்திலிருக்கும் ஏட்டுக் கணக்கன் மேசையில் அது வைக்கப்படும். முடிவில் தடிகளைக் கணக்கெடுத்து தடிக்குக் கால்சல்லி வீதம் கணக்கை ஏட்டுக் கணக்கன் முடிப்பான். கிடைக்கும் சல்லிகளில் ஆறுசல்லிக் கொன்று என்ற வீதத்தில் முக்கந்துக் கூலியை எடுத்துக் கொண்டு தான் அவன் கணக்கைத் தீர்ப்பான். அத்துடன் கோட்டை முனியப்ப சாமியின் வருடாந்த அன்னதானத் துக்கென பத்துச்சல்லிக்கொன்றும், வில்லூன்றிப் பிள்ளை யார் கோவிலுக்கு வருடா வருடம் நடக்கும் கிட்டங்கிக்

காரர் திருவிழாவுக்கெனவும் இருபதுக்கொன்று எனக் கழித்தும், கையில் தேறுவது மூன்று அல்லது நான்கு பணமாகத்தான் இருக்கும்.

வேலை முடிந்து வீட்டுக்கு வரும்போது கறிக்கடைக் குள் அரைப்பணத்திற்கு ஏதாவது மச்சமும் அடுத்த அரைப் பணத்திற்கு ஏதாவது காய்பிஞ்சும் அரைப்பணத்திற்கு அரிசியும், குழந்தைகளுக்கு ஏதாவது இனிப்பு வகைகளும் வாங்கி, மிஞ்சுவதை அப்படியே மச்சாள் பொன்னியின் கையில் கொடுத்து விடுவான்.

அவன் வீட்டுக்கு வந்து சேர இருட்டி விடும். அதன் பின்புதான் அடுப்புப் புகையும். அவனுக்கென உழைப்பில் சுவறுவது மத்தியானம் கிட்டங்கி நெடும் தீவுக் கடைக்காரன் கடையில் அரைப் பணத்திற்கு சாப் பிடும் சோறு ஒன்றுதான்! அதுவும் ஒதுக்குப் புறத்தில் சாக் கில் இருத்தி அனாயாசமாகக் கிள்ளிப்போடும் அந்தச் சோறு! அந்தச் சோற்றில் கொட்டைப் பாக்கு வாசனை அடிக்கும்.

கடைக்கார நாகலிங்கத்தார் சோற்று உலைக்குள் நான்கு கொட்டைப் பாக்குகளைப் போட்டுத்தான் சோற்றை உவிவிப்பார்.

நான்கு வாய் அள்ளி வைக்குமுன் கொட்டைப் பாக்கு மணம் குடலைப் பிரட்டும்.

போதாதற்கு அவர் ஊற்றுவாரே ஒரு குழம்பு! அது நாக்கில் பட்டவுடன் நாக்கை அள்ளி எடுக்கும். குழம்புச் சட்டி உட்புற அடியில் சுண்ணாம்பைத் தடவித்தான் அவர் குழம்பு காய்ச்சுவார். சுண்ணாம்பு கலக்கப்பட்ட குழம்பு நாக்கை அள்ளும்போது தண்ணீர்தான் கேட்கும்.

பாக்குமணக் குமட்டல்;

சுண்ணாம்புச் சுணைப்பு;

தண்ணீர் நிறைப்பு;

வயிற்றுப்பாடு தீர்ந்து விடும்.

இவைகளைவிட ஒவ்வொரு இடத்திற்கும் கூலிகளை அனுப்பிவைக்கும் 'முக்கந்தர்' என்று காரணப் பெயர் பெற்றவருக்குப் பயந்து நடுங்கல், ஒதுங்குதல், கையைப் பிசைதல்!

அவருக்காக விஷேச தாரை வார்ப்புகள்!

அவரின் சாராயக் கடைக் கணக்கை மாத முடிவில் தாங்கிக் கொள்பவர்களில் இளையவனும் ஒருவன்.

ஞாயிற்றுக்கிழமை ஓய்வு நாள்.

குருவானவர் வராதபோது பூசைப் பலிக்குப் பதில் சிலுவைப் பாதயாத்திரையை கோயிலுக்குள்ளேயே சுற்றி முடிப்பதற்கு யாராவது ஒருவரைக் குருவானவர் அனுப்பி வைப்பார்.

இன்று சந்தியாப்பிள்ளை உபதேசியார் வந்து சிலுவைப் பாதயாத்திரையை நடத்திவிட்டுச் சென்று விட்டார்.

குருவானவரின் கட்டளை, இரண்டு கத்தோலிக்கர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்க நேர்ந்தால் ஞானஸ்ஞானப் பெயரையே சேர்த்துச் சொல்லி அழைக்க வேண்டும் என்பது. அதைக் கடைப்பிடிப்பது கஷ்டமாயினும் முடிந்த வரை சங்கிலித்தாம் தம்பனாவது செய்து வந்தான் என்பது வரை பரவாயில்லை.

கோவிலில் இருந்து புறப்படும்போது, "முடியப்பு, தம்பி இளையவன் முடியப்பு! ஒரு வியளம்!" என்று இளையவனைக் கூப்பிட்டார் சங்கிலித்தாம் தம்பன்.

சற்றுத் தூரம் போய் இளையவன் நின்று திரும்பிப் பார்த்தான். தன்னுடைய பெயருடன் முடியப்பு என்பது இணைந்திருந்தது சற்றுத் தாமதித்துத் தான் அவன் நினைவுக்கு வந்திருக்க வேண்டும்!

"தம்பி உன்னோடைதான் ஒரு கதை கதைக்க வேணுமெண்டு நாலைஞ்சு நாள் தெண்டிச்சனான். நானும்

றயிலடி வேலையாலைவர ஒண்டுபாதியாப் போயிடும். நீயும் மூட்டை சுமந்து போட்டு வந்து நித்திரையாப் போவாய். நான வளவில் மரங்களை அறுத்துப் போட்டு றயிலடிக்குப் போயிடுவன்; எங்கை நேரம்!'' என்று அலுத்துக் கொண்டே தம்பன் கூறினான்.

''இண்டைக்கு ஞாயிற்றுக் கிழமைதானை கதைப்பம். அப்பிடி என்ன என்னோடை முக்கியமாக கதைக்கப் போறியள்?

ஓமடா தம்பி, பிரதானமான விஷயம்தான். உனக் கெல்லே ஒரு சம்பந்தம் பேசி வந்தவை!''

''என்னண்ணை... எனக்குச் சம்மந்தமோ... பகிடி விடுகிறியள் போலை கிடக்கு!''

''பகிடி இல்லையடா தம்பி, உண்மையாத்தான் சொல்லிறன்! என்னட்டை வந்தவை. நான் எல்லாத்துக்கும் தாய்க்குத் தாயா இருக்கிற உன்ரை மச்சாளைக் கேட்டுப் போட்டு, உன்னட்டையும் கேட்டுச் சொல்லுறன் எண்டு சொல்லி அனுப்பினனான். சொன்னாப்போலை திரேசிப் பெட்டையிட்டையும் கேட்டவையாம்; திரேசிப் பெட்டை என்னைச் சாட்டிவிட்டுட்டாள். நீ என்ன குழந்தைப் பொடியனே? பருவத்திலை பயிர் செய்யச் சொல்லியெல்லே பெரியவை சொல்லியிருக்கினம்!''

''அண்ணை! உந்தக் கதையை விடுங்கோ. மாதா வாணைச் சொல்லிப் போட்டன். மூத்தண்ணை மறியலாலை வாறவரையும் கலியாணம், கிலியாணம் எண்டு எண்ணமாட்டன்!''

''நான் கலியாணம் கட்டிப்போட்டா, அண்ணற்றை குஞ்சுகளையும் மச்சாளையும் ஆரண்ணை பாக்கிறது? மாதாவாணை பிறகும் சொல்லுறன்; ஆர் சொன்னாலும் நான் கலியாணம் கட்டமாட்டன். கும்பிட்டன் உந்தக் கதையை என்னோடை கதைக்காதையுங்கோ!''

தம்பனால் மேலே பேசமுடியவில்லை. சற்று வேளைக்குப் பின்பு ''எட தம்பி, மாடு சாகேக்கை கண்டுக்குப் புல்

லுப் பிடுங்கிப் போட்டிட்டுச் சாகிறேல்லை! ஏன் கோத்தை சாகேக்கை ஏதும் தேடி வைச்சிட்டுச் செத்தவவே? கொப்பன் மறியல்லை இருக்கிறான்; நீங்கள் சீவிக்கேல்லையே? எப்பிடி இருந்தாலும் படைச்சவன் படி அளப்பான் தாணை! உதுகள் எல்லாத்துக்கும் யோசிச்சுக் கொண்டிருந்தா உலகம் நடக்காதடா தம்பி,'' என்று தம்பன் சொன்னான்.

''அண்ணை பேந்தும் சொல்லுறன். அண்ணன் மறியலாலை வாறவரைக்கும் நான் கட்டன்; மாதாவாணை கட்டன்!'' வெட்டு ஒண்டு துண்டு ரெண்டாக இளையவன் பேசிமுடித்துவிட்டு, மெதுவாக நகர ஆரம்பித்தான். தம்பனும் அவனைத் தொடர்ந்து போய்க் கொண்டிருந்தான்.

இருவரும் பேசாமலேயே நடந்து கொண்டிருந்தனர். இடையே பிரிந்து அவர்கள் சற்றுத் தூரம் சென்றிருப்பார்கள். கிழக்குப் புற ஒழுங்கைக்கூடாக ஒரு சையிக்கிள் வந்து அவர்களுக்கு நேரா நின்றது.

சையிக்கிளில் வந்தவன் சிமியோன்.

தம்பன் அவனைப் பார்ப்பதை விட்டு விட்டு நாலாபுறமும் பார்த்தான்.

அவன் என்ன பார்க்கிறான்?

சிமியோன் சையிக்கிளில் வந்ததை யாராவது பார்த்திருப்பார்களோ? என்ற அச்சம்தான் தம்பனுக்கு! ஒருவரும் அவன் கண்ணில் படவில்லை.

''வாரும் தம்பி; வாரும். எல்லாம் வீட்டை போய்க் கதைப்பம்!'' என்று அவசரப் படுத்திக் கொண்டே தம்பன் வீட்டு முற்றத்திற்கு வந்துவிட்டான்.

சிமியோனும், பின்னால் வந்து சேர்ந்துவிட்டான்.

அப்போதுதான் கோவில் சிலுவைப் பாதைக்குச் சென்று வந்திருந்த மூத்தவன் மனைவி பொன்னி பழங் கஞ்சி கரைத்துக் கொண்டிருந்தாள்.

மூத்தபெட்டை குடத்தடியில் இருந்த சட்டி பானைகளைக் கழுவிக் கொண்டிருந்தாள். நடுவிலாள் முற்றத்தில் நின்று தன்பாட்டில் மாங்கொட்டை விளையாடிக் கொண்டிருந்தாள். கடைக்குட்டி கொட்டிலின் முன்னால் சளிவடிய இருந்து கொண்டே தனக்குள் எதை எதையோ சொல்லிக் கொண்டிருந்தது.

சிமியோனைக் கண்டதும் பொன்னி வீட்டு முற்றத்திற்கு வந்துவிட்டாள்.

''நான் அவசரமாய் வந்தனான்! சுவாமி உபதேசியாற்றை சைக்கிளை வாங்கிக் தந்து என்னைப் பிடிச்சு அனுப்பினவர். நாளைக்குக் திங்கட்கிழமை காலமை பத்து மணிபோலை அம்மானையும் மூத்த மச்சானையும் கண்டியாலை கொண்டு வந்து இஞ்சத்தை மறியல் வீட்டிலை வைச்சிருப்பினமாம். நாளைக்குக் காலமை ஒரு மணித்தியாலம் சொந்தக்காறர் ஐஞ்சு பேரும், நாளையிண்டைக்குக் காலமை ஐஞ்சு பேரும் பார்க்கலாமாம். அதுதான் காலமையோடை கோட்டைக்கு வரச்சொல்லிவிட்டவர். அவருக்கு நேற்றைக்கு மறுமொழி வந்ததாம்!''

சிமியோன் பேசி முடிக்கவில்லை. பொன்னியின் கண்கள் நீரினால் நிறைந்து விட்டன.

சிமியோனுக்கு ஏதாவது குடிக்கக் கொடுக்க வேண்டுமெனவும் அவள் நினைக்கவில்லை.

சிமியோன் வந்த சையிக்கிளைச் சுற்றிச் சிறிசுகள் கூடிவிட்டன;

தம்பன் சிமியோன் பேசியதைக் கேட்டுக் கொண்டே கண்களை நாலா பக்கமும் சுழற்றிக் கொண்டிருந்தான்.

வேறு பிறத்தியார் அவன் சையிக்கிளில் வந்ததைப் பார்த்து விடுவார்களோ என்ற பயம் அவனுக்கு! சையிக்கிள் முற்றத்துப் பனையில் சாத்தி விடப்பட்டிருந்தது.

தம்பனின் மனைவி சிமியோனுக்குக் கோப்பித் தண்ணீரைக் கலக்கி ஒரு பூவரசம் இலையில் வேலூர் தூள் சர்க்கரையையும் கொண்டு வந்து கொடுத்தாள்.

''அப்ப நான் கெதியாப் போகவேணும். நீங்கள் விடியவாய் கோட்டையடிக்கு வந்திட வேணும்; நானும் திரேசியும் அங்கை வந்து நிப்பம். ஒரு முறையிலை ஐஞ்சு பேர்தானாம் பார்க்கலாம். நாளைக்குப் பெண்டுகளையும் பிள்ளையளையும் விடுவம். நாளையிண்டைக்கு ஆம்பிளையள் பாப்பம். என்ன சங்கிலித்தாம் அண்ணர்?'' சிமியோன் தம்பனைக் கேட்டான்.

''ஓம் தம்பி, அப்பிடித்தான் செய்வம்; நானும் இவையளைக் கூட்டிக் கொண்டு விடியக் கோட்டைக்கு வாறன்; வெள்ளணத்தோடை பாக்கிற வயின்ரை பேருகள் குடுக்க வேணும் கண்டியோ?''

''அப்ப, அவைக்கு சாப்பாடு நாங்கள் அடுக்குப் பண்ணிக் கொண்டு வாறம். நீங்கள் வந்து சேருங்கோ; எங்கை இளைய மச்சானைக் காணேல்லை?'' என்று சிமியோன் கேக்கவும் பனை வடலிக்கூடாக இளையவன் வரவும் சரியாகஇருந்தது.

''தம்பி சிமியோன் உந்தச் சயிக்கிளை எப்பன் இஞ்சாலை மறைவிலை வையும்!'' என்று தன் மனதின் பயத்தை மெதுவாக நாகரீகமாக வெளிப்படுத்தினான் தம்பன்.

சிமியோன் நிலைமையைப் புரிந்து கொண்டானோ இல்லையோ கீழ்ப்படிவாக சையிக்கிளை எடுத்து தாழ்வாரத்து மறைவில் விட்டான்.

''என்ன மச்சான், இந்த நேரத்திலை?'' என்று கேட்டுக்கொண்டே இளையவன் வந்தான்.

''கொப்பரும் கொம்மையும் நாளைக்கு இஞ்சத்தை மறியல் வீட்டுக்கு வருகினமாம். அதுதான் சொல்லிப் போட்டுப் போக வந்தவர்!'' என்று பொன்னியே பதில் சொன்னாள்.

இளையவன், மச்சாள்காரியின் முகத்தைப் பார்த்து க்கப்பட்டுக் கொண்டான்.

''அவளின் மனக் கிளுகிளுப்பு நாளைக்கு அண்ண னைப் பார்க்கும் வரையிலைதான்! அடுத்த நாள்...அவர் களைக் கொண்டு போய் விடுவார்கள்.' என்பதை நினைத் துத்தான் அவன் இரக்கப்பட்டான்.

''அப்ப, நான் போட்டு வரப்போறன்!'' என்று கூறிக் கொண்டே சிமியோன் எழுந்தான்.

''தம்பி சிமியோன் நிண்டு போட்டுப் பொழுது பட்டாப் போலை போமோனை! உமக்குச் சொன்னா என்ன... நீங்கள் பட்டணத்துக்குப் பக்கத்திலை இருக்கிறத்தாலை சயிக்கிள் ஓடுறியள். உங்கடை விருப்பத்துக்கு நடக் கிறியள்! இஞ்சை இருக்கிற எங்கடை பொடியள் இன்னும் சயிக்கிள் ஓடேல்லைத் தம்பி! இப்ப இருக்கிற வில்லங்கத் துக்கை நயினாரவை பேந்தும் வில்லங்கம் குடுப்பினம். அது தான் இருட்டினாப் போலை போனா நல்ல தெண்டிறன்.'' தம்பன் தன் மனதில் உள்ளதை சொல்லி விட்டான்.

''சங்கிலித்தாமண்ணை ஆத்திலை இறங்கினாப் பிறகு சான் போனா என்ன? முழம் போனா என்ன? நெடுக, நெடுகப் பயந்து சாகிறதைவிட ஒரு நாளையிலை செத்துப் போறது நல்லதண்ணை. மச்சானோடை நான் போறன். செய்யிறவன் செய்து பாக்கட்டுக்கு!'' என்று இளையவன் கூறிக்கொண்டே புறப்பட்டு விட்டான்.

தம்பனுக்குப் பேச வரவில்லை.

பொன்னியாலும் ஒன்றும் பேச முடியவில்லை.

தம்பனின் மனைவி மட்டும் பேசினாள்.

''பொடியள் சொல்லிறதிலை என்ன பிழை? எல்லாத் துக்கும் பயந்திருந்த மெண்டா எங்கடை பிள்ளை குட்டிய ளும் சீவிக்கேலாது! கோயில் கட்ட வெளிக்கிடேக்கை எல் லாரும்தான் 'ஆத்தறிப்பாங்கூர்' எண்டு நிண்டவை

உவையின்ரை கதையை விட்டிட்டு கொத்தானோடை போட்டு வாடா தம்பி!''

அவள் பேசியது இவ்வளவுதான்.

சிமியோன்புறப்பட்டு விட்டான்.

அவன் நடைபாதைப் பள்ளங்களினால் சையிக்கிளை மெது மெதுவாக ஓட்டிச் சென்று ஒழுங்கை முனைக்கு வந்த போது, இளையவன் சையிக்கிளின் பின் கரியரில் தொற்றிக் கொண்டான்.

சையிக்கிள் ஒரு முடக்கைத் தாண்டிக் கொண்டிருந்த போது, அடுத்த சந்திப்பில் மூன்றுபேர் நிற்பது தெரிந்தது.

''மச்சான், சந்தியிலை மூண்டு பேர் நிக்கிறாங்கள்; ஏதாகிலும் சேட்டை கீட்டை விடப்பாப்பாங்கள்! தற்சேலா மறிச்சாங்களெண்டா அவங்களுக்குக் கிட்ட நிப்பாட்டாதை; கொஞ்ச இடம் போய் முன்னுக்கு நிப்பாட்டு; பயப்பிடாதை!'' என்று இளையவன் சொல்லி வைத்தான். சையிக்கிள் சந்திப்புக்குச் சமீபித்து விட்டது. நின்றவர்கள் இவர்களை நிமிர்ந்து பார்த்துக் கொண்டே இருந்தனர். இளையவன் நிற்பவர்களை அவதானித்தான். அவர்களில் ஒருவன் மயிலு.

அவன் இப்போது செத்த பாம்பாகி விட்டான். தம்பாப் பிள்ளையர் மறியல் வீட்டுக்குப் போனதுடன் அவனுக்குத் தண்ணீர் ஊற்றி உயிர் கொடுப்பார் யாருமில்லை. மற்றவர்கள் இருவரில் ஒருவன் தச்ச பகுதி கந்தசாமி ஆச்சாரி.

மூன்றாமவன் யாரென்று தெரியவில்லை.

சையிக்கிள் அவர்களை வழிவிலத்திச் சென்றது. மூச்சுப் பேச்சு எதுவுமில்லை.

சையிக்கிள் சற்று அப்பால் போன போதுதான் ''மறிச்சுப் பாத்தாங்களில்லை.'' என்று கூறிக் கொண்டே, இடுப்பில் செருகி இருந்த மூடை கொழுவித் தூக்கு ஊக்கினை எடுத்து சிமியோனுக்குக் காட்டினான், இளையவன்.

சிமியோனும் இளையவனும் சற்று தூரம் போக வில்லை. அதற்கிடையே குறுக்கே வந்த இன்னோர் ஒழுங்கை முகப்பில் இருந்து—

''பொடியள் துலைக்கே?'' என்ற கேள்வி கேட்டது.

சிமியோன் குரல் வந்த திக்கில் முகத்தைச் சரித்தான். உயர்ந்து உடல் பருத்து கழுத்து மட்டம் வரையிலான கிறு தாத் தலையுடன் பென்னம் பெரிய நெற்றியில் பச்சை நிறக் குங்குமப் பொட்டுடன் கக்கத்துக்குள் ஒரு எழுமுள்ளுச் சிறு தடியுடன் ஒருவன் நின்றான்.

அவனுக்கு வயது அம்பதுக்கு மேல் இருக்கும். சிமி யோன் அவனை முன்பின் கண்டதில்லை. இளையவன் திரும்பிப் பார்த்தான். அவனுக்கு ஆளைத் தெரிந்து விட்டது.

''எட, எங்கடை சுப்பர் அப்பா, நிப்பாட்டு மச்சான் சயிக்கிளை'' என்றான். சையிக்கிள் நின்றது.

''இளையவன் துலைக்கே? ஆர் இந்தப் பொடியன்? தெரியேல்லை! நீயும் மறியள் வீட்டுக்கை இருந்து மளமள வெண்டு வளந்திட்டாய்!'' என்று அவர் பேசினார்.

''ஓம் சுப்பரப்பா! நீங்களும் பெரு பெரு வெண்டு பெருத்துப் போட்டியள்! மட்டுக் கட்டேலாமால் கிடக்கு எண்டாலும் குரலிலை கண்டு பிடிச்சிட்டன்.

''நானடா தம்பி இப்ப மூண்டு வரிசமாய் ஊரிலை இல்லையெல்லே! மன்னாரிலை பரமுவின்ரை மூண்டாம் நம்பர் தவறணையிலை மேற்பார்வையாளனாய் இருந்து போட்டு நேத்துத்தான் வந்தனான். அங்கையிருந்து கொண்டு உங்கடை விஷயமெல்லாம் கேள்விப்பட்டனான். பேப்பரிலையும் பார்த்தனான். நீயும் கொண்ணனும் கொப்பருமாச் சேந்து ஒரு புண்ணிய காரியம் செய்திருக்; கிறியள். நீ பிழையாய் நினைக்காதை! அந்த இரணியன் விதானையைக் கொண்டது. ஒரு புண்ணிய காரியம் தான்ரா தம்பி! பாரதப் போரிலைஅபிமன்யு நூற்றொரு

பேருடைய வியூகத்தை உடைச்சுக் கொண்டு உள்ளுக்குப் போய் எதிரியளை அழிச்சமாதிரி நீங்களும் வீடு தேடிப் போய் சங்காரம் செய்திருக்கிறியள். ஆனால் அபிமன்யு விட்ட பிழையை நீங்கள் செய்யேல்லை. கெட்டித்தனமாய் திரும்பி வந்திட்டியள். கொப்பரையும் கொண்ணையையும் போய்ப் பாத்தியளே எப்பிடி? எங்கை வைச்சிருக்கி றாங்கள்?''

''அதுதான் மச்சான் சொல்ல வந்தவர். நாளைக்கு யாழ்ப்பாண மறியல் வீட்டுக்கு கொண்டு வருகினமாம். நாளைக்கும், நாளையிண்டைக்கும் ஐவஞ்சுபேர் வந்து பாக்கலாமெண்டு குருவானருக்கு மறுமொழி வந்திருக்காம் அதைத்தான் சொல்ல மச்சான் வந்தவர். இவர்தான் சுப்பப்பா, என்ரை தங்கச்சியை முடிச்சவர். நல்லூரடி வேதக்காற சிமியோன் எண்டிறது!''

''எட, ஆசீர்வாதப்பர் கோவிலடியே! மூப்பர்... அது தான் அவன்ரை வேதப்பேர்; மறந்துபோனன். முந்தி ஆறுமுகத்தான் எண்டு சொல்லிற நாங்கள்...'' சுப்பர் பேச்சை முடிப்பதற்கு முன்னாலேயே ''அவற்றை நடுவி லான்தான் நான்!'' என்று சிமியோன் அவசரத்துடன் கூறினான்.

''எட, என்ரை சினேகிதன் ஆறுமுகத்தான்ரை மோன்! முந்தி ஆறு முகத்தானிட்டை வரேக்கை சின்னப்பொடி யனாய் முத்தத்திலை நிண்டு தாமாச்சிக் கறணம் அடிச்சுக் காட்டிறனி என்ன?''

சுப்பர் சரியாகவே அடையாளம் சொல்லி விட்டார். அவன் ஒப்புக் கொள்வது போலத் தலையசைத்தான்.

''தம்பி இளையவன் உங்கடை பாடு தொழில் துறை யெல்லாம் சரியானகஷ்டமெண்டு நேற்று என்ரை மோன் சொன்னவன். கெலிச்சுப் போகாதையுங்கோடா; நெடுக இப்பிடி இருக்காது! பாரதச் சண்டையிலை கடைசியாய் நீதிக்குத்தான்ரா பொடியள் வெற்றி! அது கிடக்கட்டுக்கு, நாளைக்கு, இல்லாட்டி நாளையிண்டைக்கு கொப்பரையும்

கொண்ணனையும் பாக்க என்னையும் ஒரு ஆளாச் சேத்துக் கொள்ள மாட்டியளே?''

இளையவன் சற்று வேளை யோசித்தான்.

''அப்பா, வீட்டிலையும் கதைச்சுப் போட்டு இரவைக்கு வந்து வீட்டிலை சொல்லிறன்'' என்று பேச்சைச் சுருக்கிக் கொண்டான். ஏனெனில் சையிக்கிளுடன் அந்த இடத்தில் நிற்பது பொருத்தமானதாக அவனுக்குப் படவில்லை.

''சரி. சரி. எல்லாத்துக்கும் ராவைக்கு வருவாய் தானை! அப்ப கதைப்பம். போட்டு வாருங்கோ பொடியள்...! ஆறிலும் சாவு! நூறிலும் சாவு! பயப்பிடாதையுங்கோ'' எனக் கூறி இருவர் தோள்களையும் சுப்பர் தட்டிவிட்டே நடந்தார்.

''இவர்தான் மச்சான் நெஞ்சுச் சுப்பர் எண்டிறது! 'மகாபாரதச் சுப்பன்' எண்டும் சொல்லிறவை. வலு நல்ல மனிசன்.'' என்று சிமியோனுக்குச் சொல்லிக் கொண்டே இளையவன் சையிக்கிள் கரியரில் ஏறிக் கொண்டான்.

சையிக்கிள் ஒழுங்கை வளைவொன்றில் சரிந்து போய்க் கொண்டிருந்தது.

இரவு பூக்கண்டர் வந்தபோது நன்னியனையும், மூத்தவனையும் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குக் கொண்டு வரும் விஷயத்தை தம்பன் சொன்னான். அவர்களைப் போய்ப் பார்ப்பவர்களுடைய விஷயத்தை பூக்கண்டர் கேட்டார்.

நாளைக்குப் பெண்களும் குழந்தைகளும் என்றும், மறு நாள் ஆம்பிளையள் என்றும் முடிவு செய்திருப்பதாக தம்பன் சொன்னான்.

ஐவைந்து பேர்கள் என்ற வரிசையில் நாளைக்குப் பொன்னியும், திரேசியும் மூன்று பிள்ளைகளும் என்ற கணக்குச் சரியாக இருந்தது. வேண்டுமானால் பொன்னியின் கடைசிக் குழந்தை கைக்குழந்தை என்ற சாட்டில் தம்பனின் மனைவியையும் சேர்த்துக் கொள்ளலாம். மறு நாள் சந்திப்பில், இளையவன், சிமியோன், தம்பன் என்ற வரிசை போனால் மிகுதி இரண்டு இடங்கள் காலியாக இருக்கின்றன.

''தம்பன் மிச்சமாக் கிடக்கிற ரெண்டு இடத்துக்கை ஒண்டாக என்னையும் சேத்துக் கொள்ளுங்கோவன் ராப்பா!''

பூக்கண்டரின் இந்தப் பேச்சு தம்பனைத் திடுக்குற வைத்துவிட்டது.

ஊர் இருக்கும் இந்த நிலையில் பூக்கண்டராவது நன்னியனையும் மூத்தவனையும் பாக்கிறதாவது! பூக்கண்டவரின் பேச்சை தம்பனின் செவிப்புலன்கள் ஏற்றுக் கொண்டதாக இல்லை.

''என்ன தம்பீன்ரை கதை?!' இப்படித்தான் மொட்டையாகக் கேட்கத் தம்பனால் முடிந்தது.

''ஏன்ராப்பா, பூக்கண்டர் நன்னியனைப் பாக்கக் கூடாதெண்டு மறியல் வீட்டுச் சட்டப் புத்தகத்திலை எழுதி வைச்சிருக்கிறாங்களே?''

பூக்கண்டரின் கேள்வி கேலியானதுதான். ஆனால் அந்தக் கேலிக்குள் எத்தனை அர்த்தம் கிடக்கிறது!

''இல்லைத்தம்பி! ஊரில் நயினாரவை உங்களைச் சும்மா விடுவினமோ? சபை சந்தியிலை வைப்பினமோ? தம்பியட்டையும் குமர்ப் புள்ளையல் இரண்டு மூண்டு இருக்குதுகள். அதுகளைக் கரைசேர்க்கக்கூட ஏலாமல் போயிடும். அதுதான்...''

தம்பனின் பேச்சுப் பூர்த்தியாகவில்லை. தம்பனின் கேள்விகள் தரமானவைதான்.

''இஞ்சை தம்பன்! என்னை ஒரு நயினாரவையும் சுமந்த வைச்சிருக் கேல்லைக் கண்டியோ! சபையிலை வைக்காட்டியும், தந்தியிலை வைக்க அவையாலை ஏலாது. என்ரை பொட்டையள் ஆத்திலை குளத்திலை விழுந்து கிடக்குதுகளே... கரை சேக்க? நான் பூக்கண்டன் கண்டியோ! என்ரை புத்தி எனக்குச் சாகவும் போதும்; பிழைக்கவும் போதும். கன கதை ஏன்? நான் நன்னியனை யும், மூத்தவனையும் பாக்கத்தான் போறன். என்னைச் சேர்க்கப் போறியளோ இல்லையோ? எனக்கு மறுமொழி சொல்லு!'' பூக்கண்டர் இரண்டத்தா ஒன்றைக் கேட்டார். உணர்ச்சியால் தம்பன் பூரித்துப் போனான். அது அவனை வாய் திறக்க விடவில்லை. அந்த வயதிலும் அவன் உடம் பில் நம்பிக்கையின் ஊற்றுக்கண் பீறிட்டு ஓடிற்று. அவனின் வளைந்த உடம்பு நிமிர்ந்தது.

''தம்பியும் நாளையிண்டைக்கு எங்களோடை வருகுது! எட்டு மணிக்கிடையிலை எழுதிக் குடுக்க வேணும். முறையைச் சொல்லித்தான் பேர் குடுக்க வேணுமாம்'' தம்பன் நிறுத்தினான்.

''தம்பன் நீ சொல்லிறது எனக்கு விளங்குது. பூக் கண்டர் நன்னியனுக்கும் மூத்தவனுக்கும் என்ன முறை

யெண்டு எழுதிக் குடுக்கப் போறாரெண்டு நீ யோசிக் கிறது எனக்கு நல்லா விளங்குது! நீ பேந்து பார் என்ன முறை எண்டு எழுதிக் குடுக்கிறனெண்டு! நான் நெடுகச் சொல்லிறனான். தம்பன்! பூக்கண்டனை ஒருத்தரும் கட்டி அவிக்க ஏலாதெண்டு! எனக்குத் தெரியும்; தம்பன்! நீங்கள் நாளையிண்டைக்கு கோட்டை வாசலுக்கு வாறதுக்கிடையிலை பூக்கண்டன் அங்கை நிப்பான். எல்லாவற்றை முறைதலையளையும் எழுதி வைச்சுக் கொண்டு நிப்பன்; வந்து பார்!''

பூக்கண்டர் பேசிக் கொண்டே வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தார். அவர் போகும் திக்கை தம்பனும், மனைவியும், பொன்னியும் பார்த்துக் கொண்டே நின்றனர்.

''உந்த இரணியச் சாதியளுக்கை உப்பிடிக் கொத்த மனிசரும் இருக்கினம் தானே?'' என்று பொன்னி சொன்னாள்.

''எல்லாச் சாதிக்கையும் எல்லா மாதிரியான மனி சரும் இருப்பினம் பிள்ளை! சில சில சாதியிக்கை கூடக் குறைய இருப்பினம். அதிலும் எல்லாச் சாதியிக்கையும், பணக்காரச் சாதி ஒண்டு நெடுக இருக்கு. அந்தச் சாதி யிக்கை சேந்தவங்களெல்லாம் இரணியச் சாதி பிள்ளை!''

தம்பன் சொல்லி முடித்துவிட்டான்.

இப்படியெல்லாம் பேச அவன் எப்படிக் கற்றுக்கொண் டான்?

பூக்கண்டர் காசு களைஞ்சி இல்லாச் சாதி. அதனாலை இரணியச் சாதியை விட அவர் வேறுவிதம், என்பதனை ஒரு தத்துவப் பாங்கிலேயே சொல்லிவிட்டான் தம்பன்.

முற்றத்தில் கைவிளக்கு இன்னும் எரிந்து கொண்டு தான் இருந்தது. இளையவன் அப்போதுதான் வந்தான். காலை வெய்யில் ஏறிவரும்போது சிமியோனுடன்

போனாவன். சகோதரியையும் பார்த்துக் கொண்டு பொழு தைக் கழித்துவிட்டு இப்போது வருகிறான்.

''தங்கச்சியாரோடை செல்லம் கொஞ்சிப் போட்டு இப்பான் வாறாய் போலை கிடக்கு? திரேசிக்கு வயிறு பெரிசாக் கிடக்கோடா தம்பி? சிறிசாக் கிடக்கோ? பெரிசாக் கிடந்தா பெட்டை எண்டு சொல்லுறவை... மாதாவே என்ன மாதிரியெண்டாலும் திரேசி சுகமாப் பெத்துப் போடவேணும்!''

தம்பன் மனைவி இளையவனை கேள்வி கேட்டுக் கொண்டே தனது ஆசையையும் வெளிக்காட்டிக் கொண் டாள்.

''இஞ்சைபார் அக்கையின்ரை கதையை? தங்கச்சி எண்டாப்போலை என்னை அவளின்ரை வயித்தைப் பாக் கட்டாம்!'' என்று கூறிவிட்டு திண்ணையில் உட்கார்ந்து கொண்டான் இளையவன்.

பொன்னி அவசர அவசரமாக அவனுக்கான இராச் சாப்பாட்டைத் தட்டுச் சட்டியோடு வைத்துவிட்டு தண்ணி முட்டியை எடுத்து வரப் போய்விட்டாள்.

''தம்பி கேட்டியே கதையை? இப்பான் பூக்கண்டர் வந்திட்டுப்போகிறார். கொப்பரையும், கொண்ணையை யும் பாக்க தன்னையும் சேர்க்கச் சொல்லிக் கேட்டுப் போட்டுப் போறார். அவரெல்லோடா தம்பி மனிசன்!'' என்றான் தம்பன்.

''நானும் ஒரு புதினம் சொல்லட்டே சங்கிலித் தாமண்ணை. அப்போதை மச்சானோடை போகேக்கை, வழியிலை எங்கடை வராரி கோயிலடி நெஞ்சுச் சுப்பரப்பா வைக் கண்டனான். நேத்துத்தானாம் மன்னாராலை வந் தவர். அப்புவையும் அண்ணையையும் பாக்க தானும் வாற னெண்டவர். எல்லாத்துக்கும் வீட்டை போய் கதைச்சுப் போட்டுச் சொல்லுறன் எண்டு சொல்லிப் போட்டுவாறன்.'' என்றான் இளையவன்.

''ஆர், எங்கடை பாரதச் சுப்பரோ? கூட்டிக்கொண்டு போகலாமெடா தம்பி! அந்தாள் மறியள் வீடெண்டும் பாக்காமல் பாரதச் சண்டையையெல்லோ கதைச்சுக் கொண்டிருக்கும். ம்... அந்தாளும் தேவையான ஆள். கொப்பரோடை சீவனும் பிராணனுமாத் திரிஞ்சாள். உலக அறிவிலை எங்கடை ஆக்களுக்கை சொல்லப்பட்ட விண்ணன். அப்ப தம்பி ஒண்டு செய்வம்; பூக்கண்டருக்கு நானும் ஓமெண்டு சொல்லிப் போட்டன். காலமை நாங்கள் பாத்த கணக்குப்படி ஐஞ்சு சரியா வருகுது? விடியப்புறம் ஒருக்கா சுப்பரிட்டை சொல்லிப் போட்டுவா தம்பி! நாளையிண்டைக்குக் காலமை பூக்கண்டர் மறியல் வீட்டடிக்கு வாறனெண்டவர். சுப்பரும் அங்கை வரட்டுக்கன்.'' இத்துடன் அந்தப் பேச்சு முடிந்தது.

இரண்டு நாட்களுக்கு இருவரும் வேலைக்குப் போக முடியாது. அதனால் வரும் பணமுடையை சமாளிக்க தம்பனுக்கு முன் இளையவன் முந்திக்கொண்டு, நாளை தானே பெண்டுகளைக் கூட்டிக் கொண்டு கோட்டைக்குப் போவதாகவும் தம்பனை வேலைக்குப் போகச் சொல்லியும் அவன் சொன்னான்.

விடியற்புறமாக எழுந்து மரங்களைச் சீவிவிட்டு தான் வேலைக்குப் போவதாக தம்பன் ஒப்புக் கொண்டான்.

இளையவன் சாப்பிட்டு முடித்து விட்டான். வழமை போல தம்பனின் வீட்டுத் திண்ணையிலேயே படுத்துவிட்டான் இளையவன். தம்பனும் பக்கத்திலேயே கிடந்தான்.

விளக்கு அணைக்கப்பட்டது.

உலகம் அமைதியாகிவிட்டது. அந்த அமைதியையெல்லாம் பொன்னியின் கடைக்குட்டி அழுது அழுது கலைத்துக் கொண்டே இருந்தாள்.

''தம்பி நீர் குறை நினைச்சாலும் பரவாயில்லை. நான் இண்டைக்குக் கோயிலடியிலை கதைச்ச விஷயத்தை கொப்பரிட்டையும் கொண்ணனிட்டையும் சொல்லப்

போறன். அவை சொன்னா நீ தட்டிப்போடுவியோ பாப்பம்!'' என்று இருளுக்குள் மெதுவாகக் கதையைத் தொடங்கினான் தம்பன்.

''அண்ணை, அப்புவல்ல, அண்ணனல்ல எந்தக் கடவுள் வந்து சொன்னாலும் உது நடக்கப்போற காரியம் இல்லை! உதை விட்டுடுங்கோ... வீணா வில்லங்கப்படாமல் விட்டுடுங்கோ.'' என்றான் இளையவன்.

''கல்லைத் திண்டாலும் செமிச்சுப்போற உன்ரை வயசிலை இப்பிடிப் பிடிவாதமாய் மாட்டனெண்டு சொல்லுறதுக்கு ஏதெண்டாலும் ஆமான ஞாயம் இருக்கோணும் எண்டுதான் நான் நினைக்கிறன். என்னெட்டை ஒளியாதையடா தம்பி. ஆரெண்டாலும் பெட்டையைக் கிட்டையைப் பாத்து வைச்சிருந்தாலும் சொல்லன்? நான் எல்லோ செய்து வைக்கிறன்!''

தம்பனின் இந்தப் பேச்சு இளையவனின் கோபத்தை கிளறிவிட்டது.

''அண்ணற்றை பிள்ளையளை அண்ணர் வருமட்டுக்கும் காப்பாத்திறதுக்கெண்டு நான் காலமை சொன்னது சங்கிலித்தாமண்ணைக்கு ஞாய்மாப் படடேல்லை போலை கிடக்கு! சிங்களத்திலை வயித்துப் பசி எண்டிறதுக்கு ''படகினி'' எண்டு சொல்லுவாங்கள். 'பட கினி' எண்டா வயித்திலை நெருப்பு எண்டு தான் பொருள்! அண்ணற்றை பெண்சாதியும் பிள்ளையளும் வயித்திலை நெருப்போடை இருக்கேக்கை எனக்கு ஒரு கலியாணம்! சங்கிலித்தாமண்ணை நான் சொல்லிறன் உந்தக் கதையை விடுங்கோ! இனிமேல் உந்தக் கதையை எடுத்தியளெண்டா இந்த முத்தத்திலையும் காலடி வையன்!''

இளையவன் ஆவேசமாகவும் மனதைத் தொடும்படியும் பேசி முடித்தான். இதற்கு மேல் தம்பன் பேசவில்லை.

றெயில் ஒன்று கூவிச் செல்லும் ஓசை காற்றுவாக்கில் கேட்டது.

''இந்த நேரத்திலை இதென்ன றயில்?'' என்ற இளையவனின் கேள்விக்கு...

''கொழும்பிலை வெளியூருக்கு முருகக் கல்லு ஏத்து றாங்களாம்; பவுடரோ, கிவுடரோ சரிக்கட்டிறதுக்கு. இண்டைக்கு முதலிலை காங்கேசன்துறையிலை இருந்து ஏத்தினமாம்; எங்கடை சின்ன ஐயா கதைச்சவர்; அதுதானாக்கும் ஏத்திக் கொண்டு போகுது!'' என்று தம்பன் பதில் சொன்னான்.

''என்னெண்டு தம்பி நாளைக்கு ஆக்களைக் கொண்டு போகப் போறீர்? தாவடிச் சந்தியிலை இருந்து நாகலிங்கம் கொம்பனி வசுவிலை போகலாம்தான். அதிலை ஏறி வக்குக்கை எல்லோ இருக்க வேணும்.''

''எடி நளத்தி, எடி பள்ளி! இருங்கோடி வக்குக்கை'' எண்டு நாக்குத் தெறிக்கப் பேசுவாங்கள். அதுவும் வேதக் கோயில் கட்டினாப்போலை அவங்களுக்கெல்லாம் வலு ஆத்திரம்! ஆற்றையும் வண்டிலைக் கிண்டிலைப் புடிக்கலாமெண்டா... எங்கடை ஆக்கள் ஆரட்டை வண்டில் நிக்குது? தம்பி விடியச் சுப்பரிட்டை போகப்போறீர் எல்லே? சுப்பற்றை மச்சான் அரியகுட்டியனிட்டை வடக்கன் மாட்டுரெட்டை வண்டில் ஒண்டு நிக்குது; ஒருக்கா அதை சுப்பரைக் கொண்டு கேட்டுப் பாக்கச் சொல்லு. சில வேளை வண்டில் ஆப்பிட்டா வாச்சுப்போம்!''

இளையவன் அசந்து கொண்டிருந்தான். தம்பனின் கடைசிப் பேச்சுகள் இலேசாகத்தான் அவனுக்குக் கேட்டன.

விடிவதற்கிடையில்—காகம் கரைவதற்கிடையில் இருவரும் எழுந்து விட்டனர். தம்பன் இயனக்கூட்டைக் கட்டிக் கொண்டு இளம்பாளை அறுக்கப் போய்விட்டான். இளையவன் வராரி கோவிலடிப் பக்கம் போனான்.

''எல்லோரும் வெளிக்கிட்டு ஆயத்தமாய் நில்லுங்கோ. நான் வந்திடுகிறன்,'' என்று தம்பன் மனைவியிடம் கூறிக்கொண்டு கிளம்பினான்.

முகத்தில் தண்ணீரே படவில்லை. பழைய குடும்பி இருந்தாலாவது சுருட்டி இறுக்கி முடிந்து விடலாம். மறியலால் வரும்போது அவன் குடுமி இல்லாமலேயே வந்தான். அதனால் அது நித்திரையில் கலைந்து விரிந்து கிடந்தது. அந்தக் கோலத்தோடுதான் இளையவன் போய்க் கொண்டிருந்தான்.

வராரி கோவிலடி அதிக தூரம் இல்லை. கூட்டிக் குறைத்துப் பார்த்தால் நாலு ஐந்து கூப்பிடு தூரம் தான் இருக்கும். இந்த நாலு ஐந்து கூப்பிடு தூரம் சேர்ந்தால் ஏறக்குறைய இரண்டு மைல் தான் வரும். கூப்பிடு தூரம் என்றால் அரை மைலுக்கு முன் பின்னா ஒரு கணக்கு! ஒழுங்கைகளை சுற்றாமல் வளவுகளுக் கூடாகக் கணக்கெடுத்தால் அது இரண்டு கூப்பிடுதூரம் கூட இருக்காது.

சுப்பர் வீட்டுப் படலையடிக்கு வந்து நின்றான் இளையவன்.

''சுப்பரப்பா, எணை சுப்பரப்பா!'' என்று கூப்பிட்டான்.

''அவரிஞ்சை இல்லை. வெளியிலை போட்டார், ஆரது?'' என்று கேட்டுக் கொண்டே சுப்பரின் பெண்சாதி இத்தினி படலைக்கு வந்தாள்.

உண்மையாகவே அவள் இத்தினிதான்! சுப்பரின் உயரம் பருமனோடு ஒப்பிடும்போது அவள் இத்தினிக்கும் இத்தினி நுள்ளான்போல் ஊர்ந்து, அவள் வந்தாள்.

''ஆரடா மோனை அது?'' என்று அவள் மறுபடியும் கேட்டாள்.

''அது நான்தானணை ஆச்சி. சின்னக் கலட்டி நன்னியன்ரை மோன்!'' இளையவன் பதில் சொல்லிக் கொண்டான்.

''எட, நன்னியன்ரை இளையவனே ராவு ஒண்டு பாதிமட்டும் உங்கடை கதைதான் அந்தாள் கதைச்சுக்

கொண்டு கிடந்தது. இப்ப உங்காலை மச்சான்காறன் வீட்டை போட்டுது; இஞ்சாலை வா! உதிலை எப்பன் இரு. கூப்பிடுறன்!'' என்று கூறிக் கொண்டு இத்தினி வேலிக்கண்டாயத்தால் அடுத்த வீட்டுக்குப் போனாள்.

இளையவன் முன் பக்கத்தில் வெள்ளைப் பொளி கல்லு வைத்துக் கட்டப்பட்ட திண்ணையில் இருந்தான். அந்த இடத்தில் திண்ணை விளிம்புக்குப் பொளிகல் கட்டிய பெருமை சுப்பருக்கு! இதற்காகவே வெள்ளாளருடன் ஒரு போரையே நடத்தினவர் சுப்பர்.

கண்டாயத்தைக் கடந்து கொண்டு சுப்பர் வந்தார். அவரைக் கண்டதும் இளையவன் எழுந்து நின்றான்.

''இரடா மோனை இரு! உங்கடை அலுவலாத்தான் மச்சான் வீட்டை போட்டு வாறன். பொடி பொட்டையளை என்னெண்டு கோட்டைக்குக் கூட்டிக் கொண்டு போகப் போறாய்? அதுதான் வண்டிலைக் கொண்டு போய் ஏத்திக் கொண்டு போட்டு வரச் சொல்லி சொல்லிப் போட்டு வாறன். நீ போய் அதுகளை வெளிக்கிடச் சொல்லு மோனை! பின்னாலை வண்டில் வரும் வீட்டிலை நாளைக்கு நானும் வாறனெண்டு கேட்டுப்பாத்தனியே?''

சுப்பர் தன்னைப் பற்றிய கேள்வியைக் கேட்டார். சுப்பரின் இந்தப் பெரும் குணத்தை இளையவன் நெஞ்சார வாழ்த்தினான்.

''ஓமோம், சொன்னனான். நாளைக்கு நீங்களும் வரவேணுமெண்டு சொல்ல வந்தனான். இண்டைக்குப் போறதுக்கு உங்கடை மச்சான்ரை வடக்கன் மாட்டு வண்டிலை கேக்கவும்தான் வந்தனான். நீங்களே முதலிலை மாட்டு வண்டிலை அடுக்குப் பண்ணிப் போட்டியள்!''

இளையவன் பேசிய வாய் மூடவில்லை.

''என்ன... வடக்கன் மாட்டு வண்டிலோ? தோட்டங்களுக்கு எரு ஏத்திற வண்டி விசர்ப் பொடியா! குதிரை வண்டிலைக் கொண்டு போகச் சொல்லிப் போட்டு

வாறன்!'' சுப்பரின் இந்தப்பேச்சு இளையவனை திடுக்குற வைத்துவிட்டது.

குதிரை வண்டில்!

இந்தக் குதிரை வண்டியை சொல்லப்பட்ட நயினார் மாரைத் தவிர வேறு யாருக்கும் இதுவரை அரியகுட்டியன் விட்டதில்லை. அப்படி விடவும் நயினார்மார் சம்மதித்த தில்லை! ஒரு தடவை கொல்ல பகுதி கலியாண வீடொன் றுக்கு அந்த வண்டியை கொல்லர் ஒழுங்குபடுத்தியிருந்த தும், அதனால் நடந்த ஒரு சண்டையும் இளையவன் நினைவில் நின்றது. அப்போது அவன் சின்னப்பொடியன். ஆனாலும் அது மறக்கமுடியாத ஒன்று!

''அரியகுட்டியன், நீ தெரிஞ்சும் தெரியாமல் உந்தப் பிழையை விட்டிட்டாய். அதோடை காசுக்கும் ஆசைப் பட்டிட்டாய். நாய் தின்னாக் காசடா உது! சொல்லிப் போட்டம் இனிமேல் இப்பிடி பிழையான ஆக்களுக்கு வண்டிலை விட்டியோ...?'' என்று நயினார்மார் பலர் அவனை எச்சரித்து மன்னித்து விட்டனர். அன்றிலிருந்து இன்றுவரை அரியகுட்டியன் அந்தக் கட்டளையை மீற வில்லை.

''அது நயினாரவை ஏறுகிற வண்டில்! எக்கணம் உதாலை...'' இளையவன் பேச்சை சுப்பர் இடைமறித் தார்.

''இஞ்சாடா தம்பி... உங்கை துரைராசன்ரை கூத்து வைக்கிற தகரக் கொட்டகைக்கை 'பஞ்சமருக்குப் பிரத்தி யேகம்' எண்டு எழுதிக் கட்டி வீட்டிருக்கிறதைப் போல மச்சான்ரை குதிரை வண்டிலிலை 'இது நயினார் மாருக்கு மட்டும்!' எண்டு எழுதிக் கட்டிவிடேல்லைக் கண்டியோ! அதிலைதான் நன்னியன்ரை புள்ளைகுட்டியள் ஏறும்! நீ போ, நீ போய் அதுகளை வெளிக்கிடுத்து. வண்டில் வரும்; பயப்பிடாதை. நானும் வந்து வண்டில்லை எல்லா ரையும் ஏத்தி விடுகிறன்!''

சுப்பர் பேச்சை முடித்துக் கொண்டு கடவையைக் கடந்து அப்பால் போய் விட்டார். இளையவன் கண்களில் தேங்கி வந்த நீர்த்திவலைகளை துடைத்து விட்டுக் கொண்டே திரும்பி மெதுவாக நடந்தான்.

''தம்பி இளையவன், ஒரு வியளம் சொல்லுறன் கேட்டுக் கொண்டு போ'' என்ற சுப்பரின் குரல் கேட்டு திரும்பி வந்தான். வரும்போது அவன் யோசனையிலேயே ஆழ்ந்து போய் வந்தான்.

''இஞ்சார்! சும்மா கனக்க யோசிக்காதை, போரிலை இறங்கியாச்சு! பாரதப் போரிலை அர்ச்சுனன் தேரிலை ஏறி இருந்து கொண்டு கனக்க யோசிச்சவன். அதுக்கு மேலையும் அவன் கனக்க யோசிப்பானா இருந்தா... எடுத்த வில்லைப் போட்டதுமில்லாமல் அதை முறிச்சும் எறிஞ்சிருப்பான். பாரதப்போரிலை துரியோதனாதிகள் தான் வெண்டிருப்பாங்கள்! கனக்க யோசியாதையடா தம்பி; யோசியாமல் போ! குதிரை வண்டிலோடை நான் வாறன்!''

சுப்பரின் கடைசிப் பேச்சு முடிந்ததும் இளையவன் நெஞ்சை நிமிர்த்தியபடி விறு விறுவென நடந்தான்!

அவன் போன சற்று வேளைக்குள் அரியகுட்டியின் குதிரை வண்டில் கெம்பீரத்துடன் புறப்பட்டுவிட்டது.

அவனுக்குப் பக்கமாக சுப்பர் இருந்தார்.

ஏதாவது ஒரு புதுக்காரியம் செய்யும்போது தலைக்குத் தலைப்பா கட்டிக் கொள்வது சுப்பரின் சுபாவம்.

வெள்ளை வேளேரென்ற சால்வையால் இப்போதும் அவர் தலைப்பாகை கட்டிக் கொண்டார்.

வண்டில் வராரி கோவில் வீதியைத் தாண்டி கலட்டிக்குப் போகும் பெரிய ஒழுங்கையால் மிதப்பதற்கிடையில் பலர் ஒழுங்கை ஓரங்களில் இருந்து புதினம் பார்த்தனர்.

''எட, இஞ்சை பாருங்கோடா சுப்பன் போற போக்கை? கலி பிறந்திட்டான் எண்டு சொல்லுறது சரியாத் தான் போச்சிப்போலை...''

''அவன்ரை தலைப்பாக்கட்டையும் அவனையும் பாத்தா ஒண்டுக்கும் கிறுங்கான் போலை கிடக்கு!''

''ஆமான வெள்ளாளன் ஊருக்கை இருந்தா இனி அரியகுட்டியன்ரை குதிரை வண்டில்லை ஒருத்தரும் ஏறப்படாது!''

''எளிய சாதிக்குக் கண்கடை தெரியேல்லை!''

இந்தச் சிறு ஓசைப் பேச்சுகளைக் கொஞ்சமேனும் காதில் வாங்கிக் கொள்ளாது சுப்பர் வீம கோலத்தில் சென்று கொண்டிருந்தார். வீமனின் கதாயுதத்திற்குப் பதிலாக எளுமுள்ளுச் சிறுதடி அவர் கக்கத்துள் இருந்தது.

வண்டி நேராகத் தம்பன் வீட்டடிக்கு வந்து சேர்ந்து விட்டது.

ஊரில் உள்ள பொடிசுகள் எல்லாம் வண்டியைச் சுற்றிக் கொண்டனர்.

சுப்பரின் கொலுவை இளையவன் கண்டான். பெருமையை அவனால் அடக்கமுடியவில்லை. உடுத்திக் கொண்டு காத்திருந்த தம்பன் பொண்டில், மூத்தவன் பொண்டில், எடுக்குப் பிள்ளை மூத்தவனின் பெட்டையும், நடுவில் குத்தியனும் வண்டியில் ஏறிக்கொண்டனர்.

''இளையவன் நீ அலுப்பாந்தியிலை வேலை செய்யிறனி எண்டு இப்பதான் கேள்விப்பட்டன். வேலையைக் குழப்பாதை! வண்டில்லை வந்து அலுப்பாந்திக்குக் கிட்டவா இறங்கு. நான் எல்லாரையும் கூட்டிக் கொண்டு போய் பாக்க விட்டிட்டு கூட்டிவாறன்!'' என்று சுப்பர் சொன்னார்.

அவர் பேச்சை இளையவனால் தட்ட முடியவில்லை. தலையசைத்துக் கொண்டே அவனும் வண்டியில் ஏறிக் கொண்டான்.

மாதா கோவில் முன்புறத்தைத் தாண்டி சதுரக்கள்ளி ஓடைக்கூடாக கல்லுகளுக்கும் கலடுகளுக்கும் மேல் ஏறி இறங்கி வண்டி போய்க் கொண்டிருந்தது.

வண்டியைப் பலர் கண்டனர்.

பலதுமாகப் பேசிக் கொண்டனர்.

''கடைசியாக வேதக்காறச் சாமி அந்த மானிப்பாய் மாடு தின்னி வந்தான். ஊர் மரியாதை கெட்டுப் போச்சு!'' என்று வயதில் முதிர்ந்த ஒருத்தன் பலமாகக் கூற அவனைச் சுற்றி நின்றவர்கள் தலையசைத்து ஆமோதித்துக் கொண்டனர்.

இரதச் சுப்பர் கண்டார். அவன் கூறிய வார்த்தைகளும் கேட்டன.

''சகுனியாலைதான் பாரதச் சண்டை மூண்டது. அதாலைதான் துரியோதனாதிகள் அழிஞ்சவை!'' இப்படி குரல் வைத்துக் கூறியபடி சுப்பர் நிமிர்ந்திருந்தார்.

வண்டி போய்க் கொண்டிருந்தது. இடையில் பூக்கண்டரைபற்றி இளையவன் சொன்னான். நாளை மறியல் வீட்டுக்குத் தானும் வரப்போவதாக தன்னைக் கேட்டதாக இளையவன் கூறினான்.

சுப்பர் சற்று வேளை பேசாமல் இருந்தார். பூக்கண்டரை சுப்பருக்கு நன்கு தெரியும். சின்ன வயதில் அவரோடு சேர்ந்து கிட்டியடித்தது, கிளித்தட்டு விளையாடியது. சற்று நடுவயது வந்தபோது அவருடன் சேர்ந்து பருசேயர் விளையாடியது; எல்லாமே கணவேளையில் அவர் மனதிற்கு வந்தது. ஐந்து பத்து வருடங்களாக அவர் தொடர்பு விட்டுப் போய் இப்போது அது மீண்டும் தொடர்ந்தது.

மேலும் வண்டி சற்றுத் தூரம் போய் விட்ட பின்பு வண்டியின் ஆசனத் தட்டில் இருந்து கொண்டே சுப்பர் பேசினார்.

''எட, தம்பி உப்பிடிப்பட்ட மனிசரும் உலகத்திலை இருக்கினமெண்டு தான்ரா, பாரதத்திலை துரியோதனாதிகளோடை சேர்ந்து விதுரன் எண்ட ஒருத்தனையும், வில்லிபுத்தூர் ஆழ்வார் படைச்சிருக்கிறார். அந்த விதுரன் துரியோதனாதிகள் சபையிலை பஞ்சபாண்டவர்களுக்காக தன்ரை வில்லை முறிச்சு எறிஞ்ச நினைப்புத் தான்ரா இப்ப எனக்கு வருகுது!'' என்று சுப்பர் பேசி முடித்த போது இளையவனுக்கு அதுபற்றி ஒன்றும் பேச முடியவில்லை. ஏனெனில் அவனுக்கு விதுரன் பற்றியோ வில்லி புத்தூராரைப் பற்றியோ ஒன்றுமே தெரியாது.

வண்டி பட்டணத்தை நெருங்கிப் போய்க் கொண்டிருந்தது.

இரண்டு மாதத்திற்குப் பின் ஒருநாள் சந்தியாப் பிள்ளை உபதேசியாரும், சிமியோனும், புதிதாக இன்னோர் இளவயசுக்காரனும், சற்று நடுவயதைத் தாண்டிய இன்னொருவனும் ஒரு சிறிய நெருப்புப் பெட்டிக்காரில் கோவிலடிக்கு வந்திறங்கினர்.

அப்போது தம்பனோ இளையவனோ வீட்டில் இல்லை. காருக்குள் சில புதிய பொருட்கள் மூன்று மரப் பெட்டிகளில் அடைக்கப்பட்டு காருடன் வந்து சேர்ந்தன.

நட்சத்திர மார்க் நெருப்புப் பெட்டிக் கம்பெனியின் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் விளம்பரப்பகுதியினர் தான் மற்ற இருவருமாவர்.

பெட்டிகளை இறக்கி அறைவீட்டு விறாந்தையில் வைத்துவிட்டு உபதேசியாரும், சிமியோனும் வெளியே சென்றுவிட்டனர். போனவர்கள் சிறிது வேளைக்குள் நாலைந்து இளம் பெண்பிள்ளைகளுடனும் இளவட்டங் கள் சிலருடனும் வந்து சேர்ந்தனர்.

காரில் வந்த புதியவர்களில் நடுவயதானவன் பெட்டி களைத் திறந்து கருநீல நிறமான ஒரே அளவில் நறுக்கப் பட்ட கடதாசிக் கட்டுகளையும், இரு வேறுபட்ட அளவான கட்டுக்கட்டாக நறுக்கி வைக்கப்பட்ட கடுதாசிக் கனத்தை விட சற்றுத் தடிப்பான மரச் சீவல்களையும் வெளியே எடுத்து வைத்து விட்டு இரு வேறுபட்ட மரத்திலான சிறிய அச்சுகளையும், ஒரு பேணி பசையையும் எடுத்து சிறிய அச்சில், சிறிய சீவல் பலகைத் துண்டைச் சுற்றி, அதற்கு மேல் சிறு துண்டான சீவல் பலகையை வைத்துப் பிடித்துக் கொண்டே நீல நிறக் கடதாசியில் பசையைப் பூசிச் சுற்றி வளைத்து, மேல் பக்கம் மடக்கியும், ஒட்டிவிட்டு அதை

அச்சில் இருந்து கழற்றிய போது அது நெருப்புப் பெட்டியின் உள் இலாச்சியானது.

மற்ற அச்சினை எடுத்து, சற்று அகலமான அடுத்த சீவல் பலகையை எடுத்து முன்போல அதனைச் சுற்றி, கடுதாசியில் சுற்றி ஒட்டிவிட்டு கழற்றினான். அது நெருப்புப் பெட்டியின் மூடல் உறை ஆயிற்று.

எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது. அதனை மறுபடியும், மறுபடியும் மாறி மாறிச் செய்து காட்டினான்.

சுமார் அரைமணி நேரத்திற்குப் பின்... இருபத்தி ஐந்து சோடி வரை செய்தாகியிருக்கும். அவைகளின் பசை ஈரம் சற்று உணர்ந்துவிட்டது. இலாச்சி மூடலில் செருகிப் பெட்டியாக்கிக் கணக்கெடுத்தான். சரியாக இருபத்தியந்து பெட்டிகள் தான்!

பின்பு பத்துப் பேர்களைக் கொண்டு அதை செய்ய வைத்தான்.

ஐந்து ஆறு பேர்கள் நன்றாகவே செய்தனர்.

''பேந்தென்ன; கண் பாக்கேக்கை கை செய்யும்; எல்லாம் சரிவரும்'' என்றார் உபதேசியார்.

அங்கு வந்த பத்துப் பேர்களிடமும் தலைக்கு ஐந்நூறு, ஐந்நூறு தனித்தனிப் பொருட்களையும் ஒவ்வொரு சரை பசைமாவையும் காய்ச்சிய பசை புளித்துப் போகாது இருக்க தலைக்கு இரண்டு மூன்று நுரிசுக்கட்டிகளையும், அச்சு வகைகளையும் ஒவ்வொன்றாகக் கொடுத்து அடுத்த வாரம் வருவதாகவும் அவைகளை ஒட்டிவைக்கும்படியும் கூறிவிட்டுப் போகப் புறப்பட்டுவிட்டனர்.

நடுவயதுக்காரனைவிட வந்த மற்ற இளைஞன்தான் அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தன். பார்ப்பதற்கு மிகவும் கவர்ச்சியானவன்.

அவன் நீண்ட வெள்ளை வெளெரென்ற களிசான் போட்டு, நீல நிறக் கைமுட்டச் சேட் அணிந்து, கழுத்தில்

சிகப்பு நிற ரை கட்டி சகலதும் மிகவும் சுத்தமாக இருந்தான்.

அவனின் பேச்சும் மிகவும் சுத்தமாக இருந்தது. இடைக்கிடையே ஆங்கிலப் பதங்களையும் பாவித்தான்.

கறுப்பு நிறக் கால்மேஸ் அணிந்து பளிச்சிடும் கால் மூடிய சப்பாத்துகளைப் போட்டு, மிக எடுப்பாக அவன் நடக்கும் நடை! அதற்கிசைய அந்தச் சப்பாத்துகள் கிளப்பும் ஓசை எல்லாமே மிகவும் கவர்ச்சியானவை; இதமானவை!

வாராவாரம் அவனும் உதவியாளர்களுமே வந்து போயினர். கணக்கெடுத்தனர். கூலியைக் கொடுத்தனர். புதிய மூலப் பொருட்களைக் கொடுத்தனர்.

இப்போது ஊருக்குள் இருபத்தைந்து பேர்கள் வரை நெருப்புப் பெட்டி ஒட்டத் தொடங்கிவிட்டனர்.

ஓரளவுக்கு அது அவர்கள் வாழ்க்கையை ஓட்ட ஒத்தாசையாக இருந்தது. தம்பனும் இளையவனும் அவர்களுக்கு நெருங்கியவர்களாகிவிட்டனர். அந்த இளைஞன் தனக்குப் பெயர் யேக்கப்பெனவும், தனது ஊர் இளவாலை என்றும், தனது தாய் தந்தையரும் தானும் கர்த்தர் கோவில் கிறிஸ்தவர்களென்றும் சொல்லி அவர்கள் தெரிந்து கொண்டனர். அவனை 'என்ன சாதி' என்று கேட்க அவர்களுக்குத் துணிவு இல்லை. கர்த்தர் கோவிலை வெள்ளாளரும், கரையாரும் மட்டுந்தான் நடத்தி வருகிறார்கள் என்பது மட்டும் அவர்களுக்குத் தெரிந்திருந்தது. அவர்களின் பொதுவான ஊகம் 'கரையாரப் பொடியனாய் இருக்கலாம்' என்பதுதான்.

ஊருக்குள் வேலை செய்பவர்களின் எண்ணிக்கை கூடக்கூட அவனின் வேலையும் ஒரு நாளில் முடிந்துவிடாத நிலை வந்துவிட்டது. அதனால் வேலையை முடித்துக் கொண்டு போவதற்காக சில நாள் இரவுகள் அவர்கள் அங்கு தங்க வேண்டியதாயிற்று.

''தம்பி, இவை ரெண்டுபேரும் இஞ்சை தங்கிற நாளையிலை பாணைத் திண்டும், தண்ணியைக் குடிச்சிக் கொண்டும் சாகினம்! ஏன் ஒரு மாதிரிச் செய்தா என்ன? பூக்கண்டர் வீட்டிலை இராத்தங்கலுக்கு ஒழுங்கு செய்தால் என்ன? அவரும் சம்மதிப்பார் எண்டு நினைக்கிறன்'' என்றான் தம்பன்.

இளையவனுக்கும் இந்த யோசினை சரியாகவே பட்டது. தம்பன் ஒரு தடவை பூக்கண்டரைக் கேட்டுப் பார்த்துவிட்டான். பூக்கண்டர் சற்று யோசித்து விட்டு சம்மதித்து விட்டார். இந்த ஒழுங்கின்படி நான்கைந்து மாதங்கள் ஓடிவிட்டன.

ஊருக்குள் ஒருவிதமான கதை உலாவியது.

பூக்கண்டரின் மூத்த பெட்டையை யேக்கப்புவுக்குப் பிடித்திருக்கென்றும், பூக்கண்டருக்கும் பெண்சாதிக்கும் அது விருப்பமென்றும் கதை பரவிவிட்டது.

''தம்பி எடேய்! பெடியன் கரையாம் பொடியன் எண்டு நினைச்சம்! அவனும் இளவாலை வெள்ளாம் பெடியன்தானாம், பூக்கண்டர் விசாரிச்சுப் போட்டார். எண்டாலும் இவை பரம்பரைச் சைவக்காறர். என்னெண்டு சம்மதிச்சினமோ தெரியேல்லை?'' என்று தம்பன் இளையவனுக்குச் சொன்னான்.

''எனக்கும் ஒண்டுமாய் விளங்கேல்லைத்தான். பூக்கண்டர் உந்தச்சாதிமத விஷயங்களிலை அதிகம் நம்பிக்கை வைக்காதவர், எண்டதினாலை சம்மதிச்சிருப்பார் எண்டுதான் நினைக்கிறன்'' என்று இளையவன் தனது அபிப்பிராயத்தைக் கூறினான்.

அவர்களின் கலியாண வார்த்தைப்பாடு பெரிய கலட்டிக் கோவிலிலேயே நடக்க இருப்பதாகப் பூக்கண்டரே கூறியபின்புதான் தம்பனால் நம்ப முடிந்தது.

ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை நடுப்பூசை வேளையில் பூக்கண்டரின் மூத்த மகள் சரஸ்வதிக்கு ஞானமுத்துக் குருவானவரே பெரிய கலட்டிக் கோவிலில் வைத்தே ஞானஸ்

ஞானத் திருச் சடங்கை செய்து வைத்தார். இப்போது சரஸ்வதிக்குப் பெயர் லூர்த்தம்மா!

அடுத்தவாரம் முறைப்படி பெரிய கலட்டி தூக்கு விலத்தி மாதா கோவில் கிறீஸ்தவளாகிய லூர்த்தம்மாவிற்கும், இளவாலை கர்த்தர் கோவில் கிறீஸ்தவராகிய யேக்கப்புவுக்கும் வார்த்தைப்பாடு பெரிய கலட்டிக் காவிலிலேயே கேட்கப்பட்டது.

ஊரெல்லாம் சூய்யோ முறையோ என்றாயிற்று!

பூக்கண்டரை எல்லோரும் திட்டித் தீர்த்தனர், உறவு முறைகளையும் சபை சந்திகளையும் மறுப்பதாகச் சொல்லினர்.

பூக்கண்டர் நிமிர்ந்து நின்றார் என்றுமட்டும் சொல்லி விடாமல் வீம்புக்கு தனது சொல்லுக்குக் கட்டுப்படக் கூடியவர்கள் சகலரையும் வேதத்தில் சேர்க்கத் தொடங்கி விட்டார்.

லூர்த்தம்மா யேக்கப் கலியாணத்திற்கிடையில் வேதத்தில் சேர்ந்து கொண்ட, பூக்கண்டரின் மனைவி மக்கள் உட்பட ஞானஸ்ஞானம் பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை இருபத்தைந்துக்கு மேலாகிவிட்டது.

ஞானமுத்துக் குருவானவருக்கு இது பெரும் வெற்றியே அவர் பூரித்துப் போனார். பெரிய கலட்டியின் மாதா கோவில் இப்போது புதுப் பொலிவு பெற்றுவிட்டது. காலை, மாலை எந்த வேலையிலும் பலர் வந்து போகத் தொடங்கினர். அந்தக் கோவிலைப் பெருப்பிக்கும் பணியில் யேக்கப் பெரும் பங்கு எடுத்துக் கொண்டான்.

இளவாலை, மாதகல், பண்டத்தரிப்பு ஆகிய அவனின் வழிவழியினர் இருக்குமிடமெல்லாம் இதற்கான பணமும் சேகரிக்கப்பட்டது.

ஒவ்வொரு திருப்பூசைப் பலியிலும் 'அஞ்ஞானிகள் மனம் திரும்புவதற்காக வேண்டிக் கொள்வோமாக!' என்ற தலைப்பின் கீழ் விசேஷ வேண்டுகோள் மாதாவிடம்

விடப்பட்டது. ஞானமுத்துக் குருவானவரின் ஞானஸ்ஞானப் பதிவு இடாப்பில் இப்போதைய எண்ணிக்கை நூற்றி ஐம்பதுக்கும் மேலாகிவிட்டது.

சில சாதிக் கடவைகளைச் சேர்ந்த சிலரும் அதனுள் அடங்குவர். இதுகாலவரை சைவ சமயத்திலே இருந்த சுருட்டுக்காரக் கரையாம் பகுதியினரும் பதினைந்து குடும்பம்வரை மாதா கோவிலில் ஞானஸ்ஞானம் பெற்றுக் கொண்டதுடன் பல சாதியினரும் அங்கம் வகிக்கும் பெரும் கோவிலாக மாதா கோவில் இரண்டு வருடத்தில் மாறி விட்டது.

கோவில் மூன்றாவது வருடாந்தத் தினம் ஐப்பசிக் கடைசி வெள்ளிக் கிழமையிலிருந்து தொடங்க இருந்த தாயினும் கோவில் கட்டு வேலைகள் சித்திரையிலேயே முடிந்து விட்டதினால் இந்த மாதத்திலேயே அந்தத் திரு நாளைக் கொண்டாட வேண்டுமென்ற ஆசை எல்லோரிமும் இருந்தது.

ஞாயிற்றுக் கிழமை திருப்பூசை முடிந்ததும் ஞானமுத்துக் குருவானவர் தலைமையில் புதிதாகப் பெருப்பிக்கப்பட்ட கோவில் பெரு விறாந்தையில் கூட்டம் ஒன்று ஆரம்பித்தது.

''இப்போது நான் சொல்லுவது என்னவென்றால் கிறிஸ்தவர்களே! எங்கள் கோவிலில் பலர் சேர்ந்திருப்பதாலும், கோவில் திருப்பணிகள் புதிதாக நடந்து முடிந்திருந்ததாலும், கடந்த வருடங்களில் நடைபெற்றதைப் போல இரண்டு நோவினைகளுடன் கூடு சுற்றலை முடித்து விட்டது போலல்லாமல் நோவினை நாட்களை அதிகமாக்கி கோவிலின் நடைமுறைகளில் சகலருக்கும் பங்கிருக்கக் கூடியதாக செய்வதற்காகவே!'' என்று சொல்லி முடித்துவிட்டு அபிப்பிராயங்களை எதிர்பார்த்து நின்றார் குருவானவர்.

நோவினைகளை ஏழாக்கிவிட்டு எட்டாவது நாளில் கூடு சுற்றல், பாடற்பூசை, விருந்து ஆகியவைகளை நடத்தலாமென்றும் பலர் அபிப்பிராயம் சொல்லினர்.

முதலில் யேக்கப் பகுதிக்கென ஒரு நோவினை. அடுத்து கடவைகள் பகுதிக்கென இன்னோர் நோவினை. சுருட்டுக்காரக் கரையாம் பகுதிக்கென ஒரு நோவினை. கட்டாடி பகுதியும், பரியாரி பகுதியும் எண்ணிக்கையில் குறைவானவர்களே கிறிஸ்தவர்களாக இருப்பதினால் இரு பகுதிக்கும் சேர்த்து ஒரு நோவினை.

தம்பன் பகுதிக்கு ஒரு நோவினை.

இளையவன் பகுதிக்கு இன்னொன்று.

இந்த முறையில் நோவினைப் பங்கு பிரிக்கப்பட்ட போது ஆறு நோவினை சரியாகத் தேறியது.

கடைசியாக யேக்கப் ஒரு வேண்டுகோளை விடுத்தான். கோவில் கட்டுவதற்குப் பெருவாரி பண உதவி புரிந்த இளவாலை, மாதகல், பண்டத்தரிப்பு, சில்லாலை ஆகிய பிற இடங்களைச் சேர்ந்த கிறீஸ்தவர்கள் தங்களுக்கு ஒரு நோவினை தரும்படி கேட்டதாக அவன் சொன்னான்.

முடிவில் நோவினைகளில் ஒரு திருத்தத்தைத் தம்பன் சொன்னான்.

தாங்களும் இளையவன் பகுதியும் சேர்ந்து ஒரு நோவினை செய்வதாகக் கூறினான். நோவினை ஐந்து, வேஸ்பர் ஒன்று, மொத்தம் ஆறு. பிரச்சனை தீர்ந்து விட்டது. கடைசி நாள் விஷேஷ வேஸ்பர் நோவினை இளவாலை, சில்லாலையைச் சேர்ந்த சம்மாட்டிமார்களுக்கென்றும், வெளிப்பகுதிக் கிறீஸ்தவர்களுக்காகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

புதிதாக வேறோர் யோசனையும் கிளம்பியது. கிழமைக்குக் கிழமை சங்கிலித்தாமுக்காக உபதேசியாரே பூசை செபங்களை சொல்லவேண்டிய நிர்ப்பந்தங்களைத் தவிர்க்க படிப்பறிவுள்ள சங்கிலித்தாமை நியமித்தால் என்ன? என்பதுதான் அந்த யோசனையாகும்.

''யேக்கப்பை சங்கிலித்தாமாக்கினால் என்ன?'' என்ற யோசனை கிளம்பியது.

இளையவனுக்கு மனதுக்குள் எதுவோ செய்தது.

''அதென்னெண்டு...கோவில் தொடக்கத்திலேயே இருந்தவரை எப்படி நிப்பாட்டிறது?'' என்ற அபிப்பிராயத்தை இளையவனே சொன்னான்.

''நான் ஒரு யோசனை சொல்லிறன். ஏற்கிறதெண்டா ஏருங்கோ...பிறகு என்னிலை குறை சொல்லப்படாது, யேக்கப்பை புதிய சங்கிலித்தாமாக நியமிச்சு, பழைய சங்கிலித்தாமை மூப்பராக வைச்சால் என்ன? அவர் வயசிலும் மூப்பர்...அவர்தான் எல்லாருக்கும் மூப்பராக இருக்க வேணும்'' என்ற கருத்தை சந்தியாம்பிள்ளை உபதேசியார் வைத்தார்.

எல்லோருமே தலையசைத்து ஆமோதித்து விட்டனர்.

சங்கிலித்தாம் பிரச்சனையும் முடிந்தது.

கூட்டம் கலைந்தது.

புதிய கிறீஸ்தவர் பூக்கண்டரை எல்லோரும் பார்த்தனர். தேடினர். சற்று வேளைக்கு முன்பே அவர் கூட்டத்தை விட்டுப் போய்விட்டார்.

இரண்டு நாட்களின் பின் அரை நேர வேலையால் வந்தபோது தம்பன் பூக்கண்டரை வழியில் சந்தித்தான்.

இந்த இரண்டு நாட்களும் தம்பனைக் காணாது இருந்தது பூக்கண்டருக்குச் சோட்டையாக இருந்தது.

"தம்பன், சம்மந்தி பகுதியிலை ஒரு செத்தவீடு; போனாப் போலை இண்டைக்குத்தான் வாறன்; ஊரிலை என்ன சங்கதி?" என்று பூக்கண்டரே புதினம் விசாரிக்கும் தோறணையில் தொடங்கினார்.

"ஓமோம், நாலாம் நாள் கோவிலடியிலை நிண்டு போட்டுப் பேசாமல் போட்டியள். நடந்ததுகள் ஏதும் உங்களுக்குப் புடிக்கேல்லையோ எண்டுதான் நான் நினைச்சன்! நீங்கள் சாவீட்டுக்குத்தான் விட்டுட்டுப் போனநீங்களெண்டு இப்பவெல்லோ தெரியுது!"

தம்பனும் பேசி விட்டான். அவனுக்கும் இந்த இடை நாட்கள், பூக்கண்டருக்கான சோட்டையான நாளாத்தான் இருந்தன.

"இல்லை, இல்லை. செத்த வீட்டுக்குப் போறதுக்காக கூட்டத்திலை இருந்து எழும்பிப் போகேல்லை...... உனக்கேன் தம்பன் நான் ஒழிப்பான்! எனக்குப் பிடிக்காமல் தான் எழும்பிப் போனனான்." பூக்கண்டர் மனந் திறந்து சொல்லிவிட்டார். ஆயினும் விஷயத்தைச் சொல்லவில்லை.

"இதென்ன கதை கதைக்கிறியள் தம்பி. மருமோன் சங்கிலித்தாமாக வந்திருக்கிறார். எல்லாருமாச் சேந்து நியமிச்சிருக்கிறம். வேதத்திலை புதுப்புது ஆக்களெல்லாம் சேர்ந்திருக்கினம்; நோவினை செய்யவும் ஓமெண்டிருக்

கினம். தம்பிக்கு ஏன் பிடிக்கேல்லை? எண்டு எனக்கு உம்மாணை விளங்கேல்லை!'' தம்பன் தனது ஆச்சரியத்தைத் தெரிவித்தான்.

''தம்பன், என்ரை மருமோனா இருந்தா என்ன, ஒபத்த புள்ளையாய் இருந்தா என்ன! தம்பன் நீ என்னத்தை நினைச்சாலும் எனக்கொண்டுமில்லை. எல்லா இரணியங்களும் சேந்து பழையபடி உங்களைப் பழைய முறைப்படிதான் நடத்தப் பாக்கிறாங்கள். காளிகோயில் திருவிழாவிலை தம்பாப்பிள்ளையனும் அவன்ரை ஆக்கனும் சாதிக்கு ஒருநாள் திருவிழா எண்டு வைச்சிருந்தாங்கள். அதுக்கும் இதுக்கும் என்ன வித்தியாசம் கேக்கிறன்?''

''சங்கிலித்தாம் வேலையாலை பெரிசா ஒண்டும் செய்யேலாது என்டிறது எனக்குத் தெரியும். எண்டாலும் உன்ரை கையிலை அது இருந்ததாலை சில காரியங்களுக்கு உன்ரை சொல்லைக் கேக்க வேண்டி வந்திடுமெண்டு நினைச்சுக் கொண்டுதான் என்ரை மருமோனை சங்கிலித்தாம் ஆக்கிப் போட்டு, கௌரவப் பட்டம் குடுத்தது போலை ஒண்டுக்கும் உதவாத மூப்பர் வேலை உனக்கெண்டு சொல்லி உன்ரை முதுகைச் சொறிஞ்சிருக்கிறாங்கள்! இப்ப ரெண்டு நாளையிலை நான் கண்டதுகளையும் உனக்குச் சொல்லத்தான் வேணும். என்ரை மருமோன்ரை கர்த்தர் கோயில் பூசைக்கு போனனான். அங்கை கயிறு கட்டி உங்கடை ஆக்களை விட்டிருக்கிறாங்கள். உங்கடை ஆக்கள் ஒருத்தியும் துப்பட்டி போடாமல் சீலையாலை தான் தலையை மூடிக் கொண்டு வந்ததை நான் பார்த்தனான். ஏனெண்டு விசாரிச்சுப் பாத்தன்.''

''உந்த எளிய சாதியள் வேதக்காறராயிருந்தாலும் நாங்கள் அவையை உதுகள் செய்ய விடுகிறேல்லை எண்டாங்கள். எட, அதுதான் போகட்டுக்கு! கீரிமலைக் கேணியிலை தோஞ்சு போட்டு வருவமெண்டு போனனான். பெரிய கேணிக்கை குழந்தைப் பொடியன் ஒருத்தன்

குளிக்கப் போட்டான் எண்டிட்டு, என்ரை ராசா அவனைப் பிடிச்சு அடிச்சாங்கள் பாவியள்! ஆர் அடிச்சவங்கள் எண்டு கேக்கிறியே? அதிலை கர்த்தர் கோயில் உபதேசியும் ஒருத்தன்! நான் தெரியாமல்தான் கேக்கிறன், காளி கோயிலிலை உங்கடை ஆக்கள் வெளியாலை நிண்டு கும் பிட்டதுக்கும், கயித்துக்கங்காலை நிண்டு கும்பிடுகிறதுக் கும் என்ன வித்தியாசம்? தம்பன், நான் எங்கை நிண்டு சொன்னனான் எண்டு நீ அறிவாய்! மிச்சம் கெதியிலை இஞ் சையும் உப்பிடியெல்லாம் செய்வாங்கள்! உதை ஞானமுத் துக் குருவானவராலும் நிப்பாட்ட ஏலாது. அவர் வேதத்தை வளக்க வந்தவர்; ஒரு மாதிரிக் கண்டும் காணாமல் விட்டிடு வார்'' பூக்கண்டர் நீண்டதொரு பேச்சினை தொடர்ச்சி யாகவே சொல்லி முடித்து விட்டார்.

இதற்கு மேல் அவர் அங்கு நிற்கவில்லை. போய் விட்டார்.

தம்பன் மிகுந்த மனப்பாரத்துடன் வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

இளையவன் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு திண்ணையில் இருந்தான்.

''என்ன தம்பி, அலுப்பாந்திக்குப் போகேல்லையே?'' என்று கேட்டான் தம்பன்.

''போட்டுத்தானண்ணை வந்தனான். அலுப்பாந்தி யிலை இனி எனக்கு வேலை தரமாட்டனெண்டிட்டாங்கள். எங்கடை செற்றிலை இருக்கிற ஆறு பேருக்கும் முக்கந்த ராய் இருக்கிறவர், தம்பாப்பிள்ளையின்ரையும், நடுவிலான் ரையும் சினேகிதனாம்! இண்டைக்குத்தான் என்னை நன்னியன்ரை மோன் எண்டு தெரிஞ்சிருக்குப் போலை; வேலை தரேலாதெண்டிட்டான்.''

தம்பனுக்கு அவன் பேசியது புரிந்ததாயினும் வேறு முக்கந்தருக்குக் கீழ் வேலை செய்யலாம் என்று எண்ணிக் கொண்டதால் மிகவும் சாதாரணமாக, ''அவன் வேலை

தாரட்டி வேறை ஒரு முக்கந்தருக்குக் கீழை வேலை செய்யிதுதானை தம்பி! அதுக்கு இப்பிடி மூளையை விடுகிறதே?'' என்று மட்டும் சொன்னான்.

''அங்கை ஒரு பழக்கமிருக்கண்ணை. ஒரு முக்கந்த ரிட்டை இருந்து விலக்குப்பட்டவனை வேறை முக்கந்தர் மார் எடுக்க மாட்டாங்கள்!''

இளையவனின் இந்தப் பேச்சு இப்போது தம்பனைக் கடுமையாக யோசிக்க வைத்து விட்டது! பொன்னி இரண்டு தகர மூக்குப் பேணியில் கோப்பியை கொண்டு வந்து வைத்து விட்டு நின்றாள். அவள் முகம் வரண்டு போய் இருந்தது.

''நீ ஏன் பெட்டை பயப்பிடுகிறாய்? நான் ஆரையும் பிடிச்சுக் கிடிச்சு றெயிலடியிலை வேலை கேட்டுப் பாக் கிறன்!'' என்று தம்பன் அவளுக்குத் தேறுதல் கூறினான். அவனுக்குத் தெரியும் றெயிலடியில் வேலை தேடு வது இலேசுப்பட்ட காரியம் அல்ல என்று! ஆனாலும் அவன் அதைச் சொன்னான்.

பூக்கண்டர் பேசி விட்டுப் போனபோது ஏற்பட்ட மன உளைச்சலை இளையவன் சொன்ன இந்தத் தகவல் மேலும் அதிகரிக்கச் செய்து விட்டது.

என்னதான் அவன் இளையவனுக்கு முன்னால் சாவ காசமாகப் பேசினாலும் உள்மனதெல்லாம் பிசுபிசுத்து இரண்டு இடங்களில் அங்குமிங்கும் அலைந்து கொடிண் ருந்தது.

ஒன்று, பூக்கண்டர் தான் கண்டவைகளைச் சொன்னது!

மற்றது, இளையவனுக்கு வேலை இல்லாமல் போனது! இளையவன் பசியோடு வந்திருப்பான் என்பதும் அவனுக்கு மச்சாள்காரி சாப்பாடு வைத்திருக்க முடியாது என்பதும் தம்பனுக்குத் தெரியும். ஏனெனில் அவனுக்கு அன்று வேலை போய் விட்டது. அதனால் அவன் சாப்பி

டாமலே வந்திருப்பான். வீட்டில் பொன்னி இரவில்தான் உலைமூட்டி சோறு சமைப்பாள்.

தம்பன் பெண்சாதி அவித்த வத்தாளம் கிழங்குகளைக் கொண்டு வந்து இருவருக்கும் கொடுத்தாள்.

வத்தாளம் கிழங்கைத் தொட்டுக் கொள்வதற்குப் பரு ஒன்றும் தேவையில்லை.

''இஞ்சை நீ தந்த கிழங்கு அவிச்சுப் போட்டனக்கா. நான் குடுக்கிறன்'' என்று கொட்டிலுக்குள் இருந்து பொன்னி குரல் வைத்தாள்.

''ஏன் நான் குடுத்தாக் குடுபடாதே?'' என்று தம்பன் பெண்சாதி கேட்டுக் கொண்டே தண்ணீர் முட்டிகளைக் கொண்டு வந்து இருவருக்கும் முன்னால் வைத்துச் சென்றாள்.

இருவரும் கிழங்கு தின்றாகி விட்டது. இளையவனுக்குச் சோர்வாக இருந்தது. அவன் திண்ணையிலேயே துண்டைத் தட்டிப் போட்டுக் கொண்டு படுத்தான்.

இடுப்பில் ஏதோ நெருடியது! அது மூட்டை தூக்கும் வளைவுக் கூரான்! அதை இடுப்பிலிருந்து எடுத்து சினத்தோடு தாழ்வாரப் பக்கம் எறிந்தான். அது நாரியில் மிண்டியதால் வந்த சினமோ? அல்லது இனி மூடை தூக்குவதில்லைத்தானே, இதேன் எனக்கு? என்ற வெறுப்போ தெரியவில்லை.

''கிட தம்பி, வாறன்.'' என்று கூறிக்கொண்டே தம்பன் எழுந்து வெளியே போய்விட்டான்.

மப்பும் மந்தாரமும் போடத் தொடங்கி சிறிது வேளைக்குள்ளேயே ஊரை அது இருளச் செய்துவிட்டது.

''ஏனப்பா; மழை பிலனாய் வரப்போகுதுபோலை; கிடந்திட்டுக் கொஞ்சம் பாத்திட்டுப் போவன்'' என்றாள் தம்பன் பெண்சாதி.

''எங்கையோ ஒரு அலுவலாய் போக வெளிக் கிடேக்கை நச்சுப் பல்லி மாதிரி பின்னாலை இழுக்கிறாள் பாவி!'' என்று தம்பன் சற்றுச் சினந்து கொண்டே திண்ணையில் வந்து அமர்ந்து கொண்டான்.

மழை திடீரென இறங்கியது! சிறு தூற்றல் இன்றியே கல்லெறி போன்று பென்னம் பெரு துளிகளாகக் கொட்ட ஆரம்பித்துவிட்டது. அத்துடன் சூழல் காற்றும் வீசியடித்தது.

மின்னாமல் முழங்காமலே வந்த மழை அடை மழை யாகிவிட்டது.

ஒரு நாளல்ல; இரண்டு நாளல்ல; நான்கு நாட்கள்!

இந்த நான்கு நாட்களும் பெரிய கலட்டியில் ஒவ்வொரு நேரக் கஞ்சிதான் எல்லோரும் குடித்தனர். இளையவன் வீட்டில் அதற்குக் கூடப் பஞ்சம்!

பொன்னியின் மூத்தவளும் பொன்னியுமாக ஒட்டிய நெருப்புப் பெட்டிகளை எடுத்துப்போக கொம்பனி சார்பில் யேக்கப்போ உதவியாளர்களோ வரவில்லை.

யேக்கப் கோவில் பெருநாள் வேலையாக கூட்டம் முடிந்த மறுநாளே சொந்த ஊருக்கு மனைவியுடன் போனவன் இன்னும் வரவில்லை! வந்திருந்தாலும்தான் அவன் பெட்டிகளைக் கணக்கெடுத்திருக்க மாட்டான். பெட்டிகள் அடை மழையினால் காயாமல் ஈரலித்துக் கிடந்தன.

எப்படியோ தம்பனின் தென்னைகள் நான்கைந்தில் ஊறிய கள்ளு இளையவனுக்குமாகக் கைகொடுத்து உதவியது.

பூக்கண்டர் உட்பட நான்கைந்து பேர்கள் வாடிக் கைக்கு வரத்தவறவில்லை. அந்த அடை மழைக்கும் தென்னம்பாளைக்கு பன்னாடை மடல் மறைவிட்டு, மழை நீர் போகாமலேயே தம்பன் கள் எடுத்து வந்தான்.

என்னதான் வாடிக்கைக்காரர்களாக இருந்தாலும் இந்த வேளையில் மனச்சாட்சியுடன் அவர்களில் யாருமே கடன் சொல்லவில்லை. கடன் சொல்லா இந்தக் காரியத்தைப் பூக்கண்டரே மற்றவர்களிடமும் அறிமுகம் செய்து வைத்தார்.

அன்றாடம் ஏதோ சிறு அளவுக்கேனும் காசு புரண்டது.

அள்ளிக் கொடுக்காவிட்டாலும் தம்பன் ஓரளவுக்குக் கிள்ளிக் கொடுத்ததினால், இளையவனின் குடும்பமும் வெற்றிகரமாக அடை மழை நாட்களைச் சமாளித்து விட்டது.

இதற்கு மேலும் தம்பனிடம் கடமைப்பட இளைய வனுக்கு மனது கேட்கவில்லை.

சோளகத்தில் முழங்கி, முடிவில் சோளகக் காற்று விசி வானத்தை வெளிக்க வைத்து விட்டது. இளையவன் வெளியே ஏதாவது வேலை தேடப் புறப்பட்டு விட்டான்.

முன்பு தந்தையும், தானுமாக சாறித் திரிந்த தோட்ட வெளிகளையெல்லாம் சுற்றி, சுற்றி வந்து ஏங்கினான். அவைகளில் பெரும்பான்மை தம்பாப்பிள்ளையருடையது. அவைகள் இப்போது தரிசாகிக் கிடந்தன. அந்த நிலங் களுக்கு இப்போது எஜமான் என்று ஒருவருமில்லை.

தம்பாப்பிள்ளையரின் வாரிசான ஒரே ஒரு ஜீவன் செவ்வந்தி நாச்சியார்! அவளும் அம்பலவாணப் பரியாரி யின் துலங்கில் இருந்து மனம் உடைந்து செத்துப் போனாள். தம்பாம்பிள்ளையர் உயிரோடு சிறையிலில்லா மல் செத்துப் போயிருந்தால், அடிகொடியில் உள்ளவர் களாவது ஆட்சி பண்ணி அந்தத் தோட்டக் காணிகளை செய்கை பண்ணி இருப்பர்.

அவர் இப்போதும் உயிரோடு இருப்பதினால் யாருமே அக்காணி பூமிக்குள் காலடி எடுத்து வைக்கமுடியாது!

அந்தப் பொன்விளையும் பூமியைப் பார்த்து இளைய வன் ஏங்கினான்.

ஊரைச் சுற்றிக் கொண்டு அவன் தம்பாப்பிள்ளையர் வீட்டுப் பக்கமாக வந்தான். அவன் கண்கள் அவர் வீட்டை நோக்கின. வீட்டைச் சுற்றியுள்ள காவோலை வேலிகள் கறையான் தின்றும், விழுந்தும், கதியால்கள் இன்றியும் அம்பலமாகிக் கிடந்தன. வீட்டுக் கூரையில் பிடித்திருந்த

படைபடையான கறையான் மண்கள், மழைக்குக் கரைந்து அங்குமிங்கும் பெரும் பொத்தல்களாகத் தெரிந்தன.

முற்றம் நிறைய ஓலைகள், குப்பைகள், ஒடிந்த தடி துண்டுகள்!

கிணற்றடி ஆடுகாலின் ஒருபக்க முறுக்குக் கயிறு அறுந்து, பேண் மரம் சரிந்து துலா பரிதாபமாகக் கிடந்தது.

வளவு நிறைய ஊரின் ஆடுமாடுகள் சுதந்திரமாக உலாவி மேய்ந்து கொண்டிருந்தன.

வெளிப்பக்கத்து இரட்டைப் மரபடலையில் ஒன்றைக் காணவில்லை. அது அடியோடு பெயர்க்கப்பட்டு யாராலோ களவாடப்பட்டிருக்க வேண்டும்!

தன்னை அரியாமலேயே இளையவன் அந்த வளவின் கோலத்தைக் கண்டு கழிவிரக்கப்பட்டான்.

தம்பாப்பிள்ளையர் வீட்டுக்கு அடுத்த வீடுதான் பூக் கண்டர் வீடாக இருந்ததால் பூக்கண்டர் சிலவேளை தன் கண்ணுக்குப் படக்கூடும் என்று அவன் எதிர்பார்த்தான். அவன் எதிர்பார்த்தபடியே அப்போதுதான் தன் படலை யைத் திறந்து கொண்டு பூக்கண்டர் வெளியே வந்தார்.

''என்ன இளையவன், பழைய நினைப்பிலை கமக் காரன் வீட்டை வந்திட்டுப் போறாய் போலை கிடக்கு?'' இப்படிக் கேட்டுக் கொண்டே பூக்கண்டர் அவனை எதிர் நோக்கி நின்றார்.

''சும்மா இப்பிடி வந்தாப்போலை...'' இப்படி இளைய வன் இழுத்தாற் போலக் கூறினான்.

''அது சரி இளையவன், பட்டணப்பக்கத்திலே ஏதேனும் வேலையைக் கீலையை தேடினியே? தம்பாப் பிள்ளைக் கமக்காரன்ரை சினேகிதனாம் உன்ரை முக் கந்தன்! அவன் தான் உன்னை வேலையிலை இருந்து நிப்பாட்டிப் போட்டானெண்டு தம்பன் சொன்னவன். பண்டியோடை சேந்த கண்டும் பீ தின்னும் எண்ட மாதிரி, தம்பாப்பிள்ளையன்ரை சினேகிதன் எண்டா அவன்ரை

குணம் இவனுக்கும் இருக்கும்'' என்ற பூக்கண்டர் பேசிக் கொண்டிருந்தபோது எங்கோ அடிவானத்தில் வான முகடு பிய்ந்து விடுவதுபோல ஓசை கேட்டுக் கேட்டு உயர்ந்து, உயர்ந்து நடுவானம் வரை வந்து பூமியை அதிர வைத்துக் கொண்டிருந்தது.

நாலா பக்கங்களில் இருந்தும் ஆரவாரங்கள் எழுந்தன முதல் முதலாக தாவடிக்கு நேராக வானத்தில் ஆகாசக் கப்பல் போகிறது! அவர்களை விலத்திக் கொண்டு சிறிசுகள், பெரிசுகள் ''ஆகாசக் கப்பல்; ஆகாசக் கப்பல்!'' என்று குரல் வைத்துக் கொண்டே கப்பல் போகும் திசையை நோக்கி அண்ணாந்து பார்த்துக் கொண்டே ஓடினர்.

பூக்கண்டரும் இளையவனும் நின்ற இடத்தில் நகராமலேயே நெற்றிக்கு நேராக கைகளை வைத்துக் கொண்டே வானத்தில் ஆகாசக் கப்பலைத் தேடினர்.

கப்பல் அவர்கள் கண்களுக்குத் தெளிவாகத் தெரிந்தது.

அது அதிக உயரத்தில் போகவில்லை. பஞ்சு மேக ஓட்டங்களுக்குக் கீழாகவும், சில தடவை மேலாகவும் ஓடிக் கொண்டிருந்தது.

இருபுறமும் இரண்டு தட்டு இரட்டைச் சிறகுகள்!

பென்னம் பெரிய சுறாமீன் வால் போன்ற நீண்ட உயர்ந்த வால்! சாம்பல் நிறம்! அது தண்ணீருக்குள் இறங்கும் கப்பலாக இருக்க வேண்டும். அது வெகுதூரம் வரைக்கும் போய் கண்களுக்கு மறைந்துவிட்டது. அதன் அதிர்வு மட்டும் பக்கத்தே கேட்பது போன்றிருந்தது. சற்று வேளையாயிற்று...

''ஆகாசக் கப்பலின்ரை பிராக்கிலை கதையை விட்டிட்டம்! பாப்பம், நானும் எனக்குத் தெரிஞ்சவையைப் பிடிச்சுப் பாப்பம். பாவம் அவள் பொன்னி! மூத்தவளும் அவளு

மாகச் சேந்து ஒரு நாளைக்கு ரெண்டு பணத்துக்கு நெருப்புப் பெட்டி ஒட்டினாளவையில்லை. அது என்னத்தைப் போதும்?'' பூக்கண்டர் கதையை விட்ட தொடருக்கு வந்து விட்டார்.

''நான் சொல்லிறன் இளையவன்; என்ரை மருமோன் அவங்களோடை தான வேலை யெண்டாலும், சனங்களின்ரை பசியையும், பிணியையும் வைச்சுக் கொண்டு அவங்கள் செய்த கூலியை ஆனவாயிலை குடுக்காமல் இழுத்தடிப்பாங்கள். போன கிழமை அறிஞ்சன்; பட்டணத்துக்கை ஒரு சவுக்காரக் கொம்பனிக்காறர் வீடு வீடா சவுக்காரங்கள் குடுக்கிறாங்களாம் எண்டு! கொஞ்ச நாளையிலை எங்கடை பக்கங்களுக்கும் குடுப்பாங்கள் எண்டு நினைக்கிறன். உதெல்லாம் சனத்துக்கு நன்மை செய்யத்தான் எண்டு நினைப்பாய்! நானும் முந்தி அப்பிடித்தான் நினைச்சனான்.

என்ரை மருமோன் சொன்னவர், 'கெதியிலை எல்லா இடத்துக்கும் ஒரு நாள் தவறாமல் ஒரு வருசத்துக்கு இலவசத்திலை தேத்தண்ணி குடுக்க ஒரு தேயிலைக் கொம்பனி திட்டம் போட்டிருக்காம் எண்டு' ஏனெண்டு நீ நினைக்கிறாய்? தேத்தண்ணி குடிக்கிற பழக்கத்தைச் சனத்துக்கு உண்டாக்கிவிட்டா பிறகு அவையே காசு குடுத்துத் தேத்தண்ணி குடிப்பினம். இப்பிடிக் கிடக்கு உலகம். உங்கடை ஆக்கள் நினைக்கினம்; நெருப்புப் பெட்டிக்காறர் ஏதோ எங்களிலை இரக்கபப்ட்டுத்தான் உதுகளைச் செய்யிறாங்களெண்டு! என்ன செய்யிறது. கடல்லை கிடக்கிறவனுக்கு ஒரு சின்னத்தடி கிடைக்கிறது பெரிசெண்டாலு, அவங்களுக்கு கொள்ளை லாபம் போறதைக்கண்டவையே?''

பூக்கண்டர் ஏற்றிவிட்ட சுமையுடன் இளையவன் வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

மத்தியானம் சரிந்துவிட்டது.

பொன்னி அவனுக்கு ஏதோ தின்னக் கொடுத்தாள். அது நிச்சயமாகச் சோறில்லை! புழுக்கொடியலை உரலில் துவைத்து தேங்காய்ப்பூ கலந்து உருட்டப்பட்ட இரு உருண்டைகள். ஏதோ ஒன்று வயிற்றுக்குள் இறங்கி விட்டது. அதனால் அவன் உறங்கிவிட்டான். திரும்பவும் அவன் கண் விழித்த போது இருண்டு விட்டது.

''உந்தாளை இன்னும் காணேல்லையடா தம்பி!'' என்று தம்பன் பெண்டில் கூறினாள்,

''பாளை அறுக்கோணும், வேளையோடை வாறது, ஏழுமணியாகியும் இன்னும் காணேல்லை. றயிலடி வேலை ஆறு மணிக்கு முடிஞ்சிடும்!''

அவளுக்கு ஏதாவது ஆறுதல் சொல்வதற்குப் பதில் இளையவனும் தனது மன்ச்சோகையை வெளிப்படுத்திக் கொண்டான். கட்டியம் கூறிக்கொண்டு வந்தது போல—

''என்ன ரெண்டு பேரும் பேசாமல் இருந்து யோசிக் கிறியள்?'' என்று கேட்டுக் கொண்டே தம்பன் வந்து பேசி னான்.

''என்னப்பா இண்டைக்கு இவ்வளவு நேரமும்...?'' என்ற மனைவியின் கேள்விக்கு ஒருவிதமாகக் களைத்துக் கொண்டே தம்பன் பேசினான்.

''இண்டைக்கு உப்புமால் கடற்கரைக்கு நேரை பெரிய கடலுக்கை ஆகாசக் கப்பலெல்லே வந்திறங்கினது! சனங்களெல்லாம் அள்ளுப்பட்டுக் கொண்டு போச்சுது: வேலைவிட்டோண்ணை எல்லாரும் போனாங்கள்; நானும் போனன்; கரையிலை நிண்டு பாக்க வடிவாத் தெரி யேல்லை, பிளாத் தோணி ஒண்டைப் புடிச்சுக் கொண்டு போய்க் கிட்ட நிண்டு பாத்துப்போட்டு வாறம்.'' தம்பன் இதைப் பெருமையோடு சொன்னது மட்டுமல்லாது, பக் கத்தில் தோணியில் இருந்து பார்த்ததை அப்படியே வர்ணித்தான்.

''இஞ்சை நாங்களும் பாத்த நாங்கள்தான். எங்கடை வளவடியாலை தான் போனது'' என்றான் விழிப்பாய் இருந்த தம்பனின் நடுவிலான். இளையவன் இந்தச் சம்பாசனையில் கலந்து கொள்ளவில்லை.

மத்தியானம் பூக்கண்டர் கூறிய ெநருப்புப்பெட்டி, சவர்க்காரக்கட்டி, தேத்தண்ணீர் ஆகியவைகளிலேயே சுற்றிச் சுற்றி வந்தது அவன் மனம்!

வெள்ளிக்கிழமைக்கு ஐந்து நாட்களுக்கு முன்னாத கவே ஞானமுத்துக் குருவானவரும், சமையல்கார யுவானி யும் சந்தியாப்பிள்ளை உபதேசியாரும் கோவில் அறை வீட்டுக்கு வந்து சேர்ந்து விட்டனர்.

சமையல், சாப்பாட்டிற்கு வேண்டிய ஒழுங்குகள் யாவுக்கும் மூப்பர் உத்தியோகத்தை பெற்ற தம்பன் வெகு துரிதமாக ஒத்தாசை செய்தான்.

வந்த நேரத்திலிருந்து ஓய்வு ஒளிச்சலின்றி குருவான வர் அறை வீட்டுக்குள் இருந்து எதையோ எழுதிக் கொண் டிருந்தார்.

இரவு மணி பன்னிரண்டுக்கு மேல் தான் அவர் தூக் கத்துக்குப் போவார்.

காலை நாட் பூசை முடிந்ததும், அறை வீட்டை உட் பூட்டுப் பூட்டிக் கொண்டு விடுவார். மத்தியானம் மணியடிக் கும் போதுதான் வெளியே ஒரு தடவை வருவார். மறுபடி யும் புகுந்துகொண்டார் என்றால் பின்பு ஐந்து மணிக்கு மேல்தான் வெளியே வருவார். மாலை திருத்தாதி அடிக் கும்வரை தான் பேசுவார். அவருடன் ஏதாவது பேசவேண் டுமாயின் அந்த ஐந்து மணிக்கும் ஆறு மணிக்கும் இடை யில்தான் பேச முடியும். அதுவரை அறை வீடு அமைதியா கவே கிடக்கும். குசினிக்குள் யுவானியின் சமையல் பாத்தி ரங்கள் அடிபடும்—உரசுப்படும் ஓசையை தவிர எந்த ஓசை யையுமே கேட்க முடியாது.

உபதேசியார் ஊருக்குள் வீடு வீடாக போதனைக்குப் போய்விடுவார்.

''என்ன, உபதேசியார், குருவானவரை வெளியிலை காணமுடியாமல் இருக்கு?'' என்று தம்பன் உபதேசியாரைக் கேட்டான்.

''அது மூப்பர், குருவானவர் 'யாழ்ப்பாண சரித்திரம்' எண்ட ஒரு புத்தகம் எழுதிக் கொண்டிருக்கிறார். யாழ்ப்பாணத்திலை இருக்கிற ஒவ்வொரு சாதியின்ரை சரித்திரமும் அதிலை வருமாம்!'' என்று குருவானவரிடமிருந்து அறிந்து கொண்ட சிறு குறிப்புகளை வைத்துக் கொண்டு கூறினார். இதற்கு மேல் தம்பன் எதுவும் கேட்கவில்லை.

''போன வரிசத்திலையும் மூண்டு வரிசமாப் பாடுபட்டு ஒரு புத்தகத்தை எழுதி முடிச்சு அச்சுக்குக் குடுத்திருக்கிறார். தமிழ் சொல்லுகளின் பொருள் அகராதி எண்டு அதுக்குப் பேர். மனிசனுக்கு உதுகளிலைதான் விசர்!'' இப்படி வேறோர் தகவலையும் சொன்னார் உபதேசியார்.

''வெள்ளிக்கிழமை கோவில் நோவினை தொடங்கிறதுக்கு வியாழக் கிழமை பின்னேரம் ஏழுமணியிலிருந்து எட்டு மணி வரைக்கும் பாவ சங்கீர்த்தனம் நடைபெறும். கிறீஸ்தவர்கள் வந்து பாவ சங்கீர்த்தனம் பெற்றுவிட்டு மறு நாள் பூசையில் சற்பிரசாதம் எடுக்கலாம்'' என்ற தகவலை உபதேசியார் அறிவித்திருந்தார்.

பாவ சங்கீர்த்தன நிகழ்வு வியாழக் கிழமை ஏழு மணிக்குத் தொடங்கி விட்டது.

நடுவிலே ஒரு அதில் கதிரை குருவானவர்! இடப்பக்க வலப்பக்கங்களில் உயரமான பிரம்புப் பின்னல் தட்டிகள்— இவை ஆண் பெண் இருபகுதியாக இரு பகுதியிலும் பாவத்தை முறையிடுவதற்காக! முழந்தாள் படியிட்டு இருப்பதற்காக.

இருபுறமும் உள்பக்கமாக இரண்டு வெண்திரை; திரையில் சிலுவை; குருவானவரின் முகத்தைக் காணாமலேயே தன்னிச்சையாக பாவவாளிகள் தங்கள் பாவங்களைச் சொல்வதற்கான மறைப்புகள் இவை.

வெள்ளை நீவ அங்கி மேல் வொயில் சிறு மேலங்கி அணிந்து, ஊதா நிற உத்தரீயத்தைக் கழுத்தில் போட்டு, தாடியைத் தடவிக் கொண்டே குருவானவர் பாவ சங்கீர்த் தனத் தட்டிக்கு வந்து சேர்ந்து விட்டார்.

முதல்நாள் பாவ சங்கீர்த்தனமாக அது இருந்தபடி யால் பாவாத்மாக்கள் பலர் வந்திருந்தனர்.

ஆண்கள் பக்கத்திலிருந்து ஒருத்தனுக்கும், பெண்கள் பகுதியில் இருந்து ஒருத்திக்கும் குருவானவர் பாவ மன்னிப்பு அளித்துக் கொண்டிருந்தார்.

பலர் பாவமன்னிப்புத் தட்டிக்கு வந்து போயினர். முதலில் அவர்கள் வந்ததும், ''குருவானவரே! பாவியா யிருக்கிற என்னை ஆசீர்வதித்தருளும்'' என்று சொல்ல வும், குருவானவர் ''ஆசீர்வாதம் பிள்ளாய்!'' எனக் கையசைப்பார். பின்பு......

நான் பெரும்பாவி மந்திரம்
பாவங்களை முறையிடுதல்
உத்தம மந்திரம்!

குருவானவர் பாவமன்னிப்புக்காகக் கொடுக்கும் தண்டனை, அது சில வேளை பத்துப் பரமண்டல மந்திர மாகவும், அத்துடன் பத்துப் பிரயதத்த மந்திரமாகவும் அல்லது இரண்டுமாகவும், பாவங்களில் தரத்திற்கு ஏற்ற தாக அவை கூடியும் குறைந்தும், சில வேளைகளில் அத்துடன் சேர்த்து நாக்கு உத்தம மனஸ்தாப மந்திரமாக வும் இருக்கும்!

பாவங்களைக் கூறும்போதே குருவானவர் பாவங் களை வகைப்படுத்தி விடுவார்.

சாவான பாவம்!
அற்ப பாவம்!
சென்ம பாவம்!
கன்ம பாவம்!

என்பதற்குள் அடங்குபவைகளைக் கணக்கெடுத்துத் தண்டனை வழங்கப்படும்.

இளையவன் பாவமன்னிப்புப் பெற வந்திருந்தான் அவன் அவசரப் படவில்லை. அவசரப்படுவதற்கு அவனுக்கு ஒன்றுமில்லை. வேலைவெட்டி இல்லை. ஆண்கள் பிரிவில் கடைசியாளாக அவன் பாவமன்னிப்புத் தட்டிற்கு வந்தான்.

இந்த இடை நேரத்தில்தான் கடந்த பாவ சங்கீர்த் தனத்திற்கும் இப்போதைக்குமிடையே செய்து கொண்ட பாவங்களை நினைவுபடுத்திக் கொண்டு வர பெரும் பிரயத் தனத்தப்பட்டான். சில பாவங்கள் மனதில் இருந்து விடு பட்டு விட்டன. மிகச் சிரமப்பட்டு அவைகளை நினைவுக் குக் கொண்டு வந்தான். உண்மையான பாவ சங்கீர்த் தனம் செய்ய வேண்டும்! தவறினால் கள்ளப்பாவ சங்கீர்த் தனம் செய்ததற்காக இன்னொரு பாவம் முந்திய பாவங் களுடன் சேர்ந்து சுமையாகிவிடும்.

சம்பிரதாயப்படியான முதல் கிரிகைகள் முடிந்து அவன் இப்போது பாவங்களை முடிந்த அளவு நினைவுபடுத்தி அறிக்கையாகச் சமர்ப்பிக்கத் தொடங்கிவிட்டான். மற்ற வர்களைவிட சற்றுவேளை அதிகமாகத்தான் எடுத்து விட்டான். எல்லாம் உண்மைப் பாவசங்கீர்த்தனம் செய்து விடவேண்டுமென்ற ஆசைதான்!

குருவானவர் பாவமன்னிப்புக் கொடுத்துவிட்டார். அந்தத் தண்டனை பத்துப் பரமண்டல மந்திரம்! பிரிய தத்த மந்திரம்! ஒரு உத்தம மனஸ்தாப மந்திரம்!

இனி இதைத் தனித்திருந்து நிறைவேற்ற வேண்டும்!

பாவசங்கீர்த்தனம் முடிந்து குருவானவர் எழுந்து அறை வீட்டுக்குப் போய்விட்டார்.

அவதாரத்தை முடித்துக் கொண்டு இளையவ வீட்டுக்குப் போக மணி ஒன்பதுக்கு மேலாயிற்று.

மூத்தவனின் நடுவிலான் அழுது புரண்டு கொண்டிருந்தான். கோயிலுக்குப் போகும்போது மச்சாள்காரியால் கொடுக்கப்பட்ட ஒரு உலைமூடிச் சோற்றைத் தின்றுவிட்டுத்தான் போயிருந்தான்.

மாலைப்பொழுதோடு நடுவிலானுக்குத் தாயார் கொடுத்த உணவு போதாது. வயிற்றுக்குள் போன சிறு உணவும் செமியட்டுப் போய்விட்டது.

அவனுக்கு நித்திரை வரவில்லை. அவன் அழுது புரண்டான். ''சோறு தாணை! சோறு தாணை!'' என்று அடம் பிடித்தான். தம்பனும் குடும்பத்துடன் மூன்று மைல் தொலைவிலுள்ள உறவினர் வீட்டுச் சாமத்தியச் சடங்குக்கும் போய்விட்டான்.

தம்பன் பெண்டில் இருந்தாலாவது அடம்பிடிக்கும் அவனுக்கு ஏதாவது கொடுத்திருப்பாள். இப்படி அவள் செய்த நாட்கள் பல!

இளையவனுக்கு அவன் அழுகை தாங்கமுடியாத வேதனையைத் தந்தது. அவனோடு சேர்ந்து இவன் நெஞ்சு அழுதது! அதற்குப் பின்... அதற்குப்பின்?

விடிந்துவிட்டபோது நாள் பூசை கோவில் தொடங்கியது.

முதல்நாள் பாவமன்னிப்புப் பெற்றுக் கொண்டவர்கள் திவ்விய நற்கருணை பெறப்போக வேண்டும்.

கர்த்தரின் கட்டளைகளான பத்துக்கும், திருச்சபையின் கட்டளைகளான ஆறுக்கும் மாறாக நடந்து கொண்ட பாவிகள் அவைகளை முறையிட்டு குருவானவரிடம் புனித மனிதர்களாகி திருச்சபையின் கட்டளைகளில் ஒன்றான 'நடுச்சாமம் தொடங்கி தேவ நற்கருணை வாங்குமட்டும் ஒன்றும் தின்னாமல் குடியாமல் உபவாசம் இருந்து தேவ நற்கருணையான அந்த அப்பத்தை நாவு நீட்டி, பற்களில்

படாத விதத்தில் மிண்டி விழுங்கவேண்டும்! அப்போது தான் பாவ சங்கீர்த்தனம் செய்து கொண்டதன் முழுப் பயனும் அந்த பாவ ஆத்மா மேல் சுவறும். இது திருச் சபையின் சட்டச்சாரத்தில் ஒரு துளி!

பூசைப் பலி தொடங்கிற்று!

செபமாலை சொல்லப்பட்டது!

காரணிக்கங்கள் சொல்லப்பட்டன!

யேசுவின் ஞானத்தாயான கன்னி மரியாய் பேரில் ராக்கினி மந்திரத்தை சங்கிலித்தாம் யேக்கப் சொல்ல அது எல்லோராலும் பின்பற்றப்பட்டது.

வழமையான சந்தியாப்பிள்ளை உபதேசியாரின் மரத்த குரலின் தரத்தை விட இது இதமாக இருந்தது.

நடுப்பூசை நேரம் வந்தது. எழுந்தேற்றமும் முடிந்தது.

அதற்கான செபங்களை புதிய சங்கிலித்தாம் யேக்கப் அந்தந்தக் கால இடைவெளிகளைக் கவனித்து கன கச்சிதமாகச் செய்தான்.

எழுந்தேற்றம் முடிந்து தேவ நற்கருணைக்கு அடையாளப் பொருளாக அப்பத்தைப் புசித்து பாவிகள் பூரண பலன் அடைய வேண்டிய வேளை!

முதல் நாள் பாவமன்னிப்புப் பெற்றவர்களில் இளையவனை மட்டும் காணவில்லை.

குருவானவரின் கண்கள் அவனைத் தேடின.

அவர் கண்களுக்கு அவன் கிடைக்கவில்லை.

நோவினை தொடங்கிவிட்டது.

முந்திய முடிவுகளின்படியே ஆறு நோவினைகளும் சிறப்பாக நடந்து முடிந்துவிட்டன.

இன்னும் இருப்பதுவோ ஒன்றே ஒன்று!

அதுவும் கடைசிநாள் நோவினை! விஷேஷ நோவினை!

வேஸ்பர் பாடி வேறுபல சிறப்பு அம்சங்களையும் உள்ளடக்கியது.

வேளையோடேயே அந்த வேஸ்பர் நோவினைக் காரர்களாகிய மாதகல், பண்டத்தரிப்பு, இளவாலை, சில்லாலையைச் சேர்ந்த பங்காளர்கள் வந்து சேர்ந்து விட்டனர்.

அவர்களெல்லாம் அந்த ஒரு நாட்பொழுதைக் கழிப்ப தற்காக கோயிலைச் சுற்றி ஊருக்கு ஒரு விடுதி அடைத்து சமையல் செய்யத் தொடங்கி விட்டனர்.

அரிசி, காய்பிஞ்சு வகைகள், கருவாடு ஆகியவைகளை யும், சமையல் பாத்திரங்களையும் அவர்களோடு சேர்த்துச் சுமந்து வந்த வண்டிகள் கோவிலடி ஒதுக்குப்புறங்களில் நின்றன.

மாடுகள் கழுத்தைக் கழுத்தை ஆட்டி அசைக்கும் போது, அவைகளின் கழுத்தில் தொங்கிய வெண்டயம் சங்கிலிகள் ஒலி எழுப்பிக் கொண்டே இருந்தன. சமைய லுக்குத் தண்ணீர் வேண்டும்! கோக்கி யுவானியிடம் அவர் கள் கேட்டனர். தான் வந்த முதல் நாள் தண்ணீர் எடுப்பது

பற்றிய பிரச்சினை யுவானிக்கு இருக்கவே இருந்தது! யுவானி இதைப் புத்திசாலித்தனமாகச் சமாளித்துக் கொண்டான்.

குருவானவருக்குத் தெரியாமலே பூக்கண்டர் வீட்டுக்குச் சென்று தண்ணீர் எடுத்து வந்து விட்டான். இதைக் குருவானவர் கண்டால், ''ஏன் சின்னக்கலட்டி எல்லையோடு இருக்கும் கிணற்றில் எடுக்காமல் வேறு இடத்தில் எடுத்தாய் யுவானி?'' என்று கேட்டு விடுவார்.

கடந்த பத்து நாட்களில் இரண்டே இரண்டு தடவைகள்தான் குருவானவரைக் குளிப்பாட்டி இருக்கிறான். அந்த இரண்டு தடவைகளும் சின்னக் கலட்டிக் கிணற்றடியில் 'அடைப்புக் கிடைப்பு இல்லை' என்ற காரணத்தைச் சொல்லி பூக்கண்டர் வீட்டுக்கே குருவானவரை கூட்டிச் சென்று குளிப்பாட்டிச் சமாளித்து விட்டான்.

இதையே அவன் அவர்களுக்கும் சொன்னான். பூக்கண்டர் வீட்டைக் குறி காட்டினான்.

அவர்களும் அதையே செய்தனர். இது குருவானவருக்குத் தெரியாது.

மதிய வேளை உணவு முடிந்து சற்று நித்திரை செய்து விட்டுக் குருவானவர் எழுந்த போது இன்றைய வேஸ்பர் நோவினையின் பங்காளரும், யேக்கப்புவும் குருவானவருடன் பேசச் சென்றனர்.

நோவினை சம்பந்தமாகப் பலதைப் பேசினர். அத்தோடு சேர்த்து இதையும் சொல்லி வைத்தனர்.

''குருவானவர், நாங்கள் சொல்லுறதுக்காக எங்களைப் பிழையாய் நினைச்சுப் போடாதையுங்கோ! எங்கடை ஊருகளில் கோவிலுக்குள்ளை எல்லாச் சாதியையும் ஒண்டடி மண்டடியாய் இருக்க விடுகிறேல்லை; அது தான்......''

குருவானவர் ஒன்றும் பேசவில்லை.

கண்களால் சிறிது வேளை எல்லோரையும் அளந்தார். அவர்கள் பயந்தனர்.

அவர் தன் நரைத்த தாடியைத் தடவி விட்டுக் கொண்டார். அவர் மனதுக்குள் என்னென்ன தோன்றியதோ யார் கண்டார்? சங்கிலித்தாம் யேக்கப் ஒன்றும் பேசவில்லை. சற்று வேளைக்குப்பின் அறை விட்டுக் கதவை மூடிக் கொண்டே உள்ளே போய் விட்டார்.

எல்லோரும் திரும்பி விட்டனர்.

பொழுது பட்டபோது உபதேசியார் சந்தியாம்பிள்ளையிடம், சங்கிலித்தாம் யேக்கப்புவையும், தம்பன் பேதுறுவையும் அறை வீட்டுக்கு அழைத்து வரும்படி குருவானவர் சொல்லி அனுப்பினார்.

இருவரும் வந்து சேர்ந்து விட்டனர். அறைவீட்டுக் கதவைப் பூட்டிக் கொண்டே மூவரும் பேசினர்.

பகல் இன்றைய நோவினைக்காரர்கள் வைத்த கோரிக்கையைப் பற்றியதுதான் அந்தப் பேச்சு!

''இந்தக் கோவிலை இந்தவரை கட்டுவதற்கான செலவில் முக்கால் பாகத்திற்கு மேல் அவர்கள் கொடுத்த பணம்தான். அத்தோடு அந்த நோவினைக்காரர்களில் சிலர் கரையாம் பகுதியினர்; சம்மாட்டிமார்! இன்று இந்த ஊர் உருக்கும் நிலபரத்தில் இவர்களுக்கு வேலையும், உழைப்பும் முக்கியம். அந்தச் சம்மாட்டிமார் தங்களுடைய கரைவலைகளில் எல்லோரையும் சேர்த்துக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். முல்லைத்தீவுப் பகுதிகளில் தான் அவர்களின் கரைவலைகள்! இவர்களை வேலைக்கு வைத்துக் கொள்வதில் எந்தவித சிரமமும் இல்லை அதனால்தான் அவர்களோடு இணங்கிப் போவது புத்தி

சாலித்தனமானது'' என்ற கருத்தை சொல்லி முடித்து விட்டார் சங்கிலித்தாம் யேக்கப்.

''இப்ப இருக்கிற கஷ்டங்கள் சற்றாவது தீருவதற்கு வேலை முக்கியம். அத்துடன் சில காரியங்களில் விட்டுக் கொடுத்தால்தான் எங்கள் வேதம் பரவி எங்களுக்கும் பலம் வரும். கோவில் எங்கும் பிரதிபலிக்கும்!'' என்பது தம்பனின் கருத்து. இதை அவன் வாய்விட்டே சொல்லி விட்டான். இனி முடிவு செய்ய வேண்டியவர் குருவானவர்.

அவர்களைப் போய் நோவினை அடுக்குகளைச் செய்யச் சொல்லி விட்டு குருவானவர் பாவசங்கீர்த்தனத் தட்டிக்குப் போய் விட்டார்.

கடைசி நோவினைக்காரரே பாவமன்னிப்புப் பெறத் தட்டிக்கு வந்தனர்.

உள்ளூரவர்கள் ஒருவரோ இருவர்தான்! இந்த ஓரிரு வரில் இளையவனும் ஒருவன்.

அவன் முறைப்படி பாவங்களை அறிக்கையிட்டான்.

பாவங்கள் அதிகமாக இல்லைத்தான்! ஆனாலும் அவனுக்கான நேரம் சற்று நீண்டுதான் இருந்தது. கடந்த கிழமை பாவமன்னிப்பு பெற்றுக் கொண்டவன். ஏன் தேவ நற்கருணையான அப்பத்தைப் புசிக்க வரவில்லை? என குருவானவரும் அவனிடம் கேட்கவில்லை.

பாவமன்னிப்புப் பெற்றுக் கொண்டு திரும்பி விட்டான்.

நோவினை ஆரம்பமாக மூன்று மணிகளும் அடிக்கப் பட்டு, ஆயத்த மணியும் அடிக்கப்பட்டு விட்டது.

முன்பு எப்போதுமில்லாதவாறு கோவில் ஜோடனை களால் நிறைக்கப்பட்டிருந்தது. நோவினை தொடங்குவ

தற்கு முன்னதாகவே வெடிகள், மத்தாப்புகள், சீறு வாணங்கள்!

சற்று முன்னதாகத்தான் இரட்டை வடக்கன் மாட்டு வண்டில் ஒன்று அங்கு வந்து சேர்ந்தது. அதில் இரண்டு மேளங்களையும், இரண்டு தம்பட்டங்களையும் கொண்டு நால்வர் வந்திருந்தனர். அவர்கள் இளவாலையிலிருந்து கொண்டு வரப்பட்டனர். இளவாலையில் இருந்து, அங்குள்ள முறைப்படி மேளமடித்து நோவினை தொடங்க இருக்கிறது.

இரண்டு தடவைகள் மேளம் அடித்து ஓய்ந்தது. இன்று புதிதாக வேஸ்பர் நோவினை தொடங்கி இருப்பதால் குருவானவர் நோவினை தொடக்கத்திற்கு முன் பிரசங்கம் ஒன்று செய்ய கோவில் பீடத்திற்கு வந்து விட்டார். அவர் பிரசங்கம் வைத்தார்.

எல்லோரும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

அரைமணி நேரத்திற்கு மேல் அவர் பேசி விட்டார்.

யேசுவின் திருப்பாடுகள் பற்றி...

கன்னி மரியாயி உதிரத்தில் யேசு உற்பவித்தது பற்றி...

புதிதாக கோவில் அமைப்புப் பற்றி; ஊரில் இருக்கும் நிலைமை பற்றி!

இறுதியில் வேதம் பரப்புதலை நடத்துவதற்குக் குறைந்த பட்சம் ஒத்துப்போதல் பற்றி சொல்லி விட்டு,

''அன்பான கிறீஸ்தவர்களே! வேஸ்பருக்கு கோவிலின் நடுவே மாதா சொரூபம் கோவில் வாயில் வரை வந்து திரும்புவதற்கு வசதியாகவும், எல்லோரும் சேர்ந்து வேதம் பரப்புதல் ஒரே நோக்கத்தை நிறைவேற்றவும்,

நடுவே வழிவிட்டு, இந்த ஊரைச் சேர்ந்த கிறீஸ்தவர்கள் இடது புறமாகவும், வெளியூரைச் சேர்ந்த கிறீஸ்தவர்களும் அவர்களின் உருத்துக்காரர்களான இந்த ஊரைச் சோந்தவர்களும் சேர்ந்து வலது பக்கமாகவும் அமர்ந்து கொள்ளும்படி எல்லாம் வல்ல கர்த்தரின் பெயரால் கேட்டுக் கொண்டு உங்கள் எல்லோரையும் ஆசீர்வாதிக்கிறேன்.'' என்று கூறி வலக்கரத்தால் சிலுவை அடையாள அசைப்புக் காட்டி பிரசங்கத்தை முடித்துக் கொண்டார்.

கோவில் எங்கும் அமைதி நிலவியது!

குருவானவரின் வேண்டுகோள் உடனடியாக நிறைவேற்றப்படுகிறது. பலரும் இடம் மாறி ஒழுங்குக்கு வந்துவிட்டனர். செபமாலை தொடங்கி விட்டது.

புதிய சங்கிலித்தாம் யேக்கப் கணீரென்ற குரலில் செபமாலைப் பிரார்த்தனையை தொடங்கி விட்டான்.

கோவில் நடுப்பகுதியில் இருந்து பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்த இளையவன் ஆத்திரத்தோடு எழுந்து சவுக்கத்தை உதறித் தோளில் போட்டுக் கொண்டு எல்லோரையும் எட்டி, எட்டிக் கடந்து, கடந்து வெளியேறி விட்டான்.

இதை அவதானித்த தும்பன் அவன் பின்னால் சற்றுத் தூரம் சென்று,

''தம்பி, இளையவன் இதென்ன வேலை. குழப்பிக் கொண்டு போறதே? வா தம்பி!'' என அவனை அழைத்தான்.

''இதென்ன... கதை கதைக்கிறார் குருவானவர்? எல்லா... வடுகப்.. மக்களும் சேந்து மற்றவையை பேப்பட்ட மெல்லே கட்டப் பாக்கிறாங்கள்.''

''ஆமான... பிறவாத நளவன், பள்ளன், பறையன், வண்ணான், அம்பட்டன் ஆரெண்டாலும் இருந்தா அவங்

.களும் என்னைப் போலை வெளிக்கிட்டு வரட்டுக்கு!'' இப்பிடிக் கூறிக் கொண்டே இளையவன் போய்க் கொண்டிருந்தான்.

அவன் வைத்த குரல் கோவிலடிவரை கேட்டிருக்க வேண்டும்.

செபமாலை ஓசை சிறிது வேளை நின்று பின் தொடர்ந்தது.

தம்பன் கோவிலடிக்குத் திரும்பி வந்துவிட்டான்.

எல்லோர் கண்களும் அவனையே நோக்கின.

நேரவினை முடிந்தும் முடியாததுமாக தம்பன் அவசர அவசரமாக வீட்டுக்குப் போனான். இளையவனை எப்படியும் சமாளித்துவிட வேண்டும் என்பது அவன் எண்ணம்.

இளையவனின் குணம் தம்பனுக்கு நன்றாகத் தெரியும். அவன் ஏதாவது ஒன்றை மனதில் நினைத்து விட்டாலோ அந்த நினைப்பை அவன் மனதில் வைத்திருக்க மாட்டான். அதனால் அவனை முறைப்படி சமாதானம் செய்யாவிட்டால் அவன் நினைத்ததை அப்படியே கொட்டி விடுவான் என்ற நினைப்புடன்தான் வீட்டுக்கு ஓடினார்.

திண்ணையில் இளையவன் படுத்திருந்தான். அவன் இன்னும் உறங்கிப் போகவில்லை.

''தம்பி, இன்னும் கண்மூடேல்லையே?'' என்று கேட்டுக் கொண்டே தம்பன் வந்தான்.

''ஒரு ரோசமுள்ளவனும் இந்தப் பெரிய கலட்டிக்கை இல்லாமல் இருக்கேக்கை என்னெண்டு என்ரை கண் மூடும்?'' என்று இளையவன் பதிலுக்குக் கேட்டான்.

''தம்பி நீ என்ன நினைக்கிறாய் எண்டு எனக்கு விளங்குது! குருவானவர் பிரசங்கத்தில் அப்பிடிச் சொல்லிக் காட்டிப் போட்டாரெண்டு நினைக்கிறியே?அவர் முதல்லை என்னைக்கேட்டுப் போட்டுத்தான் அப்பிடிச் சொன்னவர்!''

இளையவனுக்கு ஒன்றும் பேசமுடியவில்லை.

அவன் அசைவற்று நீட்டி நிமிர்ந்து மரக்கட்டை போலக் கிடந்தான். சற்றுவேளைக்குப் பின் தம்பனே மீண்டும் பேசினான்.

அன்று மாலைவேளை குருவானவருடன் தானும், சங்கிலித்தாம் யேக்கப்புவும் கலந்து பேசிய விபரத்தை அமைதியாகச் சொல்லி முடித்தான். அத்துடன் ஊரில் உள்ள இளைஞர்களுக்கு கரைவலையில் வேலை கிடைக்கச் செய்வதுதான் இந்த வேளை பிரதானமானது என்றும் அதனால் சம்மாட்டிகளைப் பகைக்காமல் இதற்குத்தான் இணங்கியதாகவும் காரணம் காட்டிக் கூறினார்.

இளையவனுக்கு இப்போது தம்பன் செய்தது சரியா கவே பட்டது. ''ஆனால் குருவானவர் இதைச் செய்ய உடன்பட்டிருக்கக் கூடாது.'' என்பது அவன் அடிமனதில் குந்திக் கிடந்தது; வெளியே வர மறுத்தது. முடிவில் அவன், ''எண்டாலும் அண்ணை குருவானவர் தன்ரை வாயாலை சொல்லி இருக்கக் கூடாது எண்டுதான் நான் நினைக்கிறன்'' என்று அதை வெளியே கொண்டு வந்து விட்டான்.

''நீ சொல்லுறதும் சரிதான் தம்பி, எண்டாலும் இவ் வளவு காரியமும் எங்களுக்காகச் செய்த குருவானவர், இந்த விஷயத்திலையும் எங்களின்ரை நன்மைக்காகத்தான் சொல்லியிருக்கிறார் எண்டு நான் நம்புறன்! என் னென்டாலும் பின்னடிக்கு நடக்குறதைக் கண்டு கொள்ளு வம்; நாளைக்குப் பூசை முடிஞ்சு கூடும் சுத்தி முடிஞ்சாப் பிறகு எல்லாத்தையும் யோசிச்சுப் பாப்பம்! அதுமட்டும் ஒரு மாதிரி ஒக்கலிச்சுப் போகத்தான் வேணும்; குழப்பிப் கிழப்பிப் போடாதை!'' என்று கூறிக் கொண்டு இருந்த போது, கோவிலுக்குப் போன பெண்டு பெடி, பெட்டையள் எல்லோரும் வந்து சேர்ந்தார்கள்.

''என்னப்பா, இளையவன் கோவிச்சுக் கொண்டு எழும்பிப் புறுபுறுத்துக் கொண்டு வந்திட்டானெண்டு கோவிலடியெல்லாம் கதையாக்கிடக்கு! என்ன சங்கதி நடந்தது?'' என்று தம்பன் பெண்டில் கேட்டுக் கொண்டே வந்தாள்.

''என்ன, அதுக்கிடையிலை கதை பரவி விட்டுதே!'' என்று தம்பன் ஏங்கினான்.

''பரவிப்போட்டுதோ... கோயிலடியெல்லாம் குய்யோ எண்டெல்லே போச்சு! குருவானவருக்கும் ஆரோ நோவினை முடிஞ்ச கையோடை போய்ச் சொல்லிப் போட்டினம் போலை கிடக்கு! உன்னையும் இளையவனையும் குருவானவர் தேடினவர். சிலவேளை இப்ப ஆள் அனுப்பி னாலும் அனுப்புவார்!'' என்று இவள் வாய் மூடும் முன் உபதேசியார் வந்தார்.

''என்ன தம்பி, நோவினையைக் குழப்பிக் கொண்டு வந்திட்டீராம்? குருவானவர் உம்மை ஒருக்காக் கூட்டிக் கொண்டு வரச் சொல்லி எங்கடை மூப்பரிட்டைச் சொல்லச் சொல்லிச் சொல்லிவிட்டவர்'' என்று வந்த வரத்திலேயே உபதேசியார் கூறினார்.

இளையவன் பேசாமல் இருந்தான்.

''பெரிசா ஒண்டுமில்லை உபதேசியார். உங்களுக்குச் சொன்னா என்ன? குருவானவர் கோயிலுக்குள்ளே ஆக் களைப் புறம்பு புறம்பா இருக்கச் சொன்னாப்போலை பொடியனுக்கு அது பிடிக்கேல்லை! அதுதான் எழும்பி வந்திட்டான். நீங்கள் சொல்லுங்கோ பாப்பம்? குருவான வரிட்டை உந்தச் சாதி வித்தியாசம் இருக்குமெண்டு நீங்கள் நினைக்கிறியளோ?'' தம்பன் உபதேசியாரைக் கேட் டான்.

''என்ன, குருவானவர் சாதி பாக்கிறாரோ? அவர் அது பார்க்கிற ஆளோ? உங்கடை ஆக்களுக்காக சாமியாய் வந்த காலத்திலை இருந்து இண்டுவரை எத்தினை படாத பாடு பட்டிருக்கிறார்! எத்தினை வில்லங்கங்களுக்குள்ளை மாட்டுப்பட்டிருக்கிறார்! உங்களுக்குத் தெரியாது தேவ றட்டுக்கை பள்ள பகுதிக்குக் கோயில் கட்டினதுக்காக அவரைச் சுட்டவங்கள்! நல்ல காலம் ஆள் தப்பீட்டுது?

எண்டாலும் ஆள் கொஞ்சமெண்டாலும் பயப்பிட்டுதோ ஏன் கனக்க வேண்டாம், கிட்டடியிலை உரும்பிராயுக்கை தேவமாதா கோவில் கட்டின மூட்டத்திலை எத்தினை படாதபாடு படுத்தினவங்கள்! மூலைவையுக்கை கோயில் கட்டினதுக்குப் படுத்திவிட்டபாடு! இப்ப ரெண்டு வரு சத்துக்கு முந்தி உடுப்பிட்டி துரும்ப பகுதீக்கை உலகரட்ச கர் கோவில் கட்டினவர்; அப்ப கோயிலடியைச் சுத்தியிருக் கிற ஒழுங்கையாலை சுற்றிப் பிரகாரம் செய்யேக்கை தனக் காரச் சாதியாங்கள் பண்ணின வேலை எல்லாத்தையும் வெண்ட மனிசனைப் பாத்து இப்பிடி நீங்கள் நினைக் கிறதைப் பாத்தா கடவுளாணை மூப்பர் எனக்கு மனவருத்த மாக் கிடக்கு! தன்ரையையும், தேப்பன்ரையையும், தமை யன்ரையும் தூக்கை விலத்தித் தந்த மனிசனைப் பாத்து பொடியன் இப்பிடி நினைக்கிறது ஒரு நண்டியில்லாத காரியம் எண்டு நெஞ்சிலை வைச்சிருக்காமல் நான் சொல் லுறன்!'' உபதேசியார் முடித்துவிட்டார்.

இளையவனும் தம்பனும் உபதேசியாருடன் செல்லப் புறப்பட்டுவிட்டனர்.

உபதேசியார் முன்னே நடக்க இருவரும் மௌன மாகப் பின்னால் சென்றனர்.

வெளியே இருந்து வருகை தந்த வண்டிகளை சுற்றிக் கொண்டே அங்குமிங்குமாகச் சனங்கள் சூழ்ந்திருந்தனர்.

அறைவீட்டுக் கதவு திறந்தே இருந்தது. மூவரும் வெளியே நின்றனர். ஜன்னல் கதவு ஒன்று திறந்திருந்தது. தம்பன் அந்தக் கதவுக்கூடாக உள்ளே பார்த்தான். உள்ளே மெழுகுதிரி ஒளி தெரிந்தது. அந்த ஒளியில்... ...அங்கே அவன் கண்ட காட்சி!

சிலுவையில் அறையுண்ட யேசுவின் சொரூபத்துக்கு முன்னால் குருவானவர் முழந்தாள் படியிட்டு தியானத்தி லிருந்தார். அவர் கண்களால் நீர் தாரை தாரையாக

வடிந்து கொண்டிருந்தது. அந்தக் கண்ணீர் வெள்ளத்தில் அவர் தாடி நனைந்து கிடந்தது. கரம் கூப்பி யேசுவைக் கண்கள் நோக்கி அப்படியே நிலைத்துவிட அவர் சிலை போல இருந்தார். தம்பனின் மனம் வெதும்பியது. அவன் இளையவன் கையைப் பிடித்து அழைத்துச் சென்று யன்னல் பக்கம் பார்க்க வைத்தான். இளையவனுக்குக் குருவானவர் இருந்த கோலம் மனதை ஊடுருவி விட்டது. அவன் விம் மினான். சற்று விட்டுவிட்டால் அவன் பெருங்குரல் வைத்து அழுதுவிடுவான் போல் இருந்தது.

குறிப்பறிந்த உபதேசியார் இருவரையும் அழைத்துக் கொண்டு சற்று வெளியே வந்துவிட்டார்.

வண்டிமாடுகளின் வெண்டயச் சங்கிலிகள் ஒலிகள் திக்குத் திக்காகக் கேட்டுக் கொண்டிருந்தன.

மூவரும் வெளியே வந்தபோது யேக்கப்புவும், அவன் ஊரவர்களும் அன்றைய நோவினைப் பங்குக்காரர்களு மாகிய சீமோன்பிள்ளை சம்மாட்டியும் மரியாம்பிள்ளைச் சம்மாட்டியும் அவர்களுக்கு முன்னே வந்தனர்.

''இந்தப் பொடியன்தாள் சம்மாட்டியார் நான் சொன்ன பொடியன். மற்றவர் எங்கடை கோயில் மூப்பர்'' என்று யேக்கப் அவர்களை சம்மாட்டியாருக்கு அறிமுகம் செய்து வைத்தான.

''பொடியன் பாத்தா கரைவலை இழுவைக்குப் பொருத்தமான ஆளாத்தான் கிடக்கு! ஏன் மூப்பர் பொடி யனைப்போலை தைரியமானவங்கள் எத்தினை பேர்வரை தேறுவாங்கள்? ஆளுக்கு இருவத்தைஞ்சு இருவத்தைஞ்சு பேரெண்டாலும் நாங்கள் எடுப்பம். வாற வெள்ளிக்கிழமை எல்லாரையும் அடுக்குப் பண்ணி இளவாலைக்கு அனுப்பிப் போட வேணும். வாற பறுவத்துக்கு சோளகம் பிறந்தாலும் பிறக்கும். சனிக்கிழமை காலமை தோணி வெளிக்கிடும்''

என்று சீமோன்பிள்ளை சம்மாட்டியார் பெரியமனதுடன் பேசினார்.

''பொடியன் தரவளி ஒரு முப்பதுவரையிலைதான் தேறுவாங்கள். கலந்து பயந்து அனுப்பி விடுகிறன்; ஒரு மாதிரிச் சமாளியிங்கோ!'' என்று தம்பன் பதில் சொன்னான்.

இளையவன் பேசாமல் நின்றான்.

''என்ன மோனை! வாற வெள்ளிக்கிழமை வெளிக்கிடத் தயாரோ?'' என்று மரியாம்பிள்ளை சம்மாட்டியார் கேட்டார்.

இளையவன் 'சரி' என்ற தோரணையில் தலையை மட்டும் ஆட்டினான்.

சம்மாட்டியார் இருவரும் யேக்கப்புடனும் உபதேசியாருடனும் நகர்ந்து அப்பால் போய்விட்டனர். தம்பனும் இளையவனும் அங்கேயே நின்றனர்.

அவர்கள் குருவானவரைக் காண்பதற்காக காத்திருந்தனர்.

குருவானவரின் தியானம் இன்னும் முடியவில்லை.

வருகிற பறுவத்திற்குச் சோளகக் காற்றும் பிறக்கப் போகிறது. அதற்கிடையில் இளையவனும் அவனின் கூட்டாளிகளும் முல்லைத்தீவுக் கரைக்குப் போய்ச் சேர்ந்துவிடவேண்டும்.

பூசைப்பலி முடிந்தது. மாதா சொரூபம் தாங்கிய கூட்டின் சுற்றுப் பிரகாரமும் முடிந்தது. இளவாலை சம் மாட்டிமார்களாலும், மற்றும் வெளியூர்ப் பங்காளர்களா லும், காய்ச்சப்பட்ட கஞ்சி வார்ப்பும் முடிந்தது.

மதிய வேளைக்குமுன் கோவிலே சனநடமாட்டமற்று வெறிச்சோடிக்கிடந்தது. கோவிலுக்குள் சரமாலைகள் எல்லாம் கலைத்தாகிவிட்டது. ஏற்றப்பட்ட கொடிக்கம் பமும் கொடியும் கழற்றியாகிவிட்டது!

யுவானி குருவானவருக்காக அவசர அவசரமாகச் சமைத்துக் கொண்டிருந்தான்.

தனதுமேற்பார்வையில் திருநாள் சிறப்பாக முடிந்து விட்டது என்ற பெருமையில் சங்கிலித்தாம் யேக்கப் உப தேசியார் சந்தியாம்பிள்ளைக்கு உபச்சாரம் செய்ய வீட்டுக்குக் கூட்டிச் சென்று விட்டார்.

உபதேசியாருக்கு அவன் உபச்சாரம் செய்துதான் ஆகவேண்டும். ஏனெனில் உபதேசியாரின் ஒத்துழைப்பில் தான் அவன் சங்கிலித்தாமாக வந்தான். இந்தப் பெரு நாளை இத்தனை சிறப்பாக அமைத்துக் கொடுத்ததில் உபேசியாரின் பெரும் பங்கு அவனுக்கு கிடைத்திருந்தது.

உபதேசியாருக்கு சிறிது மது அருந்தும் பழக்கமும் உண்டு. அது எப்போதுமல்ல; எப்போதாவது மனதுக்கு நிறைவு ஏற்படும்போதுதான் அவர் யாருக்கும் தெரியாமல் அருந்துவார். குருவானவருக்குக் கூடத் தெரியாமல் என்பது அவர் மன நினைப்பு. ஆனால் உபதேசியாரின்

மூச்சில் வெண்காயத்தின் வாசனை கிளம்பும்போது குரு வானவர் அவரை நன்றாகப் புரிந்து கொள்வார். இது உபதேசியாருக்குத் தெரியாது.

சுவாசவாசனையில் இருந்து குருவானவரோ மற்றவர் களோ சுவடு பிடித்துவிடாமல் தான் மது அருந்தும் வேளை யில் வெங்காயத்தை பச்சையாகச் சப்பிக் கொள்வார். ஆனால் அந்த வெங்காய வாசனையே அவர் குடித்திருக் கிறார் என்பதைக் குருவானவர்க்குப் பறை சாற்றுவிடும்.

உபதேசியாரும் மருமகனும் வீட்டுக்கு வந்தபோது பூக்கண்டர் வீட்டில்தான் இருந்தார். இன்று கோவிலடியில் அவர் அதிக நேரத்தைக் கழிக்கவில்லை.

இளவாலைப் பெருநாள்காரரைப் பார்க்க அவருக்கு ஆத்திரம் வந்திருக்க வேண்டும்,

அடுத்த கிழமை பெரிய கலட்டியில் இருந்து கரை வலைக்கு ஆட்களைக் கொண்டு போகும் ஒழுங்கினைச் சம்மாட்டிமார் செய்திருப்பதாக அறிந்தபோது அவரின் ஆத்திரம் மேலும் அதிகரித்திருக்க வேண்டும்!

உபதேசியார் வீட்டுக்கு வந்திருந்தபோது அவருடன் அதிகம் பேசவேண்டும் போல இருந்தது. ஆனாலும் அவர் மருமகனுடன் வந்தமையால் அவரால் பேசமுடியவில்லை. இருந்தும்,

''என்ன உபதேசியார் இளவாலைச் சம்மாட்டியள் கலங்கின தண்ணியிலை மீன் பிடிச்சுப் போட்டினாம் ஆக்கள் வலு கெட்டிக்காறர் போலை கிடக்கு! என்ன சொல்லுறியள்?'' என்று கேட்டே விட்டார்.

உபதேசியாருக்கு ஒன்றும் பேச முடியவில்லை. இந்த ஆள் பிடிக்கும் வேலையிலும் அவர் பங்கெடுத்தவர்.

''என்ன உபதேசியார் பேசிறியளில்லை?'' என்று பூக்கண்டரே மீண்டும் கேள்வியைத் தொடுத்தார்.

''ஓ, தெரியாதே, அவையும் இந்தச் சனங்களுக்கு உதவி செய்யிறதிலை நான் முந்தி, நீ முந்தி எண்டு நிண்டா மற்றவை இப்படித்தானே நினைப்பிணம்!''

உபதேசியார். மொட்டையகா, பூக்கண்டர் தவறாகப் புரிந்து கொண்டார் என்பதை சூசகமாகச் சொல்லிவிட்டார்.

''என்ன உபதேசியார். நீங்களும் காது குத்தப் பாக்கிறியள்! இந்தச் சனங்களுக்கு உதவி செய்யிறதுக் கெண்டா... அதுதான் இளையவனைப் போல இனம் கனமான ஆக்களைத் தேடித்திரியினமாக்கும் உதவி செய யிறதுக்கு!'' என்று அவரும் மொட்டையாகவே உபதேசியாரின் போக்கைப் புரிந்துகொண்டு விட்டதைத் காட்டி விட்டு, அந்த வெய்யில் வேளையிலும் கானல் மண்வெட்டியைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டுவிட்டார்.

''உவர் நெடுக முட்டையிலை மயிர் புடுங்கி வேலை தான் பாக்கிறவர். அவற்றை கதையையும் ஒரு கதை யெண்டு எடுக்காமல் நீங்கள் இஞ்சாலை வாருங்கோ உபதேசியார்!'' என்று யேக்கப் தனது பிரத்தியேக அறைக்கு அழைத்தான்.

''சீ, எனக்குத் தெரியாதே மாமாவின்ரை குணத்தை?'' என்று பூக்கண்டரைப் பழமும் திண்டு கொட்டையும் போட்டவர் போல கதைத்துக் கொண்டே உபதேசியார் உள்ளே போனார்.

மண்வெட்டியுடன் வெளியே கிளம்பிய பூக்கண்டர் தோட்டத்திற்குப் போகவில்லை. நேராக அவர் தம்பன் வீட்டுக்கே வந்துவிட்டார். ஒரு காலத்திலும் அவர் மண் வெட்டியுடன் தம்பன் வீட்டுக்கே போனதில்லை. அதிலும் இந்தப் பட்டப்பகலில் அதிகமாகப் போனதும் இல்லை.

''என்ன தம்பி அவசரமாய் வாறியள் போலை கிடக்கு? அதுவும் கானல் மண்வெட்டியோடை?'' தம்பன் இப் படிக் கேட்டுக் கொண்டே பூக்கண்டரை நோக்கி பனை களுக்குள் வந்துவிட்டான்.

உச்சிப் பொழுதுப் பனை நிழல்கள் நன்றாகப் படிந்து கிடந்தன.

''ஒரு அவசரமும் இல்லை தம்பன்! உங்கடை உப தேசியார் என்ரை மருமோனோடை வீட்டை வந்திட்டார். எனக்கு அதிலை இருக்க அனலாய்க் கிடக்கு; அதுதான் எழும்பி வந்திட்டன். மருமோன் ஏதெண்டாலும் நினைப் பார் எண்டிட்டு மண்வெட்டியையும் தூக்கிக்கொண்டு வந் திட்டன். எல்லாருமாச் சேந்து நல்ல காரியம் செய்து போட்டியள் என்ன? உங்களிட்டைக் காசுகளை வாங்கித் தங்கடை காளிகோவில் திருவிழாவைக் கொண்டா டேக்கை, தம்பாப்பிள்ளையனும் அவன்ரை எடுபிடியளும் உங்களைக் கோயிலுக்கை விடமாட்டன் எண்டிட்டாங் கள்! சுவாமி வைச்சுத் தள்ளிற சகடையைக் கூட உங் களைத் தொட விடேல்லை... இப்ப என்ன நடந்திருக்கு? உங்கடை கோயில், உங்கடை ஊர், உங்கடை காசு எல்லாத்தோடையும் சேந்து பெருநாளும் நடக்குது. நீங்கள் எல்லாரும் கோயிலுக்கை இடப்பக்கம், மற்றச் சாதியெல்லாம் வலப்பக்கம், காளி கோயிலிலை நீங்கள் வெளியிலை நிண்டதுக்கும் இதுக்கும் என்ன வித்தி யாசம்?''

''..............................''

''இளவாலைச் சம்மாட்டியளும் மற்றவர்களுமாகச் சேந்து பெரிய கலட்டிப் பஞ்சப்பட்டவைக்குக் கஞ்சி காச் சிக் குடுத்திட்டுப் போனாங்கள்.''

''..............................''

''ஏன் தம்பன் உங்கடை கிணத்திலை வத்திப் போச்சே கேக்கிறன்? கடைசியிலை பூக்கண்டன் வீட்டுத் தண்ணியிலை தானை கஞ்சி காச்சினவங்கள்!''

பூக்கண்டரின் பேச்சுக்கு தம்பன் எதுவும் பேசவில்லை.

''தம்பன், கோவிலுக்கு உதவி செய்ய எண்டு வந்தவங் கள். இளையவனைப்போலை பிலசாலியளாப் பாத்து கரைவலை இழுக்க ஆள் சேத்திட்டாங்கள் பாத்தியே? கரைவலை இழுப்பெண்டா நீ நினைக்கிறாய் உன்னைப் போலை என்னைப்போலை சோணையன் செய்யிற வேலை யெண்டு! ஒருக்காப் போய் பாத்தியெண்டாத் தெரியும்! நான் முல்லைத்தீவிலைதான் இதைக் கண்டனான். தாயிட்டைக் குடிச்ச பால்தான் வெளியிலைவரும்.''

''..................................''

''பொங்கலாண்டி சோத்தையும், மண்ணையும் போட்டு அவிச்சு கருவாட்டிலை சொதி எண்ட தண்ணியை யும் ஊத்தி பொட்டி மூடலுக்கை சாப்பாட்டைக் குடுப்பான். அந்த நேரத்திலை கடலிலை மச்சம் வாறதை மன்றாடி கண்டிட்டானெண்டால் திண்டு கொண்டிருக்கிற எல் லாற்றை பெட்டியளுக்கையும் மண்ணை அள்ளிக் கொட்டிக் கொண்டு போவான் இரணியன்! தின்டது பாதி, தின்னா தது பாதியா அந்தச் சீவன்கள் துடிக்கிறதை நீ பாக்க வேணும்...... குடிக்கிறதுக்கு ஆன தண்ணி கிண்ணி தரு வாங்களே! அறுவான்கள்? கடக்கரையிலை குழியைத் தோண்டிப் போட்டு அதை அள்ளிக் குடிக்கச் சொல்லு வாங்கள்.

''பொண்டில் புள்ளை எண்டு சோட்டைக்கு வீடு வாசலுக்குப் போக விடுவாங்கள் எண்டே நினைக்கிறாய்? அந்தக் கரை மீன்பிடிப் போகம் முடியிறதுக்கிடையிலை வீட்டை போகப் போறனெண்டு வெளிக்கிட்டவன் செத் தான்! இப்பிடி எத்தினைபேரைச் சரிக்கட்டியிருக்கிறாங் கள்! சரி எல்லாத்தையும் தாங்கிக் கொண்டு மீன் பிடிப்

போகம் முடியிறவரை நிண்டு பிடிச்சாக்கூட, செவ்வல் மீன்கீன் பிட்டு எழுப்பிவிடாட்டிக்கு இவங்களுக்கும் கடலிலை எழுதின கணக்குத்தான்!''

''..................................''

''செவ்வல் மீன் எண்ட நெத்தலி மீன் பட்டால டாப்பா, அது நூறு பவுண், இருநூறு பவுண் எண்டுதான் படும்! அப்பிடிப்பட்ட போகத்திலை எண்டாலும் அள்ளிக் குடுப்பாங்களே?... உதுகளுக்குப் பயந்து அவங்கடை ஆக் களுக்கை ஒருத்தரும் இழுவைக்குப் போறேல்லை; அதுதான் இஞ்சினேக்கை வந்து பஞ்சப்பட்டதுக்களை அள்ளிக் கொண்டு போவமெண்டு வந்தவங்கள்! இப்ப நானும் உபதேசியாருக்கு இதைத்தான் சொல்லிப் போட்டு வாறன்! இளவாலைச் சம்மாட்டிமார் கலங்கின நீருக்கை மீன் பிடிக்கிறதிலை கெட்டிக்காறரெண்டு...!''

தம்பன் மீண்டும் மௌனமாகவே நின்றான்.

''நீயும் சேந்து அவங்களுக்கு ஆள் பிடிச்சு விட்டனி யெண்டு கேள்விப்பட்டன்! என்ரை மருமோனும் நீயும் சேந்துதானாம் இதெல்லாம் செய்த நீங்கள்! என்ரை மரு மோன் எண்டாப்போலை அவர் எனக்குத் கொம்பே? பூக்கண்டன் சரியெண்டாச் சரி எண்டு சொல்லுவான்; பிழை யெண்டாப் பிழையெண்டு சொல்லுவான் கண்டியோ!''

பூக்கண்டர் தம்பனின் பதிலுக்காகக் காத்திருக்க வில்லை, கானல் மண்வெட்டியையும் தோளில் போட்டுக் கொண்டு போய்விட்டார்,

ஏதாவது ஒரு நியாயத்தைக் கண்டு அதைச் சரி யெண்டு சொல்லி விட்டாலோ பின்பு அவர் அந்த இடத் தில் நிற்பதில்லை. அவரிடம் இருக்கும் சுபாவங்களில் அதுவும் ஒன்று.

தம்பனுக்கு உள்மனதெல்லாம் நிதானமின்றித் துடித்துக் கொண்டிருந்தது. பூக்கண்டர் அப்படிச் செய்து விட்டுப் போய்விட்டார்.

மத்தியானம் வீட்டில் சமையல் இல்லை.

கோயிலடியில் கிடைத்த கஞ்சியை குடித்தது போக மேலதிகமாக வாங்கி வந்து, தம்பனின் மனைவிமட்டு மல்ல ஏறக்குறைய பெரிய கலட்டி முழுவதுமே மத்தியானத் திற்கெனச் சேமித்து வைத்திருந்தது.

மாலை வந்தது.

இளையவன் எழுந்து கோயிலடிக்குச் சென்றான். இன்று பாவமன்னிப்புப் பெற்று நாளை நாட்பூசையிலாவது தேவநற்கருணை பெறவேண்டும் என்பது அவன் நினைப்பு!

குருவானவர் அறை வீட்டு விறாந்தையில் நடந்து கொண்டே ஏதோ சிறிய நூல் ஒன்றினைப் படித்துக் கொண்டிருந்தார்.

இளையவன் தயங்கி, தயங்கி நின்றான்.

அதற்குமேலும் நான்கைந்து தடவை போய்வந்து புத்தகத்தில் ஒரு பகுதியை முடித்துவிட்டு, குருவானவர், ''என்ன பிள்ளாய்'' என்றார்.

அவன் ஒன்றை முழங்கால் படியிட்டு ''ஸ்தோஸ்திரம் ஆண்டவரே!'' என்று வணங்கினான். குருவானவர் கையை உயர்த்தி ஆசீர்வாதித்தார்.

ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்ட இளையவன், ''நான் பாவ சங்கீர்த்தனம் பெற வேண்டும் ஆண்டவரே!'' என்றான்.

''கோவிலுக்குள் போய் பாவமன்னிப்பு கேட்க ஆயத்தப்படுத்தும் பிள்ளாய்!'' என்றார்.

இளையவன் கோவிலுக்குள் போய் விட்டான்.

சற்று வேளைக்குப்பின் பாவமன்னிப்பு உடை அணிந்துகொண்டு வந்த குருவானவர், பாவசங்கீர்த்தனத் தட்டிக்கு வந்துவிட்டார்.

இளையவன் எழுந்து தட்டிக்குச் சென்றுவிட்டான்.

முறைப்படியர்ன செபங்கள்!

பாவங்களை அறிக்கையிடத் தொடங்கி விட்டான்.

நீண்டநேரம் ஆகவில்லை. பாவசங்கீர்த்தனம் சுருக்கமாக முடிந்து விட்டது.

ஞானமுத்துக் குருவானவருக்கு மனது சரியில்லை. இளையவன் பாவமன்னிப்புப் பெற்றுக் கொண்டு போனதி லிருந்து அவர் மனத்துக்கள் ஒருவகை சோகம் கிளம்பியது.

அவனை ஒரு பாவாத்மா என்று அவரால் கருதமுடிய வில்லை. கடந்த வாரமும் ஒருநாள் பாவமன்னிப்பு பெற்றுக்கொண்டு போனவன் மறுநாள் தேவ நற்கருணை யான அப்பத்தைப் புசிக்க வரவில்லை. இதற்கான நியாங்களையும் அவர் அவனிடம் கேட்கவில்லை,

ஆனால் இந்த இடைக்காலத்தில் அவன் செய்ததாகக் கூறியது மிகவும் அற்பமான பாவங்கள்!

அவன் கூறியதான அந்த அற்ப பாவ நிகழ்வுகள் பெரும் தாக்கமுடையனவல்ல!

'அந்த அற்ப பாவங்கள் நிகழ்வதற்கான காரணங் களை அவனிடம் கேட்காது விட்டு விட்டோமே' என்பதற் காக மட்டுமல்ல அதைக் கேட்டு அதுபோன்ற பாவங் களுக்கு விலகி நடக்கும் வழிவகைகளையும் அந்த ஆத்மா வுக்குச் சொல்லாமல் விட்டு விட்டதற்காகவும் அவர் மனக் கிலேசம் அடைந்தார். பகலெல்லாம் சற்று வேளை கூட ஓய்வு இல்லை! வருபவர்களும், போபவர்களும் அவரை ஓய்வெடுக்கவிடவில்லை! யுவானியால் கொடுக்கப்பட்ட உணவை அருந்தி முடித்து விட்டு அவர் படுக்கைக்குப் போய் விட்டார். இப்படி அவர் என்றும் வேளையோடு படுக்கைக்குப் போகவில்லை. யுவானியும் உபதேசியாரும் ஆச்சரியப்பட்டனர்.

இடையே சங்கிலித்தாம் பேக்கப் குருவானவரைப் பார்க்க வந்தான். அவனின் குரல் வெளியே கேட்டும் கூட அவர் வெளியே வரவில்லை.

''குருவானவருக்கு உடம்பு நல்லாயில்லை போலை கிடக்கு; வேளையோடை படுக்கைக்குப் போய் விட்டார்'' என்று உபதேசியார் அவனுக்குப் பதில் கூறிக் கொண்டே அவனையும் கூட்டிக் கொண்டு போவது போன்று குருவான வருக்குப் பட்டது.

''யுவானியர், நான் வர நேரம் சென்டாலும் செல் லும், சங்கிலித்தாம் வீட்டை போட்டு வாறன். எனக்கு ஒண்டும் தின்ன வைக்காதையும்!'' என்றும் உபதேசியார் போகும்போது சொன்ன வார்த்தைகள் குருவானவரின் காதில் இலேசாக உரசியன. சயனத்திற்கு முந்திய செபத் தைச் சொல்லிச் சற்றுவேளை யேசுவின் திருப்பாட்டுச் சொரூபத்தின் முன் மௌனமாக இருந்து விட்டு அவர் படுக்கையில் சரிந்து கண்களை மூடினார்.

நித்திரை வரமாட்டேன் என்கிறது! கண்களை இறுக, இறுக மூடிப் பார்த்தார். நித்திரைக்காக மனதை வெறுமை யாக வைத்திருக்க முயன்று, முயன்று தோல்வி கண்டார்.

நித்திரை வராத நேரங்களில் மனதை வெறுமையாக் கிக் கொண்டு படுப்பார்; நித்திரை வந்துவிடும். இது வழக்கமானது!

இன்று அவர் அந்தச் செய்கையில் படுதோல்வி கண் டார்.

மனதை வெறுமையாக்க ஆக்க இளையவன்தான் அந்த இடத்தை நிரப்பிக் கொண்டு நின்றான். அவனை அலட்சியமாக வெளியே தூக்கி வீசிவிட அவரால் முடிய வில்லை.

வழக்கமில்லாத வழக்கமாக தனது சிறுவயது நிகழ்வு கள் மூடிய கண்களுக்கூடாக நடமாடும் உருவங்களாக வருகின்றன. சிறிய வயசின் பள்ளிக்கூட நினைப்பு......!

தந்தை இறந்து போக அம்மாவின் இரண்டாம் தாரமாக வந்த சிறிய தந்தையின் அன்பு......! றயில் இலாகா வேலை ... வேலையைவிட்டு குருமடப் பிரவேசம்; குருப்பட்டம்...!

இப்படி இப்படியெல்லாம் நினைவுக்குத் தோன்றிய நினைவுகள்! குருப்பட்டம் பெற்றுக் கொண்ட காலத்திலிருந்து சம்பவங்களோடு இணைந்த பல உருவங்கள் கண்களுக்கு முன்னே வருகின்றன.

''ஏழை எளியவர்களுக்காகவும், திக்கற்ற மனிதர்களுக்காகவும், நியாய்த்திற்காகவும் உன் வாயைத் திற!'' என்ற யேசுவின் வார்த்தைத் தொடரையே தன் வாழ்வின் இலட்சியமாக சபதமேற்று.........

பின் தள்ளப்பட்ட மனிதப் பூச்சிகள் இருக்கும் கிராமங்களில் கோயில்களைக் கட்டி......

அதனால் பல இன்னல்களை அனுபவித்து...

பல பாவாத்மாக்களைக் கடைத்தேற்றி--கிராமங்களில் எல்லாம் பசியோடும், பட்டினியோடும் இரவுகளைக் கழித்து; சாதி வெறியர்களாலும், அஞ்ஞானிகளாலும் தூஷிக்கப்பட்டு......

பள்ளிப் படிப்பில்லாத சிறுவர்களுக்கு கல்விச் செல்வம் கிடைக்க வழி செய்து......

உடன் கூடிய சபைத் துறவிகளின் நிந்தாஸ்துதிக்கு உட்பட்டு...

பாவிகளை இரட்சுக்கும்படி சர்வத்துக்கும் வல்லவனான தேவனிடம் கண்ணீர் விட்டு பச்சாத்தாபப்பட்டு......

எண்ணற்ற அஞ்ஞானிகளுக்கு ஞான வெளிச்சம் காட்டி, ஞானஸ்ஞானம் கொடுத்து......ஆசியினால் அவர்கள் பாவங்களைக் கழுவி......

பரலோக ராஜ்ஜியத்திற்கு சகலரினதும் நித்திய இளைப்பாற்றலுக்காக கண்ணயராது உழைத்தும்... துன்பப்படுகிறவர்களின் துன்பங்களில் நின்று நீங்க அவர்களுக்கு வழிகாட்டத் தன்னை அர்ப்பணித்தும்...

இடையே இளையவன் வருகிறான்!

தனது கடந்த கால நினைவுகளை கலைத்துக் கொள்ளக் கங்கணம் கட்டிக் கொண்டு வருபவனாக அவனைக் கருதிக் கொண்டு அவனை மறந்துவிட அவர் முயன்று முயன்று பார்த்தார்; முடியவில்லை!

அவன் போக மறுக்கிறான்!

''போய் விடு பிசாசே!'' என்று அவனைச் சபித்து விடவும் அவரால் முடியவில்லை.

நேற்று இரவு......

வேஸ்பர் நோவினையின் போது...பிரசங்கத்தில் தான் கூறிய வார்த்தைகளான......

''இந்த ஊரைச் சேர்ந்த கிறீஸ்தவர்கள் இடது புறமாகவும், வெளியூரைச் சேர்ந்த கிறீஸ்தவர்கள் வலது புறமாகவும்......''

அவர் வாயாலேயே பிறந்த அதே வார்த்தைகளை இப்போது அவர் நினைத்துப் பார்க்கிறார். அவ்வார்த்தைகள் பெருங்குரலாகி செவிப் புலன்களைத் துளைக்கின்றன. அவர் படுக்கையை விட்டு எழுந்தார்.

குற்றி எரிந்து முடிவுக்கு வந்து கொண்டிருந்த ஒற்றை மெழுகு திரியின் சிறு ஒளியில் பளிச்சிட்டுத் தெரிந்த யேசுவின் சொரூபத்தின் முன்னால் மறுபடியும் முழம்தாழ்படியிட்டு, கைகளை மேலே உயர்த்தி...

பார்வையை மேல் நோக்கி வைத்து......

''என் ஆண்டவரே...!

மெய்யான தேவனே!

பாவியாய் இருக்கிற என்னை இரட்சித்து அருளும் சுவாமி!''

''என் ஆண்டவரே! மெய்யான தேவனே! பாவியாய் இருக்கிற என்னை இரட்சித்து உமது திருவடிகளில் சேரக் கிருபை பண்ணும் சுவாமி!''

''என் ஆண்டவரே! மெய்யான தேவனே! பாவியாக இருக்கிற என்னை உமது திருவடிகளில் சேரச் செய்து எனக்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுக்கக் கட்டளை இட்டருளும் சுவாமி!''

வார்த்தைகளின் முடிவிலே அவர் கைகளைக் கீழாக தாழ்த்தி, நெஞ்சில் வைத்துக் கொண்டு தலையையும் தாழ்த்தினார்.

அவர் கண்களில் கண்ணீர் வெள்ளமாக ஓடியது.

அவர் தாடி கண்ணீரால் நனைந்தது. நீண்ட நேரமாக அவர் அந்தக் கோலத்தில் தான் இருந்தார்.

தலைச் சோளகக் காற்று வீசியடித்தது. திறந்து கிடந்த ஜன்னல்களுக்கூடாக வீசிவந்த காற்று அந்த ஒற்றை மெழுகுதிரியை அணைத்து விட்டது.

குருவானவர் அந்த நிலையில்தான் இருக்கிறாரோ, அன்றி படுக்கைக்கு வந்து விட்டாரோ தெரியவில்லை.

சற்று வேளைக்குப் பின் அவர் படுக்கையில் புரண்டு கொண்டிருக்கும் ஓசை இலேசாகக் கேட்டது.

சோளகம் பேய் வேகத்தில் வீசியது! தலைச் சோளகம் பிறந்து விட்டது! இன்னும் இரண்டு நாட்களுக்குப் பின்பு இளையவன் இங்கே இருக்க மாட்டான்! அவனும் துர்ப் பாக்கியவான்களான பலரும் அவனுடன் கரைவலை இழுப்புக்குப் போய் விடுவர்!

குருவானவர் மனதிலே இந்த நினைப்பு வந்திருக்க வேண்டும்.

அவர் அந்தக் கரைவலை வாடிகளை நினைவுக்குக் கொண்டு வருகிறார்.

இத்தனை வருடப் பொதுவாழ்க்கையில் அந்த வாடி களில் உள்ளவர்களுக்கு பாவப் பொறுத்தல் சந்தர்ப்பத் தைக் கொடுப்பதற்காக அவர் அங்கே பல தடவைகள் போயிருக்கிறார். அங்கே மனிதப் பூச்சிகளான துர்ப்பாக்கிய வான்கள் படும் அவஸ்தைகளைக் கண்டிருக்கிறார். அங்கு போய்வந்த ஒவ்வொரு தடவையும், குறைந்தது ஒரு மாதத்துக்குத் தன்னும் அந்தத் துர்ப்பாக்கியவான்களுக் காக அவர் ஒப்புக்கொடுத்தல் பிரார்த்தனை செய்யாமல் விட்டதில்லை!

இடை நாட்களில் கூட அவர்களின் நினைப்பு வந்து விட்டால் அவர்களுக்காகப் பிரார்த்திப்பதுண்டு! அங்கு போகும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் கரைவலை சம் மாட்டிகள் அவருக்கான சகல பொறுப்புகளையும் தாங் களே ஏற்றுப் பங்கெடுப்பர்.

அவர்கள் பாவமன்னிப்புப் பெறுவர்.

தமது வாடியில் வேலை செய்யும் ஒருவனையேனும் துன்புறுத்துவதான பாவத்தை அறிக்கையாகக் கொடுக்க

மாட்டார்கள். பதிலுக்கு அடுத்த சம்மாட்டிக்கு அதிகமான மீன் பிடிபாடு நடந்தபோதுதான் பொறாமைக்கு உள்ளானதை... உடல் உபாதை எற்பட்ட போது தாங்கள் நடந்து கொண்ட நெறிப் பிறழ்வுகளை மட்டுமே அவர்கள் பாவங்களாக அறிக்கை கொடுப்பார்கள்.

தமது வலைப்பாட்டில் வேலை செய்பவர்கள் எவரையும் அவர்கள் மனிதர்கள் என்று கருதாமையால் அவர்களுக்குச் செய்யப்படும் அநீதிகள், ஆய்க்கினைகள், கொடுமைகள் எதையும் அவர்கள் பாவங்களின் வரிசையில் சேர்ப்பதில்லை.

குருவானவருக்கு இதெல்லாம் நன்கு தெரியும். தற்காலிகமாக அங்கு வைக்கப்படும் மன்றாட்டத் திருப்பூசைகளில் ''நல்ல மீன் பிடிபாட்டுக்காக வேண்டிக்கொள்வோமாக!'' என்று தங்களில் ஒருவரைக் கொண்டே கூற வைத்து, எல்லோரையுமே அதையும் பிரார்த்தனையாக ஏற்றுக் கொள்ள வைத்து விடுவார்கள்.

இதை எண்ணும்போது குருவானவருக்கு அடி மனதுள் சிரிப்புத்தான் வரும். இப்போது அதையெல்லாம் மீள் நினைவு செய்து கொள்கிறார்.

இளையவனும் அவனின் ஆட்களும் அங்கேதான் போகப் போகிறார்கள்! சம்மாட்டிகள் ஆள் பிடித்த விபரம் அவருக்குத் தெரியாததல்ல!

கள்ளச் சோளகத்தின் பொய் வேகம்தணிந்து வந்தது. சரியான தலைச் சோளகம் இன்றோ நாளையோ தான் பிறக்கப்போகிறது!

காகங்கள் கரைந்தன!

இன்னும் விடிவதற்கு சிறிது நேரம்தான் இருந்தது!

முதல் நாள் கோலாகலப் பூசை வைபவங்களால் பலருக்கு அலுப்பாகப் போய்விட்டது.

மிகவும் குறைவானவர்களே பூசைக்கு வந்திருந்தனர். திருத்தாதிக்குப் பின், முதலாம், இரண்டாம், மூன்றாம் மணிகளும் ஒலித்து தொடர்ந்து ஆயத்த மணியும் அவசர அவசரமாக அடித்து ஓய்ந்தது.

பூசை தொடங்கிவிட்டது.

குருவானவர் நடுப்பூசைவரை கொண்டு சென்று விட்டார். அப்போதுதான் எங்கிருந்தோ அவசர அவசரமாக இளையவன் வந்து சேர்ந்தான்!

எழுந்தேற்றம் முடிந்து தேவ நற்கருணை கொடுபடுவதற்கான நேரம்;

பலர் தேவ நற்கருணை பெறும் இடத்தில் நிரைக்கு வந்து விட்டனர்.

முதலில் ஆண்கள்!

ஆண்கள் வரிசையில் இளையவன் இல்லை!

குருவானவரின் கண்கள் இன்று மிகவும் சிரத்தையுடன் இளையவனைத் தேடின. கோயிலின் ஒரு மூலையில் முழந்தாள் படி இட்டு குருவானவரையே ஏக்கத்துடன் பார்த்தபடி அவன் இருந்தான். குருவானவரின் கண்கள் அவனைச் சந்தித்த போது அவன் சிரத்தைத் தாழ்த்திக் கொண்டான். குருவானவருக்கு நெஞ்சுக்குள் எதுவோ செய்தது.

அவர் ஈரல் குலையைப் பிடித்து உலுப்பி, இருதயத்தைப் பிழிவது போன்று!

பூசைப் பலி முடிந்தது.

எல்லோரும் போய்விட்டனர்.

கோவிலடி வெறிச்சோடிவிட்டது.

குருவானவர் அறைவீட்டுக்குச் சென்று விட்டார். சென்றவர் காலைச் சாப்பாட்டுக்குத் தன்னும் கதவைத் திறக்கவில்லை.

யுவானி காலைச் சாப்பாட்டை எடுத்து வந்து கதவைத் தட்டினான். கதவு திறக்கவில்லை. குசினிக்கு வந்துவிட்டான். உபதேசியார் வெளியே எங்கோ போய்விட்டார்.

மதிய வேளை வந்தது.

யுவானியுடன் யாரோ பேசிக்கேட்டது. அது இளையவனின் குரல்!

அறை வீட்டுக் கதவு திறந்து கொண்டது; குருவானவர் வெளியே வந்தார். இளையவன் முறைப்படி ஒற்றை முழம் தாளிட்டு, ''பாவியாகிய என்னை ஆசீர்வதித்தருளும் ஆண்டவரே!'' என்றான். குருவானவர் முறைப்படி ஆசீர்வதித்தார்.

''என்ன பிள்ளாய்?'' குருவானவர் கேட்டார்.

''கொம்பிசத்துக்கு வந்தனான் குருவானவரே!'' இளையவன் பதில் சொன்னான்.

எதுவும் பேசாமல் அறைவீட்டுக்குச் சென்றவர், பாவ மன்னிப்பு உடையுடன் வெளியே வந்தார்.

இளையவனை வரும்படி சைகை செய்துவிட்டு கோவிலுக்குள் சென்றார்.

பாவசங்கீர்த்தனத் தட்டிக்கு வந்துவிட்டார்.

இளையவனும் தட்டிக்கு வந்தான்.

முறைப்படியான செபங்கள்!

இளையவன் பாவத்தை முறையிடத் தொடங்கினான். குருவானவர் இடைமறித்தார்.

''இன்றைக்குத் தேவ நற்கருணை பெற ஏன் பிள்ளாய் வரவில்லை?'' குருவானவரின் இந்தக் கேள்விக்கு இளையவனால் உடனே பதில் சொல்ல முடியவில்லை. அவன் விக்கித்தான்!

''சொல்லு பிள்ளாய், குருவானவரிடம் மறைப்பது கடவுளிடம் மறைப்பது போன்றதாகும். சொல்லு பிள்ளாய்!'' குருவானவர் கடவுளை முன் வைத்துக் கேட்டார்.

''நேற்றைக்குக் கோவிலடியிலை குடிச்ச பால் கஞ்சிக்குப் பிறகு நான் ஒண்டும் தின்னவில்லைக் குருவானவரே! இஞ்சை இருந்து வாங்கி வைச்சிருந்த கஞ்சியை மச்சாள் இரவு பிள்ளையளுக்கும் குடுத்திட்டு எனக்கும் கொஞ்சம் வைச்சா, நான் வேண்டாம் எண்டிட்டு, அவையைக் குடிக்க வைச்சிட்டு படுத்திட்டன்! இஞ்சை பாவ சங்கீர்த்தனம் செய்து போட்டுப் போனாம் பிறகு தண்ணிகூடக் குடிக்கயில்லை ஆண்டவரே! விடியப்புறம் போலை வயித்தை விறாண்டிச்சுது! உயிர் போயிடும் போலை கிடந்திது ஆண்டவரே! பக்கத்துத் தென்னம் தோட்டத்துக்கை போய் ஒரு சின்ன மரத்திலை களவா இளனி ரெண்டு பிடுங்கிக் குடிச்சிட்டன் ஆண்டவரே! பாவம் செய்திட்டன் தேவரீர்! அதுதான் சற்பிரசாதம் எடுக்க வரேல்லை! களவெடுத்திட்டன் சுவாமி அதுதான் வரேல்லை...!

இளையவன் பதில் சொல்லி விட்டான். குருவானவர் சிறிது வேளை ஒன்றும் பேசவில்லை. பின்பு,

''சரி, முந்தநாள் பாவமன்னிப்புப் பெற்றுப் போட்டு நேற்று ஏன் சற்பிரசாதம் எடுக்க வராமல் விட்டனி பிள்ளாய்?'' குருவானவர் அடுத்த கேள்வியைக் கேட்டார்.

''முந்தநாள் பிரசங்கத்திலை குருவானவர் சாதி பார்த்து எங்கடை ஆக்களை ஒருபக்கத்திலை இருக்கச் சொன்னார் எண்ட கவலையிலை கோவிலில் இருந்து வெளியிலை போய் தம்பண்ணைக்கு முன்னாலை குருவான வரைத் தூஷணத்தாலை பேசிப் போட்டன் சுவாமி! அது தான் பாவம் செய்ததாலை நேற்று சற்பிரசாதம் எடுக்க வரேல்லை ஆண்டவரே!''

இளையவன் இரண்டாவது கேள்விக்கும் துணிந்து பதில் சொல்லி விட்டான்.

இடைவெளி விடாமலேயே குருவானவர் மூன்றாவது கேள்வியையும் கேட்டார்.

''போனகிழமை பாவமன்னிப்பு பெற்றுப்போட்டு அடுத்த நாள் ஏன் சற்பிரசாதம் எடுக்க வரேல்லைப் பிள்ளாய்?''

''அது ஆண்டவரே, அண்டைக்கு மத்தியானம் மச்சாள் கூழ் காச்சினவ! பொழுது படுகிற நேரத்திலை தான் பிள்ளையளுக்குக் குடிக்கக் குடுத்து, எனக்கும் தந்து, தானும் குடிச்சவ. இரா ஒண்டு பாதியிலை அண்ணற்றை நடுவிலான் 'பசி பசி' எண்டு கத்தினான் ஆண்டவரே! நான் சாமத்திலை எழும்பிப் போய் பூக்கண்டற்றை தோட் டத்துக்கை இரண்டு கட்டை மரவள்ளிக் கிழங்கைப் பிடுங்கி வந்து, மச்சாளுக்கும் தெரியாமல் அவிச்சு அவனுக்குக் குடுத்தன் சுவாமி! பாவம் செய்திட்டன் ஆண்டவரே! 'படகினி' சுவாமி!''

இளையவன் மூன்றாவது கேள்விக்கும் பதில் கூறி விட்டான். பதிலின் இறுதியில் 'படகினி' என்ற சிங்களச் சொற்றொடரை அவன் வாய் தானாகவே பிரசவித்து விட்டது!

குருவானவர் இதற்கு மேல் அவனை ஒன்றும் கேட்க வில்லை. மறியல் வீட்டில் இந்தச் சிங்களச் சொல்லை அவன் கற்றிருக்க வேண்டும்!

அவனுக்கு அவர் பாவமன்னிப்பு கொடுக்கவில்லை. அவனின் பாவங்களுக்கு அவதாரம் இடவில்லை. இருந்த இரையிலேயே நிலைத்துவிட்டார்.

இளையவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

குருவானவர் கண்ணீர் விட்டார்!

எழுந்தார்.

பாடுபட்ட யேசுவின் சொரூபத்துக்குச் சென்று அதன் முன்னால் முழம்தாழ் படியிட்டு அழத் தொடங்கி விட்டார்.

இளையவன் உட்கார்ந்த நிலையிலேயே சிலையாக நிலத்தோடு ஒட்டிவிட்டான்! வெகு நேரத்திற்குப் பின்பு உத்தரீயத்தால் கண்களைத் துடைத்துக் கொண்டு அறை வீட்டு விறாந்தைக்கு வந்தார்.

விறாந்தையில் போடப்பட்ட கதிரையில் உட்கார்ந் தார்; எதிரே வெட்ட வெளியில் நீண்ட தூரத்திற்குக் கண்களை வீசினார்.

வீசிய கண்கள் அப்படியே நின்றன!

தொலைவில் தகிக்கும் வெய்யிலின் கானல், நீர் போன்று அலை அலையாகத் தெரிந்தது.

அந்தக் கானல் அவரை ஏங்க வைத்திருக்க வேண்டும். கண்களில் இருந்து வடிந்து திரையிட்ட கண்ணீரையும் ஊடறுத்துக் கொண்டு அந்தக் கானல் தெரிந்தது!

இளையவன் கூறி முடித்தானே அந்தக் கடைசி வார்த்தை!

''படகினி!''

ஞானமுத்துக் குருவானவர் பன்மொழிப் புலவர். இந்தச் சிங்களச் சொற் பிரயோகத்தின் மொழிபெயர்ப்புக் குரல் அவர் நெஞ்சுக்குள்ளே எழுந்து செவிப்புலன்கள் வரை எட்டியது.

''வயிற்றிலே நெருப்பு!''

செவிப்புலனுக்கு இது கேட்க, கட்புலனுக்கு......

'கானல்' தெரிந்து கொண்டே இருந்தது.

(முற்றிற்று)



இலக்கியம் உன் சுபாவம்
இயக்கந்தான் உன் சுவாசம்
தோழமை உனக்கு ரத்தபந்தம்